1518

DIGITIZED

T.N.L.A. Debates.

Official Report

Vol. 40 No. 5

LA80

D
211,31 N80
N8 .5

வெளியீடு—23-1-1981] [Issued—23-1-1981

NADU
2 .. 1981

1518.

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

சனிக்கிழமை 1980 ஜூலை 19 Saturday 19th July 1980

தொகுதி IV—எண் 5 — Volume IV—No. 5.

©
தமிழ்நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1981

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George, Madras-600 009

விலை 3.15 காசுகள்] [Price 3·15 Paise

D
N21L51 N80
N81.4.5
123055

## உள்ளடக்கம்

19—7—1980.

பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள். 1011—1030

2. விண்வெளிக்கோள் ரோகிணி வெற்றிகரமாக செலுத்தப்பெற்றுள்ளதற்குப் பாராட்டு. 1030—1034

3. ஒழுங்குப் பிரச்னைகள்—

(அ) தியாகராயர் கல்லூரி சம்பந்தப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப் பெறுவது. 1034—103[illegible]

(ஆ) உறுப்பினர்களது விடுதி அறைகளில் ஒட்டப்பெற்ற விதி முறைகள். 1049—1051

(இ) உறுப்பினர்கள் கோரும் தகவல்கள் கொடுக்கப் பெறுவது. 1051—1055

(ஈ) ஒரு அமைச்சர் கோரவேண்டிய மானியக் கோரிக்கையை வேறொரு அமைச்சர் கோருவது. 1058—1061

4. ஒத்திவைப்புத் தீர்மானம்—

சென்னை தியாகராயர் கல்லூரியில் மாணவர் போராட்டம். 1037—1040

5. கவன ஈர்ப்புகள்—

(அ) ஹையர் செகண்டரியில் 'பார்ம் மானேஜ்மெண்ட்' படித்து தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பி.எஸ்ஸி. (அக்ரி.) சேர முடியாமல் தவிப்பு. 1040—1042

(ஆ) இந்துஸ்தான் 'போட்டோ பிலிம்'ஸ் கம்பெனி ரோல் பிலிம்கள் விலை உயர்வு. 1042—1049

6. வரவு–செலவுத் திட்டம் 1980—81 வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண். 24—தொழில்கள்.
(ஆ) கோரிக்கை எண். 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு.
(இ) கோரிக்கை எண். 6—பத்திரப்பதிவு.
(ஈ) கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்.
} 1055—1170

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு | 1148—1161 |
| மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி | 1161—1168 |
| திரு. துரை முருகன் | 1064—1071 |
| திரு. ந. குலசேகர பாண்டியன் | 1071—1074 |
| திரு. டி. வெங்கடரெட்டி | 1074—1076 |
| திரு. ரா. கு. பெருமாள். | 1077—1080 |
| திரு. என். சங்கரய்யா | 1080—1091 |
| திரு. வே. இரா. ஜெயராமன் | 1092—1095 |
| திரு. எம். ஆறுமுகம் | 1098—1100 |
| திரு. கோவைத்தம்பி | 1100—1103 |
| திரு. என். குப்புசாமி | 1103—1106 |
| திரு. குமரி அனந்தன் | 1106—1113 |
| திரு. எம். சின்னராஜ் | 1113—1116 |
| திரு. பொ. விஜயராகவன் | 1116—1120 |
| திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் | 1120—1125 |
| திரு. க. பாரமலை | 1125—1128 |
| திரு. மி. வின்சென்ட் | 1128—1132 |
| திரு. வி. கிருஷ்ணமூர்த்தி. | 1132—1147 |

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். 1170

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

## சனிக்கிழமை, 1980 ஜூலை 19

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு."

நல்ல வழியில் தொகுத்துக் கிடைத்த பொருள் வளத்தை சீரிய வகையில் மேலும் பெருக்குபவர்களுக்கு அறமும் இன்பமும் எளிதாக வந்து வாய்க்கும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### ஓகேனக்கல்லில் நீர்மின் நிலையம்.

*வினா எண். 21—திரு. இல. பலராமன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓகேனக்கல் என்னும் இடத்தில் காவிரி நீரைப் பயன்படுத்தும் வகையில் நீர்மின் நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இத் திட்டத்தை மத்திய அரசின் கீழ் அமைப்பது குறித்து கர்நாடக மாநிலத்துடனும் மத்திய அரசுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, இது ஏற்கெனவே பேச்சுவார்த்தையில் இருந்ததாகச் சொல்லப்பட்டது. இருந்தாலும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடக்குமா ? விரைவில் பைசல் காணும் வாய்ப்பை தமிழக அரசு உருவாக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று

தொடர்ந்து தமிழக அரசு விரும்பி வருகிறது. 800 மெகாவாட் அளவுக்கு ஒகேனக்கல் திட்டத்தில் நீர்மின்சாரம் உற்பத்தி செய்யலாம். இது காவிரி நீருடன் சேர்ந்திருப்பதால் கர்நாடக மாநில அரசும் நம்முடைய மாநில அரசும் சேர்ந்து இந்தக் காரியத்தில் முயற்சி செய்யவேண்டியிருக்கிறது.

திரு. க. இரா. சின்னராசு : தலைவரவர்களே, ஒகேனக்கல் நீர்மின் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதன் மதிப்பீடு எவ்வளவு ? அது எப்போது வேலையை ஆரம்பிக்கும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஏற்கெனவே சொன்னதைப்போல் இதுபற்றி இரண்டு மாநில அரசுகளும் முதலிலே மேலெழுந்தவாரியாக ஒப்புக்கொண்டால் தான் திட்டத்தைத் தயாரித்து, அதற்கான மதிப்பீட்டைத் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்ப முடியும். மத்திய அரசே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்வரலாம். ஆனால் கர்நாடக அரசு என்ன கொள்கையைக் கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, எந்த வருஷத்தில் இந்தத் திட்டத்தை ஆரம்பித்து நாம் மத்திய அரசுக்கு எழுதினோம் ? கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக இந்த மன்றத்திலே இதுபற்றி பேசப்பட்டு வருவதாக நான் நினைக்கிறேன். இயற்கையாகக் கிடைக்கின்ற இந்தச் செல்வத்தை உற்பத்தி செய்வதற்கு இவ்வளவு தடை ஏன் இருக்கிறது ? தண்ணீர் வீணாகப் போகிறது இதைத் தீர்ப்பதற்கு மத்திய அரசின் உதவியை மாநில அரசு நாடியுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் . தலைவரவர்களே, 15 ஆண்டு அல்ல ; 19 ஆண்டுகளாக இந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அதாவது 1961 ஆம் ஆண்டிலிருந்து. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல ஆண்டுதோறும் அந்தத் தண்ணீர் வீணாகத்தான் போகிறது. ஒருமுறை வீணாகப் போகும் தண்ணீரை என்றைக்கும் வீணாகிறது என்றுதான் சொல்வார்கள். கர்நாடகமும் மின் பற்றாக்குறையில் இருக்கிறது. நாமும் மின் பற்றாக்குறையில் இருக்கிறோம். இரண்டு மாநிலங்களும் சேர்ந்துகூட இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் ; மத்திய அரசு வரவேண்டும் என்றில்லை. ஆனாலும் ஒருவரை ஒருவர் சந்தேகிக்கும் நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்ற காரணத்தால் மத்திய அரசு இந்தக் காரியத்தை செய்து இரண்டு மாநிலங்களுக்கும் பகிர்ந்துகொடுக்கலாம் என்று மத்திய அரசிடம் 1978-79 ஆம் ஆண்டில் நாம் தெரிவித்தோம். அவர்களும்



கர்நாடக மாநில அரசைக் கேட்டிருக்கிறார்கள். கர்நாடக மாநில அரசைப் பொறுத்த வரையில் இத் திட்டத்தை மத்திய அரசு எடுத்துக்கொள்வது சிறந்த ஏற்பாடாக இருக்கும் என்றும், இத்திட்டத்திற்கான செலவு மற்றும் தண்ணீர் கிடைக்கும் தன்மையை அறிந்து இரு மாநிலங்களுக்கும் நியாயமான அடிப்படையில் பகிர்ந்துகொடுக்க வேண்டும் என்றும் ஓரளவுக்கு கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். 15—3—1980-ம் தேதி கடிதத்தில் கர்நாடக முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஆகவே இந்தப் பிரச்னை குறித்து கர்நாடக மாநில முதலமைச்சரும் கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது. ஆகவே, விரைவில் திட்டத்தை மேற்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நீர் மின் நிலையம் அமைக்கும் திட்டம் வேறு ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனி கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, ஒகனேக்கல் நீர் மின் நிலையம் அமைக்கும் திட்டத்தைப் பொறுத்தவரையில் அந்த இடம் நம்முடைய எல்லைக்கு இந்தப் பக்கம் இருக்கின்றதா அல்லது கர்நாடக எல்லையில் இருக்கின்றதா ? அங்கிருந்து வந்து வீணாகக் கூடிய தண்ணீரைத்தான் உபயோகித்து இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதாக இருக்கின்றது. ஆகவே இந்தத் திட்டத்தை அமைப்பதன் மூலமாக அவர்களுக்கு ஒன்றும் பாதிப்பு ஏற்பட்டுவிடாது. ஆகவே இதிலே தடங்கலுக்கு என்ன காரணம்? இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் முயற்சி மேற்கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டாலும் மேலும் தீவிரமான முறையிலே முயற்சி மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் இரண்டு மாநிலங்களின் எல்லையிலே தான் இருக்கின்றது. ஆகவேதான் இரண்டுபேரும் சேர்ந்து இதை நிறைவேற்ற வேண்டும். இரண்டு மாநிலமும் சேர்ந்து நிறைவேற்றுவதை வரவேற்கவேண்டியதுதான். ஆனால் அப்படி ஒருவருக்கொருவர் சந்தேகம் ஏற்படக்கூடிய சூழ்நிலையில் மத்திய அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்றி அதன் பலாபலன்களை இரண்டு மாநிலங்களுக்கும் பகிர்ந்து கொடுக்கலாம். தண்ணீர் வீணாகத்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆகவே இந்தத்

திட்டத்திற்குரிய தண் ீரைப் பொறுத்தவரையில் இரண்டு மாநிலங்களுக்கும் பாதிப்பு ஏற்படாது. இதில் எப்படியோ கால தாமதம் ஆகி வருகிறது. ஆனால் கர்நாடக மாநிலம் கொள்கை அளவில் ஒப்புக்கொண்டிருப்பதால் விரைவிலே அந்தத் திட்டம் நிறைவேறும் என்று நம்பலாம்.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, இந்த திட்டம் குறித்த செய்தி திரு. காமராஜர் அவர்கள் காலத்திலே இருந்து அடிபட்டு இடையிலே அது முழுமையாக அடிபட்டு போய்விட்டது. இறுதியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்த பிறகு இந்தத் திட்டத்திற்காக மீண்டும் முயற்சி செய்யப்பட்டு அதிகாரிகள் மட்டத்திலே பேசப்பட்ட பின் இரு மாநில அமைச்சர்களும் கலந்து பேசுகின்ற வாய்ப்பு ஏற்பட்டு அதற்கு நம்முடைய முதல்வர் அவர்களும் சென்றிருக்கக்கூடியது உலகுக்குத் தெரிந்த செய்தி. மேலும் இதிலே என்ன தடங்கல் இருககின்றது. இதனை வேகப் படுத்துவதற்கு தமிழக அரசு என்னென்ன முயற்சிகளை மேற் கொண்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 1978, 1979 ஆகிய இந்த இரண்டு ஆண்டுகளிலும் இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சரவர்களும் நானும் கர்நாடக மாநில முதலமைச்சரவர்களோடும் அங்குள்ள மின்சாரத்துறை அமைச்சரவர்களோடும் பேசி இருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் இதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு ஒரு நிலைமை வந்திருக்கிறது. அந்தச் சுமுகமான சூழ்நிலை தொடரும் என்றும் இந்தந் திட்டம் நிறைவேறினால் இரண்டு மாநிலங்களும் பலன் பெறும் என்றும் இந்த அரசு உறுதியாக நம்புகிறது.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக 800 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்று சொல்லப் படுகிறது. 19 ஆண்டுகாலமாக இந்தத் திட்டம் தாமதமாய் கொண்டு வருகின்றது. அமைச்சரவர்கள் பதில் சொல் கின்றபோது இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் ஏதோ சந்தேகம் என்று சொல்கிறார்கள். அது என்ன சந்தேகம் என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இது காவிரி ஆற்றிலே வருகின்றது. ஆனால் காவிரித் தண்ணீர்ப் பங்கீடு சம்பந்தமாக இன்னும் ஒப்பந்தம் ஏற்படவில்லை. ஆகவே இந்தத் திட்டத்தி னால் அந்த ஒப்பந்தம் ஏதாவது பாதிக்கப்படுமோ என்ற ஒரு சந்தேகம் இருக்கின்றது. , ஆனால் இந்தத் திட்டத்தினை,

அந்த ஒப்பந்தத்தைப் பாதிக்காத வகையிலே உருவாக்கலாம் என்று தொழில் நுட்ப கருத்து இருக்கின்றது. அந்த அடிப்படையிலே இந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம் என்று இருக்கிறோம்.

திருவில்லிப்புத்தூரில் சப்கோர்ட் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 22—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட. அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூரில் சப்கோர்ட் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதுமுதல் நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) அண்டு (ஆ): இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, மேற்கு இராமநாதபுரத்தைப் பொறுத்தவரையில் சப் கோர்ட் கிடையாது. திருவில்லிப்புத்தூரில் இரண்டு முன்சிப் கோர்ட்டுகளும் இரண்டு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளும்தான் இருக்கின்றன. சாத்தூரில் இரண்டு முன்சீப் கோர்ட்டுகளும், இரண்டு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளும் இருக்கின்றன. ஆரம்பிக்க தேவையான கேஸ்கள் இருக்கின்றன. ஆகவே மேற்கு இராமநாதபுரத்திலே இருப்பவர்கள் 100 மைல் தள்ளி சிவகங்கை, மதுரைக்கு 50 மைல் தள்ளி தங்களுடைய வழக்குகளுக்காகப் போக வேண்டி இருக்கின்றது. ஆகவே வருகின்ற நிதியாண்டிலேயாவது அங்கே ஒரு சப்கோர்ட் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, மேல் முறையீடு அதிகார வரம்புகளை உபயோகப்படுத்தி திருவில்லிப்புத்தூரில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கவேண்டும் என்று நீதிமன்றத்தின் அதிகாரவரம்புக்குழுபரிந்துரை செய்துள்ளது. அரசு அவைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதிலே இரண்டாவது கட்டத்திற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1980 ஜூலை 19

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, வரதராஜன் கமிட்டி எந்தெந்த இடங்களில் எந்தெந்த கோர்ட்டுகளை நிறுவவேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளனர். அரசு அதில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, ஸ்ரீவில்லிப் புத்தூரில் சப்போர்ட் அமைப்பதைப் பற்றியது. நீங்கள் கே... வரதராஜன் கமிட்டி பற்றியது.........

திரு. ரா. கிருஷ்ணன்: இரண்டிற்கும் தொடர்பு இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோர்ட்டுகளில் இருக்கும் வழக்குகள் அனைத்திலும் கூட தொடர்புகள் இருக்கும். அதனால் மூலக் கேள்வியை ஒட்டிக் கேளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : வரதராஜன் கமிட்டியில் எந்தெந்த யிடங்களில் கோர்ட்டுகள் நிறுவப்பெற வேண்டும் என்று பரிந்துரை செய்யப் பெற்றது. அவைகளில் எது எதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய எல்லாக் குறிப்புகளும்என்னிடத்தில் இல்லை என்றாலும், இதற்கு முன்பே கொள்கைக் குறிப்பில் வரதராஜன் கமிட்டி பரிந்துரை செய்ததில் 10 கோர்ட்டுகள் நிறுவ நடப்பு ஆண்டில் அனுமதி வழங்கப்பெற்றுவிட்டது என்றும், அடுத்த 11 கோர்ட்டு களை நிறுவுவதற்கான அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப் பெற்று வருவதாகவும் குறிப்பிட்டிருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூரில் சப்-கோர்ட் அமைக்கப்பெறுமா என்று கேட்டதற்கு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொன்னார்கள். ஸ்ரீவில்லிபுத்தூரில் சப்-டிவிஷன் கோர்ட்டுதான் இருக்கிறது. அந்தக் கோர்ட்டில்தான் கிரிமினல், சிவில் ஆகிய இரண்டு வழக்குகளையுமே எடுத்து நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் ஒரே சப்-டிவிஷனல் மரஜிஸ்ட்ரேட்தான் இருக்கிறார். அவர்தான் அனைத்தையும் நடத்திக்கொண்டிருக்கிறார். ஆகையால் அங்கே முனிசிபல் கோர்ட்டாவது உடனடியாக அமைக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களின் ஆலோசனை ஏற்று பரிசீலிக்கப்படும்.



1980 ஜூலை 19]

## சென்னை நகரில் நடமாடும் நீதிமன்றங்கள்.

*வினா எண். 23—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு
சட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்டவினாவுக்கு விடையளிப்
பாரா—

சென்னை நகரில் மீண்டும் நடமாடும் கோர்ட்டுகளை ஏற்படுத்தும் குறிப்பு எந்த நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : சென்னை நகரில்
நடமாடும் நீதிமன்றங்களை மீண்டும் ஏற்படுத்தல் பற்றிய செயற்
குறிப்பின் மீதான முடிவு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் பாசனத்திற்கு காவிரி நீரைப் பயன்படுத்தல்.

*வினா எண். 24—திரு ஆர். விஜய ரெகுநாத தொண்டைமான்:
திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்
துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?—

புதுக்கோட்டை மாவட்டத்துக்கு பாசனத்துக்கு காவிரி
நதித் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : காவிரி நீரை பங்கீடு
செய்வது குறித்து மாநிலங்களுக்கிடையே இதுவரை உடன்பாடு
ஏற்படவில்லை. இதனால், காவிரி நீரை புதுக்கோட்டை மாவட்
டத்திற்கு திருப்பிவிடும் செயற்குறிப்பை அரசு தற்பொழுது
பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்
களே, இதுவரையில் பரிசீலிக்கப்பெறவில்லை என்றாலும் கூட
புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலவி வரும் வறட்சியைக் கருத்தில்
கொண்டாவது, எப்படி வைகைக் கால்வாயை காங்கிரீட்டில்
கட்டி செயல்படுத்தி இருக்கிறோமோ அதுபோலவே இந்த காவிரி
நதிக்கால்வாயையும் எடுத்து காங்கிரீட்டில் கட்டும் திட்டத்தை
அரசு கொண்டு வந்தால், எஞ்சி இருக்கிற தண்ணீரை புதுக்கோட்
டை மாவட்டத்திற்குக் கொடுக்க முடியும். இதை இனியாயினும்
அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பங்கீடு பிரச்னை இன்னும் தீராத சூழ் நிலையில் இப்படி எந்தத் திட்டத்தையும் எடுத்துக்கொள்வது சாத்தியம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நீர்ப்பங்கீடு ஒப்பந்தம் நம்முடைய மாநிலத்திற்கும் கர்நாடக மாநிலத்திற்கும் இடையில் இருக்கும் ஒரு பிரச்சினை. ஆனால் நான் கேட்பது நம்முடைய மாநிலத்திலுள்ள காவிரியின் கால்வாயை காங்கிரீட்டினால் கட்டினால் மண் உறிஞ்சாமல் மிச்சமாகும் தண்ணீரை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வறட்சியைப் போக்க உபயோகப்படுத்தலாம். அதை இனியாவது அரசு ஏற்றுச் செய்ய முன்வருமா என்றுதான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, * * * * *
என்பதைப் போல நம்மிடத்தில் உபரி நீர் இருக்கிறது என்று சொல்லுகிற சூழ்நிலையை இது தோற்றுவித்து விடும். அது மேலும் பல்வேறு பிரச்சினைகளுக்குக் கொண்டுபோய்விடும் என்கிற காரணத்தினால் இந்தத் திட்டத்தை இப்போது எடுப்பதற்கில்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, நமக்கும் கர்நாடக மாநிலத்திற்கும் இடையே காவிரிநீர்ப்பங்கீடு சம்பந்தமாக ஒப்பந்தம்ஒன்று நிறைவேற்றப்படாமலேயே இன்னும்இந்த இரு மாநிலங்களுக்கிடையேயும் பரிசீலனைக்கு வைக்கப்பெற்றிருக்கிறது. அது தவிர இந்த காவிரி ஆற்றில் கட்டப்பெற்றிருக்கும் டாங்குகள் இரண்டு மூன்று மட்டங்கள் வைத்து பிரிந்துக் கட்டப்பெற்றிருக்கின்றன. அதாவது மேல் மட்டத்திலே இருக்கிற டாங்கில் தண்ணீர் நிரம்பிய பின்னால்தான் கீழ் டாங்குகளில் பில்அப் பண்ண முடியும். ஆகவே, காவிரி ஆற்றில் வருஷா வருஷம் வெள்ளம் வருகிறபோது, வீணாக கடலிலே போய் கலக்கவிடுவதற்குப் பதிலாக, அதை இந்த டாங்குகளில் திருப்பிவிட்டால் எல்லா டாங்குகளும் பில்அப் ஆகும். மேற்கே பாய்ந்து கடலிலே வீணாகும் நதியைத் திருப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிற நாம், நம்முடைய மாநிலத்தில் வீணாகும் தண்ணீரை அப்படி வீணாக்க விடாமல் டாங்குகளில் பில்அப் பண்ணி வைத்தால் என்ன? அதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று கேட்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு திரு கே. இராஜா முகமது : ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அதிகமாக வெள்ளம் ஏற்பட்டு அது கடலில் போய் கலந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் ஒட்டு மொத்தமாக இப்போது இருக்கக்கூடிய நீர்ப்பாசனம் பெறக் கூடிய பரப்பளவு, யூட்டிலைஸேஷன் இவைகளை மையமாக வைத்து பேச்சுவார்த்தைகள் நடத்திக் கொண்டிருக்கிறோம். விரைவில் பேச்சுவார்த்தைகள் வெற்றி கண்டு சுமுகமாக தீர்த்துக் கொண்டால் மற்றபடி பின் இத்திட்டங்களை எடுத்துக் கொண்டால் சிறப்பாக இருக்கும் என்று அரசு கருதுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது ** **
என்று சொல்லி இந்தப் பிரச்சினை பற்றி அதிகமாக விவாதிக்க வேண்டாம் என்ற அர்த்தம் தொனிக்கக்கூடிய முறையில் சொன்னார்கள். கர்நாடக அரசிடமிருந்து அதிகமான நீரைப் பெறவேண்டும் என்றிருந்தாலும் இங்கு நமக்குக் கிடைக்கக்கூடிய தண்ணீரை நவீனப்படுத்தி அதிகமான அளவிற்கு விவசாயம் பயன் அடையத்தக்க வகையில் ஏற்பாடு செய்யலாமே. இதற்கு நாம் கர்நாடகா அரசின் அனுமதி பெற வேண்டியதில்லை. யாரும் தண்ணீரைஅதிகமாக எடுத்துக்கொடுங்கள் என்றுசொல்லவில்லை. ஆகவே நான் ஏற்கனவே கூறிய திட்டம் பற்றி இனிமேலாவது பரிசீலனை செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தப் பழமொழியை அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்தும் மாண்புமிகு உறுப்பினர்அவர்கள் சொன்னதிலிருந்தும் எடுத்துவிடுவது நல்லது என்றுகூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பழமொழியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு.ரா. உமாநாத் : அது கெட்ட வார்த்தை ஒன்றுமில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கெட்ட வார்த்தை அல்ல. ஆனால், அதன் பொருள் வெளியே தெரிய வேண்டாம் என்றுதான் நீக்குகிறேன். அதுபற்றி விளக்கங்கள் வேண்டாம்.

* திரு. ரா. உமாநாத் : ** ** என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது?

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

128 172—2

[1980 ஜுலை 19

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நீங்கள் எக்ஸ்பஞ்ச் செய்த தற்குப் பிறகு அது ரிக்கார்டில் இருக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்கள் சொல்லியிருப்பதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று உத்தர விடுகிறேன்.

பாண்டியாறு—புன்னம்புழா திட்டம்.

*வினா எண். 25—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியாறு–புன்னம்புழா திட்ட செயலாக்கம் எந் நிலையில் உள்ளது ?

(ஆ) அத்திட்டம் எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) அண்டு (ஆ) : இத்திட்டம் பற்றி கேரள மாநில அரசுடன் மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் நடத்தி முடிவெடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : கோவை மாவட்டத்தில் ஒரு பகுதி, பெரியார் மாவட்டத்தில் ஒரு பகுதி வறட்சிப் பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால் இத்திட்டம் நிறைவேற உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேச்சுவார்த்தைகளுக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அது வெற்றிகரமாக முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கு. ரமணி : பாண்டியாறு–புன்னம்புழா திட்டம், திட்டக் கமிஷனால் 1965ல் நிர்ணயிக்கப்பட்டது. அது பாசன வசதிக்காக நிர்ணயம் செய்யப்பட்ட திட்டமா ? அல்லது மின்சார உற்பத்தி நமக்கு அதிகமாகக் கிடைப்பதற்காக போடப்பட்டுள்ள திட்டமா? மின்சார உற்பத்திக்காக போடப்பட்ட திட்ட



1980 ஜுலை 19]

என்றால் மின்சாரப் பற்றாக் குறை இன்று இருப்பதைத் தீர்க்க அத்திட்டத்தைப் பற்றி உடனடியாக முடிவு எடுக்கப்படுமா ? அல்லது பாசன வசதி என்றால் பாசன வசதி கிடைக்கும்படி விரைவில் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: முதலில் நீர் மின் திட்டத்திற்காக ஒரு ஒப்பந்தம் போடப்பட்டது. பிறகு கோவையில் இருக்கக் கூடிய விவசாயிகள் நீர்ப்பாசனத்திற்காக நீர் வேண்டும் என்று வலியுறுத்தியதின் விளைவாக அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து நீர்ப்பாசனத்திற்கும் பயன் படுத்த வேண்டும் என்று சொல்லி நாம் கேரள அரசைக் கேட் டிருக்கிறோம். நம் ஆட்சி வந்த காலத்திலும் சரி நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் அன்றைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களும் எல்லோரும் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கிறார்கள். இரண்டுக்கும் பயன்படுத்துவது பற்றித் தான் இப்போது அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எம். சின்னராஜ் : கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அவினாசி, கோவை தாலுகாக்கள்தான் எந்தவிதமான நீர்ப்பாசன வசதியும் இல்லாமல் இருக்கின்றன. இத்திட்டம் பற்றி நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் நிறைவேறுமா என்ற சந்தேகம் கூட மக்களிடம் ஏற் பட்டிருக்கிறது. ஆகவே குந்தா கழிவு நீர்த் திட்டத்தை, இரண்டு தாலுக்காக்களுக்கும் குறைந்தபட்ச நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தும் வகையில் அரசு திட்டமிட்டு செயல் படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.20.]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர் களே, கோவை, அவினாசி வட்டங்களுக்கு நீர்ப்பாசன வசதியைப் பெற்றுத் தருவதற்கு இப்போது ஒரு ஆய்வு நடத்திக் கொண் டிருக்கிறோம். அந்த அறிக்கை கிடைத்தவுடனே நிச்சயமாக இந்த இரண்டு வட்டங்களும் நீர்ப்பாசன வசதி பெறத்தக்க அளவுக்கு சில முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டத்தால் எத்தனை ஏக்கர் நிலம் பயன்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[1980 ஜூலை 19

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே! இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் கோவை மாவட்டம் முழுவதும் அல்லது எத்தனை மாவட்டங்கள் இதனால் பயன் பெறும் அது மட்டுமல்லாமல் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையும் இந்தத் திட்டத்தின் மூலம் நிறைவேறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிந்தவுடனேயே எல்லாத் திட்டங்களும் நிறைவேற்றப்படும்.

'மால்கோ' நிறுவனத்திடம் உள்ள மின்கட்டண நிலுவை.

*கு.கா.வி. எண். 28—திரு. உ. சுப்பிரமணியன், திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அலுமினியம் உற்பத்தி செய்யும் 'மால்கோ' ஸ்தாபனம் கட்ட வேண்டிய மின்சார கட்டண பாக்கி சுமார் ஒன்பது கோடி ரூபாய் வசூலாகாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மேல் நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) மின் கட்டண நிலுவைகளைச் செலுத்தாவிட்டால் மின் இணைப்பு துண்டிக்கப்படுமென 'மால்கோ' நிறுவனம், 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் எச்சரிக்கப்பட்டது. ஆனால் மின் வாரியம் மின் இணைப்பை துண்டிக்க முடியாதபடி உயர்நீதி மன்றத்தின் மூலம் கம்பெனி 14–9–1977 அன்று தடை உத்திரவு வாங்கியுள்ளது. வழக்கு நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே 9 கோடி ரூபாய் வசூலாகாமல் பாக்கியுள்ளது. இந்தக் கேள்வி பத்திரிகைச் செய்தியின் அடிப்படையிலே கேட்கப்பட்ட கேள்வி. தற்போது மொத்த பாக்கி எவ்வளவு இந்த நிறுவனம் அரசு மின்சாரத் துறைக்கு தரவேண்டும், எத்தனை ஆண்டுகளாக இந்த பாக்கி இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ? இப்படி கோர்ட்டுக்குச் சென்று தடை வாங்கினால் எப்போது முடிவு காண்பது ?



1980 ஜூலை 19]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மால்கோவைப் பொறுத்தவரையில் பாக்கியின் விவரங்களைத் தருகிறேன் :

| | |
|---|---|
| மின் கட்டண பாக்கி .. .. | ரூ. 98.15 லட்சம். |
| சர்சார்ஜ் .. .. .. | ரூ. 16.35 லட்சம். |
| தனி சர்சார்ஜ் .. .. | ரூ. 38.48 லட்சம். |
| மின் துய்ப்பு வரி .. .. | ரூ. 21.89 லட்சம். |
| அபராத தீர்வை .. .. | ரூ. 718.90 லட்சம். |
| காலந்தாழ்த்தி மின் கட்டணம் செலுத்துவதற்கென அபராத கட்டணம். | ரூ. 8.73 லட்சம். |

ஆக 902.50 லட்சம் அதாவது 9 கோடியே 2 லட்சத்து 50 ஆயிரம்.

ஆண்டு வாரியாக நிலுவையின் விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| 1973-74ஆம் ஆண்டு .. .. | ரூ. 7.00 லட்சம். |
| 1974-75ஆம் ஆண்டு .. .. | ரூ. 721.64 லட்சம். |
| 1975-76ஆம் ஆண்டு .. .. | ரூ. 39.33 லட்சம். |
| 1976-77ஆம் ஆண்டு .. .. | ரூ. 134.53 லட்சம். |

ஆகவே இந்த நிலுவை 1973–74 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இருந்து வருகிறது. இதிலே விரைவிலே முடிவு காணவேண்டுமென்று அரசு கருதுகிறது. இதை அரசு உணருகிறதா என்று கேட்டார்கள். இதை அரசு உணருகிறது. ஆனால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிறுவனம் 1973 ஆம் ஆண்டிலிருந்து மின்கட்டண நிலுவை தரவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குமுன் ஒழுங்காக செலுத்தி இருக்கிறார்கள். இதற்குப் பின்னால் கட்டாமல் போனதற்கு என்ன காரணம் ? இப்போது கூட மாநில அரசாங்கம் சொன்னதை மத்திய அரசாங்கம் ஏற்றுக்

[1980 ஜூலை 19

கொண்டு கேரளாவிற்கு அலுமினியம் கொடுத்து மின்சாரம் பெறு வதை—இந்த நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருக் கிறது. இனிமேலாவது பாக்கியை வசூல் செய்ய இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு காலம் தாழ்த்தியாவது நியாயத்தை உணர்ந்தற் காக நாம் உண்மையிலேயே பாராட்ட வேண்டியவர்களாக இருக் கிறோம். அதற்கு முன்பு ஒழுங்காகச் செலுத்தி இருக்கிறார்கள். இப்போதும் ஒழுங்காகச் செலுத்துகிறார்கள். 1974-75 ஆம் ஆண்டு மின்வெட்டு அமுலில் இருந்தது. அவர்களுக்கென்று ஒரு கோட்டா நிர்ணயித்திருக்கிறார்கள். இந்த கோட்டாவிற்கு அதிகமாக அவர்கள் மின்சாரம் பயன்படுத்தியுள்ளார்கள். அதன் விளைவாக, அதற்கெல்லாம் அபராத கட்டணம் விதிக்கப்பட்டது. அதிலே இந்த 9 கோடி ரூபாய் வருகிறது. எப்படி அனுமதிக்கப் பட்டது என்ற விவரம் இல்லை.

திரு. செ. சிவசாமி : 1973-74 ஆம் ஆண்டில் இந்த பாக்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒன்பது கோடி ரூபாய் பாக்கி வைத்திருக்கக்கூடிய நிலையில் மிகப் பெரிய ஸ்தாபனம் இன்றைக்கு கோர்ட்டுகள் மூலம் தப்பித்துக் கொள்ள சந்தர்ப்பம் இருக்கிறது. ஆனால் சாதாரண ஏழை மக்கள் பத்து ரூபாய், ஐந்து ரூபாய் கட்டவில்லை என்றாலே சாமான்களை ஜப்தி செய்யக்கூடிய நிலை இருக்கிறது. அவர்கள் கோர்ட்டுக்குப் போக முடியாது. இந்தமாதிரி ஏழைகளுக்கும் பணக்காரர் களுக்கும் இடையே பாரபட்சம் இருக்கும் நிலைமையை மாற்றி சட்டத்தைத் திருத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எந்தச் சட்டம் வந்தாலும் அந்தச் சட்டத்தின் மூலம் கோர்ட்டுக்குச் செல்ல வழி உண்டு. மின் சப்ளையைத் துண்டிக்க வேண்டுமென்று மின் வாரியத்திலிருந்து சொன்னோம். மின் வாரியம் எச்சரிக்கை நோட்டீஸ் கொடுத்தது. முதலில் வார்னிங் நோட்டீஸ் கொடுத்துத் தான் துண்டிக்க வேண்டும். அதைக் கொண்டு போய் கோர்ட்டில் கொடுத்து ஸ்டே வாங்கி விட்டார்கள்.

திரு. ரா. உமாநாத் : கோர்ட்டில் ஸ்டே பண்ணியிருப்பது மின்சார சப்ளை கனெக்ஷன் கட் சம்பந்தமானநடவடிக்கைதான். நான் கேட்டுக்கொள்வது அவர்கள் கொடுக்க வேண்டிய பாக்கி 9 கோடி ரூபாய்க்கு மேல் இருப்பதால் ஏன் அவர்களுடைய பொருள்களை ஜப்தி செய்திருக்கக் கூடாது ? அதிலே தகராறு இருக்கிறது என்றால் அந்த பாக்டரி முழுவதையும் ஏன் 'டேக் ஓவர்' செய்யக்கூடாது ?



1980 ஜூலை 19]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதை 'டேக் ஓவர்' பண்ண வேண்டுமென்று ஏற்கெனவே இருந்த அரசு ஒரு சட்ட த்தைத் தயாரித்து அனுப்பி அனுமதி கிடைக்கவில்லை. ஏனென் றால் அந்த நிறுவனத்தில் அந்நிய நாட்டு மூலதனம் இருக் கிறது. 'டேக் ஓவர்' பண்ணுவது என்பது பிரச்னை அல்ல. இந்த நிறுவனம் அப்போது மின்சாரத்தைக் கூடுதலாகப் பெற் றிருக்கிறது. அவர்கள் சொல்வது—இது அரசாங்கத்திற்குத் தெரிந்து நாங்கள் கூடுதலாகப் பெற்றிருக்கிறோம். அதற்காக கண்டக்டர் உற்பத்தி பண்ணிக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அரசாங்கத்திலும், மின் வாரியத்திலும் அது பற்றிய எந்தக்குறிப்பும் காணப்படவில்லை; அனுமதியும் காணப் படவில்லை.

திரு. துரை முருகன் : இந்தப் பிரச்சினை பற்றி ஏற்கெனவே ஒரு முறை இந்த மாமன்றத்தில் வாதிக்கப்பட்டபோது அந்தக் கம்பெனி கோர்ட்டுக்கு போய் பார்ஷியல் ஸ்டே வாங்கச் சென்ற போது அட்வகேட்-ஜெனரல் வாதிடவில்லை, அப்சல்யூட் ஸ்டே அப்ளை செய்கிறபோது அட்வகேட்-ஜெனரல் கோர்ட்டுக்கே போகவில்லை என்று சொல்லி, அது மாபெரும் குற்றம், அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோர்ட்டில் என்னென்ன நடந்தது என்பதைப் பற்றியெல்லாம் இங்கே சொல்லக் கூடாது. அட்வகேட்-ஜெனரல் வாதிட்டார், வாதிடவில்லை என்றெல் லாம் இந்தக் கேள்வியிலேசொல்லிக் கொண்டிருப்பது சரியல்ல. கேள்வி 'மால்கோ'வைப் பற்றியது.

திரு. துரை முருகன் : ஏற்கெனவே அவையில் விவாதிக்கப் பட்டிருக்கிறது. அப்படி இருக்குமானால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று திரு. லத்தீப் அவர்கள் கூடக் கேட்டார்கள். அட்வகேட்-ஜெனரலை அவையில் கூப்பிட்டு கேட்கலாம் என்றும் சொல்லப்பட்டது. அந்த அட்வகேட்-ஜெனரல் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு கூடாது. அதுவும் சபையில் இல்லாதவரைப் பற்றிய குற்றச்சாட்டு நிச்சயமாகக் கூடாது.

திரு. துரை முருகன் : யார் மீதும் குற்றம் சொல்ல வில்லை. அப்சல்யூட் ஸ்டே கோரி அவர்கள் கோர்ட்டுக்கு வந்த போது சர்க்கார் தரப்பில் வாதிட்டிருக்க வேண்டியவர் வாதிட வில்லை. அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

[1980 ஜுலை 19

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் மூலக் கேள்வியை படித்துப் பார்க்க வேண்டும்.

திரு. மி. வின்சென்ட் : அலுமினியப் பங்கீடு கொடுத்து மின்சாரம் பெறும் கேரளா தமிழ்நாடு ஒப்பந்தம் வெற்றிகரமாக அமைந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 11—7—1980 அன்று அனுப்பிய கடிதத்தின்படி கேரள அரசு தமிழக அரசு மால்கோ சம்பந்தமாக அலுமினியப் பங்கீடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் அந்த ஒப்பந்தம் மூன்றாண்டுகளுக்குச் செய்யப்பட்டது. மத்திய அரசு ஒத்துக் கொண்டது இந்த ஆண்டுக்கு மட்டுந்தான். இதிலே இரண்டு வருஷம் இன்னும் பாக்கியிருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மால்கோ நிறுவனம் 1973 ஆம் ஆண்டில் இருந்து மின்சார கட்டணப் பாக்கி வைத்திருப்பதாகச் சொன்னார்கள். 1977 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? 1973-74, 1974-75 ஆம் ஆண்டுகளில் அதை வசூலிக்க நடவடிக்கை அப்போது இருந்த அரசால் எடுக்கப்பட்டதா ?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படி எடுத்திருந்தால் இந்தப் பிரச்சினையே எழுந்திருக்காது.

## ஆற்காடு நகரில் துணை நீதிமன்றங்கள்.

*கு. கா, வி. எண் 29—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு கூட்டுறவு-சட்டஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஆற்காடு நகரில் துணை நீதிமன்றங்கள் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது செயல்படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) & (ஆ) இல்லை,



1980 ஜூலை 19]

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, ஒரு தாலூகாவினுடைய தலைநகராக இருக்கிற காரணத்தினால் இதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலிருந்து அதுபற்றிய குறிப்ப எதுவு அரசுக்கு வரவில்லை. அப்படிப்பட்ட குறிப்பு வருகிறபோது அரசு பரிசீலிக்கும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலவைர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே ஏற்கெனவே இருந்துவருகின்ற சிவில் கம் கிரிமினல் கோர்டுகளை நீக்காமல் இருப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இருப்பதை நீக்குவது பற்றி எந்தவிதமான செயற்குறிப்பும் இல்லை. அப்படிப்பட்ட எண்ணமும் அரசுக்கு இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் இருக்கிற இடங்களிலே இன்னும் நீதிமன்றங்களை ஏற்படுத்துவதைவிட அப்படி இல்லாத இடங்களிலே ஏற்படுத்தினால் பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும். அந்த வகையிலே ஆற்காட்டிலே நீதிமன்றத்தை இனிமேலாவது ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அதை ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆற்காடு தொகுதியிலே மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இது இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே நம்முடைய அரசு அங்கே நீதிமன்றத்தைத் துவங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஏற்கெனவே திரு. திருவேங்கடம் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொன்னேன். அதைப்பற்றி ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

## சென்னை மாநகரில் கால்நடைகளினால் ஏற்படும் பாதிப்பு.

*கு. கா.வி. எண் 30—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் கால்நடைகளின் மூலமாக முக்கிய சாலைகளில் போக்குவரத்து தடைபடுவதும் அசுத்தம் ஏற்படுவதும் அதனால் மக்கள் பாதிப்புக்குள்ளாவதும் அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இதுபற்றி மாநகராட்சிக்கு அறிவுரை ஏதும் செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) (ஆ) & ஆம்.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, கால்நடைகளை வளர்க்க லைசென்ஸ்கள் ஏதேனும் வழங்கப்படுகிறதா ? இது வரையில் எத்தனை கால்நடைகளுக்கு அப்படி லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஏறத்தாழ 90 ஆயிரம் கால்நடைகளுக்கு உரிமங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. உரிமத் தொகை ஒரு மாட்டுக்கு 3 ரூபாய்.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, மாநகரத்திலே வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான பால் கிடைப்பதற்காக பால் விநியோகிக்கும் டெப்போக்களை அதிகமாகத் திறந்தால் கால்நடைகளின் எண்ணிக்கை நகரத்திலே குறையும் அல்லவா, அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தமிழக பால்வள நிறுவனத்தின் மூலமாக ஆங்காங்கே அதிகமான பால் பூத்துகளை ஏற்படுத்தி அதன் மூலமாக பால் அதிகமான அளவிற்குக் கிடைக்கச் செய்கிற முறையிலே அதைக் கவனிப்பதற்கு 4 பேர்கள் கொண்ட கமிட்டி ஒன்று அதை ஆராய்ந்து செயல்படுத்தி வருகிறது.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தவரையில் மாடுகள் அதிகமாக இருப்பதால் சாணத்தை சாக்கடைகளிலே விடுவதால் ஏற்படுகிற தொல்லைகள் அதிகமாக இருப்பதால் மாடுகளை சென்னை நகரிலிருந்து வெளியே அகற்று வதற்கான எண்ணம் மாநகராட்சியிடம் இருந்ததே, அதைச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : கால்நடைகளின் மூலமாக ஏற்படுகிற அசுத்தம் குறிப்பாக மாட்டுச் சாணத்தின் மூலமாக கழிவு நீர் அகற்றப்படாத சூழ்நிலை இருக்கிறது. மனிதர்கள்



போடுகிற அசுத்தத்தைவிட பத்து மடங்கு அதிகமான அசுத்தம் கால்நடைகள் போடுகிற அசுத்தம் தான், இதன் காரணத்தினால் கழிவு நீர் அகற்றப்படாத சூழ்நிலை ஏற்பட்டிருக் கிறது. கால்நடைகளை எல்லாம் ஒரு பொது இடத்திற்குக் கொண்டுபோய் வைத்து அங்கே பால் கறக்கின்ற முறையிலேயும், யார் யார் மாடுகள் வைத்து வளர்க்கிறார்களோ அவர்களுக்கு அதற்காக ஷெட்டுகளைப் போட்டுக் கொடுத்து, அங்கேயே பாலைக் கறக்கின்ற முறையிலேயும் ஆய்வுகள் நடந்துகொண் டிருக்கின்றன.

திரு. எம். எஸ். மாணிக்கம் தலைவர் அவர்களே, கால் நடைகளை அகற்றுவதுபற்றி குறிப்பு அனுப்பப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசு முன்வந்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல் கடந்த 30–5–1977-ல் நான்கு பேர்கள் கொண்ட ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது.

அந்த நான்கு பேர் கொண்ட கமிட்டியில் ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் ஒருவரும், சென்னை மாநகராட்சியினுடைய ஆணையாளர் ஒருவரும், காவல் துறை ஆணையாளரும் , கா நடை வளர்ச்சி இயக்குனரும் ஆக நான்கு பேர் கொண்ட கமிட்டி ஏற்படுத்தப்பட்டு, நகரிலே பிரச்சாரத்தின் மூலமாகக் கால்நடை களால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளைப் பற்றியும், சாணம் சாக்கடைகளை அடைத்துக் கொள்வது பற்றியும், தற்போதுள்ள மாட்டுத் தொழுவங்களைச் சோதனை செய்யும் முறைகளை முடுக்கி விடுவது பற்றியும், நடைபாதைகளில் பால் கறக்கும் செயல் முழுவதுமாக ஒடுக்கப்பட வேண்டுமென்றும், கண்ட இடங்களில் திரியும் கால்நடைகளை பட்டிகளில் அடைத்து வைப்பதற்கும், பால் வளர்ச்சி நிறுவனத்தின் மூலமாக அதிக மான அளவில் பால் விநியோகம் செய்ய பூத்துகளை ஏற்படுத்து வது பற்றியும் அந்த நான்கு பேர் கொண்ட கமிட்டி இன்று பரிசீலித்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே, சென்னை நகரத்தில் சாக்கடைகள் அடைத்துக் கொள்வதற்கு கால்நடை கள்தான் காரணம் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்பு கிறேன். ஆனால் 30–5–77-ல் அமைக்கப்பட்ட கமிட்டி கடந்த மூன்றாண்டுகளாகப் பரிசீலித்து இப்பொழுதுதான் முடிவைத் தெரிவித்திருக்கிறார்கள். இனி வருவது மழைக்காலம். அப்பொ ழுது எங்கு பார்த்தாலும் சாக்கடை அடைபடும். சென்னை நகரத்தில்அசுத்தத்தையும் சுகாதாரக்குறைவையும்ஏற்படுத்துவது

[1980 ஜுலை 19

இந்த சாக்கடை அடைப்புதான். கமிட்டி ரிப்போர்ட்
வருவதற்கே மூன்று வருஷம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.
எனவே துரிதமாக இந்த சாணத்தை அகற்றுவதற்கு கமிட்டியின்
சிபாரிசுகள் உடனடியாக எடுத்துக் கொள்ளப்படுமா என்பதை
அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே,
ஏற்கனவே கமிட்டி பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக்
கொண்டிருக்கிறது என்றுதான் சொன்னேன். இப்பொழுதுதான்
எடுக்கப்போகிறது என்று அல்ல. கடந்த மூன்றாண்டுக் காலமாக
தொடர்ந்து நடைபெற்று வந்த முறையைத்தான் சொன்னேன்.
மேலும் மாநகராட்சியில், ஏழு இலட்சம் பேர்களுக்கு மட்டுமே
கழிவு நீரை அகற்றுவதற்கான வழிவகைகள் இருக்கின்றன.
ஆனால் மாநகராட்சியின் ஜனத்தொகை 35 இலட்சம், மேலும்
வந்து போகின்றவர்களின் எண்ணிக்கை ஒரு நாளைக்கு 10 இலட்சம்
பேர். இந்த 45 இலட்சம் பேர்களுக்கும் கழிவை, கழிவு நீரை
அகற்றுவதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும்.
இப்படிப்பட்ட நிலைகளைச் செய்ய வேண்டுமென்றால் ஏறத்
தாழ பத்தாண்டுக் காலம் பிடிக்கும். ஆகவே, இவைகளையெல்
லாம் முறைப்படுத்திச் செய்ய வேண்டிய நிலைகளை ஆராய்ந்து
செய்ய மாநகராட்சி மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு
வருகிறது.

திரு. ஆர். டி. கோபாலன்: தலைவரவர்களே, இதே போன்று
கால்நடைகளால் மதுரை மாநகராட்சியிலேயும் போக்குவரத்
திற்கு அதிக நெரிசல் ஏற்படுகிறது என்பது அமைச்சருக்குத்
தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி சென்னை
யைப் பற்றியது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில்* உடுக்குறியிடப்
பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது
என்பதைக் குறிக்கும்.]

## (2) விண்வெளிக்கோள் ரோகிணி வெற்றிகரமாகச் செலுத்தப் பெற்றுள்ளதற்குப் பாராட்டு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, உலக அறிவியல் அறிஞர்கள்
பலரும் பாராட்டுகின்ற முறையிலும், வியக்கத்தக்க வகையிலும்
இந்திய விண்வெளி அறிவியல் அறிஞர்கள் நேற்று எஸ். எல். வி. 3



1980 ஜுலை 19] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்கின்ற விண்வெளிக்கோளை விண்ணுக்கு அனுப்பி, அதிலே
வெற்றிகண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை அறிந்து இந்த
அவையே மகிழ்கிறது என்பதை நாட்டுக்கும், உலகத்திற்கும்
தெரிவிக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கிறோம்.
இது மிகப்பெரிய சாதனை என்று உலக அறிவியல் அறிஞர்கள்
பலர் பாராட்டுகின்றவகையில் அது நேற்று நடைபெற்றிருக்கிறது.
ஆக, இந்தியா இந்த வகையிலே 6-வது நாடாக இருந்து, உலகத்
திலே இப்படிப்பட்ட அறிவியல் சாதனையை நிலைநாட்டுவதில்
முன்னின்று இருக்கின்ற அளவிற்கு வந்து சேர்ந்திருப்பது நமக்
கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்றாகும். ஆக, எஸ். எல். வி. 3
என்கிற ராக்கெட்டை அதனுடைய வடிவமைப்பை உருப்படுத்து
கின்ற முறையிலேயும் சிறப்பான வெற்றியைக் கண்டு, அதற்
குரிய ராக்கெட்டை உருவாக்குவதிலேயும் சிறப்பானவெற்றியைக்
கண்டு, அந்த ராக்கெட்டை இங்கே வைத்து விண்வெளிக்கு
அனுப்புகின்ற முறையிலேயும் வெற்றி கண்டிருக்கிற சாதனை
மிகப் பெரிய சாதனையாகும். அந்த வகையிலே இந்திய விண்
வெளி அறிவியல் அறிஞர்களை நாம் மிகமிகப் பாராட்டவும்,
போற்றவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஏற்கனவே இரண்டு விண்வெளிக்கோள்களை உருவாக்குவதிலே
இந்தியா வெற்றி பெற்று நின்றது. இரண்டு கோள்களையும்
உருவாக்கி, அதை விண்வெளிக்கு அனுப்பி, ஆரிய பட்டா என்கிற
ஒரு விண்வெளிக்கோளும், பாஸ்கரா என்கின்ற விண்வெளிக்
கோளும் இப்பொழுது உலகத்தைச் சுற்றிக்கொண்டே இருக்கின்
றன. ஆனால் விண்வெளிக்கோளை உருவாக்குவதிலே இந்தியா
அப்பொழுது வெற்றி பெற்றிருந்தது, ஆனால் விண்வெளிக்கு
அனுப்புகின்ற ராக்கெட்டை உருவாக்குவதிலே அப்பொழுது நாம்
வெற்றி பெறவில்லை. ஆகையால் அந்த இரண்டு கோள்களையும்
ரஷ்யாவினுடைய விண்வெளி நிலையத்திலிருந்து விண்வெளிக்கு
அனுப்புகின்ற முயற்சியிலே முன்பு ஈடுபட்டோம்.

[முற்பகல் 9—40]

ஆனால் இப்பொழுது ஏற்படுத்தியுள்ள இன்னொரு சாதனை
என்னவென்று கேட்டால், ராக்கெட்டையே உருவாக்கி இருப்பது
தான். பக்கத்திலே இங்கிருந்து 100 கிலோ மீட்டர் தொலைவிலே
உள்ள ஸ்ரீஹரிகோட்டா என்கிறஇடத்திலேயிருந்து அதை அனுப்பி
இருக்கிறார்கள். அந்த வகையிலே அந்த அறிவியல் அறிஞர்கள்
அத்தனை பேரும் மிகமிகப் பாராட்டுக்குரியவர்கள். சென்ற
ஆண்டு இதே எஸ். எல். வி. 2 என்ற ராக்கெட்டை அனுப்பினார்
கள். எதிர்பாராத வகையில் அதிலே தோல்வி ஏற்பட்டு விட்டது.
உண்மையான செயற்கைக்கோளை அதிலே வைத்து அனுப்பாமல்
'டம்மி' என்ற ஒரு கோளை வைத்து அனுப்பியதாகவும், அதிலே

கோளாறு ஏற்பட்டதன் காரணமாக அதிலே ஓரளவுக்கு வெற்றி—முழு அளவுக்கு வெற்றி ஏற்படவில்லை. வெற்றி ஏற்படவே இல்லை என்று சொல்ல முடியாது; ஓரளவுக்கு வெற்றி என்று அப்பொழுது கூறப்பட்டது. முழு வெற்றியும் ஏற்படத்தக்க அளவுக்கு இப்பொழுது அனுப்பி இருக்கிறார்கள். 12 நிமிடத்திலே அது விண்வெளியை அடைந்து 90 நிமிடத்திற்கு ஒரு தடவை பூமியைச் சுற்றிக் கொண்டு வருகிறது என்பதும், அதிலேயிருந்து அறிவியல் அறிஞர்களுக்குத் தேவைப்படுகிற செய்திகள் பரப்பப்படுகிறது என்று வருகின்ற செய்திகள் எல்லாம் மகிழ்ச்சியை அளிக்கக்கூடிய ஒன்று. நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் பிரதமர் அவர்கள் போற்றிப் பாராட்டியிருக்கிறார்கள். பலரும் பாராட்டிப் போற்றி இருக்கிறார்கள். நாமும் பெருமை கொள்ள, பெருமிதம் கொள்ள, அந்த வகையிலே நமக்கு உரிமை இருக்கிறது. அந்த வகையிலே இந்தியாவுக்குக் கிடைத்த பெருமையும் புகழும் நமக்கும் சேர்ந்து கிடைக்கும் என்ற முறையிலே இந்த அவையின் மூலமாக நாம் பாராட்டுதல்களையும், போற்றுதல்களையும், வாழ்த்துக்களையும் விண்வெளி அறிவியல் அறிஞர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். விண்வெளிக்கோளை அனுப்புகின்ற முயற்சிக்கு இந்த விண்வெளி ஆராய்ச்சிக்கு, பெரும் துணையாக இருந்து ஆதரவு தந்த இந்திய அரசுக்கும் நம் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட அறிவியல் சாதனைகள் தான், இந்த நாடு அறிவியலிலே முன்னணியிலே நிற்பதற்கும், முன்னணியிலே நின்று பல்வேறு பணிகளை எதிர்காலத்திலே ஆற்றுவதற்கும் எடுத்துக்காட்டாக அமையும் அந்த வகையிலே நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். முயற்சி திருவினையாக்கும் என்பது வள்ளுவருடைய வாக்கு. அந்த முயற்சி திருவினையாக ஆகியிருக்கிறது. அந்த வகையிலே அறிவியல் அறிஞர்கள் அத்தனை பேரையும் இந்த மன்றமும் பாராட்டுகிறது, வாழ்த்துகிறது என்ற கருத்தை அவை முன்னவர் என்ற முறையில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்த இமாலய சாதனைக்கு வாழ்த்துக் கூறிய சபை முன்னவருக்கு நன்றி கூறி, இந்தப் பிரச்சினையை......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரச்சினையே இல்லை எல்லாக் கட்சிகளுடைய சார்பாகவும் பேரவையினுடைய வாழ்த்தை நானும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவின் இந்தச் சாதனையைக் கண்டு நாம் எல்லோரும் பெருமை கொள்கிறோம். உங்கள் எல்லோருடைய பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் இந்தச் சாதனையைப் புரிந்த சாதனையாளர்களுக்கும் பேரவையின் சார்பாக அனுப்புகிறேன்.



திரு. என். எஸ். வி. சித்தன் : இந்தச் சபையின் நடைமுறைகளைப்பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையை சபையிலே எழுப்ப அனுமதி வேண்டுமென்று காலையிலே உங்களைக் கேட்டேன். கேள்வி நேரம் முடிந்து உடனே இந்தப் பிரச்னையை நான் எழுப்புவேன்என்று கூறினேன். அது இமாலய சாதனை, அன்னை இந்திராவினுடைய ஆட்சிக் காலத்திலே நிகழ்ந்திருக்கிற தேசிய சாதனை ; national achievement. எனவே, மரபு இல்லாவிட்டாலும், மரபாக உருவாக்கி, அதனை எழுப்ப அனுமதி வேண்டுமென்று ........(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மகிழ்ச்சிகரமான நேரத்திலே, இந்த விவகாரங்கள் எல்லாம் வரவேண்டாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒழுங்குப் பிரச்னையெல்லாம் இன்றைக்கு இதை எழுப்புவதற்கு எனக்கு அனுமதி கொடுத்து விட்டு, அதற்குப் பின்னாலே, தாங்களோ, அவை முன்னவரோ, அதைச் சொல்வதென்றால், முதலில் எழுப்பிய பெருமை எங்களுக்குக் கிடைக்கக் கூடாதா ? அதை ஏன் பறிக்க வேண்டும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை முன்னவர்தான் சொல்வது வழக்கம், சம்பிரதாயம், வேறொன்றும் இல்லை. இந்த அவையிலே இருக்கிற நடை முறைதான். உங்களுக்கும் சேர்த்துத்தான் பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். (கூச்சல்-குழப்பம்).

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆனாலும் பேரவைத் தலைவர் எனக்கு அனுமதி கொடுத்து, பேரவையில் எழுப்புகின்ற உரிமையை எனக்குத்தான் முதலிலே கொடுத்திருக்கவேண்டுமென்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரச்னையை வளர்த்தாதீர்கள். ராக்கெட் 100 நாட்களுக்கு பறக்கப் போகிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்தச் சாதனை National achievement—யை அருமை நண்பர், அன்னை இந்திரா காந்தியினுடைய achievement என்று கட்சி problem ஆக மாற்றுவது சரியல்ல. party problem ஆக மாற்றுவது சரியல்ல. continuous process-ல் அதனுடைய சக்தி வந்திருக்கிறது. அந்த continuous processதல் பல Government அங்கே இருந்திருக்கின்றன. ஆகவே, அந்த முறையில், Do not make it a party problem.

அவை முன்னவர் குறிப்பாக ஏதாவது சொல்வார் என்று தான் நான் எதிர்பார்த்தேன். அந்தச் சாதனையை ஏற்படுத்திய 3 விஞ்ஞானிகளில், இரண்டு பேர் நம்முடைய தமிழ் நாட்டைச் சேர்ந்த பெருமைமிக்க விஞ்ஞானிகள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவர் அவர்களே, பாராட்டு தெரிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் தெரிவித்திருந்தாலும், அந்த உணர்வோடுதான் வந்தேன். வந்ததற்குப் பிறகு அவையின் சார்பாக தெரிவிக்க வேண்டும் என்று தங்களிடத்திலே தெரிவித்தேன். இப்போது அவையிலே இருக்கிற அவ்வளவு கட்சி உறுப்பினர்களுடைய சார்பாகவே இந்தப் பாராட்டுதல்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்ற குறிப்பை எடுத்து அந்தக் குறிப்புடனேயே வெளியிடும்படி தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அத்தனைக் கட்சிகளும் சேர்ந்து, அத்தனைப் பேருக்கும் அதிலே பங்கிருக்கிறது பாராட்டு தெரிவிப்பதிலே என்பதை குறிப்பிலே சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> எல்லோருடைய சார்பிலேயும், மொத்தமாக இந்த அவையினுடைய சார்பாக அந்த சாதனையைச் செய்த விஞ்ஞானிகளுக்கும், 20 ஆண்டு கால சாதனை இது, ஓராண்டுக்காலம் இரண்டாண்டுக் கால சாதனை அல்ல, 20 ஆண்டுக் கால சாதனை ஆகும் இது. இந்தச் சாதனையை புரிந்த அத்தனை விஞ்ஞானிகளுக்கும், தமிழகத்தின் சார்பில், இந்தச் சபையினுடைய வாழ்த்துதல்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## <u>3. ஒழுங்குப் பிரச்சினைகள்.</u>

### <u>(அ) தியாகராயர் கல்லூரி சம்பந்தப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப் பெறுவது.</u>

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> சார், பாயின்ட் ஆப் ஆர்டர்; தயவுசெய்து கேளுங்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தை இப் போது வாசிக்கப் போகிறீர்கள். அதற்கு முன்பாக நான் ஒரு பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். காரணம் நானும் கூட அந்தத் தியாகராயர் கல்லூரி சம்பந்தமாகக் கொடுத்திருக் கிறேன். இப்போது அதை நீங்கள் வாசிக்கப்போகிறீர்கள். நான் ஒன்றை கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நாம் எந்த நோக்கத்தோடு அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்





தோமோ அதற்குரிய பிரச்சினை இப்போது இல்லை. ஏன் இல்லை என்று கேட்டால் அந்தப்பிரச்சினை கல்லூரியிலே தீர்க்கப்பட்டு, எந்த நோக்கத்திற்காக கேட்கப்பட்டதோ அதற்குரிய பிரச்சினையே இப்போது இல்லை. என்ன காரணம் என்று கேட்டால் உரிய காலத்திலே நீங்கள் அதை எடுக்காததினாலே இன்றைக்கு இது தேவையற்ற ஒரு பிரச்சினையாக மாறி இருக்கிறது. அதைப்போன்று பல்வேறு பிரச்சினைகள். கடலூர் போலீஸ் லாக்கப்பில் ஒரு சிறுவன் இறந்து போய் விட்டான். மிகவும் முக்கியமான பிரச்சினை. (கூச்சல்-குழப்பம்) அப்படியானால் இந்த அட்ஜர்ன்மென்ட் மோஷன் எடுப்பதில் அர்த்தமே இல்லாமல் போய் விட்டது. சபையின் நேரத்தை ஏன் வீணாக்குகிறீர்கள். (மேசை தட்டும் ஒலி).

<u>திரு. துரை முருகன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, ரகுமான்கான் அவர்களை நீங்கள் பேச அழைத்தீர்கள், அவர் பேசிக்கொண்டு இருக்கிறார். மத்தியிலே பின்னால் இருந்து ஏன் இந்த தட்டல்? அப்படியானால் நாங்களும் தட்டுவோம், ஒரு மந்திரி கூட பேசமுடியாது சபையிலே. (கூச்சல் குழப்பம்) நாங்களாக இருந்தாலும், அவர்களாக இருந்தாலும், ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது..................

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ரகுமான்கான் பேசிக்கொண்டிருக்கிறார், நான் பதில் சொல்லிக் கொண்டு இருக்கிறேன். இடையிலே நீங்கள் பேசாதீர்கள். உட்காருங்கள்.

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் இங்கே விவாதிக்க முடியாது, இதுதான் என்னுடைய பாயிண்ட் ஆப் ஆர்டர்.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் சில நேரங்களிலே முக்கியமான சில விஷயங்களை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக 54, 55-வது விதிகளின் கீழ் தங்களுக்குக் கொடுக்கிறோம். அவைகள் திரும்ப அனுப்பக் கூடிய, தள்ளுபடி செய்யக்கூடிய காரணங்கள்,— பேரவைத் தலைவருடைய கவனத்திற்காக சொல்லுகிறேன்—(குறுக்கீடு) ''மதுரை ராஜாஜி மருத்துவமனையில் உயிர் பாதுகாக்கும் மருந்துகள் கடத்தப்படுவது பற்றி'' ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை, அந்த இலாகா அமைச்சரின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவருவதற்கு தீர்மானம் கொடுத்திருக்கிறோம். ஆனால் எங்களுக்கு வந்திருக்கக் கூடிய பதிலில் '' இது அரசின் இயல்பான நடவடிக்கையாக இருப்பதால்.............''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் நீங்கள் அறையிலே வந்து பேச வேண்டும். இங்கே எழுப்பக் கூடாது. அந்தக் கடிதத்தை என்னிடத்திலே எடுத்து வாருங்கள். அதைப் பற்றி எல்லாம் அவையிலே விவாதிக்க நேரம் கிடையாது. (குறுக்கீடு) அதைப்பற்றி எல்லாம் இங்கே பேசக் கூடாது. தினமும் காலையிலே சந்திக்கிறோம். அந்தக் கடிதத்திற்கு விளக்கம் வேண்டுமானால் என்னிடத்திலே அறையிலே விவாதிக்கலாம். (குறுக்கீடு) அனுபவம் வாய்ந்த உறுப்பினர் தாங்கள், ஆரம்பத்தில் இருந்து இந்த அவையிலே இருக்கின் றவர்கள், உங்களுக்கு இருக்கின்ற குறைகளை எல்லாம் இங்கே கேட்பது சரியல்ல.

[முற்பகல் 9-50].

திரு. சோ. அழகர்சாமி : பிலிம் விலை ஏறிவிட்டதால் பதட்டம் என்று சொல்லப்படுகிற ஒத்திவைப்புத் தீர்மானம் உடனடியாக எடுத்துக்கொள்ளப்படுகிறபோது, 24 உயிர்கள் இறந்து விட்டன என்று சொல்லக் கூடிய பிரச்னை அவசர முக்கியத்துவம் வாய்ந்தது இல்லையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்தான் எடுத்துக் கொள்ள முடிகிறது. அந்த வரிசையில் இன்றைக்கு சென்னை தியாகராயா கல்லூரி மாணவர்கள் போராட்டம் குறித்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதாக இருந்தது. திரு. ரகுமான்கான் அவர்கள் அந்தப் பிரச்னை முடிந்து விட்டது என்று சொல்கிறார்கள். முடிந்து விட்ட பிரச்னை என்பதால் அதை எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று நினைக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் சொன்னதற்காக அதை எடுத்துக் கொள்ளாமல் விட வேண்டாம். அதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : திரு. ரகுமான்கான் சொன்னதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. இந்தப் பிரச்சினை எப்படி எழுந்தது, எப்படி முடிந்தது என்பதை இந்த அவை அறிந்து கொள்ள வேண்டும். ஆகவே, அதை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் தன்னுடைய கருத்தைச் சொன்னார்கள். மற்ற உறுப்பினர்களும் இதுகுறித்து



ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருப்பதால், அதை எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால், திரு. ரகுமான்கான் இதிலே கலந்து கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை தியாகராயா கல்லூரியில் மாணவர் போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 16-7-80 ஆம் தேதி யன்று வட சென்னை பழைய வண்ணாரப்பேட்டையில் உள்ள தியாகராயா கல்லூரியில் நடை பெற்ற மாணவர் போராட் டமும், அதன் விளைவாக ஏற்பட்டுள்ள நிலை பற்றியும் விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கோரி, திருவாளர்கள். உ. சுப்பிரமணியன், ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். எஸ். வி. சித்தன், இல. பலராமன் மற்றும் அ. ரகுமான் கான் ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். இது எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். திரு. என். எஸ். வி. சித்தன்.........

திரு.என்.எஸ்.வி.சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசுவதற்கு முன்னால் நான் ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு நாளைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்தான் எடுத்துக் கொள்ளப்படும் என்கிற முறை இருக்கிறது என்று இங்கே தெரி விக்கப்பட்டு இருக்கிறது. ஒரு நாளைக்கு எத்தனை பிரச்சினைகள் வரும் என்று நம்மால் சொல்ல முடியாது. ஆகவே, அது தளர்த்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தியாகராயா கல்லூரி விவகாரத்தைப் பொறுத்த வரையில் அங்கே மிகவும் வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. மாணவர்களே ரகளை செய்து அந்தக் கல்லூரியை மூடுகின்ற அளவிற்கு 2-3 நாளைக்கு முன்னாலே அங்கே நிலைமை உரு வாகியிருக்கிறது.

அதிலே நிலைமை கட்டுக்கடங்காமல் போய் கல்வீச்சு கூட ஏற்பட்டு, கல்லூரியின் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்பட்டு, கல்லூரியில் பணியாற்றுகிற அலுவலர்களுக்கும், அங்கே காவ லுக்கு வந்திருந்த காவலர்களுச்கும் அதிகமான அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டு, அங்கே பணியாற்றுகிற பேராசிரியர் ஒரு வருக்கு ரத்தக் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டு இருக்கிறார். இது போன்ற நிலைமைகள் இனி உருவாகக்

கூடாது, அவை தொடர் நிகழ்ச்சியாக ஆகக் கூடாது என்கிற அடிப்படையில்தான் இது தொடர்பாக விரிவாகப் பேசி ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தியாகராயா கல்லூரியில் நடக்கக்கூடிய போராட்டங்கள் போன்ற நிர்வாகத்தின் சீர்கேடுகள் காரணமாக பல்வேறு பகுதிகளில் இன்றைக்கு நடந்து கொண்டு இருக்கின்றன. ஏற்கனவே தனியார் நிறு வனங்களை அரசுடைமை ஆக்க வேண்டும் என்பது எனது கருத்து. ஒரு குறிப்பிட்ட மாணவர் பேரவைத் தேர்தலில் நிற்கக் கூடாது, என்று அங்கே சொல்லப்பட்ட காரணத்தால்தான் இந் தப் பிரச்சினை எழுந்தது. ஆகவே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் உருவாக்கப்படுவது நிர்வாக சீர்கேடுகளால்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல இடங்களில் இப்படி நடக்கின்றன. ஆகவே, அந்த நிர்வாகத்தை மிகவும் கூர்மை யாகக் கவனிக்கக்கூடிய முறையில், சீர்கேடான முறையில் உள்ள நிறுவனங்களை 'டேக்-ஓவர்' செய்கிற முறையில் இந்த அர சாங்கம் முன்வர வேண்டும். அப்படிப்பட்டமுறையில் நடவடிக்கை களை எடுக்கும்பொருட்டு விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச் சரவர்கள்.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பிலும் இந்தப் பிரச்சனை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 54-ன் கீழ் கொடுத் திருக்கிறார்கள் ; விதி 55-ன் கீழ் அல்ல.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நானும் கொடுத் திருக்கிறேன். எனக்கும் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நீங்கள் வாபஸ் பெற்றுவிட்டீர்களே.

திரு. அ. ரகுமான்கான் : இல்லை. குறைகளைச் சொன் னேனே. அல்லாமல் தீர்மானத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள வில்லை. ஆகவே, என்னுடைய கருத்தையும் இதிலே சொல் வதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். (குறுக்கீடு).





மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரை அனுமதிப்பதா, வேண்டாமா என்று முடிவு செய்யவேண்டியது நான். அவர் தீர்மானம் கொடுத்திருப்பதால் கருத்து சொல்லலாம்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55-ன் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து பேரவையில் விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் :—

" வடசென்னை பழைய வண்ணாரப்பேட்டையிலுள்ள தியாகராயா கல்லூரியில் மாணவர்கள் போராட்டம் காரணமாக பலர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டும், தியாகராயா கல்லூரி மூடப்பட்டும் இருப்பதால் அந்தப் பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க ".

இப்போது அந்தக் கல்லூரி திறக்கப்பட்டு சுமுகமாக நடக் கிறது. இந்தத் தீர்மானத்தை அந்தக் குறிப்பிட்ட காலத்தில் எடுத்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானத்தை எப்போது எடுத்துக் கொள்வது என்பது என்னுடைய விவகாரம். அதைப் பற்றி நீங்கள் சொல்ல வேண்டியதில்லை ; மேலும் அதுபற்றிச் சொல்வதாக இருந்தால் அனுமதிக்க முடியாது.

திரு. அ. ரகுமான்கான் : இப்போது இந்த பரபரப்பான பிரச்சினை முடிந்துவிட்டது. இருந்தாலும் இதில் உண்மையான நிலைமை என்ன என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். எனவே, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பிரச்சனைபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவ ரவர்களே, 1979-80 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் மற்றும் நான்காம் செமஸ்டர் பருவ சம்பளத்தை செலுத்தத் தவறிய இரு மாணவர்கள் 1980-81 ஆம் ஆண்டில் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இவ்விரு மாணவர்களையும் கல்லூரியில் திரும்ப சேர்த்துக்கொள்வதைப்பற்றி பரிசீலித்ததில் அவர்கள் நடத்தை திருப்தியளிப்பதாக இல்லாமல் இருந்தமையினால் இவர் களை மீண்டும் கல்லூரியில் சேர்த்துக் கொள்ள வேண்டாமென்று கல்லூரி அவை (காலேஜ் கவுன்சில்) முடிவு செய்ததால் அவர்களை மீண்டும் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளவில்லை. அதன்காரண

மாக சில மாணவர்கள் 16-7-1980 அன்று சுற்றி வந்து கல்லூரி உடைமைகளுக்கு கல்லூரியில் விளைவிக்க முற்பட்டனர். கல்லெறிந்து சேதம் தாக்குதலுக்கு ஆளான தத்துவ இயல் அல்லாமலும் இம்மாணவர்களின் கன்னையா ஸ்டான்லி மருத்துவ மனையில் துறைத்தலைவர் திரு. சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவங்கள் குறித்து கல்லூரி முதல்வர் 16—7—1980 அன்று காவல் துறை ஆணையாளருக்குத் தெரிவித்துள்ளார். இப் பகுதியில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல் துறையினர் செய்துள்ளனர். 17—7—1980 அன்று முதல் கல்லூரி செயல் பட்டு வருகிறது. ஆகவே, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இப்பிரச்சனை குறித்து விவாதிக்க வேண்டியதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச் சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்கள் களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## (5) கவன ஈர்ப்புகள்.

### (அ) ஹையர் செகன்டரியில் 'பார்ம் மானேஜ்மென்ட்' படித்து தேர்ச்சி பெற்ற மாணவர்கள், பி.எஸ்ஸி. (அக்ரி.) சேர முடியாமல் தவிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54-வது விதியின் கீழ் திருவாளர்கள் செ. இராமலிங்கம், இ. எம். எம். பக்கீர் முகம்மது ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். திரு. செ. இராமலிங்கம்.

திரு. செ. இராமலிங்கம் : தலைவரவர்களே, நான் கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

'' தற்போது ஹையர் செகண்டரி, ஸ்மால் பார்ம் மானேஜ்மென்ட் (வொக்கேஷனல் கோர்ஸ்) தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பி.எஸ்ஸி. (அக்ரி.) பட்டப் படிப்பில் சேர முடியாத நிலையில் உள்ளனர். பி.எஸ்ஸி. (அக்ரி.) படிப்பிற்கு விவசாயப் பாடத்துடன் உயிரியல் கேட்கிறார்கள். வொக்கேஷனல் கோர்ஸ்-பயாலஜி பாடம் வைக்கப்படவில்லை. இப்பிரிவு எடுத்துத்





தேறியுள்ள மாணவர்கள் மேற்கொண்டு படிக்கமுடியாமல் கஷ்டப் படுகிறார்கள். இதனால் மேல்நிலைப் படிப்பு படித்த மாணவர்களி டையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் நிகழ்ச்சி நிரலில் இருப்பதைத்தான் படிக்க வேண்டும். அடுத்து அமைச்சர் அவர் கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மேல்நிலைப் பள்ளி வகுப்பில் தொழிற்கல்வி எடுத்துப் பயின்ற மாணவர்கள் பொதுக் கல்வி எடுத்துப் பயின்ற மாணவர்களைப் போலவும், பி.யூ.சி. பயின்ற மாணவர்களைப் போலவும் பட்டப் படிப்பில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். மேல்நிலைப் பள்ளி வகுப்பில் அவர்கள் பிரிவு 'ஏ'ன் கீழ் எடுத்துக்கொண்டுள்ள பாடத்திற்கேற்ப பட்டப்படிப்பில் சேரலாம்.

மேல்நிலைக் கல்வி தொழிற் பாடத்திட்டத்தின்படி 'சிறு பண்ணை நிர்வாகத்தை (Small Farm Management) பாடமாக எடுத்த மாணவர்கள், பொருளியல் தத்துவத்தை பிரிவு 'ஏ' கீழ் எடுத்துப் பயிலவேண்டும். அவர்கள் வேதியல், இயற்பியல், உயிரியல் ஆகிய பாடங்களை எடுத்துப் பயிலவில்லை. எனவே அவர்கள் விவசாயப்பட்டப் படிப்பு எடுத்துப் பயிலத் தகுதியில்லாமல் இருக்கிறார்கள். எனினும், அவர்கள் மேல் நிலைப் பள்ளி வகுப்புக்களில் எடுத்துப் படித்த பாடங்களில், பட்டப் படிப்பு படிக்கலாம். 10+2+3 பாடத் திட்டத்தின் குறிக் கோள் தொழிற்கல்வி பயின்ற மாணவர்கள் அவர்கள் பயின்ற பாடங்களின் மூலம் பெற்ற அறிவை அதற்குரிய தொழில் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுத்த வேண்டும் என்பதேயாகும்.

சிறு பண்ணை நிர்வாகத்தை தொழிற் கல்வியில் எடுத்து பயின்ற மாணவர்கள் விவசாயப் பட்டப்படிப்பில் சேர்ந்து பயில வாய்ப்பில்லாவிட்டாலும், பிற பட்டப்படிப்புகளில் எடுத்து பயின்ற பாடத்திற்கேற்ப சேர்ந்து படிக்க எவ்விதத் தடையுமில்லை.

[முற்பகல் 10-00]

திரு. செ. இராமலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே மேல்நிலைப்பள்ளிகளில் என்ன பாடத்தை எடுத்துப் படித்தார் களோ அதற்குத் தகுந்தாற்போல பட்டப் படிப்பிலே சேர்த் துக் கொள்ளப்படுகிறார்கள். ஆனால் ஸ்மால் ஃபார்ம் மேனேஜ்மென்ட் படித்தவர்கள் இவ்வாறு பட்டப் படிப்பிற்காக கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்படாத நிலை இருப்ப தால் அவர்கள் படித்த அந்தத் தொழிலியல் பாடங்களை யாவது அந்தப் பட்டப் படிப்பில் சேர்க்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1980 ஜூலை 19

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவ
ரவர்களே, தொழில் கல்வி என்பது குறிப்பிட்ட ஒரு தொழி
லில் ஒரு பயிற்சி தரவேண்டும் என்பதற்காக அந்தப் பயிற்
சியை நாம் தந்து கொண்டிருக்கிறோம். சிறு பண்ணை
நிர்வாகம் என்பது அப்படி ஒரு தொழில் பிரிவு. அதிலே
பயிற்சி பெற்றவர்கள் நாட்டுக்குத் தேவை என்கிற முறையிலே
தான் அவ்வாறு பயிற்சி தந்துகொண்டிருக்கிறோம். பொது
வாக தொழில் பிரிவைப் படிக்கின்றவர்கள் அதோடு
படிப்பை முடித்துக் கொள்ளக்கூடியவர்களாக இருப்பார்கள்
பின்னர் அவர்கள் தான் கற்ற தொழில் கல்வியின் பயனாள்
தங்களுடைய வாழ்க்கையில் ஏதாவது தொழிலைச் செய்து
பிழைத்துக்கொள்ளக்கூடிய வகையிலேதான் அந்தக் கல்வி
அமைக்கப்பட்டிருக்கின்றது. இருந்தாலும் அவர்களிலே
மேலும் படிக்கவேண்டும் என்று நினைப்பவர்களுக்காக சில
வாய்ப்புகளைத் தருகிறோம். அதாவது அவர்கள் படிக்கின்ற
போது ஆங்கிலம் எடுத்திருந்தால் ஆங்கிலத்தைத்
தொடர்ந்து படிக்கலாம். தமிழ் எடுத்திருந்தால் தமிழ் படிக்க
லாம். அதுபோக தொழில் பிரிவு மாணவர்களுக்
கான ரிலேடட் சப்ஜக்ட் என்ற அளவிலே படிக்கிறார்கள்.
அதிலே பட்டப் படிப்பு படிக்கலாம். இப்படிப்பட்ட
வாய்ப்புகளை எல்லாம் அவர்களுக்கு ஏற்படுத்தித் தந்திருக்கி
றோம். ஆனால் அதே நேரத்தில் பி.எஸ்ஸி. அக்ரிகல்சர்
பட்டப் படிப்பைப் பொறுத்த வரையில் அதற்கு வருகின்ற
மாணவர்கள் வேதியல், இயற்பியல், உயிரியல் போன்ற
பாடங்களைப் படித்தவர்களாக இருந்தால்தான் தேர்ந்தெடுக்
கப்படுகிறார்கள். ஆகவே எல்லோரும் அந்தப் பட்டப்
படிப்பிற்குப் போக முடியாது. அதற்கு சிறு பண்ணை
நிர்வாகப் படிப்பு படித்தவர்கள் தகுதியற்றவர்களாக இருக்
கின்ற காரணத்தால்தான் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படு
வதில்லை. ஆகவே இதிலே நான் சொல்ல விரும்
வது என்னவென்றால் அவ்வாறு பட்டப்படிப்புக்கு போ
வேண்டும் என்று விரும்புகிறவர்கள் முதலிலேயே இந்
பாடத்தை எடுக்கக்கூடாது என்பதைத்தான் நான் இங்கே
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(ஆ) இந்துஸ்தான் போட்டோ பிலிம் (Photo film) கம்பெனி
ரோல் பிலிம்கள் விலை உயர்வு.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: 54-ன் வது விதியின்கீழ்
திருவாளர்கள் இரா. தாமரைக்கனி, டாக்டர் கே. சமரசம்,
செ. சிவசாமி, கு. ரமணி, ஜே. ஹேமச்சந்திரன் மற்றும்
மு. அம்பிகாபதி ஆகியோர் ஒரு அவரசப் பொது முக்கியத்துவம்
வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் அமைச்சவரர்களின்
கவனத்திற்குக்கொண்டு வருவார்கள். திரு. இரா. தாமரைக்கனி



1980 ஜூலை 19]

திரு. இரா. தாமரைக்கனி: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்: " இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் கம்பெனி ரோல் பிலிம்களின் விலைகளை அதிகம் உயர்த்தியுள்ளதால், படத் தயாரிப்பாளரிடம் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை" குறித்த

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, உதகமண்டலத்தில் நிறுவப்பட்டுள்ள இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் கம்பெனி ஒரு மத்திய அரசு நிறுவனமாகும். இந்நிறு வனத்திடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் நிலைமை குறித்த விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது:—

இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனம், படத் தொழில் போன்றவைகளுக்குத் தேவையான கீழ்க்கண்ட பலரக படச் சுருள்களை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது:—

(அ) (1) 35 மி.மீ. கருப்பு மற்றும் வெண்மை சினி பாசிட்டிவ்.

(2) 16 மி.மீ. கருப்பு மற்றும் வெண்மை சினி பாசிட்டிவ்.

(3) 35 மி.மீ. சினி சௌண்ட் நெகட்டிவ்.

(ஆ) (1) 35 மி.மீ. சினி கலர் பாசிட்டிவ் ஆப் ஆர்வோ பிராண்ட்.

(2) 35 மி.மீ. சினி கலர் பாசிட்டிவ் ஆப் கேவார்ட் பிராண்ட்.

(3) 16 மி.மீ. சினி கலர் பாசிட்டிவ் ஆப் கேவார்ட் பிராண்ட்.

இனம் (அ) வில் குறிப்பிட்டுள்ள ரகங்கள் இந்நிறுவனம் சொந்த
மாக தயாரிப்பவைகளாகும். இனம் (ஆ) வில் குறிப்பிட்டுள்ள
ரகங்கள் ஜெர்மனி மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகளிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட ஜம்போ ரோல்களிலிருந்து தயாரிக்கப்
பட்டவைகளாகும்.

உள்நாட்டு சந்தையில் வெள்ளியின் விலைகள் மிக அதிக
அளவில் உயர்ந்ததால், 10—12—1979 தேதியிலிருந்து மேலே
இனம் (அ) வில் குறிப்பிட்டுள்ள ரகங்களின் விலைகள் 22 சத
வீதம் உயர்த்தப்பட்டன என்றும், நிறுவனம் ஜம்போ ரோல்
களுக்கு அதிக விலையும், குறிப்பாக 1979 வரவு-செலவுத் திட்டத்

தின் பயனாக அதிக இறக்குமதி தீர்வை கொடுத்தபோதிலும்
இனம் (ஆ) வில் குறிப்பிட்டுள்ள ரகங்களின் விலைகள் 1977-ம்
ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து மாற்றம் ஏதுமின்றி இருந்
தன என்றும், ஆனால் நிறுவனம் இந்த அதிக விலைகளை
மேலும் தாங்கிக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டதால்
6—2—1980 தேதி முதல் இனம் (ஆ) வில் குறிப்பிட்டுள்ள
ரகங்களின் விலைகளை 10 சதவீதம் உயர்த்த வேண்டிய
நிலைமை ஏற்பட்டது என்றும், இந்த விலை உயர்வினால்
இனம் (அ) வில் குறிப்பிட்டுள்ள ரகங்களின் விலைகளை
மேலும் உயர்த்துவதற்கு வாய்ப்பு ஏற்படவில்லை என்றும்
நிறுவனம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மேலும், ஜெர்மனி மற்றும் பெல்ஜியம் நாடுகள் தாங்கள்
சப்ளை செய்து வந்த ஜம்போ ரோல்களின் விலைகளை, வெள்ளி
விலையின் அளவு கடந்த அதிகரிப்பு காரணமாக உயர்த்தினார்
கள் என்றும், இறக்குமதி செய்யப்பட்ட ஜம்போ ரோல்கள்
உண்மையாக உபயோகிப்போர் லைசென்ஸின் (Actual
users licence) மூலம் REP திட்டத்தின் கீழ் வருவதால்
அதற்கு விற்பனை வரியில்லை என்றும், ஆனால் இந்துஸ்தான்
போட்டோ பிலிம்ஸ் கம்பெனி அதனை மாற்றி விற்கும்
போது அதிகமான 13·65 சதவீதம் விற்பனை வரிக்கு உள்ளா
கிறது என்றும், மேற்கண்ட சூழ்நிலையில் இனம் (ஆ) வில்
குறிப்பிட்டுள்ள மாற்றப்பட்ட பிலிம்ஸ் ரகங்களின் விலைகளை
நிறுவனம் முறையே 35 சதவீதமும், 40 சதவீதமும் 1—7—1980
தேதியிலிருந்து உயர்த்தியுள்ளது எனவும் நிறுவனம் கூறியுள்ளது.

மேற்குறிப்பிட்ட விலையேற்றங்கள் இந்துஸ்தான்
போட்டோ பிலிம்ஸ் கம்பெனியின் இயக்குநர்கள் குழு நியமித்த
விலை நிர்ணய உப நிலைக் குழு செய்த (Standing Price
Fixation Sub-Committee) மறு ஆய்வின் பிறகே உயர்த்
தப்பட்டுள்ளன. இந்நிறுவனம் மத்திய அரசின் கட்டுப்பாட்டில்
உள்ளதால் உப நிலைக் குழுவின் முடிவை மாற்றும்
அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. ஆனால் விற்பனை வரியை
உள்ளடக்காமல் பார்த்தால் இறக்குமதி செய்யப்பட்ட
ஜம்போ பிலிம்களின் விலையை விட இந்நிறுவனத்தால் மாற்றப்
படும் பிலிம்களின் விலை குறைவானதே என்று குறிப்பிடத்தக்க
தாகும். இந்நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்படும் ஜம்போ
பிலிம்களின் மீது விதிக்கப்படும் இறக்குமதித் தீர்வை கணிசமான
அளவிற்கு குறைக்கப்பட்டால் போதிய அளவு நிவாரணம் கிடைக்
கும் என்பதைச் சுட்டிக்காட்டி மத்திய அரசுக்கு மாநில அரசு
பரிந்துரை செய்ய உத்தேசித்துள்ளது. இது பற்றி முதலமைச்
சர் டில்லியில் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் பேச்சுவார்த்தை
நடத்த இருக்கிறார்.



திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்
களே, குறைந்த விலையில் ஃபிலிம் கிடைக்கின்ற
வகையிலே தமிழ்நாடு தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க
ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.
பலர் பல புதுமுகங்களை அதாவது அனுபவம் இல்லாதவர்களைக்
கொண்டு படம் எடுப்பதால் ஃபிலிம்கள் பல வெட்டி எறியப்பட்டு
விரயம் ஆகின்றன. மேலும் சினிமாப் படங்களைப் பொறுத்த
வரையில் பலவகையான ட்ரெயினிங் கொடுப்பதால் அவர்
களால் கட்டடங்கள் போன்றவற்றை அழிக்க முடியும். தற்
போது அவர்கள் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருப்
பதால் பல கட்டடங்களுக்குச் சேதம் ஏற்படக்கூடிய வகையில்
அவர்களது போராட்டம் நடைபெறக்கூடும். ஆகவே அதற்கு
முன்ஜாக்கிரதையாக நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரச்சினை போட்டோ
ஃபிலிமின் விலை உயர்வு பற்றித்தான், ஆகவே அதைவிட்டு
விட்டு வேறு பிரச்சினைக்குப் போகாதீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, ஸ்டுடியோக்களில் எனக்கு அனு
பவம் கிடையாது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே,
இந்த இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் கம்பெனி, பிலிம்
களை மொத்தத்தில் வாங்கி வினியோகம் செய்யக்கூடிய
ஒரு கம்பெனி. இவர்கள் விலையை உயர்த்தியதால் இன்றைய
தினம் ரோல் ஒன்றுக்கு 260 ரூபாய் அதிகமாகும். அப்படி
ஏறுகிற காரணத்தினால் ஒரு பிலிம் தயார் செய்ய ஒரு அடிக்கு
4,000 ரூபாய் அதிகமாகும். ஆக மொத்தத்தில் ஒரு பிலிம்
தயார் செய்து வெளிவர வேண்டுமென்றால் 1,20,000
ரூபாய் அதிகமாகச் செலவழிக்க வேண்டிய நிலை ஏற்
பட்டிருக்கிறது. அதுவுமல்லாமல் இந்த அரசு வந்த பிறகு
சினிமாத்தொழிலில் தேங்கிக் கிடந்த வரி பாக்கிகளை வசூல்
செய்தோம். 19 கோடியாக தமாஷா வரி இருந்ததை 29
கோடியாக ஆக்கி வசூல் செய்தோம், வரி வசூலை விரைவு
செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் அப்படிச்
செய்யப்பெற்றது. ஆனால் இப்போது இந்த பிலிம்களின்
விலை அதிகமாக ஆகியுள்ளதால் இந்தத் தொழில் நசித்துப்
போகிற சூழ்நிலையிலிருந்து அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க
வேண்டும். இந்நிலை நாடு முழுவதும் இருக்கிற காரணத்
தினால், இந்த பிலிம்களின் விலையை நிர்ணயம் செய்ய அரசு
முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

[1980 ஜூலை 19

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்த இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் கம்பெனி சம்பந்தமாக, ஸ்டேண்டிங் பிரைஸ் பிக் சேஷன் கமிட்டிதான் இந்த விலை மாற்றங்களைச் செய்திருக் கிறார்கள். அவர்கள் செய்கிற முடிவினை மாற்றுகிற அதி காரம் மாநில அரசுக்கு இல்லை. இருந்தாலும் இந்த விலை ஏற்றத்தை தவிர்ப்பதற்கான வகையில் சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சரோடு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே பேசியிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இன்னும் பேசவும் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விலை ஏற்றம் தமிழகத்தில் இருக்கும்படியான பிலிம் தொழிலை அடியோடு முடக்கி ஒரு பெரிய நெருக்கடிக்கு கொண்டு போய்விடும். ஒரு பிலிம் உற்பத்தி செய்ய 1,20,000 ரூபாய் செலவாகும் என்று நமது மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் இங்கே சொன்னார்கள்.

அது மட்டும் அல்லாமல் நாடு முழுவதும் இருக்கக் கூடிய போட்டோகிராபிக் தொழிலில் ஈடுபடக் கூடியவர்கள் இந்த விலை ஏற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 35, 40 சதவீதம் விலை ஏற்றத்தை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது; இது நியாயமும் இல்லை என்பதை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய பொறுப்பு மாநில அரசுக்கு இருக்கிறது. ஆகவே அப்படி அவர்களுக்கு எடுத்துச் சொல்லி விலையைக் குறைக்க வேண்டும் என்று கேட்டு, இங்கேயே ஒரு தீர் மானத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா ? ஏற்கனவே மத்திய அமைச்சரோடு நமது முதலமைச்சர் அவர்கள் பேசி யிருப்பதாகவும், இன்னும் பேசவிருப்பதாகவும் நமது மாண்பு மிகு தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நன்றி. இருந்தாலும், இந்தப் பிரச்சினை தொழிலாளர்கள் போராட்டம் வரை சென்று, போலீஸ் வரக்கூடிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. வெள்ளியின் விலை ஏற்றத்தால் பிலிமின் விலை ஏறியிருப்பதாகத் தெரிகிறது. இருந்தாலும் இவ்வளவு விலை ஏற்றம் நியாயம் அல்ல. இது நாடு தழுவிய ஒரு பிரச்சினை. ஆகவே உடனடியாக மத்திய சர்க்காருக்கு விலையைக் குறைக்க வேண்டும் என்று கேட்டு, அதற்கான ஒரு தீர்மானத்தை இங்கேயே நிறைவேற்ற அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல வெள்ளியின் விலை ஏறியதினால்தான், வெளிநாடு





களிலும், உள் நாட்டிலும் இந்த பிலிம்களின் விலை அதிகரித் திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது தவிர, மத்திய அரசைப் பொறுத்தவரையில் இறுக்குமதி செய்யப்பெறுகிற பிலிம்களின் மீது விதிக்கின்ற தீர்வையை மட்டும் கொஞ்சம் குறைக்குமே யானால் இந்த விலை ஏற்றம் குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைச் சுட்டிக்காட்டியும் கூட மத்திய அரசுக்கு மாநில அரசு எழுதியிருக்கிறது. அதைத் தொடர்ந்து, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லிக்கு போகிறபோது வலியுறுத்தி பேசவிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த இந்துஸ்தான் பிரைஸ் பிக்சேஷன் கமிட்டி, பிலிமுக்கான விலையை நிர்ணயம் செய்கிறபோது, போட்டோகிராபர்கள் பாதிக்கப் பெறுகிற பிரச்னையை கணக்கில் எடுத்துக் கொண்டு முடிவுக்கு வரவில்லை என்று தெரிகிறது. ஆகவே, இந்த இந்துஸ்தான் பிரைஸ் பிக்சேஷன் கமிட்டி நியாயமான முறையில் நடந்து கொள்ளவில்லை என்று சொல்லி, இந்த போட்டோகிராபர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று எடுத்துக் காட்டி அவர்களுக்கு பாதுகாப்பு கேட்டு மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இந்த 'பிரைஸ் பிக்சேஷன் கமிட்டியைப்' பொறுத்தவரை மாநில அரசுக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை மத்திய அரசுக்கு தெரிவிக்கும் வகையில் நடவடிக்கையை வேண்டுமானால் எடுத்துக் கொள்ளலாம்.

[முற்பகல் 10-10]

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, உதகமண்ட லத்தில் இருக்கக் கூடிய இந்துஸ்தான் போட்டோ பிலிம் கம்பெனி இப்போது பிலிம்களின் விலையை ஏற்றியிருப்பதன் விளைவைப் பற்றி உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். திரு. தாமரைக்கனி அவர்களும், டாக்டர் சமரசம் அவர்களும், தோழர் ரமணி அவர்களும் இதன் முக்கியத்துவத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். இந்துஸ்தான் போட்டோ பிலிம் கம்பெனி தொழிற்சாலைக்கு எதிரிலே தார்ணா நடந்து கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஐந்து ரூபாய்க்கு பிடித்துக் கொண்டிருந்த படம் இப்போது ரூ. 10, ரூ. 15 என்று உயரப் போகிறது. சினிமா டிக்கட்டும் உயரக் கூடிய நிலை ஏற்படுகிறது. ஸ்டுடியோக்களில் படப்பிடிப்புகள் நிற்கப் போகக் கூடிய நிலை இருக்கிறது.

இதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கக் கூடிய அபாயம் இருக்கிறது. இதனால் தமிழகத்தில் உள்ள பிலிம் இன்டஸ்ட்ரியே சிரமத்திற்கு உள்ளாகக் கூடிய நிலையில் சிக்கித் தவிக்கிறது. மத்திய அரசு செய்கிறது, எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. காரணம், அங்கே லா அன்ட் ப்ராப்ளம் வந்தால் அங்கே போலீஸ் மற்றவைகளை உபயோகிக்க வேண்டி வரும். துப்பாக்கிச்சூடு வந்தால் அதற்கு யார் பொறுப்பு? மாநில அரசுதான் பொறுப்பு. துப்பாக்கிச் சூடு வரக் காரணம் என்ன ? பிலிம் விலை ஏற்றம் காரணம். விலை ஏறக் காரணம் என்ன ? மத்திய அரசு காரணம். இப்படிப்பட்ட பல சிக்கல்கள் இருப்பதால், இந்தப் பிரச்னை பற்றி நான் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த பிலிம் இன்டஸ்ட்ரியில் அரசு உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இந்த இந்துஸ்தான் போட்டோ பிலிம் கம்பெனி பிலிம்களின் விலையை அதிகமாக உயர்த்தியிருப்பதால் தமிழ்நாட்டில் மிகப் பெரிய தொழில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. போட்டோ இன்டஸ்ட்ரி யானாலும் சரி, பிலிம் இன்டஸ்ட்ரியானாலும் சரி சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் இன்றைக்கு ஆயிரக்கணக்கில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு பாதகமான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதோடு இப்படி விலை ஏறுவதன் காரணமாக கடத்தல்காரர்கள் அதைப் பயன்படுத்திக் கொண்டு பழைய பிலிம்களைக் கூட இன்றைக்கு கடத்தி பிளாக் மார்க்ட்டில் அதிக விலைக்கு விற்கக் கூடிய நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு எந்தளவிற்கு இந்த விலையைக் குறைக்க முடியுமோ அதைக் குறைப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன உணர்வுகளைக் கொண்டிருக்கிறார்களோ அதே உணர்வை இந்த அரசும் கொண்டிருக்கிறது. இந்தத் துறையில் ஏற்பட்டி ருக்கிற நெருக்கடியையும் அதனால் ஏற்பட்டிருக்கிற தொழில் தகராறுகளையும் தீர்த்து வைக்கிற நிலையில்தான் இத்துறை சம்பந்தப்பட்டிருக்கிற அதிபர்களை எல்லாம் முதல்வர் அவர்கள் பார்த்துப் பேசியிருக்கிறார்கள். எனவே, தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திரு. அம்பிகாபதி அவர்கள் சொல்கிறபோது, மத்திய அரசுக்குத்தான் இதில்



அதிகாரம் இருக்கிறது, மாநில அரசுக்கு இல்லை என்பதை நான் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொன்னார்கள். அதைத்தான் நாம் அனைவரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசின் அதிகாரங்கள் இன்னும் பரவலாக வர வேண்டும் என்றுதான் நாம் எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இருக்கிற நிலையை வைத்து இப்போது நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

## 3. ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

### (ஆ) உறுப்பினர்களது விடுதி அறைகளில் ஒட்டப் பெற்ற விதி முறைகள்.

திரு. கு. ரமணி : பாயின்ட் ஆப் ஆர்டர். 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் நாளன்று எங்கள் ஹாஸ்டல் ரூம்களுக்கு முன்னால் ஒரு நோட்டீஸ் ஒட்டப்பட்டதைப் பற்றி இங்கே நாங்கள் விவரங்கள் தெரிவித்து அவை முன்னவர் அவர்கள் அதற்காக வருத்தம் தெரிவித்து வாபஸ் பெற்றுக் கொண்டார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஹாஸ்டல் சம்பந்தப்பட்ட விஷயங்களை என் அறைக்கு வந்து பேசுங்கள்.

திரு. கு. ரமணி : சில விஷயங்களைத்தான் அறையில் வந்து பேசலாம்.........................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றே இதைப் பற்றி அரைமணி நேரம் பேசினோம். ஹாஸ்டல் சம்பந்தப்பட்ட விஷயங்களை என் அறைக்கு வந்து பேசுங்கள்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே; அந்த நோட்டீசைக் கொண்டு போய் ஒட்டிய அந்த ஊழியர் டிஸ்மிஸ்செய்யப்பட்டி ருக்கிறார். அவர் க்ரவுண்ட் புளோரிலே வேலை செய்யக் கூடிய ஊழியர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் டிஸ்மிஸ் ஆக வில்லை. இதைப்பற்றி நேரடியாக வந்து என் அறையிலே பேசுங்கள் என்றுதான் சொல்கிறேன். ஆபீஸ் சம்பந்தப் பட்டவைகளை அங்கே பேசலாம். அதற்காகத் தான் அலுவல் ஆய்வுக் குழு போட்டிருக்கிறோம்.

[1980 ஜூலை 19

திரு. கு. ரமணி : நான் சொல்வது, அந்த நபர் டிஸ்மிஸ் செய்யபட்டிருக்கிறார். என்னிடத்திலேயே சொல்லப்பட்டது. அந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி விசாரித்து, தகுந்த பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இன்னொரு விஷயம். இந்த நோட்டீஸ் ஒட்டப்பட்ட பிரச்னை வாபஸ் வாங்கப்பட்டது. இது உங்களுக்குத் தெரியும். நீங்களே உத்தரவு போட்டிருக் கிறீர்கள். ஆனால் நிலைமை என்ன ? அந்த நோட்டீஸ் இன்னும் எடுக்கப்படவில்லை. என் அறையின் கதவிலே 4 காகிதங்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. அதுவும் கதவின் பின்னாலே ஒட்டப்பட்டிருக்கிறது. நான் அறைக்குள் இருக்கும் போதெல்லாம் அதைப் பார்க்கக் கூடிய ஒரு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காகிதம் இன்னும் அப்படியே இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை பற்றி அன்றைக்கு தெளிவு பெறாத நிலையில் வந்தது. இந்த நோட்டீஸ் ஒட்டுவது என்பது—சாதாரணமாக பயணியர் விடுதி களில் எல்லாம்கூட தங்குபவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய விதிமுறைகள் போடப்பட்டிருக்கும். இதிலே தங்குபவர்கள் பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல. நாடாளு மன்ற உறுப்பினர்கள், ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள், அரசு அதிகாரிகள் போன்றவர்கள் தங்கு கிறார்கள். அவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய விதிமுறைகள் ஏற்கனவே வகுக்கப்பட்டவை. இதிலே நடந்த ஒரே ஒரு தவறு அது அங்கே ஒட்டப்பட்டதாகும். பயணியர் விடுதிகளில் கண்ணாடி போட்டு வைப்பார்கள் ; சில இடங்களில் அட்டையில் ஒட்டி தொங்க வைப்பார்கள். இந்த விதிமுறைகள் ஏற்கனவே இருந்த பேரவைத் தலைவர் திரு முனு ஆதி அவர்கள் 5, 6 மாதங்களுக்கு முன் ஏற்றவை. இந்த விதிமுறைகள் ஒட்டப்பட்ட நிலைமையிலேயே தான் ஒரு தவறு இருக்கிறது. தங்குபவர்கள் என்று வருகின்றபோது, அதிலே உறுப்பினர்களையும் இணைக் கின்ற ஒரு தன்மை வருகிறது. உறுப்பினர்களுக்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன; தங்குபவர்களுக்கென்று சில விதி முறைகள் இருக்கின்றன. தங்குபவர்களாக இருந்தால் முன் கூட்டியே பணம் தர வேண்டும். அது தங்குபவர்களுடைய நிலை. ஆனால் உறுப்பினர்களுக்கு அப்படியல்ல. எனவே, இதை இரண்டையும் பார்த்து, இந்த விதிமுறைகளை இணைத்து செயல்பட வேண்டும். இதைப் பொறுத்தவரையில் அன்றைக்கே வாபஸ் பெறப்பட்டது. ஆனால், அன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். செயலாளர் தனக்குத் தெரியாது என்று சொன்னவுடனே, தெரியாமல் எப்படி



நடந்தது, அதற்குக் காரணமானவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். இதைப்பற்றி விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த தன்மையிலே, அடிப் படையிலே யார் மீதும் குற்றமில்லை என்றால், யார் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இருக்காது. ஆகவே, நிலைமை இந்த அளவிலே இருக்கிறது. மேற்கொண்டு விசாரணை செய்து, உள்ளபடியே தவறு யார்மீது என்று வருகிறதோ அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். இதிலே ஒரு கிளாரிபிகேஷன், தெளிவு ஏற்பட வேண்டும். காரணம், உறுப்பினர்களுக்கு என்னென்ன விதிமுறைகள், தங்குபவர்களுக்கு என்னென்ன விதிமுறைகள் என்று இரண்டையும் தனித் தனியாக பார்த்து இதிலே தெளிவடைய வேண்டும்.

## (3) ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.

### (இ) உறுப்பினர்கள் கோரும் தகவல்கள் கொடுக்கப்பெறுவது.

* திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அடுத்து இந்த மானியக் கோரிக்கையை எடுத்துக்கொள்ள இருக்கிறீர்கள். உறுப்பினர்களுக்கு சில பாதுகாப்புகள் வேண்டி தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன். இந்த தொழில் மானியத்திலே எங்கள் கட்சியின் சார்பிலே இரண்டு பேர்கள் பேச இருக்கிறோம். நானும் பேச இருக்கிறேன். இதிலே பேசுவதற்கு பாலிசி நோட் கொடுத்திருக்கிறார்கள். இல்லாத சில விஷயங்களை உண்மை களை நாங்கள் கோரிப் பெறுவதற்கு எங்களுக்கு பொறுப்பும். உரிமையும் இருக்கிறது. அந்த ‘‘ fact ’’ ஐ வைத்துக்கொண்டு தான் பேசுவோமே தவிர, fact இல்லாமல் பேச முடியாது. ஆகவே, நீங்கள் சட்டமன்றத் துறையின் மூலமாக அந்தந்த இலா காவிற்கு எழுதி கேட்டால், சாதாரணமாக கொடுப்பது வழக்கம். நம்முடைய அவை முன்னவர் அவர்கள்கூட விவாதத்திற்குப் பதில் அளிக்கின்றபோது சமீபத்திலே மேலவையிலே பேசினார்கள். இந்த மன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள்.

[முற்பகல் 10–20].

அசோக் லேலண்ட் எக்ஸ்பான்ஷன் சம்பந்தமாக சில புள்ளி விவரங்களைக் கொடுத்தார்கள். எவ்வளவு கோடி ரூபாய் இன் வெஸ்ட்மென்ட் செய்ய இருக்கிறார்கள், எவ்வளவு ஆயிரம் பேருக்கு வேலை கிடைத்திருக்கும் போன்ற அடிப்படை உண்மை களைத் தெரிவித்தால் எங்களுக்கு உதவியாக இருக்கும். அதை வைத்துப் பேச உதவியாக இருக்கும். சட்டசபை செயலாளரிடம் கேட்டேன். இன்டஸ்ட்ரிஸ் செக்ரடரிக்கு எழுதி உடனடியாக

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி) [1980 ஜூலை 19

இன்பர்மேஷன் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்திருப்பதாக
அறிகிறேன். ஆனால் எனக்குத் தரப்படவில்லை. பராளுமன்
றத்தில் கடைப்பிடிக்கும் முறையை இங்கும் கடைப்பிடிப்பதுதான்
நியாயமாகும். அரசாங்கத்திலிருந்து ஒரு ஜி. ஓ. போடுகிறார்
கள்— அந்த ஜி. ஓ. நம்பரைக் குறிப்பிட்டு 'ஃபார் மை இன்பர்
மேஷன்' வேண்டுமென்று கேட்டால் கான்பிடன்ஷியலாக இருந்
தாலொழிய அனுப்ப வேண்டும். ஆகவே, இதுபோன்ற
விவரங்களைக் கேட்கும்போது ஆளும் கட்சியில் இருந்தாலும்,
எதிர்க்கட்சியில் இருந்தாலும் உறுப்பினர்களுக்கு உடனடியாகக்
கொடுக்கப்பட தாங்கள் பாதுகாப்புத் தருவீர்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்
களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அசோக் லேலண்ட்
விரிவாக்கத் திட்டம் பற்றிய 'இன்பர்மேஷனைக்' கோரி தொழிற்
துறைச் செயலாளரிடத்தில் நேற்று இரவு 7 மணிக்குப் பின்னர்
தான் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இன்று தொழிற்துறை
மானியக் விவாதத்தில் இருக்கிறது. சாதாரணமாக மாண்புமிகு
உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள விரும்புகிற தகவல்களை
தொழிற்துறை செயலாளரிடமிருந்தோ மற்ற எந்தச் செயலாள
ரிடமிருந்தோ கேட்டுப் பெற்றுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறார்கள். ஆனால் அவர்கள் அந்த விவரங்கள் வேண்டுமென்று
எழுதிக் கேட்டது நேற்று இரவு 7 மணிக்குத்தான். இன்றும்,
நாளையும் அசோக் லேலண்ட் நிறுவனத்திற்கு விடுமுறை.

திரு. வீ. கிருஷ்ணமூர்த்தி : சட்டசபைச் செயலாளரிடத்தில்
நான் நேற்று மதியமே கொடுத்து விட்டேன் ; அவர்களும் உட
னடியாக துறைக்கு அனுப்பிவிட்டார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தொழிற் துறை
செயலாளருக்கு வந்தது இரவு 7 மணிக்குத்தான். அதற்குப்
பிறகு அதுபற்றிய தகவலைச் சேகரித்துப் பெறமுடியவில்லை.
ஏற்கெனவே தொழிற் துறையிலிருந்து எழுதிக் கேட்டிருக்கிறார்
கள். மகாராஷ்டிராவுக்கு, குஜராத்துக்குப் போகப் போகி
றோம் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, எவ்வளவு
கோடி ரூபாயில் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்ற விவரங்கள்
எல்லாம் எழுதித்தரவில்லை.

திரு. க. அன்பழகன் : இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினை
ஏற்கெனவே இந்த அவையில் பேசப்பட்டு தொடர்ந்து இந்த
மானியத்தில் வாதிப்பதற்காகத் தேவைப்படுகிற விளக்கமான
உண்மைகள் ஏற்கனவே இந்த அரசுக்குத் தெரிந்திருக்கும். அந்த
உண்மைகளின் அடிப்படையில் புள்ளிவிவரங்களை உறுப்பினர்
களுக்குக் கொடுத்தால் உறுப்பினர்கள் அதுபற்றி கருத்துக்களை



1980 ஜூலை 19]

எடுத்துக் கூறமுடியும். மானியம் வாதிக்கப்படும்போது அந்தப்
புள்ளிவிவரங்கள் தேவை. பகல் 11 மணிக்குள்ளாகக் கூட
விரும்பினால் பெற்றுத் தரலாம். அரசு விரும்பினால் தரலாம்.
அரசு விரும்பாவிட்டால் சட்டசபை உரிமை அடிப்படையில்
நீங்கள் ஒத்துழைக்கவில்லை என்றுதான் பொருளே தவிரவேறல்ல.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அமைச்சர் அவர்கள் பதில்
சொல்லும்போது அது அடுத்த மாநிலத்திற்குப் போகிறது என்று
தான் அவர்கள் சொன்னார்கள் என்று கூறினார்கள். அவர்கள்
வேறு மாநிலத்திற்கு அந்தத் தொழிலைக் கொண்டு போகிறார்
களா இல்லையா என்ற பிரச்சினை எழவில்லை. அவர்கள் சில
கன்செஷன்களை அரசிடத்தில் கேட்கும்போது, இவ்வளவு கோடி
ரூபாய் இன்வெஸ்ட் பண்ண இருக்கிறோம். இன்ன கன்செஷன்
தேவை — That will create employment to thousands of people.
சாதாரணமாக இரண்டு கோடி ரூபாய், மூன்றுகோடி ரூபாய்
இன்வெஸ்ட் பண்ணப் போகிறோம், இன்னின்ன கன்செஷன்
தருகிறீர்களா என்று கேட்பதுதான் வழக்கம். எவ்வளவு இன்
வெஸ்ட் பண்ணப் போகிறோம், எவ்வளவு பேருக்கு வேலை
வாய்ப்பு கிடைக்கும் என்பதையெல்லாம் சொல்லித்தான் சலு
கைகள் கேட்பார்கள். இது கூடத் தெரியவில்லை என்று சொன்
னால் நாங்கள் அதைப் பற்றி ஒன்றும் சொல்லுவதற்கில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பிட்ட நேரத்தில்
விவரங்கள் கோரி எழுதிய கடிதம் வந்து சேரவில்லை என்றுதான்
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்
பினர் யூகத்தின் அடிப்படையில் பேசுகிறார்கள். அதற்காக
நான் வருந்துகிறேன். எவ்வளவு கோடி ரூபாயில் எக்ஸ்பான்
ஷன் பண்ணப் போகிறோம் என்ற விவரங்களை அவர்கள் தர
வில்லை. நம்முடைய அரசுச் செயலாளர், தொழிற்துறைச் செய
லாளர் அதுபற்றி கேட்டு நிறுவனத்திற்கு எழுதியிருக்கிறார். அப்
படிப்பட்ட பதில் ஏதும் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் நேரிலேயே அதனைப் பார்க்க வேண்டுமென்றால்
பார்க்கலாம்.

Thiru K. S. G. HAJA SHEREEF : Mr. Speaker Sir, When
the Ashok Leyland appproached the local Government they
would have given the Project Report. The Project Report must have
contained the full information as to what is going to be the invest-
ment, what is likely to be the employment potential—permanent—
and various other things. They would have given full information.
Only after perusing those things the Government would have decided
about its feasibility, and would have come to a conclusion. The
House would like to know only those facts.

[1980 ஜூலை 19

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், ரகசியமற்ற எந்த விளக்கத்தையும் அரசாங்கத்தினுடைய எந்தத் துறையிலே இருந்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டால் கொடுக்கவேண்டும் என்று விரும்புகிறார். அதைக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட குறைபாடுகள் இனிமேல் வராமல் பார்த்துக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் இங்கே பேசுவதற்கு முன்னால் கொடுக்கவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் அவர்கள் அதைத்தான் சொன்னார்கள். அது 11 மணிக்குள்ளாகக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள்..........

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, நம்முடைய நாவலர் அவர்கள் மேலவையிலே பட்ஜெட் பொது விவாதத்திற் குப் பதில் அளித்துப் பேசுகிறபோது இதனால் ஏராளமானவர் களுக்கு வேலை கிடைக்குமா என்று பார்த்தால் மிகக் குறைவானவர்களுக்குத்தான் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார். மிகக் குறைவானவர்களுக்குத்தான் வேலை கிடைக்கும் என்றால் எத்தனை பேர் களுக்குக் கிடைக்கும் என்று தெரியாமலா சொல்லி யிருப்பார். காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஹாஜா ஷெரீப் அவர்கள் சொன்னதுபோல் புராஜக்ட் ரிப்போர்டிலே எத்தனை கோடி என்று போட்டிருப்பார்கள், எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைக்கலாம் என்று சொல்லியிருப்பார்கள், புராஜக்ட் ரிப் போர்ட்டைப் பார்க்காமல் அதை எங்கோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்றால் நான் வேறு ஒன்றும் சொல் வதற்குத் தயாராக இல்லை.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக முதலமைச்சர் கூறுகிறபோது ஒரு கண்டிஷன் பற்றிச் சொன்னார். அவர்களுக்கு 12 ஆண்டுக் காலத்திற்கு சேல்ஸ் டாக்ஸ் பூராவும் இன்டரஸ்ட் பிரி லோனாகக் கொடுக்க வேண் டும் என்று கேட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அப் படியானால் அதையெல்லாம் இந்த கவர்ன்மென்ட் பார்த்து இருப்பதாகத்தான் அர்த்தம் எவ்வளவு நேரம் ஆகும், டிபார்ட் மெண்டுக்கு உடனே டெலிபோன் செய்து கொடுத்திருக்கவேண் டும். வீ. ஆர் என்டைட்டில்டு டு தீஸ் பேக்ட்ஸ். ஆகவே 12 மணிக்குள்ளாகக் கேட்டுப் பெறவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1980 ஜூலை 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேல் மாண்புமிகு உறுப்பினர்கள் அப்படிப்பட்ட விளக்கங்கள் கேட்கிறபோது இரகசியமற்றவைகளை அந்தந்தத் துறைகள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(6) வரவு–செலவுத் திட்டம், 1980–81 வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 24—தொழில்கள்.

(ஆ) கோரிக்கை எண் 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

(இ) கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு.

(ஈ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்.

## கோரிக்கை எண். 24.—தொழில்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

" மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,76,05,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும் ".

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, " நூற்பு ஆலைகளை தேசியமயமாக்கும் கொள்கையை அலைக் கழிப்பது குறித்து விவாதிக்க " நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,76,05,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : தலைவர் அவர்களே, "திண்டிவனம் தொகுதியில் கூட்டேரிப்பட்டு கிராமத்தில் (மயிலம் பஞ்சாயத்து யூனியன்) தொழிற்பேட்டை துவக்குவது பற்றி விவாதிக்க" நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற
தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,76,05,000 இல்
ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, ''குமரி மாவட்
டத்தில் பேச்சிப்பாறையிலுள்ள அன்னாசி பழத் தோட்டத்தி
லிருந்து கிடைக்கக்கூடிய பழத்தை வைத்து ஒரு பழரசத் தொழிற்
சாலை அமைக்க வேண்டும் என்பதைப்பற்றி விவாதிக்க'' நான்
கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின்
கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ 11,76,05,000-இல் ரூ, 100
குறைக்கவேண்டும்'

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே,
திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் வைக்கோல் அதிகமாக இருப்ப
தால் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைப்பதுபற்றி விவாதிக்க''
நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின்
கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,76,05,000-இல் ரூ. 100
குறைக்க வேண்டும்''.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்
களே, '' To Discuss Policy '' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மா
னத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின்
கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,76,05,000-இல் ரூ. 100
குறைக்க வேண்டும்''.

திரு. பொ. விஜயராகவன்: சார், கன்னியாகுமரி
மாவட்டத்தில் மணவாளக்குறிச்சி ''இந்தியன் ரெயர் எர்த்ஸ்''
நிறுவனத்தின் மூலம் கிடைக்கும் மூலப் பொருட்களைப் பயன்
படுத்தி டைட்டானியம் பொருட்கள் உற்பத்தி செய்யும் பெரிய
தொழிற்சாலை ஏற்படுத்த தமிழக அரசு முயற்சிகள் மேற்
கொள்ளாதது குறித்து'' விவாதிக்க,

I move :—

''That the allotment of Rs. 11,76,05,000 under Demand No. 34 Industries be reduced by Rs. 100.''





கோரிக்கை எண் 49:—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலை
வர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரைமேல், கீழ்க்கண்ட தீர்மா
னத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 49—தொழில் வளர்ச்சி குறித்த
மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ.5,77,20,000-க்கு
மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

திரு. ப. சுந்தரம்: தலைவர் அவர்களே, ''வட
ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் புதியதாக தொழிற்சாலை
ஏற்படுத்துவதைப்பற்றி விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்
டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 49—தொழில் வளர்ச்சி குறித்த
மூலதனச் செலவு என்ற தலைப்பில்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற
ரூ. 5,77, 20,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்: தலைவர் அவர்
களே, ''கொள்கை பற்றி விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத்
தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண். 49—தொழில் வளர்ச்சி குறித்த
மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற
ரூ. 5,77,20,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(முற்பகல் 10-30)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவரவர்களே, குமரி
மாவட்டத்திலிருக்கும் முந்திரி ஆலைகளுக்கு போதுமான கச்சா
முந்திரி வழங்காதது—அரசு முந்திரி தோட்டங்களிலிருந்து கிடைக்
கும் முந்திரியை கொடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்
கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 49—தொழில் வளர்ச்சி குறித்த
மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற
ரூ 5,77,20,000 இல் ரூ 100 குறைக்க வேண்டும்''.

Thiru P. VIJAYARAGHAVAN: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 5,77,20,000 under Demand No. 48 Capital outlay on Industrial Development be reduced by Rs. 100.''

## (3) ஒழுங்குப் பிரச்சினை

### )ஈ) ஒரு அமைச்சர் கோர வேண்டிய மானியக் கோரிக்கையை வேறொரு அமைச்சர் கோருவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, கோரிக்கை எண் 6.

* திரு. துரைமுருகன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், எங்களுக்குக் கொடுத்திருக்கின்ற நிகழ்ச்சி நிரலிலே மாண்பு மிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, ஊரகத் தொழில் அமைச்சர் கோருவார் என்று கொடுத்து இருக்கிறீர்கள். ஆனால், இன் னொரு அமைச்சர் மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் இருக்கி றார்கள். அவருக்குத் தொழில்துறை போர்ட் போலியோ கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மானியக் கோரிக்கையில் இவ்வளவு தொகை வேண்டுமென்று கேட்கின்ற உரிமை ஊரகத் தொழில் அமைச்சர் மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டு அவர்தான் கேட்கிறார். ஆனால், தொழில்துறை அமைச்சர் பின்னால் உட்கார்ந்துகொண்டு இருக்கிறார். அவருடைய இலாக்காவிற்கு ஊரகத் தொழில் அமைச்சரே மானியம் கேட்கிறார். ஏன் அந்த அமைச்சர் கேட்கவில்லை ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று அனுப்பிய அறிக்கையிலேயே அது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அஜன்டா விலே போட்டு அனுப்பியிருக்கிறேன். மானியக் கோரிக்கையை இன்னார்தான் முன்மொழியப் போகிறார் என்று அனுப்பி யிருக்கிறேன்.

திரு. துரைமுருகன்: இரண்டாவதாக, கே. ஏ. கிருஷ்ணசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர் என்று புத்தகத்தில் போடப் பட்டிருக்கிறது. மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர் களுடைய இலாக்கா சம்பந்தப்பட்டவரையில் மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்களின் பெயர் இல்லை. இதிலே ஒரே ஒரு பகுதியிலே மட்டும் கே. ஏ. கிருஷ்ணசாமி என்று யோட்டிருக்கி றீர்கள். மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் சம்பந்தப் பட்ட இலாக்காவிற்கு அவர் எழுந்து ''நான் படித்ததாக ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று அவர் சொல்ல வேண்டும். அப்படிப் பட்ட நிலையில் அமைச்சரின் பெயர் ஏன் விடப்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகங்களை டேபிளிலே வைத்திருப்பதாகச் சொல்



கிறீர்கள். உள்ளபடியே சொல்கிறேன், நாங்கள் இதைப்படித்து விட்டுப் பேசப்போவதில்லை. காரணம், இரவு 11 மணிக்குத் தான் இவைகளைக் கொடுத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைகளைப் படிப்பதும் படிக்காததும் உறுப்பினரின் விருப்பம். இவைகளை நேற்று ரொம்பச் சீக்கிரமாகக் கொடுத்தனுப்பியிருக்கிறேன்.

திரு. துரை முருகன்: கன்சர்ன்ட் மினிஸ்டர் இருக்கும் பொழுது அவரை விட்டுவிட்டு இன்னொரு அமைச்சர் மானியக் கோரிக்கைக்கான பணத்தை ஒதுக்கு என்று கேட்பது தவறாகப் போகும். நான் எழுந்து கேட்கிறேன். இவ்வளவு பணம் ஒதுக் குங்கள் என்று, ஒதுக்க முடியுமா? அப்படியாவது, அந்த அமைச் சருக்கு உடல் நலம் இல்லாமல் இருந்தாலும் பரவாயில்லை: இப்பொழுதுதான் பதில் சொல்லியிருக்கிறார்.; சுறுசுறுப்பாக இருக்கக்கூடிய இளைஞர். அவருக்கு வாய்ப்புக் கொடுக்காமல் ஊரகத் தொழில் அமைச்சர் எழுந்து கேட்டுக்கொண்டிருப்பது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர் களே, மானியக் கோரிக்கையைப்பற்றி எனக்கு ஒதுக்கு எனக்கு ஒதுக்கு என்று கேட்க மாட்டார்கள். இந்தத் துறைக்கு ஒதுக்கு இந்தத் துறைக்கு ஒதுக்கு என்று தான் கேட்க வேண்டும். இன்றைக்கு இந்த இரண்டு அமைச்சர்களின் துறைகளையும் எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலை வந்துவிட்ட பிறகு, தனித் தனியாக வேண்டுமானால் பேசிவிட்டு, பதில் அளிக்கும்பொழுது அவரவர்கள் துறைக்கு அவரவர்கள் பதில் சொல்லும் முறையை எடுத்துக் கொள்ளலாம் என்று அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்யப்பெற்றது.

மானியக் கோரிக்கைகளை வைக்குபொழுது, யார் வைப்பது என்ற நிலை வரும்பொழுது, அமைச்சரவையிலே உள்ள எந்த வொரு அமைச்சரும் எந்த மானியக் கோரிக்கையையும் வைக்க லாம். இன்னார்தான் வைக்க வேண்டும் என்ற நிலை இல்லை. கேபினட் ரெஸ்பான்சிபிலிட்டி என்ற வகையில் வைக்கலாம். இரண்டு பேருக்கும் பொதுப் புத்தகம் என்று வைத்தால், மாண்பு மிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் கேட்கக் கூடும், எந்தெந்தப் பக்கம், எந்தெந்தப் பக்கத்தில் எந்தெந்த வரி யார் யாருக்கு உரியது என்று கேட்கின்ற நிலைமைகள் வரும் என்பதற் காகத்தான் இவ்வாறு வைக்கப்பட்டு இருக்கிறது.

இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளில் சம்பந்தப்பட்ட
இரண்டு அமைச்சர்களில் மூத்த அமைச்சராக இருக்கின்ற
மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் இந்த மானியக்
கோரிக்கைகளை வைக்கலாம் என்ற விளக்கங்கள் தரப்பட்டு,
அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு
அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்களைப்பற்றி நீங்கள்
ஒன்றும் கவலைப்பட வேண்டியதில்லை ; நாங்களே கவலைப்
பட்டுக் கொள்கிறோம். அவர்களுக்கு எப்படி மதிப்பு தருவது,
உரிமைகளைத் தர வேண்டுமென்பதைப் பற்றி நாங்கள் கவனித்
துக்கொள்கிறோம். இரண்டு அமைச்சர்களில் ஒரு அமைச்சர்
வைப்பது என்ற நிலை வரும்பொழுது மாண்புமிகு அமைச்சர்
திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் வைக்கட்டும் என்ற
முடிவே தவிர, இதிலே ஒன்றும் தவறு இல்லை என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : மதிப்பிற்குரிய நாவலர் அவர்கள் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : In the Agenda
itself it is stated that "for the words 'The Minister in-
charge of Industries' substitute the words 'The Minister in-charge
of Rural Industries'"

திரு. துரைமுருகன் : அதை நான் ஒத்துக்கொள்கிறேன்.
இல்லை என்று சொல்லவில்லை. மாண்புமிகு நாவலர் அவர்கள்,
புத்தகத்தை ஒன்றாகப் போட்டு இருந்தால் எந்தப் பக்கம்
யாருக்கு என்ற அந்த டிஃபிகல்ட்டீஸ் வரும் என்று சொன்னார்
கள். ஆகையினால் அமைச்சர்கள் பதில் சொல்கிற பொழுது
மூத்த அமைச்சரே பதில் சொல்லட்டுமே ; மூத்த அமைச்சரிடமே
இந்த இலாக்காவைத் தந்திருக்கலாமே. மாண்புமிகு அமைச்சர்
திரு. திருநாவுக்கரசு அவர்களும் பதில் சொல்ல வேண்டுமா ?

அடுத்தது, இதில் தொழில் துறை எது, ஊரகத் தொழில்
எது என்று தெரியவில்லை. லார்ஜ் ஸ்கேல் எது, ஸ்மால்
ஸ்கேல் எது என்று தெரியவில்லை.

ஆனால், இப்பொழுது எது, எது இவருக்கு, எது, எது
அவருக்கு என்று புரிந்து கொள்ள முடியாத நிலைமையிலே
நாங்கள் இருக்கிறோம். என்று வெளிப்படையாகவே சொல்
கிறேன். ஆகையினாலே, இப்பொழுது நான் கேட்டுக்கொள்ள
விரும்புவது, மூத்த அமைச்சர் என்ற பெயரிலே மாண்புமிகு
திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் மானியக் கோரிக்கையிலே





பணம் கேட்டதற்குப் பிறகு, விவாதத்திற்கு பிறகு மாண்புமிகு
திரு. திருநாவுக்கரசு அவர்கள் பதில் சொல்வாரா, சொல்ல
மாட்டாரா ? ஏனென்றால், இவ்வளவு பதில் சொல்கிறவரிட
மிருந்து அந்தக் கோரிக்கையிலே, என்னுடைய இலாகாவிற்கு
இவ்வளவு பணம் ஒதுக்குங்கள் என்று கேட்கிற உரிமை ஏன்
பறிக்கப்பட்டது ? ஏனென்றால், தனிப்பட்ட மாண்புமிகு திரு.
திருநாவுக்கரசுக்கு நான் பரிந்து பேசுகிறேன் என்று அல்ல. ஒரு
அமைச்சருடைய உரிமை பறிக்கப்பட்டிருக்கிறது என்பது
மட்டும் அல்ல, எங்களைக் குழப்பியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அன்றே நாம் எடுத்த முடிவு,
இரண்டையும் ஒன்றாக வைப்பது என்றும், மாண்புமிகு உறுப்
பினர்கள் அது பற்றிய கருத்துக்களை எல்லாம் வழங்கலாம்
அந்தந்த அமைச்சர்கள் அந்தந்தத் துறைகள் பற்றிய விளங்கங்
களை, அவர்களுடைய பதில் உரையிலே சொல்லலாம் என்றும்
அன்றைக்கே அலுவல் ஆய்வுக் குழுவிலே சொல்லப்பட்டிருக்கிறது.
ஆக, தொழில் துறையைப் பற்றி நீங்கள் பேசலாம், சிறு தொழில்
கள் பற்றிப் பேசலாம். மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ.
கிருஷ்ணசாமி அவருடைய துறைக்குரிய பதில்களைத் தருவார் ;
அதே மாதிரி, மாண்புமிகு அமைச்சர் திரு. திருநாவுக்கரசு
அவர்கள் அவர் துறை பற்றிய பதிலைத் தருவார். ஆனால்,
மானியக் கோரிக்கை ஒரே தலைப்பின் கீழே வரும், ஒருவர்
கேட்கிறார் என்பதைத் தவிர, நீங்கள் கருத்துக்களை வழங்கவும்,
அதற்கு விளக்கங்கள் தரும் பொறுப்பை இரண்டு அமைச்சர்
களும் ஏற்றுக் கொள்வர் என்பதும் அன்றே நாம் எடுத்த முடிவு
தான். அந்த முடிவுதான் இப்பொழுது நிறைவேற்றப்படுகிறது.

## (6) வரவு–செலவுத் திட்டம், 1980–81 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண். 6—பத்திரப்பதிவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலை
வர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரை மேல், நான் கீழ்க்கண்ட
தீர்மானத்தை மொழிகிறேன் :—

மானியக் கோரிக்கை எண். 6—பத்திரப்பதிவு என்ற
தலைப்பின்கீழ் ரூ. 3,08,16,000-க்கு மேற்படாத தொகை
அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே தமிழ்நாட்டில் உள்ள அனைத்து துணைப் பதிவு அலுவலகத்திற்கும் தனியாகக் கட்டிடம் கட்டித் தர நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,08,16,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. ந. சிவஞானம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் மேல உழூரில் பத்திரப்பதிவு சப் ரிஜிஸ்டிரார், அலுவலகம் புதிதாக ஏற்படுத்துவது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 6—பத்திரப்பதிவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,08,16,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, அம்பை தொகுதியில் விக்கிரமசிங்கபுரத்தில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் திறப்பதாகக் கூறிய உறுதிமொழியை அமுல் படுத்தாமல் காலம் கடத்துவது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப்பதிவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,08,16,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,08,16,000-இல ரூ. 100 குறைக் வேண்டும்."

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள நிலங்களை விற்கும்போதும் வாங்கும்போதும் வெளி மாநிலங்களில் பதிவு செய்வதனால் தமிழக அரசுக்கு ஏற்படுகின்ற இழப்பு குறித்து அக்கறை எடுத்துக் கொள்ளாதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :



" மானியக் கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,08,16,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரை மேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 73,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ".

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, மக்களுக்குச் சரியான முறையில் பால் வழங்கப்பட வேண்டுமென்ற கொள்கையை அலைக்கழிக்கும் முறை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 73,01,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, பால் வழங்கும் திட்டத்தை முதல் வகுப்பு முனிசிபல் மற்றைய நகரங்களுக்கு விஸ்தரிப்பு செய்ய வேண்டியது சம்பந்தமாகவும், வட ஆற்காடு மாவட்டத்திலே படவேடு, கஸ்தம்பாடி பகுதியில் பால் பண்ணைகள் ஏற்படுத்துதல் சம்பந்தமாகவும் விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 73,01,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, வாகதேவநல்லூரில் குளிர்சாதன நிலையம் ( Chilling Centre ) அமைக்கப்படாதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 73,01,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1980 ஜூலை 19

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, கொள்கை
பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை
மொழிகிறேன் :

மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்
என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 73,01,000-இல்
ரூ.100 குறைக்க வேண்டும்.

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே
சென்னை மாநகரில்பால் வழங்கு நிறுவனத்தினால் வழங்கப்படும்
பாலில் கலப்படம் செய்வதைத் தடை செய்யாமலிருப்பது
குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை
மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 10–பால் வழங்கு திட்டங்கள்
என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 73,01,000-இல்
ரூ. 100 குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை
களும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்
திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர்கள் ஏதாவது
சொல்ல விரும்பினால் சொல்லலாம்.

[முற்பகல் 10-40]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புகள்*
எல்லா உறுப்பினர்களுக்கும் சபையில் வைக்கப்பட்டிருக்கிறது.
அவர்கள் அதன் மீது தங்கள் கருத்துக்களைத் தெரிவித்த பிறகு
கடைசியில் அதற்கான பதிலை அளிக்கிறேன் என்று உங்கள் மூல
மாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள்
தங்கள் மேலான கருத்துக்களை எடுத்து வைத்ததற்குப் பின்னாலே
பெரும் தொழில், நடுத்தர தொழிலுக்கான என்னுடைய பதிலை
இறுதியிலே வைத்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துக் கொள்
கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்
தில் தொழில் துறை குறித்து, தொழில் கொள்கையை விளக்கி
இந்த மன்றத்தில் வைத்திருக்கின்ற மானியக் கோரிக்கையின்

*[1171-1515 ஆம் பக்கங்களில் இணைப்பு I, II, III—ஆக
அச்சிடப் பெற்றுள்ளன.



1980 ஜூலை 19] [திரு. துரைமுருகன்]

மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்கிறேன் என்று
நான் சொல்லமாட்டேன். காரணம் இந்த மானியக் கோரிக்கை
யிலே என்ன இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது.

காரணம் வழக்கமாக கடவுள் வாழ்த்துப் பாட ஆரம்பிப்பது
போல ஒவ்வொரு மானியக் கோரிக்கையும் சரியான நேரத்தில்
வருவதில்லை என்று இருக்கிறது. இப்போதுதான் இன்றைக்கு 12
மணிக்கு வாங்கிக்கொள்ளலாம் என்று தாக்கீது வந்திருக்கிறது.
ஆகவே நாளையிலே இருந்துதான் பேச முடியும். எனவே
இதிலே ஒன்றும் செய்ய முடியாது. மேலும் இதிலே என்ன
இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. ஆனாலும் ஒன்றும்
படிக்க வேண்டிய தேவையில்லை. ஏன் என்று கேட்டால் இந்த
அரசின் தொழில் கொள்கை என்ன என்பது நமக்கெல்லாம் தெளி
வாகத் தெரிந்திருக்கிறது. குழப்பத்திலே ஒரு மிச்சம்தான்
இந்தத் தொழில் கொள்கை வந்திருக்கிறது. காரணம் அது
இருக்கிற அமைச்சர்களில் யாருடைய பெயரிலே இந்த அறிக்கை
வெளி வருவது என்று ஆரம்பித்த குழப்பம், பெருந் தொழில்
ஆரம்பிப்பதா, சிறுதொழில் ஆரமபிப்பதா தனிப்பட்ட முதலாளி
களால் ஆரம்பிப்பதா அல்லது ஜாயின்ட் செக்டாரிலே ஆரம்பிப்
பதா என்பதிலகூட குழப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஒட்டு
மொத்தமாக உங்களுக்குத் தொழிற் கொள்கை தெளிவாக இல்லை
அந்த அளவுக்குத் தெளிவான கொள்கை இல்லாத காரணத்தினால்
தான் நீங்கள் முதலாளிகள் பக்கம் போகிறபோது, அதை ஆதரித்
தால்தான் நாடு முன்னேறும் என்று சொல்லுகிறீர்கள். பிறகு
எங்காவது திடிரென்று ஒரு ஜாயின்ட் செக்டார் கம்பெனிக்கு
போனால் இப்படி அரசாங்கமும், தனியாரும் ஒன்று சேர்ந்து
தொழில் நடத்தினால்தான் நன்றாக இருக்கும். ஆகவே காகித
தொழிற்சாலை என்று ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கிறோம்.
நாங்கள் 26 சதவிதம் போடுகிறோம் நீங்கள் 25 போடுங்கள்,
மிச்சம் இருக்கிற 40 சதவீதம் பொது மக்கள் இடமிருந்து வசூல்
பண்ணுவோம், என்று சொல்லி அங்கே ஒரு உபதேசம் இதற்குப்
பிறகு எங்காவது தனிப்பட்ட முதலாளிகள் வந்தால் முதலாளி
களால்தான் இந்த நாடு வாழமுடியும். அவர்கள்தான் மண்ணைப்
பொன்னாக்குவார்கள். அவர்களிடத்திலே ஒரு கனிவு இருக்கும்,
தொழிலில் அக்கறை இருக்கும் என்று சொல்லுகீறீர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திடீரென்று ஒரு நாள் நேஷனலைசேஷன் என்று சொல்
கிறீர்கள். மறுநாள் இல்லை என்று சொல்லுகிறீர்கள். ஆகவே
குழப்பத்தின் மொத்த உருவமாகத்தான் இந்த அரசு தனது
தொழிற் கொள்கையிலே இருக்கிறது என்பதை நான் தெளிவாகத்
தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கு எந்தத் தொழில் நாட்
டுக்கு வருகிறது, எந்தத் தொழில் நாட்டைவிட்டுப் போகிறது,

என்ற தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசினார்கள். ரகுமான்கான் பேசினார்கள், நாவலர் அவர்கள் கூட அன்றைக்கு அவர்களும் பேசினார்கள். அசோக்லேலாந்து நம்முடைய ஊரிலே பிறந் தது. எங்கேயோ போய் விட்டது., இங்கே இடம் இல்லை என்று, அதற்கு என்ன காரணம். அது மாநிலம் மாநிலமாக ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரா என்று அலைந்து கொண் டிருக்கிறது.

அதேபோல இங்கே ஒரு கோச் பேக்டரிக்கு ஒரு பிரிவு இருக் கிறது. அது கோயம்புத்தூருக்குப் போய் கடைசியில் வேறு ஒரு மாநிலத்திற்குப் போய்ச் சேர்ந்து விட்டது. இப்படி எல்லா மாநிலத்திலும் இருந்து வர வேண்டியது, பிறகு புறப்பட்டுப் போக வேண்டியது. காரணம் என்னவென்றால், அந்தத் தொழில் முதலாளிகள் உங்களை, அமைச்சர்களை பார்க்கவே முடிவதில்லை. குறிப்பாக சென்ற ஆண்டு முதலமைச்சர் கையிலே இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சந்திக்க முடியாமல் போய் அந்தத் தொழில் துறை முதலாளிகள் இங்கே தொழில்கள் ஆரம்பிக்கிற எண்ணத்தோடு பல நாட்கள், பல வாரங்கள் தங்கி, தொழில் துறை செக்கரட்டிரியையோ, முதலமைச்சரையோ சந்திக்காமலேயே வீட்டுக்குத் திரும்பிய காட்சி நிறைய உண்டு என்று சொல்லுகிறார்கள். ஆகவே, உங்களுக்குத் தொழிலில் ஒரு குறிப்பிட்ட கொள்கை கிடையாது, என்பதை நான் அறுதியிட்டுச் சொல்லக் கடமைப் பட்டிருக் கிறேன்.

ஆனால் உங்களைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், ராணிப்பேட்டையிலே ஒரு 'பெல்' தொழிற்சாலை ஆரம்பிக்க இருக்கிறார்கள். மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு வெங்கட் ராமன் அவர்கள் கூட இரண்டு முறை அதைச் சொன்னார்கள். ஒரு முறை நாடாளுமன்றத்தில் சொன்னார். அடுத்த முறை இந்த ராணிப்பேட்டையிலே துவங்கப்படும் என்று இங்கே இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் வந்த நேரத்தில் கடற்கரையிலே எடுத்துச் சொன்னார். ஆனால் இன்றைக்கு அது என்ன நிலைமையில் இருக்கிறது என்ற தகவல் தொகுதி யிலே இருக்கிற எனக்குக் கூடத் தெரியவில்லை. காரணம் ஒரு நாளைக்கு வருகிறார்கள். நில ஆர்ஜிதம் செய்யப்போகிறோம் என்று சொல்லுகிறார்கள். மறு நாள் வருகிறார்கள், அது ஒரிசாவுக்குப் போகிறது என்று சொல்லுகிறார்கள். இது திரி சங்கு சொர்க்கத்திலே இருக்கிறது. எனவே நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இது குறித்து இந்தச் சர்க்கார் என்ன நட வடிக்கை எடுத்திருக்கிறது என்று நான் முன்னாலே இருந்து



கேட்டுக் கொண்டு இருக்கிறேன். இது குறித்து முன்னாலே ஆளுநர் உரையிலேயும் நிதிநிலை அறிக்கையிலேயும் வெளியிடு வார்கள் என்றும் நான் எதிர்பார்த்தேன். ஆனால் அது வெளி யிடப்படவில்லை. இதிலே கூட குறிப்பிட்டு இருக்கிறார்களோ என்னவோ, தெரியவில்லை. அதற்காக நான் கவலைப்பட வில்லை. ஆனால் நான் கேட்பது எல்லாவற்றையும் கோட்டை விட்டவர்கள் போல இந்த 'பெல்' நிறுவனத்தையும் நீங்கள் கோட்டை விடக்கூடாது என்பதற்காக, மீண்டும் அதற்காக நட வடிக்கைகளை எடுக்கவேண்டும். ஏனென்று கேட்டால் தும்பை விட்டு வாலைப்பிடிக்கின்ற குணம் நம் சர்க்காருக்கு இன்று உண்டு. ஆகவே இங்கே இருந்து தொழிற்சாலை போனதற்குப்பிறகு மத்திய சர்க்காருக்கு மனு கொடுக்கும் தைரியம் உங்களுக்குத் தான் உண்டு. ஆகவே போய்விட்டதற்குப் பிறகு பின்னாலே போஸ்டு மார்ட்டம் செய்கிற வேலை வேண்டாம் என்று தெரி வித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, தொழிலை நாட்டிலே பெருக்குவதற்காக உண்டாக்கப்பட்ட ஒரு பிரிவுதான் ''சிப்காட்'' அந்த சிப்காட் தமிழ்நாட்டிலே ராணிப்பேட்டை, ஓசூர், ராமநாதபுரம், புதுக் கோட்டை மாவட்டத்திலே ஆரம்பிக்க இருக்கிறது. ஆனால் என்னுடைய ராணிப்பேட்டை தொகுதியில் உள்ள சிப் காட்டைப் பொருத்தவரையில் நான் சொல்லுகிறேன். அங்கே ஆரம்பித்த தொழில்களை எல்லாம் மூடிவிட்டார்கள். ஏன் என்று கேட்டால் லேபர் தகராறு. அங்கே வெளியில் இருந்து வந்து தொழிலை ஆரம்பித்து இருக்கிறார்கள், திருநெல்வேலியில் இருந்து, ராமநாதபுரத்திலே இருந்து, மதுரையில் இருந்து தஞ்சா வூரில் இருந்து, சென்னையில், இருந்து இங்கே பணத்தைப் போட்டு தொழிலை ஆரம்பித்தார்கள்.

தொழிலை ஆரம்பித்த் பிறகு ஒரு சிறு தொழிலில் 200 பேர், 300 பேர் வேலை செய்வதாக வைத்துக்கொள்வோம். அந்த 200 பேர்களில் 180 பேருக்குமேல் அவர் ஊரிலிருந்து வருகி றான். ராணிப்பேட்டை, ராணிப்பேட்டையைச் சுற்றியுள்ள ஊரில் இருந்து 20 பேர் எடுப்பார்கள். அவர்களை 20 நாளைக்கு காசுவல் லேபராக வைத்துக்கொண்டு இருந்துவிட்டு, வீட்டுக்கு அனுப்பிவிடுகிறான். சொந்த ஊரிக்லிருந்து ஆட்கள் கொண்டு வந்து விடுவதால் எங்கள் ஊர்காரனுக்கு அங்கே வேலை இல்லை. ஆகவே, குறிப்பாக, எந்தெந்த இடங்களில் தொழிற்சாலைகள் துவங்கப்படுகிறதோ, அந்தந்த இடங்களில், உள்ளவர்களுக்குத்தான் வேலை வாய்ப்புத் தரவேண்டும் என்ற முறையினை அரசாங்கம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் அதிக
மாக இன்றைக்கு இங்கே வந்து சேர்ந்து இருக்கிறார்கள்.
இந்த நேரத்தில் தெளிவாகச் சொல்கிறேன். நான்
தர்கள் என்ற கொள்கைக்கு நாம் முக்கியத்துவம் மண்ணின் மைந்
வேண்டும். நான் ஒரு முறை மலேசியா நாட்டிற்குச் கொடுத்தாக
வந்தேன். அந்த மலேசியா நாட்டில் ஒரு தொழிற்சாலையில் சென்று
6 பேர்கள் வேலை செய்கிறார்கள் என்று சொன்னால்,
மலேசியாவைச் சேர்ந்தவர்கள் இருக்க வேண்டும் என்று உத்தரவு 4 பேர்
போட்டு இருக்கிறார்கள்.. அதேபோல், இங்கேயும் ஒரு தொழிற்
சாலையில் 200 பேர் வேலை செய்கிறார்கள் என்று சொன்னால்
அதில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 150 பேர் இருக்கவேண்டும்
என்று சொல்வதிலே உங்களுக்கு என்ன நடுக்கம்? ஏன் இந்த
மண்ணின் மைந்தர் கொள்கை வரக்கூடாது.

அப்படியானால், இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் வேறு
மாநிலத்தில் வேலை செய்தால் அங்கே இருந்து விரட்டமாட்டார்
களா என்று நீங்கள் கேட்கலாம். நம் மாநிலத்தைச் சேர்ந்த
வர்கள் வெளி மாநிலத்திற்குப் போய் வேலை செய்வதை விட,
வெளி மாநிலத்துக்காரர்கள் நம் நாட்டில் நுழைந்து ஆக்கிர
மித்துக்கொண்டு இருக்கிற நிலைமை தான் அதிகமாக இருக்கிறது.
ஆகவே, அதற்காக நான் கவலைப்படத் தயாராக இல்லை.
ஆகவே, மண்ணின் மைந்தர்கள் என்ற அடிப்படையில், இந்த
மாநிலத்துக்காரர்களுக்குத்தான் வேலையில் முதலிடம் கொடுக்
கப்படும் என்று ஆணை பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

ராணிப்பேட்டையில் உள்ள சிப்காட் பற்றிச் சொல்ல வேண்டு
மானால், பெரிய பெரிய தொழிலதிபர்கள் தான், கார்ப்ப
ரெண்டம் யூனிவர்சல் போன்ற பெரிய பெரிய தொழிற்சாலைகள்
தான் 25 கோடி, 30 கோடி என்று தொழிலில் மூலதனம் போடு
வதற்கு முன்வருகிறார்கள்— அவர்களெல்லாம் ராணிப்பேட்டை
யில் தொழில் ஆரம்பிக்க முடியாமல் ஓசூர் போய் ஆரம்பிக்கி
றார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், வேலை நிறுத்
தம் நடைபெற்றது என்று சொன்னால், தொழில் தகராறு என்று
வந்தால், உடனடியாக, அந்தத் தொழிலை பக்கத்தில் உள்ள
மைசூருக்கு எடுத்துச் சென்றுவிடலாம்—அல்லது மைசூரில்
இருந்து ஆட்களைக் கொண்டு வந்து விடலாம் என்ற முறையில்
நிலைமை இருக்கிறது. ராணிப்பேட்டையில் வைத்தால்,
தொழில் தகராறு வருமானால், இங்கேயிருக்கிற தொழிற்சாலையை
மூடவேண்டியிருக்கும் என்கிற அச்சம் முதலாளிகளுக்கு வந்து
இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





ஆகவே, நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாதிரியான நிலைமைகளைத் தவிர்க்க—அந்தத் தொழிற்சாலைகள் பட்டிங் ஸ்டேஜில் இருக்கிறபோது—அதாவது ஆரம்பித்த மூன்று ஆண்டு காலத்திற்கு அந்தத் தொழிற்சாலையில் எந்த விதமான வேலை நிறுத்தம் இருக்கக்கூடாது என்ற முறையில் நடவடிக்கைகளை சட்ட பூர்வமாக அல்ல, உங்களுடைய அணுகுமுறை மூலம் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியைப்பொறுத்தவரையில்-குறிப்பாக வடாற்காடு மாவட்டத்தில்—அடுத்த பெரிய தொழிலாக இருப்பது தோல் பதனிடும் தொழிற்சாலை. அந்த வகையான தொழிற்சாலை ராணிப்பேட்டை, ஆம்பூர், பேரணாம்பட்டு, வாணியம்பாடி, விண்ணமங்கலம் ஆகிய எல்லாப் பகுதிகளிலும் ஆக்கிரமித்து இருக்கிறது. அதில் லட்சக்கணக்கான பேர் வேலை வாய்ப்பு பெற்று இருக்கிறார்கள். ராணிப்பேட்டையில் கிட்டத்தட்ட 48 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ளன. அந்தத் தொழிற்சாலைகளில் இருந்து வெளியிடப்படுகிற கழிவு நீர் பக்கத்திலே கிழக்கே ஓடி ஏரிகளில் கலக்கிறது. அதன் காரணமாக, சின்ன சமுத்திரம், குடிமல்லூர், பூண்டி, கத்துவாடி மற்றும் பல்வேறு பக்கத்தில் உள்ள கிராமங்களில் உள்ள நிலங்களில் பாய்ந்து, அங்கே கிட்டத்தட்ட 10—20 கிராமங்களில் உள்ள பயிர்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. எனவே அந்தத் தொழிற்சாலைகளின் கழிவு நீரை செப்டிக் டாங்க் கட்டி, அதன் மூலமாக வேறு இடங்களுக்கு அனுப்ப வேண்டும் என்று இந்த மன்றத்தில் பல முறை நான் கேட்டு இருக்கிறேன். ஆனாலும் எதையும் நீங்கள் காதில் போட்டுக்கொள்வது இல்லை. எனவே, இதையும், நீங்கள் காதில் போட்டுக்கொள்ளவில்லை. இந்த நிலைமையின் காரணமாக, அந்தத் தொழிலதிபர்களுக்கும், அந்தப் பகுதி மக்களுக்கும் இடையே சண்டைகள் ஏற்பட்டு, அவைகள் இனக்கலவரமாக மாறுகிற அளவிற்கு ராணிப்பேட்டையில் தகராறு முற்றுகிற அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, உடனடியாக இந்த அரசு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வது —வடாற்காடு மாவட்டத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அத்தனையும் செப்டிக் டாங்க் கட்டி கழிவு நீரை அகற்றும் காரியத்தை 15 நாளைக்குள் செய்யாவிட்டால், அவர்களுடைய லைசென்சு ரத்து செய்யப்படும் என்று ஒரு ஆணையை தைரியமாக இந்த அரசாங்கம் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் மாற்றுத் தலைவர் தலைமை)

இதுபோன்று, அடுத்து எங்கள் மாவட்டத்தில் இருக்கிற மிகப் பெரிய தொழில் தீப்பெட்டித் தொழில். வடாற்காடு மாவட்டத்தில் கிட்டத்தட்ட 400 யூனிட்டுகள் இருக்கின்றன. அவைகள்

எல்லாம் சாதாரண குடிசைத் தொழில். தலைவர் அவர்களே,
தீப்பெட்டித் தொழிற்சாலை பற்றி உங்களுக்கும் தெரியும். (மணி
யடிக்கப்பட்டது) தலைவர் அவர்களே உங்களுக்கும் சேர்த்து
தான் பேசுகிறேன். சேரன்மாதேவி பகுதியிலும் தீப்பெட்டித்
தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தத் தீப்பெட்டித் தொழிற்
சாலை ஆரம்பிப்பதற்கு லைசென்சு பெற வேண்டுமானால் அதற்கு
கண்டிஷன் என்ன தெரியுமா ? ஊருக்கு வெளியே போக
வேண்டும். கட்டிடத்தைச் சுற்றி 10 அடி இடம் இருக்கவேண்டும்
இப்படியெல்லாம் கண்டிஷன் போடுகிறார்கள். சாதாரண ஒரு
தீப்பெட்டி தொழிற்சாலைக்கு லைசென்சு வாங்குவதற்கு டி.எச்.
ஓ. வரவேண்டும், தாசில்தார் வரவேண்டும். அதற்குப் பிறகு
டி.ஆர்.ஓ. வரவேண்டும். இவ்வளவு பேருக்கும் அவன் படி
கட்டிவிட்டு லைசென்சு வாங்குவதற்குள் ஒரு வருஷம் ஆகிவிடும்.
இந்த வருஷ காலமாக தீப்பெட்டி தொழிற்சாலைக்கு உரிமம்
வழங்குவது நின்று இருக்கிறது. அதற்கான ஆதாரங்கள் என்னால்
காட்ட முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

இந்தியாவின் தேவையில் 90 சதவிகிதம் தீப்பெட்டி தமிழ்
நாட்டில் தயாரிக்கப்படுகிறது. ஆனால் அதற்குத் தேவையான
'ரா மெட்டீரியல்ஸ்' இங்கே கிடையாது. கேரளா, அமர்
நாத், ஆந்திரா போன்ற இடங்களிலிருந்து வாங்கவேண்டி
யிருக்கிறது. தமிழ்நாட்டில் பாண்டியன் கெமிக்கல்ஸ் மட்டும்
தான் ராமெட்டீரியல்ஸ் தயாரிக்கிறார்கள். அதுவும் எங்கள்
ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது. (மணியடிக்கப்பட்டது.)

இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன்.
இன்றைக்கு வடாற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டை,
பேரணாம்பட்டு, ஆம்பூர், வாணியம்பாடி போன்ற இடங்களில்
இந்தத் தொழில் அதிகமாகச் செய்கிறார்கள். அங்கே அர
சாங்கம் இந்த ரா மெட்டீரியல்ஸ் தொழிற்சாலையைத் தொடங்
காவிட்டாலும் தனியாருக்காவது உரிமை வழங்குங்கள்.
ஏற்கெனவே 14 ஸ்பின்னிங் மில்களை தனியாருக்கு கொடுத்
திருக்கிறீர்களே, அதே மாதிரியாக இந்தத் தொழிலை ஆரம்பிப்ப
தற்கும் அரசாங்கம் முன் வராவிட்டால் தனியாருக்கு அனுமதி
கொடுங்கள். அல்லது ஜாயிண்ட் செக்டாரில் இராணிப்பேட்டை
யில் ஒரு 'ரா மெட்டிரியல்ஸ்' தயாரிக்கும் தொழிற்சாலையை
ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, தீப்பெட்டியில் கிழிக்கிற 'ரெட் ஃபாஸ்
பரஸ்' நமக்குத் தேவை. முன்பு ஜப்பானில் இருந்து வாங்கிக்
கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன



வென்றால், குஜராத்திலிருந்து வாங்க வேண்டியிருக்கிறது. தீப்
பெட்டி அதிகமாக உற்பத்தி செய்யும் இடம் நம்முடைய தமிழ்
நாடு. ஆனால் ரெட் பாஸ்பரஸ் தயாரிப்பது குஜராத்தில்,
தமிழ் நாட்டிலே அதற்கு ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)
இன்கம்பிளீட்டாக முடிக்க வேண்டியிருக்கிறது. (அடுத்த உறுப்
பினர் அழைக்கப்பட்டார்.)

* **திரு ந. குலசேகர பாண்டியன் :** மாண்புமிகு பேரவை
துணைத் தலைவரவர்களே, இன்றைய தினம் இந்த அவை முன்
மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களால் தாக்கல்
செய்யப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கை எண். 24—தொழில்
கள்; மானியக் கோரிக்கை எண். 49-தொழில் வளர்ச்சி குறித்த
மூலதனச் செலவு; மானியச் கோரிக்கை எண். 6—பத்திரப்
பதிவு; மானியக் கோரிக்கை எண் 10-பால் வழங்கு திட்டங்கள்
ஆகியவை மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்காக
முதற்கண் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு துரை முருகன் அவர்கள்
தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவு
நீர் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதிலே எனக்கு எந்தவிதமான
கருத்து வேறுபாடும் கிடையாது. அதை நானும்
சொல்ல வேண்டுமென்று நினைத்திருந்தேன், அவர்
சொல்லிவிட்டார். ஆனாலும் இந்தத் தொழில் துறையில்
அடைந்திருக்கிற முன்னேற்றம் பற்றியும், அதை இன்னும் வளப்
படுத்துவதற்கான சூழ்நிலைகள் பற்றியும் சொல்வதற்கு
பாராட்டுவதற்கு அவர்களுக்கு மனம் இல்லையா அல்லது எடுத்
துச்சொல்வதற்கு விரும்பவில்லையா என்று எனக்குப் புரியவில்லை.

என்னுடைய தொகுதி பெருமளவு தோல் பதனிடும் தொழிற்
சாலைகள் நிறைந்த பகுதியாகும். தமிழகத்தின் பொருளா
தாரத்தில் இந்தத் துறை மிகப் பெரிய பங்கு வகிக்கின்றது என்
பதை சில புள்ளி விவரங்களுடன் நான் எடுத்துரைக்க
விரும்புகிறேன்.

தமிழ்நாடு அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் 750 கோடி
அல்லது 800 கோடி ரூபாய்க்கு அந்நியச் செலாவணியாக
வருமானம் கிடைக்கும். இதில் 35 விழுக்காடுகள் ஏறத்தாழ
280 கோடி ரூபாய் தோல்கள், தோல் பொருட்கள், காலணிகள்
போன்றவை ஏற்றுமதி செய்வதன் மூலமாகக் கிடைக்கிறது.

தமிழகத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பெரியதும் சிறியதுமாக சுமார் 500 இயங்கி வருகின்றன. இத்தகைய தொழிற்சாலைகள் பெரும்பாலும் கிராமப்புறப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருப்பதால் வசதியும் வருவாயுமற்ற சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் சுமார் ஒரு இலட்சம் பேர் வேலை வாய்ப்புக்களை பெற்று வாழ்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய தொழிலை ஊக்குவிக்க பல சலுகைகளை இன்றையதினம் மத்திய அரசு செய்து வருகிறது. இந்தத் துறையில் மற்ற மாநிலங்கள் அடைந்திருக்கும் முன்னேற்றத்தைவிட இன்றைக்கு நம்முடைய தமிழகம் முன்னணியில் இருக்கிறது என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையில் 5 ஆண்டுகளில் பிரமிக்கத்தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ள தைவான், சவுத் கொரியா, பிரேசில் போன்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம் தமிழகத்தில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு முறையான ஊக்கமும் பொருளாதார வசதியும் வழங்கப்படுமானால் உலக அரங்கில் இத்தாலிக்கு அடுத்த இடத்தை நாம் பெறமுடியும் என்பதை அவையில் உள்ளவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இத்தொழிற்சாலைகள் ஊக்குவிக்கப்படுவதன் மூலம் சுமார் 800 கோடி ரூபாய் ஆண்டு வருமானமாகப் பெறுவதோடு சுமார் 4 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பினை வழங்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய கண்ணோட்டத்தில் சுமார் 75 அல்லது 100 கோடி ரூபாய் இத்தகைய தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு ஒதுக்கப்படுமானால் பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் மேம்பாடு அடைய அரிய வாய்ப்பு உள்ளது என்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

தோல் பதனிடும் தொழிற்சாலைகளும், மிதி அணி தயாரிக்கும் தொழிற்சாலைகளும் வளர்ச்சி பெற மற்ற நாடுகள் வழங்கக்கூடிய சலுகைகளைப் போல அந்தத் தொழில் வளர்ச்சிக்கு அரசாங்கம் வேண்டிய சலுகைகளைக் கொடுத்தால் அது அந்தத் தொழிலை மேலும் ஊக்குவித்து விடுவதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் கண்டினுவஸ் ப்ராசஸ் என்று சொல்வார்களே அத்தகைய முறையிலே வரக்கூடிய ஒரு தொழிலாக இருப்பதால் இதற்கு மின்சாரம் மிகவும் தேவைப்படுகிறது. ஆனால் ஆண்டு தோறும் மின்சாரத் தட்டுப்பாடு வருவதால் இந்தத் [illegible]





பாதிக்கப்பட்டு அதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்கின்ற வகையிலே வாணியம்பாடி, ஆம்பூர், இராணிப் பேட்டை, பேரணாம்பட்டு போன்ற பகுதிகளிலே உள்ள இந்தத் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் தொடர்ந்து கிடைக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்யவேண்டும். அந்தப் பகுதியிலே தனி மின் இணைப்பு நிலையங்களை ஏற்படுத்தினால் மிகவும் நலமாக இருக்கும். இத்தொழிலுக்கு தொடர்ந்து தட்டுப்பாடின்றி மின்சாரம் வழங்குவது அவசியமானதாகும். ஆகவே அங்கே ஒரு அனல் மின் நிலையத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முன் வந்தால் கூட அது மிகவும் நல்லதொரு முன்னேற்றத்திற்கு அடிப்படையாக விளங்கும். என்னுடைய வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ள வடாற்காடு மாவட்டம், பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றாகும். குறிப்பாக என்னுடைய தொகுதியில் ஒரு தனிமனிதன சராசரி வருமானம் மிகவும் குறைவானது. காரணம் என தொகுதி மக்கள் ஒன்று விவசாயத்தை நம்பி வாழ வேண்டும். இல்லையென்றால் இத்தகைய தொழிற்சாலைகளில் வேலை செய்து பிழைக்க வேண்டிய நிலை இருக்கின்றது. எனவே தோல் பதனிடும் தொழிற்சாலைகள், மிதி அணிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், தோலினால் செய்யப்படும் இதர அணிகலன்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளைப் பெருமளவில் ஊக்குவித்து, ஏழை நடுத்தர மக்கள் மேலும் பல வேலை வாய்ப்பினைப் பெற்று வாழ்ந்திட வழிவகைகளைச் செய்தல் வேண்டுமென அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பதனிடப்பட்ட தோலில் இருந்து பல்வேறு பொருட்களைத் தயாரிக்க என்னுடைய தொகுதியாகிய வாணியம்பாடி பகுதியில் ஒரு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஏற்படுத்த முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு ஏற்படுத்துவதற்கு அரசு தயாராக இருக்குமானால் நான் அதற்கான ஒரு திட்டக் குறிப்பைத் தயாராக வைத்திருக்கிறேன். I am prepared to submit a complete plan to the G vernment on this project ஆகவே தான் என்னுடைய தொகுதியிலே தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக இருப்பதன் காரணமாகவும் அவ்வாறு பதனிட்ட தோல் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டிய சூழ்நிலை இருப்பதால் அங்கே பெரிய அளவில் இத்தொழில்களைச் செய்கின்ற அளவிலே ஒரு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் for Leather products ஏற்படுத்தினால் அங்கே அதனால் குறைந்தது 100 தொழில் கூடங்களை உடனடியாக அமைக்கத்தக்க அளவிலே அங்கே அவ்வளவு டிமாண்ட் இருக்கின்றது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அப்படி ஒரு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டை அங்கே ஏற்படுத்தினால் சுமார் 3 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். சுருக்கமாகச் சொன்னால் தமிழ

[1980 ஜூலை 19 திரு. ந. குலசேகரபாண்டியன்

கத்திலே ஒரு சிறிய இத்தாலியைப் போன்று அதாவது மினி இத்தாலியைப் போன்று என்னுடைய தொகுதி விளங்கும் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். எப்படி மருத்துவக் கல்லூரிகள் பெரிய மருத்துவ மனைகளோடு சேர்ந்து இயங்குகின்றதோ அப்படித் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக இருப்பதால் அங்கே பயிற்சி பெறக்கூடிய அளவுக்கு அங்கே ஒரு Institute for foot-ware and Leather Technology ஏற்படுத்தினால் அதிலிருந்து சிறந்த தொழில் நுட்ப வல்லுநர்கள் வெளிவருவதற்கு வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். அங்கே உள்ள தொழிற்சாலைகளிலிருந்து வரக்கூடிய கழிவு நீர் மாண்புமிகு உறுப்பினர் திரு துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல மிகப்பெரிய பிரச்சினையாக இன்றையதினம் அந்தப் பகுதியிலே இருந்து வருகின்றது. அவைகளை எல்லாம் சுத்தப்படுத்தி அவற்றை நல்ல நீராக வெளிக்கொண்டு வருவதற்குரிய பல திட்டங்கள் பல அங்குள்ள தொழிலதிபர்களால் செயல்படுத்தப்படாமல் இருந்து கொண்டிருக்கின்றன. அதிலே அரசு உடனடியாகக் கவனம் செலுத்தி அந்தக் கழிவு நீரை purify செய்து உடனடியாக திட்டம் தீட்டி அதைச் சுத்தப்படுத்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆம்பூரில் தொழிற்சாலைகள் ஆற்றின் அந்தபக்கம் அதிகமாக இருப்பதால் அங்கே பாலாற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கு பால்வளத்தைப் பெருக்குகின்ற வகையில் ஒன்றியங்களை விரைவாக அமைக்கப் போவதாக அரசின் கொள்கை விளக்கக் குறிப்பிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆகவே அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். விரைவாக அப்படிப்பட்ட ஒன்றியங்கள் அமைக்கப்பட்டு பால் வளம் மேலும் தமிழகத்திலே பெருகி தமிழகம் சிறந்த முறையிலே விளங்குகின்ற வகையில் அந்தப்பால் வளத்துறையிலே முன்னுக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனக்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று விடை பெறுகிறேன். வணக்கம்.

[முற்பகல் 11—00]

*THIRU T. VENKATA REDDI : Mr. Deputy Speaker, Sir, while thanking you for giving me this opportunity to speak on industrial policy, I should like to metion that when I addressed in the beginning during discussion on Governor's Address, the Hon. Minister for Industries has accepted that there was no proper development of industries



1980 ஜூலை 19] (திரு. டி. வெங்கட ரெட்டி)

for the last few years in Tamil Nadu. I have also on that day submitted that proper atmosphere for industrial development in this State has not been there for the last six years. When you see industrial reports for the last seven years, our State has been on the decline so far as industrial development is concerned. I wish to draw the attention of Government to the serious state of affairs which our State has been facing so far as industrial development is concerned. Our State which was once the pride of place in the industrial map of India, now it has relegated to the 14th place. The employment potential and the opportunity for developing our industries mostly depend upon large-scale industries which have to be opened. But when you see the reports of Government we are able to see that most of the big industries are skipping away from our State. First and foremost is Leyland Project for which our Hon. Minister has given an explanation for not getting that industry. But the explanation is not convincing and he has also not given proper reasons why that industry, which has a big potential for industrial development of our State has gone out of our State. Another Coach Factory which has been earmarked for our State has been taken away by Andhra Pradesh Government. I am stressing these points because this Government has not approached the Central Government with proper convincingprojects to get Central Clearance. We know financial assistance from Centre mostly depends upon viable projects which the State Government can offer. But so far as we could see from the reports of Government and also reports placed on the Table, no such viable projects had been placed before the Central Government. Of course the Government is simply saying they have approached the Central Government with proposals for starting of 48 industries. We do not know what kind of industries they are which the Government have sent up, for Central Government's approval. We do not know whether they are viable projects. All these things are not placed before the House properly so that we can convince our people that our Government is interested in development of our State. Except for their saying on the floor of the House that they are for development, industrial development, we do not have other details. The development of our State depends mostly on the projects we offer and not on the speeches we make on the floor of the House. Projects are not forthcoming. Therefore we cannot blame the Central Government for not giving proper assistance to the State. Did you approach the Government, Central Government with proper projects, according to the criteria of National Development Corporation. Whether we approached the Centre with such projects as per criteria of National Development Corporation is the question. The Government has to give an answer to this, in the Assembly. So my submission to this Government, which has got the honest approach to help the down-

(திரு. டி. வெங்கட ரெட்டி) [1980 ஜூலை 19

rodden, to help the unemployed graduates, that they should place before the House, a proper plan for the development of industries. I agree with Mr. Durai Murugan that they have not been formulating a proper policy so far as industrial development is concerned. Such a policy is the first and foremost criteria for any Government to get assistance from Central Government. Such a policy is the first thing which any State Government has got to formulate.

So far as small-scale industries are concerned, I beg to submit that I come from Hosur constituency. SIPCOT is also there. Though some industries have come up initially well, now there is lot of confusion in that area. Lakshmi Mills, which has been occupying a pride of place in that area has been closed and Anand Electronic Industry which has also been a distinct industry has declared a lock-out. They have been closed for the last three months. But Government has not taken any steps to resolve the industrial trouble. This kind of slackness on the part of Government is making the industrialists, big and small, to think twice before tarting industries in our State. I am told that Leyland group of industries which wanted to open another unit in Hosur wtura capital investment of Rs. 56 crores is having second thoughts because of industrial unrest there. Government has not come forward with any specific proposa to resolve industrial disputes there. This is also true in all places in our State. I may bring to the notice of this Hon. Assembly that industrial unrest which has started initially in SIPCOT in Hosur has been spreading throuhgout the State. Proper steps have to be taken so that the small entrepreneurs can come forward to start fresh industries. Though we see so many projects have been thought of, on the small-scale sector, I am afraid, due to industiral unrest, they go back. We know when some years before when united front Communist regime was ruling in West Bengal (now also there is that regime) many big industries have shifted to Karnataka and Andhra Pradhes ; industries with big capital came to Andhra Pradesh and Karnataka because of industrial unrest in West Bengal. Such state of affairs might happen in Tamil Nadu also. I am afraid, the same people who have been vociferously saying they are partners to ruling party, they are creating lotof trouble and industrial unrest. These things must be put an end to in the beginning itself. I may bring to the notice of the Hon. Minister for Industries that primary requisite for industrial development is "power". The Hogenekal power project is a good project and I do not know for what reason it has been shelved. I want an explanation, so far as that project is concerned. No doubt it requires the consent of Karnata Government. Proper approach must be made to that Government and steps must be taken to get the project cleared. Thank you, Sir, for giving me this poportunity to speak.



1980 ஜூலை 19]

[முற்பகல் 11–10]

*திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, தொழில் துறை மானியத்தில் பேச வாய்ப்பு
கிடைத்தமைக்கு நன்றி கூறி, என்னுடைய உரையைத் துவக்கு
கிறேன். பொதுவாக, தொழில்கள் குறித்து 1978–79 ஆம் ஆண்டு
மொத்த மதிப்பீடு 21·09 கோடியாக இருந்தது, 1980-81லே
23.22 கோடியாக உயர்த்தப்பட்டு, கிராம சிறு தொழில்
வளர்ச்சிக்குத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில்
1978–79ல் ஒதுக்கிய மூலதனம் ரூபாய் 9.60 கோடி. 1980–81ல்
13.89 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. முந்தைய நிலையைவிட
ரூபாய் 4.39 கோடியை சிறு தொழில்களுக்கு ஒதுக்கியதிலிருந்து
இந்த அரசு கிராம சிறு தொழில்கள் வளர்ச்சியிலே எவ்வளவு அக்
கறை கொண்டிருக்கிறது. புரட்சித் தலைவர் அரசு அக்கறை எடுத்
துள்ளது என்பது இப்புள்ளி விவரங்களிலிருந்து தெரியவருகிறது.
1980–81 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு கடந்த இரண்டு ஆண்டு
களைவிட 49 சதவிகிதம் கூடுதலாக இந்தத்திட்டத்திலே சேர்க்கப்
பட்டுள்ளது. மேலும், திட்டத்தில் சேர்ந்தவை சேராதவை ஆகிய
வற்றிற்கு 1980–81 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்
தில் வகை செய்யப்பட்டு, மொத்த நிதி ஒதுக்கம் ரூபாய் 31.62
கோடி. திட்டத்தில் சேராத பணிகளுக்கு ரூபாய் 8.40 கோடி
ஒதுக்கியிருக்கிறது. இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து இந்த
புரட்சித் தலைவர் அரசு எவ்வளவு அக்கறை எடுத்துள்ளது என்
பதை மாமன்ற உறுப்பினர்கள் அறிய வேண்டுகிறேன்.

பொதுவாக 2½ ஆண்டு காலமாக தீப்பெட்டித் தொழிற்
சாலையிலே ஏற்பட்டுள்ள நிலைமையைப் பார்க்க வேண்டும்.
தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை கூட்டுறவுச் சங்கங்கள் 1979
ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாள் அன்று 18 இருந்தது.
1980 ஆம் ஆண்டு இறுதியில் 48 சங்கங்கள் ஆரம்பித்து, அதன்
வாயிலாக கிராமப் புறங்களிலே வாழ்கின்ற ஏழை எளிய மக்க
ளுக்குத் தொழில் வாய்ப்பை உருவாக்கி, சுமார் 96,000 பேர்கள்
தொழிலாளர்கள் சங்கம் மூலம் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்
கிறார்கள். அதேபோல் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்
155 ஆரம்பிக்கப்பட்டு, பதிவாகி இருக்கின்றன. அதன் வாயிலாக
8,000 பெண்கள் வேலை பெற்றுள்ளனர். 1981 ஆம் ஆண்டிலே
மேலும் 10 கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்க இந்த அரசு உத்
தரவு பிறப்பிக்க உள்ளது. அதன் வாயிலாக 20,000 பேர்கள்
ஏழை எளிய மக்கள் வேலை வாய்ப்பைப் பெறுவார்கள். இந்த
நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். பொதுவாக, இந்தத்
தீப்பெட்டித் தொழிற்சாலையின் மூலமாக கடந்த 2 ஆண்டு
களில் எத்தனையோ பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்
கிறது. சுமார் 1 இலட்சம் பேர்கள் வேலை வாய்ப்பைப்
பெறுவர்.

(திரு. ரா. கு. பெருமாள்) [1980 ஜூலை 19

அதே அளவில், தேயிலைத்தொழில், தென்னை நார் தொழில்,
தோல் தொழில், காதி மற்றும் கைத்தறி மூலம், டான்சி, சிட்கோ,
பட்டுப்பூச்சி வளர்த்தல் போன்ற சிறு தொழில்கள் மூலம் 1979
ஆம் ஆண்டைவிட இலட்சக்கணக்கானவர்கள் வேலை வாய்ப்பைப்
பெறுவதற்கு, உருவாக்குவதற்கு புரட்சித் தலைவர் அரசு செய்
யும் என்பதை கிராமங்களிலே உள்ள மக்கள் உணர்வார்கள்.
அமரர் காந்தி, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கண்ட
கனவு, கிராமங்களிலே ராம ராஜ்யம் ஏற்படவேண்டுமென்ற
கனவை, நினைவாக்குகின்ற வகையிலே புரட்சித் தலைவர் அவர்
கள் புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வரு
வதைத் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

தீப்பெட்டி தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் மாண்பு
மிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் கூறினார்கள், உரிமங்
கள் பெறுவதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்று, சிக்கல்களை
ளத் தவிர்க்கின்ற முறையிலே முன்பிருந்த ஆர்.டி.எல்.ஏ., செய
லாளர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து 1980
ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 23 ஆம் நாளிலே ஒரு கூட்டத்தைக்
கூட்டினார்கள். அதிலே ஒருவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை
தவிர, இந்தத் தீப்பெட்டி தொழிற்சாலை ஏற்படுத்துவதிலே
இடைவெளி 10 அடி விடவேண்டுமென்ற ஒரு விதி இருக்கிறது.
இதைத் தளர்த்தினால் இன்னும் பலர் தொழில்களை ஆரம்பிக்க
முன்வருவார்கள். அதன்மூலம் வேலைவாய்ப்பு பெருகும். குறிப்
பாக, தஞ்சை, கோயம்புத்தூர், மாயவரம் போன்ற பல பகுதி
களில் நூற்றுக்கணக்கான உரிமங்கள் பெற மனுக்கள் போடப்
பட்டும், ஆரம்பிக்க முடியாத நிலைமை இருக்கிறது. எனவே,
இந்த அடிப்படையில் அரசாங்கம் கொண்டுவந்து, முன்பிருந்த
ஆணை எப்படி இருந்ததோ, அந்த ஆணையைப் பிறப்பிக்க
வேண்டுமென்று அமைச்சர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்
கொள்கிறேன்இந்த ஆணையை அனைத்து மாவட்டங்களிலே உள்ள
ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி, உடனடியாக நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்று அறிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்
கொள்கிறேன்.

அதே நேரத்திலே சிறுதொழில் செய்பவர்கள் 2 சதவீதம்
வரிச் சலுகை கேட்கிறார்கள். இன்றைக்கு வரிப் பளுவால் பாதிக்
கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல், கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்
பிக்க வேண்டுமென்று கேட்டாலும், சிறு தொழிலுக்கு மின்சாரம்
கொடுக்க வேண்டும் என்று கேட்டாலும் உடனடியாகக் கிடைப்
பதில்லை. 20 கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்க முறைப்படி மனுக்
கள் அதிகாரிகள் மூலமாக அனுப்பப்பட்டுள்ளதாகக் கேள்விப்பட்
டேன். அரசு மானியம் கொடுத்து ஷேர் காபிடல் கொடுத்து
இருபது கூட்டுறவுச் சங்கங்களையும் ஆரம்பித்தால் நலமாக இருக்
கும்.



1980 ஜூலை 19] (திரு. ரா. கு. பெருமாள்)

குறிப்பாக, முகவை மாவட்டம், சாத்தூர், சிவகாசி, அருப்
புக்கோட்டை, நெல்லை மாவட்டம், கோவில்பட்டி பகுதிகளில்
வளர்ந்து வரும் இத்தொழிலாளர்கள் உரிமங்கள் பெற்றும் வேலை
செய்ய முடியாமல் தவிக்கின்றனர். எனவே, சாத்தூர் தாலுகா,
மாரனேரி, ரெட்டியார்பட்டி, ஏழாயிரம் பண்ணை, சத்திரப்பட்டி
உப்பத்தூர், கோபாலபுரம், விருதுநகர், நெல்லை மாவட்டம்,
கோவில்பட்டி, நெல்லை, நாகலாபுரம், புதூர், கல்லிடைக்குறிச்சி
மேலும் வட மாவட்டங்களிலும் சேர்த்து அரசு பங்குத் தொகை
யுடன் 20 சங்கம் ஆரம்பித்துக் கொடுத்தால் 40,000 பேர்
வேலை வாய்ப்பு பெறுவதுடன் கிராம வளர்ச்சியும் உண்டாகும்.
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி
ஆவன செய்ய வேண்டும்.

உரிமம் பெறுவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. பத்து அடி
சுற்றி இடைவெளி இருக்க வேண்டுமென்ற உத்தரவை ரத்து
செய்ய வேண்டும். சிறு தொழில் செய்பவர்களுக்கு இரண்டு
சதவிகிதம் வரி விதிக்கப்படுவதை எடுக்குமாறு கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன். உரிமங்கள் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படு
கிறது. தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில்
மையம் உரிமம் வழங்கும் அமைப்புகளை ஏற்படுத்தியிருக்கிறோம்.
தொழில் உரிமங்கள் கொடுக்கவும், கடன் கொடுக்கவும் மானியங்
கள் கொடுக்கவும் அதிகாரிகள் ஆங்காங்கு இருக்கிறார்கள். அவர்
கள் மிகவும் மெதுவாகச் செயல்படுகிறார்கள். இந்த அரசு அந்த
அதிகாரிகளை வேகமாகச் செயல்படுத்தும் வகையில் முடுக்கிவிட்
டால்தான் தொழில்கள் நிச்சயமாக வளரும். அந்த அரசு அதி
காரிகள் எல்லாம் ஒத்துழைப்புக் கொடுத்தால்தான் தொழில்கள்
வளர நலமாக இருக்கும்.

பொதுவாக கல் உடைக்கிறார்கள். வீடு கட்ட கல் உடைத்து
எடுத்துச் செல்லுகிறவர்கள் கூட டன் ஒன்றுக்கு இரண்டரை
ரூபாய் வரி கட்ட வேண்டியிருக்கிறது. சுற்றுப்படுகைகளில் எடுக்
கும் சிப்பிக் கற்களை தவிர, பட்டா நிலங்களில் எடுக்கும்போது
வரி விதிவிலக்கு அளிக்க வேண்டுகிறேன்.

என்னுடைய விளாத்திக்குளம் தொகுதி வானம் பார்த்த பூமி.
என்னுடைய பகுதியில் இன்டஸ்ட்ரி இல்லை, கல்வி நிலையங்கள்
இல்லை...... (மணி அடிக்கப்பட்டது).

என்னுடைய தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை ஒன்று ஏற்
படுத்திக் கொடுக்க வேண்டும். வைப்பாறு பக்கம் 100 ஏக்கர்
நிலம் இனாமாகக் கொடுத்து ஒரு இலட்சம் ரூபாய் பங்குத்
தொகையும் கட்ட முன்வருகிறார்கள். படித்துவிட்டு வேலை
யில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்
கும் வகையில் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு நூற்பாலை ஆரம்

பித்து வேலை வாய்ப்பு பெருக வழிவகை செய்ய வேண்டுகிறேன்.
நெல்லை மாவட்டம் விளாத்திக்குளத்தில் இண்டஸ்ட்ரியல் சென்
டர் ஏற்படுத்தி தொழில் வளத்தைப் பெருக்க உதவி செய்யுமாறு
கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு
நன்றி கூறி அமர்கிறேன்.

[முற்பகல் 11–20]

*திரு. என். சங்கரய்யா : பேரவைத் தற்காலிகத் தலைவர்
அவர்களே, இன்றைய தினம் பேரவையிலே மானியங்களாக விவா
திக்கப்படுகிற பிரச்சினைகள் குறித்து பின்வரும் கருத்துக்களை
நான் தெரிவித்துக் கொள்கிறேன். பிரதானமாக தொழில்
துறையிலே தொழிலும் வளர வேண்டும், நாடும் வளர வேண்டும்,
மக்களும் நன்மைகளைப் பெறவேண்டுமென்றால் ஏற்கெனவே இந்
நாட்டிலே ஏற்கெனவே ஒரு நல்ல கருத்தை உருவாக்கியிருப்பது
பொதுத்துறை. பொருளாதாரத்தினுடைய ஆதிக்க நிலையிலே
பொதுத்துறை வீற்றிருக்கும் அந்தக் கொள்கையை மேலும் உறுதி
யாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று மத்திய அரசை தமிழக
அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டிலே உள்ள ஏகபோக முதலாளிகள் வைத்திருக்கின்ற
தொழில்களையும், நாட்டின் கேந்திரத் தொழில்களையும் நாட்டு
டமையாக்க வேண்டுமென்பது, அதன் மூலமாக மக்கள் நிலை
யிலே மாற்றம் காணவேண்டுமென்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சியின் நிலை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
அவ்வாறு செய்தால் அதன் மூலம் சிறு தொழில் களைவளர்க்க
முடியும், அதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய ஏராளமான வரு
மானத்தைக் கொண்டு மக்களிடத்திலே வரி போடாமலேயே
தொழில் வளர்ச்சியையும், மக்களுக்கு நல்வாழ்வையும் கொடுத்
திட முடியும். அந்த வகையிலே இந்த அரசாங்கம் தன்னுடைய
வரம்புக்குட்பட்டு, சக்திக்குட்பட்டு, தமிழகத்திலே பொதுத்துறை
யிலே, அரசாங்கத் துறையிலே, தொழில் கூட்டுறவுச் சங்கங்களை
ஏற்படுத்தியிருக்கின்ற முறையிலே ஏற்பட்டிருக்கின்ற முன்னேற்
றத்தை நான் வரவேற்கிறேன்.

சமீபத்திலே தமிழ்நாடு கனிவள நிறுவனம் என்றும் தமிழ்
நாடு மேக்னசைட் நிறுவனம் போன்ற நிறுவனங்களை ஏற்படுத்தி
யிருப்பதன் மூலமாக ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ள சிமிண்ட்
நிறுவனம், சர்க்கரை நிறுவனம், பீங்கான் நிறுவனம் ஆகியவற்றில்
உள்ள அரசுப் பொறுப்பைப் போல் அவைகளிலேயேயும் அரசுப்
பொறுப்பை ஏற்படுத்தியிருப்பதற்காக நான் அரசைப் பாராட்டு
கிறேன். ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களிலே,
காட்டப்படுகிற முன்னேற்றத்தை நான் பாராட்டுகிறேன். குறிப்





பாக கனிவள நிறுவனத்தைப் பொறுத்தவரையிலே நல்ல இலா
பத்தை ஈட்டுகிற நிலைமை இருக்கிறது, இதுவரையிலே தனிப்
பட்டவர்களுக்குக் கிடைத்து வந்த இலாபம் அரசாங்கத்திற்
குக் கொண்டுவரப்படுகிற முறையிலே அரசு செயல்பட்டிருக்கிறது.
இப்படிப்பட்ட சீரிய முயற்சிகளை அரசினுடைய தொழில்
இலாகா செய்யுமானால் தொழில்களை இலாபகரமாக நடத்தி
அதன்மூலம் அரசாங்கத்தின் வருமானத்தைத் திரட்டலாம்,
தொழிலாளர்களுக்கும் வாழ்க்கையிலே நல்ல நிலைகள் ஏற்
படும், அரசாங்கத்துறை, பொதுத்துறை, கூட்டுறவுத் தொழிற்
சங்கங்கள் ஆகியவற்றை வளர்ப்பதிலே அரசாங்கம் இந்த முறை
யிலே பிரதான கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

இங்கே நம்முடைய நண்பர்கள் சிலர் குறிப்பிட்டார்கள்.
அசோக் லேலண்ட் நிறுவனத்தை தமிழ்நாட்டிலே விஸ்தரிக்காமல்
போனதற்குக் காரணம் இந்த அரசுதான் என்று சொன்னார்கள்.
பெருமுதலாளிகளை செல்லப்பிள்ளைகள்போல் வைத்துக்கொண்டு
மக்களிடமிருந்து கஷ்டப்பட்டு பெறுகிற வருமானத்தை அவர்
களுக்குக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. தொழில் வளர்ச்சி
ஒன்று, முதலாளித்துவ வளர்ச்சி ஒன்று. முதலாளிகளை வளர்க்
காமல் தொழில்களை வளர்க்க முடியும். உதாரணத்திற்குச்
சொன்னால் பொதுத் துறையிலே ஏராளமான தொழில்களை
எடுத்துச் சொல்ல முடியும். முதலாளிகள் கேட்கிற நியாயமற்ற
முறையற்ற சலுகைகளைக் கொடுப்பது சரியல்ல என்பதைத்
தெரிவித்துக்கொள்கின்றேன். இன்னொன்று, தொழில் தகராறு
கள் இருப்பதால் முதலாளிகள் மனம் உடைந்து இங்கேயிருந்து
ஓடிவிடுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இங்கே பேசும்போது
காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் சொன்னார், இலட்சுமி குரூப்ஸ்
56 கோடி ரூபாய் முதலீடு செய்யத் தயாராக இருப்பதாகச்
சொன்னார்கள். அந்த அளவிற்கு முதலாளிகள் இருக்கிறார்கள்
என்றால் அவ்வளவு கோடி ரூபாய் அவர்களுக்கு எங்கே இருந்து
வந்தது? தொழிலாளர்களுடைய உழைப்பு, மக்களிடையேவிற்பனை
செய்து பெற்ற பணம் இப்படித்தான் அந்தப்பணம் வந்தது.
பொதுத்துறையிலே பெருந்தொழில்களை எடுத்து நடத்தினால்
அவைகள் நடக்கமாட்டேன் என்று சொல்கின்றனவா ? ஆகவே
இப்படிப்பட்ட முறையிலே நம்முடைய அரசாங்கத்தைத் திசை
திருப்பக்கூடிய முறையினால் அரசாங்கம் பாதிக்கப்படாமல் உறுதி
யாக கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள் வளருவதற்கு நியாய
மான பாதுகாப்புகள் கொடுக்கவேண்டுமென்பதை மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொள்கிறது. தமிழகத்திலே பலவித

[திரு. என். சங்கரய்யா] [1980 ஜூலை 91

மான நிறுவனங்கள் இருக்கின்றன. டான்ஸி, சிட்கோ, சிப்காட்,
டிட்கோ, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இவைகள்
எல்லாம் ஓரளவுக்கு ஒருங்கு இணைக்கப்பட்டு ஒன்றுபடுத்தப்
பட்டு ஒருமுகப்படுத்தப்பட்டால் மேலும் நல்ல பலன்கள் கிடைக்
கும். நுண்ணறிவு உள்ளவர்கள்தான் பல்வேறு கழகங்களின்
வரம்புகளையும், அவற்றின் பொறுப்புக்களையும் புரிந்துகொண்டு
அவைகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும், சாதாரண மக்கள்
அவற்றைப் பயன்படுத்த முடியவில்லை. ஓவர் லேப்பிங் இருக்
கிறது, இங்கே இருக்கிறது, அங்கே இருக்கிறது, ஆகவே இவை
யெல்லாம் முறைப்படுத்த வேண்டியது அவசியம் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். இதை அரசாங்கம் பரிசீலனை செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட தொழில் அளற அறிக்கை
யிலே நாயுடு அம்மா குழுவின் அறிக்கையின் பேரில் தொழில்
கொள்கை பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. விவசாயத்துறை,
கால்நடை, வனத்துறை விளைபொருள்; கழிவுப்பொருள்களைப்
பயன்படுத்தி 300-க்கும் அதிகத் திட்டங்களைக் கொடுத்தது.
பெரும்பாலான திட்டங்கள் அரசுத்துறையிலும், அரசு நிறுவனங்
களாலும் நேரடியாக எடுத்துக் கொள்ளப்படும் என்று அதிலே
குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் குழு கிராமத் தொழில்
வளர்ச்சி கண்காணிப்புக் குழு என்ற பெயரில் தொடர்ந்து உதவி
செய்யும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை நான் வற்
புறுத்துகிறேன்: இவ்வாறு டாக்டர் நாயுடம்மா குழுவினால்
உண்டாக்கப்பட்ட, சொல்லப்பட்ட 300 திட்டங்களை, அவர்
களே ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல இன்று நாம் ஒன்று
படுத்த வேண்டும். விவசாயத்துறை, கால்நடை, வளத்துறை
களிலே பல்வேறு விதமான மூலப்பொருள்கள் கிடைக்கின்றன.
இவைகளை ஒன்றுபடுத்துவதை அந்த அறிக்கையிலே குறிப்பிட்
டதைப்போல அரசுத் துறையிலும், அரசு நிறுவனங்களிலும்
நேரடியாக எடுத்து நடத்துவதுதான் அவர்கள் விரும்பக்கூடிய
கிராமப் புறத் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்று
நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, மாவட்டத் தொழில் மையங்கள் ஏற்படுத்தப்
பட்டிருக்கின்றன. இவைகள் ஊழல் இன்றி நடைபெற ஏற்பாடு
செய்யப்பட வேண்டும். சிறுதொழில்கள் நடத்தக்கூடியவர்களு
டைய பார்வையும், அவர்களுடைய பிரதிநிதிகளையும்கொண்டு,
அதனுடைய உரிமங்கள் வழங்குதல், வசதிகள் செய்தல் போன்ற
வற்றை ஏற்பாடு செய்ய வேண்டும். நிலக்கரி சப்ளை செய்தல்,
அதைப்போல, சுட்ட நிலக்கரி சப்ளை செய்தல், மூலப்பொருள்
கள் கொடுத்தல் போன்றவற்றில் இன்றைக்கு தனிப்பட்ட நபர்கள்



1980 ஜூலை 19] [திரு. என். சங்கரய்யா]

சிலருக்குத் தருவதாகப் பாகுபாடு, மற்றவர்களுக்குக் கிடைக்க
வில்லை என்ற புகார் வருகிறது. ஆகவே, இவைகளை நல்ல
முறையில் செய்ய வேண்டுமென்று சொன்னால், ஏற்கெனவே
சென்ற ஆண்டு தொழில் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டது-
நான்கு பேர்களைக் கொண்ட ஒரு குழு, தொழில் மையத்தின்
மேலாளர், தொழிற்சாலை ஆய்வாளர், சுகாதார அதிகாரி,
ஆர். டி. ஓ., போன்ற நான்கு அதிகாரிகளைக்கொண்டு, இந்த
உரிமங்களைப் பரிசீலனை செய்து முடிவெடுப்பதற்கு மாதம் ஒரு
முறை ஏற்பாடு செய்யப்பட்டது என்று சொல்லப்பட்டது. நான்
கூறுகிறேன். அந்தந்த மாவட்டங்களிலே உள்ள சிறுதொழில்
களிலே ஈடுபடக்கூடியவர்களை, அதேபோல் சட்டமன்ற
உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களை அந்தக் குழுவிலே
வைக்க வேண்டும். அப்பொழுதுதான் ஊழல் இல்லாமல், பார
பட்சம் இல்லாமல்,—அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வராமல்—
அவைகள் நடப்பதற்குப் பயன்படும். அரசாங்கம் இந்த மாவட்
டத் தொழில் மையங்களிலே அதிக நம்பிக்கை வைத்திருக்கிறது.
ஆகவே, அந்த நம்பிக்கை இன்றைக்குப் பொய்க்காமல் இருக்க
வேண்டுமென்றால் உண்மையாகவே இந்தத் தொழில் மையங்
களில் இப்படிப்பட்ட, சம்பந்தப்பட்ட சிறு தொழில்களுடைய
பிரதிநிதிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும் அந்தந்த வட்டா
ரங்களில் இருந்தால் அது சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன் ; கண்காணிக்க உதவி செய்யும் ; ஒரு
பரந்த அடிப்படையில் ஜனநாயக முறையில் விவாதம் நடந்து
தொழில் துறை மையங்களில் உண்மையான சேவை பயன்
உள்ளதாக இருக்கும்.

அதைப்போலவே இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.
ஒருபக்கத்திலே கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை உருவாக்க
வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால், மற்றொரு பக்கத்திலே
வேறொரு முனையிலிருந்து விவசாயத்தை இயந்திர மயமாக்குதல்
என்ற தவறான கொள்கையை இந்த நேரத்திலே பின்பற்றினால்
கோடிக்கணக்கான மக்களுக்கு வேலையில்லாத நிலைமை
தமிழகத்திலே ஏற்படும். அறுவடை செய்வதற்காக இயந்திரத்தை
தஞ்சை மாவட்டத்திலே புகுத்தினால் எத்தனை ஆயிரக்கணக்
கான விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போகும்?
நாமே இன்றைக்கு இரண்டுவிதமான மனத்தில் இருக்கிறோம்
என்று அர்த்தம். ஒரு பக்கத்திலே கிராமப்புறத் தொழில்களை
அதிகப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறோம். ஆனால், இருக்
கின்ற விவசாயத் தொழில்களை இயந்திர மயமாக்குவது என்பது
இன்றைக்கு அவசியம்தானா ? வளர்ச்சியடைந்த நாடுகளிலே,
எல்லா விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிலத்தைக் கொடுத்து
விட்டு, நிலச்சீர்த்ருதித்தைப் பூர்த்தி செய்துவிட்டு இயந்திர

[திரு. என். சங்கரய்யா] [1980 ஜூலை 19

மயமாக்குவது என்றால் அந்த விவசாயினுடைய வேலைப் பளு
குறையும். ஆனால், இன்று மனித உழைப்புக்கே அது வேலை
யில்லாமல் செய்யும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்
பிட விரும்புகிறேன்.

இன்றைக்குத் தமிழகத்திலே—1979 ஆம் ஆண்டுக் கணக்குப்
படி—5,73,000 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்
குப் பாதுகாப்பு, அவர்களது உரிமை, நிர்வாகத்திலே அவர்களின்
பங்கு என்பது முக்கியம். அது இல்லாமல் தொழில் வளர்ச்சி
ஏற்பட முடியாது. இவர்கள்தான் மனித சக்தி ; இவர்கள்தான்
உற்பத்தி சக்தி ; ஆகவே, இவர்களுடைய ஆலோசனைகளை
தொழில் துறையிலே ஏற்றுக்கொள்ளுவதற்கு, உற்பத்தியிலேயும்,
திட்டம் இடுவதிலேயும் அவர்களுடைய பங்கு இருப்பதற்கு
வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசாங்கம் முன் முயற்சி
எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அர
சாங்கம் நடத்தும் தொழில்களிலாவது இதற்கான முன் முயற்சி
களை எடுத்துக்கொண்டு முன் உதாரணமாகத் திகழ வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, இந்த பேக்டரிகள் ஒழுங்காக நடைபெறு
கின்றனவா என்பதைக் கவனிக்க ''பேக்டரி இன்ஸ்பெக்ஷனை''
கடுமையாகச் செய்ய வேண்டும். அன்றைக்கே இங்கே தொழி
லாளர் அமைச்சர் குறிப்பிட்டார். காண்ட்ராக்ட் லேபரை நீக்
கப்போகிறோம் என்று கேள்விப்பட்டவுடனே நான் கேள்விப்
படுகின்றேன். தமிழ்நாட்டிலே இரண்டு மூன்று பெரிய தொழிற்
சாலைகளில் காண்ட்ராக்ட் லேபரை நிறுத்தி விடுகிறார்கள்.
கேஷூவல் லேபர்களை தொடர்ச்சியாக வேலை கொடுத்து வந்
தவர்களை—இன்றைக்கு அரசாங்கம் இப்படிச் செய்யப்
போகிறது என்று கருதி ஒரு வாரத்திற்கு வேலை கொடுத்து,
பத்து நாட்களுக்கு வேலை இல்லை என்று சொல்கிறார்கள்.
ஏனென்றால் அவர்களுக்கு இந்த இரண்டு வருஷ சர்வீஸ் என்று
ஏற்படக் கூடாது என்பதற்காக, எப்படி விளைவுகள் ஏற்படு
கின்றன என்று பாருங்கள். ஆகவேதான் கூறுகிறேன். காண்ட
ராக்ட் லேபர் கேஷுவல் லேபர் போன்றவற்றை முதலாளிகள்
தப்புவிப்பதற்காக எடுக்கக் கூடிய நடவடிக்கைகளை உறுதியாகத்
தடுத்து நிறுத்தி, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசாங்கம்
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே, 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில்
559 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதை நான் வர
வேற்கிறேன். குறிப்பாக தேயிலை, தீக்குச்சி இவைகளிலே
நல்ல வெற்றி பெற்றது என்பதை அறிந்து மகிழ்ச்சியடை
கிறேன். அது மட்டுமல்ல, உண்மையான உணர்வோடு,



1980 ஜூலை 19] (திரு. என். சங்கரய்யா)

இந்தத் தொழில் கூட்டுறவுகள் என்பதுதான், அந்த உற்பத்தி
யாளர்களுக்கு வாழ்வளிக்கும் என்ற உணர்வோடு அதிலே
ஆழ்ந்த அக்கறைகொண்ட,—டெடிகேஷன்—ஈடுபாடு கொண்டி
ருக்கக்கூடிய அதிகாரிகளைக் கொண்டு, எங்கெங்கெல்லாம்
இப்படிப்பட்ட தொழில்கள் வேண்டுமென்று மக்கள் கேட்
கிறார்களோ அங்கங்கெல்லாம் அந்தந்தத் தொழில்களை
கூட்டுறவில் ஏற்படுத்த இந்த அரசாங்கம் நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பதைப்போல
தமிழ்நாட்டில் மத்திய அரசுத் துறை முதலீட்டை அதிகரிக்க,
வேண்டும் என்பதை மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாக
ஆதரிக்கிறது. ஹோசூரிலே இந்துஸ்தான் விமானத் தொழில்
ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப் பட்டிருக்கிறது
அது மிகவும் பொருத்தமானது. அதைப்போலவே, பாரத்
ஹெவி எலக்ட்ரானிக் பிரிவு சென்னையில் ஒன்றை ஏற்படுத்த
வேண்டும். திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களிலே
மின் துறை, மின்வெளித்துறை இன்றைக்கு நிலையங்களை
ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகளை நான் ஆதரிக்கி
றேன். இதற்கு மத்திய அரசாங்கத்திடம் நாம் கடுமையாக்
வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11–30]

அதேபோல்தான் தோல் தொழிலிலே கூட்டுறவுச் சங்கங்
கள். தோல் பதனிடும் தொழிலாளிகளுக்கு, தோல் பதனிடு
பவர்களுக்கு ஏற்படுத்துவது நல்ல முயற்சி. அவர்கள் சொல்லி
யிருக்கிற, எத்தனை பேர்கள் இதில் இருக்கிறார்கள்,
எந்நிலையில் இருக்கிறார்கள் என்ற கணக்கு எடுப்பதற்காகச்
செய்யப்படுகின்ற முயற்சி நல்ல முயற்சி. தமிழ்நாட்டிலே
உள்ள அந்த சென்டரை கான்பூருக்கு மாற்றுவதாகச்
சொல்லக்கூடிய செய்தி மிகவும் கவலை அளிக்கிறது. தமிழ்
நாட்டிலே இன்றைக்கு தோல் பதனிடும் தொழில் மிக முக்கிய
இடம் வகிக்கிறது. ஆகவே, அதனுடைய முக்கிய இடம்
சென்னையிலே இருக்க வேண்டுமென்பதையும் தமிழ் நாடு
அரசாங்கம் வற்புறுத்தவேண்டும்.

அதைப் போல் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்
(Tamilnadu Industrial Development Corporation) ஆட்டோ
ரிக்ஷாக்கள் வாங்குவதற்கு பணம் அளிக்கிறார்கள்
என்று அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. சைக்கிள்
ரிக்ஷா வாங்குவதற்கும் தொழிலாளிகள் உதவி கேட்கிறார்கள்.
பல இடங்களிலே கேட்கிறார்கள். அதற்கு அவர்களுக்கு நிதி

இல்லை. அவர்கள் தாங்களே ஓட்டுகிறார்கள். எவ்வாறு
ஆட்டோ ரிக்ஷாவைச் சொந்தமாக ஓட்ட இந்தத் தொழில்
முதலீட்டுக் கழகம் நிதி உதவி அளிக்கிறதோ, அதே போல்,
சைக்கிள் ரிக்ஷாக்களைத் தங்களுடைய சொந்தப் பொறுப்பிலே
வாங்குபவர்களுக்கும் நிதி உதவி வழங்கவேண்டும்.
அதுதான் மக்களின் பக்கம் ஒரு பார்வையாக இருக்கும் என்று
குறிப்பிட விரும்புகிறேன்.

அதை போல், குடிசைத் தொழில்களைத் துவங்குவதற்கும்
இந்த நிறுவனம் உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

மற்றொரு பிரச்னை, டிட்கோ, தமிழ்நாட்டிலே
முக்கியமான பங்காற்றுகிறது. தமிழ் நாடு தொழில் வளர்ச்சி
நிறுவனம் என்ற அந்த நிறுவனம் பல ஒரு
துறைத் தொழில்களை நடத்திக் கொண்டிருக்கிறது. அரசுத்
இந்தக் கூட்டுத் துறை என்பதைப் பற்றி ஒரு வார்த்தை இன்று
சொல்ல விரும்புகிறேன். 1970-ஆம் ஆண்டிலே நான்
சர்க்கார் புகுத்திய ஒரு ஏற்பாடு அது. ஆனால், கூட்டுத் துறை மத்திய
என்றால் எப்படி இருக்கிறது? அரசாங்கம் அரிசி கொண்டு
வரவேண்டும், தனிப்பட்ட முதலாளி உமி கொண்டு வருவார்
இரண்டுபேரும் சேர்ந்து ஊதி, ஊதிச் சாப்பிடுவார்களாம்.
அதாவது அரசாங்கம் அரிசியைக் கொடுக்க வேண்டும்.
அவர்கள் உமியைத்தான் கொடுப்பார்கள். அதற்கு ஏன்
கூட்டுத் துறை? ஆகவே, அதைப் பற்றி நாம்
பேசி இருக்கிறோம். முதலாளிகள் ரூ. 2 கோடி ஸ்பிக்கிலே
செய்யப்பட்ட தொழில், முதலாளிகளிடத்திலே 10 முதலீடு
காலத்திற்கு மானேஜிங் டைரக்டர் பொறுப்பு ஒப்படைக்கப் ஆண்டு
பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்தக் குறிப்பிலே
பட்டிருக்கிறது. அரசாங்கம் போட்டிருப்பது ரூ. 5 கோடி. குறிப்பிடப்
நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், கூட்டுத் துறை
வளர முடியாத நிலைமையிலே, அரசாங்கம் எந்த அளவு பணம்
போடுகிறதோ அந்த அளவு நிர்வாகத்திலும் அவர்களுக்குப்
பொறுப்பு இருக்கவேண்டும். அது இல்லாமல் போனால், கூட்டுத்
துறைஎன்ற பெயரிலே, தனிப்பட்ட முதலாளிகள் அதிகப்படியாக
லாபம் சம்பாதிப்பதற்கு உதவி செய்தவர்கள் ஆவோம். ஏன்
அதை நாமே நட்த்தி விடலாமே. ஏனென்றால், முக்கால்
பங்கு பணத்தை, இந்திய சர்க்காரைச் சேர்ந்த Industrial Develop-
ment Bank of India இந்தியாவிலேயுள்ள தொழில் வளர்ச்சிக் கழகப்
பாங்கிலேயிருந்து, இந்திய சர்காருடைய Industrial Development
Corporation of India என்ற ஸ்தாபனத்திடமிருந்தும். வாங்கு
கிறார்கள், ஆகவே, மக்களிடமிருந்தும் வாங்குகிறார்கள்



அரசாங்கம் போடுகிறது. மத்திய மாநில சர்க்கார்களுடைய
முதலீடு தான் அப்படிப்பட்டக் கூட்டுத்துறை நிறுவனங்களிலே
அதிகமாக இருக்கும்போது, நிர்வாகப் பொறுப்பும் மத்திய
மாநில சர்க்கார்களுடைய பிரதிநிதிகளுடைய கையிலேதான்
அதிகம் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குரோம் லெதர் கம்பெனியைப் பற்றி ஒரு வார்த்தை. ஏற்
கனவே பேசியிருக்கிறோம். ஆசியாவிலேயே சிறந்த ஒரு
தொழிற்சாலை. அது கடந்த 26 மாதங்களாக மூடப்பட்டி
ருக்கிறது. அன்றைக்குத் தொழிலாளர் நல அமைச்சர்
அவர்கள் அதைப்பற்றிச் சொன்னார்கள். நான்கேட்க விரும்பு
கிறேன், நீங்கள் Industrial Development Regulation Act தொழில்
வளர்ச்சி மற்றும் முனைப்படுத்துதல் சட்டத்தில் 18 (1)-வது
பிரிவுப்படி மைய அரசு அதை எடுத்து, மாநில அரசுக்குக்
கொடுத்து, ரூ. 1 கோடியும் மாநில அரசுக்குக் கொடுத்து,
அதை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அன்றைக்கு
அரசாங்கத்தின் சார்பிலே தொழிலாளர் நல அமைச்சர்
பேசும்போது என்ன செய்யப்போகிறோம் என்று குறிப்பிட
வில்லை. நான் வலியுறுத்துகிறேன், அந்தத் தொழிலாளர்கள்
அரசாங்கத்தோடு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள்.
அந்தத் தொழில் சரியான நிலைக்கு வருவதற்கு அவர்கள்
பூரணமான ஒத்துழைப்பை கொடுக்கத் தயாராக இருக்கிறார்
கள். ஆகவே, அரசாங்கம் அதிலே ஒரு முடிவுக்கு வந்து.
அதை நடத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
மத்திய சர்க்காரை வற்புறுத்தி அதை நம்முடைய டிட்கோ
மூலமாக நடத்தலாம். ஏற்கனவே, பல பெரும் தொழில்கள்
நடத்தக்கூடிய தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் அதை
இன்றைக்கு நடத்தமுடியும். இடைக்காலத்திலே அந்தத் தொழி
லாளர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து நிவாரணம் வழங்க
வேண்டும். அவர்கள் மடிந்து கொண்டிருக்கிறார்கள், பலபேர்
இறந்துவிட்டார்கள். நாம் புதிய தொழில் தொடங்குவது
இருக்கட்டும். இருக்கக்கூடிய தொழில்கள், தனிப்பட்ட ஒரு
பெரு முதலாளியினுடைய கோளாறினால் 26 மாதமாக மூடப்
பட்டிருக்கிறது. மிகச் சிறந்த எக்ஸ்போர்ட் பொட்டன்ஷியல்
வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி பண்ணக்கூடிய வாய்ப்பு வழங்கு
வதில் முக்கியமானது இது. ஆகவே, இத்தொழில்கள் துவங்க
வேண்டும். அதே போலத்தான் திருச்சி காவேரி ஸ்ட்ரக்ஸ்சுரல்ஸ்.
அதையும் இன்றைக்கு மத்திய சர்க்காரின் மூலமாக மாநில
சர்க்கார் பொறுப்பிலே நடத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

குமரி மாவட்டம், தென்னாற்காடு மாவட்டங்களிலே
இன்றைக்கு ஏராளமான முந்திரித் தொழில்கள் இருக்கின்றன.
குமரி மாவட்டத்திலே மட்டும் 180 முந்திரித் தொழில்கள்
இருக்கின்றன. ஆனால், கச்சா முந்திரி கிடைப்பதில்லை.
தமிழகக் காடுகளிலே, 600, 700 டன் கச்சா முந்திரி உற்
பத்தியாகிறது என்று நான் அறிகிறேன். தமிழகத்திலே, குமரி
மாவட்டத்திலே, தென் ஆற்காடு மாவட்டத்திலே இருக்கிற
தொழில்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அந்தக் கச்சா
முந்திரியை ஒதுக்கவேண்டும். வேறு இடங்களுக்கு அதை
அனுப்புவதைப் பற்றி பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று
தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலத்தான் குமரி மாவட்டத்திலே உள்ள ரப்பர்
தோட்டங்களைப் பயன்படுத்தி, குஷன் செய்வது, டையர்கள்
செய்வது போன்ற ரப்பர் தொழில்களை உண்டாக்குவதற்கு
இன்றைக்கு நாம் முயற்சிக்க வேண்டும். இன்றைக்கு
இங்கே மூலப்பொருள்கள் கிடைக்கின்றன, தொழிலாளர்கள்
இருக்கிறார்கள். அரசுத் துறையிலே தோட்டங்கள் இருக்
கின்றன. ஆகவே, நீங்கள் இதைச் செய்வதுதான் உண்மை
யாகவே தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான மிக
முக்கியமான பங்காக இருக்கும்.

அடுத்தவாறு, சுற்றுச் சார்பு கெடுதலைப் பற்றி நாம்
முக்கியமாகக் கவனிக்கவேண்டும். சிமெண்ட், காகிதம்,
இரசாயனம், தோல் பதனிடும் தொழில்களினால்
விவசாயிகளுடைய நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. ஆடு மாடு
கள் அந்தத் தண்ணீரைக் குடித்து பாதிக்கப்படுகின்றன.
ஆகவே, மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த மாதிரி நவீன
முறைகளைக் கையாண்டு இந்த மாதிரி சுற்றுச் சார்பு
கெடாதவாறு நாம் பாதுகாக்க வேண்டும். அப்படிச் செய்ய
வேண்டுமென்றால். இன்றைக்குப் பெரிய தொழில்கள் தானா
கவே செய்யவேண்டுமென்று நாம் வற்புறுத்த வேண்டும்.
தோல் பதனிடும் தொழில் செய்கிற சிறிய தொழிலதிபர்கள்
அதைச் செய்ய முடியாது போனால். அரசு நிறுவனங்கள்,
பாங்கு நிறுவனங்கள் கை கொடுத்து, அந்தப் பாதுகாப்பு ஏற்
பாடுகளை அவர்கள் செய்வதற்கு உதவி செய்ய வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இங்கே வருத்தத்தோடு குறிப்பிட விரும்புவது
தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம். 1979ஆம்
ஆண்டிலே ஏப்ரல் மாதம் 14-ந் தேதி அரசு நிறுவனமாக ஆரம்
பிக்கப்பட்டதை நான் பாராட்டுகிறேன். 181 கோடி ரூபாய்



திட்டம். அதற்கு மத்திய அரசு முன்னுரிமை வழங்கி இருக்
கிறது. 1979 ஜூலை மாதத்திலே. ஆனால் இப்போது என்ன
சொல்லுகிறார்கள் என்றால் ஏற்கனவே இருக்கிற தொழிற்சாலை
களுக்கு நிலக்கரி சப்ளை செய்ய முடியாத நிலையிலே இன்றைக்கு
இதை நீங்கள் ஏற்படுத்திக் கொண்டால் அந்தக் கழிவு பாகு
எல்லாம் அங்கே இல்லாமல் போய்விட்டால் நீங்கள் என்ன செய்ய
முடியும் என்று தடை விதிக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். இது
மிகவும் தவறானது. மிகவும் முக்கியமான இந்த 180 கோடி
ரூபாய்த் திட்டம் தமிழகத்திலே ஏற்படுவதற்கு மத்திய அரசை
நீங்கள் வற்புறுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, சுரங்க இலாகாவில் இதற்குத் தேவை
யான 1 கோடியே 90 லட்சம் டன் நிலக்கரியை 1983 ஆண்டிலே
நாங்கள் வழங்குகிறோம் என்று பதில் அளித்த பிறகும், அந்தத்
தொழிலைத் துவக்குவதிலே எந்தவிதமான தடங்கலும் இருக்கக்
கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் இன்றைக்குச் சிறந்த முறை
யில் முன்னேறி வருகிறது. தனிப்பட்ட முதலாளிகளுடைய நிர்
வாகம் இல்லாமல் சிறந்த கனரகத் தொழில்களையும் அரசாங்கம்
நடத்த முடியும் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

அது மட்டுமல்ல இன்றைக்கு அஸ்பெஸ்டாஸ் உற்பத்தி மிகவும்
முக்கியமானது. இங்கே பல இடங்களில் நெருப்பினால் விபத்து
ஏற்படுகிறது. மறுபடியும் அதற்குக் கூரை போடுகிறோம்.
நான் சொல்ல விரும்புகிறேன். அந்த ஆஸ்பெஸ்டாஸ்
தொழிற்சாலையை ஆளங்குளத்திலே ஏற்படுத்தக்கூடிய உப
தொழிலை பெரிய அளவிலே நடத்தி, இன்றைக்கு பல ஆயிரக்
கணக்கான, லட்சக்கணக்கான குடிசைகளுக்கு அரசாங்கம் அவை
களை சப்ளை செய்தால் நெருப்பினால் விளையும் ஆபத்தைத்
தடுக்க முடியும்.

அதேபோலத்தான் ஓடு தொழிற்சாலை. ஏற்கனவே இருந்த
செங்கல் தொழிற்சாலை திருமழிசையில் இப்போது அந்தத்
தொழில் சரியான முறையில் நடைபெறவில்லை என்று குறிப்பிட்
டார்கள். அங்கே இப்போது 5 லட்சம் செங்கற்கள் உற்பத்தி
செய்யப்படுவதாக கூறப்படுகிறது. அதைத் திருத்தி அமைக்க
வேண்டும்.

அது மட்டுமல்ல, கள்ளிக்கோட்டை ஓடுகளை ஏராளமாகத்
தயாரிக்கும் தொழிற்சாலை அரசாங்கமே ஏற்படுத்தினால் இ[illegible]
றைக்கு மக்களுக்கு மாடி வீடு கட்டிக் கொடுத்து ஏழைக[illegible]

முன்னேற்றப் போவதில்லை—அவர்களுக்கு கூரையிலே போடக்
கூடிய ஓடுகளை கொடுப்பதற்காக இந்த ஓடு தொழிற்சாலைகளை
பல பிரதேசங்களில் அரசாங்கம் ஆரம்பிப்பதற்கு விசேஷமான
முயற்சிகளை எடுக்க வேண்டும்.

அடுத்து நலிவுத் தொழிற்சாலையைப் பொறுத்த வரையிலும்
அது நலிவாகிவிட்டது, நிர்வாகம் சிறப்பாக நடைபெறாததால்
தான் அந்தத் தொழிற்சாலைகள் எடுக்கப்பட்டன. அவை
களைத் திரும்ப அவர்களுக்கே கொடுக்கக்கூடாது. உதாரணமாக
கோயம்பத்தூரிலே டெக்ஸ்டூல் கம்பெனியை அவர்கள் திரும்பக்
கொடுங்கள் என்று கேட்பதாக நான் அறிகிறேன். நாம் எல்லாம்
சரி செய்து, ரிப்பேர் செய்து வைத்திருந்தால் அவர்கள் கேட்
கிறார்கள். அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டாம் என்று
கேட்டுக் கொள்கிறேன். சரியான நிர்வாகம் இல்லை என்ற
காரணத்தினால் அதை அரசாங்கம் எடுத்துக்கொண்டது.
ஆகவே அப்படிப்பட்ட தொழிற்சாலைகளைத்திருப்பி தனிப்பட்ட
நபர்களுக்கு ஒப்படைக்கக் கூடாது. தமிழ்நாட்டிலே இருக்கக்
கூடிய தொழில் நிறுவனங்களின் மூலமாக அவைகளை நடத்து
வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த
நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இன்று நான் சொல்ல விரும்புவது, ஒன்றிரண்டு
விஷயங்களை இந்த பத்திரப் பதிவு துறையின் சம்பந்தமாக நான்
கூற விரும்புகிறேன். இந்தத் துறையிலே பெரும் பணக்காரர்
கள் ஏராளமான கட்டணங்கள் கட்டுவதால் லட்சக்கணக்கான
ரூபாய்களை 'அண்டர் வேல்யுவேஷன்' போட்டு, முத்திரை,
பதிவு கட்டணத்தை ஏமாற்றுகிறார்கள். இதைத் தடுப்பதற்
காக அரசாங்கம் தீவிரமான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், அந்த பத்திரப்
பதிவு துறையினுடைய அலுவல்களிலே நடக்கின்ற ஊழல்களை
தடுத்து நிறுத்தி, முறையாக அரசாங்கத்திற்கு வருமானம் வரக்
கூடிய அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று இந்த
நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, பத்திரப்பதிவுத் துறைதான் சீட்டுக்கம்பனி
களைப் பராமரிக்கும் பொறுப்பையும் ஏற்றிருக்கிறது. இப்
போது சீட்டுக் கம்பெனிகளில் ஏராளமான ஊழல்கள் நடந்து
கொண்டிருக்கின்றன. ஆகவே இந்தத் துறையிலே அதற்கான
ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வரதட்சணைத் தடுப்புச் சட்டம், ஸ்பெஷல் மேரேஜ்
ஆக்டையும் அமல் நடத்துகின்ற பொறுப்பும் பத்திரப் பதிவு
அலுவலகத்தைச் சார்ந்துள்ளது. இந்த வரதட்சணை தடுப்புச்
சட்டத்தில் என்ன நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது





என்பதை அறிய விரும்புகிறேன். இது முக்கியமான ஒரு சமு
தாயப் பிரச்சினை என்பதால் அந்தச் சட்டத்தை நல்ல முறையில்
அமுல் நடத்த வேண்டும். அதேபோல் இந்த ஸ்பெஷல் மேரேஜ்
ஆக்ட்—விசேஷமான திருமண சட்டம் என்பது கலப்புத்
திருமணப் பதிவு செய்ய இருப்பதாகும். சாதாரணமாக இந்த
வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு கலப்புத் திருமணம்
செய்யக்கூடிய தம்பதிகளுக்கு தங்கள் குழந்தைகள் நலனைப்
பாதுகாப்பதற்காக சுலபமாக அதைப் பதிவு செய்ய நடவடிக்கை
எடுக்கவேண்டும். தமிழ்நாட்டில் ஜாதி சமயமற்ற ஒரு
சமுதாயத்தை உருவாக்குவதற்காக இந்த விசேஷ திருமண
சட்டத்தைப் பயன்படுத்தி சரியான விளம்பரம் கொடுக்கவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக நான் கூற விரும்புவது, அரசாங்கம் அரசுத்துறை,
தொழில் துறை, பொதுத்துறை, தொழில்களை, தொழில்
கூட்டுறவுச் சங்கங்களையும் பலப்படுத்த வேண்டும். கிராமப்புற
தொழில்களை, நாயுடம்மா கமிட்டியின் பரிந்துரைகளின் பேரில்
அமுல் படுத்துகின்ற வகையிலே இந்த அரசு நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மத்திய அரசு ஏற்கனவே ஒப்புக்கொண்டிருக்
கிறபடி ஆகாய விமான தொழிற்சாலையை ஏற்படுத்தித் தர
வேண்டும். இறுதியாக இந்த அரசாங்கம் எந்தத் துறையிலே
செயல்பட்டாலும் தொழிலாளிக்கும் நன்மை கிடைக்கும், மக்க
ளுக்கும் நன்மை கிடைக்கும் என்று அறிந்து செயல்பட வேண்டும்.

இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏதோ இந்த
அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளினால் முதலாளிகள்
இங்கே வராமல் போய்விட்டார்கள், அதனால் தொழில்கள் வரா
மல் போய்விட்டன என்பதெல்லாம் உண்மைக்கு மாறானதாகும்.

(முற்பகல் 11-40)

இன்றைக்கு நம்முடைய அரசாங்கமானது இந்த முறையில்
செயல்பட்டால் தொழிலாளர்களுக்கு நன்மை அளிக்க முடியும்.
மக்களுக்கு நன்மை அளிக்க முடியும், தொழில் வளர்ச்சி ஏற்படுத்த
முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே
சிலர் சொன்னார்கள். அரசாங்கத்தின் ஏதோ சில நடவடிக்கை
களின் காரணமாக முதலாளிகள் வராமல் போய்விட்டார்கள்,
அதனால் கன ரகத் தொழில்கள் வளரவில்லை என்று சொன்
னார்கள். அது உண்மைக்கு மாறானது. நிலைமை அப்படி
இல்லை. ஆகவே, இன்றைக்கு இந்த அரசாங்கமானது நியாய
மான சலுகைகளை, உண்மையான தொழில் முயற்சியாளர்களுக்
குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, என் பேச்சை முடித்துக்
கொள்கிறேன்.

[1980 ஜூலை 16

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு
மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை
அவர்களால் இங்கே அவை முன் வைக்கப்பட்டு இருக்கிற தொழில் அமைச்சர்
துறை, பால் வழங்கு துறை, பத்திரப் பதிவுத் துறை ஆகிய தொழில்
மானியக் கோரிக்கைகள் மீது எனது கருத்துக்களை தெரிவிக்க
விரும்புகிறேன்.

சிறு தொழில்களை கிராமத்தில் ஏற்படுத்தி ஏராளமான
பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும் என்கிற அடிப்
படையிலும், கிராமத்தில் உள்ள வளவாயில்களை (ரிசோர்சஸ்)
யும், மூலப் பொருள்களையும் (ரா மெட்டீரியல்ஸ்) பயன்
படுத்தி பொருள்களை உற்பத்தி செய்வதன் மூலம் அங்கேயுள்ள
மக்களின் உழைப்பையும் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்கிற
அளவிலும், ஆங்காங்கே சிறு தொழில்கள் தொடங்கப்பட
வேண்டும் என்பது அரசின் உயரிய சிறு தொழில் கொள்கையாக
இருக்கிறது. இத்தகைய அடிப்படைக் கொள்கையை இந்தக்
கொள்கை அறிக்கையில் குறிப்பிட்டு இருப்பது பாராட்டுதற்
குரியது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொழில்
கொள்கையை, அரசின் தொழில் கொள்கையாக மாற்றுக் கட்சி
யினர் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு சிறிய தொழில் ஏற்
படுத்துவதற்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுக்கும் வகையில் புதிய
வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும் என்பது அடிப்படை
தொழில் கொள்கையின் நோக்கமாக இருக்கிறது. மாவட்ட
தொழில் மையங்கள் மூலம் 1979–80ல் 61,000 பேருக்கு வேலை
வாய்ப்பும், 5,632 புதிய சிறு தொழில்களையும் இது உருவாக்கி
யுள்ளது பாராட்டுதற்குரியது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் தொழில் வளர்ச்சி குறைந்து விட்டதாக பத்திரி
கைகளிலும், மற்றும் பல இடங்களில் இருந்தும் குறைகள் கூறப்
படுவதைக் கேட்டு இருக்கிறோம். அப்படிக் கூறுவது தவறு.
1970-ம் ஆண்டில் தொழில் வளர்ச்சி 100 புள்ளி இருந்தது என்று
சொன்னால், 1976-ம் ஆண்டில் அது 137·6 புள்ளி என்கிற அள
விற்கு உயர்ந்து இருக்கிறது. 1978-ம் ஆண்டில் 164·1 புள்ளி
என்ற வகையிலும், 1979-ம் ஆண்டில் 172·3 புள்ளி என்ற வகை
யிலும், அவைகள் படிப்படியாக உயர்ந்து கொண்டே வந்திருக்
கின்றன என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதைப்போலவே, தொழிற்சாலைகளைப் பொறுத்த வரை
யில், 1977-ல் 8,508 தொழிற்சாலைகள் இருந்தன என்று சொன்
னால், 1979-ம் ஆண்டில் 9,139 தொழிற்சாலைகள் என்கிற



1980 ஜூலை 19] (திரு. வே. இரா. ஜெயராமன்)

அளவிற்கு புதிய தொழிற்சாலைகள் நிறைய தொடங்கப்பட்டு
இருக்கின்றன என்பதையும் நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.
ஆகவே, தொழில் வளர்ச்சி இல்லை, குறைந்து விட்டது என்று
கூறுகிற கூற்று தவறானது என்பதை இந்தப் புள்ளி விவரங்கள்
காட்டுகின்றன என்பதை தெளிவாக நான் கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

சில பல நேரங்களில் சில தடைகள் இருக்கலாம். உதாரண
மாக, மின் சக்தி, எண்ணெய் தட்டுப்பாடு, நிலக்கரி, ரயில்
வாகனங்கள், இரும்பு, சிமெண்ட் போன்ற இன்றியமையாப்
பொருள்களில் தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தால் தொழில்
வளர்ச்சி தற்காலிகமாக தொய்வு அடைந்து இருக்கலாம், அல்லது
தடைபட்டு இருக்கலாம். ஆயினும், தற்போது அந்த நிலைமை
களில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக, தொழில் வளர்ச்சி
கணிசமாக உயர்ந்துள்ளது என்பதை பெருமையுடன் சொல்லிக்
கொள்கிறேன்.

சிறு தொழில்களைப் பொறுத்தவரையில், 1979–80 ஆம்
ஆண்டில் 6,750 சிறு தொழில் பிரிவுகள் செயல்படத் தொடங்கின.
அதன் காரணமாக, 80,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்
துள்ளது. 1979–80-ம் ஆண்டில் சிறு தொழில்களுக்கு உதவு
வதற்காக புதிய கொள்கையை புரட்சித் தலைவர் அரசு உரு
வாக்கியது. அதாவது, மூலதன உதவித் தொகை அளிக்கும்
திட்டம், சீரமைக்கப்பட்ட மனைகள் விற்பனை, மின் கட்டண
உதவித் தொகை, தொடக்கச் செலவு உதவித் தொகை, குறிப்
பிட்ட சில இனங்களை சிறு தொழில்களுக்கு ஒதுக்குவது, என்று
இப்படி பல்வேறு முறைகளில் திட்டங்களைத் தீட்டி, சிறு தொழில்
முனைவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கப்பட்டன.

அதற்கு அடுத்தபடியாக, வறுமையிலே வாடுகின்ற, ஏழை
எளிய நெசவாளர்களுக்கு ஊக்கம் தந்திடும் வகையில் பட்டுப்
புழு வளர்ப்புத் திட்டம் தீட்டப்பட்டது. அந்தப் பட்டுப்புழு
வளர்ப்புத் திட்டத்தின் மூலம் 1979–80-ம் ஆண்டில் 1·59 லட்சம்
பேர் வேலை வாய்ப்பு பெற்று இருக்கின்றனர் என்பதை மகிழ்ச்சி
யுடன் தெரிவித்துக் கொள்கிறேன். முசுக்கொட்டை பயிரிடும்
பரப்பளவு 31,470 ஏக்கர் என்ற அளவிற்கு உயர்த்தியிருப்பதன்
காரணமாக கூடுதலாக 50,000 பேருக்கு வேலை வாய்ப்பு
கிடைத்திருக்கிறது. 1980–81-ல் 8,000 ஏக்கர் பரப்பளவில்
மேலும் பயிரிடுவதன் மூலம் கூடுதலாக 40,000 பேருக்கு வேலை
வாய்ப்பு கிடைக்கும் என்று திட்டமிடப்பட்டு இருக்கிறது என்
பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவைகள் எல்லாம் இந்த அரசின் கிராமப்புறங்களில் வேலை
வாய்ப்பை உருவாக்குகின்ற முயற்சிகள், இவை பாராட்டுக்
குரியவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. வே. இரா. ஜெயராமன்) [1980 ஜூலை 19

அடுத்து, தமிழக அரசைப் பொறுத்தவரையில்
தொழில்கள் வளரவில்லை, வளரவில்லை என்று பெரிய
களுக்கு நான் கூறிக்கொள்வது எல்லாம் மத்திய கூறுகிறவர்
முதலீடு தமிழ்நாட்டில் மிக மிகக் குறைந்து அரசின் தொழில்
பதை புள்ளி விவரங்கள் மூலம் கூற வந்திருக்கிறது என்
மத்திய துறையில் இந்தியாவினுடைய விரும்புகிறேன். 1979-ல்
15,668 கோடி ரூபாய். அதிலே ஐந்தாண்டுத் திட்ட முதலீடு
பட்ட முதலீடு 616 கோடி தமிழ்நாட்டில் மட்டும் செய்யப்
வீதம்தான். கடந்த 10 ரூபாய். இது கிட்டத்தட்ட 4 சத
8 சதவீதத்திலிருந்து 4 ஆண்டுகளில் மத்திய அரசின் முதலீடு
ஏற்றத்தாழ்வு சீராக்கப்பட சதவீதமாகக் குறைந்துள்ளது. இந்த
மத்திய அரசு முன்வர வேண்டும்.

குறிப்பாகக் கூறுவது என்றால் டெல்லி பகுதியிலேதான் அதிக
மான தொழிற்சாலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.
ஏன் அப்படி இருக்கிறது என்றால் 'ரா மெட்டீரியல்ஸ்' அங்கே
கிடையாது. அங்கேதான் 'ரா மெட்டீரியல்ஸ்' இங்கே
சாலைகள் எல்லாம் இருக்கின்றன என்று தொழிற்
அங்கே ஒரே ஒரு ரா மெட்டீரியல்ஸ்தான் சொல்கிறார்கள்.
தான் அரசியல் என்ற ரா மெட்டீரியல்ஸ். இருக்கிறது, அது
யல்சை வைத்து எல்லா மெட்டீரியல்சையும் அந்த ரா மெட்டீரி
கிறார்கள். அதுதான் தெற்கே அங்கே ஏற்படுத்து
வராமல் இருப்பதற்கான காரணம் அந்தத் தொழிற்சாலைகள்
கொள்கிறேன். என்பதைத் தெரிவித்துக்

இன்னும் சொல்லப்போனால் தமிழகத்திலிருந்து
காகச் செல்கிற மனுக்கள் அங்கே தேங்கிக் அனுமதிக்
களை மிக வேகமாக முடிவுசெய்து, கிடக்கின்றன. அவை
மென்று கேட்டுக் கொள்கிறேன். அனுமதி அளிக்க வேண்டு

1980–81 ஆம் ஆண்டுக்கு தமிழகத்திற்கு
37·352 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்தத் துறையில்
ஆண்டு ஒதுக்கப்பட்டதைவிட சுமார் 49 சதவீதம் இது கடந்த
இந்த நேரத்தில் இந்தத் தொழில்மானிய அதிகமாகும்.
கொண்டு பேசும்போது, என்னுடைய விவாதத்தில் கலந்து
தொகுதியில் பெரியகுளம் கோட்டத்தை தொகுதியாகிய தேனி
பின்தங்கியப் பகுதியாக அறிவித்திருப்பதற்கு தொழில் துறையில்
அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் புரட்சித் தலைவர்
கொள்கிறேன்.

மேலும், அந்தப் பகுதி விவசாயத்தை
கொண்டிருப்பதால் அங்கே கரும்பு, அடிப்படையாகக்
மாகப் பயிரிடப்படுகின்றன. அந்த பருத்தி போன்றவை அதிக
தில் கரும்பு விவசாயிகளுக்கு உரிய பெரியகுளம் கோட்டத்
யில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஊதியம் கிடைக்கின்ற வகை
என்று கேட்டுக் கொள்கிறேன். ஆலையை ஏற்படுத்த வேண்டும்



1980 ஜூலை 19] (திரு. வே. இரா. ஜெயராமன்)

அதைப்போல அங்கே ஒரு கூட்டுறவு நூற்பாலையையும் ஏற்
படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நைலான் வலை தயாரிக்கும் தொழிற்சாலை
ஒன்றை தொடங்குவது பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.
இந்தத் தொழிற்சாலை பற்றி கடந்த பத்து, இருபது ஆண்டுகளாக
மத்திய அரசின் அனுமதி கேட்டு, அனுப்பப்பட்டிருக்கிறது என்று
சொல்கிறார்கள். அது எப்போது கிடைக்கும் என்று தெரிய
வில்லை. அந்தத் தொழிற்சாலையை அமைக்க தேனியிலிருந்து
ஆண்டிப்பட்டிக்குப் போகும் வழியில் நிலம் கூட தேர்ந்தெடுத்தார்
கள். அந்த இடத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இரண்டாவது பால் பெருக்கத் திட்டத்திற்கு
கிராமப்புறங்களில் நல்ல வரவேற்பு இருக்கிறது. கூட்டுறவு
பால் நிறுவனங்களை நிறைய ஏற்படுத்தி, அதன் அடிப்படையில்
கிராம மக்களின் பொருளாதாரத்தை மாற்றம் செய்யலாம்.
அந்த வகையில் இந்த கூட்டுறவு பால் நிறுவனங்களுக்கு நிதி
உதவி அளிப்பதற்கு தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகள் முன்வர
வில்லை. அதற்குப் பதிலாக தொழில் துறைக்கு நிதி ஒதுக்கீடு
செய்ய தனிப்பட்ட கழகங்கள், நிதி உதவி கழகங்கள் இருப்பதைப்
போன்று பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்க தனி
யாக ஒரு நிதி நிறுவனத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதைப்போலவே கிராமப்புற மக்கள் உற்பத்திச் செய்யும்
பாலுக்கு நியாயமான விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
இன்றைக்கு மாட்டுத் தீவனம் விலை ஏறியிருக்கிறது; மற்ற
செலவுகள் எல்லாம் கூடியிருக்கின்றன. ஆகவே, பால் கட்டு அடிப்
படையில் கிலோ ஒன்றுக்கு 30 ரூபாய், 32 ரூபாய் விலை கொடுக்க
வேண்டும். இல்லை என்றால் கிராமப்புறத்தில் இருக்கிற மக்கள்
நகரங்களில் வசிப்பவர்களுக்கு மாடு மேய்க்கும் நிலைதான் ஏற்
படும். ஆகவே, அவர்களுக்கு உற்பத்திச் செலவுக்கு ஏற்ற விலை
கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த பத்திரப்பதிவுத் துறை இருக்கிறது.
இதற்கு முன்னால் கிராமங்களில் நிலங்களை மறு அளவை செய்து,
மறு மதிப்பீடு செய்து, அந்த அடிப்படையில் கட்டணங்கள் வசூல்
செய்யப்பட வேண்டும் என்று இருந்தது. அதன் மூலம் இலட்சக்
கணக்கான ரூபாய் தினம் தினம் வந்துகொண்டிருந்தாலும் அந்த
நிலங்கள் மதிப்பீட்டை ஆய்வு செய்து, புதிய மதிப்பீடு செய்ய
வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவ
ருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

(திரு. எம். ஆறுமுகம்) [1980 ஜூலை 19

(முற்பகல் 11-50)

*திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்
களே, தொழில் கொள்கைகள், திட்டங்கள் சம்பந்தமாக எங்க
ளுடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில
விவரங்களை உங்கள் மத்தியிலே எடுத்துக் கூறலாம் என்று
கருதுகிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையிலே மத்திய அரசு
தமிழகத்தைப் பின்னுக்குத் தள்ளுகிறார்கள் என்றே சொல்ல
லாம். 90 தொழிற்சாலைகளுக்கு அனுமதி வேண்டும் என்று
தமிழக அரசு மத்திய அரசிடத்திலே கேட்டிருக்கின்றது. அப்
படிக் கேட்டிருந்தும் கூட மத்திய அரசு காலதாமதப் படுத்துகின்ற
நிலைமை இருக்கின்றது. மத்திய அரசின் தொழில்
கொள்கையே தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தக்
கூடாது என்பதுதான். அந்த அடிப்படையிலேதான் அவர்கள்
செயல்படுத்துகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். 1967-க்கு முன்னதாக தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி
யின் ஆட்சி இருந்தது. அப்போது மத்திய அரசிலும் காங்கிரஸ்
கட்சி ஆட்சியிலே இருந்த காரணத்தால் தமிழகத்திற்கு பல
தொழில்கள் கிடைக்கின்ற வகையிலே வாய்ப்புக்களை ஏற்படுத்
திக் கொடுத்தார்கள். ஆனால் 1967-க்குப் பின்னாலே மாற்று
சர்க்கார் ஏற்பட்டதற்குப் பின்னால் தமிழகத்திலே தொழில்
வளர்ச்சி ஏற்படாத நிலைமை ஏற்பட்டுவிட்டது. மத்திய அரசு
தமிழகத்தை தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் கவ
னிக்கவில்லை என்றே சொல்லலாம். ஆகவே, தமிழகத்திலே
ஆட்சியிலே இருக்கக்கூடிய சர்க்காரும் தமிழகத்தின் தொழில்
வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்வர வேண்டும்
என்று நான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திலே தொழில்
நெருக்கடி இந்த அளவுக்குச் சென்று கொண்டிருந்தால் தொழி
லாளர்கள் வேலையில்லாமல் திண்டாடக்கூடிய ஒரு சூழ்நிலை
ஏற்படும். ஆகவே தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கான அடிப்
படைக் காரணங்கள் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை]

அடுத்து, தொழில் வளர்ச்சி அதிகரிக்க வேண்டுமானால்
அதற்கு அவசியமான மின்சாரம் வேண்டும். ஆகவே, இது
போன்ற அவசியமான நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும்.

அடுத்து தமிழகத்திலே இருக்கக்கூடிய இரயில் பாதைகள்
மீட்டர் கேஜ் பாதையாக இருப்பதால் மாவட்டத்திற்கு
மாவட்டம் போதிய அளவிலே தொடர்பு இல்லாமலும்,



தலைநகரங்களுக்கிடையே தொடர்பு வைக்க முடியாமலும்
இருக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே அவற்றை அகலப்
பாதைகளாக மாற்றுவதற்குரிய வகையிலே மத்திய அரசை
மாநில அரசு கேட்டுக்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை
எடுக்கவேண்டும். உடனடியாக இதைச் செய்வதற்கு ஏற்பாடு
செய்யவேண்டும்.

அடுத்து, நம்முடைய தமிழகத்தில் கடல் வளம் மிக அதிகமாக
இருக்கிறது; அந்தக் கடல் வளத்தைக் ஆதாரமாகக் கொண்டு
பல தொழில்களைத் தொடங்க முடியும். உப்பளத்தை எடுத்துக்
கொண்டால் தூத்துக்குடி, ஓவரி போன்ற இடங்களிலே உப்பளத்
தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடியும். அவ்வாறு ஏற்படுத்து
வதன் மூலமாக உப்பிலிருந்து கிடைக்கக்கூடிய ஜிப்சம் போன்ற
ரசாயனப் பொருட்களைத் தயாரிக்க முடியும். ஆகவே
உப்பளத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவேண்டும். அதே
போல் மீன் வளத்தைப் பெருக்குகின்ற வகையில் ஃபிஷிங்
ஹார்பர் கட்டவேண்டும். அதோடு தமிழகத்திலே இருக்கின்ற
மீன் வளத்தைப் பயன்படுத்துகின்ற வகையில் ஃபிஷ் பிராசசிங்
இன்டஸ்ட்ரீஸ் போன்ற தொழில்களை தொடங்கவேண்டும்.
அப்படித் தொடங்கினால் மீன்களைப் பதப்படுத்தி வெளி
நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நடவடிக்கைகளை
எடுக்க முடியும்.

அடுத்து, சுகர் இன்டஸ்ரிட்ரீசைப் பொறுத்தவரையில்
தமிழ்நாட்டிலே மூன்று இடங்களிலே தொடங்கவேண்டும்
என்று மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்திருந்தும்
கூட, கோவை மாவட்டம் இன்னும் பல பகுதிகளிலே அவ்வாறு
ஏற்படுத்துவதற்கு முதலிலே அனுமதி அவர்கள் கொடுத்
திருந்தும் கூட, இப்போது கோவையிலே சிறுவாணி நீர்த்திட்டம்
கொண்டுவரப்படாமல் இருப்பதால் அதை நிறுத்தி வைத்
திருக்கிறார்கள் என்று அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது.
இது வேதனைக்குரிய ஒன்று. ஆகவே, சர்க்கரைத் தொழிலை
உடனடியாகத் தமிழகத்தில் ஆரம்பிக்கவேண்டும். அவ்வாறு
ஆரம்பித்தால் அதிலே இருந்து கிடைக்கின்ற கழிவுப் பொருட்
களை வைத்து காகிதத் தொழிற்சாலைகளை அதிகமாக
ஆரம்பிக்க முடியும். ஆகவே அந்த வகையிலே பேப்பர் தொழிற்
சாலைகளையும் ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து, தூத்துக்குடி துறைமுகத்தை விரிவுபடுத்த வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே பன்னிரண்டரை இலட்சம் சங்குகள் இருப்பதாகச்
சொல்லப்படுகிறது. அந்த சங்குகளைக் கொண்டு மோதிரம்,
வளையல், கம்மல் போன்ற பல்வேறு பொருட்களைத் தயாரிக்க

முடியும். ஆகவே, அதற்குரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்
னால் நிச்சயமாக 20,000 பேர்களுக்கு வேலை கொடுக்
முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, பன்னிரண்டரை இலட்சம் சங்குகள்இங்கே கிடைக்கிற
காரணத்தினால், ஒரு சங்குத் தொழிற்சாலையை, ஆரம்பித்து
அதிலே கம்மல், வளையல், மோதிரம் போன்றவைகளை
செய்து, அவைகளை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய
வேண்டும். அதுபோன்ற தொழிற்சாலையை ஆரம்பிக்க
வேண்டும் என்று உங்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எண்ணூர் அனல் மின்நிலையத்தில் நிலக்கரி
பற்றாக்குறை இருக்கின்றன. அதிகப்படியாக வாகன்கள்
வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் வாகன்கள்
இந்தப் பற்றாக்குறையைச் சரி செய்ய வேண்டும் போராடி பெற்று
கொள்கிறேன். என்று கேட்டுக்

அடுத்து, சேதுசமுத்திர திட்டத்தை எடுத்துக் கொண்டால்
மதிப்பிற்குரிய இராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில்
ஒரு குழு அமைக்கப் பெற்று, அந்தக் குழு அவசியமாக இந்த
திட்டம் நிறைவேற்றப்பெற வேண்டும் என்று பரிந்துரை
செய்துள்ளார்கள். ஆனால் நமது மத்திய தொழில்
துணை அமைச்சர் அவர்கள் அது தற்போது தேவையில்லை
என்று சொல்லி நிறுத்தியுள்ளார்கள். ஆகவே, இந்த சேது
சமுத்திர திட்டத்தை அவசியம் கொண்டு வர வேண்டும்.
அதற்கான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும் என்று இந்த
நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல தமிழ்நாட்டு கடலோரங்களில் இரால் மீன்கள்
அதிகமாக கிடைக்கின்றன. அவைகள் ஜப்பானுக்கு ஏற்றுமதி
செய்யப்பெறுகின்றன. அவைகளை விரிவுபடுத்தி மேலும் அதிக
மான அளவில் இராலை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய
நடவடிக்கை எடுக்கப்பட்டால், அது தமிழ்நாட்டிற்கு ஏராள
மாக அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கும். ஆகவே,
அதை இந்த அரசாங்கம் அவசியமாகச் செய்ய முன்வர
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கல்பாக்கம் மின்சார நிலையத்தை உடனடியாக
முடிக்க வேண்டும். மின்சார பற்றாக்குறை காரணமாக
தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பல தொழிற்சாலைகளில் வேலை
இல்லாமல் தொழிலாளர்கள் கஷ்டப்படுகிற நிலை இருக்கிறது.
ஆகவே, விரைவில் கல்பாக்கம் நிலையத்தை முடிப்பதற்கான
நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். அதேபோல்
எண்ணூர் அனல் மின் நிலையத்தின் தெர்மல் ஸ்டேஷன்



களையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும். இந்த வேலைகள்
உடனடியாக நிறைவேற்றப் பெற்றால்தான் தமிழ்நாட்டி
லிருக்கக் கூடிய தொழிற்சாலைகளுக்கு போதிய மின்சாரம்
கிடைக்கும்; தொழில் வளர்ச்சி அடையும் என்பதை இந்த
நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஆறுமுகநேரியில் ஒரு பிளாஸ்டிக் தொழிற்சாலை
ஆரம்பிக்கப் பெற வேண்டும் என்று முடிவு எடுக்கப்பெற்றி
ருந்தது. ஆனால், இப்பொழுது அந்தத் தொழிற்சாலை ஆரம்
பிப்பது நிறுத்தி வைக்கப்பெற்றுள்ளது. ஆகவே, ஆறுமுக
நேரியில் ஏற்கெனவே முடிவு செய்யப்பெற்றபடி, ஒரு பிளாஸ்
டிக் தொழிற்சாலையை உடனடியாக ஆரம்பிப்பதற்கான
முயற்சியை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டில் ஆர்காலிக் சோடா தொழிற்
சாலை ஒன்று ஆரம்பிக்க வேண்டும். அதற்கு எக்ஸைஸ் டியூட்டி
அதிகமாக இருக்கிற காரணத்தால் ஆரம்பிக்கப் பெறாமல்
இருக்கிறது. அதுவும் இல்லாமல் அதற்கு மத்திய அரசின்
அனுமதியையும் பெறவேண்டி உள்ளது. ஆகவே தமிழக அரசு
மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்று உடனடியாக இந்தத்
தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, இந்த மீன்வளத்தை எடுத்துக் கொண்டால், மீன்
பிடிப்பதற்காக இந்த ட்ராலர்ஸ் பூராவும் டாடாவுக்கும்,
பிர்லாவுக்கும் அல்லது அவர்கள் போன்ற பெரிய பண முதலாளி
களுக்கும் தான் காண்டிராக்ட் கொடுத்து அனுமதி வழங்கிக்
கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றி, ஏழை எளிய
மீனவர்களுக்கு, ஆழ் கடலிலே மீன் பிடிக்க கூடிய அந்த
ஏழை மீனவர்களுக்கு, அவர்கள் வாழ்வு வளம் பெறுகிற
வகையிலே, இந்த காண்டிராக்டுகளை வழங்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய பஞ்சாலைகளில்
ஏற்கெனவே 10 பஞ்சாலைகளை அரசு ஏற்று நடத்தி வருகிறது.
அவைகள் நல்ல முறையிலே லாபகரமான முறையிலே இயங்கி
வருகின்றன. அவைகளை மீண்டும் தனியார்களுக்கு கொடுக்க
வேண்டும் என்ற ஒரு நிலைமை இருப்பதாகக் தெரிகிறது. அப்படி
கொடுக்கக் கூடாது, இன்னும் சொல்லப்போனால், தமிழ்
நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை பஞ்சாலைகளையும் அரசு
ஏற்று நிர்வகிக்க வேண்டும் என்று இந்தநேரத்தில் கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பாக சொல்லிக் கொள்கிறேன்.

(திரு. எம். ஆறுமுகம்) [1980 ஜூலை, 19

அடுத்து, என்னுடைய தொகுதியான அவினாசியில், முசுக்
கொட்டை அதிகமாக விளைகிறது. அங்கே 22 ஆயிரம் ஏக்க
நிலப்பரப்பில் முசுக்கொட்டை பயிரிடப் படுகிறது. ஆகவே
அங்கே முசுக்கொட்டையை இன்னும் அதிகமாக ...ர்த்து,
பட்டுப் புழு வளர்க்கும் நிலையம் ஒன்றினையு... அரசு
உருவாக்கித் தரவேண்டும் என்று என்னுடைய தொகுதி மக்கள்
சார்பாக கேட்டுக் கொள்கிறேன். அவினாசியில் சர்க்கரை
தொழிற்சாலை, பஞ்சாலை ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க
வெண்டும். மிகவும் பின்தங்கிய பகுதியாக் இருப்பதால்
தொழிற்மயமாக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். சென்ட்
தோழிற்சாலை ஆரம்பிக்கவேண்டும் (மணியடிக்கப் பெற்றது).

அடுத்து, சக்தி பைப்ஸ் தொழிற்சாலை, லெதர் தொழிற்
சாலைகளை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் சேலம் இரும்பு தொழிற்
சாலையும் துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு,
எனக்கு வாய்ப்பு அளித்த துணைத் தலைவருக்கு நன்றிசொல்லி
விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய தொழில் துறை
அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்
கை மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு
முன்பு இந்த மானியக் கோரிக்கையை பாராட்டி ஒரு சில
ஆலோசனைகளையும் என்னுடைய கருத்துக்களாக இந்த
நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளாக தொழில் முன்னேற்றம் தமிழ்
நாட்டில் ஏற்படவில்லை. இதற்குக் காரணம் அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொழிற் கொள்கைகள்
தாம் என்று ஒரு குற்றச் சாட்டை மாண்புமிகு எதிர்க்கட்சி
உறுப்பினர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். தொழில்
வளம் கடந்த சில ஆண்டுகளில் தமிழ் நாட்டில் குன்றியிருப்
பதற்கு பல்வேறு காரணங்கள் இருந்த போதிலும், முக்கிய
மான ஒரு சில காரணங்களை, தொழிற் கூடங்கள் அதிகமாக
நிறுவப்பெற்று இருக்கும் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவன்
என்ற முறையில், தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

(நண்பகல் 12-00)

தமிழ்நாட்டில் பவுண்டரீஸ்க்குத் தேவையான பிக் அயர்ன்
இரும்பு, நிலக்கரி இவைகளை மத்திய அரசு இப்போது
போதிய அளவிற்குத் தருவதில்லை என்பதையும் அனைத்து
...திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி



123055

1980 ஜூலை 19] (திரு. கோவைத்தம்பி)

...ந்ததற்குப் பின்பு பத்தாவது ஸ்தானத்தில் இருந்த நம்முடைய
...ன்றைய நிலை, முதலில் நான்காவது நிலையில் இருந்தது
என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

பீகார் போன்ற மாநிலங்களில், மேற்கு வங்காளம் போன்ற
மாநிலங்களில், பக்கத்திலுள்ள ஆந்திரா போன்ற மாநிலங்களில்
எரிபொருள்களை தமிழ்நாட்டுக்கு மத்திய அரசுகொடுத்துவந்த
நிலை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சி வருவதற்கு முன்பு நான்காவது இடத்தில்
இருந்தது என்பதையும் இன்று அதை மத்திய அரசு பத்தா
வது இடத்திற்குத் தள்ளிவிட்டது என்பதையும் பரிதாபத்
தோடு நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

கோவையில் மோட்டார் பம்ப் செட்ஸ் போன்ற தொழில்
களுக்கு உதவக்கூடிய நிலையில் 'டிசைன் அன்ட் டெஸ்டிங்
சென்டர்' இல்லாத காரணத்தால் தொழிற் கூடங்கள் பாதிக்
கப்படுகின்றன என்பதையும் டிசைன் டெஸ்டிங் போன்றவை
எல்லாம் திருடக்கூடிய தன்மை கோவை தொழில் வளத்தில்
இருக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே டிசைன்
அன்ட் டெஸ்டிங் சென்டர் ஒன்றை அரசே முன்வந்து
நிறுவினால் தொழில் வளர்ச்சி தமிழ்நாட்டில், குறிப்பாக
கோவை மாவட்டத்தில் பெருகும் என்பதை தெரிவித்துக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு பரிதாபகரமான நிலை, கோவையில் ஐ. எஸ். ஐ
என்று ஒன்று இருக்கிறது. அந்த ஐ. எஸ். ஐ. முத்திரை
பெற்றால்தான் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களை,
தொழிற்கூடங்களில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை
மாநில அரசுக்கோ அல்லது மத்திய அரசுக்கோ
அல்லது பொது மக்களுக்கோ விற்கக்கூடிய ஒரு நிலையி
ருக்கிறது. ஆனால் அந்நிலை வட மாநிலங்களிலுள்ள
ராஜ்கோட், பஞ்சாப் போன்ற இடங்களில் ஒரே நாளில் அந்த
அத்தாட்சி பெறக்கூடிய அல்லது வழங்கக்கூடிய நிலை இருக்
கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில்
கோவை மாவட்டத்தில் எங்கள் பகுதியில் அந்த ஐ. எஸ். ஐ.
நிறுவனம் சரியாக இயங்கவில்லை என்பயைதயும், ஐ. எஸ். ஐ.
சர்டிபிக்கேட் வாங்க உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை
அனுப்பினால் இரண்டு மூன்று மாதங்கள் கூட ஆகின்றன
என்பதையும் ஜி. சி. டி. போன்ற அரசு நிறு
வனங்களில் அதற்கு முத்திரை அளிக்கக்கூடிய அவ்லநிலை,
மாசமான நிலை மத்திய அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்
பட்டிருக்கிறது.

(திரு. கோவைத்தம்பி) 1980 ஜுலை 19

தொழில் வளம் பெருகவில்லை. தொழில்
வில்லை என்னும் குழப்ப நிலை ஏற்பட்டுக்கிறது வளம் பெருக
றெல்லாம் சொல்கிறார்கள். இங்கே தொழிற்சாலை என்
வேண்டியவர்கள் எல்லாம் மற்ற மாநிலங்களை நிறுவ
கிறார்கள் என்றும் அப்படி மற்ற தேடி ஓடு
ஓடுவதற்குரிய காரணம் இந்த அரசு மாநிலங்களைத் தேடி
நாடவில்லை என்றும் அதனால் அவர்கள் தொழில் அதிபர்களை
தேடி ஓடுகிறார்கள் என்றெல்லாம் மற்ற மாநிலங்களை
சொல்லியிருக்கிறார்கள். குற்றச்சாட்டுக்களை இங்கே
காரணம் இல்லை என்று அந்தக் குற்றச்சாட்டுக்கு அடைக்
குஜராத் மாநிலத்தில் சொன்னாலும் அதற்குரிய காரணம்
இருக்கிறது அந்தத் 'கண்டலா' என்ற ஒரு துறைமுகமும்
என்ற ஏரோட்ரோமும் துறைமுகம் பம்பாயில் சான்டாக்ரூஸ்
வெளிநாடுகளிலிருந்து இருக்கின்றன. ட்யூட்டி ப்ரீ போர்ட்ஸ்.
ளானாலும் அல்லது எந்த கொண்டுவரப்படுகிற எந்தப் பொரு
னாலும் சரி அவற்றிற்கு உறுப்புக்களானாலும், எந்த பார்ட்டா
ட்யூட்டி ப்ரீ போர்ட்டாக வரி இல்லை என்ற நிலையில்
நாட்டில் தொழில் தொடங்க இருக்கிற காரணத்தினால் தமிழ்
அல்ல பெரிய லாபத்தை நினைப்பவர்கள். பயத்தினால்
போன்ற மாநிலங்களை எதிர்நோக்கி குஜராத், மகாராஷ்ட்ரா
நாட்டில் அந்த நோக்கிச் செல்கிறார்கள். தமிழ்
நாட்டில் தொழில் நிலை இல்லாத காரணத்தினால்தான் தமிழ்
அக்கறை எடுத்துக் வளர்ச்சியில் மாநில அரசு எவ்வளவு
இருக்கிறது என்பதை கொண்டாலும் செய்யமுடியாத நிலை
பம் ஏற்பட்டிருக்கிறது தொழிற்சாலைகள் அமைப்பதில் குழப்
நேரத்தில் சொல்லிக்கொள்ள என்று சொல்கிறவர்களுக்கு இந்த
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமாத்திரமல்ல. உரிமங்கள் வழங்குவதில்
ஏற்படுகிறது. உரிமம் வழங்குவதற்காக தாமதம்
கேட்டிருக்கிறோம் என்று மத்திய அரசிடம்
தொழில் துறை அமைச்சர் கொள்கை விளக்க அறிக்கையில்
இந்த உரிமங்களை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.
யை எடுத்துக்கொள்கிற மத்தியில் இருந்து நாம் பெறுகிற முயற்சி
எவ்வளவுதான் கனிவளங்கள் காலகட்டம் இருக்கும்வரை நமக்கு
இருந்தாலும், செல்வங்கள் இருந்தாலும், இயற்கைவளங்கள்
கள். இருந்தாலும் இருந்தாலும் தொழில் விற்பன்னர்
என்பதைத் அவைகளை நிறைவேற்றமுடியாது
கூடிய நிலையில் தெரிவித்துக்கொள்கிறேன். தன்னாட்சி பெறக்
தமிழ்நாட்டில் தொழில் மையங்கள் உருவாகும் நிலையை
கிறேன். ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்

கோவை மாவட்டத்தில், விழுப்புரத்தில் இருக்கிற சணல்
தொழிற்சாலையைப் போல் சணல் பயிர்செய்து,
பரம்பிக்குளம் போன்ற நீர்த்தேக்கங்களில் பவானிசாகர்
சணல் தொழிற்சாலை ஒன்றை சணல் பயிர்செய்து
உருவாக்க வேண்டும்.



1980 ஜுலை 19] [திரு. கோவைத்தம்பி]

நிலை கிடையாது.
மலைகளில் மூங்கில் உற்பத்தியாகும் உற்பத்தியாகும். காகிதத்
துப்பு நிலங்களில்தான் மூங்கில் சூழ்நிலை கோவை
தொழிற்சாலை ஏற்படுத்துவதற்குரிய மானாவாரிப் பயிராக
மாவட்டத்தில் இருக்கிறது. மூங்கிலை பயிர்செய்து கோவையில்
தண்ணீர் இருக்கிற இடங்களில் ஏற்படுத்தவேண்டும் என்று
ரு காகிதத் தொழிற்சாலை
கேட்டுகொள்கிறேன்.

அதேபோல கோவை மாவட்டத்தில்
சர்க்கரை குச்சிவள்ளிக் கிழங்கு இருப்பதுபோல்
அதிகமாகக் கிடைப்பதால் அமராவதியில் என்று
க்ளுக்கோஸ் பாக்டரி ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும் நன்றி கூறி
கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு
விடைபெறுகிறேன், வணக்கம்.

*திரு. என். குப்புசாமி: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, 1980-81 ஆம் ஆண்டிற்கான தொழில், மற்றும்
தொழில் குறித்த மூலதன செலவுகள் மானியக் கோரிக்கையின்
மீதான விவாதத்திலே கலந்துகொண்டு ஒருசில கருத்துக்களைச்
சொல்ல முன்வருகிறேன்.

இன்றைய தினம் புரட்சித் தலைவர்
தமிழ் நாட்டிலே, தொழில்களை ஏற்படுத்தி,
அரசு கிராமப் பகுதிகளிலே மக்களுக்கு வேலைவாய்ப்பு
கிராமப் பகுதியிலே இருக்கின்ற தொழில் கொள்கைகளை
அளிக்கின்ற வகையிலே தனி வருகிறது என்பதை
வகுத்து, இங்கே நிறைவேற்றிக் கொண்டு அந்த நிலையிலே
மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். நடைமுறை சிக்கல்
தொழில் மானியத்தை வரவேற்று, இருக்கின்ற வயிலும் அரசு அளிக்
களைத் தீர்த்து, அவர்களுக்கு பல்வேறு செய்வதன் மூலமாக,
கின்ற உதவிகளை குறித்த காலத்திலே அந்தத் தொழிலுக்
தொழில் முனைய விரும்புகின்றவர்கள் வாய்ப்பு ஏற்படுத்திக்
கான முயற்சியிலே ஈடுபடுவதற்கு கேட்டுக்கொள்கிறேன்.
கொடுக்கவேண்டும் என்று அரசைக்

குறிப்பாக, நமது நாட்டிலே நலிந்துபோன தொழில்
களுக்கு, அதனுடைய காரண காரியங்களை ஆராய்ந்து,
ஒன்று அந்த நலிந்த தொழிலை அரசு எடுத்துக்கொள்ள
வேண்டும் அல்லது நலிந்துபோன தொழிலுக்கான காரண
காரியங்களை ஆராய்ந்து அவர்களுக்கு உதவுகின்ற வகையிலே
ஒரு பிக்சேஷன் இல்லாமல், இதிலே 1,000 ரூபாயிலிருந்து
20,000 வரை உதவுகின்ற நிலையிலே கொள்கை விளக்கத்
திலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அவ்வாறு ஒரு
பிக்சேஷன் அதாவது வரைமுறை இல்லாமல் அந்தத் தொழி
லுக்குத் தேவையான உதவிகளை அரசு செய்ய முன்வர
வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள
ஆசைப்படுகிறேன்.

[திரு. என். குப்புசாமி] [1980 ஜூலை 19

அதே நேரத்திலே இந்த உரிமங்கள் வழங்குகின்ற முறையிலே
பல சிக்கல்கள் இருக்கிறதாகவும், நிதி உதவி பெறுவதிலே
சிக்கல்கள் இருக்கிறதாகவும் நான் இங்கே கோடிட்டு பல
விரும்புகிறேன். இந்த அரசு உரிமங்கள் வழங்குவதற்கும், காட்ட
வழங்குகின்ற பிரச்சனைகளுக்கும் ஒரு கால கட்டத்தை உதவி
வாக்கி, அந்த காலத்திற்குள் இந்த உதவிகளைப் பெறவேண்டும் உரு
என்கிற ஒரு நிலைமையை உருவாக்கித் தர வேண்டுமென்று
நான் உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன்.

அதே நேரத்தில், தொழில் முனைய வருகின்றவர்களுக்கு
எதிர்காலத்திலே நம்பிக்கை ஏற்படுகின்ற வகையிலே
முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதாவது சில
தினம் நமது தொழில் மற்றும் வணிகத் துறை இன்றைய
தொழில் வளர்ச்சியிலே காட்டுகின்ற அக்கறை இயக்குநரகம்,
யிலே காட்டாமல் இருப்பதை நான் இங்கே கோடிட்டுக் வணிகத் துறை
விரும்புகிறேன். மகாராஷ்டிரம் போன்ற காட்ட
தொழிலிலே உற்பத்தியாகின்ற பொருள்களுக்கு, மாநிலங்களிலே
தொழில் கழகமே அவர்களுக்கு விற்பனை அங்குள்ள சிறு
ஏற்படுத்தி, அங்குள்ள சிறு தொழில்கள் செய்கின்ற வசதியை
வாய்ப்பினை உதவி வருகின்றது. முன்னேற்றத்திற்கான
மற்றும் வணிகத் துறை இயக்குநரகமும், அதேபோல், நமது தொழில்
இன்னும் விரிவுபடுத்தி, சிறு தொழில்களில் வணிகத் துறையை
பொருள்களை விற்கின்ற முறையிலே அந்த உற்பத்தியாகின்ற
விரிவுபடுத்தி, உற்பத்தியாகின்ற விற்பனைப் பகுதியை
வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துவதன் பொருள்களை விற்பனை செய்
தொழில் முனைகின்றவர்களுக்கு ஒரு மூலமாக, இந்தத்
என்பதை நான் இந்த நேரத்திலே நம்பிக்கையை உருவாக்கும்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி பல்வேறு வகையிலும், மாநில அளவிலும்,
அளவிலும் ஆலோசனைக் குழுக்கள் அமைத்து மாவட்ட
குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் தொழில் வளர்ச்சிக்
கொள்கை விளக்கக் குறிப்பிலே கோடிட்டு காட்டியிருக்கிறார்கள் என்பதை
இந்த மாநில அளவிலே அமைக்கின்ற குழு ஒரு தொழில்
வாரியமாக அமைத்து, அந்த தொழில் வளர்ச்சி
தொழில் முதலீட்டுக் கழகம், தொழில் வாரியத்திலே,
நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், துறை இயக்குநர், தமிழ்
களின் பிரதிநிதிகளும், அதுபோன்று இதுபோன்ற நிறுவனங்
களின் பிரதிநிதி ஒருவரும், சிறு தொழில் செய்பவர்
பவர்களின் பிரதிநிதி ஒருவரும், நடுத்தர தொழில்கள் செய்
கிராமத் தொழில்களை செய்பவர்களின் குடிசைத் தொழில் போன்ற
அந்தக் குழுவிலே அமைத்திருப்பார்களானால், பிரதிநிதி ஒருவரும்
ஒரு தொழில் வாரியத்தை தமிழகத்திலே உருவாக்க அப்படிப்பட்ட
மென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். வேண்டு



1980 ஜூலை 19] [திரு. என். குப்புசாமி]

(பிற்பகல் 12-10)

அந்தத் தொழில் வளர்ச்சி வாரியம் உருவாகுமானால் மாவட்
டத்தில் தீவிர முகாம்கள் நடத்தி, 'இன்டன்சிவ் காம்ப்' அந்த
தீவிர முகாம்கள் மூலமாக மாவட்டத்தில் இருக்கும் தொழில்
சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து தொழில் முனைய வருபவர்
களுக்கு தேவையான தொழில் நுட்பப் பயிற்சியை அளித்து,
தேவையான உரிமங்கள், மூலப் பொருட்கள் போன்ற உதவிகளை
வாரியத்தின் மூலம் அளித்து மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி
ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். மாவட்ட தொழில் மையங்கள் மூலம்
தீவிர முகாம்களை நடத்தி மாவட்டங்களில் இருக்கும் சாத்தியக்
கூறுகளை விளம்பரப்படுத்தி தொழில் முனைய வருபவர்களுக்குத்
தேவையான உதவிகளை அளிக்க முன்வரவேண்டும்.

தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை அங்கே 'சிப்பாட்'
நிறுவனம் பல்வேறு தொழில்களை ஆரம்பிக்க தேவையான
உதவிகளைச் செய்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் துரை
முருகன் குறிப்பிட்டது போல், ராணிப்பேட்டை தொழிற்பேட்டை
யில் உள்ள தொழில் நிறுவனங்கள் அந்தப் பகுதியில் இருக்கும்
மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்காமல் மற்றப் பகுதிகளில் இருந்து
வருகிறவர்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தருகிறார்கள் என்று
குறிப்பிட்டது போல் இங்கேயும் செய்கிறார்கள். பொதுவாக
ஒரு பகுதியை அரசாங்கம் பின்தங்கிய பகுதி என்று அறிவித்து
அந்தப் பகுதியின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்து
அங்கு தொழில்களை ஆரம்பிக்க அரசு உதவிகள் செய்கிறபோது
அரசு கொடுக்கும் உதவிகள் அனைத்தையும் பெற்றுக்கொண்டு
அந்தப் பகுதி மக்களுடைய முன்னேற்றத்திற்கு எந்தவிதமான
முன்னேற்றமும் ஏற்படாத வகையில் ஹோசூர் பகுதியில்
தொழிலை ஆரம்பிக்க முன்வருகிறவர்கள் அந்தப் பகுதி மக்க
ளுக்கு வேலை தருவதில் முன்னுரிமை அளிக்கவில்லை. டெக்னி
கல் ஓர்க்கர்ஸ், ஸ்கில்டு லேபரர்களைக் கூட அவர்களுடைய
நம்பிக்கைக்குரியவர்களை வைத்துக் கொண்டாலும் கூட,
அன்-ஸ்கில்டு லேபரர்களைப் பொறுத்தவரை அந்தந்தப் பகுதியில்
இருக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில், ஹோசூர்
பகுதியில் தர்மபுரி மாவட்டத்தில் இருக்கும் மக்களுக்கு வேலை
வாய்ப்பளிக்க வேண்டுமென்ற வகையில் அமைச்சர் அவர்கள்
தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டி விரும்பி
கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் ஊரூர், ஊத்தங்கரை பகுதிகளில்
உயர்ரக பருத்தி அதிகமாகச் சாகுபடியாகிறது. அதைப் பயன்
படுத்தி அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்

கும் வகையில் கூட்டுறவு நூற்பாலை ஒன்று அமைத்துக் கொடுக்க
வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த மூன்றாண்டு காலமாக புரட்சித் தலைவர் ஆட்சியில்,
தர்மபுரி மாவட்டம் வறட்சியான மாவட்டம் என்பதைக் கருத்
தில் கொண்டு பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்களை ஏற்படுத்தி
யிருக்கிறார்கள். முள்ளிக்காடு வாளியாறு திட்டம், ஈச்சம்பாடி
நீர்ப்பாசனத் திட்டம், தும்பளஹள்ளி நீர்ப்பாசனத் திட்டம்
போன்ற பல திட்டங்களுக்கு லட்சக் கணக்கான ரூபாய்களைச்
செலவு செய்திருக்கிறார்கள். அதன் காரணமாக அங்கு அதிக
மாக கரும்பு சாகுபடியாகிறது. அந்தக் கரும்பைப் பயன்படுத்தி
அந்த இடத்தில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவ வேண்டு
மென்று வேண்டி, விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஊத்தங்கரை பகுதியில் சிமெண்ட் ஆலை நிறுவ தேவையான
மூலப் பொருள்கள் கிடைக்கின்றன. அதைப் பயன்படுத்தி அங்கு
ஒரு சிமெண்ட் ஆலையை நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். மத்திய அரசினுடைய முதலீடு 1979-ல் நாடு முழுமை
யும் சேர்ந்து மொத்தம் 15,668 கோடி ரூபாயாக இருந்தும் கூட
தமிழ்நாட்டில் அவர்கள் செய்திருக்கும் மூலதனம் வெறும் 616
கோடி ரூபாயாகத்தான் இருக்கிறது.

அது மொத்த அளவிலே 4 சதவீதம் என்று தெரிவித்தார்கள்
முதலிலே 8 சதவீதம் ஆக இருந்த முதலீடு இப்போது 4 சதவீதம்
ஆக குறைந்திருக்கிறது. தமிழ்நாட்டு மக்களும் முன்னேற்ற
மடைய வேண்டுமென்பதைக் கருத்திலே கொண்டு மத்திய அரசு
இந்த முதலீட்டை உயர்த்தி, இந்தப்பகுதியிலே மேலும் தொழில்
கள் வளர்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று
கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

*திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தொழில், பால்வளம் ஆகிய மானியக்
கோரிக்கைகளின் மீது பேசுகின்ற வாய்ப்பைக் கொடுத்ததற்காக
முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய
அமைச்சர் பெருமக்கள் தங்களை இதிலே அதிகமாக ஈடுபடுத்திக்
கொண்டு அதை முன்னேற்ற வேண்டுமென்று அக்கறை காட்டுகிற
தன்மை அவர்கள்வெளியிட்டிருக்கின்ற இந்த வெளியீடுகளிலிருந்து
தென்பட்டாலும் இன்னும் சில யோசனைகளை சொல்ல வேண்
டியவர்களாக நாங்கள் இருக்கிறோம். அண்மையிலே நம்முடைய
பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் திடீரென பல இடங்களிலே
சோதனை செய்து வளமான பால் இல்லை என்று கண்டு அதை
நலமாகக் கொடுக்கச் செய்வதற்கும் அதே நேரத்திலே சில





இடங்களிலே ஆட்கள் இல்லாமல் இருக்கின்ற நிலையைக் கண்டு
அது குறித்து நடவடிக்கை எடுப்பதற்கும் காரியங்கள் ஆற்றி
யிருப்பதை நாங்கள் பாராட்டுகிறோம். இதிலே இன்னும் அதிக
மான கவனம் திரும்புகிறது என்று நான் உணர்ந்திருந்தாலும்,
இன்னும் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உதா
ரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நான் குடியிருக்கிற
தெருவிலே அனைவரும், அவர்களுக்குக் கொடுத்த பால் திறந்து
இருந்தது என்ற தகவலை என்னிடம் நேற்றுத் தெரிவித்தார்கள்.
மாதவரத்திலே மா தவம் செய்து வரம் பெற்று நல்ல பால் தரக்
கூடிய நிலைமையை ஏற்படுத்துவார்கள் என்று அந்தப் பகுதியிலே
உள்ள மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்
அவர்கள் அதைச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

தொழில் பெருகினால் மூலதனம் பெருகும், மூலதனம் பெருகி
னால் தொழில் பெருக்கம் ஏற்படும், தொழில் பெருகினால் வேலை
வாய்ப்புப் பெருகும், வேலை வாய்ப்புப் பெருகினால் வேலை
வாய்ப்புப் பெறுகின்ற ஒவ்வொருவருடைய குடும்பமும் வாழுகிற
நிலைமை ஏற்படுகிறது. இது எந்த நாடும் கடைப்பிடிக்கிற
நிலை தான். ஆனால் எந்தத் துறையிலே அதிகமான கவனம்
செலுத்தினால் அதிகமான பேர்களுக்கு வேலை கொடுக்க
முடியும் என்ற சிந்தனை அரசுக்கு ஏற்பட வேண்டும்.
10, 15 குடும்பங்கள் தொழில்களை தங்கள் கைகளிலே வைத்துக்
கொண்டால் செல்வம் குவியக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும்.
ஆகவே, தொழில்கள் பரவலாக இருந்தால்தான் செல்வமும்
பரவலாக இருக்கும் என்ற தத்துவத்தை மனத்தில் கொண்டு
நம்முடைய அரசு காரியங்களை ஆற்ற வேண்டும். அப்படிச்
செய்தால் செல்வம் பலரிடம் பரவுவதோடு அல்லாமல் ஆங்காங்கு
உள்ள இளைஞர்கள் தொழில்களிலே நல்ல பயிற்சியைப் பெறு
வார்கள். அப்படிப் பயிற்சி பெறுகிறார்கள் என்பதைவிட அவர்
கள் வேலை வாய்ப்பைப் பெற்று செல்வத்தைச் சேர்த்து அவர்
களும் தாங்கள் வாழுகின்ற இடங்களிலே வாழுகின்ற நிலைமை
ஏற்படும். பட்டணத்திற்கு வரவேண்டிய நிலைமை ஏற்படாது,
இந்தக் காரணத்தினால் வீட்டு வசதி, போக்குவரத்துப் பிரச்சி
னைகள் அதிகமாக ஏற்படாமல் இருக்கின்ற நிலைமை உருவாகும்.

சிறு தொழில்சள் பெருக வேண்டுமென்பது குறிக்கோள் என்று
குறிப்பேடுகளிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்குச்
சொல்ல வேண்டுமென்றால் சிறு தொழில்கள் மூலமாகத்தான்
வேலை வாய்ப்பு அதிகமாக ஏற்படும். குறைந்த மூலதனத்தைப்
போட்டு நிறைந்த வேலை வாய்ப்பைத் தருவது சிறு தொழில்
தான். சான்றாகச் சொல்லவேண்டுமென்றால், அம்பத்தூரிலே
தொழிற்பேட்டை அமைந்திருக்கின்றது. அதனுடைய
இன்ப்ராஸ்ட்ரக்சருக்கு அரசாங்கம் கொடுத்தது 7½ கோடி

(திரு. குமரி அனந்தன்) [1980 ஜூலை 19

ரூபாய், பாங்கிக் கடன் கொடுத்தது 10 கோடி ரூபாய், அங்கே
தொழில் வளர்ப்பவர்கள் போட்ட மூலதனம் 2 கோடி ரூபாய்.
இப்படி மொத்தத்தையும் கணக்கிலெடுத்துப் பார்த்தால்
20 கோடி ரூபாய் மூலதனத்தில் 750 தொழில் கூடங்கள் அங்கே
வந்திருக்கின்றன. அங்கே 20 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை
செய்கிறார்கள். 20ஆயிரம் பேர்கள் நேரடியாக வேலை
வாய்ப்பைப் பெறுகிறார்கள் என்பதைத் தவிர, அந்தத் தொழில்
களுக்கு வேண்டிய சிறுசிறு பொருட்களைச் செய்து தருகின்ற
வேத்பட்டறைகளில் மட்டும் 20 ஆயிரம் பேர்கள் வேலை செய்
கிறார்கள். மொத்தம் 40 ஆயிரம் பேர்கள் வேலை வாய்ப்பு
பெறக்கூடிய முறையிலே அங்கே வளர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது
என்பதை மறந்துவிட வேண்டாம். ஏறத்தாழ 30 கோடி ரூபாய்
மதிப்புள்ள பொருள்களை அங்கே அவர்கள் உற்பத்தி செய்கிறார்
கள். அப்படி அவர்கள் உற்பத்தி செய்வதால் ஒன்றரை கோடி
ரூபாய் அரசாங்கத்திற்குஅதிலிருந்து வரியாகவருமானம்வருகிறது.

[பிற்பகல் 12-20.]

அந்த ஒன்றரைக்கோடி ரூபாய் வரி அரசாங்கத்திற்குக் கிடைத்
திருக்கின்ற எளிதான ஒரு வருமானம். அதே நேரத்தில் பெரிய
தொழிற் கூடங்கள் 120 கோடி ரூபாய், 110 கோடி ரூபாய்
என்ற அளவிற்கு மொத்த மூலதனம் ஆகின்ற பெரிய தொழிற்
கூடங்கள், highly sophisticated machines வைத்திருப்ப
தால் 3,000 பேர், 4,000 பேர்களைத்தான் வேலைக்கு அமர்த்த
முடிகிறது. ஆகவே, 120 கோடி ரூபாயை மொத்தமாகப் போட்டு
3,000 பேர், 4,000 பேர்களுக்கு வேலை கொடுக்கின்ற நிலை நம்
நாட்டிற்குப் பொருந்துமா என்று பார்க்க வேண்டும்.
இப்படிப்பட்ட பெரிய தொழிற்சாலைகள் வராமலும் இருந்து
விடக் கூடாது. அப்படிப் பெரிய தொழிற்சாலைகள் வருகின்ற
நேரத்திலே, சின்னத் தொழிற்சாலைகள் அதற்குரிய பொருள்
களைத் தயார் செய்து கொடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்
டும். எந்தெந்தத் தொழிற்சாலைகளை ஆரம்பித்தால் மூலதனம்
குறைவாக இருக்கும், வேலைவாய்ப்பு அதிகமாக இருக்கும்
என்பதைக் கண்டறிய வேண்டும். அதே நேரத்திலே தேவைப்படு
கின்ற பெரிய தொழிற்சாலைகளையும் ஏற்படுத்த வேண்டும்
என்பதிலேயும் முனைந்து நிற்க வேண்டும்.

பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றனவே, அவைகள் மின்
சாரத்தை எவ்வளவு தூரத்திற்குப் பயன்படுத்துகின்றன என்ப
தைப் பாருங்கள். உதாரணத்திற்குச் சொல்லப் போனால்
ஒரு புத்தகத்திலே கொடுக்கப்படும் புள்ளி விவரம் என்னவென்
றால், Madras Aluminium Factory பயன்படுத்தும் மின்
சாரத்தை மட்டும் பயன்படுத்தி அம்பத்தூரிலும், கிண்டியிலும்
இருக்கின்ற அத்தனைத் தொழில் கூடங்களையும் இயக்கலாம்



1980 ஜூலை 19] (திரு. குமரி அனந்தன்)

என்று சொல்கிறார்கள். ஆகவே, ஓரே ஒரு தொழிற்சாலை -
அது தேவைதான்—அந்த அலுமினியம் தொழிற்சாலை இருக்
கிறதே, அதற்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்தைக் கொண்டு
ஏறக்குறைய 950 தொழிற் கூடங்களை இயக்க முடியுமானால்,
20,000 தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க முடியுமானால்,
நாம் அப்படிப்பட்ட தொழிற்சாலைகளுக்கு ஊக்கம் கொடுக்க
வேண்டுமென்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று
பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய தொழிற்சாலைகளைக் கட்டும்போது இன்னொரு
சிக்கல் கூட இருக்கிறது —என்ன அந்தச் சிக்கல் என்றால், புகை
போக்கி மூலமாக வருகின்ற கருமையான —கரும் புகை மற்றும்
அங்கிருந்து வரக்கூடிய கழிவுப் பொருட்கள், கழிவு நீர் சாலை
யிலே ஓடுவது, கால்வாயிலே விழுந்து பக்கத்திலே இருக்கின்ற
நீர் ஊற்றுக்களைக் கெடுத்து, வயல்வெளிகளையும் பாழ்படுத்தப்
பார்க்கிறது.

என்னுடைய தொகுதியாகிய திருவொற்றியூரிலேயே மனிதன்
தாங்கும் அளவிற்கும் மிஞ்சி, விஷ வாயு பரவி இருப்பதாக
விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அந்த அளவிற்கு air pollution
இருந்து கொண்டிருக்கிறது. இவைகளை மனதில் வைத்துப்
பார்த்தால், தொழில் கூடங்களைக் கட்டுகின்ற நேரத்திலேயே,
effluent அவைகளை வெளியே விடாமல் ட்ரீட்மெண்ட்
கொடுத்து, அவைகளிலிருந்து வரும் விஷப் பொருள்களை மற்றப்
பொருள்களாக, உரப் பொருள்களாக மாற்றி வெளியே விடும்
பகுதியை வைத்து ஆரம்பிக்கப்படும் அந்தத் தொழிற்சாலை
களுக்கு மட்டுமே அனுமதி கொடுக்க வேண்டுமென்ற முறையை
அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்
கொள்கிறேன்.

ஆக, அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்தும் பெரிய
தொழிற் சாலைகள் ஒருபக்கம், மிகக் குறைவான அளவிற்கு
மின்சாரத்தைப் பயன்படுத்தும் சிறிய தொழிற்சாலைகள்—3
சதவீதம் மின்சாரத்தை மட்டுமே பயன்படுத்துகின்ற அந்த
ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ்-க்குத் தட்டுப்பாடு இல்லாமல்,
இடையூறு இல்லாமல், இடையீடும் இல்லாமல் எப்பொழுதும்
மின்சாரம் கிடைக்கின்ற சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்கித்
தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர்
சுட்டிக் காட்டினார். ஏனென்றால் கோவையிலே அதிகமாக
இந்தப் பிரச்சினை இருப்பதால் சுட்டிக் காட்டினார். வேண்டிய
தகடுகள் —ஸ்டீல் எந்த அளவிற்குக் கிடைக்கிறது என்றால்,
நமக்கு எவ்வளவு ஸ்டீல் ஷீட்ஸ் வேண்டுமோ அந்த அளவிற்குக்

(திரு. குமரி அனந்தன்) [1980 ஜூலை 19

கிடைப்பதில்லை. அந்த அளவிற்குக் கிடைப்பதில்லை என்றால்,
அதற்கு என்ன காரணம்? பஞ்சாப் போன்ற மாநிலங்களில்
அதிகமாகக் கிடைக்க, நம்முடைய மாநிலத்தில் குறைவாக இருப்ப
தற்கு ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். அது சரியா தவறா
என்பதை அரசாங்கம்தான் ஆராய்ந்து பார்க்க வேண்டும். மற்ற
மாநிலங்களில், inflated staistics கொடுப்பதாகச் சொல்கி
றார்கள். எவ்வளவு தேவைப்படுகிறதோ அதற்குமேலே புள்ளி
விவரத்தைக் கொடுத்து, எங்களுக்கு இவ்வளவு தேவைப்படு
கிறது என்று அங்கிருக்கின்ற அந்த டிபார்ட்மெண்ட் எழுதி,
அவர்கள் கொஞ்சம் குறைப்பதைக் குறைத்து, எப்படிக் கடை
வியாபாரத்தில் முதலில் அதிகமாக விலையைச் சொல்லி, பிறகு
கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து, பிறகு மன நிம்மதியோடு
வருகிறார்களோ அதைப்போல, மத்திய அரசாங்கம் கொடுக்கக்
கூடிய முறை இருப்பதாகச் சொல்லுகிறார்கள், அது உண்மையா
பொய்யா என்பதை —நான் திருத்திக் கொள்கிறேன். அன்பார்லி
மெண்டரி என்று வந்து விடக்கூடாதே என்பதற்காக மாற்றிக்
கொள்கிறேன். —அது உண்மையா அல்லவா என்பதை விசாரிக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட
பாணியை நாமும் பின்பற்ற வேண்டுமென்று சொல்லவில்லை.
ஆனால், மற்றவர்கள் இதைச் சாதகமாகப் பயன்படுத்திக்
கொள்வதாகக் கருதுகிறேன். அவர்களுடைய தேவைக்கு மேற்
பட்டு அங்கே கொடுப்பதால், இங்கே நியாயமான விலைக்குக்
கிடைக்காமல் அநியாய விலைக்கு —கள்ள மார்க்கெட்டில் தாராள
மாகக் கிடைக்கிறது. சிட்கோ என்ற நிறுவனத்தில் —சிறு
தொழில்களுக்காக உதவுகின்ற நிறுவனத்தில் ஸ்டீல் விலை ஒரு
டன் வாங்க வேண்டுமென்றால் 3,500 ரூபாய் கொடுக்க வேண்டி
யிருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் Hindustan Steels
—இடத்தில் நேரடியாகப் பெறுவது என்றால் 3,200 ரூபாய்க்குக்
கிடைக்கிறது. சிறு தொழில்களுக்கு உதவுகின்ற இடத்தில்
300 ரூபாய் அதிகமாக வைத்து விற்கிறார்கள். ஆனால்,
Hindustan Steels-லே 3,200 ரூபாய்க்குக் கிடைக்கிறது. அவர்
களுக்குக் கிடைக்காத காரணத்தால் வெளியே வாங்குவது என்
றால் 5,400 ரூபாய்க்கு விற்கப்படுவது மட்டுமல்ல; கூவி
விற்கப்படுகிறது. அந்த அளவுக்கு அது கிடைக்கிறது என்று
சொன்னால், எங்கோ தேவைக்கு மேலே அதை வாங்கி
வைத்திருக்கிறார்கள் என்பதுதான் இதிலேயிருந்து தெரிகிற
தெளிவு. அதை நமது அரசாங்கம் கணக்கிலே எடுத்துக் கொண்டு
மத்திய அரசாங்கத்திடம் அதைப் பற்றிய நமது எண்ணத்தை,
நமது கவலையைத் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்

அதே நேரத்திலே இன்னொன்றை நாம் அடிக்கடி சொல்லி
வருகிறோம். இங்கேயிருக்கின்ற தொழிற்சாலைகள் எல்லாம்
கிராமப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டுமென்று சொல்கிறோம்.



1980 ஜூலை 19] (திரு. குமரி அனந்தன்)

ஆனால், கிராமப் பகுதிகளுக்குப் போகின்ற அந்தச் சில தொழிற்
சாலைகளுக்கு மின்சாரம் கிடைப்பது என்பது குதிரைக் கொம்
பாக இருக்கிறது. எனவே, அவர்கள் தொழிற்சாலைக் கட்டி
வைத்துவிட்டு திண்டாடுவது எந்த வகையிலே நியாயமாகும்?
நமது மக்களுக்கும் நன்மை பயக்கும் என்பதனைச் சிந்தித்துப்
பார்க்க வேண்டும்.

அதைப் போல, சிறு தொழில் சேவை மையம் என்ற ஒரு
மையம் மத்திய அரசாங்கத்தால் நடத்தப்படுகிறது. இன்றைக்கு
மதுரையிலே ஒரு எக்ஸ்டென்ஷன் சென்டர் வேண்டுமென்று
கேட்டிருக்கிறார்கள், நமது அரசாங்கமும் கேட்டிருக்கிறது.
மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி அதனை உடனே நீங்கள்
வாங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலே ஒரு நிலையம் கோவையிலே அனுமதிக்கப்
பட்டிருக்கிறது. ஆனால், அனுமதிக்கப்பட்ட அந்த நிலையத்
திற்கு ஆட்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை யென்பதையும்
உங்கள் நினைவுக்கு கொண்டு வரவிரும்புகிறேன்.

இன்னும் ஒரு செய்தி, தூத்துக்குடியிலேயிருந்து மட்டும்
ஏறத்தாழ 60 மூலிகைப் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்று
மதி செய்யப்படுகின்றன. வெளிநாட்டுக்காரர்கள் வந்து,
உட்கார்ந்து கொண்டு, 60 மூலிகைப் பொருள்களை வாங்கிச்
செல்கிறார்கள். அந்த 60 மூலிகைப் பொருள்களையும் நமது
நாட்டிலேயே நாம் மருந்தாகத் தயாரித்தால், தொழில் வளமும்,
வேலை வாய்ப்பும் கிடைக்கும். உதாரணத்திற்கு நில
ஆவரை என்று சொல்கின்ற SENNA, நித்திய கல்யாணி என்று
சொல்கின்ற CHLORIA SUPERIA, சர்ப்பகாந்தி என்று சொல்
கின்ற SERPENTINA இப்படிப்பட்டவைகளெல்லாம் வெளி
நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு, அதன்மூலமாக அங்கே
யிருந்து உயிர்காக்கும் மருந்தாக அது இங்கே வந்து, மூலிகைகளை
அனுப்பி, உயிர் காக்கும் மருந்துகளாக அங்கேயிருந்து இங்கே
வந்து, மக்களுடைய பணத்தைக் கொள்ளை அடித்துக் கொண்
டிருப்பதைப் போன்ற ஒரு சூழ்நிலையைத் தவிர்த்து, இங்கேயே,
அவைகளை உற்பத்தி செய்கின்ற இடத்திலேயே, மருந்துகளை
உற்பத்தி செய்தால், விவசாயிகளுக்கும் நிவாரணம் கிடைக்
கும், தொழிற்சாலைகளும் உண்டாகும், வேலை வாய்ப்பும்
கிடைக்கும் என்று சொல்கின்ற வகையிலே, நீங்கள் அதனைச்
சிந்திக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு கருத்து. சிறு தொழில்களைச் சிறப்பாக
நடத்துகிறவர்களைக் கூப்பிட்டு, அரசு நடத்துகின்ற தொழில்
களிலே மேற்பார்வையாளர்களாகவாவது வைக்கலாமா?
ஆக நடத்துகின்ற சிறு தொழில் முதலாளிகளை மிகச் சிறப்
பாக நடத்துகின்றவர்களைக் கூப்பிட்டு, அரசு நடத்துகின்ற
தொழிற்சாலைகளுக்கு மேற்பார்வையாளர்களாவாவது.

ஆலோசகர்களாகவாவது வைத்தால், அரசு நடத்துகின்ற தொழிற்
கூடங்கள் நஷ்டம் இல்லாமல் நடக்குமா, என்று—அவர்களுடைய
இலவச ஆலோசனையைப் பெற முடியுமா என்று நீங்கள் சிந்திக்க
வேண்டும்.

பெரிய தொழிற்சாலைகளிலேயிருந்து வரி கட்டுகிறவர்கள்
1 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்து, ரூ. 15 இலட்சம் வரி
கட்டுகிறார்கள் என்று சொன்னால், அவர்கள் இன்னொரு
தொழிற்சாலை ஆரம்பிப்பார்களானால், அதிக வேலை
வாய்ப்பு கொடுக்கின்ற ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பார்களா
னால், அவர்கள் கொடுக்கின்ற ரூ. 15 இலட்சத்திலே ரூ. 10
இலட்சத்தைக் கடனாகக் கேட்டாலும் கொடுத்தால் பரவா
யில்லை. ஏனென்றால், நாம் ஒவ்வொரு படித்த பட்டதாரிக்கும்
மற்றவர்களுக்கும், ரூ. 50 கொடுப்பது நல்ல திட்டம் என்றாலும்,
நாம் கொடுத்துக் கொண்டே இருக்கவேண்டிய இந்த நேரத்தில்,
ரூ. 15 இலட்சத்திலே, ரூ. 10 இலட்சத்தை அவர்கள் கடனாகக்
கேட்டால் கொடுத்து, ஒரு தொழிற்சாலையைத் திறப்பார்களா
னால் அதனையும் நாம் அனுமதிக்க வேண்டுமென்று உங்களை
அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அதிக நேரம் எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற
ாரணத்திற்காக, முடிப்பதற்கு முன் ஓரே ஒரு சின்ன வேண்டு
கோள். தமிழகத்திலே எந்த, எந்த இடத்திலே, என்ன,
என்ன பொருள் கிடைக்கின்றது என்பதைப் பார்த்து, அதற்குத்
தகுந்தவாறு நாம் சில சலுகைகளையும் அளிக்க வேண்டும், சில
தொழில்களையும் ஆரம்பிக்க வேண்டும். கையால் செய்கின்ற
தீப் பெட்டி போன்றவைகளுக்கு வரி விலக்கு அளித்தால் ஏராள
மாக உற்பத்தி செய்கின்ற வாய்ப்பு ஏற்படும்.

அதைப் போலே, தர்மபுரி மாவட்டம் போன்ற இடங்களிலே
மாம்பழங்கள் ஏராளமாக உற்பத்தியாகின்றன. பழச்சாறு
தயாரிப்பு தொழிற்சாலைப் போன்றவைகளை ஆரம்பிக்க
ஏற்பாடு செய்யலாம்.

நீலகிரி மலையிலே, கூடலூரிலே இஞ்சி கிடைக்கிறது. இஞ்சிச்
சாறு தொழிற்சாலைக் கூட நம்மிடத்திலே இல்லை. தென்
னிந்தியாவிலே, கேரளாவிலே, காலிக்கட்டிலே இஞ்சிச் சாறு
தயார் செய்கின்ற ஒரு தொழிற்சாலை இருக்கிறது. இப்பொழுது
இஞ்சிச் சாறு என்பது நமது நாட்டு அம்மி என்று சொல்கின்ற
தொழிற்சாலையிலேயேதான் நமது தாய்மார்கள் உற்பத்தி
செய்து வருகிறார்களே தவிர, வேறு தொழிற்சாலைகளில் பெரும்
அளவிலே உற்பத்தி செய்யவில்லை.



கடுக்காய் கல்வராயன் மலையிலே கிடைக்கிறது. அந்தக்
கடுக்காயை அதிக அளவில் உற்பத்திச் செய்து, அதிலேயிருந்து
எண்ணெய் எடுத்தால், அந்த ரசத்தை எடுத்தால், திரவத்தை
எடுத்தால், வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யலாம். இப்பொழுது
ஒரு கிலோ ரூ. 200-க்கு வெளிநாட்டிலேயிருந்து வாங்கி வரு
கிறோம். நமது நாட்டிலே உற்பத்தியாகின்ற கடுக்காயை
கொண்டு நாம் தைலம் எடுக்காத காரணத்தாலே, ரூ. 200
கொடுத்து ஒரு கிலோ வெளிநாட்டிலேயிருந்து வாங்கி வருகி
றோம் என்று சொன்னால், இன்னும் எத்தனை, எத்தனை இடங்
களிலே நமது கவனம் செலுத்தப்பட வேண்டி இருக்கிறது, நமது
கை உழைக்க வேண்டியிருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்த்து,
தொழில் வளத்தைப் பெருக்க வேண்டுமென்று அன்போடு
கேட்டு அமைகிறேன், வணக்கம்.

[பிற்பகல் 12-30.]

திரு. எம். சின்னராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே,
தொழில் துறை அமைச்சரால் கொண்டுவரப்பட்டுள்ள தொழில்
துறை, பால் வளத் துறை, ஆகிய மானியக்கோரிக்கைகள்
மீது ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கோவை மாவட்டம் தொழில் துறையில் சிறந்த மாவட்டம்
என்ற முறையிலும், அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற
முறையிலும் நான் இந்த மானியக் கோரிக்கைகளின் மீது பேசு
வதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

இங்கே தொழில் கொள்கை இல்லை என்றும், தொழில்
வளர்ச்சி இல்லை என்றும், அதற்கான இரண்டு காரணங்களை
வைத்தார்கள். ஒன்று-தொழில் வளம் பற்றிய கொள்கைகளில்
சிறந்த கொள்கையை இந்த அரசு கடைபிடிக்க வில்லை என்றும்,
தொழில் வளர்ச்சிக்கான ஆக்கப் பூர்வமான ஆதரவை நாம்
கொடுக்கவில்லையென்றும் அவர்கள் குற்றம் சாட்டினார்கள்.
அதே நேரத்தில், தொழில் அமைதியை நாம் காக்கவில்லை.
அதனால், சில தனிப்பட்ட தொழில் முதலாளிகள் வேறு மாநிலங்
களுக்குச் செல்கிற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்றும் அவர்
கள் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். இந்த மூன்று குற்றங்களை
யும் நான் ஆதாரமற்றவை என்று மறுத்து, ஒரு சில கருத்துக்களை
இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில், இந்தக் கொள்கை
விளக்கக் குறிப்பை முழுவதும் படிக்கவில்லையென்றாலும்,
முதல் சில பக்கங்களைப் புரட்டினால் அரசாங்கம் கொண்டு
இருக்கிற தொழில் கொள்கை, அது எடுத்துக்கொண்டு இருக்கிற
நடவடிக்கைகளை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

(திரு. எம். சின்னராஜ்) [1980 ஜூலை 19

தனியார் தொழிலை ஊக்குவிப்பது, கூட்டுறவுத் துறையில் புதி
தாகத் தொழில்களைப் புகுத்துவது, சிறு தொழில்களை ஏற்
படுத்தி தொழில்களை மேற்கொள்வது என்கிற கொள்கைகளை
கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தி வருகிறதைப் போல
இங்கே குறிட்பிட்டுக் காட்டப்பட்டு இருக்கிறது. அவர்கள் கூறத்
தக்க குற்றச்சாட்டுகள் உண்மை அல்ல என்கிற வகையில், இன்று
ஏற்பட்டு இருக்கிற புதிய தொழில்கள் குறிப்பிட்டுக் காட்டப்
பட்டு இருக்கின்றன.

5,632 சிறு தொழில் மையங்கள் புதிதாக மாவட்ட தொழில்
மையங்கள் மூலம் துவக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக
பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டு
இருக்கிறது. அதே முறையில் தனிப்பட்ட தொழிலைத் துவங்குவ
தற்கும் பல நிதிக் குழுக்கள் மூலம் அதிகமாகக் கடன் வழங்கப்
பட்டிருக்கிறது. ஆகவே தனியார் தொழில் தொடங்குவதற்காக
தனிப்பட்ட தொழில் துவங்குவதற்காக ஊக்கம் அளிக்கப்பட்
டிருக்கிறது. அரசுத் துறையிலேயும் கூட்டுறவுத் துறையிலேயும்
உள்ளவர்களுக்கு ஊக்கம் அளித்திருக்கிறோம் என்பதை
கொள்கை விளக்கக் குறிப்பிலே இருந்து அறிய முடிகிறது. அதை
எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அறியவேண்டும் என்பதை இந்த
நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நம் தொழில் துறை
யைப் பொறுத்தவரையில் மைய அரசின் கொள்கையின் அடிப்படை
யில் பெரும் தொழில்கள் முன்னேற வேண்டிய கட்டாயம்
இருக்கிறது. நம் மூலதனக் கடன் உதவியும், மத்திய
அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் கூடுதலாக
மின்சார வசதி, இரும்பு உருக்கு போன்றவை நிலக்கரி, ரயில்
வேகன்கள், டீசல், சிமெண்ட் போன்றவைகளை நமக்கு ஈட்டித்
தரும் பொறுப்பு மத்திய சர்க்காரின் கையில் இருப்பதால்,
தொழில் வளர்ச்சிக்கு நாம் எடுத்துக் கொள்ளும் முயற்சி, மத்திய
அரசாங்கத்தின் ஆக்கப்பூர்வமான ஆதரவு இருந்தால் தான்
நாம் சீரிய முறையிலே வளர்ச்சி அடையமுடியும் என்று சொல்
லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் நம்மிடமிருந்து கைவிட்டுச் சென்ற சில
தொழில்களை எல்லாம் குறிப்பிட்டார்கள். மத்திய அரசாங்
கத்தைப் பொறுத்தவரையில் பலகோடி பெருமான தொழிற்
சாலைகளை துவக்கியிருக்கிறார்கள். இன்னும் கூட அவர்கள்
துவக்கயிருக்கும் தொழில்களை கோவை மாவட்டத்திலேயும்,
பிற மாவட்டங்களிலும் பின்தங்கிய மாவட்டங்களிலும் துவக்க
மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், குறிப்பாக இந்திரா
காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களைக் கேட்டுக்கொள்
கிறேன். அதே நேரத்தில் இங்கே தொழில் அமைதி இல்லை
என்று கூறுகிற வகையில் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்
அவர்கள் லட்சுமி மில்லைப் பற்றிக் குறிப்பிட்டார்கள் They



1980 ஜூலை 19] (திரு. எம், சின்னராஜ்)

are having a second thought என்று குறிப்பிட்டார்கள். நான்
அவர்களுடைய நிறுவனங்களை, கோவை மாவட்டத்தில் இருக்கிற
காரணத்தால் லட்சுமி மில்ஸ் நிறுவனங்களைப் பற்றி அறிவேன்.
அந்த நிறுவனங்களைப் பொறுத்த அளவில் அவர்களுடைய
தொழில் உறவு நீண்ட நெடுங்காலமாக வளர்க்கப்பட்டிருக்கிறது.
கம்யூனிஸ்ட் கட்சித் தோழராக இருந்தாலும்கூட திரு. ரமணி
அவர்கள் போன்றவர்கள் இயக்கங்கள் நடத்தி போராடி வந்தால்
கூட அந்த லட்சுமி மில்லில் தொழில் அமைதியின்மை ஏற்பட்டதே
கிடையாது. அப்படிப்பட்ட அவர்களிடம் செக்கன்டு தாட்
இருக்கிறது என்று சொன்னால் அதற்கு வேறு காரணம்தான்
இருக்குமே தவிர, தொழில் அமைதி இன்மை காரணமாக இருக்க
முடியாது என்பதை தெளிவாகக் கூறிக்கொள்கிறேன். ஆகவே
தனியார் தொழில் நடத்துகிறவர்கள் வேறு மாநிலத்திற்குப்
போவதற்கு இந்த அரசாங்கம் பொறுப்பல்ல. தொழில் அமைதி
யின்மையும் பொறுப்பல்ல என்பதை அவர்கள் உணர வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் மூலதனங்களும்
மற்ற வசதிகளும் ஏற்படுத்த இந்த அரசாங்கம் பின்வாங்கவில்லை
என்று கூறிக்கொள்கிறேன். கோவை மாவட்டத்தைப் பொறுத்த
வரையில் பஞ்சாலைத் தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும்.

அங்கே இன்று தொழில் கல்விக்காக பல கல்லூரிகள் இருந்
தாலும், டெக்ஸ்டைல் படிப்பை சொல்லித்தர ஏற்பாடு செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இருக்கின்ற ஐ.டி.ஐ.
அங்கே பல தொழில் கல்வியைக் கற்றுக் கொடுத்தாலுங்கூட
பஞ்சாலைகளிலே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு தொழிற்
கல்வியைப் பெற்றுத்தருகிற வகையில் புதிதாக எடுக்கப்படும்
ஆட்களுக்கு நல்ல டெக்கினிக்கல் குவாலிபிகேஷன் ஏற்படுகிற
வகையில் ஐ. டி. ஐ. ஒன்றைப் புதிதாக துவங்க வேண்டும்
என்றும் தொழிலாளர்களுக்காக ஒரு டெக்னிக்கல் இன்ஸ்டிடூட்
துவங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் பெரும் தொழில் என்ற முறையில்
குனியமுத்தூரில் சர்க்கரை ஆலை ஏற்படுத்துவதற்கு கடந்த
காலத்தில் பங்குத் தொகை வாங்கப்பட்டு, அது இன்னும் துவக்கப்
படாமல் இருக்கிறது. அங்கே கரும்பு பயிரிடக்கூடிய விவசாயி
கள் பக்கத்தில் உள்ள சித்தூர் கிராமத்தில் உள்ள கரும்பு ஆலைக்கு
அதனை எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. சில நேரங்களில்
அவர்கள் வாங்க மறுத்துவிடுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி
விவசாயிகளின் துயரைப் போக்கும் வகையில் கூட்டுறவுத் துறை
யில் அந்த சர்க்கரை ஆலையைத் துவக்க அரசு உடனடியாக
நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

(திரு. எம். சின்னராஜ்) [1980 ஜூலை 19

கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கே
இருக்கிற சிறு தொழிலுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் மத்திய
அரசோடு விவாதித்து தேவையான மூலப் பொருள்களை வாங்கித்
தருவதற்கு நம்முடைய அரசு முயற்சிக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

பால் வளத்துறையைப் பற்றி எடுத்துச் சொல்ல விரும்பு
கிறேன். அந்த ஒன்றியத்தின் துணைத் தலைவராக 2½ ஆண்டு
காலம் இருந்தேன் என்கிற காரணத்தால் அதில் உள்ள சில குறை
பாடுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனந்த் பாணியில்
அந்தச் சங்கங்களை மாற்றுவதற்கு நாம் கொள்கை அளவில்
ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் பழைய சங்கங்கள்
இன்னும் முன்மாதிரியே இருக்கின்றன. அதையும் ஆனந்த் பாணியில்
விரைவில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு அதிகாரிகள் இன்னும் அந்தச் சங்கங்கள் தங்கள்
ஆதிக்கத்தின் கீழ் இருக்க வேண்டும் என்று அபிப்பிராயம்
வைத்துக் கொண்டு இருப்பதாகத் தெரிகிறது. எப்போது அர
சாங்கம் ஒரு கொள்கை முடிவு எடுத்து விட்டதோ, அதன் பிறகு
இத்தகைய கருத்துக்கு இடம் இல்லை. ஆகவே அவற்றை விரை
வில் ஆனந்த் முறை திட்டமாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். ஆங்காங்கு அதிலே இருக்கும் சிறு சிறு குறைகளை
அகற்றுவதன் மூலம், நாட்டில் வெண்மைப் புரட்சி ஏற்படுத்த
வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை
அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கிற மானியக்
கோரிக்கைகள் மீது கொடுக்கப்பட்டு இருக்கின்ற வெட்டுத்
தீர்மானங்களை ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூறு
வதற்கு முற்படுகிறேன். தொழில் துறையைப் பொறுத்த
வரையில், இன்றைக்கு நம்முடைய தொழில் துறை முறைப்படி
இன்னும் சிறப்பாகச் செயல்பட வேண்டியிருக்கிறது என்பதை
நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தொழில் முன்னேற்றம் இந்த மாநிலத்தில் அதிகமாக வேண்டு
மானால், அந்தத் தொழில் துறையின் ஒத்துழைப்பு எந்த அள
விற்கு தொழில் அதிபர்களுக்கும், சிறு தொழில் முனைவர்களுக்
கும் கிடைக்கிறதோ அந்த அளவிற்குத்தான் இந்த மாநிலத்தில்
தொழில் வளரும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்
டிருக்கிறேன். பெரிய தொழிலாக இருந்தாலும் சரி, சிறிய தொழி
லாக இருந்தாலும் சரி, அவைகள் சரியான முறையில் செயல்
பட அரசு உதவி செய்திட வேண்டும் என்று சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.



1980 ஜூலை 19] (திரு. பொ. விஜயராகவன்)

இன்று காலையில் கூட இங்கே பல பிரச்னைகள் எழுப்பப்பட்
டன. உதாரணமாக அசோக் லேலண்ட் நிறுவனம் —பேருந்து
களுக்கான சேசிஸ் தயாரிக்கும் தொழிற்சாலை —பற்றிய பிரச்
சினை எழுப்பப்பட்டது. அந்தத் தொழிற்சாலையைப் பற்றி
நான் அறிந்த வரையில் தெரிவித்துக் கொள்கிறேன் அங்கே ஒரு
ஆண்டுக்கு 900 சேசிஸ் என்ற அளவிற்கு உற்பத்தி செய்யப்படு
கிறது. அதை அவர்கள் ஏறத்தாழ 3500 என்கிற அளவிற்கு
அதிகப்படுத்த வேண்டும் என்ற அளவில் உயர்த்துவதற்கு அந்தத்
தொழிற்சாலை திட்டம் தீட்டியிருப்பதாக நான் அறிகிறேன்.

அப்படி திட்டங்களை அவர்கள் தீட்டியிருப்பார்களானால்
அரசாங்கம் அந்தத் திட்டங்கள் இந்த மாநிலத்திலேயே நிறை
வேற்றப்படுகிற அளவிற்கு அவர்களுக்கு உரிய ஏற்பாடுகளையும்
வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். காரணம், தற்போது 900 சேசிஸ் தயாரிக்கும்
தொழிற்சாலை, மூன்று மடங்கு அளவிற்கு தன்னுடைய உற்பத்
தித்திறனை அதிகரித்துக் கொள்ளப் போகிறது என்று சொல்கிற
போது பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை
வாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. அந்த வகையில்
நம்முடைய மாநிலத்தில் வேலை வாய்ப்பு பெருகுவதற்கு வழி
இருக்கிறது. அதன் மூலம் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும்
வாய்ப்பு ஏற்படுகிறது என்பதை இந்த அரசாங்கம் எண்ணிப்
பார்த்து எந்த அளவிற்கு அந்தத் தொழிற்சாலைக்கு ஊக்கமும்
உதவியும் செய்ய முடியுமோ அதனைச் செய்ய வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று கனரகத் தொழில்கள் நம்நாட்டில் பெருகினால்,
அதைச் சுற்றி அதிக சிறு சிறு தொழில்கள் வளரவும்,
அதன் மூலம் படித்தவர்கள், வேலைஅற்று இருக்கிறவர்கள் கூட
தாங்களாகவே சொந்தத் தொழில் தொடங்கவும் சூழ்நிலை
ஏற்படும் என்பதை இந்த அரசு உன்னிப்பாகக் கவனித்து,
உன்னிப்பாக எண்ணிப்பார்த்து, இந்த மாநிலத்தில் அந்த அசோக்
லேலண்ட் 3,600 சேசிஸ் தயாரிக்கும் திட்டத்தை நடைமுறைப்
படுத்த எல்லாவகையான முயற்சிகளையும் எடுத்துக் கொள்ள
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12.40]

இன்னொன்று, தொழில் தொடங்க யார் முன்வந்தாலும்,
பெரும் தொழிலாக இருந்தாலும் சரி,
சிறு தொழிலாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அரசாங்கம்
செய்து கொடுக்க முன்வர வேண்டும். குறிப்பாக சிறு தொழில்
தொடங்க வருகின்ற தொழில் அதிபர்கள் படித்து பட்டம் பெற்று
அதிலும் எஞ்சினீயரிங் பட்டம் பெற்று வருகின்ற இளைஞர்களாக

இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்படுகின்ற சிரமங்களை இந்த அரசு உன்னிப்பாக கவனித்து, ஆவன செய்ய வேண்டும். புதிதாக தொழில் தொடங்க வருகின்றவர்களுக்கு ஏற்படுகின்ற நடைமுறை சிக்கல்களை உணர்ந்து, அதை எவ்வளவுக்குக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்கு குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொழில் பேட்டை இல்லாத இடங்களில் சிறு சிறு தொழில்களைத் தொடங்க முன்வந்தால் அவர்களுக்கு ஏற்படுகிற சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. ஒரு முறை, இருமுறை தொழில் தொடங்க முன்வந்து, அதில் இருக்கிற இன்னல்களைப் பார்த்து, இங்கே தொழில் தொடங்க முடியாது என்று சொல்லி ஓடிப்போகிற சூழ்நிலை இந்த மாநிலத்தில் இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், ஒரு தொழிலைத் தொடங்க வேண்டுமானால் முதலில் பஞ்சாயத்து லைசென்ஸ் அல்லது முனிசிபாலிட்டி லைசென்ஸ் வாங்க வேண்டும். அதன்பிறகு சுகாதார அதிகாரியிடம் சென்று நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட் வாங்க வேண்டும். அதற்குப் பின்னால் மின்சார இலாகாவுக்குப் போய் மின்சாரம் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதற்கு நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட் வாங்க வேண்டும். இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் இருப்பதால் தொழில் தொடங்க திட்டமிட்ட ஒரு மாத காலத்திற்குள்ளாக தொடங்க முடியாமல் போனால் திட்டமிட்ட காலத்திலிருக்கிற விலைவாசி, பின்னால் பல மாதங்கள் கழித்து அல்லது ஒன்றிரண்டு ஆண்டுகள் கழித்து தொடங்கப் போகும் காலத்திலிருக்கிற விலைவாசி இந்த இரண்டுக்கும் இருக்கிற மாற்றத்தினால் தொழில் தொடங்க வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட காரணங்களை , எல்லாம் கருத்திற்கொண்டு, 5 எச்.பி., 10 எச்.பி. திறனுள்ள சிறுதொழில்களுக்கு ஒரு மாதத்திற்குள்ளாக தொடங்க, பிராஜெக்ட் ரிப்போர்ட் கொடுத்து ஒரு மாதத்திற்குள்ளாக தொடங்க எல்லாவற்றையும் செய்து கொடுக்கும் வகையில் தொழில் துறை நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதிகமான தொழில்களைத் தொடங்க வாய்ப்பு ஏற்படும்.

அதைப் போல தொழில்களுக்கு பண உதவி அளிக்கின்ற அரசாங்க நிறுவனங்கள் காலதாமதம் செய்யாமல் விரைவாக வேண்டிய நிதி உதவிகளைச் செய்து கொடுக்க முயற்சிகளை எடுத்துக் கொண்டால்தான், அதற்கும் தொழில் துறை வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தால்தான் புதிய தொழில்களை தொடங்க பலர் முன்வருவார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அது தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. அந்த மாவட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க இந்த அரசு மத்திய அரசோடு வாதாடி, அந்த அறிவிப்பைப் பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. கன்னியாகுமரி மாவட்டத்தில் கனரகத் தொழிற்சாலை என்கிற நிலையில் எதுவுமே இல்லை. இன்றைக்கு பார்க்கிறோம். ஒரு சில வருஷங்களுக்கு முன்னால் ஒரு பெரிய ரப்பர் தொழிற்சாலையை இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்படுத்தி அதிலே பல இலட்சம் ரூபாயை அரசாங்கம் இழந்திருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ரப்பர் அதிகமாக உற்பத்தியாகிற கன்னியாகுமரி மாவட்டத்தில் 'டிட்கோ' அல்லது வேறு அரசாங்க நிதி உதவி அளிக்கும் கழகங்கள் மூலம் உதவி பெற்று டயர் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதைப்போல, இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் தொழிலை விரிவாக்கம் செய்ய இன்னொரு தொழிற்சாலையை அமைக்கப் போவதாகச் சொல்லுகிறார்கள். அதைப்போல இந்துஸ்தான் போட்டோ நிறுவனம் அதனுடைய தொழிலை விரிவுபடுத்தும் சூழ்நிலை இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்தத் தொழில்களில் ஏதாவது ஒன்றையாவது கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மணவாளக்குறிச்சியில் 'இந்தியன் ரேர் எர்த்' நிறுவனம் பல்வேறு கனிவளப் பொருட்களை உற்பத்தி செய்கிறது. இப்போது டைட்டானியம் குளோரைடு, டைட்டானியம் ஆக்சைடு, டைட்டானியம் மெட்டல் போன்ற பொருட்களை நம்முடைய நாட்டுக்கு வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறோம். அதற்குப் பதிலாக அந்த இந்தியன் ரேர் எர்த் நிறுவனம் தயாரிக்கின்ற கனிவளப் பொருட்களை அடிப்படையாக வைத்து இறக்குமதியாகின்ற பொருட்களை தயாரித்தால் அந்நியச் செலவாணி மிச்சமாகும். ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். அதை மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செய்வதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பொ. விஜயராகவன்] [1980 ஜூலை 19

அடுத்து எங்களுடைய மாவட்டத்தைப்
தென்னை நார் சம்பந்தப்பட்ட கயிற்றுத் பெறுத்தவரையில்
அதிகமாகப் பரவி இருக்கின்றது. ஆனால்இன்றைக்கு தொழில் மிகவும்
நிலைமை என்னவென்றால் நெல்லை இருக்கின்ற
கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தென்னை நார் மாவட்டத்திலிருந்து
கூடாது என்ற அளவிலே அரசாங்கம் ஒரு கொண்டு செல்லக்
கிறது. நான் பலமுறை இந்த தடையை விதித்திருக்
யிருக்கிறேன் இதுபற்றி. ஆனால் மாமன்றத்தில் எடுத்துக் கூறி
யை நீக்குவதற்கான ஒரு இது வரையில் அந்தத் தடை
வில்லை. ஆகவே இருக்கக்கூடிய உத்தரவை இந்த அரசு பிறப்பிக்க
யிரக்கணக்கான தொழில் நிறுவனங்களும், பல்லா
செய்வதற்கான தொழிலாளர்களும் தாங்கள் வேலை
அவதிப்படுகிறார்கள். மூலப்பொருள் கிடைக்காத காரணத்தினால்
மென்று கேட்டுக் ஆகவே அந்தத் தடையை நீக்க வேண்டு
கூறி முடித்துக்கொள்கிறேன். கொண்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் : மாண்புமிகு
தலைவரவர்களே, மாண்புமிகு சபைத்
கொண்டு வந்திருக்கின்ற மானியக்கோரிக்கைகளின் அமைச்சரவர்கள்
என்னுடைய கருத்தைத் தெரிவிக்க நான் மீது
இந்தத் தொழில் துறையைப் பொறுத்தவரையில் ஆசைப்படுகிறேன்.
1,400கோடி ரூபாய் செலவு செய்யப்போகிறோம் மத்திய அரசு
கொண்டிருக்கிற சூழ்நிலையில் இந்த அரசு என்று சொல்லிக்
காக 32 கோடி ரூபாய்தான் ஒதுக்கி தொழில் வளர்ச்சிக்
குறித்து நான் மிகவும் இருக்கிறார்கள்.
வருந்துகின்றேன். இந்த அரசினர் ஆச்சரியப்படுகிறேன், இது
வேண்டும்; தொழில் பேட்டைகள் தொழில் மிகவும்
நிறைய தொழிற்சாலைகள் வர நிறைய மையமாக ஆக்க
கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் வர வேண்டும் வேண்டும்;
தொகை அதாவது 2 சதவீதம் அதற்காக என்றெல்லாம்
கின்றது. இப்படி ஒதுக்கினால் கூட இல்லை—இவ்வளவு சிறிய
வாய்ப்பு கொடுக்க முடியும்? எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்
இவர்கள் நிதியுதவி செய்ய முடியும். எத்தனைத் பேர்களுக்கு வேலை
யில்லாத் திண்டாட்டம் குறையுமா இதன் தொழிற்சாலைகளுக்கு
பார்க்க வேண்டும் என்று கேட்டுக் காரணமாக வேலை
என்பதை யோசித்துப் கொள்கிறேன்.

கனம் அமைச்சர் திரு திருநாவுக்கரசு
இது சம்பந்தமாக பேசுவதாக பேப்பரில் அவர்கள் திருச்சியில்
தொழில் வளர்ச்சிக்காக மாநில வந்திருக்கின்றது.
போடப் போகிறோம் என்று சொல்லி அளவிலே அட்வைசரி கமிட்டி
இருக்கிறார்கள். அட்வை



1980 ஜூலை 19] [கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப்]

சரி கமிட்டிக்குப் பதிலாக ஸ்டேட்யூட்டரி கமிட்டியை அவர்கள்
போடுவார்களேயானால் அது மிகவும் உதவிகரமாக இருக்கும்
என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அவ்வாறு கமிட்டி
போட்டுவிட்டால் மட்டும் போதாது. அந்தக் கமிட்டி, சிறந்த
முறையில் தொழிற்சாலைகளை நடத்துகின்றவர்களாக இருப்ப
வர்களைக் கொண்ட கமிட்டியாக இருக்க வேண்டும். அப்படி
இருந்தால்தான் நம்முடைய மாநிலத்திலே தொழில் வளர்ச்சி
எவ்வளவு தூரம் இருக்க வேண்டுமோ அவ்வளவு தூரத்திற்கு
அவர்கள் நமக்கு உதவிகரமாக இருப்பார்கள் என்று சொல்லிக்
கொள்ள ஆசைப்படுகிறேன். இன்னொன்றும் சொல்லிக் கொள்
கிறேன். 10 வருடங்களுக்கு முன்பு பெரிய பேங்குகள் ஒவ்வொரு
டிஸ்ட்ரிக்ட்டிலேயும் என்னென்ன பொட்டன்ஷியாலிட்டி இருக்
கின்றது என்பதை எல்லாம் ஆராய்ந்து ஒரு பெரிய ரிப்போர்ட்
கொடுத்திருக்கிறார்கள். அநேகமாக எல்லா டிஸ்ட்ரிக்ட்களையும்
அது கவர் செய்திருக்கின்றது. அதை அரசாங்கத்தினர் பார்த்து
ஏதாவது செய்திருக்கிறார்களா? அதை அடாப்ட் பண்ணி இருக்
கிறார்களா? அதைப்பற்றி யாராவது யோசனை செய்தார்களா
அப்படி அதுபற்றி கவனிக்காவிட்டாலும் கூட இப்போதாவது
வெகு சீக்கிரமாக அதைப்பற்றி அவர்கள் ஆலோசிக்க வேண்டும்.
அதன் மூலம் எந்தெந்த டிஸ்ட்ரிக்டிலே என்னென்ன தொழிற்
சாலைகளை ஆரம்பிக்கலாம் என்று பார்த்து அதற்கேற்ப முயல
வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் டாட்டா எக்கனாமிக்கல் சர்வே ரிப்
போர்ட் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு ரிப்போர்ட் கொடுக்கப்
கப்பட்டு சற்றேறக்குறைய இரண்டு மூன்று வருஷங்கள் ஆகி
இருக்கின்றன என்று நினைக்கிறேன். அதன் மூலம் 30, 35
பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடியும் என்ற குறிப்பை
அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட்டின் அடிப்
படையில் எத்தனை தொழிற்சாலைகளை நம்முடைய மாநில
அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்பு
கிறேன். அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்களா? இன்னின்ன
துறையிலே இன்னின்ன செய்யலாம் என்று ஏதாவது தொழில்
களைத் துவக்குகின்ற முயற்சியிலே ஈடுபட்டார்களா?

[பிற்பகல் 12—50]

இருந்தாலும் கூட நமது மாண்புமிகு அமைச்சர் திருநாவுக்கரசு
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். "இந்த மாநிலத்தில் நிறைய
தொழிற்சாலைகள் வருவதற்காக நாங்கள் ஊக்கமாகப் பாடு
படுவோம்" என்று அதற்காக நான் சந்தோஷப்படுகிறேன்.

We will adopt a persuasive attitude to see that more Industries are brought with their help and cc-operation. என்று சொல்லி

இன்னொன்றையும் சொன்னார்கள், ''சென்டிரல் கவர்மெண்டிடம் அதற்காக நாங்கள் வாதம் செய்துகொண்டிருக்கப் போவ தில்லை'' என்று.

This reflects the realty of the situation. I feel Mr. Speaker Sir, that there is no use of simply filling affidavit with the Central Government for starting Indnstiies. We should be more persuasive to got and press them and see that the Industries are being started and we should not complasn that they have not staited the Industries in our State. It is in cur own interest that we should very cften go and tell them and very often go and remind the various Ministries concerned so that we can achieve what we want.

இப்பொழுது பேசுகிறபோது நியூஸ் பிரிண்ட் பிராஜக்ட் என்கிற ஒரு பெரிய தொழிற்சாலை இங்கே வரப்போகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாடு நியூஸ் பிரிண்ட் பிராஜக்ட் என்கிற அந்தத் தொழிற்சாலை 152 கோடி ரூபாய் திட்டத்தில் வரப்போகிறது என்று சொல்லியிருப்பது மிகவும் மகிழ்ச்சிகரமான ஒரு செய்தி. இதுமாதிரி பெரிய தொழிற் சாலைகள் நம் மாநிலத்திற்கு நிறைய வர வேண்டும். இது மாதிரி பெரிய தொழிற்சாலைகள் வந்தால் தான் நமக்கும் ஒரு கௌரவம் இருக்கும் என்பது மட்டும் அல்லாமல், இதில் சம்பந்தப் படக் கூடிய அதாவது வேலை செய்யக் கூடிய வேலையாட் களின் எண்ணிக்கையும் மிகவும் அதிக அளவில் ஏற்பட வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தத் தொழிற்சாலைக்குக் குறைந்த பட்சம் 3 லட்சம் டன் கோல் ஆண்டு தோறும் தேவைப்படும் என்று சொல்லியிருக் கிறார்கள். அப்படித்தேவைப்படும் நிலக்கரியை கல்கத்தா துறை முகத்திலிருந்து கொண்டு வர நீங்கள் ஏற்பாடு செய்வீர்களா ? அப்படி செய்தால் நலமாக இருக்கும். ஏனென்றால் இரயில்வேயை மட்டும் நம்பினால் இதில் போதாது. இரயிலில் ஒரு வாகனில் 20 டன் கோலுக்கு (நிலக்கரி) மேல் ஏற்றிக் கொண்டு வர முடியாது. அதே சமயத்தில் கப்பலில் கொண்டு வந்தால் ஒரு கப்பலுக்கு ஆறாயிரம், ஏழாயிரம் டன்கள் கொண்டு வரமுடியும்.

இதற்கிடையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கமிட்டியைப் போட்டு, தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய அத்தனைத் தொழிற்சாலைகளுக்கும்எந்தெந்த தொழிற்சாலைக்கு எவ்வெவ்வளவு நிலக்கரி தேவைப்படும் என்று பரிசீலனை செய்ய வேண்டும். அதில் சிங்கரேணியில் நமக்குக், கிடைப்பது



மொத்தம் எவ்வளவு ? போக மீதி எவ்வளவு கல்கத்தாவிலிருந்து கொண்டு வர வேண்டியிருக்கும் என்று பார்த்து, அதை ஒட்டு மொத்தமாக கொண்டு வருவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் ஒருதடவை மட்டும் 5இலட்சம் டன்னுக்கு குறையாமல் நிலக்கரியைக் கப்பலில் வரவழைக்க முடியும். அப்படிச் செய்வதினால் கோஸ்டல் சர்வீஸில் இருப்பவர்களுக்கும் மிகவும் ஊக்கமாக இருக்கும்.

Coastal service should be a second line cf defence. Now this second line cf defence is not there, Mr. Speaker Sir. I would emphasize that the Government should adopt a pclicy to see that all coal in tender for the various Industries, apart fım what Singareni collieries can serve us shculd be brcught fıcm Calcutta and the various cıganising talents should be utilised to see that this is qeiag dcne very Successfully''

அடுத்து, நிறைய டிஃபென்ஸ் (Defence) தொழிற்சாலைகள் இங்கே வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று டிஃபென்ஸ் புரொடக்ஷன் அமைச்சரைக் கண்டு பேசி அவைகளை நம் மாநிலத்தில் கொண்டு வருவதற்கான ஏற்பாடு களைச் செய்ய வேண்டும்.

அதுவுமில்லாமல் இப்பொழுது ஆயில் ரிபைனரி தொழிலில் இரண்டு மடங்கு உற்பத்தியைப் பெருக்கப் போகிறார்கள் என்று சொல்லப்படுவதினால் அப்படிச் செய்யும் போது, நம் மாநிலத்தில் பெரிய பெட்ரோலியம் கம்பெனிகள் வருவதற்கு, ஏற்படுத்து வதற்கு நல்ல ஸ்கோப் இருக்கிறது. இந்த வாய்ப்பை அமைச்சர் அவர்கள் விட்டு விடக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Sir, the Hon. Minister for finance has given a statement about the Ashok Leyland. Let me be very frank in telling Mr. Speaker that I am not satisfied with the statement. Ashok Leyland has got a tremendous amount of potentiality. How can they be allowed to go outside our State for establshing a very big equally big industry in those States. If they have been very adament, if they have been very unreasonable I think the Government here should have invoked the help and co-operation of the Central Government either direcly or through their representatives in Parliament and see that this Industry was not permitted to go outside our State.

(திரு. கே.எஸ்.ஜி. ஹாஜாஷெரீப்) [1980 ஜூலை 19

I feel that Ashok Leyland might have given a project Report and on that basis only the proceedings should have taken place and without the project report how such a useful Iudustry should have first thought of starting conceiving and then to say that they are very adament, they are very unreasonable in their demand and therefore you can not accept those demands and therefore that Industry has gone o t of our hands is a very sorrowful state of affairs.

இம்மாதிரியான நிலை வரக் கூடாது என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். பெரிய தொழில்கள் வளரக் கூடிய நல்ல தொரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

நமது லேபர் பாலிஸி, ஆல் இந்தியா லேபர் பாலிஸியுடனும் மற்ற மாநிலங்களின் லேபர் பாலிஸியுடனும் 'ஒத்துப் போகக் கூடியதாக இருந்தால் நமக்கு சாதகமாக இருக்கும். அப்படி யில்லாமல் நமது லேபர் பாலிஸி மட்டும் மிகக் கடினமாக இருந்தால் பெரிய இண்டஸ்ட்ரீஸ் அல்லது நடுத்தர இன்டஸ்ட்ரீஸ் வருவதற்கு கஷ்டமான நிலை ஏற்படும். அப்படி வந்தாலும் The production cost will be considerably high and that will result in our marketing these Industries outside our State or send them out.

ஆகவே, இதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நமது சென்னை துறை முகத்தில் கப்பல்கள் ரிப்பேர் செய்யக் கூடிய 'கீன்ஸ்' இருக்க வேண்டும். பல ஆண்டுகளாக அதற்காக முயற்சி செய்து வருகிறோம். ஆனால் இதுவரை அது நடை பெறவில்லை. இப்போது அதற்காக, அதை அமைப்பதற்காக ரொம்பத் தீவிரமாக கவனிக்கப் பட்டு வருகிறது என்று அறிகிறேன். ஆகவே இதைப் பற்றி நமது சர்க்கார் மத்திய சர்க்காருடன் பேசி அதை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், இங்கு வரக் கூடிய கப்பல்களில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால் ஒன்று விசாக் போக வேண்டும் அல்லது கல்கத்தா போக வேண்டும் அல்லது பம்பாய் போக வேண்டும், இல்லாவிட்டால் பக்கத்தி லுள்ள சிங்கப்பூர் போக வேண்டும் என்ற நிலைதானிக்கிறது. ஆகவே அதை இங்கே சென்னையில் நிறுவினால் அது நமக்கு ஆதரவாக இருக்கும் என்பதோடு கூட அதனால் நாம் அந்நியச் செலாவணியையும் சம்பாதிக்க முடியும் என்றும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.



1980 ஜூலை 19] (திரு. கே.எஸ்.ஜி. ஹாஜாஷெரீப்)

எனக்கு முன் பேசிய உறுப்பினர் அவர்கள் 'ப்ரொஸீஜரல் டிபிகல்டீஸ்' நிறைய இருக்கிறது, அவற்றை அகற்ற வேண்டும் என்று சொன்னார்கள். நானும் அதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு இன்டஸ்ட்ரீ தொடங்க வேண்டு மென்றால் ஒரே கட்டடத்தில் எல்லாவிதமான சௌகரியங் களும் இருக்க வேண்டும். என்னென்ன லைசென்ஸ் வேண்டுமோ அவை கிடைக்க வேண்டுமானாலும் சரி, தண்ணீரே கிடைப்பதற்காக என்றிருந்தாலும், மின்சாரம் கிடைப்பதற்காக இருந்தாலும் சரி எல்லாம் விரைவாகக் கிடைக்க ஒரே கட்ட டத்தில் இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் ஒவ்வொரு ஊருக்குப் போவது என்று சொன்னால் அதனால் மிகவும் கால தாமதம் ஏற்படுகிறது. நம் இன்டஸ்ட்ரீஸ் துறையைச் சேர்ந்த வர்கள் ஊக்கமும், தைரியமும், நல்ல தொழில் அறிவு உள்ள வர்களாகவும் இருக்கிறார்கள். இருந்தாலும் கூட, அரசாங்கத்தின் பாலிஸி ஒத்ததாக இருந்தால் தான் அவர்கள் விரைவாக, ஊக்கமாக நிறையத் தொழில்கள் ஏற்படுவதற்கு வேண்டியதைச் செய்ய முடியும். எப்படியிருந்தாலும், நல்ல சூழ்நிலை ஏற் பட்டு நல்ல பாலிஸி உருவாக்கப்பட வேண்டும். அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் கூற வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். அசோக் லேலன்ட்டுக்கு நல்ல வேகம் கொடுக்க வேண்டும். பெரிய பெரிய தொழிற்சாலைகள் இங்கு வருவதற்கு நல்லதொரு நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. க. பாரமலை: இந்தத் தொழில் மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிய உங்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மானாமதுரையில் இன்டஸ்ட்ரியல் க்ரோத் சென்டர் ஆரம்பிப்பதற்கு அரசு அங்கீகரித்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது இந்த கோரிக்கை அறிக்கையில், அதற்காக நான் அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மானாமதுரை அதற்கு எல்லாவிதங்களிலும் பொருத்தமான இடமாகும். அங்கு அனைத்து வசதிகளும் இருப்பதால் இந்த சென்டரை அங்குக் கொண்டு வந்திருக்கி றார்கள். இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பதை எல்லோரும் அறிவார்கள்.

[பிற்பகல் 1-00]

அந்த மாவட்டத்திலே பல்வேறு புதிய தொழிற்சாலை களைக் கொண்டு வருவதன் மூலம் வேலை வாய்ப்புக்களை அதிகரித்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி வேலைவாய்ப்பை அதிகரிக்கின்றபோது, இராமநாத புரம் பின்தங்கிய மாவட்டம் என்று இங்கே பல்வேறு தொழிற்

(திரு. க. பாரமலை) [1980 ஜூலை 19

சாலைகளை துவங்க இந்த அரசாங்கம் நினைத்தாலும், அப்படி துவங்குகின்ற தொழிற்சாலைகளில் அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படாமல், வெளியே உள்ளவர்கள் வருகின்ற காரணத்தினால், எந்த நோக்கத்திற்காக அந்த தொழிற்சாலைகள் கொண்டு வரப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேறாமல் இருக்கிறது. எனவே, இனிமேலாவது அந்தப் பகுதி மக்களுக்கு முன்னுரிமை கொடுத்து, இந்தத் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு வழங்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை]

அதோடு, இந்த அறிக்கையிலே டிட்கோ சார்பில் பல தொழில்கள் துவங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 40 கோடி ரூபாய் செலவிலே பாலீஸ்டர் நூல் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப் போவதாகவும், மற்றும் மக்னீசியம் மெடல் புராஜக்ட் தொழிற்சாலை ஒன்றை ரூ. 4.29 கோடி செலவில் ஆரம்பிக்கப் போவதாகவும், அதேபோல் வெடி மருந்து தொழிற்சாலை ஒன்று 15 கோடி மூலதனத்திலே Swedish collaboration-ல் ஆரம்பிக்கப் போவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே மகிழ்ச்சி தருவதாக இருக்கிறது.

அதோடு, மாண்புமிகு மதிப்பிற்குரிய ஹாஜா ஷெரீப் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். 150 கோடி ரூபாய் செலவிலே இங்கே நியூஸ் பேப்பர் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்க இருப்பதாகச் சொன்னார்கள். அதுவும் உண்மையிலே மகிழ்ச்சியாக இருக்கிறது. லேலண்டு போன்ற தொழில் நிறுவனங்கள் எல்லாம் வெளியே போய்க் கொண்டிருக்கின்ற நிலையில், ஆண்டிற்கு ஏறக்குறைய 50 ஆயிரம் டன் நியூஸ் பிரின்ட் பேப்பரும், ரைட்டிங் பேப்பர் 40 ஆயிரம் டன்னும் உற்பத்தி செய்வதற்காக 150 கோடி ரூபாய் மூலதனம் போடக்கூடியதாகவும் இருக்கிறது. இது மத்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நமது மாண்புமிகு ஹாஜா ஷெரீப் அவர்கள் இதற்கு பர்சுவேஷன் தேவை என்று சொன்னார்கள். எனவே, இதிலே அரசாங்கம் கொஞ்சம் கவனம் செலுத்தி, இதை "Constant" ஆக மேலும் பர்சுவேஷன் செய்து, இதைப் பெற்றுத் தருவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஜூலை 19] [திரு. க. பாரமலை)

அதோடு இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்ற பல்வேறு விஷயங்கள் நமக்கு மன நிறைவு அளிப்பதாக இருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இந்த சிறுதொழில்கள் தமிழ் நாட்டில் மின்சாரம், எண்ணெய், நிலக்கரி, ரயில்வே வேகன் போன்றவைகளின் பற்றாக்குறை காரணமாக அதனுடைய உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது என்றிருந்தாலும் கூட, ஒவ்வொரு துறையிலும் ஏறக்குறைய பல்வேறு முன்னேற்றங்கள் இதிலே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

1979-80 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தொழில் யூனிட்டுகள் 5,632 மூலம் 67,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைப்போல், 1976-77 ஆம் ஆண்டு புதிய கம்பெனிகளுக்கு அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் 2,269 லட்சமாக இருந்தது. 1979-80ல் 9,979 லட்சமாக உயர்ந்திருக்கிறது. இதிலே ஏறக்குறைய 100 கோடிக்கு உயர்ந்திருக்கின்றது என்று சொல்லும்போது, மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. அதைப்போலவே, 1979-80ல் இன்டஸ்ட்ரியல் செக்டார் மூலம் 1½ லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு உண்டாக்கும் திட்டம் போடப்பட்டு, 1979-80லே 2.33 லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே 1980-81லே 2.65 லட்சம் பேர்களுக்கு புதிதாக வேலைவாய்ப்பு கொடுக்கும் திட்டம் போடப்பட்டிருந்தாலும், அதையும் மிஞ்சிவிடும் என்ற நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட திட்டங்கள் அமுல் நடத்தப்படுமானால், ஓரளவு வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற கொடுமை கொஞ்சம் தணியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய சர்க்காரின் நிதி உதவி பத்து ஆண்டுகளுக்கு முன்பு எட்டு சதவிதமாக இருந்தது, 4 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த (Imbalcnce) இம்பாலன்சை ஈடு செய்து கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் கேட்டுள்ளதாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே நம் அரசாங்கம் கடுமையான முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பால்பண்ணைகளைப் பொறுத்தவரை அறிக்கையில் 6,270 கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதாகவும் அவற்றிலே 2,540 சங்கங்கள் Dormant அல்லது லிக்விடேஷன் நிலையில் இருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலை நீடிக்குமானால் எதிர்பார்க்கிற பலனை அடைய முடியாது. இன்றைக்கு கூட்டுறவு பால் உற்பத்திச் சங்கங்கள் பல்வேறு புதிய முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் நிர்வாகத்தில் ஏற்படும் சில குறைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் —

[திரு. க. பாரமலை] [1980 ஜூலை 19

'The Co-operatives offer a fair price to milk producers for the milk supplied to them and exploitation by middle men and private traders is thereby eliminated.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மத்தியில் இருப்பவர்கள் எலிமி
னேட் செய்யப்பட்டிருந்தாலும் கூட்டுறவுத் துறையில் தனிப்
பட்டவர்கள் ஆதிக்கம் செலுத்துகிற நிலையைப் பார்க்கிறேன்.

குறிப்பாக, இராமநாதபுரம் நகரத்தில் இருந்த பெரிய
கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் பத்தாண்டுக் காலமாக
தொடர்ந்து நல்லமுறையில் நடந்து கொண்டிருந்தது. தொடர்ந்து
நல்ல லாபம் ஈட்டிக் கொண்டிருந்தது. அப்படிப்பட்ட ஒரு
சங்கம் எந்த விதமான பொருளாதாரக் குற்றங்களும் இல்லாத
நிலையில் சீரியஸ் இர்ரெகுலாரிடிஸ் இல்லாத நிலையில் அதிகாரி
...பின் சொந்த இஷ்டத்தில் அந்த நிர்வாக போர்டைக் கலைத்
...க்கிறார்கள். நானும் மரியாதைக்குரிய சட்டப் பேரவை
...டறுப்பினர் ராமசாமி அவர்களும்கூட சம்பந்தப்பட்ட அதி
காரிக்கு எடுத்துச் சொல்லியும்கூட அந்த நிர்வாக போர்டு
கலைக்கப்பட்டது. அதே போன்று திருப்புவனத்தில் ஒரு பால்
சொசைடி நடந்து கொண்டிருக்கிறது. அதிலே லட்சம் ரூபாய்க்
கும் அதிகமான கையாடல், ஃப்ராடு நடந்திருக்கிறது, சீரியஸ்
இர்ரெகுலாரிடிஸ் நடந்திருக்கிறது என்று நான் சொல்லவில்லை—
ஆடிட் அறிக்கையில் இருக்கிறது. அதன்மீது இதுவரை எவ்வித நட
வடிக்கையும் எடுக்கப்படவில்லையென்பதை மாண்புமிகு அமைச்
சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.
ஆடிட் பிரிவு தனியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. பால்வள
நிறுவனம் தனியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. சீரியஸ் இர்ரெகு
லாரிடிஸ் இருக்கிறது என்று ஆடிட் ரிப்போர்ட்டில் கண்டு பிடிக்கப்
பட்டால் அதுபற்றி ஸ்பெஷல் ரிப்போர்ட் செய்ய வேண்டும்
என்று சொல்லப்படுகிறது. அப்படி ஸ்பெஷல் ரிப்போர்ட்
அனுப்பியும் இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
ஆனால் வேறு சிலகாரணங்களால் தலைவர் நீக்கப்பட்டிருக்கிறார்.
இன்னொரு கூட்டுறவுச் சங்கத்தில் Decreed Debtor. ஆக
இருந்தால் மற்றொரு சங்கத்தில் தலைவராக இருக்க முடியாது
ஆனால் அவர் மீண்டும் தலைவராக செயல்பட அனுமதிக்கப்
பட்டுள்ளார். இன்னொரு துறையில் அவர் தலைவராக இருப்ப
தால் இதிலேயும் தலைவராக இருக்க முடியாது என்று அவர்பதவி
நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். இப்படிப்பட்ட இர்ரெகுலா
ரிடிக்கு யார் பொறுப்பாக இருந்தாலும் அதிகாரிகள் மட்டத்தில்
இருந்தாலும் சரி, 'நான் அபிஷியல்ஸ்' மட்டத்தில் இருந்தாலும்
சரி, கடுமையான நடவடிக்கை வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம். ஜெய் ஹிந்த்.



1980 ஜூலை 19] [திரு. க. பாரமலை]

*திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே,
பால் வழங்கு திட்டங்கள் மானியக்
தொழில்கள், பத்திரப் பதிவு, பால் வழங்கு திட்டங்கள் மானியக்
கோரிக்கைகள் பாராட்டுக்குரியனவாக அமைந்துள்ளன என்ற
கருத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில்
வளர்ச்சி குன்றிவிடக்கூடாது என்பதில் அக்கறை கொண்ட
புரட்சித் தலைவர் அவர்கள் தொழில் நலம் காக்க இன்றைய
தினம் இரண்டு அமைச்சர்களை நியமித்திருக்கிறார்கள் என்பதை
இந்தச் சபை உணர்ந்து கொண்டிருக்கிறது.

1976 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக்கு வருகை தந்த இந்திரா
காந்தி அம்மையார் அவர்கள் தொழில் வளர்ச்சியில் மூன்றாவது
இடத்தில் இருந்த தமிழ்நாடு தி.மு.க. ஆட்சியில் 13—வதுஇடத்திற்
குச்சென்றுவிட்டது என்று அன்றைய தினம் சொல்லிச் சென்றார்
கள். பதிமூன்றாவது இடத்திலிருந்து அதைத் திருப்பி மூன்றாவது
இடத்திற்குக் கொண்டு வர இந்த அரசு ஆக்கப்பூர்வமான பணி
களை மேற்கொள்ளவேண்டு மென்று நான் இந்த நேரத்தில்
பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு ஆரம்பமாக மத்திய
அரசிடம் தேங்கிக் கிடக்கிற 90—க்கு மேற்பட்ட உரிமங்களுக்கு
காலதாமதமின்றி விரைந்து அனுமதி பெற மத்திய அரசை
வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1976-க்கு முன்னால் ஆட்சி புரிந்தவர்கள் குமரி மாவட்டத்
திற்கு இழைத்திட்ட கொடுமைதனை நான் சுட்டிக் காட்ட
விரும்புகிறேன். ஏனென்றால் ரப்பர் விளைவது குமரி மாவட்டம்,
அந்த மூலப் பொருள்களான ரப்பர் 50 லட்சம் டன் கிடைக்
கிறது. ஆனால் தொழிற்சாலையை குமரி மாவட்டத்தில் ஏற்
படுத்தாமல் அன்றையதினம் ஆட்சி புரிந்தவர்கள் இராமநாத
புரம் மாவட்டத்திற்கு எடுத்துச் சென்றார்கள். இராமநாத
புரத்திலாவது அந்தத் தொழிற்சாலை செயல்படுகிறதா என்றால்
செயல்படவில்லை.

[பிற்பகல் 1-10]

அன்றிருந்த கலைஞர் மாமி குமரி மருமகளிடம் கொடுமைக்காரி
யாக நடந்து கொண்டாள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்
பழிவாங்கப்பட்டது குமரி மாவட்டம், பறிக்கப்பட்டது குமரி
மாவட்டத்தினுடைய உரிமைகள். தமிழ்நாட்டிலே இன்றைக்கு
ரப்பர் தொழிற்சாலையே இல்லை என்ற நிலைமையை அன்றைய
தினம் ஆட்சிபுரிந்தவர்கள்தான் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.
பல லட்சக்கணக்கான ரூபாய் பாழாக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக்
கணக்கானோர் குமரி மாவட்டத்தில் தொழில் நுட்பப் பயிற்சி

(திரு. மி. வின்செண்ட்) [1980 ஜூலை 19

பெற்றவர்கள் வேலைவாய்ப்பைப் பெறவேண்டிய இளைஞர்ளப
அதைப் பெறமுடியாமல் இருக்கிறது. ஆகவே தேவையான மூலப்
பொருட்கள் கிடைக்கின்ற குமரி மாவட்டத்திலே ஒரு ரப்லர்
தொழிற்சாலலயை ஏற்படுத்த வேண்டுமென்று நான் பணிவோடு
கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற் துறையிலே குமரி மாவட்டம் மிகவும் பின்தங்கி
இருக்கிறது அங்கே ஒரு ரப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்க
வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம் அங்கே தேவையான
மூலப்பொருட்கள் எல்லாம் கிடைக்கின்றன. மணவாளக்குறிச்சி
யிலே உலோக மணல் கிடைக்கிறது. அதிலிருந்து பிரித்
தெடுகிறபோது டைட்டானியம் என்ற கனிப்பொருள் விலை
யுயர்ந்த பொருள் கிடைக்கிறது. அதை இன்றைக்கு ஜப்பான்,
அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அனுப்புகிறார்கள். அந்த
டைட்டானியத்தைத்தான் விமானம் பாடி கட்டுவதற்குப் பயன்
படுத்துகிறார்கள், அப்படிப்பட்ட உலோகத்தை இன்றைக்கு
வெளிநாடுகளிலிருந்து இந்தியா இறக்குமதிசெய்யக்கூடியநிலைமை
இருக்கிறது. அது மட்டுமல்ல; விலை உயர்ந்த தாதுப் பொருட்
களான Monazite, Illuminate, யுரானியம், சிர்க்கான், ரூட்டைல்
போன்ற விலை உயர்ந்த தாதுப் பொருட்கள் கிடைக்கின்றன.
அதன் மூலமாகTitanium Chloride, Titanium Oxide, Titanium metal
போன்ற பல்வேறு பொருட்களையும் அதிலிருந்து உற்பத்தி
செய்யமுடியும். இன்னொன்று, குமரி மாவட்டத்திலே பல்
வேறு தாதுப் பொருட்கள் கிடைக்கின்றன. தமிழகத்திலே
குமரி மாவட்டம் இருப்பதால் அங்கே கிடைக்கக்கூடிய விலை
உயர்ந்த உலோகப் பொருள்கள், தாதுப்பொருட்களை வேண்டா
மென்று மத்திய அரசு கருதுகிறதா ? என்ற சந்தேகம் எங்க
ளுக்கு எல்லாம் இருக்கிறது. அங்கே டைட்டானியப் products
செய்யும் தொழிற்சாலையை ஏற்படுத்தினால் அரசுக்கு எவ்வளவு
வருமானம் கிடைக்கும், படித்த பட்டதாரிகளுக்கு எவ்வளவு
வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.
எண்ணிப் பார்த்து டைட்டானியம் புராடக்ஸ் செய்யக்கூடிய
ஒரு தொழிற்சாலையை குமரி மாவட்டத்திலே ஏற்படுத்த வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோதையாறிலே இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸின்
இரண்டாவது தொழிற்சாலையை நிறுவ நடவடிக்கைகளை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆரல்வாய்மொழியிலிருந்து காவல்கிணறுவரையிலே
சிமின்ட் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைக்
கின்றன, ஆகவே ஆரல்வாய்மொழியிலே ஒரு சிமெண்ட் தொழிற்
சாலை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஜூலை 19] (திரு. மி. வின்செண்ட்)

குமரி மாவட்டத்தின் பல பகுதிகளிலேயும், தூத்துக்குடியி
லேயும், வேதாரண்யத்திலேயும் உப்பு கிடைக்கிறது. அதிகமாக
உரம் செய்யக்கூடிய முறையிலே யூரியா உரத் தொழிற்
சாலையை அங்கே அமைக்கவேண்டுமென்றும், அதுபோன்று
குமரி மாவட்டத்தில் மணக்குடியில் சோடா ஆஷ், கெமிக்கல்ஸ்
இவைகளை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையை நிறுவ
வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி, மணக்குடி, பள்ளம், புத்தன்துறை, கேசவன்
புத்தூர், பொழிக்கரை ஆகிய இடங்களிலே கடலோரப்பகுதி
களிலே பெட்ரோல் கிணறுகளைத் தோண்டக்கூடிய முறையிலே
oil gas commission மூலம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்திலே முந்திரிப் பருப்புத் தொழிற்சாலை
யிலே 30 ஆயிரம் பேர்கள் வேலைசெய்கிறார்கள். அதற்கு
மூலப்பொருட்கள் கிடைப்பது அரிதாக இருப்பதால் பல நாட்
களுக்கு அவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்
களுக்கு மூலப்பொருட்கள் கொடுப்பதற்கு தனி கோட்டா எதுவும்
கிடையாது. ஆகவே அரசு கேஷூநட் கார்ப்பரேஷன் ஆப்
தமிழ்நாடு என்ற முறையிலே தொடங்கி கச்சா முந்திரியை அந்த
ஆலைக்குக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்திலே வாழை, நேந்திர வாழை அதிகமாக
இருக்கிறது. அதில் சத்துணவு அதிகமாக இருக்கிறது, 5 கோடி
ரூபாய் அளவுக்கு உற்பத்தியாகிறது. அதைப் பக்குவப்படுத்தி
டின்களிலே அடைத்து விற்பனை செய்யும் தொழிற்சாலையை
ஆரம்பித்தால் அதை நாட்டின் பல பாகங்களுக்கும், எண்ணெய்
வள நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமை ஏற்படும்
என்பதைத் தெரிவித்து, அதை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எலக்ட்ரிக் டைப்ரைட்டர்ஸ் உற்பத்தி செய்வதற்கான
தொழிற்சாலையை இந்துஸ்தான் டெலி பிரின்டர்ஸ்
நிறுவனம் ஏற்படுத்தப்போகிறது. அதை நாகர்
கோவிலிலே ஏற்படுத்தினால் அது அங்கே உள்ள ஆயிரக்
கணக்கான தொழில் நுட்பப் பட்டதாரிகளுக்குப் பயன்
அளிக்கும். தூத்துக்குடி துறைமுகம் அங்கேயிருந்து 60 கிலோ
மீட்டர் தூரத்திலே இருக்கிறது, அதைப்போலவே திருவனந்த
புரம் துறைமுகமும் 60 கிலோமீட்டர் தூரத்திலேதான்
இருக்கிறது. குமரி மாவட்டம் தொழில் துறையிலே மிகவும்
பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால் அதை அங்கே நிறுவ
மத்திய அரசுக்கும் அந்த நிறுவனத்திற்கும் பரிந்துரை செய்ய
மாநில அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

(திரு. மி. வின்சென்ட்) [1980 ஜூலை 19

இங்கே திரு. துரைமுருகன் அவர்கள் இந்த மானியத்தைப்
பற்றி விளக்குகின்ற நேரத்தில் இது குழப்பத்திலே ஒரு உச்சம்
தான் என்று வர்ணித்தார்கள். ''எட்டாத பழத்துக்கு
கொட்டாவி விட்டவர்கள்'' குழம்பிக் கிடக்கிறார்கள். நைந்த
உள்ளம் ஒன்று மானியக் கோரிக்கையைப் படிக்காமலேயே
சொல்லி இருக்கிறது என்பதால் நான் விட்டு விடுகிறேன்.

தமிழ்க மக்கள் வாழ்வு மலர தீட்டப்பட்ட திட்டங்களின்
உச்சம்தான் இந்த மானியம் எனப் பாராட்டுகிறேன்.

தும்பை விட்டு வாலைப்பிடிக்கும் குணம் இந்த அரசுக்கு என
துரை முருகன் சொன்னார். இந்த அரசு தும்பையும் விடாது;
உங்கள் கொம்பையும் விடாது. இரண்டையும் சேர்த்துப் பிடிக்
கும் இந்த அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாலும் இல்லாமல், நூலும் இல்லாமல் பறக்கும் அறுந்து
போன பட்டம்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்று
கூறி, மானியக் கோரிக்கைகளை ஆதரித்து முடிக்கின்றேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்று காலை இந்த விவாதத்திலே நான் பங்கெடுத்து
கொள்ள வேண்டும். ஆகையினால் சட்டமன்றச் செயலாளர்
மூலமாகக் கேட்டு அசோக் லேலண்ட் சம்பந்தமான இன்வெஸ்ட்
மெண்ட்டும், எம்ப்ளாய்மெண்டும் எவ்வளவு என்று கேட்டு,
நேற்றைய தினம் பகல் 12 மணி அளவிலே, சட்டமன்றத் துறை
செயலாளரிடத்தில் கேட்ட அந்த விவரம் இதுவரையில் எனக்குக்
கிடைக்கவில்லை. ஒரு மாமன்ற உறுப்பினருக்குக் கொடுக்க
வேண்டிய மிகச் சாதாரணமான இந்தச் செய்தியைக்கூட எங்க
ளுக்குத் தராமல் இருந்தால் இந்த மன்றத்திலே நாங்கள் பணி
யாற்றுவது எப்படி என்று நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

மன்றஉறுப்பினர்கள் கேட்கக்கூடிய இந்தப் புள்ளி விவரத்தைத்
தராதவர்கள்—நான் இப்பொழுதுகூட கொஞ்ச நாழிக்கு முன்ன
தாகக் கூட—இந்தத் துறையை நிர்வகிக்கும் மாண்புமிகு திரு.
திருநாவுக்கரசு அவர்களிடத்திலே பேசினேன். அவரே இந்தத்
துறையைச் சேர்ந்த செயலாளரிடத்தில் பேசியிருப்பார் என்று
கருதுகிறேன். இந்த மன்றத்திலே வந்து அந்த ப்ராஜக்ட்
ரிப்போர்ட்டே இல்லை என்று சொன்னார்கள். ப்ரா
ஜக்ட் ரிப்போர்ட் இல்லாமல் அல்லது 'லெட்டர் ஆஃப்
இன்டென்ட்'-க்கு அப்ளிகேஷன் போடுகின்ற அதிலேயாவது
இருக்கும் அல்லவா, இத்தனை கோடி நாங்கள் இன்வெஸ்ட்
செய்யப் போகிறோம், இவ்வளவு பேருக்கு வேலை கொடுக்கப்
போகிறோம், இன்னின்ன கன்சஷன்களை எங்களுக்குத் தாருங்கள்
என்று அவர்கள் கேட்டிருக்கவில்லையா? அப்படிக் கேட்
டிருக்காமல் எப்படி முதலமைச்சர் இந்த மன்றத்திலே இந்தச்



1980 ஜூலை 19] (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி)

சலுகைகளையெல்லாம் எங்களால் கொடுக்கமுடியாது என்று
சொல்ல முடியும்? மேலவையிலே—நம்முடைய அவை
முன்னவரவர்கள்—இது சம்பந்தமான ஒரு நீண்ட விவாதத்
திற்கு,—எப்படிப் பதில் சொல்லியிருக்க முடியும்? என்பது
ஆராய வேண்டிய விஷயமாகும். ஆகையால் அந்த டீடெயில்ட்
ப்ராஜக்ட் ரிப்போர்ட் இல்லையென்றால் 'லெட்டர் ஆஃப்
இன்டென்ட்' டினுடைய அப்ளிகேஷனில் இவைகளெல்லாம்
இருக்கும். அதைக்கூட இந்த மன்றத்திற்குத் தரவில்லை
என்றால் அது ஒரு ப்ரீச் ஆஃப் பிரிவிலெஜ் ஆகும். சம்பந்தப்பட்ட
நேரத்தில் அவைகள் கிளப்பப்படும் என்பதனை இங்கே சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

இந்த மன்றத்திலே பேசுகின்ற நேரத்தில் நம்முடைய
தமிழ்நாட்டிலே தொழில் வளம் தேங்கிக் கிடக்கிறது.
சரியாக, முறைப்படி தொழில்கள் இங்கே வளர
வில்லை என்று பல உறுப்பினர்கள் சொன்னார்கள். நானும்
அதையே திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். காமராஜர் அவர்
கள் முதலமைச்சராக இருந்த சமயத்தில் இந்தத் தமிழ் நாட்டி
னுடைய தொழில் வளர்ச்சியைத் தூண்டி விட்டவர் இன்றைய
தினம் நிதியமைச்சராக இருக்கக்கூடிய திரு. ஆர். வெங்கட்ராமன்
அவர்கள் ஆவார்கள். அவர்கள் ஏற்படுத்திய 'பேஸ் ஆஃப்
இன்டஸ்ட்ரியலைசேஷன்' இருக்கிறதே, அந்த வேகம் தொடர்ந்து
அண்ணா அவர்களுடைய ஆட்சியிலேயும், அதற்குப் பிறகு
டாக்டர் கலைஞர் அவர்களுடைய—திராவிட முன்னேற்றக்
கழகத்தினுடைய ஆட்சியிலேயும் அந்த வேகம், அந்த மொமெண்
டம் இருக்கத்தான் செய்தது. ஆனால் கடந்த மூன்றாண்டு
களாக இங்கே நடைபெற்று வரக்கூடிய புரட்சித் தலைவர்
எம். ஜி. ஆர். அவர்களுடைய ஆட்சியில் இந்தத் தொழில் வளர்ச்சி
யின் வேகம் இருக்கிறதே, அது லிம்பிங்—நொண்டிக்கொண்டிருக்
கிறது. இன்னும் சொல்லப்போனால், முன்னோக்கிச் செல்ல
வில்லை, பின்னோக்கிச் செல்லக்கூடிய நிலையிலே இருக்கின்றது
என்று முதலிலே குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

''இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் மார்க்கெட்'' இருக்
கிறதே அது 'வெரி காம்பெடேட்டிவ்'. தமிழ் நாட்டிலே மட்டு
மல்ல, அகில இந்தியாவிலேயும் எந்த மாநிலத்திலே தொழில்
துவங்கவேண்டுமென்றாலும், அதற்கு இன்வெஸ்ட்மென்ட் செய்ய
வேண்டுமென்று முடிவு எடுக்கக் கூடியவர்கள் பம்பாயிலே
இருக்கிறார்கள். எந்த மாநிலத்திலே அதற்கு அதிகமான
கன்செஷன் கொடுக்கிறார்கள், எங்கெங்கே நல்ல ரா-மெட்டீரி
யல்ஸ் கிடைக்கிறது, எங்கே மார்க்கெட் இருக்கிறது, எந்த
அரசாங்கம் நமக்கு உதவியாக இருக்கும், எங்கே லேபர்அன்ரெஸ்ட்
இல்லாமல் இருக்கிறது என்று அவைகளையெல்லாம் மனதிலே
வைத்துத்தான் இந்த இன்வெஸ்ட்மென்ட் மார்க்கெட்டிலே
இருக்கக்கூடியவர்கள் முடிவு செய்வார்கள்.

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி) [1980 ஜூலை 19

அந்த நிலை தமிழ்நாட்டிலே இல்லாத காரணத்தினால்தான
கடந்த மூன்றாண்டுகளாக இங்கே தேக்கம் இருக்கிறது. இங்கே
ஸ்டேக்னேஷன் இருக்கிறது. ஆகையால் இந்த இன்வெஸ்ட்
மெண்ட் சரியாக தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இல்லை
என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1–20)

தமிழ்நாட்டிலே என்ன இல்லை? நிறைய 'மேன் பவர்'
இருக்கிறது. உழைக்கக்கூடிய பல விஞ்ஞானிகள் இருக்கிறார்கள்.
சரியான இஞ்சினியர்கள் இருக்கிறார்கள். மின்சாரத்தைப்
பொறுத்த வரையிலே கூட, கர்நாடகத்தைப் பார்த்தால்
கர்நாடகத்தை விட தமிழ்நாட்டிலே மின்சாரம் நிறைய கிடைக்
கிறது. அங்கே இருக்கக்கூடிய கட்டுப்பாடுகள், அங்கே இருக்கக்
கூடிய போதுமானதாக இல்லை என்ற நிலை, இங்கே இல்லை.
ஆனால் என்ன இல்லை? இங்கே இருக்கக்கூடிய, தொழிலை
நிர்வகிக்கக்கூடிய அமைச்சர்கள் சரியாக இல்லை. அதிகாரிகள்
மட்டும் சரியாக இருந்துவிட்டால் போதுமா? விமானம் நல்ல
விமானமாக இருந்துவிட்டால் போதுமா? அதை ஓட்டுகிறவன்
சரியாக இருந்தால் தானே ஒழுங்காக இறங்கும். இல்லா
விட்டால், எங்கேயாவது எக்ஸ்பிளோட் ஆகும். கப்பல் சரியாக
இருந்துவிட்டால் போதுமா? அதை ஓட்டக்கூடியவர்கள், காப்டன்
சரியாக இருந்தால் தானே, கப்பல் சரியாகப் போகும். இல்லா
விட்டால் பாறையிலே மோதும். ஆகவே, இங்கே இருக்கிற
அதிகாரிகள் சரியாக இருக்கின்றார்கள் என்று சொன்னார், திரு.
ஹாஜா செரீப் அவர்கள். நான் அதிலே கருத்து மாறுபடவில்லை.
ஆனால் அதை நடத்தக்கூடிய, அந்தத் துறையை நிர்வகிக்கக்
கூடியவர்கள் இதுவரையிலே சரியாக நடத்தவில்லை. முதலமைச்
சர் இதுவரையிலே பெரிய தொழிற்சாலைகளைத் தன்னுடைய
பொறுப்பிலே வைத்திருந்தார். இப்பொழுது அருமைச் சகோதரர்
திரு. திருநாவுக்கரசு அவர்களிடத்திலே ஒப்படைத்திருக்கிறார்கள்.

எதற்காக இரண்டு மந்திரிகள்? ஏன், ஒரு மந்திரியே போதுமே?
எல்லாவற்றிற்கும் திரு. கிருஷ்ணசாமியே பொறுப்பேற்கட்டுமே
அல்லது நம்முடைய திரு. திருநாவுக்கரசுவிடமே இருக்கட்டுமே.
ஒவ்வொரு செக்கரட்டரியும் மேஜர் இண்டஸ்ட்ரி, மைனர்
இண்டஸ்ட்ரி என்று பிரிக்க வேண்டியுள்ளது. இது எதற்காக?
ஒரே மந்திரியை வைத்துப் பார்க்கலாமே? பார்க்கக்கூடாதா? திரு.
ஆர். வெங்கட்ராமன் அவர்களிடம் இரண்டும் ஒன்றாகத்தான்
இருந்தது. ஆக, இரண்டு மூன்று மந்திரிகள் என்று மந்திரிகளை
அதிகப்படுத்தினால் தொழில் வந்துவிடும், வளர்ந்து விடும் என்று
நினைத்தால் அது தவறு. ஆனால், இவர்கள் நிர்வாகத்தில்
சரியாகச் செயல்பட வில்லை.

There is no dynamism in Industrial Development.



1980 ஜூலை 19] (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி)

இங்கே தொழில் வளர்ச்சியிலே ஸ்டேக்னேஷன் இருக்கிறது என்று
குற்றம் சாட்டுகிறேன். கம்பேர் பண்ணிப்பாருங்கள். கர்நாடகா
விலே Industrial Development Corporation இருக்கிறது.
மகாராஷ்டிராவிலே (SICO) இருக்கிறது. அங்கே என்ன
செய்கிறார்கள்? அட்ராக்ட் பண்ணுகிறார்கள், அவர்கள் எல்லாம்
தொழில் அதிபர்களை நீங்கள் வாருங்கள் வாருங்கள் என்கிறார்
கள். ஆனால் இங்கே இருப்பவர்களை எல்லாம் நீங்கள் போங்கள்
போங்கள் என்று அசோக் லேலண்ட்காரனை கழுத்தைப்பிடித்து
வெளி ஸ்டேட்டுக்குத் தள்ளுகிறீர்கள். யாராவது தொழில் அதிபர்
களை இங்கே வாருங்கள், இங்கு வந்து ஆரம்பியுங்கள், எங்களிடத்
திலே வந்து பேசுங்கள் என்று ஏதாவது டிஸ்கஷன் நடந்தது
உண்டா? இங்கே வரக்கூடிய தொழிற்சாலைகளுக்காக, முதலமைச்
சர் அடிக்கடி அவர்களோடு பேசினாரா? அவர் இந்த இலாக்காவை
வகித்திருந்த சமயத்தில் என்ன செய்திருக்கிறார், 3 ஆண்டுக்
காலமாக? தொழில் அதிபர்களைக் கூப்பிட்டு, நீங்கள் அதை
வையுங்கள், இதை வையுங்கள் என்று பேசியதாகப் பத்திரிகை
யிலே ஒன்றையும் காணோம். ஆகையினாலேதான் இந்த
மாநிலத்திலே தொழில்கள் வளரவில்லை. அதற்கான முழுப்
பொறுப்பும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைத்
தான் சாரும் என்று இங்கே நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

அடுத்து, Performance in the existing industrial units is not encouraging
எப்படி வரும்? வெளியிலே இருக்கிறவன் இன்வெஸ்ட்மெண்ட்
பண்ண வேண்டுமென்றால் இருக்கிற யூனிட் சரியாக இருக்கிறதா
என்று பார்ப்பான். இங்கு சரியாக இருந்தால்தானே, புதிதாக ஆரம்
பிக்க முன்வருவான்? இங்கே இருக்கிற 'கோல்பிராப்ளம்' என்ன?
'ரா மெட்டீரியல்ஸ் பிராபிளம்' என்ன? இருக்கிற யூனிட்டுகள்
ஒழுங்காக இருந்தால்தானே மேலும் புதிதாகத் தொழில்களைத்
துவங்குவான்.

கலைஞர் காலத்திலே இராணிப்பேட்டை வந்தது. அதே போல்
ஹோசூர் வந்தது. அதே போல் திரு ஆர். வெங்கட்ராமன்
காலத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்ளலாம், அம்பத்தூர்
வந்தது, கிண்டி இண்டஸ்டிரியல் எஸ்டேட் வந்தது.
நாங்கள் மறைமலை நகர் திட்டத்தைக் கொண்டு
வந்துவிட்டுப் போனோம். 3 வருஷமாக என்ன செய்
திர்கள்? எத்தனை தொழிற்சாலைகள் இங்கே வந்திருக்
கின்றன? 3-வது இடத்திலே இருக்கிறோமா, 13-வது
இடத்திலே இருக்கிறோமா என்று எங்கே பார்ப்பது? ரோட்டில்
போகும்போது, மறைமலை நகரிலே நிறைய தொழிற்சாலைக
ளாக வந்து, நிறைய புகை வந்தால் இங்கே வந்திருக்கிறது

என்று சொல்லலாம். கடுதாசியிலே திட்டத்தைப் போட்டுவிட்டால்
எங்கே வளர்ச்சி? 13–ஆ; 3–ஆ என்று சொல்லிவிட்டால்
போதுமா? ஆகையினால் இவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு
வந்ததற்குப் பிறகு வளர்ச்சியே இல்லை என்று சொல்ல விரும்பு
கிறேன். லேட்டர் ஆஃப் இன்டென்டை, தபால் ஆபீஸ் மாதிரி
இங்கேயிருந்து அனுப்பிவைத்துவிடுகிறோம். 96 அனுப்பிவைத்
திருக்கிறோம், 106 அனுப்பி வைத்திருக்கிறோம் என்றால் யார்
வேண்டுமானாலும் லெட்டர் ஆப் இன்டென்ட் கேட்கலாம்.
ரூ.250 சலான் கட்டிவிட்டு, ரூ.100 கோடியிலே ஒரு திட்டத்தைத்
தீட்டி இதை ஆரம்பிக்கிறேன் என்று சொன்னால், நம்முடைய
அமைச்சரவர்கள் வேறு ஒன்றும் பார்க்க வேண்டியதில்லை,
சிபாரிசு பண்ணுவார்கள். சிபாரிசு பண்ணுவது முறை. நான்
சிபாரிசு பண்ணக்கூடாது என்று சொல்லவில்லை. ஆனால்
லெட்டர் ஆஃப் இன்டென்ட் வந்ததற்குப் பிறகு, அவனுக்கு 6
மாதம், ஒருவருஷத்திற்கு எக்ஸ்டன்ஷன் கொடுக்கிறார்கள் அல்லவா,
கவர்மென்ட் ஆஃப் இந்தியாவிலே. அந்த ஒரு வருஷத்திலே
அவன் என்ன செய்கின்றான், நெசசரி காப்பிட்டல் இருக்கிறதா?
ரெய்ஸ் பண்ணுகிறானா? மெஷினரி இருந்ததா? அதற்கு ஏற்பாடு
செய்தானா? அதற்கு அட்வான்ஸ் கொடுத்தானா? அல்லது
போதுமான 24 சதவீதம் 26 சதவீதம் காப்பிட்டல் கொண்டு வர
முயற்சி எடுத்தானா? அல்லது டிட்கோவோடு சேர்ந்து
நடத்தலாம் என பார்ட்டிசிபேஷன் கேட்கிறானா? அல்லது
சிப்காட்டைக் கேட்கிறானா? மற்ற மற்ற இடங்களிலே போய்
என்னோடு சேருங்கள், நான் தொழில் ஆரம்பிக்கப்போகிறேன்
என்று சொல்கிறானா என்று ஃபாலோ அப் ஆக்ஷன் எங்கேயிருக்
கிறது? இந்த அரசாங்கம் ஃபாலோ அப் செய்வதில்லை. லெட்டர்
ஆஃப் இன்டென்ட் வாங்கிக்கொடுத்துவிட்டாலே போதுமா? மாடு
வந்து விட்டது, பிடித்துக் கட்டினால் கட்டு, விட்டால் விடு என்று
சொல்கிறானே அதைப் போலத்தான் இந்த மாநில அரசாங்கம்
செயல்படுகிறதே தவிர, வேறல்ல. ஆகையினால், இங்கே
தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை என்பதை நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இன்னொன்று, அந்த ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்
ரியல் யூனிட்டுக்கு வருகிறேன். இதில் சிட்கோ ஓரளவு உதவி
செய்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த காலத்தில்
உதவி செய்தது. அதே போல், டிக் கன்சார்ஷியத்தோடு சேர்ந்து
உதவி கொடுத்தது. இப்பொழுதும் அவர்கள் உலக வங்கியி
னுடைய எம். எம். டி. ஏ. வினுடைய உதவியோடு, ரூ. 2
இலட்சம், ரூ. 3 இலட்சம் வரைக்கும் கொடுக்கிறார்கள்.

ஒர்க்கிங் காப்பிட்டல் எங்கே இருக்கிறது? ரா மெட்டீரியல்ஸ்
எங்கே இருக்கிறது? ரா மெட்டீரியல்ஸ் என்றால், ஸ்டீல் வந்து
6 மாத காலமாயிற்று, சிட்கோ ஆர்டரில். அவனவன் யூனிட்டை



போட்டுவிட்டுக் காத்துக் கொண்டிருக்கிறான். ரா மெட்டீரியல்ஸ்
இல்லாமல் எப்படி நடத்த முடியும்? 'கோல்' இல்லாமல் எப்படி
நடத்த முடியும்? அதற்கு அரசாங்கம் என்ன செய்தது? எத்தனை
தடவை ஸ்டீல் மினிஸ்டரோடு, ஸ்டீல் அத்தாரிட்டியோடு
பேசியிருக்கிறீர்கள்? அடிக்கடி வேகன் வருகிறதா என்று செக்
பண்ணுகிறீர்களா?

No follow up action. If there is no follow up action how can there be industrial growth?

சிறு தொழிலுக்கு மிக முக்கியமான கன்ஸ்ட்டிரெயின்ட்
என்னவென்றால் ஒர்க்கிங் காப்பிட்டல் கிடையாது. ஒர்க்கிங்
காப்பிட்டலுக்குக் கஷ்டப்படுகிறார்கள். அதற்கு நேஷனலைஸ்ட்
பாங்குக்குப் போகவேண்டும். நேஷனலைஸ்ட் பாங்கிலே கடன்
கொடுக்கிறார்கள். ஷெட் போடுகிறார்கள். இஞ்ஜினியரிங்
படித்தவன், பி. காம் படித்தவன், பி. இ. டெக்னிக்கல் படித்தவன்
வேறுயாராவது ஒரு டெக்கினிக்கல் கோர்ஸ் படித்தவன் ஆரம்பிக்க
வருகிறான். ஆனால் வந்தால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்?
உடனே ஒர்க்கிங் காப்பிட்டல் இல்லை என்கிறார்கள். அதற்காக
அவன் நேஷனலைஸ்ட் பாங்கிற்குப் போகிறான்; அங்கே உங்களுக்கு
என்ன சொத்து இருக்கிறது? அதையெல்லாம் கொண்டு வா என்று
கேட்கிறார்கள். சாதாரணமாக, நேஷனலைஸ்ட் பாங்கு உதவி
பண்ண வேண்டும் என்று சொல்லுகிறார்களே தவிர, மாநில
அரசாங்கமும் சொல்லுகிறது. மத்திய அரசாங்கமும் சொல்லு
கிறது. ஆனால் சாதாரண எஸ். எஸ். ஐ. யூனிட்
போடுகிறவர்கள் எல்லாம் அவன் சாதாரண டெக்னோ
கிராட்டாக இருந்தாலும் சரி, ஸ்மால் ஸ்கேல் என்டர் ப்ரூன
ராக இருந்தாலும் சரி அவன் பாங்குக்குப் போய் அந்த மானே
ஜரைக் கெஞ்சி, பாங்கினுடைய எஸ். எஸ். ஐ. டிப்பார்ட்மென்
டுக்கு முன்னால் போய்பிரே பண்ணி பேம்பர் பண்ணி பார்ம்ஸ்சுக்கு
கிரீஸ் பண்ணுகிறான். அதோடு மட்டுமல்லாமல், சேங்ஷன்
பண்ணுவதற்காக எல்லாவற்றையும் சப்ளை செய்கிறான். ஆமாம்,
எல்லாவற்றையும்.

அந்த எஸ். எஸ். ஐ. யூனிட்காரனை இங்கே இருக்கிற தமிழ்
நாடு அரசாங்கம் அந்த நிலைக்குத்தான் கொண்டுபோய்
வைத்திருக்கிறதே தவிர, வேறல்ல என்பதையும் சொல்லிக்
கொள்கிறேன். இதன் விளைவு எஸ். எஸ். ஐ. யூனிட் எல்லாம்
மூடப்பட்டு கிடக்கிறது. சிட்கோ கொடுத்த லோனில் வாங்கிய
மெஷின்கள் அத்தனையையும் கொண்டு போய் கிண்டியிலே வைத்
திருக்கிறார்கள். காரணம் என்னவென்றால் ஒர்க்கிங் காப்பிட்டல்
இல்லை. ரா மெட்டீரியல்ஸ் போதவில்லை. ஆகவே
கடனைத் திருப்பிக் கட்ட முடியவில்லை. சீல் வைத்தாகு

விட்டது. சிட்கோவில் இருக்கிற விலைக்கும், அங்கே அந்த
மெஷின் 50 சதவீதம் அல்லது 40 சதவீதம் கூட இருக்காது.
மெஷின்கள் வாங்குகிறபோது 125 சதவீதத்திற்கு இன்வாய்ஸ்
போட்டு வாங்குகிறான். 2 வருஷம், 3 வருஷம் அந்த மெஷினை
அடி அடி என்று அடித்து, இப்போது சிட்கோ கொண்டு போய்,
உள்ளே வைத்திருக்கிறார்கள். ஏலத்தில் விட்டுப் பாருங்கள், ஒரு
லட்சம் விலையுள்ள மெஷினை 25,000 கூட கேட்கத் தயாராக
இல்லை. இதுதான் சிட்கோவின் நிலை. அதற்குக் காரணம்
ஓர்க்கிங் காபிட்டல் இல்லை; ரா மெடீரியல்ஸ் இல்லை. ஆகவே
ஒன்றும் பண்ண முடியவில்லை.

அது மட்டுமல்ல, எம். எம். டி. ஏ., உலக வங்கி லெவலில்
கடன் கொடுக்கிறார்கள். அரும்பாக்கத்தில் இன்டஸ்ட்ரியல்
ஷெட் கொடுத்திருக்கிறார்கள். ஒரு கிரவுண்ட் விலை 22,000
ரூபாய். இதுதான் நீங்கள் செய்வது. இப்போது அங்கே
சதுர அடி ரூ. 70 அல்லது ரூ. 80. ஒரு இன்டஸ்ட்ரீ ஆரம்
பிக்க, அந்த ஷெட் கட்டுவதற்கு ஒரு சதுர அடி ரூ. 80 மூல
தனம் வைக்க வேண்டுமானால் அவன் எங்கே வாழப் போகிறான்?
எங்கே உருப்படப் போகிறான்? இன்டஸ்ட்ரியலிஸ்ட் 3 மாதம்,
6 மாதம் தொழில் நடத்தி, அதற்குப் பிறகு மூடிவிட்டு, சாவியைக்
கொண்டு போய் சிட்கோ மேனேஜிங் டைரக்டர் கீதாகிருஷ்ண
னிடம் கொடுத்து வைத்துக்கொள்ளச் சொல்லிப்போய் விடு
கிறான். இதிலே சீரான முறையிலே இந்த அரசாங்கம்
நடவடிக்கையை எடுக்கவில்லை.

அடுத்து, டி.ஐ.சி.சி. லோன். குறைந்தபட்ச லோன்
ரூ. 25,000. மினி லோன் என்றிருக்கிறது, இது. ரூ. 300,
500, 5,000 வரையில் போகிறது. இந்த 5,000–க்கும் 25,000–க்
கும் இடையிலே இருப்பவன் பாடு திரிசங்கு சொர்க்கம்தான்.
மினி லோன் 5,000 வரையில், அதற்குப் பிறகு 25,000 லிருந்து
30 இலட்சம் வரையில் லோனாகக் கொடுப்பார்கள். ஐ.டி.பி.ஐ.
கியாரண்டியாகக் கொடுப்பார்கள். 25 இலட்சம் ரூபாய்வரை
யில் ஷேர் காபிட்டலை அண்டர்-வே பண்ணலாம். ஆகவே, 85
இலட்சம் வரையிலும் வரலாம். அங்கு என்ன நடக்கிறது
என்றால் perfo'mance is very bad. பணம் இல்லையா
என்றால், நிறைய இருக்கிறது. டி. ஐ. சி. சி.
யில் போதுமான பணம் இருக்கிறது. பிரைவேட் பர்சன்ஸ்
டிபாசிட் கொண்டுபோய் கொடுத்தால், வேண்டாம் என்று
சொல்லிவிடுகிறார்கள். ஸ்டேட் கவர்ன்மென்ட் கியாரண்டி
தேவையில்லை என்று சொல்கிறார்கள். காரணம் என்ன ?
ஐ.டி.பி.ஐ. காரர்கள் சொல்கிறார்கள், நாங்கள் கொடுக்கிறோம்
100 கோடி, 200 கோடி, எங்களுடைய பில்லிலே நீங்கள்



டிஸ்கவுண்ட் பண்ணிக் கொள்ளுங்கள். ஸ்கீம் சாங்ஷன் பண்ணி
எங்களிடத்திலே அனுப்புங்கள், நாங்கள் பணம் தருகிறோம்.
நீ எதற்கு டிபென்சர் அண்டு டிபாசிட் பண்ணுகிறீர்கள்.
பண்ட்ஸ் டிபிகல்டி இல்லை. தமிழ் நாட்டிலே எம். ஜி. ஆர்.
ஆட்சி வருவதற்கு முன்னாலிருந்து டி.ஐ.சி.சி. யைப்
பொறுத்தவரையிலும் பணம் இல்லை என்ற குறை
இல்லை. ஆனால், அங்கேயிருந்து செயலாற்றியவருக்கு
மனம் இல்லை. அப்படி மனம் இல்லாத காரணத்தினால்தான்,
போதுமான லோன்கள் சரியாக டிஸ்பர்ஸ் ஆகவில்லை. என்ன
ஆகியிருக்கிறது என்றால், அங்கே கோவிந்தராஜன் என்ற புண்ணி
யவான் இருந்தார், எம். டி. யாக. இப்போது இல்லை. நல்ல
வேளை. அவர் அந்த 3, 3½ வருஷம் இருந்தபோது,
டி.ஐ.சி.சி.யின் வேலையே ஸ்தம்பித்துப் போய்விட்டது. காரணம்
என்னவென்றால், லோன் சாங்ஷன் பண்ணுவதே இல்லை. ரிக
வரியிலேயே பாயிண்டாக இருந்தார்.

டெக்ஸ்டைல் மில்லுக்கு
லோன் கொடுத்திருக்கிறார்கள். 
10,000 ஸ்பின்டில் மில்லுக்கு 200 லட்சம். அதாவது 2 கோடி
கடன் கொடுத்திருக்கிறார்கள். அந்த 2 கோடியிலே 85 லட்சம்
டி.ஐ.சி.சி. கொடுத்திருக்கிறது. மீதி நேஷனலைஸ்ட் பாங்காலே
கொடுக்கப்பட்டிருக்கிறது. ஐ.சி.ஐ.சி. கியாரண்டி கொடுத்
திருக்கிறது. அதற்குப் பிறகு எண்டர் ப்ரூனர் வந்து என்ன
பண்ணுகிறார் என்று சொன்னால், 200 பேர்களுக்கு வேலை
கொடுக்கிறார்கள். 1 லட்சம் ரூபாய்க்கு ஒரு ஆளுக்கு வேலை.
அதே சமயத்தில் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரி ஆரம்பிப்பவர்
களுக்கு, 1 லட்சம், 2 லட்சம், 3 லட்சம் என்று கடன் கொடு
த்தால், குறைந்தபட்சம் 15 பேர்களுக்காவது வேலை கொடுப்
பார்கள்.

(பிற்பகல் 1-30.)

1 லட்சத்தில் 15 பேருக்கு வேலை கிடைப்பது வேண்டுமா
அல்லது ஒரு லட்சத்துக்கு ஒரே ஒரு ஆளுக்கு வேலை கிடைப்பது
வேண்டுமா ? ஆகையால் தான், இந்த T.I.C. perfomance
is very bad என்று குறிப்பிட்டேன். டெக்ஸ்டைல்ஸ் மில்
லுக்குக் கொடுத்து இருக்கிறார்கள். அதன் மூலமாக டி.ஐ.ஐ.சி.
யின் நோக்கம் நிறைவேறவில்லை. நல்ல வேளையாக அவர்
இப்போது அந்த இடத்தில் இல்லை. வேறு ஒருவர், நல்லவர்
இப்போது வந்து இருக்கிறார். இனிமேலாகிலும் அது முறைப்
படி நல்லபடியாக நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

1 லட்சம், 5 லட்சம், 10 லட்சம் என்ற வரையிலும் ஸ்மால்
ஸ்கேல் இன்டஸ்ட்ரிஸ்க்கு பிரையாரிட்டி கொடுக்க வேண்டும்.
அப்படிக் கொடுத்தால்தான் தமிழ் நாட்டில் சீரான முறையில்
தொழில் வளரும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன்.

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி) [1980 ஜூலை 19

இன்னொன்றையும் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்பு
கிறேன். டி.ஐ.ஐ.சி.யில் அப்ளிகேஷன் போட்டு படி ஏறி இறங்க
முடியவில்லை, இழுத்து அடிக்கிறார்கள், என்ற குற்றச்சாட்டு
பரவலாக இருக்கிறது. என்ன காரணம்? அசெட்ஸ் அன்ட் லயா
பிலிட்டீஸ் கேட்கிறார்கள்? லோன் அப்ளிகேஷன் போடுகிறவனி
டத்தில் இதை ஏன் கேட்க வேண்டும்? தொழில்ஆரம் பிக்கிறவன்
20 சதவீதம், 25 சதவீதம் முதலீடு கொண்டுவந்து, அவன் கொடுக்
கிற ஸ்கீம் பீசிபிளாக இருந்தால் லோன் சாங்ஷன் செய்ய வேண்
டியது தானே ? இது என்ன மார்வாடி கன்சர்னா ? இதையெல்
லாம் கேட்பது என்றால் நாங்கள் எதற்காக அங்கே போக
வேண்டும்? நாங்கள் எங்கேயாவது பணியாளிடம் போய்கடன்
வாங்கிக்கொள்கிறோம், உண்டி மர்ச்சன்டிடம் போய் கடன்
பெற்றுக்கொள்கிறோம். அந்த அசெட்ஸ் அன்ட் லயாபிலிட்டீஸ்
பாரத்தில் என்ன கேட்கிறார்கள் என்றால் உங்களுடைய சொத்து
எவ்வளவு, வீடு, வாசல் எவ்வளவு பெறும், அது சொந்தமா, ஆன்
செஸ்டிரல் ப்ராபர்டியா, ஜாயின்ட்டா, செல்ப்-அக்குவயர்ட்டா
என்று இப்படியெல்லாம் கேட்கிறார்கள்.

டி.ஐ.ஐ.சி. கேட்க வேண்டியது என்ன ? கொடுக்கிற ஸ்கீம்
வயபிளா ? பீசிப்பிளிடியாக இருக்குமா ? முதல் போடுகிறவன்
கொண்டு வருகிற மூலதனத் தொகை எவ்வளவு ? அவனுக்கு
கபாசிடி எவ்வளவு ? அவன் கொண்டு வருகிற மெஷனரி புதிதா
பழையதா, லேண்ட், பில்டிங் மதிப்பு சரியா, அவனுடைய
பாங்கர் கான்பிடன்சியல் ரிப்போர்ட்டில் என்ன சொல்லியிருக்
கிறார், இவற்றையெல்லாம் பாருங்கள், வேண்டாம் என்று
சொல்லவில்லை. அதை விடுத்து, கொலேட்டரல் செக்யூரிட்டி
கொண்டு வா என்று சொன்னால், ராஜா சர் முத்தையா செட்டி
யார் தான், எம். ஏ. சிதம்பரம்தான் தொழில் ஆரம்பிக்க
முடியும். வேறு யாரும் ஆரம்பிக்க முடியாது. சாதாரணமாக
இன்ஜீனியரிங் பட்டப்படிப்பு படித்து விட்டு 'டெக்னோகிராட்'
டாக இருப்பவன் தொழில் ஆரம்பிக்க முடியாது. அவன்
கொலேட்டரல் செக்யூரிட்டி எங்கேயிருந்து கொண்டுவர முடியும்
ஆகவே தான் தமிழ் நாட்டில் தொழில் வளர வில்லை. அதற்கு
டி.ஐ.ஐ.சி. உறுதுணையாக இருந்தது. இதற்கு முன்னால்
இருந்த மேனேஜிங் டைரக்டர் பேரில் பல புகார்கள் வந்து
இருக்கின்றன. சி.ஐ.டி. யை விட்டு விசாரித்துப் பாருங்கள்
என்னென்ன செய்து விட்டுப் போய் இருக்கிறார், என்ன என்ன
எடுத்துக் கொண்டு போய் இருக்கிறார் என்று தெரியும்.
'I have got facts'. ஆகவேதான் டி.ஐ.ஐ.சி. ஒழுங்காகச்
செயல்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கருநாடக மாநிலத்தில் என்ன செய்கிறார்கள் என்றால்,
15 சதவீதம் சப்சிடி கொடுக்கிறார்க[illegible] சதவீதம் ஸ்டேட்



1980 ஜூலை 19] (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி)

சப்சிடி - சென்டிரல் சப்சிடி ஸ்கீம்படி தருகிறார்கள். 25
சதவீதம் சப்சிடி தருகிற அவர்கள் மாநிலத்திற்குச் செல்வார்
களா, இங்கே வருவார்களா ?

மாண்புமிகு அமைச்சர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள், திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சி டிஸ்மிஸ் செய்த சமயத்தில்,
தென்னகம் பத்திரிகை ஆசிரியராக இருந்தார், அதில்
ஒரு குற்றச்சாட்டு எழுதினார், என்ன குற்றச்சாட்டு
எழுதினார் என்றால், திராவிட முன்னேற்றக் கழக மந்திரிகள்
முறைகேடாக 71 சிறு தொழிலுக்கு, பெரும் தொழிலுக்கு
சிபாரிசு செய்து விட்டார்கள் என்று சொல்லி லிஸ்ட் போட்
டார்கள். அப்பொழுது எமர்ஜன்சி இருந்தது. இங்கே
ஸ்பெஷல் ஆபீசராக திரு. விஜயராகவன் அவர்கள் இருந்தார்கள்.
அவர் உடனடியாக அந்த ஃபைல்களை எல்லாம் கொண்டுவா
என்று சொல்லி விட்டார். அங்கே ஒன்றும் வேலை நடக்க
வில்லை. அந்த ஃபைல்களை எல்லாம் பூதக் கண்ணாடி
வைத்துக் கொண்டு இங்கே பார்த்தார்கள். அப்புறம் திருப்பி
அனுப்பினார்கள்.

யார் தொழில் ஆரம்பித்தால் என்ன ? தொழிலை ஆரம்
பிக்கிறவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சேர்ந்தவராக இருந்தால் வரவேற்கத்தக்கதுதான். ஏனென்
றால் அவன் பணம் கொண்டு வருகிறான், முதலீடு செய்கிறான்,
அதனால் 10 பேருக்கு வேலை கிடைக்கிறது. அதனால் அர
சாங்கத்திற்கு சேல்ஸ் டாக்ஸ் கிடைக்கிறது. அதனால்
தமிழ் நாட்டில் வளர்வது கட்சி அல்ல, தொழில். அவன்
தோலைப் பார்க்கக் கூடாது. அதனால் தமிழ் நாட்டிற்கு என்ன
லாபம் என்பதைப் பார்க்க வேண்டும், அப்போது மாதவன்
தொழில் அமைச்சராக இருந்தார். அவர் சொல்லி டி.ஐ.ஐ.சி.
யில் கடன் கொடுத்து இருக்கக்கூடும். இப்போது கூடத்தான்,
திரு. கிருஷ்ணசாமி அவர்கள் அமைச்சராக இருக்கிறார்கள்.
நான் தொழில் தொடங்கப் போகிறேன். டி.ஐ.ஐ.சியிடம்
கடன் மனு போட்டு இருக்கிறேன். கொஞ்சம் சொல்லுங்கள்
என்று சொன்னால் சொல்ல மாட்டார்களா ? அப்படிச் செய்தால்
அது முறைகேடா ? அப்போது அது முறைகேடாக இருந்து
இருக்கும். இப்போது நிலைமை வேறு. அது முறைகேடு
இல்லை. ஆகவே, தொழில் தொடங்காமல், வளராமல் இருந்த
தற்குக் காரணம் நீங்கள்தான். அப்போதே அப்படி இருந்
தீர்கள், இப்போது எப்படி தொழில் வளர முன் வருவீர்கள்
என்று கேட்க விரும்புகிறேன்.

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி) [1980 ஜூலை 19

அடுத்து, அசோக் லே லண்டைப் பொறுத்தவரையில், ரிப
போர்ட் இல்லை என்று சொல்லி விட்டார். லெட்டர் ஆப்
இன்டென்ட் இருக்குமா என்று கேட்டால், அதுவும் இல்லை
என்று சொல்லி விட்டார். இப்போது என்ன கேட்டார்கள்?
58 லட்ச ரூபாய் சேல்ஸ் டாக்ஸ் லோன் வேண்டும். கொடுப்
பதற்கு என்ன ? ஒரு கோடி மூலதனம் போட்டு இருந்தால்
8 சதவீதம், 8 லட்சம் வரை சேல்ஸ் டாக்ஸ் கலெக்ஷனை அவர்
களே, 6 வருஷத்திற்கு இன்டரஸ்ட் ஃப்ரீயாக வைத்து இருந்து
விட்டு, ஃபர்ஸ்ட் டிஸ்பர்ஸ்மென்ட் 9 வது வருஷத்தில் இருந்து
ரி-பேமென்ட் செய்ய வேண்டும். இப்போதும் 1 கோடி மூல
தனம் கொண்டு வருபவர்கள் 9 வருஷம் கழித்துத்தான், வசூல்
செய்த சேல்ஸ் டாக்சை திருப்பிக் கட்டுகிறார்கள். அது
வரையில் அவர்கள் அந்த சேல்ஸ் டாக்ஸ் கலெக்ஷனை லோனாக
எடுத்துக்கொண்டு பின்னால் கட்டுவதற்கு அனுமதி இருக்கிறது.

அசோக் லே லாண்டில் எத்தனை கோடி கேட்டுவிட்டார்கள்?
100 கோடி கேட்டார்கள் ? 200 கோடி கேட்டார்களா ?
ஒரு கோடி. காபிடல் கொண்டுவந்தால் 48 இலட்சம் கொடுக்
கிறோம். அந்த அடிப்படையில் அவர்கள் எத்தனை கோடி
காபிடல் போடுகிறார்களோ அந்த அளவுக்குத்தான் கொடுக்கப்
போகிறோம். அப்படி இருக்கும்போது அவர்களுக்கு ஏன் அனுமதி
அளித்திருக்கக்கூடாது ? இப்போது சொல்லுகின்ற இந்தக்
கணக்கை எல்லாம் வெங்கட்ராமன் அன்றைக்குச் சொல்லியிருந்
தால் நம்முடைய மாநிலத்தில் சேஷசாயி நிறுவனம் வந்திருக்
குமா ? அல்லது மால்கோதான் வந்திருக்குமா ? இன்றைக்கு
சேஷசாயி இருப்பது நமக்குப் பெருமை ; அதைப்போல
மால்கோ இருப்பது நமக்குப் பெருமை. நம்முடைய மாநிலம்
தொழில் வளம் பெற வேண்டுமென்றால் அதற்குரிய சிந்தனை
நமக்குத் தேவை. அசோக் லே லாண்ட் இந்த மாநிலத்தில்
தொழில் தொடங்கியிருந்தால் அது நமக்குத்தான் பெருமை.
எவ்வளவு மூலதனம் போடுவார்கள்? எவ்வளவு பேர்களுக்கு
வேலைவாய்ப்பு கிடைக்கும் ? இப்போது எல்லாம் வெளிமாநிலத்
திற்குப் போய்விட்டதே. அவர்கள் வெளிமாநிலத்திற்குப் போன
தற்குக் காரணம் உங்களுடைய புரட்சித் தலைவர்தான், இந்த
அமைச்சரவைதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
அதனால் 10,000 பேர்களுக்கு மேல் கிடைக்க வேண்டிய வேலை
வாய்ப்பும் போய் விட்டது.

நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சிக்காரர் திரு. உமாநாத்
அவர்கள் பிரைவேட் செக்டாருக்கு கொடுத்து நம்
முடைய கஜானாவை காலி செய்ய வேண்டுமா என்று கேட்டார்
கள். அது நம்முடைய கஜானா பணம் அல்ல ; அவர்கள்



1980 ஜூலை 19] (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி)

வசூல் செய்து முதலீடு செய்கிறார்கள் (திரு. உமாநாத் குறுக்
கிடு) I am not yielding. நான் முடித்த பின்னால் சொல்லுங்
கள்.

**திரு. ரா. உமாநாத் :** அவர்கள் 12 year interest
free loan கேட்டார்கள். அதையெல்லாம் கொடுத்தால்....

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** ஒரு கோடி காபிடல் கொண்டு
வந்தால் 48 இலட்சம் கொடுக்கிறோம். 100 கோடி கொண்டு
வந்தால் அதற்கு ஏற்றமாதிரி கொடுத்தால் என்ன தவறு ?
This Government is touchy on this issue. It shows their small
mindedness.

ஆகையால் பெரிய தொழில்கள் வளருவதற்கு இவர்கள் ஒத்து
ழைக்கவில்லை என்று குற்றஞ்சாட்டுகிறேன்.

இன்னொன்று. ஷுகர் இன்டஸ்ட்ரீஸ் பற்றிச் சொல்லியிருக்
கிறார்கள். போன வருஷம் எவ்வளவு ஷுகர் கிடைத்தது ?
54.65 இலட்சம் டன் கரும்பு கடந்த ஆண்டு ஆடியிருக்கிறது.
1978-79 ஆம் ஆண்டில் 57.68 இலட்சம். ஆனால் 1979-80
ஆம் ஆண்டில் 41 இலட்சம்தான். இது எப்படிக் குறைந்தது ?
மழை இல்லையா, அல்லது வறட்சி வந்ததா ? கரும்பு உற்பத்தி
யைப் பொறுத்தவரையில் இந்த அரசின் அணுகுமுறை சரியாக
இல்லாததால் உற்பத்திக் குறைந்திருக்கிறது. இன்னொரு
காரணம், attractive price கொடுக்கவில்லை.

எங்கள் கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் இந்த மாமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். கரும்பு
விவசாயிகளையும், கரும்பு ஆலை அதிபர்களையும் அழைத்து
'ட்ரைப்பார்ட்ரியேட் கான்ஃபிரன்ஸ்' கூட்டுங்கள் என்று சொன்
னார்கள். அவர்களை அழைத்துப் பேசுங்கள் என்று சொன்னார்
கள். அதை நீங்கள் செய்யவில்லை. இதிலே நீங்கள் சரியாக
'டீல்' பண்ணாததினால் கரும்பு விவசாயிகள் கரும்பு உற்பத்தி
செய்யவில்லை. உற்பத்திச் செய்த கரும்பையும் சர்க்கரை
யாக்கப்பயன்படுத்தாமல் நிறைய கரும்பை 'ஜாகிரி' யாக்க
டைவர்ட் செய்தார்கள். அதனால் இன்ஸ்டால்டு கபாசிட்டியில்
61 சதவீதம்தான் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.
61 per cent of its installed capacity is utilised. Is it not a national waste?
Are you not responsible for the low utilisation of capacity? What
are those people doing?

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி) [1980 ஜூலை 19

நான் இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1973-74
ஆம் ஆண்டில் நாங்கள் ஆட்சியில் இருந்தோம். நான் எம்.எல்.ஏ.
யாக இருந்தேன். இங்கே எல்லோரும் பேசினோம்.
மில்லுக்கும் ஒரு ரெக்கமென்டேஷன் கொடுத்தோம். எல்லா
என்ன விலை கொடுக்க வேண்டுமென்று அந்த ரெக்கமென்டேஷ கரும்புக்கு
னில் சொன்னோம். டைரக்டர் ஆஃப் ஷுகர்ஸ் அதை அனுப்பி
னார். பலர் அந்த விலை கொடுத்தார்கள். சிலர் கொடுக்க
வில்லை. அதிலே ஒருவர், சவுத் இந்தியா ஷுகர்ஸ் மாணிக்க
சாமி கோர்ட்டுக்குப் போனார். அரசாங்கம் டைரக்ஷன் கொடுக்
கலாமா? அரசாங்கம் கொடுத்த டைரக்ஷன் செல்லுமா என்று
கோர்ட்டிலே வழக்காடினார். ஹைகோர்ட்டில் தீர்ப்பு கொடுத்
தார்கள். அப்போது இங்கே இருந்த எம்.ஜி.ஆர். அரசு தூங்கிக்
கொண்டிருந்தது. அந்த நேரத்தில் அரசாங்க வழக்கறிஞர்,
அட்வேகேட் ஜெனரல் கோர்ட்டுக்குப் போகவில்லை; அரசாங்
கத்தின் சார்பில் மறுப்புத் தெரிவிக்கவில்லை.
அதற்கு ஏற்பாடு செய்யவில்லை. அரசாங்கம்
வைத்து வழக்கு போடச் சொல்லவில்லை. அட்வகேட் ஜெனரலை
வெற்றிபெற்றார்கள். சவுத் இந்தியா ஷுகர்சுக்கு அதனால் அவர்கள்
போகிறது 1978 ஜனவரி 3-ந் தேதி. இந்த சர்க்குலர்
சொன்னால் கேட்க வேண்டியதில்லை என்று அரசாங்கம்
சொல்லியிருக்கிறது என்று சர்க்குலர் போகிறது. ஹைகோர்ட்
இங்கே உற்பத்தி குறைந்து, 57.68 இலட்சமாக அதனால்
குறைந்துபோய் 1979-80 ஆம் ஆண்டில் 41.99 இருந்தது
வந்துவிட்டது; 61 சதவீதத்திற்கு கபாசிட்டி இலட்சத்திற்கு
திருக்கிறது. இதற்கு மூலகாரணம் இந்த அரசின் குறைந்து வந்
தன்மைதான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள செயலற்ற
விரும்புகிறேன்

[பிற்பகல் 1-40.]

இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கவர்னர்
ஆட்சிக் காலத்திலே ட்ரைப்பார்ட்டைட் கான்ஃபரன்ஸ் கூட்டப்
பட்டது. நெல்லிக்குப்பத்திலே உள்ள விவசாயிகள் போராட்டம்
நடத்தினார்கள். மாண்புமிகு திரு. இராமச்சந்திரன் அவர்கள்
கூட ஜெயிலுக்குப் போய்ப் பார்த்தார்கள். நாங்களும் பார்த்
தோம். ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று பேசி
னோம். ட்ரைப்பார்ட்டைட் கான்ஃபரன்ஸ் நடந்தது.

Agriculture Secretary, Industries Secretary, Director of Sugar and all people representing all the sugar factories and cane growers' representatives have participated in that and took the decision.

என்ன டெசிஷன்? 10 ரூபாய் அட்ஹாக்காக விவசாயிகளுக்குக்
கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன்படி
எத்தனை ஆலைகள் கொடுத்தன? நெல்லிக்குப்பம் ஆலை அதைக்



1980 ஜூலை 19] (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி)

கொடுப்பதாகக் கையெழுத்துப் போட்டு அங்கே விவசாயிகளுக்கு
40 இலட்ச ரூபாய் கொடுக்கப்படவிருக்கிறது. வேறு எத்தனை
ஆலைகளில் கொடுத்தார்கள்? டெக்கானிலே கொடுத்தார்கள்.
வேறு யாராவது கொடுத்தார்களா? இந்த மந்திரி சபை ஏற்பட்டு
கிட்டத்தட்ட 1½ மாதம் ஆகின்றது. இந்தச் சர்க்கரைத் தொழிலை
நிர்வகிக்கக் கூடிய மந்திரி அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்?
இந்த மாதிரி ஒரு மீட்டிங் நடந்ததே, அதன்படி விவசாயி
களுக்கு எல்லா ஆலைகளும் பணம் கொடுத்ததா என்று பார்த்
தார்களா?

You leave the Cane growers at the mercy of the private sugar factory.

இரண்டு நாட்களுக்கு முன்னதாக சிஸ்மாவினுடைய தலைவ
ரவர்கள் அதாவது திரு. மகாலிங்கம் அவர்கள் சுயோ மோட்டா
வாக அரசாங்கத்திடமிருந்து எந்தவிதமான வேண்டுகோளும் இல்
லாமல் சிஸ்மாவினுடைய மீட்டிங்கிலே சொல்லி இருக்கிறார்கள்.
சர்க்கரை விலை 720 ரூபாய் என்று ஆகிவிட்டது, ஆகவே
விவசாயிகளுக்கு 10 ரூபாய் கொடுக்கலாம் என்று அவர்கள்
சொல்கிறார்கள். அதன்படி அவர் எல்லா ஆலைகளுக்கும்
ஒரு சர்க்குலர் அனுப்பி இருக்கிறார். கோத்தாரி நிறு
வனமும் அதற்கு ஒப்புக் கொண்டு சரி கொடுக்கிறோம் என்று
சொல்லி இருக்கிறது. இவ்வாறு விவசாயிகளுக்குக் கொடுக்க
வேண்டும் என்று அவர்கள் மனம் வந்து கொடுக்கிறார்களே
தவிர இவர்கள் என்ன செய்கிறார்கள்? கரும்புக்கு விலையை
அதிகமாக உயர்த்தினால்தானே கரும்பு அதிகமாகக் கிடைக்கும்.
எத்தனை ரூபாய் கொடுப்பதற்கு இவர்கள் சிபாரிசு செய்
திருக்கிறார்கள்?

இங்கே இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். இண்
டியன் சுகர் மில்ஸ் அசோசியேஷன் அதாவது இஸ்மா மத்திய
அரசுக்கு ஒரு சிபாரிசு செய்திருக்கிறது. அதாவது மினிமம்
150 ரூபாயாவது கொடுக்க வேண்டும் என்று. அவ்வாறு சொன்
னதை மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு
அவர்கள் சொன்னதை மாநில அரசும் பர்சியூ பண்ண வேண்டும்.
அப்படி பர்சியூ பண்ணினால்தான் இங்கே இந்த மாநிலத்திலே
இருக்கக் கூடிய விவசாயிகளுக்கு ஒரு டன்னுக்கு 175 ரூபாய்
கிடைக்கும். ஆகவே அதைச் செய்ய வேண்டும் என்று அவர்
களைக் கேட்டுக் கொள்கிறேன். இங்கே கொடுக்கப்பட்டிருக்
கின்ற ரிப்போர்ட்டிலே சொல்லி இருக்கிறார்கள், அதாவது
பர்சேஸ் டாக்ஸ் எல்லாம் கட்டவில்லை என்று சொல்லி இருக்
கிறார்கள். அப்படியானால் எத்தனை கோடி ரூபாய் பர்சேஸ்
டாக்ஸ் அரியர்ஸ் இருக்கின்றது. எனக்குத் தெரிந்த அளவில்

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி) [1980 ஜூலை 19

10 கோடி, 12 கோடி ரூபாய் அரியர்ஸ் இருக்கின்றது. அதை
ரைட் ஆப் பண்ணுவதற்கு டேபிளுக்குக் கீழே சில விவகாரங்கள்
எல்லாம் நடக்கின்றன. ஆகவே அதை ரைட் ஆப் பண்ணு
வதற்கான சட்டம் வரவேண்டும், அந்தச் சமயத்திலே
அது சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்
கொள்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அடுத்து திருப்பூரில் மாடுகள் செத்து விட்டதாம். ஹிண்டு
பேப்பரிலே செய்தி வந்திருக்கின்றதாம். ஆனால் இங்கே இருக்கின்ற
டிரக்டர் ஆஃப் அனிமல் அஸ்பண்டரீஸ் அதை டெலிகிராஃபிக்க
லாகக் கண்டு பிடியுங்கள் என்று சொல்கிறார்கள். மாடு செத்து
விட்டது என்று சொல்லப்படுகின்றது. மாடு ஏன் சாகாது?
டிஸ்ட்ரிக்ட் இன்டஸ்ட்ரீஸ் சென்டரிலே ஜெனரல் மேனேஜராக
மாட்டு வைத்தியம் படித்தவரைப் போட்டிருக்கிறீர்கள். இது
தான் புரட்சி. திரு. எம். ஜி. ஆர். ஆட்சியிலே இதைத் தவிர
வேறு எந்தப் புரட்சியையும் பார்க்க முடியாது. இப்படிச்
செய்கின்ற ஒரே தகுதி நம்முடைய புரட்சித் தலைவர் அவர்
களுக்குத்தான் இருக்கின்றது. மாட்டு வைத்தியம் படித்த
வர்களைக் கொண்டு போய் இன்டஸ்ட்ரீஸிலே போடுவதும்,
இன்டஸ்ட்ரீஸ் படித்தவர்களைக் கொண்டு போய் மாட்டு வைத்தி
யத்திற்குப் போடுவதும், இதுதான் புரட்சி.

அடுத்து தொழில் வளர்ச்சியைப் பற்றி சொல்ல வருகிறேன்.
நம்முடைய தமிழகம் 3—வது இடத்திலே இருக்கின்றதோ
4—வது இடத்திலே இருக்கின்றதோ அந்த இடத்தைப் பற்றிய
பிரச்சினைக்கு நான் வரவில்லை. எஸ். எஸ். ஐ. யூனிட்டுக்கு
நம்பர் கொடுத்தால் மட்டும் போதாது. தமிழ் நாட்டை முதல்
இடத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்றால், நம்முடைய
புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே எல்லாக் கிராமங்
களிலும் குடிசைத் தொழில்களாக நடக்கின்றதே ஒரு தொழில்,
சாராயம் காய்ச்சுகின்ற தொழில், அந்தத் தொழிலுக்கு
எஸ். எஸ். ஐ. நம்பர் கொடுத்து விட்டால் இந்தியாவிலேயே
தமிழகம் முதல் தொழில் மயமான மாநிலமாக மாறிவிடும்,
கொடுத்து விடுங்களேன், தமிழ் நாட்டிற்கு முதலிடத்தை வாங்கிக்
கொடுத்தோம் என்ற பெயரை நீங்கள் எடுத்துக் கொள்ளலாமே.

அறுந்து போன கயிற்றை வைத்துக் கொண்டு, பொத்தலாகிப்
போன பானையை வைத்துக் கொண்டு, ஆழ் கிணற்றிலிருந்து
தண்ணீரை எடுப்பது எப்படியோ அந்த வகையில்தான் இங்கே
நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி.
இந்த ஆட்சியை வைத்துக் கொண்டு தொழில் வளம் பெருக்குவது



1980 ஜூலை 19] (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி)

என்பது சாதாரணமாக முடியக் கூடியது அல்ல என்று சொல்லிக்
கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி
அமர்கிறேன். வணக்கம்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே,
பாயிண்ட் ஆப் ஆர்டர்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்றைக்கு
வேண்டாம் இன்னொரு நாள் வைத்துக் கொள்ளவோம்.
மணி 1½ ஆகி விட்டது. இரண்டு அமைச்சர்கள் பதில் அளிக்க
வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : எனக்கு ஒரு நிமிடம் கொடுத்தால்
போதும், அமைச்சர்கள் பதில் சொல்லும் போது, அவர்களுக்கும்
அது உதவியாக இருக்கும். நான் சொல்லி முடித்து விடுகிறேன்.
தயவு செய்து அனுமதிக்க வேண்டும். அசோக் லேலண்ட்
சம்பந்தமாக புள்ளி விவரங்கள் வேண்டும் என்று திரு. கிருஷ்ண
மூர்த்தி அவர்கள் பேசுகிறபோது கேட்டார்கள். அதே போல்
கோச் பேக்டரி—அதுதான் திருப்பதிக்குப் போய் விட்டதே அத
னுடைய புள்ளி விவரங்களும் ........ (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது எப்படி
பாயிண்ட் ஆப் ஆர்டர் ஆகும். இன்னொரு நாள் நல்ல பாயிண்ட்
ஆப் ஆர்டராக எடுத்துக் கொள்ளுங்கள். பாதி சொல்லி
முடித்து விட்டீர்கள், அதற்கு அமைச்சர் பதில் அளிக்கும் போது
சொல்லிவிடுவார், அதனால் உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, என்னை முடித்துவிட அனுமதிக்க வேண்டும். இந்த
இரண்டுக்கும் சேர்த்து புள்ளிவிவரங்கள் சபையிலே வைக்கப்பெற
வேண்டும் : இன்றைக்கு இல்லா விட்டாலும் நாளையாவது,
மறு நாளாவது வைக்க வண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்
..........(மணியடிக்கப்பெற்றது).

திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் (மணியடிக்கப் பெற்றது)
இது வேறு விஷயம், அவர் கேட்டதற்கும் இதற்கும் சம்பந்தம்
இல்லை, வேறு விஷயமாக கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி எல்
லோரும் கேட்டுக் கொண்டே போனால், நேரம் கிடையாது.

(பேரவைத் துணைத் தலைவர்) [1980 ஜுலை 19

**திரு. நா. சுந்தரராஜ் :** பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, முக்கியமான விஷயம், கண்டிப்பாக அனு
மதிக்க வண்டும். இந்த அவையிலே 4 மாற்றுத் தலைவர்கள்
நியமனம் பெற்றிருக்கிறார்கள். சில நேரங்களில்........
(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் என்ன
கேட்கப் போகிறீர்கள் என்பது தெரிகிறது. மாண்புமிகு
திரு சி. வி. வேலப்பன் அவர்கள் ஐந்தாவது மாற்றுத் தலைவராக
நியமிக்கப்பெற்றிருக்கிறார்கள். ஒரு முறை நானும் ஊரில்
இல்லாதபோது, மூன்று மாற்றுத் தலைவர்களும் இல்லாத நேரத்
தில் இவர் ஐந்தாவது மாற்றுத் தலைவராக நியமிக்கப்பெற்றார்.
அவையிலே அதை அன்றைக்கே சொல்லியாகிவிட்டது. பட்டிய
லிலும் அவர் பெயர் இடம் பெற்றிருக்கிறது.

**திரு. நா. சுந்தரராஜ் :** அன்றைக்கு யாரும் இல்லை என்ற
காரணத்தினால் மாற்றுத் தலைவராக தற்காலிகமாக நியமிக்கப்
பெற்றார். தற்காலிகமாக இருக்கின்ற நிலையில் அவர் அவை
யில் ஏற்படுகிற ஒழுங்குப் பிரச்சினையில் தீர்ப்பு கொடுத்தால்
அது செல்லுபடியாகுமா? அதுதான் எனக்குத் தெரிய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அன்றைக்குத்
தற்காலிகமாக நியமனம் செய்யப்பெற்றாலும், அவர் மாற்றுத்
தலைவர்களில் ஒருவராக தொடர்ந்து நியமனம் செய்யப்பெற்று
சபையில் அன்றே அறிவித்தாகிவிட்டது. அவர் பெயரும்
பட்டியலில் சேர்க்கப்பெற்று விட்டது. அதனால் இதில் பாயிண்ட்
ஆப் ஆர்டர் எதுவும் இல்லை. உட்காருங்கள்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களில் 16 பேர்கள்
தங்களுடைய மேலான கருத்துக்களை இந்த மாமன்றத்தில்
எடுத்து வைத்திருக்கிறார்கள். எடுத்து வைக்கப்பெற்ற கருத்
துக்கள் குற்றச்சாட்டுக்கள் என்ற அடிப்படையிலும், ஆலோ
சனைகள் என்கிற அடிப்படையிலும், பாராட்டுக்கள் என்கிற
அடிப்படையிலும், பலவகையான கோணங்களில் எடுத்து வைக்கப்
பெற்றிருக்கின்றன. இங்கே விவாதத்தைத் துவக்கிவைத்துப்
பேசிய மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களி
லிருந்து, அவரைப் போலவே அத்தனையையும் ஒருங்கிணைத்துப்
பேசிய திரு. திருமூர்த்தி வரை பலவகையான கருத்துக்கள்
எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்,



1980 ஜுலை 19] (திரு. எஸ். திருநாவுக்கரசு)

[பிற்பகல் 1–50]

அதிலும் குறிப்பாக தொழில் துறையைப் பொறுத்தவரையில்
இந்த அரசுக்கு எந்தவிதமான கொள்கையும் இல்லை என்றும்
அதைப் போல தொழில் வளர்ச்சி நொண்டிக் குதிரையாக இருந்
திருக்கிறது, கடந்த மூன்று ஆண்டுகளில் என்றும் இப்படி பல
தரப்பட்ட குற்றச்சாட்டுக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்
கள்.

இந்த அரசாங்கத்தினுடைய தொழில் கொள்கையைப்
பொறுத்தவரையில் கிராமப்புற சிறு தொழில்கள் வளர்ச்சியை
மேம்படுத்தி வேலை வாய்ப்புகள் அதிகமாகப் பெறத்தக்க
விதத்தில் மேம்பாடு செய்ய வேண்டுமென்ற அளவில் இருந்தா
லும் சிறு தொழில்கள், ஊரக தொழில்கள் வளர்ச்சிக்கு
முக்கியத்துவம் கொடுக்கிறபோது அதே நேரத்தில் பெரிய
தொழில்களும் இங்கே அதற்கு இணையாக வளர்ந்தால்தான்
அதனால் சிறு தொழில்கள் வளரமுடியும் என்பதை இந்த அரசு
முழுமையாக உணர்ந்திருக்கிறது. சிறு தொழில்கள், ஊரகத்
தொழில்கள், என்பதை ஒரு கண்ணாகவும், பெரிய தொழில்கள்
நடுத்தரத் தொழில்கள் என்பதை மறு கண்ணாகவும் பாவித்து
இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஒரு
கண்ணால் பார்க்க முடியும் என்றாலும் ஒரு முழுமையான மனித
னுக்கு இரண்டு கண்களும் இருந்தால்தான் இரண்டு கண்களும்
பார்வையுள்ள கண்களாக இருந்தால்தான், அவன் முழுமையான
மனிதனாகக் கருதப்படமுடியும். அதைப் போலவே இந்த இரண்டு
பிரிவுகளும் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட்டால்
தான் தொழில் துறை முழுமை அடைந்ததாகச் சொல்ல முடியும்
என்றளவில்தான் இந்த அரசு தன்னுடைய தொழில் கொள்கை
களை வகுத்திருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல் தொழில்கள் துவங்குவதைப் பொறுத்த வரையில்
வேலைவாய்ப்புகளை உண்டாக்கிக் கொடுப்பதைத்தான் அதன்
முதுகெலும்பான நோக்கமாகக் கொண்டிருக்கிறோம். வருகிற
1980–81 ஆம் ஆண்டில் ஏறக்குறைய மூன்று இலட்சம் பேர்
களுக்கு வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருவதற்கு இந்த
அரசு திட்டமிட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்கள்
எடுத்துக் கூறியது போல் தொழில் அதிபர்கள், அதிகாரிகள்
என்றளவில் மாநில அளவில் ஒரு ஆலோசனைக் குழு அமைப்ப
தற்கு இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதை நான்

(திரு. எஸ். திருநாவுக்கரசு) [1980 ஜூலை 19

எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில் துவங்க
நினைப்பவர்கள் அல்லது தொழில் அதிபர்கள் அடிக்கடி அவர்க
ளுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிற விதத்தில்
அவர்களைக் கொண்ட மீட்டிங்ஸ் நடத்துவதற்கு திட்டமிடப்
பட்டிருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

தொழில்வளர்ச்சியைப் பொறுத்தவரையில் இதற்கு முன்னால்
இந்த மன்றத்திலே பலதடவை விவாதிக்கப்பட்டு பதில்களும்
சொல்லப்பட்டிருக்கின்றன. புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி
ஏற்பட்ட பிறகு, 1977–க்குப் பின்னால் இங்கே மாண்புமிகு
உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டதுபோல்
தொழில் வளர்ச்சி நொண்டிக் குதிரையாக இல்லாமல் ஓடுகிற
பந்தையக் குதிரையாக முதலில் தான் வந்துகொண்டிருக்கிறது
என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், மாண்பு மிகுநிதி
அமைச்சர் அவர்களும் நிதி நிலை அறிக்கைக்குப் பதில் சொல்லு
கிற போதும் விவாதங்களுக்கு இடையில் பலமுறையும் கருத்துக்
களை எடுத்துச் சொல்லியிருந்தும் கூட தொழில் வளர்ச்சியில்
நாம் இன்னும் பின்தங்கியிருக்கிறோம் என்பது போல் பரவலான
குற்றச்சாட்டுக்கள்தான் இங்கே மீண்டும் சில உறுப்பினர்களால்
வைக்கப்பட்டன. அப்படி குற்றச்சாட்டுக்கள் வைக்கிறபோது
அதற்கு ஏதாவது ஆதாரங்களைத் துணையாக வைத்துக் கொண்டு
அப்படிப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில்தான் யாராவது
சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் யாரும் எந்த
ஆதாரத்தையும் வைத்துக் கொண்டு தொழில் வளர்ச்சி பின்தங்கி
யிருப்பதாகச் சொல்லவில்லை.

ஆனால், அதற்கு மாறாக நான் ஏற்கனவே குறிப்பிட்டது
போல் தொழில் துறையிலே புரட்சித் தலைவர் அவர்கள்
அரசு வேகமான பந்தையக் குதிரையைப் போல் ஓடுகிறது
என்பதற்கு நான் பல ஆதாரங்களைச் எடுத்துச் சொல்ல முடியும்.

தொழில் வளர்ச்சியில் சராசரி தொழில் உற்பத்தி 1976–ல்
137.6 ஆக இருந்தது, 1978–ல் 164.1 ஆக உயர்ந்தது;
மேலும் 1979 ல் 172.3 ஆக உயர்ந்திருக்கிறது. அது
பதிவுபெற்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 1977–ல் 8,508
ஆக இருந்தது, 1979–ல் 9,139 ஆக பெருகியுள்ளது. அதே போல்
தொழிலாளர்களின் எண்ணிக்கை 1977–ல் 5.23 லட்சமாக இருந்
தது, 1979–ல் 5.73 லட்சமாக உயர்ந்துள்ளது. அதே போல்
பயன்படுத்தும் மின் சக்தியின் அளவு 1976–77–லே 3051
மில்லியன் யூனிட்டாக இருந்தது,1979–80 லே 3.739 மில்லியன்
யூனிட்டாக அதிகரித்துள்ளது.



1980 ஜூலை 19] (திரு. எஸ். திருநாவுக்கரசு)

பதிவு பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை 1976–77–லே
186 ஆக இருந்தது, 1979–80-லே 420 ஆக உயர்ந்துள்ளது.
புதிதாக பதிவுபெற்ற நிறுவனங்களுக்கு அனுமதித்த பங்கு
மூலதனம் 1976–77–லே 2,269 லட்சமாக இருந்தது. 79–80–லே
9959 லட்சமாக உயர்ந்துள்ளது. அதுமட்டுமல்லாமல் காபிட்டல்
இன்வெஸ்ட்மெண்ட் சப்சிடியைப் பொறுத்தவரையில், நாம் மத்
திய அரசாங்கத்திடமிருந்து 10 கோடி ரூபாய் கடந்த 3 ஆண்டு
களில் தொடர்ச்சியாகப் பெற்று, இந்திய நாட்டிலே முதலாவது
இடத்திலே தமிழ்நாடுதான் இருந்து கொண்டிருக்கிறது.
அதேபோல், இந்த அரசு கடந்த 3 ஆண்டுகளில் பின்தங்கிய பகுதி
களிலே தொழில்கள் துவங்குவதற்கு எவ்வளவு அக்கறை எடுத்துக்
கொண்டுள்ளது என்பதற்கு இது எடுத்துக் காட்டாகவும் அமைந்
திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்
வார்கள்.

Thiru. K.S.G. Haja Shereef : What is the actual paid up
capital and subscribed capital ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : 10 கோடி ரூபாய்
சிப்காட் பெற்று இங்கே தொழில் நிறுவனங்களுக்கு கடந்த 3
ஆண்டுகளில் கொடுத்திருக்கிறது. அதைப்போல், நம்முடைய
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது
குறிப்பிட்டதைப்போல் இந்திய அளவிலே இன்டஸ்ட்ரீஸ் சர்வீஸ்
என்ற அந்த அளவிலே 1979 வரை தமிழ்நாடு மூன்றாவது இடத்
தில் இருந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்
போல், இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் பாங்கு ஆப் இந்தியா
விடம் தொழில் வளர்ச்சிக்காக நிதி உதவி பெறுவதிலே தமிழ்
நாடு மூன்றாவது இடத்திலே இருந்து வந்திருக்கின்றது.
எனவே, எந்தவிதமான தொழில்களும் இங்கே
உண்டாகவில்லை அல்லது தொழில் வளர்ச்சி மந்தமாக
இருந்தது என்றோ அல்லது நொண்டிக் குதிரையாக இருந்தது
என்பதற்கோ எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்பதை நான்
இந்த மன்றத்திலே எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : I do not want to interrupt the
Minister. ஆனால், ஒரே ஒரு பாயிண்ட். இந்த 3 ஆண்டு
களில் 10 கோடி ரூபாய் சப்சிடி வாங்கியதாகச் சொல்வது அதற்கு
முன்பு ஏற்படுத்தப்பட்ட தொழில்களுக்கான சப்சிடி. இந்த
சப்சிடி ஸ்கீம் இப்போது போயிருக்கிறது. இந்த 15 சதவீதம்
சப்சிடி போன வருஷத்தில் கொடுத்தது ; அடுத்த வருஷம் வரும்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அப்படி 1977-க்கு
முன்பு கொடுக்கப்பட்டதாகச் சொல்லிவிட முடியாது.
1977-க்கு பின்பும் அந்தத் தொழில்களுக்காகவும்
உதவியைப் பெற்றிருக்கிறோம் என்பதைச் சொல்லக் கடமைப்
பட்டிருக்கின்றேன்.

(திரு. எஸ். திருநாவுக்கரசு) [1980 ஜூலை 19

பெரிய, நடுத்தர தொழில்களுககு உதவும் நிறுவனங்களைப்
பொறுத்தவரையில், அதிலே சிப்காட்டைப் பொறுத்தவரை
1972 முதல் 1977 வரை கடன் அனுமதித்தது 5·95 கோடி ;
கடன் கொடுத்தது 4·21 கோடி.

[பிற்பகல் 2—00]

அதைப்போல் 1977 முதல் 1980 வரை கடன் அனுமதி
13·50 கோடி ; வழங்கியது 7 கோடி ரூபாய் ; 1979-80-ல்
வழங்கப்பட்ட கடன் 3 கோடி ரூபாய் ; 1980-81-ல் அனுமதிக்கப்
பட்ட கடன் ரூபாய் 12 கோடி. வட்டியில்லா விற்பனை வரிக்
கடன் வழங்க 31 —3 —1977 வரை ரூபாய் 2·92 கோடி. 1 — 4—
1977 முதல் 30 —6 —1980 வரை 5·72 கோடி ரூபாய்.

இதைப்போல் ராணிப்பேட்டை, ஹோசூர் போன்ற இடங்
களில் இன்டஸ்ட்ரியல் காம்பளெக்ஸ் ஏற்கெனவே ஏற்படுத்தி
யிருப்பது போல் மானாமதுரை, புதுக்கோட்டை ஆகிய இடங்
களிலும், தூத்துக்குடியிலும் நெய்வேலி மற்றும் மதுரை மையங்
களிலும் இன்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்ஸ் —தொழில் இணையங்கள்
தொடங்க இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது. அதுமட்டு
மல்லாமல் தொடர்ந்து எல்லா மாவட்டங்களிலும் இந்த
இன்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்ஸ் —தொழில் இணையங்களை ஏற்
படுத்துவதற்கு இந்த அரசு ஆலோசித்து வருகிறது என்பதை
எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். '' சிப்காட் ''
டைப் பொறுத்தவரை நான் கொடுத்திருக்கின்ற புள்ளி விவரங்
கள் கடந்த 3 ஆண்டுகளில் அந்த நிறுவனம் சிறப்பாகப் பணி
யாற்றியிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதாக அமையு
மென்று மனப்பூர்வமாக நம்புகிறேன்.

டி. ஐ. ஐ. சி. பொறுத்தவரை 1979-80-ல் 17·18 கோடி
உதவி அளித்திருக்கிறது. இது 1977-78-ஆம் ஆண்டை விட
48·2 சதவிகிதம் கூடுதலாகக் கடன் உதவி அளித்துள்ளது. அது
மட்டுமல்லாமல் சென்னையிலே மட்டும் கடன் உதவி வழங்கி
வருகிற இந்தத் திட்டத்திற்கு மாறாக மாவட்ட அளவிலும் ஒரு
குறிப்பிட்ட அளவுக்கான தொகைக்கு கடன்கள் கொடுப்பதற்
கான அளவுக்கு வசதிகள் செய்து தருவதற்கு இந்த அரசு
பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமை
பட்டிருக்கின்றேன்.

அதைப்போல் '' டிட்கோ '' —தமிழ்நாடு தொழில் வளர்ச்சி
நிறுவனத்தைப் பொறுத்தவரை 31—3 —1977 வரை தொழிற்
சாலைகளின் எண்ணிக்கை பொதுத் துறையில் இரண்டாக இருந்
திருக்கின்றது. மொத்த முதலீடு 13·86 கோடியாக இருந்திருக்கின்
றது. வேலை வாயப்பு 2,075 பேருக்கு. 31 —3 —1977 முதல்
31 —3 —1980 வரை தொழிற்சாலைகளின் எண்ணிக்கை
மொத்த முதலீடு 28·76 கோடி ரூபாய் ; வேலை வாய்ப்பு 800
பேருக்கு.



1980 ஜூலை 19] (திரு. எஸ். திருநாவுக்கரசு)

கூட்டுத் துறையைப் பொறுத்த வரை 31 —3 —1977 வரை
தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 10 ; முதலீடு 115·06 கோடி
ரூபாய்; வேலை வாய்ப்பு 5,350 பேருக்கு. 31 —3 —1977 முதல்
31 —3 —1980 வரை தொழிற்சாலைகளின் எண்ணிக்கை கூட்டுத்
துறையில் 4 ; முதலீடு ரூபாய் 11·81 கோடி ; வேலை வாய்ப்பு
1,150 பேருக்கு.

அது மட்டுமல்லாமல் '' டிட்கோ ''-வைப் பொறுத்தவரை
40 கோடி ரூபாய் செலவில் 15,000 டன் உற்பத்தித் திறனுடைய
பாலியெஸ்டர் இழை நூல் தயாரிக்கும் தொழிற்சாலையும்,
ரூபாய் 4·29 கோடி மூலதனச் செலவில் 600 டன் உற்பத்தித்
திறனுடைய மாக்னீசிய உலோகத் தொழிற்சாலையும், ஸ்வீடன்
நாட்டு உடனுழைப்புடன்ரூபாய் 15 கோடி செலவில் 15,000 டன்
உற்பத்தி செய்யும் வெடி மருந்துத் தொழிற்சாலையும் ஆரம்பிக்
கப்பட இருக்கிறது. மேலும், '' டிட்கோ '' ரூபாய் 3 கோடி
செலவில் அரக்கோணத்தில் கழிக்கப்பட்ட இரும்புத் துண்டுகளைக்
கொண்டு மின்சார உலைக் கல உருக்குப் பிரிவை விரிவுபடுத்தும்
திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் புதிய ஆலை
களுக்கு ஊக்குவிப்பதற்காக ஏறக்குறைய முழு நிர்மாணச் செல
வுக்குச் சமமாக மத்தியஅரசு தரவேண்டிய உதவி நிறுத்தி வைக்கப்
பட்டுள்ளதால், நாம் இச்சலுகைகளை நம்பி ஆரம்பித்த
தஞ்சாவூர், பெரம்பலூர், வேலூர், திருப்பத்தூர் ஆகிய ஆலை
கள் பெருத்த நட்டத்தில் இயங்கி வருகின்றன. தென்னாற்காடு
மாவட்டத்தில் பெரிய செலவையில் நிர்மாணிக்கப்பட்டு வரும்
கூட்டுறவு ஆலைக்கான முழுச் செலவான சுமார் 7 கோடியையும்
தமிழக அரசே தந்து அந்த ஆலை வரும் அக்டோபரில் உற்பத்தி
துவங்கவிருக்கிறது.

மாயூரம், திருத்தணி ஆகிய இரண்டு புதிய ஆலைகளுக்கு
மத்திய அரசிடம் உரிமம் எதிர்பார்க்கப்படுகிறது. குறைந்த
அளவு கரும்பு பயிரிடப்படும் பரப்பு உள்ள இடங்களில் சிறிய
சர்க்கரை ஆலைகளைத் துவக்குவது பற்றியும் பரிசீலனை செய்யப்
பட்டு வருகிறது.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் சுமார் 2½
கோடி ரூபாய் அளவில் கரும்புச் சக்கையை உபயோகித்து தினசரி
10 டன் காகிதம் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைக்கு
பூர்வாங்க வேலைகள் நடந்து வருகின்றன. ஆலைகளுக்கு உதவும்
ஒரு தொழிற்கூடம் அமைப்பதும், எரிவாயு உற்பத்தி ஆலை
ஒன்று அமைப்பதும், பரிசீலனையில் இருந்து வருகின்றன. பிற
ஆலைகளிலும் மதுராந்தகத்தைப் போல் காகித ஆலைகள்
துவக்க ஆலோசிக்கப்படும்.

பெட்ரோல், டீசல் ஆகியவைகள் மிகவும் அரிதாகி வரும் இந்நிலையில் '' எதினால் '' (எரிச்சாராயம்) உபயோகித்து காரை ஓட்டுவது குறித்து பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகத்தின் துணையோடு ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. இது வெற்றி பெற்றால் பிரேசிலுக்கு அடுத்தபடியாக தமிழ்நாடு இம்முறையில் வழிகாட்டியாக விளங்கக்கூடும்.

மத்திய அரசு லெவி சர்க்கரைக்கான விலையை நிர்ணயம் செய்யும்பொழுது ஆலைக்கு ஆதாயமற்ற குறைவான விலையையே நிர்ணயித்துள்ளது. 1979–80ஆம் ஆண்டுக்கு தமிழ்நாட்டுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 241.92 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் பீகார் மாநிலத்திற்கு ரூ. 312.75 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்முறைகளை மாற்றி மத்திய அரசு சர்க்கரைக்கு நியாயமான விலை நிர்ணயம் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

அதைப்போல கரும்பு விலையை அதிகரித்துத் தரவேண்டுமென்று நாம் மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். இப்போது அடிப்படை விலை 125 ரூபாயாக உள்ளதை அதிகப்படுத்தவேண்டுமென்று நாம் கேட்கிறோம்.

மத்திய அரசு 1979–80ஆம் ஆண்டிலே 2 லட்சம் டன் சர்க்கரையை இறக்குமதி செய்தது. அதனுடைய விலை ஒரு கிலோவுக்கு 6½ ரூபாய் ஆகிறது. இப்படிச் செய்வதற்குப் பதில் டன்னுக்கு கரும்பு விலையை அதிகப்படுத்தினால் நாம் கரும்பு உற்பத்தியை அதிகமாக்கி சர்க்கரை விலையை குறைத்திருக்கலாம், விவசாயிக்கும் கரும்புக்கு அதிக விலை கிடைக்கும்.

1967-ல் தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 9,000 அளவிலிருந்து 1977-ல் சுமார் 14,000 வரை உயர்ந்தது. அந்தப்பத்தாண்டுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்குச் சமமாக அடுத்த இரண்டே ஆண்டுகளில் 4,000 பேருக்குப்புதிய வேலை வாய்ப்பு தரப்பட்டு தற்போது துவங்கவிருக்கும் உளுந்தூர்ப்பேட்டை ஆலையில் மேலும் சுமார் 600 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு ஏற்படுகிறது. இப்போது ஆரம்பிக்கப்பட்டு உள்ள மற்ற புதிய திட்டங்கள் மூலம் மொத்தம் ஆயிரம் பேர்களுக்கு மேல் வேலை வாய்ப்புக் கிட்டும். தமிழ்நாடு சிமின்ட் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் ஆலங்குளத்திலே இருக்கின்ற ஆலை நாள் ஒன்றுக்கு 1,200 டன் சிமின்ட் உற்பத்தி செய்யும் திறனுடன் 1,484 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. உற்பத்தித் திறனை ஆண்டு ஒன்றுக்கு மேலும் 50,000 டன் அளவு அதிகரிப்பதற்காகவும், தற்போது 3 கோடி ரூபாய் செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1981ஆம் ஆண்டு இறுதிக்குள் இப்பணிகள் முடிவடையும்' என்று எதிர்பார்க்கப்படுகிறது.



(பிற்பகல் 2.10)

அதைப்போலவே, ஆலங்குளத்திலேயே புதிதாக ஆண்டொன்றுக்கு 36,000 டன் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் உற்பத்தி செய்யும் ஆலை ஒன்று இப்பொழுது நிறுவப்பட்டு வருகிறது. 1981 ஏப்ரல் மாதத்திற்குள் நிறுவப்பட இருக்கும் இந்த ஆலை சுமார் 250 பேருக்கு நேரிடையாக வேலை வாய்ப்பு அளிக்கும்.

அதைப்போலவே, 30 மாத கால குறுகிய அளவுக்குள், 29 கோடி ரூபாய் செலவில் அரியலூர் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு இருப்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள்.

மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டத்திலுள்ள பாளையம் பகுதிக்கும், திருச்சி மாவட்டம் குளித்தலை வட்டம் வரவாணை பகுதிக்கும் இடையில் கிடைக்கும் சுண்ணாம்பு கனிவளத்தைப் பயன்படுத்தி, ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்வதற்கான திட்டம் ஒன்று இந்த அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு கனிம நிறுவனங்களைப் பொறுத்தவரையில், மொத்த விற்பனையில் சுமார் 95 விழுக்காடு அந்நியச் செலாவணியாகக் கிடைக்கிறது. 1980–81ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் உற்பத்தித் திறன் பல மடங்கு உயர்த்தப்பட்டு ஒரு கோடியே முப்பத்தி மூன்று இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்து, அதன் மூலமாகச் சுமார் ஐம்பத்தி இரண்டு இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டுவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் அந்நியச் செலாவணியாக ஒரு கோடியே இருபத்து நான்கு லட்சம் ரூபாய்கள் கிடைக்கும். கரும்பாறையை வெட்டியெடுத்து வெறும்பாறைகளாக வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதைவிட அவற்றைத் தகடுபோல் அறுத்து, பளிங்குபோல் மெருகேற்றி ஏற்றுமதி செய்தால் தற்போது கிடைப்பதைவிடப் பெருமளவிற்கு இலாபத்தை ஈட்டக்கூடும். கரும்பாறைகளை வெட்டி மெருகேற்றும் இயந்திரங்கள் உலக நாடுகளில் எந்தெந்த நிறுவனங்கள் தயாரிக்கின்றன. அவற்றின் விலைகள், மெருகேற்றிய பாறைகளுக்கு உலகச் சந்தையில் நிலவும் கிராக்கி போன்ற விவரங்கள் இப்போது இந்நிறுவனத்தால் சேகரிக்கப்பட்டு வருகிறது. இவற்றின் அடிப்படையில் நல்ல மெருகேற்றும் தொழிற்சாலை சுமார் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதைப்போல, சேலத்தில் இருக்கின்ற '' தமிழ்நாடு மாக்னஸைட் நிறுவனம்'' 7.45 இலட்சம் நிகர ஆதாயத்தைக் கொடுத்திருக்கின்ற அளவிற்கு மிகச்சிறப்பாகப் பணியாற்றியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

(திரு. எஸ். திருநாவுக்கரசு) [1980 ஜூலை 19

தமிழ்நாடு உப்பு நிறுவனத்தைப் பொறுத்தவரையில், வேதா
ரண்யம் பகுதியில், ஏறத்தாழ 5,400 ஏக்கராப் பரப்பளவில்
மரவக்காடு வடகாடு திட்டம் உருவாக்குவதற்கான ஆணை
பிறப்பிக்கப்பட்டு, அதற்கான வேலைகள் நடந்து வருகின்றன.

அதைப்போல, வேதாரண்யம் சதுப்பு நிலப்பகுதி உயிரின
சூழ்நிலை பாதிக்காத வண்ணம் எவ்வளவு பரப்புக்களில் உப்பு
உற்பத்தி செய்ய முடியும் என்பதற்கான திட்டங்களை வரை
வதற்கான பம்பாய் இயற்கை வரலாற்று சங்கம் ஆராய்வதற்கு
இந்நிறுவனம் 1.48 இலட்சம் ரூபாய் செலவிடத் தீர்மானித்
துள்ளது. பம்பாய் இயற்கை வரலாற்று சங்கம் இரண்டு
ஆண்டுகள் ஆராய்ந்த பின்பு வேதாரண்யம் சதுப்பு நிலத்தில்
எந்த இடத்தில் உப்பு உற்பத்தி மேற்கொள்ள முடியும் என்பது
குறித்து விரிவான அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிக்கும்.

அதைப்போல, மாரியூர் –வாலிநோக்கம் உப்புத் திட்டத்தை
பொறுத்தவரையில், 5,617 ஏக்கர் பரப்பளவு உள்ளதாக இருக்
கின்ற இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல உப்பு
அதிகமாகக் கிடைக்கும் அந்தப் பகுதியில் உப்பு உற்பத்தியை
அதிகமாகப் பெருக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை
மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

நூற்பாலைகளைப் பொறுத்தவரை, புதிய கூட்டுறவு நூற்பு
ஆலைகள், பருத்தி பயிரிடுவோர் நலனுக்காக, 25,000 கதிர்கள்
கொண்ட ஒரு புது நூற்பாலையும், செயற்கைப் பட்டு நூல்,
பாலிஸ்டர் நூல் போன்ற (Man–Made fibre) நூல்களை
உற்பத்தி செய்ய முதல் தடவையாக இம்மாதிரியாக ஒரு நூற்
பாலையும் கூட்டுறவு அடிப்படையில் முறையே மதுரை,
திருநெல்வேலி மாவட்டங்களில் விரைவிலே நிறுவப்பட இருக்
கின்றன. இவ்வித நூற்பாலை ஒவ்வொன்றின் மூலதனச்
செலவு ரூ. 4 கோடியாகும். இவ்விரண்டு நூற்பாலைகளும்
சுமார் 1,200 பேருக்கு வேலை வாய்ப்புகளை அளிக்கும்.

நெசவாளர் கூட்டுறவு மில்கள், மாவட்டத்திற்கு ஒன்று என்ற
அளவில், புதுக்கோட்டை, தர்மபுரி மாவட்டங்களில் அமைக்கப்
பட உள்ளன என்று ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் அறிவிக்கப்
பட்டிருக்கிறது.

அதைப் போல், விசைத்தறி கூடங்கள் அமைத்தல் (Power
Loom Complex) தமிழகத்திலே உள்ள பிற்பட்ட பகுதிகளான
அருப்புக்கோட்டை, சிவகிரி, திருச்செங்கோடு, தளவாய்புரம்,
ஜெயங்கொண்ட சோழபுரம், ஐக்கம்பட்டி, சங்கரன்கோவில்,



1980 ஜூலை 19] (திரு. எஸ். திருநாவுக்கரசு)

ராசிபுரம், அறந்தாங்கி, தாராபுரம் ஆகிய 10 இடங்களில்
ரூ. 175 இலட்சம் மூலதனச் செலவில் 10 விசைத்தறிக் கூடங்கள்
அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அவைகளில் 4 விசைத்
தறிக்கூடங்கள் நடப்பாண்டில் அமைக்கப்படும். இந்த
விசைத்தறிக் கூடங்கள் சுமார் 2,000 பேருக்கு வேலை வாய்ப்பு
அளிக்கும்.

தமிழ்நாட்டில் மைய அரசின் தொழில் திட்டங்களைப்
பொறுத்தவரை, 32,000 டன் உருக்குப் பொருளை உற்பத்தி
செய்யும் சேலம் உருக்காலை 1981-ல் முதல் கட்டப் பிரிவு உற்
பத்தியைத் தொடங்க இருக்கிறது. இதற்கான செலவு
ரூ. 126·81 கோடி.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் திறன் 3.5
மில்லியன் டன்களிலிருந்து 6.5 மில்லியன் டன்களாக உயர்த்
தப்படும். இரண்டாம் நிலக்கரிச் சுரங்கம் 4.7 மில்லியன்
டன்கள் எடுக்கக் கூடியது ; இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்
டுள்ளது.

சென்னை எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையில் கச்சா
எண்ணெய் சுத்திகரிக்கும் திறன் இரு மடங்காக ஆவதற்கு,
2.8 மில்லியன் டன்களிலிருந்து இரு மடங்காக ஆவதற்கு
வேண்டிய செயற் குறிப்பு மத்திய அரசின் பரிசீலனையில்
இருந்து வருகிறது. இதன் துணைப் பிரிவுகளாக பெட்ரோ
இரசாயன தொழில் பிரிவும், நாப்தா தொழில் பிரிவும் வேண்டும்
என மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம்.

ஹிந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட் வெவ்வேறு
வகையான எலக்ட்ரானிக் கருவிகளை உற்பத்தி செய்ய 9
கோடி செலவில் பலதிறப்படுத்துவதற்கும், நவீனப் படுத்து
வதற்கும் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஹிந்துஸ்தான் நிழற்படச் சுருள் நிறுவனம் கிராபிக் ஆர்ட்ஸ்
சுருள்கள் தயாரிக்க 1979-ல் சென்னையில் ஒரு புதிய பிரிவைத்
தொடங்கியது.

ரூ. 75.80 கோடி முதலீட்டில் திரைப்படச் சுருள் (பாசிடிவ்
கலர்) தயாரிக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. இத்
திட்டத்தையும் இம்மாநிலத்தில் இந்நிறுவனத்தின் கட்டிடத்
திலேயே அமைக்க வேண்டுமென்று மாநில அரசு மத்திய
அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரத் கனரக மின்சாதன
தொழிற்சாலை (பெல்) தனது ஆண்டு உற்பத்தித் திறனை
750 மெகா வாட்டிலிருந்து, 4,000 மெகாவாட்டாக உயர்த்தவும்
மேலும் 500 மெகாவாட் மின் உற்பத்தி இயந்திரங்களுக்குத்

தேவையான உயரளவுத் திறன் கொண்ட சாதனங்களைத்
தயாரிக்கவும் உற்பத்தி வசதிகளைப் பெருக்கவும் கருதியுள்ளது.
திருச்சிராப்பள்ளியிலுள்ள ‘பெல்’ நிறுவனம் தனது புதிய
திட்டங்களில் சுமார் 57 கோடி ரூபாயைக் கூடுதலாக முதலீடு
செய்யக் கருதியுள்ளது.

இராணிப்பேட்டையில் தொடங்கக் கருதப்பட்டுள்ள ‘பெல்’
நிறுவனத்தின் விஸ்தரிப்புத் திட்டத்திற்கும் விரைவில் அனுமதி
வழங்க வேண்டுமாய் மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தும்.

அதைப் போல், கீழ்க்கண்ட திட்டங்களுக்கு விரைவில்
அனுமதி வழங்குமாறும், அவற்றைத் தமிழ் நாட்டில் தொடங்க
அனுமதி வழங்குமாறும் மாநில அரசு மத்திய அரசை வலி
யுறுத்தும். பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனம்
சென்னைக்கு அருகே ஒரு பிரிவைத் தொடங்குவதற்கும் விண்
வெளித் துறையில் திருநெல்வேலி, கன்னியாகுமரி பகுதிகளில்
இரு விண்வெளி ஆராய்ச்சித் திட்டங்களைத் தொடங்கு
வதற்கும் நாம் மத்திய அரசை மேற்கொண்டு வலியுறுத்தி
வருகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே எடுத்துக் காட்
டியதைப் போல், கடந்த 10 ஆண்டுகளில் தமிழ் நாட்டிலே,
மத்திய அரசுத் துறைகளில் முதலீடு செய்யப்பட்ட தொகை
களின் அளவு 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைந்
திருக்கிறது. வட்டார அளவிலே காணும் இந்த ஏற்றத்
தாழ்வை—வேறுபாட்டை நீக்க, மத்திய அரசினுடைய தொழில்
முதலீட்டைத் தமிழ் நாட்டிலே அதிகரிக்க வேண்டுமென்கிற
கோரிக்கையை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

(பிற்பகல் 2-20)

அதைப் போல, நாம் இங்கே இருந்து அனுப்பி இருக்கிற
ஏறத்தாழ 90-க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் மத்திய அரசின்
நிலுவையில் இருக்கின்றன. அதிலே தொழில் உரிமம் வழங்கு
வதில் மத்திய அரசு ஆண்டுக்கு ஆண்டு குறைத்துக் கொண்டே
வந்திருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்
டிருக்கிறேன்.

1977-ல் மத்திய அரசுநமக்கு 32 உரிமங்கள் கொடுத்திருக்
கிறது. 1978-ல் 28 தான் கொடுத்திருக்கிறது. 1979-ல் 26 தான்
மத்திய அரசு வழங்கியிருக்கிறது. எனவே, அங்கே இருக்கிற
90-க்கு மேற்பட்ட உரிமங்களையும் நமக்கு வழங்க வேண்டும்
என்று இந்த மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல, அசோக் லேலண்ட் நிறுவனத்தைப் பொறுத்த
வரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்
னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்





கள் சொன்ன அந்த குற்றச்சாட்டுகளுக்கு எனக்கு முன்னாலே
பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் தெளி
வாக பதில் சொல்லியிருக்கிறார்கள். அரசினுடைய தொழில்
கொள்கையைப் பொறுத்த வரையில், இங்கே மாடு வருகிறது,
கட்டினால் கட்டுங்கள், இல்லையென்றால் போங்கள் என்ற
அளவிலேதான் எங்கள் கொள்கை இருக்கிறது என்று சொன்
னார்கள். ஆனால் இந்த அரசின் கொள்கையைப் பொறுத்த
அளவில் வருகிற அந்த மாடு நல்ல மாடாக இருந்தால், வேலைக்கு
உதவியாக இருந்தால், அதைக் கட்டி வைத்துக் கொள்ளுவோம்.
வேலைக்கு உதவாத மாடாக இருந்தால், இங்கேயே தின்றுவிட்டு
மீண்டும் எங்கேயோ போய்விடும் என்ற நிலைமையில் இருக்கிற
மாடாக இருக்குமானால், அதை விட்டு விடுகிற அந்தக் கொள்
கையைத்தான் அரசு பின்பற்றி வருகிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாட்டினுடைய உயரம் என்ன?
அகலம் என்ன? என்று அதைப் பற்றித் தெரியவில்லை; ஆனால்
மாடு கெட்ட மாடு, அல்லது நல்ல மாடு என்று உங்களுக்கு
எப்படித் தெரியும்? எவ்வளவு பேர்களுக்கு வேலை கொடுக்கப்
போகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியவில்லை. நீங்கள்
எப்படி அந்த மாட்டைப் பிடித்துக் கட்டப் போகிறீர்கள்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ஒட்டு மொத்த
மாக புராஜக்ட்ஸ் என்ற அளவிலே அவர்கள் அறிக்கையை
நமக்குத் தரவில்லை. ஆனால், வேறு மாநிலங்களிலே அவர்
களுக்கு என்னென்ன சலுகைகள் கொடுக்கிறார்கள் என்பதை
அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். நான் சிப்காட்டைப்
பொறுத்த வரையில் இன்னின்ன தொழிலுக்கு இவ்வளவு கடன்
என்ற கணக்கு நம்மிடத்திலே இருக்கிறது. ஆனால் அவர்கள்
அரசாங்கத்திலே கொடுத்திருக்கிற விவரம் இந்த அரசின்
கணக்கிலே இருக்கிற விவரத்தைவிட, அதிகமாக உபரியாக
இருக்கிறது. குறிப்பாக, மகாராஷ்டிரத்திலே என்று எடுத்துக்
கொண்டால், அவர்கள் 25 கோடி ரூபாய் அளவுக்குக் கூட
தொழில் துவங்க உபரியாகக் கொடுத்து உதவி செய்
கிறார்கள் என்றும், அப்படிப்பட்ட உதவிகளை நாம் செய்ய
முடியுமா என்றும் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆனால்,
துவங்க இருக்கிற தொழில் என்ன தொழில் என்பதைப் பற்றியோ
அல்லது எவ்வளவு கோடி ரூபாய் செலவிலே துவங்க இருக்கி
றார்கள் என்பது பற்றியோ இன்னும் அவர்கள் முடிவாகச்
சொல்லவில்லை. இன்று கூட அவர்கள் தொடர்பு கொண்டு
கேட்கிறபோது, சொல்லவில்லை. அந்த அளவிலேதான்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாம் கொடுக்கிற அந்த
நிலைமை; அதனாலே கிடைக்கிற வேலை வாய்ப்பையும் பலனை
யும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, அது ஒத்து வராத நிலையில்
அதற்கு நாம் ஒத்துக் கொள்ளவில்லை என்று அவர்கள் பேசு
கின்றபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

இங்கே மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் பசைகின்றபோது
சொன்னார்கள். இந்த அரசு தனியார் துகறயை ஊக்கு
விப்பதைப் பொறுத்தவரையில் தாராளமா இருக்கிறதுே
என்றார்கள். பஞ்சாலை தனியார் துறையிலே துவங்கப்
படுகிறது என்று சொல்லுகிறபோது, அதற்குப் பின்னாலே
இருக்கிற பின்னணி என்ன என்று கேட்டார்கள். இப்படி ஒரு
புறத்திலே தனியார் துறையை ஊக்குவிக்கிறபோது கேட்டு
விட்டு, இன்னொரு தனியார் தொழில் இங்கே விரிவுபடுத்து
வதற்காக அவர்கள் கேட்கிற எல்லாச் சலுகைகளையும் கொடுக்க
வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அது மட்டுமல்ல, இதை
யும் கொடுக்கிறபோது மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
இந்த அசோக் லேலண்டு நிறுவனத்திற்கு 25 கோடி, 30 கோடி
உதவி செய்திருந்தால் அப்போது திருப்பிக் கேட்டிருப்பார்கள்.
30 கோடி ரூபாய் அளவுக்கு ஒரு குறிப்பிட்ட தனியார் நிறு
வனத்திற்கு உதவி செய்திருக்கிறீர்களே, அப்படிச் செய்வதற்குப்
பின்னாலே உள்ள பின்னணி என்ன என்று இதே கேள்வியை
மாண்புமிகு உறுப்பினர் நிச்சயமாகக் கேட்கத் தவறமாட்டார்கள்.
எனவே, இந்த அவையிலே இந்த அரசைப் பொறுத்தவரையில்
மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டதைப்
போல தெளிவாக தனியார் துறையைப் பொறுத்தவரையில்
நியாயமாக, நம்மிடத்தில் கேட்கிற நியாயமான உதவிகளைச்
செய்து வருகிறோம். அசோக் லேலண்டைப் பொறுத்த
வரையில் ஓசூரிலும், எண்ணூரிலும் ஏறக்குறைய உற்பத்தித்
திறனை அதிகரிப்பதற்கான இன்னொரு திட்டத்தை வைத்து
இருக்கிறார்கள். அதற்கான உதவிகளைச் செய்கிறோம்.
ஆனால் அவர்கள் கேட்கிற இன்னொரு பிரிவைத்தான் வேறு
மாநிலத்தோடு ஒட்டி கேட்கிற அந்த அளவுக்கு நம்மால் உதவி
செய்ய முடியவில்லை என்று நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.
எனவே, அசோக் லேலண்ட் நிறுவனத்தைப் பொறுத்த
வரையில், அதன் மீது தனியாக விருப்பு, வெறுப்பு எதுவும்
இல்லை. நமக்கு இருக்கிற தொழில் கொள்கையின் அடிப்
படையில் இங்கே முடிவுகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன என்
பதை இந்த மாமன்றத்திலே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டு
இருக்கிறேன். எனவே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு.
துரைமுருகன் குறிப்பிட்டதைப் போல், இந்த அரசின் தொழில்
கொள்கையில் எந்தவிதமான குழப்பமும் இல்லை என்பதையும்,
ஒருவேளை தனியார் துறையை ஊக்குவிப்பதா அல்லது வேண்
டாமா என்பதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன்
அவர்களுக்கும் மாண்புமிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும்
இடையே வேண்டுமானால் ஏதாவது கருத்து வேறுபாடு இருக்
கிறதோ என்னவோ என்று நான் எண்ணுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிற மற்ற ஆலோ
சனைகளைப் பொறுத்தவரையில், இந்த அரசு அவற்றைப்
பரிசீலனை செய்து, அதற்குத் தகுந்த வகையில் வேண்டிய





காரியங்களைச் செய்யும் என்பதை எடுத்துச் சொல்லி, பெரிய
தொழில்கள், நடுத்தர தொழில்கள் என்கிற வகையில் மாண்பு
மிகு உறுப்பினர்கள் கொடுத்து இருக்கிற வெட்டுத் தீர்மானங்
களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை
நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. வி. கிருஷ்ணமூர்த்தி</u> : மாண்புமிகு தலைவர் அவர்
களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற சமயத்
தில் கரும்புக்கு தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள ரூ. 125-க்கும்
கூடுதலாக விலை கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசைக்
கேட்டுள்ளதாகக் கூறினார்கள். அப்படி அதிகமாகத் தர
வேண்டும் என்று கேட்டு இருப்பது எவ்வளவு? ரூ. 125
என்பதை ரூ. 126 அல்லது ரூ. 127 அல்லது ரூ. 150 என்று
ஆக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்களா? குறைந்த
பட்சம் எவ்வளவு உயர்த்த வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்
கள் என்பதை அறிவிக்க இயலுமா?

<u>மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு</u> : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள ரூ. 125 என்கிற
விலையை உயர்த்த வேண்டும் என்று கேட்டு இருக்கிறோம்.
எவ்வளவு உயர்த்திக் கொடுத்தாலும், அதை வாங்கிக் கொள்ள
நாம் மகிழ்ச்சியோடு தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி</u> : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் தொழில் துறை
மானியம், பால் வளத்துறை மானியம், பத்திரப் பதிவுத்துறை
மானியம் ஆகிய மானிய கோரிக்கைகளின் மீது மாண்புமிகு
உறுப்பினர்கள் 16 பேர் கலந்து கொண்டு தங்களது மேலான
கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.
அது மட்டுமல்லாமல், வெட்டுத் தீர்மானங்கள் வாயிலாகவும்
பல்வேறு கருத்துக்களையும், உணர்வுகளையும் மாண்புமிகு
உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே,
இந்த இரண்டு வழிகளின் வாயிலாக இந்தக் கண்ணியமிக்க சபை
யில் அங்கம் வகிக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வு
களை எல்லாம் எங்களாலே உணர முடிகிறது. எனக்கு முன்பு
பேசிய மாண்புமிகு அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் பெரும்
தொழிலைப் பற்றியும், அவர் பொறுப்பிலே இருக்கின்ற துறைகள்
பற்றியும் சில விவரங்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், என்னுடைய பொறுப்பிலே
இருக்கின்ற சிறு தொழில், கிராமத் தொழில் ஆகிய ஊரகத்
தொழில் பற்றிய மானியங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்
கள் கவனத்திற்குக் கொண்டு வந்த சில விவரங்களுக்கு சில
விளக்கங்களைச் சுருக்கமாக உங்கள் மத்தியில் சொல்லலாம் என்று
கருதுகிறேன்.

முதல் கருத்து—இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்தவரை
யில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் குடும்பங்கள் 60
சதவீதத்துக்கும் மேலாக இருக்கிறார்கள். நாட்டில் வேலை
இல்லாதவர்களில் 10-ல் ஒருவர் தமிழ் நாட்டில் வேலை
தமிழ் நாட்டில் வேலை இல்லாதவர்கள் உள்ளார்.
இலட்சம். முழு நேர வேலை இல்லாத எண்ணிக்கை 17
அதை விடப் பன்மடங்கு ஆகும். இந்தச் தொழிலாளர்கள்
அரசாங்கத்தின் நீண்டகாலக் கொள்கை—அன்னவரின் சூழ்நிலையில்
கைத் தரத்தை நன்கு உயர்த்த வேண்டும் என்று வாழ்க்
அனைவருக்கும் உடனடியாக உண்ண உணவும், இருந்தாலும்,
யும் கிடைக்கும் வகையில் வேலை வாய்ப்புக்கள் உடுக்க உடை
வேண்டும் என்பதைக் குறுகிய காலக் கொள்கையாக கொடுக்க
தமிழக அரசு கொண்டுள்ளது. இந்த இன்றைக்குத்
தொழில் துறையிலும் கிராமப்புறங்களில் அடிப்படையில்தான்
பெரும் அளவில் வேலை வாய்ப்புகளை பிற்பட்ட பகுதிகளில்
எடுக்கப்பட்டு இருக்கின்றன. விரிவாக்கும் முயற்சிகள்

[பிற்பகல் 2-30]

கடந்த ஆண்டு 1,50,000 வேலைவாய்ப்புகளை
வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததற்கு உருவாக்க
அதற்கு மேலாகவே 2,33,000 வேலைவாய்ப்புகளை மாறாக
யிருக்கிறோம். இன்னும் பல்வேறு திட்டங்களை உருவாக்கி
ரமாகச் செயல்படுத்தி நடப்பாண்டில் 2,65,000 மேலும் மும்மு
கள் உருவாக்கப்படும். வேலைவாய்ப்பு

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சங்கரய்யா
திரு. பெருமாள் அவர்களும் பேசுகின்றபோது அவர்களும்,
களை நல்குகின்ற வகையில் ஒன்றைக் சில கருத்துக்
இன்றைக்கு சிறு தொழில் துறையில் மிக குறிப்பிட்டார்கள்.
யாகவும் செயல்பட்டுக்கொண்டிருக்கிற வேகமாகவும் எழுச்சி
சங்கம் விரிவாகவும் பரவலாகவும் தொழில் கூட்டுறவுச்
புதியதொரு சூழல் தமிழகத்தில் வந்து, அதே முறையில்
தொடக்கமாக இருக்கவேண்டுமென்று உருவாவதற்கு அது ஒரு
சொன்னார்கள்.

கடந்த மூன்று ஆண்டுகளில் மாண்புமிகு புரட்சித்
ஆட்சியில் அதில் தீவிர கவனம் தலைவர்
குறிப்பாகத் தீப்பெட்டித் தொழில் செலுத்தப்பட்டிருக்கிறது.
லாம். அதைப்போல நீலகிரி வளர்ச்சியைக் குறிப்பிட
விவ்சாயம் செய்கிற சிறு சிறு போன்ற பகுதிகளில் தேயிலை
நன்மை பயக்குகின்ற வகையில் தேயிலை விவசாயிகளுக்கு
தொழிற் சங்கங்களை நிறுவி, அதிலே தேயிலை கூட்டுறவுத்
கணக்கான மக்களுக்கு இன்றைக்கு பல்லாயிரக்
வேலைவாய்ப்பை உருவாக்க



இன்றைக்குப் பரவலாக அந்த முயற்சியின்
முடிந்தது. ஆனால் வினாவினை சிலர் நியாயமான
மீது ஒரு ஐயப்பாட்டினை, அதற்குப் பதில் கூறுவது
முறையில் எழுப்புகிறார்கள்.
என்னுடைய தார்மீகக் கடமை என்று கருதுகிறேன்.

குறிப்பாக தீப் பெட்டித் தொழிலில் வேலை செய்கின்றவர்
களின் ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூபாய் 3 அல்லது 5 தான்
கிடைக்கிறது. இது எவ்வாறு போதும்? இவ்வாறு வேலை
வாய்ப்புகளை உருவாக்கி என்ன பயன் என்ற ஒரு நியாயமான
ஐயப்பாட்டினை சிலர் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.
வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கும் ஒரு குடும்பத்தின் தலை
வன் இந்த அரசின் ஊரக தொழில் வளர்ச்சித் திட்டத்தின்
பயனாக நாள் ஒன்றுக்கு 5 ரூபாய் ஊதியம் பெறும் வேலை
வாய்ப்பைப் பெறுவதாக இருந்தால், அதன் பயனாக அந்தக்
குடும்பம் வறுமைக் கோட்டிற்கு மேலே செல்ல வாய்ப்பு
இருக்கிறது. இதைக் கூர்ந்து பார்க்கும்போது தொழில் துறை
யில் கடந்த ஆண்டு 2,33,000 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்
பட்டன என்றால் அதன் பயனாக மட்டும் 1,50,000 குடும்
பங்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே இருந்து வறுமைக் கோட்
டிற்கு மேலே சென்றிருக்கும் என்று பெருமையோடு சொல்ல
லாம். இது இந்த மாமன்றத்திற்கும் மக்களுக்கும் மன நிறைவு
தரும் சாதனை என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறு தொழில்கள் நன்கு வளரவேண்டிய அவசியத்
அடுத்து, சிறு தொழில் முனைவர்கள் எண்ணிக்கையை
தையும் அதன்மூலம் அரசு பல விதிமுறைகளைத் தளர்த்தி
அதிகரிக்கவும் தமிழக நண்பர்கள் சொன்னார்கள். சிறுதொழில்
இருக்கிறது. பல இன்றைய தினம் நடைமுறையில் ''ப்ரோசீ
செய்பவர்களுக்கு டிஃப்பிகல்டீஸ்'' இருக்கிறது என்று சொன்னார்கள்.
ஜரல் தொடங்கவேண்டுமென்றால் தொழில் முனை
ஒரு தொழிலைத் செல்லவேண்டியிருக்கிறது. வங்கிக்குச்
வர் பல இடங்களுக்குச் நகராட்சி நண்பர்களிடம் சென்று அனுமதி
செல்ல வேண்டும்; இப்படி பல்வேறு நிலைமைகள் இருக்கின்
வாங்க வேண்டும். எல்லாம் சுருக்கி ஓரே இடத்தில் இருந்
றன. அவைகளை வளர்ச்சிக்கு, தொழில்களைத் தொடங்கும்
தால் தொழில் ஈடுபடுகின்றவர்களுக்கு அது உந்துகோலாக
முயற்சியில் என்று சொன்னார்கள். அதை அனுசரித்து இன்று
இருக்கும் அரசு பல விதிமுறைகளைத் தளர்த்தி இருக்கிறது.
தமிழக சலுகைகளை கடந்த ஓராண்டு காலத்தில் அளித்
பல புது அந்த விவரங்கள் எல்லாம் இந்தக் கொள்கை
திருக்கிறது. குறிப்புகளில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கின்றன.
விளக்கக் கருதி, அவைகளை நான் குறிப்பிட விரும்ப
நேரம் மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்கு அவை
வில்லை. கொண்டுவர விரும்புகிறேன். என்னென்ன விதி
களைக்

(திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி) [1980 ஜூலை 19

களைத் தளர்த்தியிருக்கிறோம். என்னென்ன விதிகளை மாற்றி
யிருக்கிறோம் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.
இப்போதுதான் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எடுத்துப்
பார்க்கிறார்கள். நிச்சயமாக படித்துப் பார்ப்பார்கள் என்று
கருதுகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் ஏற்கனவே படித்து
விட்டேன் என்று சொல்வதற்காக புத்தகத்தை எடுத்துக் காட்டி
னேன். ஒருவேளை அமைச்சர் படிக்காமல் இருந்தால் இனி
படித்துப் பார்க்கட்டும்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே,
திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களை கால் நூற்றாண்டாகவே
எனக்குத் தெரியும் என்ற காரணத்தால் அவர் எதற்காகச்
சொல்கிறார் என்பது எனக்குத் தெரியும் என்றாலும் தலைவ
ரவர்களே, இந்தப் பல்வேறு உத்தரவுகளின் பயனாக தமிழகத்
தில் அனைத்துப் பிரிவிலுள்ள சிறுதொழில் முனைவர்களும்
முழுமையாகப் பயனடையும் வகையில் இந்தத் தொழில் துறை
நிர்வாகம் இவ்வாண்டு செயல்படும் என்று உறுதி கூறுகிறேன்.

இந்தச் சிறுதொழில் முனைவர்களுக்கேற்ற வகையில் தமிழ்
நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப்பொருள்களைப் பயன்படுத்தி
லாபகரமாக செயல்படக்கூடிய புதிய திட்டங்களைத் தீட்டுவது
அவசியமாகிறது. இன்றைக்கு ஒரு குறையை எடுத்துச்
சொன்னார்கள். கிராமங்களிலே நல்ல வசதி இருக்கின்றது.
மூலப்பொருட்கள் இருக்கின்றன. மனித சக்தி இருக்கின்றது.
ஆனால் இவைகளை இணைத்து திட்டமிட்டு அவர்களுக்கு
வழிகாட்டுகின்ற ஒரு அமைப்பு, ஒரு நிறுவனம் இல்லாத ஒரு
பெரும் குறை இருக்கின்றது என்ற விவரத்தை பல மாண்பு
மிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்தக்
குறையைப் போக்குகின்ற வகையில் இந்தப் பணியை மேற்
கொள்வதற்கு இதனைத் தமிழக அரசினுடைய கொள்கை
திட்டமாக மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையிலே
நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். அதையொட்டி இன்றைய
தினம் சிறுதொழில் வளர்ச்சி மையம் ஒன்றை ஆரம்பிக்க
அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில்
உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு
கிறேன். அந்த மையத்தினுடைய பெயர்

"Centre for appropriate Technology"

அந்த மையத்தினுடைய வாயிலாக இந்தச் சிறு தொழில் செய்
கின்ற நண்பர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கி
நல்ல திட்டங்களையும் கொள்கை விளக்கங்களையும் கொடுத்து



1980 ஜூலை 19] (திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி)

எப்படித் தொழில் செய்வது என்பது போன்ற விவரங்களை
எல்லாம் அந்த

Centre for appropriate Technology

ஏற்றுக்கொள்கிற வகையில் அந்த அமைப்பின் வாயிலாகச்
செய்வதற்குத் தமிழக அரசு இன்றைக்கு முனைந்து செயல்
பட்டுக்கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் சொல்
லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற நேரத்
திலே மாவட்டத் தொழில் மையத்தைப் பற்றிச் சொன்னார்கள்.
மாவட்டத் தொழில் மையங்கள் கடந்த இரண்டாண்டு
காலமாக மகத்தான திருப்பத்தை தமிழகத்தினுடைய தொழில்
துறையிலே உருவாக்கி இருக்கின்றது. இன்றைக்கு ஒரு விவ
ரத்தை இங்கே எடுத்துக் காட்டுவது என்னுடைய கடமை
என்று கருதுகிறேன். டெவலப் கமிஷனர், ஸ்மால்
ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ்—மத்திய அரசின் சிறு தொழில்
வளர்ச்சி நிறுவனத்தின் லோக் உத்யோக் சமாச்சார் என்ற
பிரசுரத்தில் 1979 ஜூலை இதழில் மாவட்டத் தொழில்
மையங்கள் செயலாற்றுவது பற்றி அதாவது அகில இந்திய
ரீதியில் 22 மாநிலங்களில் எப்படி வேலை செய்கின்றது
என்று பரிசீலனை செய்து, ஆய்வு செய்த பிறகு அது முடிவை
அறிவித்திருக்கின்றது. அந்த முடிவிலே என்ன சொல்லப்
பட்டிருக்கின்றது என்றால்

"In order to arrive at the overall relative performance of the
programme in different states, maximum weightage has been provided
to generation of employment followed by number of new units
established, sick units assisted, credit provided by financial institu-
tions and a number of entrepreneurs identified. With the application
of this weightage, the implementation of the District industrial pro-
gramme happens to have been done best in Tamil Nadu."

என்று மத்திய அரசிலே இருக்கின்ற அந்த நிறுவனம் நல்ல
நிலைமையை எடுத்துச் சொல்லி இருக்கின்றது. அந்த வகையில்
அது பல வகைகளில் சிறு தொழில் செய்கின்ற அந்த முனை
வர்களுக்குப் பயனாக இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில்
சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே பட்டு வளர்ச்சியைப் பொறுத்த
வரையில் கிராமப் பொருளாதாரத்தில் ஒரு திருப்பத்தை,
ஒரு சிறப்பான மாற்றத்தை இந்தப் பட்டு வளர்ச்சி
இன்றைக்கு உருவாக்கி இருக்கின்றது. இந்தப்
பட்டுத் தொழிலைப் பொறுத்தவரை அது சென்ற ஆண்டுதான்
துவக்கப்பட்டது. பட்டுத் தொழிலை வளர்க்கும் இத் திட்டம்
1979 ஆம் ஆண்டுதான் துவக்கப்பட்டது. இந்தப் பட்டு

(திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி) [1980 ஜூலை 19

வளர்ப்பு 1,57,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றது.
கடந்த இரண்டு ஆண்டுகளில் முசுக்கொட்டைச் செடி பயிரிடும்
பகுதி 21,419 ஏக்கரிலிருந்து 31,470 ஏக்கராக அதிகரிக்கப்
பட்டிருப்பதால் அதனால் 50 ஆயிரம் பேர்களுக்கு வேலை
வாய்ப்பு இன்றைக்குக் கிடைத்திருக்கின்றது.

[பிற்பகல் 2-40]

இந்த நடப்பு ஆண்டில், அதாவது 1980–81 ஆம் ஆண்டில்
மேலும் 8,000 ஏக்கரில் முசுக்கொட்டை பயிரிடப்பட்டு மேற்
கொண்டு 40,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க இந்த
அரசு கருதியிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

இதனைப் போலவே பட்டு வளர்ப்புத் தொழிலிலே பல
புதிய திட்டங்களை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது என்று
சொல்லி சிறு தொழில்களைப் பற்றி முடித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பால் வளத்தை எடுத்துக் கொண்டால், இந்தப்
பிரச்சினையைப் பற்றி பல நண்பர்கள் இங்கே பல விவரங்
களை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாகச் சென்னையில்
கடந்த ஒரு மாதகாலமாக அவர்னஸ் என்று சொல்
லக் கூடிய ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. பால் நுகர்
வோர்கள் என்று சொல்லப்படுகிற, சென்னையிலே உள்ள மக்க
ளில் 10 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் இந்தப் பால் வள நிறு
வனத்தின் வாயிலாக பயன் பெற்று வருகிறார்கள்.
சமீபத்தில் அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக இன்றைய
தினம் அவர்கள் ஓரளவிற்கு நல்ல பாலைப் பெற்றிருக்கிறார்கள்
என்பதைச் சொல்லத்தான் வேண்டும்.

முற்றிலும் தீமைகள் முடிந்து விட்டதாகச் சொல்லவில்லை,
முற்றிலும் குறைகள் அகற்றப்பெற்று விட்டதாக நான்
சொல்லவில்லை. ஆனாலும் குறைகள் ஓரளவு குறைவதற்
கான முயற்சிகளை அரசு மனமார எடுத்துக் கொண்டு வரு
கிறது என்பதைத் கூறிக் கொள்கிறேன். இந்த நிறுவனத்தில்
பரிசோதனை செய்கிற அதிகாரிகள் இருக்கிறார்கள். அதைப்
போலவே கண்காணிக்கின்ற அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால்
அவர்களுக்கும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று
தமிழக அரசின் பல்வேறு துறைகளில் ஏற்கனவே இருப்பதைப்
போன்று, அதிலும் குறிப்பாக பல்லவன் போக்குவரத்துக் கழகம்,
மின்வாரியம் போன்று, பெரிய நிறுவனங்களில் உள்ளதைப்
போன்ற, கண்காணிப்பு பிரிவு ஒன்றினை மாவட்டக் காவல் துறை
அதிகாரியின் தலைமையில் இயங்குவது பற்றி விரைவில்
அரசு முடிவு எடுக்கும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.



1980 ஜூலை 19] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

ஒரு போலீஸ் அதிகாரியினுடைய தலைமையில் எப்படி
மின் வாரியம் செயல்படுகிறதோ, எப்படி பல்லவன் போக்கு
வரத்துக் கழகம் கண்காணிக்கப்படுகிறதோ, அப்படியே
இந்தத் துறையிலும் கெடுதல்கள் நடந்தால், தீமைகள்
நடந்தால், குறைகள் ஏற்பட்டால் அதைத் தடுப்பதற்கு ஒரு
காவல் துறையின் படை இருக்கும். தமிழகம் முழுவதும்
இருக்கிற மக்களுக்கு உணவுக்கு அடுத்தாற்போல் இடத்தைப்
பெற்றிருக்கும் இந்தப் பாலில் கலப்படம் செய்கிறார்கள்,
தண்ணீர் ஊற்றுகிறார்கள், பல குறைகள் நடை பெறுகின்றன
என்று நுகர்வோர்களிடத்திலிருந்தும், சட்டமன்ற உறுப்பினர்
களிடத்திலிருந்தும் பல புகார்கள் வந்ததின் அடிப்படையிலும்,
மக்களுக்கு மிகவும் தேவையான அடிப்படை உணவுப்
பொருளுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும், அதுவே மக்கள்
ஆட்சியின் முதற் கடமை என்ற வகையில் மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களுடைய விழுமிய தலைமையில்
இருக்கிற இந்த அரசு இன்றைய தினம் இத்தகைய நடவடிக்
கையை எடுத்து இருக்கிறது.

அது மட்டும் அல்ல, இன்றைக்குப் பால் வள நிறுவனத்தில்
இருக்கிற பல குறைகளில், வினியோகிக்கிற முறையில் சில
குறைபாடுகள் இருப்பதுதான் பொது மக்களிடம் இருந்து
புகார்கள் வருவதற்குத் தலையாய காரணம் என்று நான்
மனதார கருதுகிறேன். அப்படி வினியோகத்தில் இருக்கிற
குறையை—நெருடலை மாற்றுகிற வகையில்தான் தமிழக
அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இன்றைக்கு ஏறத்தாழ 10 லட்சம் மக்கள் பால் வள
நிறுவனத்தின் வாயிலாகப் பயன் பெற்று வருகிறார்கள்.
இந்த நிறுவனத்தில் குறைபாடுகள் இருப்பதைப் போக்க
சில காலமாகவே அரசு யோசித்து வந்தது. பால் வினியோகிக்
கும் அமைப்பில் நுகர்வோர்களும் இடம் பெறாவிட்டால்
இத்தகைய ஒழுங்கீனச் செயல்களை தடுத்து நிறுத்த முடியாமல்
போய்விடும் என்று அரசு கருதுகிறது.

ஆகவே, சென்னை நகரில் பால் வள நிறுவனம் இப்
போது இருக்கும் அமைப்பைப் தனியாகப் பிரித்து, அதாவது
இன்றைக்கு பால் வள தலைமை நிறுவனத்திலிருந்தே மொத்த
மாகப் பால் வினியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள்
அதனைத் தனியாகப் பிரித்து, அதன் நடவடிக்கைகளை ஒரு
நுகர்வோர் கூட்டுறவு நிறுவனத்திடம் ஒப்படைக்க அரசு
முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு மாநகராட்சி, அல்லது வட்
டம் அல்லது அதனைப் போன்றதொரு நிர்வாகப் பகுதியில்
அவை பிரித்துக் கொடுக்கப் பெறும்.

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1980 ஜூலை 19

இன்றைக்கு சென்னை நகரில் 150 வட்டங்கள் இருக்கின்றன. அந்த 150 வட்டங்களை வைத்து ஆங்காங்கே நுகர்வோர் கூட்டுறவு பால் சங்கத்தை நிறுவி, அந்த நுகர்வோர் கூட்டுறவு பால் சங்கத்தின் வாயிலாக, பாலை மக்களுக்கு வினியோகம் செய்தால் நிச்சயமாக இப்படிப்பட்ட குறைபாடுகளை, இப்படிப்பட்ட தீமைகளை, இப்படிப்பட்ட கெடுதல்களைத் தடுக்க முடியும் என்று கருதி, அவ்வாறு மாநகராட்சி வட்டம் அல்லது அது போன்ற நிர்வாகப் பகுதியில் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களை அமைத்து அவர்களிடம் பால் விநியோகிக்கும் நடவடிக்கைகளை அரசு ஒப்படைப்பதற்கான முயற்சிகளைச் செய்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவசியம் ஏற்பட்டால் இந்தச் சங்கங்கள் ஒரு உயர்மட்ட நிறுவனத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்படும்.

தமிழ்நாடு பால் வள நிறுவனத்திடமிருந்து நுகர்வோர் உள்ளிட்ட இந்த அமைப்பு இவ்வாறு மாறுதல் பெற்று, அதனைச் செயல்படுத்த ஒரு தனி அதிகாரி நியமிக்கப் பெறுவார். இப்படிப் பல முயற்சிகள் எடுத்து இந்தத் துறையிலே நல்ல மாறுதல்களை செய்ய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இன்றைக்கு முயன்று கொண்டிருக்கிறது.

அதேபோல பத்திரப்பதிவுத் துறை பற்றி பல உறுப்பினர்கள் பல விவரங்களை கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்கள் வாயிலாகவும், இங்கே பேசிய நேரத்தில் சொன்ன உணர்வுகள் வாயிலாகவும் இந்த அரசு உணர்ந்து வந்திருக்கிறது, அதற்குரிய அதிகாரிகளை, சம்பந்தப்பட்டவர்களை நான் கலந்து உரிய நடவடிக்கைகள் எடுப்பேன் என்று சொல்லிக் கொண்டு இந்த நான்கு மானியக் கோரிக்கைகளையும் அருள்கூர்ந்து நிறைவேற்றித் தரவேண்டும், வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு என்று கேட்டுக் கொள்கிறேன்.

### மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள்.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

திருவாளர்கள் டி. மணி, கே. எம். தங்கமணி, பொ. உத்திராபதி ஆகியவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பக் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. பொ. விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாக கருதப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : மானியக் கோரிக்கை எண். 24— தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,76,05,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்,



1980 ஜூலை 19]

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண் 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

திருவாளர்கள் கே. எம். தங்கமணி, ஜே. ஹேமச்சந்திரன், ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் ப. சுந்தரம், பொ. விஜயராகவன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—'' மானியக் கோரிக்கை எண். 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ.5,77,20,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் '',

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண். 6 — பத்திரப்பதிவு.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், என். சிவஞானம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு. பொ. விஜயராகவன் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—'' மானியக் கோரிக்கை எண் 6 பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,08,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்.

திருவாளர்கள் சு. பாலன், இல. பலராமன், ரா. கிருஷ்ணன், செ. சிவசாமி, ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திரு. பொ. விஜயராகவன் இருப்பிடத்தில் [1980 ஜூலை 19
அவருடைய வெட்டுத் தீர்மானம் இல்லாததால்
ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது. திரும்பப் பெற்றுக் கொள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள
கேள்வி :—''மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்
டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 73,01,000-க்கு மேற்படாத
தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்
பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு
வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய
அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை மறுதினம் (21—7—
1980) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-49 மணிக்கு ஒத்தி வைக்கப்
பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

49. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள்
வரி விதிப்பு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து
உள்துறையின் (போக்குவரத்து I) 11—14—1980 ஆம் தேதி
யிடப் பெற்ற 1159 ஆம் எண். அரசாணையில் வெளியான
அறிவிப்பு (தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள்
வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2)
பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*80. கோரிக்கை எண் 6, பத்திரப் பதிவுத் துறை பற்றிய
கொள்கை விளக்கக் குறிப்பு, ஜூலை 1980 (தமிழ், ஆங்கிலம்)

**81. கோரிக்கை எண். 10 பால் பண்ணை வளர்ச்சித்
துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1980-81 (தமிழ்,
ஆங்கிலம்).

**82. 1979-80-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பால்வள
நிறுவனத்தின் ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

@83. தொழில் கொள்கையும் திட்டங்களும், 1980-81
(தமிழ், ஆங்கிலம்)

84. 1980—81ஆம் ஆண்டில் தொழில்கள் பற்றிய சாத
னைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

*—16—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றன.
**—17—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்
பெற்றன.
@—18—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.



[1064 ஆம் பக்கத்தில் உள்ள
அடிக்குறிப்பைக் காண்க.]

## தொழில் கொள்கையும் திட்டங்களும்,

1. கிராமப்புறங்களில் தொழில்களை உருவாக்கி வேலை
வாய்ப்பளித்தல்.—சிறு தொழில்களையும் கிராமத் தொழில்
களையும் உருவாக்கி ஏராளமான பேருக்கு வேலை வாய்ப்பளிக்க
வேண்டும் என்பது தமிழ்நாடு அரசின் தொழில் கொள்கையாகும்.
கடந்த மூன்றாண்டுகளில் இவ்வகையில் சிறு தொழில்கள் கிராமத்
தொழில் மூலம் அதிகமான பேருக்கு வேலைவாய்ப்பு கிட்டி
யுள்ளது. ஏராளமான பேர் வேலையற்றிருப்பதையும் வறுமைக்
கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் வேலையின்றி வாழவழியின்றி
வருந்துவதையும் கண்டுள்ள நமது அரசு குறுகிய காலத்திற்குள்
அவர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிப்பதாக அனைத்து
தொழில் திட்டங்களும் அவற்றில் செய்யப்படுகின்ற முதலீடு
களும் அமைய வேண்டும் என்ற தெளிவான முடிவை எடுத்
துள்ளது. சிறு தொழில்கள் வளர்ச்சிக்கும் கிராமத் தொழில்கள்
வளர்ச்சிக்கும் முதன்மை அளிக்கும்போது, பெரிய நடுத்தரத்
தொழில்களும் வளர்ச்சி பெற அரசு உரிய முயற்சிகளை எடுக்கும்.
இதனால் தொழிலின் அடிப்படை மேலும் வலுவடைவதோடு
சிறு தொழில்களுக்கும் பெருந் தொழில்களுக்கும் தொடர்பு ஏற்
பட்டு மேலும் பலருக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

2. வளவாயில்களையும் உழைப்பையும் பயன்படுத்துதல்.—
ஒரு கிராமத்தில் அமைந்துள்ள வளவாயில்களையும் மூலப்
பொருள்களையும் உழைப்பையும் பயிற்சித் திறனையும் பயன்
படுத்தி தொழில்கள் ஆங்காங்கே உருவாக்கப்பட்டால் தொடர்
பான கொள்கைகளும் திட்டங்களும் நல்ல வெற்றிபெற முடி
யும். கிராமத்தில் இயற்கையாக அமைந்துள்ள வாய்ப்புக்ளை
நல்ல முறையில் பயன்படுத்தி ஆதாயம் தரவல்ல திட்டங்களைக்
கண்டறிந்து அடிப்படை வசதிகளை உருவாக்கி, தேவையான
கடன் உதவியையும் பிற உதவிகளையும் அளித்து பயிற்சியையும்
வழங்கி உற்பத்தியைப் பெருக்கவல்ல தொழில் நுட்ப உத்தியினை
அறிமுகப்படுத்தி, விற்பனைக்குத் துணை செய்வதன் மூலம்
அவற்றை ஆதாயம் தரத்தக்க சொத்துக்களாக மாற்றலாம்.
தொழில்கள் அமைந்துள்ள இடங்களிலும் மாநில அளவிலும்,

இப்பணியை நிறைவேற்றத் தற்போதுள்ள நிறுவன அமைப்புகள்
வலுப்படுத்தப்படும். தேவைப்படும் இடங்களில் புதிய முகவர
மைப்புகள் அமைக்கப்படும்.

3. மாவட்டத் தொழில் நிலையங்கள்.—மாவட்டத் தொழில்
நிலையங்களை அமைத்ததன் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில்
தொழில் துறையில் தக்க முன்னேற்றத்தை நாம் கண்டுள்ளோம்.
கிராமத் தொழில்களை உருவாக்கவும், சிறு தொழில்களைத்
தொடங்குவோருக்குப் பலவகையிலும் உதவி செய்யவும்
தலையாய முகவரமைப்பாக இந்நிலையங்கள் செயற்பட்டு வரு
கின்றன. சென்னை மாநகரில் நகர்ப்புறப்பகுதிகள் நீங்கலாக பிற
மாவட்டங்களிலும் இத்தொழில் நிலையங்கள் இப்போது அமைக்
கப்பட்டுள்ளன. 1979-80-ல் 67,000 பேருக்கு வேலைவாய்ப்
பளிக்கும் வகையில் 5,632 புதிய சிறு தொழில்களை உருவாக்கிய
தில் இத்தொழில் நிலையங்கள் காரணமாக இருந்துள்ளன.
மாவட்டங்களில் தொழில்களைத் தொடங்குவதற்கான தொழில்
நுட்பப் பொருளாதார ஆய்வுகளை நடத்துதல், ஆதாயம் தர
வல்ல திட்டங்களைக் கண்டறிதல், திட்டப்பணிகளை வகுத்தல்,
தொழில்களைத் தொடங்க தொழிலதிபர்களுக்கு உரிய ஊக்க
மளித்தல், தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து
உதவிகளையும் அளித்தல் ஆகிய பணிகள் இந்நிலையங்களிடம்
ஒப்படைக்கப்பட்டுள்ளன. கிராமத் தொழில் திட்டத்தையும்,
கிராம வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டத்தையும், சுய வேலை
வாய்ப்புப் பெற வேண்டி கிராம இளைஞர்களுக்குப் பயிற்சி
அளிப்புத் திட்டத்தையும் செயல்படுத்துவதிலும் மாவட்டத்
தொழில் நிலையங்கள் பங்கேற்கின்றன. மாநில அளவில் அரசு
தலைமைச் செயலாளர் தலைமையில் உள்ள குழு இந்த மாவட்ட
தொழில் நிலையங்கள் செயல்படுவதை ஆழ்ந்து கவனித்து வரு
கிறது. இந்த நிலையங்களின் வருங்காலப் பணிபற்றி மத்திய
அரசு இப்போது ஆராய்ந்து வருவதாகத் தெரிய வருகிறது.
இந் நிலையங்கள் குறுகிய காலத்திற்குள் நல்ல முறையில் செய
லாற்றி சிறந்த பயனை அளிக்கின்றன. இந்த மாவட்டத்
தொழில் நிலையங்கள் தொடர்ந்து இருந்து வருவதோடு அவற்றை
மேலும் வலுப்படுத்தி தேவையான நிதி உதவியை மத்திய அரசு
வழங்க வேண்டுமென்று மாநில அரசு வலியுறுத்தும்.



4. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி.—தமிழ் நாட்டில்
தொழில் வளர்ச்சியின் வேகம் குறைந்து விட்டதாக சிலர் குறை
கூறுகின்றனர். அவ்வாறு சொல்வதற்கு ஆதாரமாக அவர்கள்
புள்ளி விவரங்கள் எதையும் அளிக்கவில்லை. தமிழ் நாட்டில்
ஆண்டு தோறும் சராசரி தொழில் உற்பத்தி 1976 ஆம் ஆண்டில்
137·6 புள்ளியாக இருந்தது. (அடிப்படைப் புள்ளி 1970: 100)
1978-ல் 164·1 புள்ளியாக உயர்ந்தது. 1979-ல் இது மேலும்
5 சதவீதம் அதிகரித்தது (172·3). மாநிலத்தில் பதிவு பெற்ற
தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 1977 ஆம் ஆண்டில் 8,508
ஆக இருந்தது. 1979-ல் 9,139 ஆக பெருகியுள்ளது. தொழிற்
சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை
1977-ல் 5·23 இலட்சமாக இருந்தது. 1979-ல் 5·73 இலட்சமாக
உயர்ந்துவிட்டது. தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும்
மின் சக்தியின் அளவும் 1976-77-ல் 3,051 மில்லியன் யூனிட்டு
களாக இருந்தது. 1979-80-ல் 3,732 மில்லியன் யூனிட்டுகளாக
அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் பதிவு பெற்ற நிறுவனங்களின்
எண்ணிக்கை 1976-77-ல் 186 ஆக இருந்தது. 1979-80-ல்
420 ஆக உயர்ந்திருக்கிறது. புதிதாகப் பதிவு பெற்ற நிறுவனங்
களுக்கு அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் 1976-77-ல் 2,269
இலட்ச ரூபாயாக இருந்தது. 1979-80-ல் 9,959 இலட்ச ரூபாயாக
உயர்ந்தது.

ஆயினும் தமிழ்நாட்டில் அண்மைக்காலத்தில் மின்சக்தி, எண்
ணெய், நிலக்கரி, இரயில் வாகன்கள், இரும்பு, சிமிட்டி போன்ற
இன்றியமையாப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு இருந்த காரணத்
தால் பல தொழில்களும் குறிப்பாக சிறு தொழில்களும் பாதிக்கப்
பட்டுள்ளன. சிறு தொழில்களுக்குத் திங்கள் தோறும் 1,500
வாகன் நிலக்கரி தேவைப்படுகிறது. ஆனால், நமக்குக்
கிடைப்பதோ சராசரியாக 230 வாகன்கள்தான். சிறு தொழில்
களுக்கு ஆண்டு தோறும் ஏறத்தாழ 40,000 டன் இரும்பு,
உருக்குப் பொருள்கள் வேண்டியிருக்க 1979-80-ல் 21,251 டன்
தான் நமக்கு ஒதுக்கப்பட்டது. நிலக்கரி கொள்முதலில் இடர்
பாடுகள் இருந்த காரணத்தால் தமிழ் நாட்டிலுள்ள சிமிட்டி
தொழிற்சாலைகளில் 1979-80-ல் 52,000 டன் அளவில் உற்பத்தி
குறைந்தது. இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி மாநில அரசு

மேலும் அதிக உதவி அளிக்க வேண்டும் என்று தொடர்பான
மத்திய அதிகாரிகளிடம் அடிக்கடி முறையிட்டு வந்திருக்கிறது.
தமிழ் நாட்டிலுள்ள தொழிற்சாலைகளின் தேவைகளைக் கருத்
தில் கொண்டு பற்றாக்குறையான மூலப் பொருட்களை இம்
மாநிலத்திற்கு உரிய அளவில் ஒதுக்கும்படி மாநில அரசு மத்திய
அரசை வலியுறுத்தும்.

5. கைத்தறி.—பழங்காலந்தொட்டே மாநிலத்தில் மிக முக்
கியமான குடிசைத் தொழிலாக கைத்தறித் தொழிலே விளங்கி
வருகிறது. இத்தொழிலால் 10 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்
பமைந்துள்ளது. இந்த வகையில் வேளாண்மைத் தொழிலுக்கு
அடுத்த நிலையில் கைத்தறித் தொழிலே நிலவுகிறது. இத்
தொழிலில் ஈடுபட்டுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத்
தொடர்ந்து வேலை வாய்ப்பளித்து, வருமானத்தையும் தேடித்
தர ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. கூட்டுற
வுத் துறையில் மேலும் அதிக நெசவாளர்களைப் பதிவு செய்தல்,
நூல் உட்படத் தேவையான மூலப் பொருட்கள் வழங்குதல்
கைத்தறித்துணி விற்பனையில் தள்ளுபடி அளித்தல் விற்பனை
கும் ஏற்றுமதிக்கும் அமைப்பு முறையிலும் நிதிவகையிலும் உதவு
தல், கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகட்டிக் கொடுத்தல்,
நலத்திட்டங்கள் முதலியன அவற்றுள் முக்கியமான திட்டங்க
ளாகும். கைத்தறி வளர்ச்சி தீவிர திட்டங்கள் நான்கும் ஏற்று
மதியை நோக்கமாகக் கொண்ட உற்பத்தித் திட்டங்கள் இரண்டும்
மத்திய அரசின் உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.
மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களின் பணி நிலைமை
களை ஒழுங்குபடுத்தி சீரமைக்க விரைவில் சட்டம் ஒன்றைக்
கொண்டுவர அரசு கருதியுள்ளது. இத்திட்டங்களைப் பற்றி
கைத்தறித் துணித் தொழில் கோரிக்கைக் குறிப்பில் விரிவாகக்
காணலாம்.

6. கதர், கிராமத் தொழில்கள்.—கதர் கிராமத் தொழில்
களின் வளர்ச்சியில் அரசு அதிக ஆர்வம் காட்டுகிறது. இத்
தொழில்கள் மாநிலத்தில் சுமார் 4 இலட்சம் பேருக்கு வேலை
வாய்ப்பு அளிக்கின்றன. கதர்த் துணிகளை உற்பத்தி செய்து
துறையில் விற்பனை நிலையங்கள் மூலமாகவும் கூட்டுறவுச்



சங்கங்கள் மூலமாகவும் விற்பனை செய்ய ஊக்கமளிக்கப்படுகிறது
மேலும் குறிப்பிட்ட காலங்களில் கதர் துணியின் விற்பனைக்கு
சிறப்புத் தள்ளுபடியும் அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு கதர்-
கிராமத் தொழில் வாரியமும், கூட்டுறவுச் சங்கங்கள் மூல
மாகவும் கைவினைஞர்களுக்கு நேரடியாக உதவியளித்தும்
கிராமத் தொழில் பலவற்றை உருவாக்குவதில் உறுதுணையாக
இருந்தும் இத்துறைப் பிரிவுகள் நற்பணியாற்றி வருகின்றன.
1979–80-ல் பழங்குடியினர் மேம்பாட்டுக்கானத் தனித் திட்டங்
களையும் மலைப் பகுதி வளர்ச்சித் திட்டங்களையும் வறட்சி
யினால் பாதிக்கப்பட்ட பகுதித் திட்டங்களையும் வாரியம் நிறை
வேற்ற எடுத்துக் கொண்டது. 1980–81-ல் நிறைவேற்றப்
படும் கதர், கிராமத் தொழில் திட்டங்களின் பயனாக மேலும்
சுமார் 35,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும். கதர் கிராமத்
தொழில் கோரிக்கைக்கான தனிக் குறிப்பில் இத்திட்டங்களை
விரிவாகக் காணலாம்.

7. சிறு தொழில்கள். —1979–80-ல் இம்மாநிலத்தில் 6,750
சிறு தொழில் பிரிவுகள் செயற்படத் தொடங்கின. அதனால்,
80,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்தது. (கிராமப்புற
தொழில் பிரிவுகளிலும் மாவட்டத் தொழில் நிலையங்களிலும்
பணியாற்றுவோரின் எண்ணிக்கை இதில் அடங்கியுள்ளது.)

தொழில் துறை, 1978 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில்
297 தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தது ; இது
1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் 559 ஆக உயர்ந்தது.
இச்சங்கங்கள், 1979–80-ல் ரூ. 2,489.33 இலட்சம் மதிப்புள்ள
பொருள்களை உற்பத்தி செய்தது. தேயிலை தீக்குச்சி தொழில்
களுக்குத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதில் குறிப்
பிடத்தக்க வெற்றி கிட்டியுள்ளது. 12,434 ஏக்கர் பரப்பளவில்
12 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் செயல் பட்டு
வருகின்றன ; அங்கு 35,730 பேர் பணியாற்றுகின்றனர்.
கடந்த இரண்டாண்டுகளில் இம்மாநிலத்தில் தீக்குச்சி தொழில்
குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ந்துள்ளது. ஆயத் தீர்வையில்
ஏற்பட்டுள்ள மாற்றங்களை அனுகூலமாக எடுத்துக் கொண்டு,
மாநில அரசு, புதிதாக ஏறக்குறைய 3,000 தீக்குச்சித் தொழில்
பிரிவுகளை 30 தீக்குச்சி சங்கங்கள் மூலமாக உருவாக்கியுள்ளது ;

கதர்-கிராமத் தொழில் வாரியம் மேலும் ஏறக்குறைய 2,000
தொழில் பிரிவுகளை உருவாக்கியுள்ளது. இப்புதிய தீக்குச்சிப்
பிரிவுகள் ஏறக்குறைய ஒரு இலட்சம் பேர்களுக்கு வேலை
வாய்ப்பு அளிக்கும் ; அவர்களில் 90 சதவீதத்தினர் பெண்களாக
இருப்பர். தீக்குச்சித் தொழில் பணியாளர் கூட்டுறவுச் சங்கங்
கள், 1978-79-ல் 100 ஆக இருந்து, 1979-80-ல் 255 ஆக உயர்ந்
தன.

கிராமப் பகுதிகளில் கணிசமான அளவுக்கு வேலைவாய்ப்பு
அளிக்கும் பிற தொழில்கள், தோல், கயிறு ஆகும். தொழில்
துறை, சிறிய அளவில் தோல் பதனிடுவோருக்கு உதவ வேண்டி,
தோல் நேர்த்தி செய்வதற்கு பணித் தொழில் கூட்டுறவுச்
சங்கங்களை அமைத்து வருகிறது. கதர்-கிராமத் தொழில்
வாரியம் கிராமத் தொழில்கள் மேம்பாடடைய, தனது திட்டங்
களின் ஒரு பகுதியாக கிராமங்களில் தோல் தொழில் பிரிவுகளை
உருவாக்கி வருகிறது. நாட்டில் தேங்காய் உற்பத்தியில் தமிழ்
நாடு இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. இம்மாநிலத்தில்
சுமார் 36,000 டன் கயிறு தற்போது உற்பத்தி செய்யப்படுகிறது.
அதனால், சுமார் 23,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புக்
கிடைத்துள்ளது. தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பது,
மட்டையை பலவிதத்தில் பயன்படுத்திக் கொள்வதை மேம்
படுத்துவது ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு கயிறு உற்பத்தி
அளவை இரண்டு மடங்காக உயர்த்த முடியும்; அதனால்,
மேலும் சுமார் 47,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்
கலாம். கயிறு தயாரிக்கும் தொழிலாளர்களுக்குக் கயிறு
பின்னும் நிலையங்களையும் இழை பிரிக்கும் பிரிவுகளுக்கும்
கயிற்றுத் தறிகளை விநியோகிப்பதற்கும் தொழிற் கூட்டுறவுச்
சங்கங்களையும் அமைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு
வருகின்றன.

8. பொதுத் துறையில் சிறு தொழில்கள் :—தமிழ்நாடு சிறு
தொழில் நிறுவனம் (டான்சி) சுமார் 6,000 பேருக்கு வேலை
வாய்ப்பளித்து 55 சிறு தொழில் பிரிவுகளை நிர்வகித்து வருகிறது.
இத்தொழில்ல் கடந்த மூன்றாண்டுகளில் குறிப்பிடத்தக்க
முன்னேற்றம் அடைந்துள்ளது. 1977-78-ல் உற்பத்தியின்



மதிப்பு ரூ. 1,187 இலட்சமாக இருந்தது. 1979-80-ல்
ரூ. 1,818 இலட்சமாக உயர்ந்தது. இந்த நிறுவனம் மேற்
கொண்டுள்ள புதிய திட்டங்களுள், இயந்திரக் கருவிகள்
தயாரித்தல், தோல் ஆடை நெய்தல், பிரெஞ்சுப் பாலிஷ்.
கைக் கடிகாரங்களின் உறுப்புக்களை ஒன்று சேர்த்து கடிகாரம்
செய்தல் ஆகியவை அடங்கும். ஆண்டு தோறும் 6,000
மொபெட்ஸ் வகை இரு சக்கர வாகனங்கள் தயாரிக்கக் இளை
நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

9. சிறு தொழில்களுக்கு உதவி :—சிறு தொழில், மிகச்சிறு
தொழில் நிறுவனங்களுக்கு, கிராமப் புற பின்தங்கிய பகுதிகளில்
சீரமைக்கப்பட்ட மனைகள் கட்டி முடிக்கப்பட்ட கொட்டகைகள்
ஆகியவற்றிற்கு தட்டுப்பாடுள்ள, இன்றியமையா மூலப்பொருள்
களைச் சமமாகப் பகிர்ந்தளித்தல், எளிய நிபந்தனைகளின்
பேரில் இயந்திரங்களை வழங்குதல், உற்பத்திப் பொருள்
களை விற்பதற்கு உதவுதல், பின்தங்கிய வட்டங்களில் மூலதன
முதலீட்டு உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு வகை உதவித்
தொகைகள் வழங்குதல், விற்பனை வரியைச் செலுத்துவதற்காக
வட்டியில்லாமல் கடன் வழங்குதல் ஆகிய பல்வேறு வகையான
உதவிகளை நல்கக் கூடிய முகவரமைப்பாக தமிழ்நாடு சிறு
தொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ) செயல்படுகிறது.

1979-80 ஆம் ஆண்டிலிருந்து சிறு தொழில்களுக்கு உதவு
வதற்காக, பின்வரும் புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வரு
கின்றன:—

(i) மூலதன உதவித் தொகை அளிக்கும் திட்டம்.—மத்
திய அரசு 33 பின் தங்கிய வட்டங்களுக்கு மத்திய அரசு மூல
தன உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் உதவி அளிக்கிறது.
சிறு தொழில்களைப் பொறுத்த வரையில், மேலும் 24 பின்
தங்கிய வட்டங்களுக்கு மாநில அரசு இவ்வுதவித் திட்டத்தை
அளித்துள்ளது. இத்திட்டத்தினை நிறைவேற்றும் பொறுப்பு,
தமிழ்நாடு சிறு தொழில்கள் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்
கப்பட்டுள்ளது. இந்த உதவித் தொகை, மொத்த வரையறுக்
கப்பட்ட மூலதன முதலீட்டில் 15 சதவீதத்திற்கு இணையாக
இருக்கும். ஒவ்வொரு தொழிற் பிரிவிற்குமான உயரளவு
உதவித் தொகை ரூ. 3 இலட்சத்திற்கு மேற்படாது.

(ii) சீரமைக்கப்பட்ட மனைகள் விற்பனை குறித்து சிறு
தொழில்களுக்கு உதவித் தொகை அளித்தல்.—பெருந் தொழில்
கள், நடுத்தரத் தொழில்கள் ஆகியவற்றிற்கு விற்கப்படும்.
மனைகளுக்கு தமிழ்நாடு மாநிலத் தொழில் மேம்பாட்டுக்
கழகம் விதித்துப் பெற்றுள்ள அதே விலைக்களிக்க சிறு தொழில்
களுக்கும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் விலையை
விதித்து வாங்க வேண்டுமென்று 1979 ஆம் ஆண்டு டிசம்பரில்
அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் ஏற்படும் வித்தியாசத்
தொகை, சிறுதொழில்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை
யாகக் கருதப்பட வேண்டும்.

(iii) சிறு தொழில் பிரிவுகளுக்கு வழங்கப்படும் மின்சா
ரத்திற்கு மின் கட்டண உதவித் தொகை வழங்கல்.—சென்னை
நகரிலும் அதன் சுற்றுப்புறத்திலும், கோயம்புத்தூர், மதுரை,
திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய நகரங்களிலும் அமைந்துள்ள
சிறுதொழில் பிரிவுகளைத் தவிர, மற்ற பகுதிகளில் குறைந்த
அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் சிறுதொழில் பிரிவு
களுக்கு, விதிக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தில், 1–1–1980-லி
ருந்து தொடங்கும் மூன்றாண்டு காலத்திற்கு, முதல் ஆண்டில்
30 சதவீத வீதத்திலும், இரண்டாம் ஆண்டில் 20 சதவீத
வீதத்திலும், மூன்றாம் ஆண்டில் 10 சதவீத வீதத்திலும் படிப்
படியாக உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணை
யிட்டுள்ளது.

(iv) தொடக்கச் செலவு உதவித் தொகை வழங்கும் திட்
டம்.—இயங்கா நிலையிலுள்ள நலிந்து போன சிறு தொழில்
களுக்குப் புத்துயிர் அளிப்பதற்காக தொடக்கச் செலவு உதவித்
தொகை வழங்கும் திட்டம் ஒன்றினை 19–12–1979-லிருந்து
31–3–1983 வரை நிறைவேற்ற அரசு முடிவு செய்துள்ளது.
இத்திட்டத்தின்கீழ் ஆண்டொன்றுக்கு குறைந்தளவு ஒரு சத
வீதத் தொகையைப் பணிக்கட்டணமாக விதிப்பதற்கு உட்பட்டு
நீண்டகால வட்டியில்லாக் கடனாக தொழிற்பிரிவு ஒன்றிற்கு
குறைந்தளவு ரூ. 1,000 உயரளவு ரூ. 20,000 என்ற வீதத்தில்
தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தால் தொடக்கச்
செலவு உதவித் தொகை வழங்கப்படும். நலிவுற்ற தொழில்
களுக்குப் புத்துயிர் அளிக்கும் குழுவின் ஒப்புதலோடு பொருத்த
மான இடங்களில் 20,000 ரூபாய்க்கு மேலும் உதவித் தொகை
தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தால் வழங்கப்படலாம்.



(v) குறிப்பிட்ட சில பொருட்களை சிறு தொழில் நிறு
வனங்களிலேயே வாங்க ஒதுக்கீடு செய்தல்.—சிறுதொழில் நிறு
வனங்களிலிருந்துதான் மத்திய அரசுத் துறைகளும், பொதுத்
துறை நிறுவனங்களும், வாங்க வேண்டுமென்று 241 இனங்களை
ஒதுக்கீடு செய்து மத்திய அரசு ஆணையிட்டுள்ளது. சிறுதொழில்
களை ஊக்குவிக்கும் வகையில், குறிப்பிடப்பட்ட 241
இனங்களைப் பொறுத்த வரையில், மாநிலத்தில், பதிவு பெற்ற
சிறுதொழில் நிறுவனங்களிலிருந்து மட்டுமே, மாநில அரசுத்
துறைகளும், நிறுவனங்களும் பொருட்களைக் கொள்முதல்
செய்ய வேண்டுமென்று 1979 டிசம்பரில் மாநில அரசு ஆணை
யிட்டுள்ளது. அத்தகைய கொள்முதல் விலையில் 15 சதவீதம்
தள்ளுபடி செய்யும் சலுகை முறை தொடர்ந்து செயலில்
இருக்கும்.

சிறுதொழில் நிறுவனங்களுக்கு உரிய நேரத்தில் உதவி
நல்கும் பொருட்டு நடைமுறைகள் மேலும் எளிதாக்கப்பட்டு
தளர்த்தப்பட்டுள்ளன. இது குறித்து, நடப்பு ஆண்டில் பின்
வரும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(i) அபாயமற்ற வழிகளில் உற்பத்தியை மேற்கொண்டு,
100 தொழிலாளர்களுக்கும் குறைவாக அமர்த்தப்பட்டிருக்கும்
தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில், திட்டங்களுக்கு
ஒப்புதல் தருவதற்கு வட்டாரத் தொழிற்சாலை மேற்பார்வை
ஆய்வாளர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ii) அனைத்து தொழிற்சாலைகளுக்கும் மின்சாரம் வழங்
குவதற்காக, மின்வாரியம் ஆதாய நிபந்தனையைத் தள்ளுபடி
செய்துள்ளது.

(iii) தொழிற்சாலைப் பிரிவுகளில் முன்பிருந்த மின்
பயனீட்டாளர்கள் மின்கட்டணம் செலுத்தாமல் பாக்கி
வைத்துவிட்டுச் சென்ற போதிலும் புதிய மின் பயனீட்டாளர்
களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்கு மின்சார வாரியம்
ஒத்துக் கொண்டுள்ளது.

ஏற்கெனவே இருக்கும் தொழிற்சாலைகளை முன்னேற்றுவிக்க
வும், புதிய தொழிற்சாலைகள் அமைக்கவும், ஆராய்ச்சியினை
விருத்தி செய்யவும், தொழிற்சாலையைப் பற்றி ஆராயும் விஞ்
ஞானத்தை தேவைக்குத் தக்கவாறு மாற்றி அமைக்கவும், இந்தி
யாவிலும், அயல்நாடுகளிலும் கிடைக்கும் இரசாயன அனுபவங்
களை பயன்படுத்தி வேலை வாய்ப்பினை முன்னேற்றுவிக்க
ஒரு தகுதியான தொழிற்களையைப் பற்றி ஆராயவும்,
விஞ்ஞான மையம் ஒன்றினை அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.
தொழில் வளர்ச்சியை முறைப்படுத்துவதற்கும், உறுதிப்படுத்து
வதற்கும் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும், தொழில்
ஆலோசனைக்குழு அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.

கிராமத் தொழில்கள் குறிப்பாக குடிசைத் தொழில் வாயி
லாக பரவலான வகையில் பெருவாரியான அளவிற்கு வேலை
வாய்ப்பினை அதிகரிக்கும் நோக்குடன் டாக்டர் நாயுடம்மா
அவர்கள் தலைமையில் நிறுவப்பட்ட கிராம–கைத்தொழில்
வல்லுநர் ஆய்வுக் குழுவின் பரிந்துரைகள் அரசின் தீவிர ஆய்வில்
உள்ளன.

10. <u>சிறு தொழிற்சாலைகளுக்கு நிதியுதவி அளித்தல்</u>.—சிறு
தொழில் துறையைச் சார்ந்த தொழிற்சாலைகளுக்கும், பிற்பட்ட
பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுக்கும் சுய வேலை வாய்ப்பு
தேடிக் கொண்ட சிறு தொழில் முனைவர்களுக்கும் சலுகை
வீதத்தில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் பெருவாரி
யாக நிதியுதவி அளித்து வருகிறது. சிறு தொழில் துறை பிரிவு
களுக்கு அளித்த அனுமதிகளின் எண்ணிக்கை 1978–79 ஆம்
ஆண்டில் 782 ஆக இருந்தது; 1979-80 ஆம் ஆண்டில் 1,447 ஆக
உயர்ந்தது. அனுமதிக்கப்பட்ட தொகை 580.40 இலட்சம்
ரூபாயிலிருந்து 886.36 இலட்சம் ரூபாயாக உயர்ந்தது. பிற்
பட்ட பகுதிகளிலுள்ள தொழில்களுக்கு வழங்கிய அனுமதிகளின்
எண்ணிக்கை 1978–79 ஆம் ஆண்டில் 483 ஆக இருந்தது.
1979–80 ஆம் ஆண்டில் 971 ஆகவும் அனுமதிக்கப்பட்ட தொகை
714.76 இலட்சத்திலிருந்து 926.00 இலட்சம் ரூபாயாகவும்
உயர்ந்தது. தொழில் நுட்ப அறிஞர்களுக்கு, உரிமையாளர்
களே ஓட்டக்கூடிய போக்குவரத்து வண்டி உரிமையாளர்களுக்
கும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கூடுதலான நிதி



யுதவி அளித்து வருகிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்
கழகம் நடத்தி வரும் பிற திட்டங்களுள், அரிசனங்களுக்கும்,
பழங்குடியினருக்கும், மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கும் அளிக்
கும் சலுகைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இச்சலுகை
களில் பிணையத் தொகையில் ஒரு பகுதியையும் வட்டி வீதங்
களையும் குறைத்தல், கடன் வட்டியில்லாப் பங்குத் தொகை
விகிதாச்சாரம், தொழில் முனைவர்கள் அளிக்க வேண்டிய தொகை
முதலியவற்றிற்கான விதி முறைகளைத் தளர்த்துதல் ஆகியவை
அடங்கும். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் செயல்
படுத்திய திட்டங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்ட வேலை வாய்ப்பு
1978–79 ஆம் ஆண்டில் 13,517 எனவும் 1979–80 ஆம் ஆண்
டில் 19,626 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

11. <u>பட்டுப்புழு வளர்ப்பு</u>.—பட்டுப்புழு வளர்க்கும் தீவிரத்
திட்டம் 1979 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டது.
பட்டுப்புழு வளர்ப்பு இம்மாநிலத்தில் 1.57 இலட்சம் பேருக்கு
வேலை வாய்ப்பளிக்கிறது. கடந்த இரு ஆண்டுகளில் முசுக்
கொட்டைச்செடி பயிரிடும் பகுதி 21,419 ஏக்கரிலிருந்து 31,470
ஏக்கராக அதிகரிக்கப்பட்டுள்ளதால் கூடுதலாக 50,000 பேர்
களுக்கு வேலை வாய்யபு கிடைத்துள்ளது. 1980–81 ஆம்
ஆண்டில் மேலும் 8,000 ஏக்கரில் முசுக்கொட்டை பயிரிடப்பட்டு,
மேற்கொண்டு 40,000 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கக் கருதப்
பட்டுள்ளது.

12. <u>கைத்தொழில்கள்</u>.—தமிழ்நாடு கைத்திறத் தொழில்
வளர்ச்சிக் கழகம் 17 பயிற்சி உற்பத்தி நிலையங்களையும் 16
விற்பனை காட்சி நிலையங்களையும் நடத்தி வருகிறது. மேலும்
கிராமப்புறக் கைவினைஞர்களிடமிருந்தும் தொழில் கூட்டுறவு
சங்கங்களிடமிருந்தும் கைத்திறத் தொழில் உற்பத்திப் பொருட்
களை வாங்குகிறது. 1979-80 ஆம் ஆண்டில் இக்கழகத்தின்
விற்பனைத் தொகை 143.78 இலட்சம் ரூபாயாகும். இ
1980–81 ஆம் ஆண்டில் சுமார் 170 இலட்சம் ரூபாயாகு
மென எதிர்பார்க்கப்படுகிறது. இக்கழகத்தின் நடவடிக்கைகள்
மூலம் சுமார் 1,300 கைவினைஞர்களுக்கு ஆதாயமிக்க வேலை
வாய்ப்பு கிடைக்கின்றது.

13. உப்பு உற்பத்தி.—தமிழ்நாட்டில் நீண்ட கடற்கரையும் [1980 ஜூலை 19
அளவிலாத சூரிய வெப்பமும் உளவாதலால் இந்நாட்டில் உப்பு
உற்பத்தி செய்யும் முக்கியமான மாநிலங்களுள் தமிழ்நாடு
இரண்டாம் நிலையைப் பெறுகிறது. உப்பு உற்பத்திக்குப்
பெரும் உழைப்பு அவசியம். கடற்கரை மாவட்டங்களில் வாழும்
உழவுத் தொழிலாளர்களுக்கு குறிப்பிட்ட பருவக்காலத்தில்
வேலை வாய்ப்பளிக்கிறது. உப்பு உற்பத்தியை அதிகரிக்கச்
செய்யவும், உப்பை அடிப்படையாகக் கொண்ட இரசாயனத்
தொழிற்சாலைகளை அமைக்க ஊக்குவிப்பதற்கும் எடுக்க
வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, உப்பு துணை இரசாயன
பொருட்களுக்குமான தமிழ்நாடு மாநில கழகம் மாநில அரசுக்கு
ஆலோசனை அளிக்கிறது. உப்பு, உப்பை அடிப்படையாகக்
கொண்ட இரசாயன பொருள்கள் ஆகியவற்றைத் தயாரிப்ப
தற்காகப் பொதுத் துறை நிறுவனமாக தமிழ்நாடு உப்புக்
கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இக்கழகம் இராமநாதபுரம்
மாவட்டத்திலுள்ள பிற்போக்கான ஒரு பகுதியாகிய மாரியூர்
வாலிநோக்கம் என்ற இடத்தில் 5,600 ஏக்கரில் உப்பு உற்பத்திப்
பணியைத் தொடங்கும். இதன் மூலம் சுமார் 3,000 பேருக்கு
வேலை வாய்ப்பு அளிக்கப்படும். செங்கற்பட்டு மாவட்டத்தில்—
3,600 ஏக்கர் பகுதியில் உப்பு உற்பத்தித் தொழிலை மேம்
படுத்துவதற்காக கூட்டுத்துறை நிறுவனம் ஒன்றை தமிழ்நாடு
தொழில் வளர்ச்சிக் கழகம் அமைத்தது. கல்பாக்கம் அணு மின்
நிலையத்திலிருந்து வெளிப்படும் தண்ணீரின் ஒரு பகுதியினை
பக்கிங்காம் கால்வாயில் திருப்பிவிடும் திட்டம் நிறைவேற்றப்படும்
போது, தொழில் முனைவர்கள் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள்
மூலமாக, கால்வாயின் கரை நெடுகிலும் உப்பு உற்பத்தியைப்
பெருக்குவது சாத்தியமாகும். அணு மின் நிலைய நீரில் ஒரு
பகுதியைத் திருப்பிவிடும் இத்திட்டத்திற்கு மத்திய அரசின்
அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

14. பெரிய நடுத்தரத் தொழிற்சாலைகள்.—முன்னர் குறிப்
பிட்டவாறு சிறிய—கிராமப்புறத் தொழிற்சாலைகளும் பெரிய—
நடுத்தர தொழிற்சாலைகளும் ஒன்றுக்கொன்று துணை
புரிந்து மாநிலத்தைத் தொழில் மயமாக்குவதிலும் வேலை
வாய்ப்பு ஏற்படுத்துவதிலும் பெரும் பணியா ருகின்றன



என்பதை அரசு நன்கு அறியும். எனவே, உரிமம் வழங்குதல்,
ஒழுங்கு முறைப்படுத்துதல், நிதி வழங்கல் முதலிய அதிகாரங்களை
மத்திய அரசே செயல்படுத்தி வருவதாலும், இதற்கான
தொகைகள் பெரும்பாலும் மத்திய நிதியுதவி நிறுவனங்கள்
மூலமாகக் கொடுக்கப்பட்டு வருவதாலும், இது குறித்து
மாநில அரசுக்குரிய பொறுப்பு சிறிதளவாக இருந்தபோதிலும்,
இம்மாநிலத்தில் பெரிய, நடுத்தரத் தொழிற்சாலைகளை மேம்
படுத்துவதை அரசு முனைப்போடு ஊக்குவித்து வருகிறது.

15. பொதுத்துறையில் உள்ள பெரிய, நடுத்தர தொழிற்
பிரிவுகள்.—பொதுத்துறையில் தொழில் நிறுவனங்கள் பலவற்றை
அமைத்தும் பெரிய, நடுத்தர தொழிற்சாலைகளின் வளர்ச்சியில்
நேரடியாக ஈடுபட்டுள்ளது.

(அ) சிமெண்டுத் தொழிற்சாலை.—1979-80 ஆம் ஆண்டில்
ரூ. 29 கோடி செலவில் அரியலூரில், 5 இலட்சம் டன்
உற்பத்தித் திறனுள்ள பெரிய நவீன சிமெண்ட் தொழிற்சாலை
அமைக்கப்பட்டது. இத்தொழிற்சாலை வரையறுக்கப்பட்ட
30 திங்கள் கால அளவுக்குள் (1977 ஜனவரி—1979 ஆகஸ்ட்)
தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தால் (டான்செம்) தொடங்கப்
பட்டது. டான்செம்மும், ஆலங்குளத்திலும் ஏற்கெனவே செயல்
பட்டு வருகிறது. வரும் சிமெண்ட் தொழிற்சாலையின் துணைத்
தொழிலாக ரூ. 2.12 கோடி செலவில் 36,000 டன் உற்பத்தித்
திறனுடைய கல்நார் சிமெண்ட் தகடுகளாகத் தயாரிக்கும்
தொழிற்சாலை ஒன்றை அமைத்துள்ளது. இத்தொழிற்சாலை
1981 இறுதிக்குள் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
ஆலங்குளத்திலுள்ள சிமெண்ட் தொழிற்சாலையும் பிரிவும்
ரூ. 3.01 கோடி செலவில் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) உருக்குத் தொழிற்சாலைப் பிரிவை விரிவுபடுத்துதல்—
தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) ரூ. 3 கோடி
செலவில், அரக்கோணத்தில் கழிக்கப்பட்ட இரும்புத் துண்டு
களைக் கொண்டு, தனது மின்சார உலைகள உருக்குப் பிரிவை
விரைவுப்படுத்தும் பணியை மேற்கொள்ளும்.

(இ) டிட்கோவின் புதிய தொழிற்சாலைகள்.—டிட்கோ
பொதுத்துறையில் மேலும் மூன்று தொழிற்சாலைகளை
அமைப்பதற்கு தொடக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது;
அவைய :—

(1) ரூ. 40 கோடி செலவில் 15,000 டன் உற்பத்தித்
திறனுடைய பாலியெஸ்டர் இழைநூல் தயாரிக்கும் தொழிற்
சாலை.

(2) ரூ. 4·29 கோடி மூலதனச் செலவில் 600 டன்
உற்பத்தி செய்வதற்காக, உள்நாட்டுத் தொழில் நுட்ப
உற்பத்திகளைப் பயன்படுத்தி உப்பின் எண்ணெய்ப்பற்றுள்ள
நீர்மத்தை அடிப்படையாகக் கொண்ட மக்னீசிய உலோகத்
தொழிற்சாலை.

(3) ஸ்வீடன் நாட்டு உடனுழைப்புடன் ரூ. 15 கோடி
செலவில் 15,000 டன் உற்பத்தி செய்வதற்குரிய தொழில்—
வெடிமருந்துத் தொழிற்சாலை.

(ஈ) செய்தித்தாள் காகிதத் தொழிற்சாலை.—பத்திரிகை
எழுதுதாள்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்குரிய அச்சிடுத்தாள்
திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 1979 ஏப்ரலில் தமிழ்நாடு
பத்திரிகை அச்சிடும் தாள் காகிதம் நிறுவனம் அமைக்கப்பட்டது:
இத்திட்டத்தின் சிறப்பு அம்சம் யாதெனில், சர்க்கரை ஆலைகளில்
தற்போது எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிற (இனி இவை
கரியைப் பயன்படுத்தும்) கருப்பஞ்சாற்றுச் சக்கையை மூலப்
பொருளாகக் கொண்டு காகிதம் தயாரிக்கப்படும்.

இத்திட்டம், ஆண்டொன்றுக்கு, 50,000 டன்கள் பத்திரிகை
அச்சிடும் காகிதமும்; 40,000 டன்கள் எழுதுவதற்கான
காகிதமும் அச்சிடுவதற்கான காகிதமும் உற்பத்தி செய்ய
சுமார் 153 கோடி ரூபாய் மதிப்பில் திட்டமிடப்பட்டிருக்கிறது.
தற்போது இத்திட்டம் குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்து
வருகிறது.

(உ) சர்க்கரை ஆலைகள்.—பொதுத்துறையில் சர்க்கரை
ஆலைகளை அமைப்பதற்காக 1974 இல் தமிழ்நாடு சர்க்கரை
கழகம் ஏற்படுத்தப்பட்டது. இக்கழகம் இதுவரை இரண்டு
ஆலைகளை அமைத்துள்ளது. ஒன்று தஞ்சாவூருக்கு அருகிலும்
மற்றொன்று பெரம்பலூரிலும் உள்ளது. பொதுத்துறையில்
மேலும் 10 சர்க்கரை ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன



(ஊ) துணி ஆலைப் பிரிவுகள்.—அரசு எடுத்துக் கொண்ட
துணி ஆலைப் பிரிவுகளை நடத்துவதற்காக தமிழ்நாடு துணி
ஆலைக் கழகம் அமைக்கப்பட்டது. தற்போது இக்கழகம்
மொத்தம் 38,460 கதிர்த் திறனுடன் அத்தகைய இரு பிரிவுகளை
நடத்துகிறது. 1979 ஆம் ஆண்டில் ரூ. 33.71 கோடி பெறுமான
முள்ள நூல்களை உற்பத்தி செய்வதற்கு 3.14 இலட்சம் கதிர்
களையுடைய 12 நூற்பாலைகள் கூட்டுறவுத் துறையில் உள்ளன.
இந்நிறுவனம் 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 20.39 இலட்சம்
மதிப்புள்ள சுத்த தங்க சரிகைகளை உற்பத்தி செய்யும். தமிழ்
நாடு ஜரிகை நிறுவனமும் ஈரோடு, தமிழ்நாடு கூட்டுறவுத் துணி
தயாரிப்பு ஆலையும் துணி ஆலைப் பிரிவுகளுக்குத் தேவையான
வற்றை வழங்கும் ஏனைய பிரிவுகளில் அடங்கும். பவானிசாகருக்கு
அருகே, பொதுத்துறையில் துணி செய்முறைத் தயாரிப்புப் பிரிவு
ஒன்றை அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஒன்று பரிசீலிக்கப்
பட்டு வருகிறது.

(எ) மண்பாண்டத் தொழிற் பிரிவுகள்.—தமிழ்நாடு மண்
பாண்டத் தொழில் நிறுவனம் (டேசல்) திருமழிசையில் எந்திர
முறையில் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலையையும்,
சென்னை, விருத்தாசலம், ஓமலூர் ஆகிய இடங்களில் மாக்கல்
குழாய்கள், துப்புரவுப் பொருட்கள், கலைத்திறம் வாய்ந்த
மண்பாண்டப் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் மண்
பாண்டத் தொழிற் பிரிவுகளையும் நடத்துகின்றது.

(ஏ) சுரங்க வேலை.—(1) சேலம் மாக்னசைட் நிறுவனத்
திடமிருந்தும் மாக்னசைட் சுரங்கங்களிலிருந்தும் மாக்னசைட்
வெட்டி எடுக்கும் பணியை 1979 ஜனவரியில் (டான்மேக்)
தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் மேற்கொண்டது. முதல்
ஆண்டிலேயே இக்கழகம் 1.15 இலட்சம் டன் கச்சா மாக்ன
சைட்டை வெட்டியெடுத்தது. இதன் மொத்த வியாபாரத்
தொகை ரூ. 2.44 கோடியாகும். இவ்வாண்டில் இக்கழகம்
ரூ. 7.45 இலட்சம் நிகர ஆதாயத்தையும் ஈட்டியது.

(2) முற்றிலும் எரிந்துபோன மாக்னசைட்டை உற்பத்தி
செய்ய சேலம் மாக்னசைட் நிறுவனத்திற்குச் சொந்தமான
தொழிற்சாலையை நடத்துவதற்கு, டான்மேக்கும், சேலம்
மாக்னசைட் நிறுவனம் இணைந்த ஒரு கூட்டுத் துறையை
நிறுவனமாக 1979-ம் ஆண்டில் தமிழ்நாடு மாக்னசைட் பொருட்
கள் நிறுவனம் அமைக்கப்பட்டது.

(3) இம்மாநிலத்தில் கிடைக்கக்கூடிய கனிவளப் படிமங்
களை வெட்டி எடுத்து, வணிக முறையில் பயன்படுத்துவதற்காக
1978 ஏப்ரலில் தமிழ்நாடு கனிவளப் பொருட்கள் நிறுவனம்
அமைக்கப்பட்டது. இக்கழகம், முதலில் ஏற்றுமதி செய்வதற்காக
கருமை நிறமுடைய சாம்பல் நிறமுடைய கருங்கற்களை வெட்டி
எடுத்து 1980–81 ஆம் ஆண்டில் கழகம், வெர்மிகுலைட்
( ) சுண்ணாம்புக்கல் படிக்கல், களிமம், சிலிகா
மணல், காரீயம் ( ) ஆகியவற்றை வெட்டியெடுக்கும்
பணியை மேற்கொள்ளும்.

16. கூட்டுத்துறைத் தொழில் பிரிவுகள்.—மாநில அரசு, தமிழ்
நாடு தொழில் வளர்ச்சி நிறுவன (Ticco) முகவரமைப்பின்
மூலமாக கூட்டுத்துறையில் பல தொழிற் பிரிவுகளை அமைத்து
அவற்றை வளர்ப்பதில் உதவி வருகின்றது. கூட்டுத் துறையில் 14
திட்டங்கள் ஏற்கெனவே உற்பத்தியைத் தொடங்கிவிட்டன.
மேற்சொன்ன திட்டங்களில் இரண்டு திட்டங்கள், அதாவது,
இராணிப்பேட்டை இன்டர்கான்டினென்டல் லிமிடெட், பதனிடப்
பட்ட தோல் ஏற்றுமதியையே நோக்கமாகக்கொண்ட அசிடிக்
அமிலம், அசிடிக் அன்ஹைடிரைடு ஆகியவற்றைத் தயாரிப்பதற்
கான சதர்ன் ஹைடிரோ கார்பன் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள்
1979–80-ல் தொடங்கப்பட்டன. கூட்டுத் துறையில் மேலும் 11
திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.
இவற்றில் தொழிற்சாலைகளுக்குத்தேவைப்படுகின்ற வாயுகலன்கள்
அலுமினியம் ப்ளோரைடு, மோட்டார் வார்ப்படங்கள், உருளை
பேரிங்குகள், கேத்தோடு பிளாக்குகள், அடிப்படை சாயப்பொருள்
கள், எழுதுதாள், சோடாஆஷ், ஃபர்புரால், தோல்தயாரிப்பு பொருட்
கள் உட்பட தொழிற்சாலை உற்பத்திப்பொருட்கள் பல தயாரிக்கப்



படும். சாராவி சார்ந்த இராசாயனப்பொருட்கள், கைக்கடி
காரங்கள், வெப்பந்தாங்கிக் கற்கள் (ரெப்ஃராக்டரீஸ்) முதலியன
போன்ற பொருட்களுக்கான திட்டங்களும் பரிசீலனையில் உள்
ளன. 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரையில்
கூட்டுத்துறைத் திட்டங்களில் மொத்தம் 18·50 கோடி ரூபாய்
முதலீடு செய்யப்பட்டது. 'டிட்கோ' நிறுவனம் மேற்கொள்
கின்ற கூட்டுத்துறைத் தொழிற் பிரிவுகளுக்காகும் திட்டச்
செலவு வரம்பை ஒரு கோடி ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபா
யாகக் குறைக்கலாமென்று அரசு, தற்போது முடிவு செய்துள்ளது.

17. பெரிய தொழில்களுக்கும் நடுத்தரத் தொழில்களுக்கும்
உதவுகின்ற திட்டங்கள்.—இம்மாநிலத்தில் பெரிய, நடுத்தர
தொழில்கள் முன்னேற்றத்திற்கு மாநில அரசு செயல்படுத்தும்
மிக முக்கியம் வாய்ந்த திட்டங்கள் பற்றிய விவரச் சுருக்கம்
வருமாறு :

(1) தொழில் நுட்ப-தொழில் ஆய்வு.—தமிழ்நாடு தொழில்
மேம்பாட்டுக் கழகம் (SIPCOT) தமிழ் நாட்டில் தொழில்
நுட்ப-தொழில் வள ஆய்வுப் பணியைத் தொடங்கி வைத்தது.
இம்மாநிலத்தின் வேளாண்மை, கால்நடை, காடு வளர்ப்பு, கடல்
வளம், கனிவள வாயில்கள் இந்த ஆய்வில் அடங்கும், வணிக
முறையில் முழுவதும் பயன்படுத்தத்தக்க வாயில்களைக் கண்டறி
வது இந்த ஆய்வின் நோக்கமாகும். அடுத்த 5 ஆண்டுகளில்
இம்மாநிலத்தில் பெரிய, நடுத்தர, சிறிய தொழில் துறைகளில்
ஏற்படுத்துவதற்குப் பொருத்தமான மொத்தத்தில் 350 தொழில்
கண்டறியப்பட்டுள்ளன. இத்தொழில்களுக்குரிய திட்ட விவரங்
களும் தயாரிக்கப்பட்டுள்ளன.

(2) அடிப்படை வசதிகள்.—'சிப்காட்' நிறுவனம், இம்
மாநிலத்தின் பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் வள வளர்ச்சி
வாய்ப்புடைய இடங்களில் தொழிற் பிரிவுகளை அமைத்து வரு
கிறது : மேலும், தொழிற் சாலைகளுக்குத் தேவையான சீர்
படுத்தப்பட்ட மனைகளை குறைந்த செலவில் எளிய முறை
களில் வழங்குகிறது. ஓசூரில் சுமார் 1,153 ஏக்கரும் இராணிப்
பேட்டையில் 730 ஏக்கரும் ஏற்கெனவே முழு அளவில் சீர்
படுத்தப்பட்டுள்ளன. தூத்துக்குடி அருகேயும், புதுக்கோட்டை

இராமநாதபுரம் மாவட்டங்களிலும் கூடுதல் இடங்கள் ஒரமைப்
புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. ' சிப்காட் '
நிறுவனம், தங்களுடைய தொழில் வளர்ச்சி இடங்களில் தண்ணீர்,
சாலைகள், வீட்டு வசதி, கடைகள், பள்ளிகள் முதலியவை உட்
பட மொத்த அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பதற்கும்
திட்டமிட்டுள்ளது.

(3) மத்திய அரசின் மூலதன உதவித் தொகைத் திட்டம்.—
மத்திய அரசினரால் அனுமதி வழங்கப்பட்ட தொழிற் சாலை
களுக்கு மத்திய அரசின் மூலதன உதவித்தொகை இம்மாநிலத்
தில் 33 வட்டங்களில் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்
கீழ், மாநில அரசுக்கு 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21 ஆம்
நாள் வரை மத்திய அரசு ரூ. 10 கோடி உதவித் தொகை வழங்கி
யுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மொத்தத் தொகையிலும்
ஒவ்வொரு ஆண்டுதோறும் வழங்கப்படும் தொகை அளவிலும்
அனைத்து மாநிலங்களிலும் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில்
உள்ளது. பின் தங்கிய சில மாவட்டங்களில் இன்னும் சில
தாலுக்காக்களை, தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்க
வேண்டும் என்று ஏற்கெனவே கேட்டிருந்ததை மைய அரசை
மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

(4) ஊக்க உதவி அளிப்பதற்கான அடங்கல் திட்டம்.—
' சிப்காட் ' நிறுவனம், தொழில் தொடங்குவதற்கான சாத்தியக்
கூறுகள் பற்றிய ஆய்வுக்கு உதவித்தொகை, வட்டியில்லா விற்
பனை வரிக் கடன், நிலையான சொத்துக்கள் மீது உதவித்
தொகை உட்பட, தொழில் முனைவர்களை ஊக்குவிக்கும் வகை
யில் ஊக்க உதவிகளையும் அளித்துவருகிறது. தொழில் முனை
வோர்களுக்கான குறைந்த அளவு தொகையும், குறைந்த வட்டி
வீதம் உட்பட அரிசனங்கள், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த
தொழில் முனைவோர்களுக்கு சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படு
கின்றன.

(5) புதிய தொழிற்சாலைகளுக்கு நிதியுதவி.—' சிப்காட் '
நிறுவனம், புதிய தொழில் முயற்சிகளுக்குப் பங்குகள் வாங்குதல்,
நேரடி உதவித்தொகை வசதிகள் செய்தல் ஆகியவற்றுடன் கால
முறைக் கடன்களையும் வழங்குகிறது. இந்தியத் தொழில்



வளர்ச்சி வங்கியின் (IDBI) உதவியுடன் சிப்காட் நிறுவனம்
ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டத்தையும் செயல்படுத்துகிறது.

(6) நலிவுற்ற தொழிற்பிரிவுகளுக்கு நிதியுதவி.— இம்
மாநிலத்தில், நலிவுற்ற தொழில் நிறுவனங்கள் புத்துயிர் பெற்று
மீண்டும் இயங்குவதற்கு உதவும் வகையில் அரசு 1979 ஆம்
ஆண்டு தமிழ்நாடு நிவாரண உதவி பெறுகின்ற நிறுவனங்கள்
(சிறப்பு விதிகள்) சட்டத்தின் விதித்துறைகள் அரசு விரிவு
படுத்தியுள்ளது. இச்சட்டத்தின் கீழ், 12 தொழில் நிறுவனங்
களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதனால், அந்நிறு
வனங்கள் கலைக்கப்படாமல், புத்துயிர் பெற்று, மீண்டும் செயல்
பட முடியும். இயந்திரங்கள் வாங்கவும், நடைமுறை மூலதனத்
தேவைகளுக்காகவும், மூன்று நிறுவனங்களுக்கு வழிவகை முன்
பணங்கள் வழங்கப்பட்டுள்ளது. 5 நிறுவனங்களுக்கு, அவற்
றின் நடைமுறை மூலதனத்திற்காக, வங்கிகள் வழங்கிய கடன்
களுக்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது. நலிந்த
தொழிற் பிரிவுகள், விற்பனை வரி பாக்கிகளையும், மின்கட்ட
ணப் பாக்கிகளையும் சுலபத் தவணைகளில் கட்டவும் அனுமதிக்
கப்படுகின்றன.

18. தமிழ்நாட்டில் மத்திய அரசுத் திட்டங்கள்.—தமிழ்
நாட்டில் மத்திய அரசுத் திட்டத்தின்கீழ் தற்போது நிறுவப்
பட்டு வரும் புதிய நிறுவனங்கள் ஏற்கெனவேயுள்ள நிறுவனங்
களின் விஸ்தரிப்புத் திட்டங்கள் ஆகியவை பற்றிய செயற் குறிப்பு
களின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

(1) 32,000 டன்கள் உருக்குப் பொருட்களை உற்பத்தி
செய்யும் சேலம் உருக்காலையில் முதல் கட்டப்பிரிவு 1981 ஆம்
ஆண்டு செப்டம்பரில் உற்பத்தியைத் தொடங்கும். இம்முதல்
கட்டத்திற்கான செலவு ரூ. 126·81 கோடியாகும். இரண்டாம்
கட்டத்தில், 2,20,000 டன்கள் உருக்குப் பொருட்களை உற்
பத்தி செய்யக்கூடிய அளவுக்கு அது விரிவுபடுத்தப்படும்.

(2) நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், முதல் நிலக்
கரிச் சுரங்கத்தின் திறனை 3·5 மில்லியன் டன்களிலிருந்து 6·5
மில்லியன் டன்களாக உயர்த்துகிறது. 4·7 மில்லியன் டன்

நிலக்கரி வெட்டி எடுக்கக்கூடிய இரண்டாம் நிலக்கரிச் சுரங்கம்
அமைக்க ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. 630 மெகா வாட்
மின் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டாம் அனல் மின் நிலையம்
அமைக்கவும் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இரு திட்டங்களுக்கு
மான தொடக்கப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(3) சென்னையிலுள்ள எண்ணெய் சுத்திகரிக்கும் தொழிற்
சாலையில் கச்சா எண்ணெய் சுத்திகரிக்கும் திறனை இருமடங்
காக, அதாவது 2·8 மில்லியன் டன்களிலிருந்து 5·6 மில்லியன்
டன்களாக உயர்த்துவதற்கான செயற்குறிப்பு மத்திய அரசின்
பரிசீலனையிலுள்ளது. இத்தொழிற்சாலையின் துணைப்பிரிவு
களாக பெட்ரோ இரசாயன தொழில் பிரிவையும், நாப்தா
தொழில் பிரிவையும் அமைக்க விரைவில் ஒப்புதலளிக்க வேண்டு
மென்று மாநில அரசு வற்புறுத்தும்.

(4) இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட், எலெக்ட்
ரானிக் தட்டச்சுப் பொறி, எலெக்ட்ரானிக் டெலிபிரிண்டர்,
ஏனைய எலெக்ட்ரானிக் கருவிகளையும் உற்பத்தி செய்வதற்கு
ரூ. 9 கோடி மதிப்பீட்டுச் செலவில் பலதிறப்படுத்துதல்—நவீனப்
படுத்துதல் திட்டம் ஒன்றை மேற்கொள்ளக் கருதியுள்ளது.

(5) இந்துஸ்தான் நிழற்படச் சுருள் நிறுவனம், தொழிற்
சாலைக்கு வேண்டிய ஊடுகதிர் சுருள்கள் 'கிராபிக் ஆர்ட்ஸ்'
சுருள்கள் ஆகியவற்றைத் தயாரிக்க 1979 அக்டோபரில்
சென்னையில் ஒரு புதிய பிரிவைத் தொடங்கியது.
ரூ. 75·80 கோடி முதலீட்டில் திரைப்படச் சுருள் (பாசிடிவ்
கலர்) தயாரிக்கும் திட்டம் ஒன்று பரிசீலனையில் உள்ளது.
இத்திட்டத்தையும் இம்மாநிலத்தில் இந்துஸ்தான் நிழற்படச்
சுருள் நிறுவனத்தின் கட்டிடத் தொகுதியிலேயே அமைக்க
வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்
டுள்ளது.

(6) திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரத் கனரக மின்சாதன
தொழிற்சாலை (BHEL) தனது ஆண்டு உற்பத்தித்திறனை 750
மெகாவாட்டிலிருந்து 4,000 மெகாவாட்டாக உயர்த்தவும்
மேலும், 500 மெகாவாட் மின் உற்பத்தி இயந்திரங்களுக்குத்
தேவையான உயரளவுத் திறன் கொண்ட சாதனங்களைத் தயா
ரிக்கவும் உற்பத்தி வசதிகளைப் பெருக்கவும் கருதியுள்ளது.



'பெல்' நிறுவனம் தனது துணைப் பிரிவுகளின் பரவலான வளர்ச்
சியை ஊக்குவிக்கத் திட்டமிட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியி
லுள்ள 'பெல்' நிறுவனம் தனது புதிய திட்டங்களில் சுமார் 57
கோடி ரூபாயைக் கூடுதலாக முதலீடு செய்யக் கருதியுள்ளது.
இராணிப்பேட்டையில் தொடங்கக் கருதப்பட்டுள்ள 'பெல்' நிறு
வனத்தின் விஸ்தரிப்புத் திட்டத்திற்கும் விரைவில் அனுமதி
வழங்க வேண்டுமாய் மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தும்.

(7) சென்னை இந்தியன் ட்ரக்ஸ் அண்டு பார்மக்யூடிகல்ஸ்
நிறுவனம் (IDPL) மருந்துகளைத் தயாரிக்கும் பணியை
1979–80 ஆம் ஆண்டில் தொடங்கியுள்ளது.

(8) இந்துஸ்தான் ஏரோநாட்டிகல்ஸ் லிமிடெட் நிறுவனம்
(HAL) ஓசூரில் ஒரு புதிய விமானத்தொழிற்சாலை தொடங்கு
தல், பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனம் சென்னைக்கு
அருகே ஒரு பிரிவைத் தொடங்குதல், விண்வெளித் துறை,
திருநெல்வேலி—கன்னியாகுமரி பகுதிகளில் இரு விண்வெளி
ஆராய்ச்சித் திட்டங்களை தொடங்குதல் ஆகிய திட்டங்களுக்கு
மத்திய அரசின் அனுமதி கிடைக்க வேண்டியுள்ளது. இத்திட்டங்
களுக்கு விரைவில்அனுமதி வழங்குமாறும் அவற்றை தமிழ்நாட்டில்
தொடங்க அனுமதி வழங்குமாறு மாநில அரசு மத்திய அரசை
வலியுறுத்தும்.

மத்திய அரசுத் துறை முதலீடு தமிழ்நாட்டைப் பொறுத்த
மட்டில் மிகக் குறைவு என்பதை இங்கு குறிப்பிடவேண்டும்.
1979 ஆம் ஆண்டின் இறுதியில் நாடு முழுவதிலும் மத்திய அரசுத்
துறைகளில் ரூ. 15,668 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.
இதில் தமிழ்நாட்டில் செய்யப்பட்ட முதலீடு ரூ. 616 கோடி மட்
டுமே, இது மொத்தத் தொகையில் 4 சதவிதமே ஆகும். கடந்த 10
ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மத்திய அரசுத் துறைகளில் முதலீடு
செய்யப்பட்ட தொகையின் அளவு 8 சத வீதத்திலிருந்து 4 சத
வீதமாகக் குறைந்துள்ளது. வட்டார அளவில் காணும் இந்த
ஏற்றத் தாழ்வைச் சரிக்கட்டும் வகையில், தமிழ்நாட்டில்
மத்திய அரசுத் துறை முதலீட்டை அதிகரிக்குமாறு மத்திய
அரசை மாநில அரசு கேட்டுக் கொள்ளும்.

19. **தொழிற்சாலைகளுக்கு உரிமங்கள் வழங்குதல்.**—இம்மாநிலத்தில், பெரிய, நடுத்தர அளவிலான தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான அனுமதி கோரி வரும் விண்ணப்பங்களுக்கு அனுமதிக் கடிதமும், தொழிற்சாலை நிறுவுவதற்கான உரிமங்களும் வழங்குமாறு, மாநிலஅரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்கிறது. 1978 ஆம் ஆண்டில் இவ்வாறு பரிந்துரை செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 45 ஆகும். 1979 ஆம் ஆண்டில் இவ்வெண்ணிக்கை 49 ஆக உயர்ந்துள்ளது. 1980ஆம் ஆண்டின் முதல் 5 திங்களில் 47 மனுக்கள் மீது பரிந்துரை செய்யப்பட்டது. கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தொழில்கள் நிறுவுவதற்கான மத்திய அரசு வழங்கியுள்ள அனுமதிக் கடிதங்கள் மற்றும் உரிமங்களின் விவரம் வருமாறு :—

| | அனுமதிக் கடிதம். | தொழிற்சாலை நிறுவுவதற்கான உரிமம். |
|---|---|---|
| 1977.. .. .. .. .. | 22 | 32 |
| 1978.. .. .. .. .. | 27 | 28 |
| 1979.. .. .. .. .. | 35 | 26 |

1980 ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் நாள் அன்றுள்ளபடி மத்திய அரசிடம் முடிவெடுக்கப்படாமல் உள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 90. மேலும் காலந்தாழ்த்தாமல் இவற்றுக்கு அனுமதி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

20. **தொழில் துறையில் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.**—1979–80 ஆம் ஆண்டில் இம்மாநிலத்திலுள்ள பல்வேறு தொழில் துறைகளில் 1·50 இலட்சம் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இவ்விலக்கையும் மிஞ்சி 1979–80 ஆம் ஆண்டில் 2·33 இலட்சம் புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டில் 2·65 இலட்சம் புதிய வேலை வாய்ப்



புகள் உருவாக்குவது என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதன் விளைவாக இந்த இலக்கையும் மிஞ்சிவிட முடியும் என்று நம்பப்படுகிறது.

21. **தொழில்கள் குறித்தத் திட்ட ஒதுக்கீடு (1980-81).**

1980–81 ஆம் ஆண்டிற்கான தொழில்கள் குறித்தத் திட்ட ஒதுக்கீடு வருமாறு :—

| | 1978–79. | | 1979–80. | 1980–81. |
|---|---|---|---|---|
| | கணக்குகள். | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | திருத்தப்பட்ட மதிப்பீடு. | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் கோடியில்.) | | | |
| பெரிய-நடுத்தரத் தொழில்கள். | 10·86 | 7·82 | 6·91 | 8·89 |
| கிராம-சிறு தொழில்கள். | 9·60 | 11·43 | 10·05 | 13·83 |
| கனிவள-உலோகவியல் தொழில்கள். | 0·63 | 0·12 | 0·42 | 0·50 |
| மொத்தம் .. | 21·09 | 19·37 | 17·38 | 23·22 |

இப்புள்ளி விவரங்களிலிருந்து கிராம-சிறு தொழில்கள் வளர்ச்சிக்கு அரசு அளித்த முக்கியத்துவம் புலனாகும். 1980–81 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு கடந்த இரண்டு ஆண்டுகளைவிட 49 சதவீதம் உயர்ந்துள்ளது.

தொழில் துறையின் பல்வேறு திட்டங்களுக்கு (திட்டத்தில் சேர்ந்தவை, திட்டத்தில் சேராதவை ஆகியவற்றிற்கு) 1980–81 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் வகை செய்யப்

பட்ட மொத்த நிதியொதுக்கம் ரூ. 31·62 கோடி ஆகும். (திட்டப் பணிகளுக்கு ரூ. 23·22 கோடி+திட்டத்தில் சேராத பணிகளுக்கு ரூ. 8·40 கோடி). இதில், 1980–81-ஆம் ஆண்டில் 34 இரண்டாம் பகுதி திட்டங்களுக்கு ஒதுக்கீடு ரூ. 3,33·33 இலட்சமும் (திட்டத்தில் சேர்ந்த பணிகள்) அடங்கும். இத்திட்டங்களுக்கான இறுதிச் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 373·52 இலட்சம் தொடர் செலவாகும்.



## தொழில் வணிக இயக்குநரகம்

தமிழகத்தில் தொழில் வளர்ச்சியினை, குறிப்பாக, சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில் துறைகளில் பரவலான விரைவான வளர்ச்சியினை, ஊக்குவிக்கும் பணியில் தொழில் வணிக இயக்குநரகம் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. அபிவிருத்தி நடவடிக்கைகளின் வாயிலாக, சீரான வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குதல், பரவலான முறையில், அதிலும் குறிப்பாக வளர்ச்சி குன்றியுள்ள பகுதிகளில் அதிகப் படியாக வேலை வாய்ப்புகளைத் தோற்றுவிக்கக்கூடிய தொழில் களை ஊக்குவித்தல் இவை அவற்றுள் அடங்கும்.

<u>மாவட்டத் தொழில் மையங்கள்.—</u>

2. மாவட்டத் தொழில் மையங்கள் தோற்றுவிக்கப்பட்ட திலிருந்து மாவட்டங்களில் களப் பகுதியளவில் தொழில் வணிகத் துறையின் அமைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது. தொழில் துறையின் அபிவிருத்திப் பணிகளனைத்தும் மாவட்ட தொழில் மையங்கள் மூலமே தற்போது செயல்படுத்தப்படுகின்றன. மாநிலத்தில் தொழில் நடவடிக்கைகளைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு மாவட்ட தொழில் மையங்கள் தோற்றுவித்துள்ளன என்று சொன்னால், அது மிகையாகாது. தகவல் அளிப்பதிலும், தொழில் அபிவிருத்தி சார்ந்த பணிகளைச் செய்வதிலும், ஒரு முக்கியமான நிலையை இவை வகிக்கின்றன. இதில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில், வளர்ச்சி குன்றிய மாவட்டங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தோற்றுவிக்கப் பட்டுள்ளதோடு, ஓரளவு வளர்ச்சி அடைந்துள்ள மாவட்டங் களில், இதுவரை வளர்ச்சி அடையாத பகுதிகளுக்கும் இத்தகைய நடவடிக்கைகள் பரவியுள்ளன.

3. துவக்கத்தில் 8 மாவட்டங்களில் அமைக்கப்பட்டு, பிறகு மாநகர் பகுதியான சென்னை நகரம் தவிர எஞ்சிய அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட தொழில் மையங்கள் அமைக்கப்பட் டதன் பயனாக இந்த மேம்பாட்டுப்பணி அமைப்புகள் மாநிலம் முழு

வதிலுமாகப் பரவியுள்ளன. நீலகிரி மாவட்டத்தின் அபிவிருத்தித்
தேவைகளை, கோயமுத்தூரிலுள்ள மாவட்ட தொழில்
மையம் கவனித்து வருகிறது. அங்கீகரிக்கப்பட்ட வடிவில்
எல்லா பணியாளர்களுடனும் செயல்படாத நிலையிலும், சிறு,
மற்றும் குடிசைத் தொழில்களின் அபிவிருத்தியில், இவை மேற்
கொண்டுள்ள முயற்சிகள் நல்ல பலனை அளித்துள்ளன.
இவை பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

4. ஆய்வுகள் மூலம் தொழில் வளங்களைக் கண்டறிவது,
உகந்த தொழில் மற்றும் சுய வேலை வாய்ப்புத் திட்டங்களைத்
தேர்ந்தெடுத்து தயாரிப்பது, தொழில் முனைவர்களைக் கண்
டறிந்து அவர்களை ஊக்குவிப்பது, மற்றும் தொழில்களைத்
துவக்கி பொருள் விற்பனை வரை பல்வேறு நிலைகளில்
தேவைப்படும் எல்லா உதவிகளையும் அளிப்பது, இவை
மாவட்டத் தொழில் மையங்களால் மேற்கொள்ளப்படும் பணி
களுள் அடங்கும். சிறு தொழில் சேவை நிலையத்தின் உதவி
யுடன், இராமநாதபுரம் மற்றும் சேலம் மாவட்டங்களில் முழு
மையான அளவில் தொழில் நுட்ப பொருளாதார ஆய்வுகள்
முடிக்கப்பட்டுள்ளன. இதர ஆறு மாவட்டங்களில் துரித
ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகளின் அடிப்படையில்
சில மாவட்டங்களில் வாய்ப்புள்ள தொழில்களுக்கு, திட்டத்
தொகுப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை தவிர தமிழ்நாடு
தொழில் முதலீட்டு நிறுவனம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி
நிறுவனம் மற்றும் முதன்மை வங்கிகள் இவற்றின் உதவியுடன்,
'டாடா' ஆலோசனை நிறுவனம் சுமார் 100 திட்டத்
தொகுப்புகளைத் தயாரித்துளளது. வாய்ப்புள்ள தொழில்
களைத் துவக்கக்கூடிய தகுதி வாய்ந்த தொழில் முனைவர்களை
ஊக்குவிக்கும் நோக்கத்தோடு 1980 ஆம் ஆண்டு மார்ச் வரை
சுமார் 225 வாய்ப்பு விளக்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன
இவற்றில், தொழில் துவங்குவதற்குள்ள வாய்ப்புகள் மற்றும்
தொழில் முனைவர்களுக்குக் கிடைக்கின்ற வசதிகள் பற்றி
விளக்கப்படுகின்றன. குறிப்பிட்ட பொருளைத் தயாரிப்பதற்கு
தொழில் துவங்க முன் வருகின்ற தொழில் முனைவர்களுக்கு
பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு
ஒரு முறையே நடத்தப்பட்டு வந்த இத்தகைய ஊக்குவிப்புக்



கூட்டங்கள் மாவட்ட தொழில் மையங்களின் அமைப்பில் ஒரு
நிலையான பணியாக அமைந்துவிட்டது என்பது இங்கு குறிப்
பிடத்தக்கது. இவை தொழில் நடவடிக்கையைத் தோற்று
விப்பதற்கும், வாய்ப்புள்ள தொழில்கள் வளர்ச்சி குன்றிய பகுதி
களில் அமைய வழிவகுப்பதற்கும் ஓர் சாதனமாக அமைந்
துள்ளது.

5. தொழில் வணிக இயக்குநரகத்தின் கள அமைப்பாகச்
செயல் படும் தொழில் மையங்கள், கள அளவில் தமிழ்நாடு
சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் வளர்ச்சித் திட்டங்களைச்
செயலாக்குவதிலும் உதவி புரிகின்றன. முடிவுகளை மாவட்ட
அளவிலேயே மேற்கொள்ள உதவும் வகையில், இயக்குநரின்
நடைமுறை அதிகாரங்கள், தொழில் மையங்களின் பொது
மேலாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. வங்கிகள் உட்பட, சிறு
தொழில்களுக்கு உரிமங்கள் உதவிகள் வழங்குகின்ற அனைத்து
அமைப்புக்களையும் ஈடுபடுத்தி, பல நிலைகளில் அவை ஒருங்
கிணைந்து பயனுள்ள வகையில் செயல்படக்கூடியதோர் ஏற்
பாட்டினை தொழில் மையங்கள் உருவாக்கியுள்ளன.

6. குறிப்பிட்ட இடத்தில் கிடைக்கும் வளத்தினைப் பயன்
படுத்தக்கூடிய தொழில்களைத் தோற்றுவிப்பதிலும் மாவட்ட
தொழில் மையங்கள் ஓரளவு வெற்றியடைந்துள்ளன. புதிய
தொழில்களை ஊக்குவிப்பது எவ்வளவு முக்கியமோ அதே
போன்று, ஏற்கெனவே உள்ள தொழில்களைச் சரிவர இயங்கச்
செய்தலும் முக்கியமானதென்று உணரப்பட்டுள்ளது. இந்
நோக்கத்தோடுதான், செயல்படாமல் மற்றும் நலிந்த நிலையி
லுள்ள தொழில்களைக் கண்டறிந்து அவற்றிற்குப் புத்துயிரூட்டு
வதற்காக ஆய்வு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.
நலிந்த நிலையில் இருந்த 86 தொழில் நிலையங்கள் இந்த
ஆண்டில் புத்துயிர் பெற்றுள்ளன. வங்கிகளிடமிருந்து நிதி
யுதவி பெறுவதற்கு முன் தொகையைத் திரட்டுவதில் இவை
போன்ற சிறு தொழில்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளைக்
களைய, நலிந்துள்ள சிறு தொழில்களுக்கு உதவியளிப்பதற்குரிய
திட்டமொன்றை, மாநில அரசு அறிவித்துள்ளது.

**நடைமுறைகளை எளிதாக்குதல்.—**

7. உரிமங்கள் பெறும் முறையினை எளிதாக்க வேண்டு
மென்பது சிறு தொழில் முனைவர்களின் நீண்டகாலக் கோரிக்
கையாகும். மக்கள் நல்வாழ்வு மற்றும் நகரமைப்புத் துறை
களால் தளர்த்தப்பட்ட நடைமுறைகளைப் பற்றிய விவரங்கள்
கடந்த ஆண்டின் கொள்கைக் குறிப்பில் சேர்க்கப்பட்டிருந்தன.
இந்த ஆண்டு, அபாயத்திற்குட்படாத பொருள்களைத் தயாரிப்
பதில் ஈடுபட்டுள்ள, 100-க்கும் குறைவான வேலையாட்களைக்
கொண்டிருக்கும் தொழிற்சாலைகளின் கட்டிட அமைப்பிற்கு
ஒப்புதலளிப்பதற்கு மண்டல மேற்பார்வை தொழிற்சாலை
ஆய்வாளர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. சிறு
தொழில்களுக்கு மட்டும் புதிய மின் இணைப்பு வழங்குவதில்
ஆதாய நோக்கை நீக்குவதென் மின்சார வாரியம்
கடந்த ஆண்டு முடிவெடுத்திருந்தது. இந்த ஆண்டு
மின்சக்தி தேவையாக உள்ள அனைத்துத் தொழில்களுக்கும்
ஆதாய நோக்கு விலக்கப்பட்டுள்ளது. முந்தைய உபயோகிப்
பாளர்களால் மின்சார வாரியத்திற்கு எவ்வளவு தொகை
நிலுவையாக விடப்பட்டிருந்தாலும், அதே தொழிற் கூடங்களில்
புதிதாக மின் இணைப்பு வேண்டுவோருக்கு அது ஒரு தடையாக
அமையாது. வழிமுறைகளை மேலும் எளிதாக்க வேண்டுமென்
பதன் அவசியத்தை தொடர்ந்து கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.
நடைமுறைகளை மேலும் எளிதாக்குவதற்கு, குறிப்பாக ஏற்
கனவே உள்ள தொழில்களைப் பொறுத்த மட்டில் நடைமுறை
களை எளிதாக்குவது குறித்து, சிறு தொழில் சங்கங்களோடு
தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.



8. கீழே தரப்பட்டுள்ள விவரங்களிலிருந்து எளிதாக்கப்பட்டுள்ள நடைமுறைகள், எதிர்பார்க்கப்பட்ட பலன்களைத் தரத் துவங்கியுள்ளன என்பது புலனாகிறது.—

**உள்ளாட்சி மன்றங்களால் வழங்கப்பட்ட உரிமங்கள்.—**

| வரிசை எண். | மாவட்டம். | உள்ளாட்சி மன்றங்களால் வழங்கப்பட்ட உரிமங்கள். | |
|---|---|---|---|
| | | 1978–79 | 1979–80 |
| (1) | (2) | (3) | (4) |
| 1 | செங்கற்பட்டு .. .. | தகவல் இல்லை | 1,925 |
| 2 | தர்மபுரி .. .. .. | 104 | 188 |
| 3 | கன்னியாகுமரி .. .. | 8 | 68 |
| 4 | புதுக்கோட்டை .. .. | தகவல் இல்லை | 36 |
| 5 | இராமநாதபுரம் .. .. | 577 | 1,048 |
| 6 | சேலம் .. .. | 110 | 137 |
| 7 | திருநெல்வேலி .. .. | 24 | 83 |
| 8 | கோயம்புத்தூர் * .. .. | 2,006 | 2,594 |
| 9 | மதுரை .. .. .. | தகவல் இல்லை | 507 |
| 10 | வட ஆற்காடு .. .. | 1,054 | 1,237 |
| 11 | தென் ஆற்காடு .. .. | 270 | 410 |
| 12 | தஞ்சாவூர் .. .. .. | 183 | 216 |
| 13 | திருச்சிராப்பள்ளி .. .. | 149 | 162 |
| | | 4,485 | 8,611 |

* (பெரியார் மாவட்டத்தில் வழங்கப்பட்ட உரிமங்கள் உட்பட.)

9. கடந்த ஆண்டின் கொள்கைக் குறிப்பிலுள்ளபடி, நிரந்தர
மாக பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்கள், அதாவது ஏற்
கெனவே உற்பத்தியைத் துவக்கியுள்ள அல்லது உற்பத்தியைத்
துவக்குவதற்குத் தயாராக உள்ள சிறு தொழில்களே தோற்றுவிக்
கப்பட்ட வேலை வாய்ப்பினைக் கணிப்பதற்கு கணக்கில் எடுத்துக்
கொள்ளப்பட்டன. இதன் அடிப்படையில், 1979–80 ஆம்
ஆண்டில் மாநிலத்தில் 6,750 சிறு தொழில்கள் நிரந்தரச்
சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவை 80,000 பேருக்கு மேல்
வேலை வாய்ப்பை தந்துள்ளதாகக் கூறலாம். தொழில் மையங்கள்
செயல்படும் மாவட்டங்களில் 5,632 சிறு தொழில்கள் தோன்றி,
67,000 பேருக்குமேல் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தின.
புதிதாகத் துவக்கப்பட்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் முழுமை
யாகச் செயல்படக் கூடிய நிலையில் 66,675 பேருக்கு வேலை
வாய்ப்பினைத் தரக் கூடியவையாகும். இவற்றில் இந்த ஆண்டில்
மட்டும் 20,275 நபர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

10. தொழில்களின் வளர்ச்சியைப் பரவலாக்குவதற்கு எடுத்
துக் கொண்ட முயற்சிகள் பலனளிக்கத் துவங்கியுள்ளன என்பது
இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சான்றாக, செங்கற்பட்டு மாவட்
டத்தைப் பொறுத்தவரை, சிறு தொழில்கள் சென்னை நகரை
யொட்டிய பகுதிகளிலேயே இதுவரை பெரும்பாலும் அமைந்து
வந்துள்ளன. எனவே இம்மாவட்டத்தில் கிராமப் பகுதிகளில்
1,250 பேருக்கு வேலை வாய்ப்பை அளிக்கக்கூடிய சுமார் ரூ. 52
இலட்சம் மூலதனம் கொண்ட 124 புதிய சிறு தொழில்களை
ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மாவட்ட தொழில்
மையம் மேற்கொண்ட மேம்பாட்டு நடவடிக்கையின் பயனாக,
கிராமப்பகுதிகளில் 3,114 பேருக்கு வேலை வாய்ப்பினை அளிக்
கக்கூடிய ரூ. 128·46 இலட்சம் மூலதனத்துடன் 230 புதிய சிறு
தொழில்கள் தோன்றியுள்ளன. வளர்ச்சி குன்றிய கிழக்கு இராம
நாதபுரம் வேகமாக வளர்ந்து வருகிறது. மிகவும் பின்தங்கிய
புதுக்கோட்டை மாவட்டத்தில், மாவட்ட தொழில் மையத் திட்
டம் துவங்கப்பட்ட 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் 239
சிறுதொழில் நிலையங்களே இருந்தன. 1979–80 ஆம் ஆண்டில்
மட்டும் 55 புதிய சிறு தொழில் நிலையங்கள் தோன்றியுள்ளன.
இது கிட்டதட்ட 25 சதவீத வளர்ச்சி விதத்தைக் காட்டுகிறது.



__நிதியுதவி__ :—

11. சிறு மற்றும் குடிசைத் தொழில்களுக்கு நிதியுதவி
கிடைக்கச் செய்வதில் மாவட்ட தொழில் மையங்கள் ஒரு சிறந்த
நிலையை அடைந்துள்ளன. தொழில் மைய அமைப்பில்
மாவட்டத்திலுள்ள முதன்மை வங்கியின் அலுவலர் நிதி உதவி
மேலாளராகச் செயல்படுகிறார். மாவட்டத் தொழில் மையங்கள்
1979–80-ல் சுமார் 3,500 சிறு தொழில்களுக்கு ரூ. 4·5 கோடிக்கு
மேல் நிதியுதவியாக வங்கிகள் மூலம் பெற்றுத் தந்துள்ளன. வங்கி
களால் நேரடியாக ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள், இத்தொகை
யில் சேர்க்கப்படவில்லை. இந்திய அரசால் வழங்கப்பட்ட கிரா
மத் தொழில் திட்ட நிதியினையும் மாவட்ட தொழில் மையங்கள்
முழுமையாகப் பயன்படுத்தியுள்ளன. 595 சிறு தொழில் நிலை
யங்களுக்கு ஈட்டுறுதிக் கடனாக ரூ. 49·09 இலட்சம் வழங்கப்
பட்டுள்ளது.

__கைவினைஞர்களுக்கு உதவி__ :—

12. கைவினைஞர்களுக்கு உதவியும், ஊக்கமும் அளிக்கும்
திட்டங்களிலும் மாவட்ட தொழில் மையங்கள் பங்கு பெற்றுள்
ளன. ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் மற்றும் கிராம
இளைஞர்களுக்குரிய சுய வேலைப் பயிற்சித் திட்டம் ஆகிய
வற்றை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செயல்படுத்தி வந்
தாலும் இவற்றின் மூலம் பயன்பெறுவதற்குரிய திட்டங்களைத்
தயாரிப்பது மற்றும் இவற்றின் மூலம் பயன்பெறுவதற்குரியவர்
களைத் தேர்ந்தெடுப்பது ஆகிய செயல்களில் இத்தொழில்
மையங்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. இளைஞர்
களுக்கும், கைவினைஞர்களுக்கும் நல்ல பயிற்சியளித்து, கிராமப்
பகுதிகளில் ஆதாயமுள்ள சுயவேலை வாய்ப்பை அவர்கள் அடைய
வேண்டுமென்ற எண்ணத்துடன், 1979–80 ஆம் ஆண்டில், 19,924
பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, ரூ. 81·91 இலட்சம் உதவித்
தொகையாகவும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்
தின் கீழ், 1,570 கைவினைஞர்களுக்கு, கருவிகளும் சாதனங்
களும், 796 பேருக்கு தொழிற் கூடங்களுக்காக ரூ. 15·25 இலட்
சம் உதவித் தொகையாகவும் கொடுக்கப்பட்டுள்ளன. மாவட்ட
வாரியான விவரங்கள் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட திட்டங்களுக்காக உள்ள நிதியோடு 1980-81 ஆம் ஆண்டில் கிராமக் கைவினைஞர் திட்டத்திற்குப் பயன்படுத்துவதற்காக, மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் ரூ. ஒரு இலட்சம் என மாவட்ட தொழில் மையங்களுக்கு ஒதுக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

13. கைவினைஞர்கள் செறிந்துள்ள பகுதிகளில் அவர்களுக்கு நிதியுதவி மற்றும் விற்பனை உதவி வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1979-80 ஆம் ஆண்டில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம், 5,095 கைவினைஞர்களுக்கு ரூ. 84.23 இலட்சம் நிதி உதவியாகப் பெற்றுத் தரப்பட்டுள்ளது. கைவினைஞர்களுக்கு, அமைப்பு ரீதியில் உதவியளிப்பதற்காக 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் 1980 ஆம் ஆண்டு மார்ச் வரை, 262 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (அமைக்கப்பட்ட சங்கங்களின் விவரங்கள் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன).

14. கைவினைஞர்களுக்கு விற்பனை உதவி அளிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. உதாரணமாக தென்னாற்காடு மாவட்டத்தில் மேலச்சித்தனூர் கிராமத்தில் பனை ஓலைப்பாய் பின்னுவதில் ஈடுபட்டுள்ள 100 குடும்பங்கள், வண்டிப்பாளையம் கிராமத்தில், மட்பாண்டம் மற்றும் காகித பொம்மைகள் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள 50 குடும்பங்கள், மற்றும் அம்மாப்பேட்டையில் பிரம்புப் பொருள்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள 100 குடும்பங்கள் (பெரும்பாலும் மலைச் சாதியினர்) ஆகியவற்றிற்கு இவ்வகை உதவி அளிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில், இரண்டு இழை நார் முறுக்குதல், கயிறு, பனை ஓலை பின்னுதல், பூ வேலைசெய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்டத்தில் தச்சர்கள், காலணிப் பணியாளர்கள், தோல் பதனிடுபவர்கள், குயவர்கள், பாய் முடைவோர் ஆகியவர்களுக்கும், புதுக்கோட்டை மாவட்டத்தில் பாய்முடைவோர் மற்றும் பனைஓலைப் பணியாளர்கள் போன்றவர்களுக்கும் இவ்வகையான உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.



## இணைந்து செயல்படுவது.

15. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் போன்றவற்றின் வளர்ச்சிப் பணிகளில் மாவட்ட தொழில் மையங்கள் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் நிறைவேற்றி வரும் சிறு தொழிற்கூடத் திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்களைப் பயன்படுத்தத்தக்க ஆர்வமுள்ள தொழில் முனைவர்களை இந்த மாவட்ட தொழில் மையங்கள் கண்டறிகின்றன. அதுபோலவே, பட்டு நெசவுத் தொழில் நிலையங்கள், பட்டுநூல் பிரித்தெடுக்கும் நிலையங்கள் ஆகியவற்றிற்கு உதவியும் ஊக்கமும் அளிப்பதிலும், மாவட்ட தொழில் மையங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

## தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்.

16. வேலை வாய்ப்புகளைத் தோற்றுவிப்பதில், அதிலும் குறிப்பாக நலிந்துள்ள மக்களுக்கும், கிராம மக்களுக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதில் தொழில் துறையின் ஆற்றல்மிக்க அமைப்புகளில் ஒன்றாகத் திகழ்வது, தொழிற் கூட்டுறவுச் சங்கங்களே ஆகும். இந்த ஆண்டு, கூட்டுறவுச் சங்கங்கள் போற்றத்தக்க அளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளன. 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் இறுதியில் தொழில் வணிக இயக்குநரகத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 297 ஆக இருந்தது. இது 1980 ஆம் ஆண்டு மார்ச் இறுதியில் 559 ஆக உயர்ந்துள்ளது. இவை அனைத்தும் அவற்றின் முழு உற்பத்தி அளவினை எட்டியிரா விட்டாலும் உற்பத்தி மற்றும் விற்பனையில் அவை போற்றத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளன. இதனைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து அறியலாம்:—

| ஆண்டு. | சங்கங்களின் எண்ணிக்கை. | உற்பத்தி. | விற்பனை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1976-77 | 396 | 1,128.58 | 1,297.19 |
| 1977-78 | 297 | 1,509.20 | 1,762.97 |
| 1978-79 | 389 | 1,813.70 | 2,035.33 |
| 1979-80 | 559 | 2,489.33 | 2,874.25 |

17. தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுள் குறிப்பிடத்தக்கவை [1980 ஜூலை 19
தேயிலை மற்றும் தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்
ஆகும்.

## தேயிலைத் தொழில்.

18. இந்த ஆண்டில் ஒரு சங்கம் பதிவு செய்யப்பட்டதையும் சேர்த்து, தொழிற் கூட்டுறவுத் துறையிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளில் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளது. தேயிலை பயிரிடப்படுகின்ற நிலப்பரப்பு மற்றும் உறுப்பினர் களின் எண்ணிக்கை, உற்பத்தி போன்றவை பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| உறுப்பினர்களின் எண்ணிக்கை .. .. | 5,897 |
| தேயிலை பயிரிடப்படுகின்ற நிலப்பரப்பு (ஏக்கரில்.) .. | 12,434 |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்.) .. .. | 120.82 |

| விவரங்கள். | 1976-77 | 1977-78 | 1978-79 | 19798-0 |
|---|---|---|---|---|
| உற்பத்தி .. (கிலோ இலட்சத்தில்.) | 43.14 | 58.98 | 64.48 | 55.08 |
| விற்பனை .. (கிலோ இலட்சத்தில்.) | 40.79 | 56.20 | 55.09 | 68.96 |
| விற்பனையின் மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்.) | 479.57 | 723.80 | 564.59 | 719.1 |

## தீப்பெட்டித் தொழில்.

19. கடந்த சில ஆண்டுகளில் மிகச் சிறப்பான வளர்ச்சி யடைந்துள்ள தொழில்களுள் இதுவும் ஒன்றாகும்.



20. "பொட்டாசியம் குளோரேட்", தீக்குச்சி மெழுகு குச்சிகள், தீப்பெட்டி நீலக்காகிதம் போன்ற மூலப் பொருள் களை வழங்குவதற்கும், தீப்பெட்டி விற்பனை போன்ற பணி வசதிகளை உறுப்பினர் தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கு அளிப்பதற்கும் 31—3—1979-ல் 18 சிறு தீப்பெட்டி உற்பத்தி யாளர்கள் பணி தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன.

21. குறிப்பிடத்தக்க அளவுக்கு வேலை வாய்ப்பினை, அதிலும் குறிப்பாக கிராமப் பகுதிகளில் ஏற்படுத்துவதற்காக 1979-80 ஆம் ஆண்டில் 20 தீப்பெட்டி பணிக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கு அரசு ஒப்புதலளித்தது.

22. சமூக நலத் சிறப்புத் திட்டத்தின்கீழ், கிராமப் பகுதிகளில் 8,000 மகளிர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கக் கூடிய மேலும் 4 தீப்பெட்டிப் பணியாளர்கள் பணித்தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மகளிர்களுக்கென 1979–80 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டன. சாத்தூர் மற்றும் கோவில்பட்டி போன்ற பரம்பரையாக இத்தொழில் வளர்ந்துள்ள பகுதிகளில் மேலும் 6 தீப்பெட்டிப் பணிச் சங்கங்கள் 1979-80 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டன. மாநிலத்தில் 1980 ஆம் ஆண்டு மார்ச் இறுதியில் இத்தகைய 48 சங்கங்கள் இருந்தன.

23. 1980-81 ஆம் ஆண்டில் 20,000 பேருக்கு வேலை யளிக்கக்கூடிய 10 பணிச் சங்கங்களை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவு பணிச் சங்கங்கள் தவிர 31—3—1979-ல் 100 தீப்பெட்டிப் பணியாளர் கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் இருந்தன. இவை தீப்பெட்டிகளைத் தயாரிக்கின்றன. பணியாளர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினையும் இவை அளிக்கின்றன. 1979-80 ஆம் ஆண்டில் மேலும் 155 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. 31—3—1980-ல் இத்தகைய 255 சங்கங்கள் இருந்தன.

24. 1980-81 ஆம் ஆண்டில் 20 பணியாளர்கள் சங்கங்கள் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1980 ஜுலை 19

25. மாநிலத்தில், தொழில் கூட்டுறவுப் பணிச் சங்கங்கள் வளர்ந்து வருவதன் காரணமாக அடைந்துள்ள குறிப்பிடத்தக்க அபிவிருத்திக்குச் சான்று கூறும் வண்ணம் பின்வரும் விவரங்கள் அமைந்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை புதிதாகத் துவக்கப்பட்டு, இன்னமும் முழு அளவிலான உற்பத்தியினை அடையவில்லை என்றாலும், அவற்றின் முன்னேற்றம் குறிப்பிடத்தக்கது.

## தீப்பெட்டிப் பணிச் சங்கங்கள்.

| ஆண்டு. | தீப்பெட்டிப் பணிச் சங்கங்களின் எண்ணிக்கை. | உற்பத்தி. | விற்பனை. |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| (1) | (2) | (3) | (4) |
| 1978-79 .. | 18 | 794.35 | 901.12 |
| 1979-80 .. | 48 | 1,427.09 | 1483.20 |

26. குடிசைத்தொழில் அளவிலான தீப்பெட்டித்தொழில் நிலையங்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக உள்ளதால், அவற்றின் மூலப்பொருள் தேவைகளை நிறைவேற்றுவதிலும் தனி கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ''பொட்டாசியம் குளோரேட்டு'' பற்றாக்குறையினால் ஏற்பட்டுள்ள பிரச்சினை, அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இந்த நிலையங்களுக்கு வேண்டிய குச்சிகளுக்கான தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு 1980-81 ஆம் ஆண்டில் குடிசைத் தொழில் துறையில் ரூ. 3.19 இலட்சம் செலவில் மூன்று குச்சிகள் தயாரிக்கும் கூட்டுறவுத் தொழிற்சாலைகளை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

27. 1979-80 ஆம் ஆண்டில் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் காரணமாக கூடுதலா



1980 ஜுலை 19]

20,275 பேருக்கு வேலை வாய்ப்பு தோற்றுவிக்கப்பட்டது. அவ்விவரம் பின்வருமாறு :—

| | பதிவு செய்யப் பட்ட சங்கங்களின் எண்ணிக்கை. | அளிக்கப் பட்ட வேலை வாய்ப்பு. |
|---|---|---|
| 1. தீப்பெட்டி பணியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 155 | 19,600 |
| 2. சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் (580). | 30 | (66,000) முழு அளவில் செயல்படும்போது ஏற்படக் கூடிய வேலை வாய்ப்பு) |
| 3. தேயிலைத் தொழிற்சாலைகள் .. | 1 | 100 |
| 4. சிறப்புவகை (முந்திரி ''பிளைவுட் மற்றும் தீக்குச்சி'') .. | 2 | 50 |
| 5, பாலிதீன் .. | 1 | 25 |
| 6. அச்சு மற்றும் அச்சுப்பணி .. | 4 | 100 |
| 7. தையல் வேலை .. | 1 | 25 |
| 8. கல் மற்றும் சுண்ணாம்புக்கல் வெட்டியெடுக்கும் தொழில் .. | 2 | 50 |
| 9. வண்ணச் சுண்ணாம்புக்கட்டிகள் .. | 6 | 300 |
| 10. இதர கைவினைத் தொழில்கள் .. | 1 | 25 |
| | 203 | 20,275 |

## தோல் தொழில்.

28. இந்தியாவிலுள்ள 800 தோல் பதனிடும் தொழிற்சாலை
களில் 400 தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில்
நாட்டில் தோல் மற்றும் தோல் பொருள்கள் இருக்கின்றன.
தமிழ்நாட்டிலுள்ள இத்தொழிற்சாலைகளே வர்த்தகத்தில்,
வகிக்கின்றன. இவை பெரும்பாலும் சென்னை, பெரும் பங்கு
ஆம்பூர், பேரணாம்பட்டு, இராணிப்பேட்டை, வாணியம்பாடி,
திண்டுக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஈரோடு,
ரக மற்றும் சிறு தொழில் துறைகளில் அமைந்துள்ளன. பெரு
ஒவ்வொரு ஆண்டும் சென்னை துறைமுகத்திலிருந்து சுமார்
ரூ. 200 கோடி மதிப்புள்ள பதனிடப்பட்ட கிழக்கிந்திய தோல்
எனப்படும். (E. I. Tanned Hides and Skins) தோல்கள்
ஏற்றுமதியாகின்றன. இவை நாட்டின் மொத்த தோல்
ஏற்றுமதியில் 60 சதவீதமாகும். இந்தியாவில் தயாரிக்கப்படும்
தோல்கள் தரத்தில் மிகச் சிறந்தவையாதலால், இவற்றிற்கு
ஐரோப்பியச் சந்தையில் நல்ல தேவை உள்ளது.

29. சிறு அளவில் தோல் பதனிடுபவர்களுக்கு உதவியளித்து,
தோல் தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு, நிறைவு செய்யப்
பட்ட தோல்களைத் தயாரிக்கும் இயந்திரங்களோடு கூடிய
தோல் தொழிற் கூட்டுறவுப் பணிச் சங்கங்களை அமைப்பதென,
மாநில அரசு முடிவெடுத்துள்ளது. இவற்றின் மூலம் தற்பொழுது
ஓரளவு நிறைவு செய்யப்பட்ட தோல் தயாரிக்கின்ற சிறு தோல்
பதனிடுபவர்கள், முழு அளவில் நிறைவு செய்யப்பட்ட தோல்
களைத் தயாரிக்க முடியும். இதனால், ஏற்றுமதிச் சந்தையில்
நல்ல விலை கிடைப்பதோடு, பலருக்கு வேலை வாய்ப்பும்
கிடைக்கும். வாணியம்பாடியில் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்
பட்ட முதல் சங்கமானது ஏற்கெனவே வேலையை தொடங்கி
விட்டது. 1979–80 ஆம் ஆண்டில் வாணியம்பாடி நிறைவு
செய்யப்பட்ட தோல் தொழில் கூட்டுறவு பணிச் சங்கத்தின்
வருவாய் ரூ. 5.88 இலட்சமாகும்.

30. 1979–80 ஆம் ஆண்டில் ஒவ்வொன்றும் ரூ. 58 இலட்சம்
மதிப்புள்ள நிறைவு செய்யப்பட்ட தோல்களைத் தயாரிக்கும்
தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டினை இராணிப்பேட்டை



மற்றும் திண்டுக்கல்லில் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புத
லளித்துள்ளது. மேற்கண்ட இரண்டு சங்கங்களுக்கும் நிலம்
வாங்கப்பட்டு வேலை நடந்து வருகிறது. மாநில நிதி நிறுவனங்
களின் கடனுதவியுடன் தொழிற்சாலைக் கட்டிடம் கட்டப்பட்டு
தேவையான இயந்திரங்கள் நிறுவப்பட்ட பிறகு, 1980 ஆம் ஆண்டு
இறுதியில் இந்த இரு நிலையங்களும் செயல்படத் துவங்குமென
எதிர்பார்க்கப்படுகிறது. 1980–81-ல் மேலும் ஒரு பணிச் சங்கம்
பேரணாம்பட்டில் அமைக்கப்படும்.

31. சிறு அளவில் தோல் பொருள்கள் தயாரிப்பில் ஈடு
பட்டுள்ளோருக்கு நிதி மற்றும் விற்பனை உதவி தொடர்ந்து
நல்ல முறையில் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன், அவர்கள்
தற்போதைய நிலை பற்றிய கணிப்பு ஒன்று இவ்வாண்டில் மேற்
கொள்ளப்பட இருக்கிறது.

## தென்னை நார்த்தொழில்.

32. இத்தொழிலின் வளர்ச்சிக்கு மாநில அரசு குறிப்பிடத்
தக்க அளவுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. 1979 ஆம்
ஆண்டு செப்டம்பரில் தொழில் வணிக இயக்குநரகத்தால் ஒரு
ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வு அறிக்கையின்
படி இத்துறையில் 4,493 கயிறு திரிக்கும் இராட்டைகள்
உள்ளன. நார் மற்றும் கயிறுத் துறையில் மட்டும் 16,007
பணியாளர்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் தென்னை நார்த்
தொழிலிலுள்ள, வேலை வாய்ப்பு வளத்தை ஆராய்ந்த நிபுணர்
குழுவானது, நார் பிரித்தெடுக்கும் தொழிலில் மேலும் 6,900
பேர் வேலை பார்த்து வருவதாகக் கூறியுள்ளது. அந்த ஆய்வு
அறிக்கையின்படி நார் மற்றும் கயிறு உற்பத்தியின் மொத்த
அளவு 41,077 மெட்ரிக் டன் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

33. இம்மாநிலத்தில் 1,06,900 ஹெக்டேர் நிலப் பரப்பில்
தென்னை மரங்கள் உள்ளன. ஆண்டொன்றுக்கு 1,094
மில்லியன் தேங்காய் உற்பத்தியாகிறதென்று மதிப்பிடப்
பட்டுள்ளது. தேங்காய் விளைவது பற்றிய ஒரு ஒப்பீட்டு

ஆய்வில், தமிழ்நாட்டில் "ஹெக்டேர்" ஒன்றுக்கு 10,054 தேங்காய்கள் உற்பத்தியாகிறது என்றும், ஆந்திரப் பிரதேசம், கேரள மற்றும் கர்நாடகத்தில் முறையே இவை 4,135, 4,958 மற்றும் 5,074 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிக அளவு தேங்காய் உற்பத்தியின் காரணமாக தமிழ்நாட்டிலுள்ள தென்னை நார்த் தொழிலின் வளர்ச்சிக்கு நல்ல எதிர்காலம் அமைந்துள்ளது.

34. தென்னை நார்த் தொழிலின் அபிவிருத்திக்கு சிறந்த வாய்ப்புகள் உள்ளதால், பின் வருகின்ற திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன:—

(1) கயிறு திரிக்கும் ராட்டைகளும் தரிகளும் வழங்குவது.

(2) தொழிற் கூட்டுறவுத் துறையில் நார் பிரித்தெடுக்கும் நிலையங்களை அமைப்பது.

(3) தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க வேண்டுமென்று நோக்கோடு இரண்டு நூலிழையாலான முறுக்கு நார் கயிறு மற்றும் பாய் பின்னுவதுற்குரிய பயிற்சி நிலையங்களை அமைப்பது.

தென்னை நார்த் தொழிலை வலுப்படுத்துவதற்கு விற்பனை வசதிகளை வளர்க்க வேண்டும். இதற்காக, ஏற்கனவே செயல்பட்டு வரும் விற்பனைச் சங்கங்களைப் பலப்படுத்துவதற்கும், வட இந்தியாவில் விற்பனை நிலையங்களை நிறுவுவதற்கும் உரிய திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

35. மேற்கண்ட திட்டங்கள், யாவும் கயிறுப் பொருள்களைச் சார்ந்தவையாகும். முறுக்கிழை மற்றும் "இரப்பர்" கலந்த நார்ப்பொருள்களைத் தயார் செய்வதற்காக முறுக்கேற்றப்பட்ட கயிறு இழைகள் வளர்ச்சித் திட்டங்களும் செயல்படுத்தப்பட உள்ளன. இம்மாதிரியான நார்ப்பொருள்களுக்கு போக்குவரத்து துறை, திரைப்படத் துறை போன்றவைகளில் நல்ல தேவை உள்ளது.



36. உலர்ந்த தேங்காய்ப்பூ, வீரியக் "கார்பன்" முதலியப் பொருள்களைத் தயாரிப்பது தனியார் துறையின் வளர்ச்சியடைந்து வருகின்றது.

## செயலாக்கப் பிரிவுகள்.

37. இரசாயனப் பிரிவு, மின் மற்றும் மின்னணுப் பிரிவு மற்றும் புவியியல் பிரிவு ஆகியவை இயக்குநரகத்தின் சிறப்பு வாய்ந்த பிரிவுகளாகும். இப்பிரிவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

## இரசாயனப் பிரவு.

38. நாட்டின் தொழிலியல் பொருளாதாரத்தில் இரசாயனத் தொழில் முக்கிய இடத்தை வகிக்கிறது. கடின இரசாயனப் பொருள் தயாரிப்புத் தொழில்கள் மற்றும் உரத் தொழில்கள் போன்ற பெரும் தொழில்கள் முதல் மருந்துப் பொருள்கள், வர்ணங்கள் மற்றும் வண்ணப் பூச்சுக்கள் முதலிய சிறிய தொழில்கள் வரை அநேக இரசாயனத் தொழில்கள் இதில் அடங்கும். பெருந்தொழில்களுள், பஞ்சாலைத் தொழில், இரும்பு எஃகு மற்றும் பொறியியல் தொழில்களுக்கு அடுத்தபடியாக, நான்காவது இடத்தை வகிப்பது இரசாயனத் தொழிலாகும்.

39. இரசாயனத் தொழில்களும், அவற்றைச் சார்ந்த தொழில்களும் இம்மாநிலத்தில் நல்ல முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

தமிழ்நாட்டில் நிறுவன அமைப்புத் துறையில் உள்ள சில இரசாயன மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் அபிவிருத்தியடைந்துள்ள நிறுவனத்திறன், சமீப ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளது. அனைத்திந்திய அடிப்படையில் அபிவிருத்தியடைந்துள்ள தொழில்களுள், தமிழ்நாட்டில் உள்ள இந்த இரசாயனத் தொழில்கள் ஒரு பெருமைக்குரிய இடத்தை வகிக்கின்றன.

[1980 ஜூலை 19

40. தமிழ்நாட்டிலும், இதர தெற்கு மாநிலங்களிலும் அமைந்துள்ள சில இரசாயனத் தொழில்களின் நிறுவப்பட்ட திறனின் சதவீத பங்கு கீழே தரப்பட்டுள்ளது.

| தொழில். | மாநிலம். | அனைத்திந்திய திறனோடு ஒப்பிடுகையில் நிலத்தில் உள்ள இரசாயனத் தொழில்களின் நிறுவப்பட்ட திறனின் பங்கு சதவீதம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. சிமிட்டி .. | (அ) தமிழ் நாடு .. | 16.1 |
| | (ஆ) ஆந்திரப் பிரதேசம் | 10.3 |
| | (இ) கர்நாடகா .. | 8.9 |
| | (ஈ) கேரளா .. | 0.2 |
| 2. "டயர்கள்".— | | |
| (i) பேருந்து | (அ) தமிழ் நாடு .. | 14 |
| | (ஆ) கேரளா .. | 12 |
| | (இ) கர்நாடகா .. | 6 |
| | (ஈ) ஆந்திரப் பிரதேசம் | 2 |
| (ii) இருசக்கர வண்டி, மூன்று சக்கர வண்டி. | (அ) தமிழ் நாடு .. | 19 |
| | (ஆ) கேரளா .. | 5 |
| 3. சோடா உப்பு .. | (அ) தமிழ் நாடு .. | 17 |
| | (ஆ) ஆந்திரப் பிரதேசம் | 5 |
| | (இ) கர்நாடகா .. | 7 |
| | (ஈ) கேரளா .. | 8 |
| 4. "நைட்ரஜினஸ்" உரங்கள் | (அ) தமிழ் நாடு .. | 16 |
| | (ஆ) கேரளா .. | 8 |
| | (இ) கர்நாடகா .. | 5 |
| | (ஈ) ஆந்திரப் பிரதேசம் | 2 |
| 5. பாஸ்பேடிக் உரங்கள் | (அ) தமிழ் நாடு | 20 |
| | (ஆ) கேரளா | 14 |
| | (இ) ஆந்திரப் பிரதேசம் | 12 |
| | (ஈ) கர்நாடகா | 1 |



1980 ஜூலை 19]

(மூலம்: தொழில் நுட்ப அபிவிருத்தி தலைமை இயக்குநரகம்.)

41. தமிழ்நாட்டில் பெருந்தொழில் துறையில் இரசாயனத் தொழில்கள் மேலும் வளர்ச்சியடைவதற்குப் போதுமான வாய்ப்பு உள்ளது. "ஆல்கஹால்" அடிப்படைத் தொழில்கள், வேளாண்மை அடிப்படையிலான தொழில்கள், கனிம அடிப்படையிலான அடிப்படை மருந்துப் பொருள்கள். பூச்சிக்கொல்லி தொழில்கள், அடிப்படை மருந்துப் பொருள்கள். பூச்சிக்கொல்லி தொழில்கள், அடிப்படை இரசாயனங்கள் முதலிய தொழில்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

42. தமிழ்நாட்டில், பெரிய மற்றும் நடுத்தரத் தொழில் துறைகளில் உள்ளது போலவே சிறு தொழில் துறையிலும் இரசாயனத் தொழில்களின் வளர்ச்சியின் பாங்கு அமைந்துள்ளது. சிறுதொழில் துறையில், இர்சாயனத் தொழில்களும் அவற்றைச் சார்ந்த தொழில்களும் நிலையாக வளர்ச்சியடைந்திருப்பதைத் கீழ்க்கண்ட அட்டவணையிலிருந்து அறியலாம்.

| தொழிலின் பெயர். | பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | 31—12—1977-ல் | 31—12—1978-ல் | 30—9—1979-ல் |
| (1) | (2) | (3) | (4) |
| இரசாயனப் பொருள்கள் .. | 2466 | 2,746 | 3,243 |
| உணவுப் பொருள்கள் .. | 1,491 | 1,698 | 1,968 |
| ஊட்டச் சத்துப் பொருள்கள் .. | 127 | 171 | 200 |
| புகையிலைப் பொருள்கள் | | | |
| காகிதப் பொருள்கள் .. | 1,545 | 1,887 | 2,328 |
| "இரப்பர்" பிளாஸ்டிக்ஸ் .. | 1,158 | 1,254 | 1,354 |
| உலோகமற்ற கனிமப் பொருள்கள் | 942 | 1,091 | 1,496 |
| மொத்தம்.. | 7,729 | 8,847 | 10,489 |

43. சோப்புவகைகள், மருந்துக் கலவைப் பொருள்கள், வாசனைப் பொருள்கள், "பிளாஸ்டிக்" செய்முறைத் தொழில்கள் 'இரப்பர் செய்முறைத் தொழில்கள், வர்ணங்கள் மற்றும் வண்ணப் பொருள்கள், சாயப் பொருள்கள் மற்றும் சாய இடைநிலைப் பொருள்கள், கடல் சார்ந்த இரசாயனங்கள், தொழிலியல் இரசாயன பொருள்கள் முதலியன போன்ற இரசாயன மற்றும் அது சார்ந்த தொழில்களை, மாநிலத்தில் சிறு தொழில் துறையில் அபிவிருத்தியடையச் செய்ய மேலும் வாய்ப்பு உள்ளது.

44. தொழில் வணிக இயக்குநரகத்தின் இரசாயனப் பிரிவானது தமிழ்நாட்டில் இரசாயனத் தொழில்களின் அபிவிருத்தியைக் கவனித்து வருகிறது. இப்பிரிவினது நடவடிக்கைகளாவன :

1. சோதனை வசதிகழி அளிப்பது.

2. முன்னோடித் திட்ட ஆய்வுகளுக்குரிய வசதிகளைப் அளிப்பது.

3, இரசாயனம் மற்றும் அதன் சார்புத் தொழில்களில் தொழில்நுட்ப ஆலோசனை, மற்றும் திட்டத் தொகுப்புக்களை அளிப்பது.

4. கிடைப்பதற்கரிதாயுள்ள மூலப் பொருள்களைச் சிறு தொழில் நிலையங்கள் பெறுவதற்கு உதவி செய்வது.

45. கிண்டியிலுள்ள இரசாயனச் சோதனை மற்றும் பகுப் பாய்வுக் கூடமானது இரசாயனத் தொழில்கள், உலோகத் தொழில்கள் மற்றும் பொறியியல் தொழில்கள் ஆகியவற்றிற்கு தொழிலியல் மூலப் பொருள்களைப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வு செய்வது, உற்பத்தி செய்யப்பட்ட பொருள் களையும் சோதித்து பார்ப்பது ஆகிய வசதிகளை அளிப்பதன் மூலம் அத்தொழில்களின் தேவைகளை நிறைவேற்றி வைக்கிறது. மதுரையிலுள்ள மண்டலச் சோதனைக் கூடமானது, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங் களிலுள்ள இரசாயனத் தொழில்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. கோயம்புத்தூரிலுள்ள மண்டல ஆய்வுக்கூடமானது, கோயமுத்தூர், நீலகிரி, பெரியார், சேலம் மற்றும் தர்மபுரி



மாவட்டங்களிலுள்ள இரசாயனத் தொழில்களின் தேவைகளை நிறைவேற்றிவைக்கிறது. சேலத்தில் அமைக்கப்பட்டுள்ள சவ்வரிசி ஆராய்ச்சி ஆய்வுக்கூடமானது சவ்வரிசி மற்றும் 'ஸ்டார்ச்' மாவுப் பொருள்களை பரிசோதனை செய்வது மற்றும் தரமிக்க சவ்வரிசி பொருள்களைத் தயாரிப்பதற்கு உதவி செய்வது ஆகிய வசதி களை. அம்மாவட்டத்திலுள்ள சவ்வரிசித் தொழில்களுக்கு அளித்து வருகிறது. உப்புத்தொழில் விஞ்ஞான ரீதியில் வளர்ச்சி யடைவதற்காக உதவி புரியவும் கடல்படு இரசாயனப் பொருள் களின் வளர்ச்சியில் பரிசோதனைப் பணியினை மேற்கொள்ளுவதற் கும், தூத்துக்குடியில் உப்பு, கடல்படு இரசாயனப் பொருள்களுக் கான மாநில ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

46, நடப்பாண்டில் இந்த ஆய்வுக்கூடங்கள் மேற்கொண்ட பணிகளால் பயனடைந்த தொழில்களின் எண்ணிக்கை பின் வருமாறு:—

| ஆய்வுக்கூடத்தின் பெயர். | பயனடைந்த தொழில்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| இரசாயனச் சோதனை—பகுப்பாய்வுக் கூடம், கிண்டி. | 1,755 |
| மண்டலச் சோதனைக் கூடம், மதுரை .. | 1,652 |
| மண்டலச் சோதனைக் கூடம், கோயமுத்தூர் | 661 |
| சவ்வரிசி ஆராய்ச்சி நிலையம், சேலம் .. | 311 |
| உப்பு, கடல்படு இரசாயனப் பொருள்களுக்கான மாநில ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி. | 23 |

[1980 ஜூலை 19

47. இயக்குநரகத்தின் இரசாயனப் பிரிவானது, இத் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ள செயல்படும் சிறு தொழில் நிலையங்களுக்கு மூலப்பொருள்களைப் பெற்றுத் தருவதில் உதவியளிக்கிறது. ''பாரபின்'' மெழுகு, தீக்குச்சி மெழுகு, பண்பட்ட மெழுகு, சோடா உப்பு, சோடா ஆஷ், உலைக்கள எண்ணெய், இறைச்சிக் கொழுப்பு முதலிய மூலப் பொருள்களை சிறு தொழில் நிலையங்களின் உற்பத்தித்திறன் மற்றும் அவற்றின் கடந்தகால செயலாக்கங்களின் அடிப்படையில், சிறு தொழில் களுக்கு, ஒதுக்கப்படுகின்றன. சிறு தொழில் நிலையங்களுக்குத் தேவையான மண்ணெண்ணெய் ஒதுக்கீடு ''இண்டேன்'' வாயு, ''ஸ்பிரிட்'' உரிமங்கள் வழங்குதல், இரப்பருக்குரிய தடையில்லாச் சான்றிதழ் வழங்குதல் ஆகியவற்றிற்கான பரிந்துரையினை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு இப்பிரிவு வழங்குகிறது.

48. சோடா உப்பு மற்றும் ''சோடா ஆஷ்'' பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு, இம்மூலப் பொருள்களை இறக்குமதி செய்து, சிறு தொழில் நிலையங்களுக்கு வழங்குவதற் காக, இந்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட 250 மெட்ரிக்டன் சோடா உப்பு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட 500 மெட்ரிக்டன்—''சோடா ஆஷ்'' ஆகிய இரசாயனப் பொருள்களை மாநிலத்திலுள்ள சிறு தொழில்களுக்கு, இப்பிரிவானது சமீபத்தில் ஒதுக்கியுள்ளது.

49. தொழிற்சாலைகளுக்கு உபயோகப்படுகின்ற மண்ணெண் ணெய் ஒதுக்கீடு விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்வதிலுள்ள தாமதத்தை தவிர்ப்பதற்காக, மாவட்ட அலுவலர்களே மண்ணெண் ணெய்த் தேவையினை ஆய்வு செய்து மண்ணெண்ணெய் ஒதுக் கீட்டு அளவு பற்றிய அறிக்கையினை நேரடியாகவே உணவுப் பொருள் வழங்கும் ஆணையாளருக்கு அனுப்ப அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. 1979-80ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட



1980 ஜூலை 19]

கிடைப்பதற்கரிதாயுள்ள மூலப் பொருள்களின் அளவு மற்றும் உதவி பெற்றுள்ள தொழில்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப் பட்டுள்ளன:—.

| கிடைப்பதற்கரிதாயுள்ள மூலப்பொருள்கள். (1) | 1979–80ல் ஒதுக்கீடு. (2) (மெட்ரிக்டன்) |
|---|---|
| 1. 'பாரபின்' மெழுகு .. .. | 3,498 |
| 2. தீக்குச்சி மெழுகு .. .. | 3,815 |
| 3. இறைச்சிக் கொழுப்பு .. .. | 160 |
| | உதவி பெற்றுள்ள தொழில் நிலையங்களின் எண்ணிக்கை. |
| 4. மண்ணெண்ணெய் .. .. | 26 |
| 5. ''டி. என். ஸ்பிரிட்'' .. .. | 23 |
| 6. உற்பத்தித்திட்டம் ஒப்புதலளித்தல் .. | 42 |
| 7. இயந்திர உலைக்கள எண்ணெய் .. | 44 |

<u>இரசாயனத் தொழில்களுக்குரிய தகவல் களஞ்சியம்.</u>

50. மாநிலத்தில், இரசாயனத் தொழில்களைப் பற்றிய புள்ளி விவரங்களையும், ஆலோசனை வழங்குதல் முறைகளையும் வலுப் படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் கிண்டி தொழிற்பேட்டை யிலுள்ள இரசாயனப் பிரிவில், இரசாயனத் தொழில்களுக்கான இத்தகவல் களஞ்சியம் அமைக்கப்பட்டுள்ளது. இரசாயனத் தொழில்களைப் பற்றிய அடிப்படை விவரங்கள் சேகரிப்பது, திட்டத் தொகுப்புக்களைத் தயாரிப்பது, மாநிலத்தில் சிறு தொழில் துறையில் இரசாயனத் தொழில் நிலையங்கள் அமைக்க முன்வருகின்ற ஆர்வமுள்ள தொழில் முனைவர்களுக்குத் தொழில் நுட்பத் தகவல் வழங்குவது ஆகிய பணிகளை இத்தகவல்

களஞ்சியம் மேற்கொள்ளுகிறது. இது போன்ற தொழில் நுட்பத்
தகவல்களையும், திட்டத் தொகுப்புக்களையும் கேட்டுவரும்
விண்ணப்பங்களின் எண்ணிக்கை கடந்த இரண்டாண்டுகளில்
அதிகரித்துள்ளது. திட்டத்தொகுப்புகள் வழங்கப்பட்ட தொழில்
முனைவர்களிடமிருந்து, அவர்கள் திட்டங்களைச் செயல்படுத்திய
நிலையினை அறியவும் இத்தகவல் களஞ்சியம் தொடர்
நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

51. இதுவரையில் 4,495 இரசாயனப் பொருள்களைப்
பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு, இவை தொடர்ந்து புதுப்
பிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 300 முதல் 400
வரையிலான விசாரணைகள் (இதர மாநிலங்களிலிருந்து வந்த
விசாரணைகள் உட்பட) தொழில் முனைவர்களிடமிருந்து பெறப்
படுகின்றன. சேகரிக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களைக் கொண்டு
தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. சேகரிக்கப்
பட்டுள்ள புள்ளி விவரமானது, இரசாயனப் பிரிவு மற்றும்
துறையின் இதர நிலையங்கள் (மாவட்டத் தொழில் மையங்கள்
போன்றவை) மற்றும் இதர அரசு நிறுவனங்கள் ஆகியவற்றில்
தொழில் வளர்ச்சி சம்பந்தப்பட்ட முடிவுகளை மேற்கொள்ளு
வதற்குப் பயன்படுத்தப்படுகிறது. 31—3—1980 வரை தொழில்
முனைவர்களுக்கு 97 திட்டத் தொகுப்புக்கள் கொடுக்கப்
பட்டுள்ளன.

52. 1979–80ஆம் ஆண்டில் இத்தகவல் களஞ்சியமானது,
இரசாயனத் தொழில்களுக்குரிய ஏழு திட்டத் தொகுப்புக்களைத்
தயாரித்து ; நான்கு திட்டத் தொகுப்புக்கள் திருத்தப்பட்டுள்ளன.
தொழில் முனைவர்களுக்கும் இதர அரசு நிறுவனங்களுக்கும் 70
திட்டத் தொகுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. தொழில் முனை
வர்களிடமிருந்து பெறப்பட்ட 581 விசாரணைகளுக்குரிய தொழில்
நுட்பத் தகவல்களை, இந்தத் தகவல் களஞ்சியம் அளித்துள்ளது.
இந்த ஆண்டில் தொழில் முனைவர்களுக்கு வழங்கப்பட்ட
தகவல்களின் பலனையறிய, 210 இனங்களில் தொடர்
நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 23 தொழில் முனைவர்

களிடமிருந்து பாராட்டுக்கடிதங்களும் பெறப்பட்டுள்ளன. தொழில்களை அமைப்பதற்கு அவர்கள் மேற்கொண்டுள்ள நட வடிக்கைகளைப்பற்றியும் இத்துறைக்கு அவர்கள் தெரிவித்துள ளனர்.

53. பல்வேறு மாவட்டங்களில் அபிவிருத்தியடைவதற்கு வாய்ப்புள்ள இரசாயனம் மற்றும் அதன் சார்பு தொழில்கள் தேவையென்று கண்டறிவதில், இத்தகவல் களஞ்சியம் தற் பொழுது ஈடுபட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட பெருரக இரசாயனத் தொழிற்சாலைகளிடமிருந்து தகவல் சேகரிப்பதி லும் இது ஈடுபட்டுள்ளது. மாநிலத்தில் ஏற்கெனவே உள்ள சிறு தொழில் நிலையங்களிடமிருந்து புள்ளி விவரத்தகவல்களைச் சேகரிப்பதிலும் இத்தகவல் களஞ்சியம் ஈடுபட்டுள்ளது. 3,000-க்கு மேற்பட்ட சிறுதொழில் நிலையங்களிடமிருந்து ஏற்கெனவே விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

54. பல மாவட்டங்களில், அபிவிருத்தி அடைவதற்கு வாய்ப்புள்ள இரசாயனம், மற்றும் அதன் சார்புத் தொழில் களைப் பற்றி கண்டறிந்ததில், 5 மாவட்டங்களுக்குரிய அறிக்கைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. இந்த 5 மாவட்டங்களில் கண்டறியப்பட்ட 267 தொழில்வகைகளில், ஏற்கெனவே 10 தொழில்வகைகளைப் பொறுத்த வரை திட்டத் தொகுப்புக்கள் தயாரிக்கப்பட்டுவிட்டன.

<u>உப்பு வாரியம் :</u>

55. அரசாணை எண் 535, தொழில்கள், நாள் 26—2—1971 என்பதில் உப்பு மற்றும் அதன் சார்பு இரசாயனப் பொருள்களுக் காக தமிழ்நாடு உப்பு வாரியத்தை அரசு அமைத்தது. உப்பு எடுக்கும் பகுதிகளைப் பற்றிய முறையான ஆய்வு மேற்கொள்ளு வது, நடவடிக்கைக்குத் தகுந்த கருத்துரை வழங்குவது, ஏற் கனவே உள்ள தொழிற்சாலைகளின் உற்பத்தித்திறனளவை விரிவு படுத்துவதற்குரிய வாய்ப்பினை மதிப்பிடுவது, புதிய தொழில் சாலைகளை அமைப்பது மற்றும் உப்பு சம்பந்தப்பட்ட வற்றில் அரசுக்கு ஆலோசனை வழங்குவது போன்ற செயல் களை மேற்கொள்ள இவ்வாரியம் அமைக்கப்பட்டது.

56. இவ்வாரியமானது, மாநிலத்திலுள்ள உப்புத்தொழி லைப் பாதுகாப்பதற்கும், ஊக்குவிப்பதற்கும் இந்திய அரசின் உப்புத்துறையோடு தொடர்புகொண்டு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இது உப்புத்தொழில் அபிவிருத்தியடையத்தகுந்த பகுதி களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஆலோசனை வழங்குவதோடல்லா மல், உப்பினை, உற்பத்தி செய்யப்பட்ட இடத்திலிருந்து உபயோகிக்கின்ற பகுதிகளுக்கு எடுத்துச் செல்லவும் உதவுகிறது.

மின் மற்றும் மின்னணுப்பிரிவு :

57. மின்னணுத்தொழில் பொருள் உற்பத்தியில், சிறுதொழில் துறையிலுள்ள தொழில் நிலையங்களின் பங்கு தொடர்ந்து சிறப்பானதாக அமைந்துள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனத் தின் தீவிரமான ஈடுபாட்டுடன், இத்தொழிலின் வேகமான வளர்ச்சிக்கு உதவும்வகையில் பல புதிய பொருள்கள் தயாரிப் பதனை ஊக்குவிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

58. மாநிலத்தில் 550-க்கும் மேற்பட்ட மின்சாரம் மற்றும் மின்னணு தொழில் நிலையங்கள் உள்ளன. இவை மிக நுட்பம் வாய்ந்த அநேக பொருள்களைத் தயாரிக்கின்றன. தொழில் நிலையங்களின் எண்ணிக்கை, வேலைவாய்ப்பு பற்றிய தற் போதைய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

59. சிறுரக மின்சார தொழில்கள் 280-க்கும் அதிகமாக உள்ளன. ஆண்டொன்றுக்கு ரூ. 1,700 இலட்சத்திற்கும் அதிக மதிப்புள்ள பொருள்களை அவை தயாரிக்கின்றன. அவற்றில் வேலை பெற்றுள்ள 9,500 பேரில் 3,000 பேர் பெண்கள். பரிசோதனை மற்றும் பொருள் அபிவிருத்தித்தேவையான உதவி அளிப்பதில், காகளூரிலுள்ள மத்திய மின்சாரப்பரிசோதனை ஆய்வுக்கூடமும், அடையாற்றிலுள்ள மின்னணு பரிசோதனை அபிவிருத்தி நிலையமும் பெயர்பெற்று விளங்குகின்றன. அரசு வாங்கும் மின்சார மற்றும் மின்னணுப்பொருள்களின் தரம் குறித்து இந்த ஆய்வுக் கூடங்கள் சான்றளிக்கவேண்டுமென்று மாநில அரசு ஆணையிட்டுள்ளது. இரயில் துறை, இந்திய தரநிர்ணய நிறுவனம் மற்றும் பொருள் வழங்குதுறையின் தலைமை இயக்குநரகம் ஆகியவை கக்களூரிலுள்ள மத்திய மின்சார ஆய்வுக்கூடத்தை அங்கீகரித்துள்ளன.



60. சிறுதொழில் துறையில் 200-க்கும் அதிகமான மின்னணு தொழில் நிலையங்கள் உள்ளன. பெருரகத் துறையில் உள்ள 9 தொழில் நிலையங்கள் நுட்பம் வாய்ந்த பல பொருள்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளன. 1970-71-ல் ரூ. 10 இலட்சம் என்றிருந்த சிறுதொழில் துறையில் தயாரிக்கப்படும் மின்னணுப் பொருள்களின் ஆண்டு மதிப்பு படிப்படியாக உயர்ந்து, இப் பொழுது ரூ. 10·50 கோடி என்ற அளவுக்கு அதிகரித்துள்ளது. 8,500 பேர் நேரடியாக வேலை பெற்றுள்ளனர். இதற்குச் சமமான அளவுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அமைந்துள்ளது.

61. சென்னை அடையாறிலுள்ள தகவல் களஞ்சியமானது மின்சாரம் மற்றும் மின்னணுத் தொழில்களுக்குத் தகவல்கள் அளிப்பதோடு, எல்லாத் துறைகளிலுமுள்ள மின்சார, மின்னணுத் தொழில்களைப் பற்றிய களத்தகவல்களைச் சேகரிப்பதிலும், திட்ட அறிக்கைகளைத் தயாரிப்பது, திருத்தியமைப்பது, குறிப் பிட்ட மின்சார மின்னணு பொருள்களைப் பற்றி முதலீட்டு ஆய்வறிக்கைகளைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டிருக்கிறது. இது வரை 120 அறிக்கைகளை இந்நிலையம் தயாரித்துள்ளது. இங் குள்ள தகவல்களைப் பெற்று கடந்த ஓராண்டில் 60 தொழில் நிலையங்கள் பயனடைந்துள்ளன. மின்சாரம், மின்னணு மற்றும் அவை சார்ந்த தொழில்களைப்பற்றிய தொழில் நுட்ப வெளியீடுகளையும், புத்தகங்களையும் கூடுதலாகப் பெற்று, இந்நிலையத்தை வலுப்படுத்தப்படும்.

62. வரும் ஆண்டுகளில், மின்சாரம் மற்றும் மின்னணுத் தொழில்களை, குறிப்பாகச் சிறுதொழில் துறையில் இவ்வகைத் தொழில்களை, மேலும் மேம்படச் செய்ய கீழ்க் காணும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன:—

1. ஆராய்ச்சி நிறுவனங்களுடனும், மாவட்ட தொழில் மையங்களுடனும் தொடர்பு கொண்டு, அவற்றின் வாயிலாக தயாரிக்கத் தகுந்த மிக நுட்பம் வாய்ந்த பொருள்கள் எவை என்று கண்டறிவது.

2. பரிசோதனை மற்றும் அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் திட்ட தகவல் களஞ்சியங்கள் மூலமாக தொழில் நுட்பம் மற்றும் ஆலோசனை அளிக்கப்படுவதனைத் தீவிரப்படுத்துவது.

3. தொழில் நிலையங்களுக்கு உதவுவதற்காகவும், நலிந்து
போன தொழில்களுக்கு உயிரூட்டுவதற்காகவும், நிதி நிறுவனங்
களுடனும், வங்கிகளுடனும் தொடர்பு கொண்டு செயல்படுவது.

4. மின்சாரம், மின்னணுப் பொருள்களின் தரத்தையும்,
ஏற்புத்தன்மையையும் மேம்படச் செய்யும் பொருட்டு இந்திய
அரசின் மின்னணுத்துறையுடனும், இந்திய தரநிர்ணய நிறுவனத்
துடனும் தொடர்பு கொண்டு செயல்படுவது.

5. தொழில் நிலையங்களின் பொருள் விற்பனையை மேம்
படச் செய்ய "சிட்கோ" நிறுவனத்துடனும் நெருங்கிய
தொடர்பு கொண்டு செயல்படுவது.

6. பரிசோதனை நிலையங்களின் நடவடிக்கைகளையும்
செயல் திறனையும் உயர் நிலைப்படுத்துவது.

7. பொதுத்துறையிலுள்ள பெருந்தொழில்கள் மற்றும்
தனியார் துறையிலுள்ள தொழில்கள் இவற்றோடு தொடர்பு
கொண்டு, சிறு தொழில்களும் துணைத் தொழில்களும் தயாரித்
தளிக்கக்கூடிய பொருள்களைக் கண்டறிவது.

8. அடிப்படை வசதிகளைச் செம்மையாக்குவது.

63. வீட்டு உபயோக மின்சாரப் பொருள்கள் (தரக்கட்டுப்
பாடு) ஆணை 1976 (1978-ல் திருத்தப்பட்டது.) என்பதன் சட்ட
திட்டங்களைத் தமிழ்நாட்டில் அமலாக்குவது.

இந்த ஆணையின் அதிகாரத்தின் கீழ் 41 மின்சாரப் பொருள்
கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இதன் அடிப்படை நோக்கம்
யாதெனில், பொருள்களின் தரத்தைக் கட்டுப்படுத்துவதும், உப
யோகிப்போருக்கு பாதுகாப்பளிப்பதை உறுதிப்படுத்துவதுமே
யாகும். இந்த ஆணையில் கண்டுள்ள மின்சாரப் பொருள்களை
யும், மின்சாதனங்களையும் தயாரித்து விற்பதில், தமிழ்நாட்டில்
57 தயாரிப்பாளர்களும், 890 வர்த்தகர்களும் ஈடுபட்டு உள்ளனர்.
இந்த ஆணையினை அமலாக்கும் பொறுப்பினை தொழில்
வணிக இயக்குநரகத்தின் மின் மற்றும் மின்னணுப் பிரிவிடம்
ஒப்படைக்கப்பட்டுள்ளது. தயாரிப்பாளர்களைப் பற்றியும்,



வர்த்தகர்களைப் பற்றியும் விவரங்கள் சேகரிப்பதை தொழில்
நுட்ப அலுவலர்கள் துவங்கியுள்ளனர். மேலும், பொருள்களின்
தரம் பற்றிய எண்ணத்தை அவர்களுக்கு ஊட்டும் பொருட்டு
கூட்டங்களையும், கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்றனர்.
இத்தொழில்களைப் பதிவு செய்யும் பணியும் மேற்கொள்ளப்
பட்டுள்ளது.

புவியியல் பிரிவு:

64. தொழில் வணிகத் துறையில் மாநிலப் புவியியல் பிரிவு
பல்வேறு தொழில்களில் பயன்படும் கனிமவள ஆய்வுகளை நடத்து
வதுடன் கனிம நிர்வாகத்திற்கு தொழில் நுட்ப ஆலோசனை
களையும் வழங்கி செயல்படுகிறது.

65. மாநில புவியியல் பிரிவு 1957-ல் தொடங்கி, தொழில்
நுட்பத்திலும் கனிம ஆய்விற்கு வேண்டிய களப்பணிக் கருவி
களிலும், ஆய்வுக் கூடங்களிலும் வளர்ச்சி அடைந்துள்ளது. 1968
லிருந்து 1975 வரை ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் பெரு
மளவில் அறிவியல் ஆய்வுக் கருவிகளை அளித்ததோடு இளம்
விஞ்ஞானிகளுக்கு பௌதீக இரசாயன, தொலை தூர உணர்வு
கனிம மேம்பாட்டு முறைகள் முதலிய நவீன கனிம ஆராய்ச்சி
முறைகளைக் கையாளும் பொருட்டு வெளிநாடுகளில் நவீன
தொழில்நுட்பப் பயிற்சியும் வழங்கியிருக்கிறது. இதன் விளை
வாக மாநிலப் புவியியல் பிரிவு இப்போது நவீன ஆராய்ச்சி முறை
களை பயன்படுத்தி பூமிக்கடியில் இருக்கும் கனிம படிவங்களை
கண்டுபிடிக்கக்கூடிய சாதனை அடைந்துள்ளது.

66. 1979–80-ம் ஆண்டு நடத்தப்பெற்ற முக்கியமான கனிம
மற்றும் புவியியல் ஆய்வுகள் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன.

கனிம ஆய்வுகள்:

67. பல்வேறு மாவட்டங்களில் சிமெண்ட் செய்வதற்கு ஏற்ற
சுண்ணாம்பு படிவங்கள் பற்றிய களப்பணி ஆய்வுகள் நடத்தப்
பெற்றன.

1. மதுரை-திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் கிடைக்கும்
சுண்ணாம்பு கனிம படிவங்கள்.

மதுரை மாவட்டம் பாளையம் கிராம சுற்று வட்டாரத்தில் கிடைக்கும் சுண்ணாம்பு படிவங்களைப் பற்றி விரிவான ஆய்வுகளை தமிழ்நாடு மாநிலப்புவியியல் பிரிவும் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனமும் இணைந்து நடத்தி வருகின்றன. இக்கனிம படிவங்கள் சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் வரை அமைந்துள்ளன. இப்படிவத்தின் மேற்குப் பாகம் மதுரை மாவட்டத்திலும், கிழக்குப் பாகம் திருச்சி மாவட்டத்திலும் பரந்துள்ளது. கனிமங்களின் மாதிரிகள் எடுப்பதற்காக ஆய்வு குழிகளும், நீளமான பள்ளங்களும் வெட்டப்பட்டன. தரை மட்டத்திற்குக் கீழ் கனிம இருப்பு நிலையைக் காண சுமார் 50 துரப்பனத்துளைகள் போடப்பட்டன. இக்கனிம படிவத்தில் ஒரு சிலபகுதிகளே சிமெண்ட் தயாரிப்பதற்கான தரமுடையவையாக இருக்கின்றன. மற்ற பகுதிகள் சிமென்ட் செய்ய தகுதியில்லாமலும், கிராமங்களை அடுத்து சமீபமாக இருப்பதாலும் சுரங்கங்கள் வெட்ட முடியாத நிலையில் அமைந்துள்ளன. எனினும் இச்சுண்ணாம்பு கனிமங்களில் வெங்கக்கல் பகுப்பு அதிகமாக இருப்பதாகக் கருதப்படுகிறது. மேலும் ஆய்வு முன்னேற்றமடைந்து வருகிறது.

திருநெல்வேலி மாவட்டம்:

69. கூடங்குளத்தில் சுண்ணாம்புக் கனிமத்திற்கான விரிவான ஆய்வுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. சுமார் 2 சதுர கிலோ மீட்டர் பரப்பில் அடுக்குப்பாறை வகையைச் சேர்ந்த சுண்ணாம்புக் கனிமம், மேட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. சுமார் 2 முதல் 6 மீட்டர் ஆழம் வரையில் படிவங்கள் இருப்பதாக அறியப்படுகிறது. சுமார் 50 லட்சம் டன் சிமெண்ட் தரமுடைய சுண்ணாம்புக் கனிமங்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இப்பகுதியில் இதன் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென் ஆற்காடு மாவட்டம்:

70. மரக்காணம் கிராமத்திற்கு 4 கிலோ மீட்டர் மேற்கில் தரம் குறைவான சுண்ணாம்பு படிவங்களை கொண்டு கட்டிட வேலைக்காக காரைப் பொருட்கள் தயாரிப்பதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த சுண்ணாம்புடன், நெய்வேலி



யில் கிடைக்கும் நிலக்கரி சாம்பல் மற்றும் நெல் உமியிலிருந்து கிடைக்கக்கூடிய சாம்பல் ஆகியவற்றுடன் கலந்து சிமெண்டிற்கு பதிலாக 'சுர்கி' எனப்படும் காரைக் கலவையை செய்ய சாத்தியங்கள் இருக்கின்றன. இக்காரைக் கலவை செய்யும் முறைகளைப் பற்றி ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

2. வைடூரியக் கற்கள் பற்றிய ஆய்வுகள்:

71. விலையுயர்ந்த ஆபரண மணிக்கற்களின் வகையைச் சேர்ந்த வைடூரியம் எனும் 'கிரைசோபெரில்' கேரளாவிலும், இலங்கையிலும் கிடைக்கிறது. திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களில் இம்மணிக்கற்கள் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகளை அறிவதற்காக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

72. கன்னியாகுமரி மாவட்டத்தில் தடிகாரகோணம் வனப் பகுதிகளில் பாறைகளில் கிடைக்கும் வைடூரியங்களின் அளவை நிர்ணயிக்கும் பொருட்டு 6 மீட்டர் ஆழத்திற்கு ஆய்வுக்குழி ஒன்று தோண்டப்பட்டது. இக்கற்களை மெருகேற்றினால் பூனையின் கண்களையொத்த பசுமை வண்ணத்தில் மிளிர்வு தோன்றுகிறது. ஆனால் மணிக்கற்களின் அளவு சிறியதாக உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில், இராதாபுரம் வட்டத்தில் முடவன்குளம் பகுதியிலும் வைடூரிய மணிக்கற்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவை தரம் குறைந்தவையாகவும், சிறுசிறு மணிகளாகவும் உள்ளன.

73. சமீபத்தில் புவியியல் ஆய்வாளர் குழு ஒன்று களக்காடு, அகத்தியர்மலை காடுகளில் வைடூரியம் கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகளை பற்றி ஆய்வினை நடத்தியது. திருநெல்வேலி மாவட்டத்தில் மகேந்திரகிரி மலைகளிலும் வைடூரிய மணிக் கற்கள் சிறு அளவில் கிடைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றிய ஆய்வுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

3. கோவை மாவட்டத்தில் கிடைக்கும் மாக்னசைட் படிவம்:

74. கோவை மாவட்டத்தில் மோயார் பள்ளத்தாக்கில் உள்ள தெங்குமரஹாடா கிராமத்தில் கிடைக்கும் மாக்னசைட் கனி

மங்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. இத்துடன்
இதர கனிம வளங்கள் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகளையும்
ஆராயப்பட்டு வருகின்றன.

**4. பெல்ஸ்பார் எனப்படும் பீங்கான் செய்யப்பயன்படும் கனிமப் பொருள் :**

75. கோவை மாவட்டத்தில் காரமடை அருகில் பெல்ஸ்பார்
கனிமம் கிடைப்பதாக அறியப்பட்டுள்ளது. இவை நல்ல
தரமுடையவையாக இருப்பதால் இப்படிவத்தில் முழு அளவை
யும் அறிந்து, தமிழ் நாடு கனிம நிறுவனத்தால் வெட்டி எடுக்கப்
படும் நோக்கத்துடன் மேலும் விரிவான ஆய்வுகள் மேற்கொள்
ளப்பட்டிருக்கின்றன.

**5. கன்னியாகுமரி மாவட்டத்தில் முட்டம் பகுதியில் கிடைக்கும் வெள்ளைக் களிமண் ஆய்வுகள்:**

76. முட்டம் பகுதியில் வெள்ளைக் களிமண் படிவங்கள்
பற்றிய விரிவாக ஆய்வுகள் நடத்தப்பட்டு நான்கு துரப்பணத்
துளைகள் இடப்பட்டுள்ளன. இதுவரை மேற்கொள்ளப்பட்ட
ஆய்வுகளிலிருந்து இப்படிவங்கள் மணல், செம்பாறைகளுக்கடியில்
சிறுசிறு பகுதிகளாக உள்ளதாக காணப்படுவதால் இது பொருளா
தார அடிப்படையில் பயனுள்ளதாக இல்லை என்று அறியப்படு
கின்றது.

**ஆ. புவியியல் தொழில் நுட்ப ஆய்வுகள்.**

**1. நீலகிரி மாவட்டத்தில் நிலச் சரிவுகள் :**

77. 1979-80 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் குன்
னூர், கோத்தகிரி, உதகமண்டலம் பகுதியில் சுமார் 300 நிலச்
சரிவுகள் ஏற்பட்டு பெரும் சேதம் விளைந்தது. மாநிலப் புவி
யியல் பிரிவு, இந்திய புவியியல் ஆய்வகத்தின் பொறியியற்
பிரிவுடன் இணைந்து நிலச்சரிவுகளின் காரணங்களை ஆராய்ந்து
வருகிறது. இது வரையில் சுமார் 150 நிலச் சரிவுகளின் தன்
மைகள் ஆராயப்பட்டு வகைப்படுத்தி பிரிக்கப்பட்டுள்ளது. உதக
மண்டலம், குன்னூர், கோத்தகிரி முதலிய முக்கியமான ஊர்களை



இணைக்கும் பெரு வழித்துறை சாலைகளில் நில அளவை
முறையில் அளக்கப்பட்டு அவைகளில் நிலச்சரிவை தடுப்பதற்கான
வழி முறைகளைக் காண ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகிறது.
தேசிய தொலை தூர உணர்வு ஆய்வு கழகத்தினரால் நிலச்
சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விமானம் மூலம் புகைப்பட
மெடுத்து ஆய்வுகள் நடத்த அரசு அனுமதி அளித்துள்ளது.
இது சம்பந்தமாக நீலகிரியில் ஒரு பகுதியில் புகைப்படங்கள்
எடுக்கப்பட்டுவிட்டன. எஞ்சிய நிலப்பகுதியினைப் பருவ
மழை முடிந்தவுடன் மீண்டும் புகைப்படம் எடுக்கப்படும்.

78. நீலகிரி மலையில் மேற்கொண்டுள்ள நிலச் சரிவு பற்றிய
இம்மாதிரியான விரிவான ஆய்வுகள் நமது நாட்டிலேயே முதன்
முறையாக நடத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.
இதில் வனப் பகுதிகளை அழிப்பதாலும் விவசாயத்திற்கான
நிலங்களை சீர்படுத்துவதாலும் ஏற்படும் நிலப் பாதிப்பு,
நிலச் சரிவிற்கு ஓர் முக்கிய காரணமாக அமைவது கண்டறியப்
பட்டது. மாவட்ட அதிகாரிகளுக்கு நிலச்சரிவை பற்றி முன்
னெச்சரிக்கை தரவும் நிலச்சரிவு தடுப்பு முறைகளை ஆராய்ந்து
சொல்லவும் ஒரு புவியியல் ஆய்வாளர்கள் குழு தங்கள் முழு
ஒத்துழைப்பை தந்துள்ளனர்.

**விண்கோளிலிருந்து எடுக்கப்பட்ட உருவக புகைப்படம்**

79. அகமதாபாதிலுள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறு
வனத்துடன் இணைந்து இம்மாநிலப் புவியியல் பிரிவு விண்வெளி
உருவக புகைப்படங்களின் பல்வேறு பயன்களைப் பற்றி ஆய்வு
நடத்திவருகிறது. தமிழ் நாட்டில் ஒன்பது சோதனைக் களங்கள்
தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றிற்கான புகைப்படங்களில் உள்ள
புவியியல் விவரங்களை இதுவரை நன்கு அறிந்த புவியியல்
விவரங்களோடு சரி பார்த்து உருவக புகைப்பட முறையின்
பயன் வரையறுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து விண்கோள் உருவக
புகைப்பட முறை பரந்த அளவில் புவியியல் விவரங்களை
எளிதிலும் விரைவிலும் அறியவும், கனிம ஆராய்ச்சிகளிலும்
இம்முறை மிகவும் பயன் உள்ளதாகக் கண்டறியப்பட்டது.

**கனிம மேம்பாட்டு ஆய்வுக் கூடம்**

80. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரு சிறிய கனிம மேம்பாட்டு ஆய்வுக் கூடம் மாநிலப் புவியியல் பிரிவில் அமைக்கப்பட்டது. 1979–80-ல் வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூர் அருகில் கிடைக்கும் சயனைட் பாறையிலிருந்து பெல்ஸ் பாரை பிரித்தெடுக்கவும், தருமபுரி மாவட்டம், கோக்கம்பட்டி அருகில் கிடைக்கும் மாக்னசைட் கனிமத்திலிருந்து டைட்டானியம் வெனேடியம் முதலிய மூலகங்களைப் பிரித்தெடுக்கவும், தென் ஆற்காடு மாவட்டம் மரக்காணம் கடற்கரைப் பகுதியில் கிடைக்கும் மணலிலிருந்து வெங்கக்கல் மணலை பிரித்தெடுக்கவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாய்வுகள் தொழில் துறையில் கனிமங்களையும் தாதுக்கனிகளையும் தகுந்தவாறு பயன்படுத்த அனுகூலமாக இருக்கின்றன.

81. பெருமளவில் கனிம தர மேம்பாட்டிற்கான ஓர் ஆய்வுக் கூடம் சேலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கூடத்தில் சேலம் அருகில் உள்ள சுண்ணாம்புக் கரட்டில் கிடைக்கும் மாக்னசைட் கனிமங்களில் தரக்குறைவானவைகளை தரமேம்பாடு செய்ய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாய்வுக் கூடத்தை முழுமையானதாக ஆக்க புதிய கட்டிடம் கட்டப்படுவ துடன் மேலும் இயந்திரங்கள் வாங்கப்பட்டு அவைகளின் நிர்மாண வேலைகள் நடந்து வருகிறது.

82. மாநிலப் புவியியல் பிரிவின்கீழ் இயங்கும் இரசாயன பகுப்பாய்வகத்தில், சுண்ணாம்புக்கல், மாக்னசைட், டோலமைட், பெல்ஸ்பார், வெங்கக்கல் மணிகள் வெள்ளைக் களிமண் மற்றும் தொழிற்துறை கனிமங்களில் சுமார் 620 மாதிரிகளை இரசாயன சோதனை செய்து பகுத்தாராயப்பட்டன. குறைந்த தர முடைய சுண்ணாம்புகளுடன் நெய்வேலியில் கிடைக்கும் நிலக் கரி சாம்பல் கலந்து கட்டிடம் கட்டுவதற்கு பயன்படும் சுண்ணாம் புக்காரை செய்யவும் ஆய்வுகள் நடத்தப்பட்டுவருகின்றன. அரக்கோணத்திலுள்ள தமிழ் நாடு இரும்பு தயாரிக்கும் நிறுவனத் திற்காக சுட்ட சுண்ணாம்பு தயாரிப்பதற்கான ஆய்வுகளும் நடத்தப்பட்டது. சிறு அளவில் கிடைக்கும் மூலகங்களான டைட் டானியம், வேனேடியம் போன்றவைகளின் அளவை அறியவும் 970 மாதிரிகளின் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டன.



**சமதள கிரேட்டில் ஸ்பெக்டோகிராப்**

**மாடல் 2**

83. மேற்சொன்ன ஆய்வுக்கருவி, கனிமங்களில் கிடைக்
கும் பல்வேறு மூலகங்களை கண்டறிவதற்காக மாநில புவியியல்
பிரிவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இக்கருவியை முறை
யாக இயக்கும் முறைகளை கற்றுக்கொள்வதற்காக
இரண்டு தொழில் நுட்ப அதிகாரிகள் டிராம்பேயில் உள்ள பாபா
அணுசக்தி ஆய்வுக் கழகத்தில் பயிற்சி பெற்றுள்ளனர்.

84. மேலும் மாநில புவியியல் பிரிவு பல்வேறு கனிமங்களை
குத்தகைக்கு விடுவதற்கான தொழிற் நுட்ப பரிந்துரைகளையும்
வழங்கி வருகிறது. தனியார் தொழில் நிறுவனங்களில் கனிமங்
களை பயன்படுத்துவது பற்றியும், தொழில் நுட்ப அறிவுரை
களையும் வழங்குகிறது. இதற்காக சேலம், கோயம்புத்தூர், கடலூர்,
திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஆகிய ஊர்களின்
மண்டல கனிம வளர்ச்சி ஆய்வு அலுவலகங்கள் செயலாற்றி
வருகின்றன. காஞ்சிபுரத்தில் மற்றுமொரு மண்டல கனிம
வளர்ச்சி ஆய்வு அலுவலகம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

85. 1979 ஆம் ஆண்டில் 284 ஒப்புமை சான்றிதழ்களுக்
கான மனுக்களும், 56 கனிம குத்தகைக்கான மனுக்களும் பரிசீ
லிக்கப்பட்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளது.

86. குத்தகைக்கு விடப்பட்ட கனிம சுரங்கங்களிலிருந்து
கிடைக்கும் ஆண்டு வருமானம் ஆண்டு தோறும் பெருகியுள்ளது
என்பதை கீழே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரத்திலிருந்து
அறியலாம்.

கனிமங்கள் வெட்டியெடுக்க விடப்பட்ட குத்தகைகள் தொடர்
பாக வசூலிக்கப்படும் டெட் ரெண்ட், ராயல்டி, சர்பேஸ் ரெண்ட்
என்ற இனங்களின் வாயிலாக வரும் வருவாய் :—

| ஆண்டு. | | | மொத்த வருவாய். ரூ. |
|---|---|---|---|
| 1976–77 | .. | .. | 1,11,07,000 |
| 1977–78 | .. | .. | 1,23,85,000 |
| 1978–79 | .. | .. | 1,85,64,000 |

### நிர்வாக முன்னேற்றங்கள்.

87. கடந்த ஆண்டினது கொள்கைக் குறிப்பில் கூறப்பட் டுள்ளவாறு, சிறுதொழில் துறையில் தொழில்களைப் பதிவு செய்யும் முறையினை முறைப்படுத்துதல் மற்றும் நடைமுறை களைச் சுலபமாக்குதல் போன்ற சிறப்பு நடவடிக்கைகளை இந்த ஆண்டும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. இவை நல்ல பயனை யளித்துள்ளன.

### பதிவு.

### பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் நிலையங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு.

88. 1978-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாளில் பதிவு செய்யப்பட்ட நிரந்தர தொழில் நிலையங்களின் எண்ணிக்கை 18,789 ஆனது 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம் நாளில் 21,779 ஆக உயர்ந்துள்ளதென்று கடந்த ஆண்டில் குறிப்பிடப் பட்டிருந்தது. 1980-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாளில் இந்த எண்ணிக்கையானது 28,642 ஆக உயர்ந்துள்ளது. இது சுமார் 7,000 தொழில் நிலையங்கள் கூடுதலாக அமைந்த உள்ளதைக் காட்டுகிறது.

89. கண்காணிப்பு முறையுடன் அமைந்து ஆய்வுப் பணிகள் மற்றும் கிடைப்பதற்கரிதாயுள்ள மூலப் பொருள்களை ஒதுக்கு தல், உபயோகித்ததைச்சரி பார்த்தல் ஆகியவற்றில் மேற்கொண்ட முயற்சிகளோடு மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்களுக்குக் கூடுதலான அதிகாரங்களை வழங்கியதும் சேர்ந்து, சிறுதொழில் நிலையங்களுக்கு ஒருமித்த நிலையில் பெருமளவிலான நன்மைகள் கிடைக்கச் செய்துள்ளன. இறக்கு மதி மற்றும் ஏற்றுமதி இணை தலைமைக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் இதர பொருள் விநியோகிப்பு நிறுவனங்களிடமிருந்து, சிறுதொழில் நிலையங்கள் இறக்குமதி உரிமம் பெறுவதற்குரிய முறைகளைச் சீராக்கியிருப்பது வரவேற்பினைப் பெற்றுள்ளது.

90. வழிமுறைகளைச் சீராக்கியதன் பயனாக, செயல்படும் தொழில் நிலையங்கள் அதிகமான இறக்குமதி உதவியைப் பெற் றுள்ளன. இந்திய அரசு வெளியிட்டுள்ள கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து இதனை அறியலாம்.



தமிழ்நாட்டிலுள்ள சிறுதொழில் நிலையங்கள் பெற்ற இறக்குமதி உரிமத்தின் மதிப்பு:—

| உரிமகாலம். | | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|
| 1976–77 | .. | .. | .. | 566 |
| 1977–78 | .. | .. | .. | 769 |
| 1978–79 | .. | .. | .. | 1,044 |
| 1979–80 | .. | .. | .. | 2,602 (தோராயமாக). |

91. இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருள்களைப் போலவே, கிடைத்ததற்கரிய உள்நாட்டு மூலப் பொருள்களும் தேவைக்கேற்ப, விரைவாகவும் கிடைத்தற்பொருட்டு, அவ் வழிகளையும் சீராக்கப்பட்டன. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், கனிம-உலோக வர்த்தக நிறுவனம் மற்றும் இதர நிறுவனங்களின் கூட்டுறவுடன் இது செயலாக்கப்பட்டுள் ளது. எந்த ஒரு நல்ல தொழில் நிலையமும் மூலப் பொருள் கிடைக்கவில்லையென்று அவதியுறக் கூடாது என்ற நிலையினை உருவாக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளப்பட்டிருக்குங் கால், அவ்வப்பொழுது, மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் மூலம் செயல்படாத தொழில் நிலையங்களைக் கண்டறிந்து அவற்றை களையவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

92. நடப்பாண்டில் இரும்பு மற்றும் துருப்பிடிக்காத எஃகு, மெழுகு முதலிய கிடைப்பதற்கரிதாக உள்ள பொருள்களின் ஒதுக்கீடு அதிகமாயிருந்த போதிலும், இந்த இன்றியமையாத மூலப் பொருள்கள் நாடு முழுவதும் பற்றாக் குறையாக உள்ளன. எனவே, இம்மாநிலம் மட்டும் அதற்கு விதிவிலக்கன்று. மாநிலத் திலுள்ள சிறு தொழில்கள் நிலக்கரி, பழுப்பு நிலக்கரி இவற்றின் கடும் பற்றாக்குறையால் அவதிப்படுகின்றன. போதுமான அள வுக்கு நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி ஒதுக்குவதற்கும், அவற்றை எடுத்துச் செல்வதற்குத் தேவையான சரக்குப் பெட்டி களை வழங்குவதற்கும், மாநில அரசு மத்திய அரசினை வற் புறுத்தி வருகிறது. மாநிலத்திற்குத் தேவையான அளவு நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரியை அனுப்புவதற்கு, இந்திய அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இணைப்பு 1.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் மற்றும் கிராம இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு பயிற்சித் திட்டம் ஆகிய வற்றின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட உதவித் தொகை மற்றும் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கையைக் காட்டும் அட்டவணை.

| வரிசை எண்ணும் மாவட்டமும். | பயிற்சித் திட்டம். | | கருவிகளும், சாதனங்களும் வழங்கப்பட்டவை. | | தொழிற்கூடங்களுக்கு உதவித் தொகை. | | குறிப்புரை. |
|---|---|---|---|---|---|---|---|
| | பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட உதவித் தொகை. | பயனடைந்தவர்களின் எண்ணிக்கை. | தொகை. | பயனடைந்தவர்களின் எண்ணிக்கை. | தொகை. | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | (ரூபாய் இலட்சத்தில்.) | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1 செங்கற்பட்டு .. .. .. | 1,029 | 3.55 | 78 | 1.23 | 130 | 3.22 | |
| 2 தர்மபுரி .. .. .. | 1,926 | 11.69 | .. | .. | 110 | 1.64 | |
| 3 கன்னியாகுமரி .. .. | 782 | 2.67 | .. | .. | 3 | 0.04 | |
| 4 புதுக்கோட்டை .. .. | 2,811 | 6.79 | 365 | 0.83 | .. | .. | |
| 5 இராமநாதபுரம் .. .. | 1,196 | 3.39 | .. | .. | 184 | 2.74 | |
| 6 சேலம் .. .. .. | 1,200 | 0.66 | .. | .. | .. | .. | |
| 7 தென் ஆற்காடு .. .. | 2,329 | 11.28 | .. | .. | .. | .. | |
| 8 திருநெல்வேலி .. .. .. | 909 | 2.62 | .. | .. | .. | 6.42 | |
| 9 கோயம்புத்தூர் .. .. | 511 | 4.67 | .. | .. | .. | .. | |
| 10 மதுரை .. .. .. | 1,278 | 6.54 | .. | .. | .. | .. | |
| 11 வட ஆற்காடு .. .. .. | 1.654 | 7.19 | .. | .. | .. | .. | |
| 12 பெரியார் .. .. .. | 324 | 1.26 | 76 | 2.28 | .. | .. | |
| 13 தஞ்சாவூர் .. .. .. | 2,076 | 16.46 | 511 | 1.62 | .. | .. | |
| 14 திருச்சிராப்பள்ளி .. .. | 1,899 | 3.14 | 540 | 0.98 | 369 | 1.19 | |
| மொத்தம் .. | 19,924 | 81.91 | 1,570 | 6.94 | 796 | 15.25 | |

அட்டவணை 2.

1978-ம் ஆண்டு ஜூலை திங்கள் 1-ம் நாள் முதல் 1980-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் முடிய பதினான்கு மாவட்ட தொழில் மையங்களில் பதிவு செய்யப்பட்ட தொழிற்கூட்டுறவுச் சங்கங்களின் விவரம்.

| வர்த்தகம். | செங்கற் பட்டு. | தர்மபுரி. | கன்னியா குமரி. | புதுக் கோட்டை. | இராமநாத புரம். | சேலம். | தென் ஆற்காடு. | திருநெல் வேலி. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| தீக்குச்சி பணியாளர்கள் | .. | 26 | 10 | 26 | 56 | 11 | .. | 29 |
| தீக்குச்சிப்பணி | 1 | 3 | 1 | 1 | 9 | 2 | 2 | 4 |
| முந்திரிபருப்பு பக்குவப்படுத்தல் | .. | | .. | .. | 2 | .. | 1 | .. |
| சௌரிமுடி | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. |
| மரத்தில் வரைபவர்கள் | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. |
| பட்டுத் தொழில் | .. | 6 | .. | .. | .. | 1 | .. | 1 |
| பித்தளை மெருகிடுதல் | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| தயாரான ஆடைகள் | 1 | 2 | .. | .. | .. | .. | 1 | .. |
| பொதுவான கட்டுமானம் | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. |
| சிறு தொழில் சேவை | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. |
| மற்றவை | 1 | 3 | .. | .. | 1 | 3 | .. | 2 |
| மொத்தம் | 4 | 40 | 12 | 27 | 69 | 17 | 5 | 37 |



அட்டவணை 2—தொடர்ச்சி.

1978-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ம் நாள் முதல் 1980-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் முடிய பதினான்கு மாவட்ட தொழில் மையங்களில் பதிவு செய்யப்பட்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் விவரம்—தொடர்ச்சி.

| வர்த்தகம். | வட ஆற்காடு. | கோயம்புத் தூர். | பெரி யார். | திருச்சிராப் பள்ளி. | தஞ்சாவூர். | மதுரை. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) |
| தீக்குச்சி பணியாளர்கள் | .. | 10 | .. | .. | .. | 38 | 206 |
| தீக்குச்சிப் பணி | .. | .. | .. | .. | .. | 2 | 25 |
| முந்திரி பருப்பு பக்குவப்படுத்துதல் | .. | .. | .. | .. | .. | .. | 3 |
| சௌரிமுடி | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| மரத்தில் வரைபவாகள் | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| பட்டுத் தொழில் | .. | .. | .. | .. | .. | .. | 8 |
| பித்தளை மெருகிடுதல் | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| தயாரான ஆடைகள் | .. | .. | .. | .. | .. | .. | 4 |
| பொதுவான கட்டுமானம் | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| சிறுதொழில் சேவை | .. | .. | .. | .. | .. | .. | 1 |
| மற்றவை | .. | .. | .. | .. | .. | 1 | 11 |
| மொத்தம் | .. | 10 | .. | .. | .. | 41 | 226 |

தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம்.—இம்மாநிலத்தில்
மின்னணுத் தொழில் மற்றும் அவை சார்ந்த தொழில்களை
மேம்படச் செய்து, வளர்ச்சியடையச் செய்யும்பொருட்டு,
நிறுவப்பட்ட தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம் நுட்ப
மான நவீன மின்னணுக் கருவிகளை தயாரிப்பதற்காக, சில
திட்டங்களைத் தொடங்குவதற்கு, நடவடிக்கைகள் எடுத்
துள்ளது. சென்னையிலும் ஓசூரிலும் நிலம் கையகப்படுத்து
வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2. டாட்டா பொருளாதார ஆலோசனைப்பணி நிலையத்தின்
மூலம் சில மின்னணுத் தொழில் திட்டங்கள் குறித்து தொழில்
நுட்பப் பொருளாதார ஏற்புடைமை அறிக்கைகளை, மேற்படி
நிறுவனம் ஏற்கெனவே பெற்றுள்ளது. இந்நிறுவனத்தில் புதிய
திட்டங்களைத் தொடங்குவதற்கான செலவினத்திற்கு ரூ. 25
இலட்சத்தை அரசு பங்கு மூலதனமாக அண்மையில் அரசு
ஒப்பளித்துள்ளது.

இந்திய மின்னணுத் தொழில் நிறுவனம், மின்னணு வர்த்தக
மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி நிறுவனம், பாரத மின்னணுத்
தொழில் நிறுவனம் போன்ற இந்திய அரசு நிறுவனங்களின் கூட்
டோடும் அவைகளின் தொழில் நுட்ப ஆலோசனைகளின்படியும்,
சில திட்டங்களை எடுத்துச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்
கூற்றை தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம் ஆராய்ந்து
வருகிறது. நுண்ணிழை கம்ப்யூட்டர் கருவிகளை (Computer
Peripherals) கணிசமான அளவில் தயாரிப்பதற்கு ஒப்புதல்
பெற்றுள்ள டாட்டா பர்ரோக்ஸ் நிறுவனத்திடம், இப்பொருள்
களின் ஒரு பகுதியை தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனமும்
தயாரித்தளிப்பது குறித்து அணுகியுள்ளது. தொலைக்காட்சிப்
பெட்டிகள் அமைப்பதற்கும் மற்றும் மின்னணு பாகங்களைத்
தயாரிப்பதற்கும், அனுமதி கேட்டு இந்திய அரசிற்கு விண்ணப்
பிக்கப்பட்டுள்ளது.

மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்கள் மூலம் மின்னணுத்
தொழில்களின் வளர்ச்சி மேலும் அபிவிருத்தியடையும். வேலை
வாய்ப்புகள் பெருகிடவும் மற்றும் மிக நுட்பமான நவீன
பொருள்களின் தயாரிப்புகளை பல்வகைப்படுத்தவும் இத்
திட்டங்கள் வழிவகுக்கும்.



## தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம.

தொழில் வணிகத் துறையின் கீழிருந்த சிறு தொழிற்சாலை
களை ஏற்று வணிக முறையில் நடத்தும் பொருட்டு, தமிழ்நாடு
சிறுதொழில் நிறுவனம் (டான்சி) 1965-ம் ஆண்டு அமைக்கப்
பட்டது. 65 தொழிற்சாலைகள், ரூ. 989 இலட்சம் மதிப்புள்ள
இருப்புகளுடன் டான்சிக்கு 1965-ம் ஆண்டு டிசம்பர் திங்கள்
1-ந் தேதி முதல் மாற்றப்பட்டன. மேற்கூறிய தொகையில்
ரூ. 400 இலட்சம் அரசால் செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாகவும்
எஞ்சிய தொகை அரசிடமிருந்து பெறப்பட்ட கடனாகவும் கருதப்
பட்டது.

தற்போதுள்ள சில தொழிற்சாலைகளை விரிவுபடுத்தும்
திட்டம் உட்பட நிறுவனம் மேற்கொள்ளும் திட்டங்களுக்கான
நிலையான மூலதனச் செலவை ஏற்கும் பொருட்டு தேவையான
உதவியை பங்கு மூலதனம் அல்லது கடன் ஆக அரசு இந்நிறுவனத்
திற்கு அளித்து வருகிறது. 1979-80-ல் ரூ. 40 இலட்சம் பங்கு
மூலதனமாகவும், ரூ. 3·82 இலட்சம் கடனாகவும் அரசு இந்
நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. டான்சியின் பங்கு மூலதனம்
மற்றும் கடன் வடிவம், 1980-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ல்
உள்ளபடி கீழே தரப்பட்டுள்ளது :—

(ரூபாய் கோடியில்.)

| | | |
|---|---|---|
| 1. | அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் .. | 10·00 |
| 2. | அளிக்கப்பட்ட பங்கு மூலதனம் .. | 7·60 |
| 3. | அரசிடமிருந்து வாங்கிய கடன் .. | 8·90 |

2. சில மாற்றியமைக்கப்பட்ட ஒழுங்கு செயல்களுக்குப்பின்
இந்நிறுவனத்தின்கீழ் தற்போது 55 உற்பத்தித் தொழிற்
சாலைகள் உள்ளன. அவைகளைக் கீழ்க் குறிப்பிட்டவாறு
தொகுதிகளாகப் பிரிக்கலாம் :—

1. இரும்பு வடிவமைப்பு/கட்டுமான தொழிற்சாலைகள்.
2. கருவி அறைகள்.

3. பொறியியல் தொழிற்சாலைகள்.

4. இரும்புப் பொருட்கள் அமைப்பு/உற்பத்தித் தொழிற்சாலைகள்.

5. தச்சுத் தொழிற்சாலைகள்.

6. தோல் தொழிற்சாலைகள்.

7. பல்வகை மற்றும் சிறப்பு வகைத் தொழிற்சாலைகள்.

3. அரசிடமிருந்து டான்சிக்கு மாற்றப்பட்ட தொழிற்சாலை
களை வணிக முறையில் தனித்தியங்கவல்ல தொழிற்சாலை
களாக மாற்றுவதற்காக, டான்சி நிர்வாகம் தொடர்ந்து முயற்சி
செய்து வருகிறது. தனியார் துறையிடமிருந்து கிடைக்கும்
குறிப்பிட்ட பணிகளுடன், அரசுத் துறைகள் மற்றும் இரயில்வே,
மின்வாரியம், தபால் தந்தித் துறை, நீர் மற்றும் வடிகால் வாரியம,
இந்திய விண்வெளி ஆராயச்சி நிறுவனம் போன்ற அரசு
நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் பணிகளையும், பெருவாரியான
டான்சி நிறுவனத் தொழிற்சாலைகள் நிறைவேற்றி வருகின்றன.

பல்லாண்டுகளாக, தொடர்ந்து டான்சியின் உற்பத்திப் பெருக்
கும் சீராக அதிகரித்து வருகிறது. 1965-66 ஆம் ஆண்டில்
ரூ. 389 இலட்சமாக இருந்த உற்பத்தியானது, 1979-80 ஆம்
ஆண்டில் ரூ. 1,818 இலட்சமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக
1978-79, 1979-80 ஆம் ஆண்டுகளில் உற்பத்தியின் வளர்ச்சி
குறிப்பிடத் தக்கவையாகும் 1977-78-ல் ரூ. 1,187 இலட்சம்
மதிப்புள்ள உற்பத்தியிலிருந்து 1978-79-ல் ரூ. 1,537 இலட்ச
மாகவும், 1979-80-ல் ரூ. 1,818 இலட்சமாகவும் உயர்ந்துள்ளன.
இந்த இரண்டு ஆண்டுகளில் பெற்ற உற்பத்திப் பெருக்கம் மட்டும்
53 சதவீதம் ஆகும். இந்த விழுக்காடு இதுவரை அடைந்
துள்ள டான்சியின் உற்பத்தி வளர்ச்சியில் அதிகபட்சமாகும்
1979-80-ல் அடையப்பெற்ற ரூ. 1,818 இலட்சம் உற்பத்தி
யானது டான்சியை நட்டமில்லாமல் இயங்கும் நிலைமையினை
அடையச் செய்ததோடு மட்டுமில்லாமல் ரூ. 23 இலட்சம் (கும்
காலிகமானது) அளவு சிறிய இலாபத்தையும் ஈட்டச் செய்துள்ளது.



4. சமீப ஆண்டுகளில் பல புதிய திட்டங்களை மேற்கொள்
வதன் மூலம் டான்சி தனது நடவடிக்கைகளைப் பலதிறப்படுத்திக்
கொண்டுள்ளது. இந்தத்திட்டங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:—

(i) இயந்திரக் கருவிகள் தயாரிப்புத் திட்டம்.—இரும்பு
அறுவை இயந்திரம். (Hacksaw machine) பெஞ்சுத்துளைக்
கருவி (Bench drill). தூண் துளைக்கருவி (Pillar drill)
மற்றும் கனரகத் துளைக் கருவி (Gang drill), ஆகியவற்றைத்
தயாரிக்க, மேற்கண்ட திட்டம், இராணிப்பேட்டையில் தொடங்
கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் உற்பத்தித் திறன் ஆண்டொன்
றுக்கு 385 இயந்திரங்களாகும். அவற்றின் மதிப்பு ரூ. 88 இலட்ச
மாகும். வேலை வாய்ப்பு எண்ணிக்கை 144 பேர்களாகும்.
டிசம்பர் 1977—ல் உற்பத்தியை ஆரம்பித்த இந்தத் தொழிற்
சாலை இதுவரை 100 ஹேக்சா இயந்திரங்களை செய்துள்ளது.
வேலை வாய்ப்பு 85 பேர்களுக்குத் தரப்பட்டுள்ளது. ஏற்றுமதி
செய்யும் நோக்குடன், 8 ஹெக்சா இயந்திரங்களை தான்சானி
யாவுக்கும், மற்றொன்றை அல்ஜீரியாவுக்கும் அனுப்பி வைக்கப்
பட்டுள்ளது. மேலும், செஷயில்ஸ் என்ற நாட்டிலிருந்து, இரண்டு
ஹேக்சா இயந்திரங்களுக்கு பணி ஆணை வந்துள்ளது.

(ii) கைக்கடிகார இணைப்புத் தொழிற்சாலை.—பெங்க
ளூரிலுள்ள இந்துஸ்தான் மெஷின் டூல்ஸ் நிறுவனம் தயாரித்து
அளிக்கும் கைக்கடிகாரங்களின் உதிரி உறுப்புகளை இணைக்கும்
தொழிற்சாலை உதகமண்டலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இத்
திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 30 இலட்சமாகும். முதற்
கட்டமாக ஓரளவு இணைக்கப்பட்ட உதிரி உறுப்புகளை இணைக்
கும் பணி ஜனவரி 1978-ல் ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாங்
கட்டமாக, முழு இணைப்புப் பணியும் தற்போது தொடங்கப்
பட்டு நடைபெற்று வருகின்றது. 1979—80-ல் 4.29 இலட்சம்
கைக்கடிகாரங்கள் இணைக்கப்பட்டுவிட்டன. வேலை வாய்ப்பு
சுமார் 103 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்துஸ்தான்
மெஷின் டூல்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள
இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களில் செயல்படும் இம்மாதிரி
தொழிற்சாலைகள் யாவற்றையும் விட, உதகமண்டலத்தில் உள்ள
டான்சி கைகடிகார இணைப்புத் தொழிற்சாலை மட்டுமே மிக

அதிகமான கைக்கடிகாரங்களை இணைக்கும் செயல்திறன் பெற்
றுள்ளது எனப் பெயர் பெற்றுள்ளது. இதுபற்றி, இந்துஸ்தான்
மெஷின் டூல்ஸ் நிறுவனம் பாராட்டுதலையும் தெரிவித்துள்ளது.

(iii) (பிரஞ்சு பாலிஷ்) வார்னிஷ் தயாரிப்புத் தொழிற்
சாலை.—வார்னிஷ் தயாரிப்புத் தொழிற்சாலை அம்பத்தூர்
தொழிற்பேட்டையில் ரூ. 11.26 இலட்சம் மதிப்பீட்டில் 50
பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் விதத்தில் அமைக்கப்பட்
டுள்ளது. பிரஞ்சு பாலிஷ், காஸ்கெட் ஷெல்லாக், படவார்னிஷ்,
படவார்னிஷ் குறைப்புத் திரவம் போன்ற பொருள்கள் இந்தத்
தொழிற்சாலையில் உற்பத்தியாகின்றன. மொத்த உற்பத்தி
ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் லிட்டர் ஆகும். இந்திறன்
சுமார் 3 ஆண்டுகளில் அடையக்கூடியதாகும்.

இதுவரை இத்திட்டத்தின் கீழ், 29 பேர்களுக்கு வேலை
வாய்ப்புத் தரப்பட்டுள்ளது. எஞ்சிய 21 பேர்களுக்கு இத்தொழிற்
சாலை— உச்ச கட்ட உற்பத்தித் திறனை அடையும்போது தரப்
படும்.

(iv) ஆடைக்குரிய தோல் உற்பத்தித் திட்டம்.—மாதவரத்
தில் உள்ள டான்சிக்குச் சொந்தமான கட்டிடத்தில் இத்திட்டம்
தொடங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்
பீட்டுத் தொகை ரூ. 23.12 இலட்சமாகும். இதன் உற்பத்தித்
திறன் ஆண்டொன்றுக்கு 8 இலட்சம் சதுர அடிகளாகும். இதன்
மதிப்பீடு ரூ. 74 இலட்சமாகும். இத்திட்டமானது, 100 சத
விகிதம் ஏற்றுமதிக்கான உற்பத்தி அடிப்படையில் அமைந்த
தாகும். இத்திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்
போது வேலை வாய்ப்பு, 57 பேர்களுக்குத் தரப்படும்.

டான்சி நிறுவனம் கீழ்க்கண்ட தொழிற்சாலைகளை விரிவு
படுத்தவும் எண்ணியுள்ளது:—

(i) டான்சி தோல் பதனிடும் தொழிற்சாலை, விண்ணமங்
கலம்.—மேற்கண்ட தொழிற்சாலையில், சுமார் ரூ. 17 இலட்சம்
மதிப்பில், உலர்த்தும் இயந்திரம் (vacuum Drier), எளிதாக்கும்



இயந்திரம் (Lightening Buffing Machine), தானியங்கி நீர்
தெளிக்கும் சுருள் (Auto Spray) ஆகியவற்றை கூடுதலாக
நிறுவுவதே இவ்விரிவுபடுத்தும் திட்டத்தின் அம்சமாகும்.

இத்திட்டத்தினால் ஏற்பட இருக்கும் கூடுதல் விற்பனை
யளவு ஆண்டொன்றுக்கு ரூ. 27 இலட்சங்களாகும். இதன்மூலம்
கிட்டும் இலாபம் ஆண்டொன்றுக்கு ரூ. 6·40 இலட்சமாகும்.

(ii) டான்சி காப்பீட்டு மின்கம்பித் தொழிற்சாலை, கிண்டி.—
மேற்கண்ட தொழிற்சாலையை நவீனப்படுத்த ஒரு முலாம்
பூச்சு இயந்திரம் கூடுதலாக நிறுவுவது, பழைய உழைத்துத்
தேய்ந்துபோன சாதனங்களை புதுப்பிப்பது ஆகியவைகள்
இரண்டு கட்டங்களாக செயல்பட உள்ளன. இதற்கு ரூ. 10
இலட்சம் செலவாகும். முதற்கட்ட வேலையாக ரூ. 5 இலட்சம்
செலவில், செங்குத்து முலாம் பூச்சு இயந்திரம் கூடியவிரைவில்
நிறுவப்பட இருக்கிறது.

5. சுமார் 6,000 நபர்களுக்கு டான்சி நேரிடையாக வேலை
வாய்ப்பினை அளித்து வருகிறது. புதியத் திட்டங்கங்களின்கீழ்
1976—77 முதல் புதியதாக வேலை வாய்ப்புப் பெற்றுள்ள சுமார்
240 பேரும் இந்தப் புள்ளியில் அடங்கும்.

6. டான்சியின் நிதிவசதி மற்றும் பாங்கு/நிதியுதவி நிறுவனங்
களிடமிருந்து பெறக்கூடிய தொகை ஆகியவற்றைக் கணக்கிற்
கொண்டு, புதிய திட்டங்களுக்கான உதவியாக 1980—81-ல் அரசு
ரூ. 25 இலட்சம் பங்கு மூலதனம் மற்றும் கடனாக இந்நிறுவனத்
திற்கு அளிக்க உத்தேசித்துள்ளது.

7. ‘மொபெட்’ வாகனம் உற்பத்தி செய்வதற்காக டான்சி
யின் கிளை நிறுவனமாக ‘தமிழ்நாடு மொபெட்ஸ் நிறுவனம்’
என்ற பெயரில் ஒரு தனி நிறுவனம் ஒன்றை அரசு 1977—ல்
அமைத்தது. ஏற்கெனவே டான்சியின்கீழ் இத்திட்டத்துடன்
சம்பந்தப்பட்ட கிண்டியிலுள்ள மூன்று தொழிற்சாலைகள் அவை
களின் இருப்புக்களுடன் இந்நிறுவனம் எடுத்துக்கொண்டது. இந்
நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 90 இலட்ச
மாகும். அளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 49.71 இலட்ச

மாகும். 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19-ல் இந்நிறுவனம்
செயற்படத் துவங்கியது. நீண்டகால மற்றும் குறுகிய காலகட
னுதவிகளை இந்திய தொழில்வளர்ச்சி நிறுவனம் மற்றும் இந்தியன்
ஓவர்சீஸ் பாங்கு ஆகியவைகளிடமிருந்து பெற்றுள்ளது. இந்தத்
தொழிலில் புதியதாக ஈடுபடும் இந்நிறுவனம் பொதுச் சந்தையில்
கடுமையான போட்டியைச் சமாளிக்க வேண்டியிருந்தது. சென்ற
ஆண்டில் அடைந்த உற்பத்தியளவு மாதம் ஒன்றுக்கு 150
வாகனங்கள் என்ற வகையிலிருந்தது. வழக்கமான அமைப்பை
மாற்றி சில புதியத் தோற்றங்களை அமைத்து வாங்குவோரின்
கவனத்தை ஈர்க்கும் வகையில் வாகனத்தில் ஒரு புதிய மாதிரியை
இந்நிறுவனம் தோற்றுவித்துள்ளது. இந்தத் திட்டம் பொரு
ளாதார ரீதியில் செயல்படக்கூடிய தன்மையை டான்சி ஆய்வு
செய்த பின்னர் 1980-ல் உற்பத்தி அளவை அதிகரித்து மாத
மொன்றுக்கு 500 வாகனங்கள் வீதம் உற்பத்தி செய்ய
உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு.

### டான்சி தொழிற்பிரிவு, மற்றும் விற்பனை நிலையங்களின் பெயர்ப்பட்டியல்.

#### தொழிற்பிரிவுகள்

1. டான்சி கருவி அறைக்கூடம் மற்றும் பொறியியல்தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.

2 டான்சி தகடு அழுத்த இயந்திரத்தொழிற்சாலை, கிண்டி

3 டான்சி கொல்லுலை, கிண்டி.

4 டான்சி அழுத்த அச்சு வார்ப்படத் தொழிற்சாலை, கிண்டி.

5 டான்சி கருவி அறைக்கூடம், கிண்டி.

6 டான்சி இயந்திரக் கருவி தொழிற்சாலை (தொழிற்பேட்டை), அம்பத்தூர்.

7 டான்சி வார்ப்படத் தொழிற்சாலை, கிண்டி.

8 டான்சி வார்ப்படத் தொழிற்சாலை, காட்பாடி.



9. டான்சி வார்ப்பட மற்றும் கனரக இயந்திரத் தொழிற்சாலை, ஈரோடு.

10. டான்சி வார்ப்பட மற்றும் பொறியியல் தொழிற்சாலை, தஞ்சாவூர்.

11. டான்சி வார்ப்பட மற்றும் பொறியியல் தொழிற்சாலை, பேட்டை.

12. டான்சி இயந்திரக் கருவி தொழிற்சாலை, ராணிப்பேட்டை.

13. டான்சி கருவி அறைக்கூடம் மற்றும் கொல்லுலை, கோயம்புத்தூர்.

14. டான்சி கட்டுமான மற்றும் முலாம் பூசும் தொழிற்சாலை, மேட்டூர் அணை.

15. டான்சி கட்டுமானத் தொழிற்சாலை, அம்பத்தூர்.

16. டான்சி கட்டுமானத் தொழிற்சாலை திருச்சிராப்பள்ளி.

17. டான்சி பொறியியல் தொழிற்சாலை, நாமக்கல்.

18. டான்சி பொறியியல் தொழிற்சாலை, விழுப்புரம்.

19. டான்சி பொறியியல் தொழிற்சாலை, திருவண்ணாமலை.

20. டான்சி பொறியியல் தொழிற்சாலை, கிருஷ்ணகிரி.

21. டான்சி பொறியியல் மற்றும் தச்சு வேலை தொழிற்சாலை, சேலம்.

22. டான்சி விவசாயக் கருவிகள் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.

23. டான்சி மரப்பொருள் தொழிற்சாலை, கிண்டி.

24. டான்சி மரப்பொருள் தொழிற்சாலை, கிருஷ்ணகிரி.

25. டான்சி மரப்பொருள் தொழிற்சாலை, மதுரை.

26. டான்சி மரப்பொருள் தொழிற்சாலை, புதுக்கோட்டை.

27. டான்சி மரப்பொருள் மற்றும் மரம் அறுக்கும் தொழிற்சாலை, பொள்ளாச்சி.

28. டான்சி மரப்பொருள் மற்றும் பொறியியல் தொழிற்சாலை, கடலூர்.

29. டான்சி மரப்பொருள் மற்றும் பொறியியல் தொழிற்சாலை, மன்னார்குடி.

30. டான்சி மரப்பொருள் மற்றும் பொறியியல் தொழிற்சாலை, பேட்டை.

31. டான்சி பொறியியல் மற்றும் பூட்டுத் தொழிற்சாலை, திண்டுக்கல்.

32. டான்சி எஃகு நாற்காலி, மேசை முதலியன உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, வேலூர்.

33. டான்சி எஃகு நாற்காலி, மேசை முதலியன உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, ராஜபாளையம்.

34. டான்சி எஃகு நாற்காலி, மேசை முதலியன உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, பழனி.

35. டான்சி எஃகு மற்றும் பித்தளை வேலைகள் தொழிற்சாலை, கும்பகோணம்.

36. டான்சி பொறியியல் தொழிற்சாலை, திருப்பாச்சூர்.

37. டான்சி பொறியியல் தொழிற்சாலை, செம்பரம்பாக்கம்.

38. டான்சி பொறியியல் தொழிற்சாலை, மாயூரம்.

39. டான்சி பொறியியல் தொழிற்சாலை, கரூர்.

40. டான்சி பொறியியல் தொழிற்சாலை, திருப்பூர்.

41. டான்சி பொறியியல் தொழிற்சாலை, வள்ளியூர்.

42. டான்சி பொறியியல் தொழிற்சாலை, மதுரை.

43. டான்சி பொறியியல் தொழிற்சாலை, தூத்துக்குடி.

44. டான்சி கருவி அறைக்கூடம் மற்றும் பொறியியல் தொழிற்சாலை, விருதுநகர்.

45. டான்சி கருவி அறைக்கூடம் மற்றும் பொறியியல் தொழிற்சாலை, மதுரை.

46. டான்சி தோல் பொருள் தொழிற்சாலை, பெரம்பூர்.

47 டான்சி தோல் பொருள் தொழிற்சாலை, (திருவல்லிக்கேணி), பெரம்பூர்.

48 டான்சி தோல் பொருள் தொழிற்சாலை, பல்லாவரம்.



49. டான்சி தோல் பதனிடும் தொழிற்சாலை, விண்ணமங்கலம், வட ஆற்காடு.

50. டான்சி உரோமம் பதனிடும் தொழிற்சாலை, விண்ணமங்கலம், வட ஆற்காடு.

51. டான்சி வார்னீஷ் உற்பத்தி தொழிற்சாலை, அம்பத்தூர்.

52 டான்சி அச்சகம், கிண்டி.

53. டான்சி மின் கருவிகள் பழுது பார்க்கும் தொழிற்சாலை, கிண்டி.

54. டான்சி மின்கருவிகள் முலாம் பூசும் தொழிற்சாலை, கிண்டி.

55. டான்சி கைக்கடிகார இணைப்புத் தொழிற்சாலை, உதகமண்டலம்.

**விற்பனை நிலையங்கள்—**

56. டான்சி விற்பனைக்கூடம், சென்னை—14.

57. டான்சி விற்பனைக்கூடம், சென்னை—6.

58. டான்சி விற்பனைக்கூடம், மதுரை—2.

59. டான்சி விற்பனைக்கூடம், கோயம்புத்தூர்—12.

60. டான்சி விற்பனைக்கூடம், திருச்சிராப்பள்ளி—2.

[1980 ஜூலை 19

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்
தொடக்கத்தில் ஒரு தனியார் நிறுவனம் (சிட்கோ)
மார்ச் திங்கள் 23-ம் நாள் நிறுவனமாக 1970-ம் ஆண்டு
ஜனவரித் திங்கள் 21-ம் நாள் நிறுவப்பட்டு பின்னர் 1971-ம் ஆண்டு
மாற்றி அமைக்கப்பட்டது. அன்று ஒரு பொது நிறுவனமாக

2. இந் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்டதுமான,
பட்டதுமான பங்கு மூலதனம் ரூபாய் செலுத்தப்
இந் நிறுவனம் அரசிடமிருந்து கடனாகப் மூன்று கோடியாகும்.
3.82 கோடியாகும். இந் நிறுவனம் பெற்ற தொகை ரூபாய்
தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்தும், தேவையான நிதி வசதியை
களிடமிருந்தும், இந்தியத் தொழில் மற்ற நிதி நிறுவனங்
வழங்கும் திட்டத்தின் கீழும் வளர்ச்சி வங்கியின் மறு நிதி
மக்களிடமிருந்தும் பெறப்படும் (IDBI Refinance Scheme), பொது
படுகிறது. சேமிப்பு நிதி மூலமும் சரிக்கட்டப்

3. இந் நிறுவனம் சிறு தொழில்களின் வளர்ச்சிக்குக் கீழ்
கண்ட ஒருமித்த உதவிகளை அளித்து வருகிறது :—

(1) கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில்
கைவினைஞர், தீக்குச்சி, பட்டுத் தொழில் செய்பவர்களுக்கு சிறு
தொழிற் கூடங்களைக் கட்டித் தருதல்.

(2) சுலபமான தவணை திட்டத்தின்கீழ் தொழிற் கூடங்
களைக் கட்டி வழங்குதல்

(3) சிட்கோ, டி.ஐ.ஐ.சி. கூட்டு திட்டத்தின்கீழ் சிறுதொழில்
பிரிவுகளுக்கு தேவைப்படும் இயந்திரங்களை வழங்குதல்.

(4) தமிழ்நாட்டில் 35 பிற்பட்ட வட்டங்களுக்கு 15 சத
வீதம் மத்திய மூலதன மானியம் வழங்குதல்.



(5) தமிழ்நாட்டில் முன்னேற்றம் அடைந்து வரும் மையங்
களில் சீரமைக்கப்பட்ட தொழிற்பேட்டை மனைகளை சிறுதொழில்
பிரிவுகளுக்கு ஒதுக்கீடு செய்தல்.

(6) சிறுதொழில் அமைப்புகட்கு விற்பனை வசதி செய்து
தருதல்.

(7) சிறுதொழில் பிரிவுகளுக்கு தேவையான இன்றியமை
யாத மூலப்பொருட்களை கொள்முதல் செய்து விநியோகித்தல்.

(8) சிறுதொழில் நிறுவனங்கள் செலுத்தும் விற்பனை
வரியை ஈடுசெய்ய வட்டி இல்லா கடன் உதவி அளித்தல்.

(9) தமிழ்நாட்டில் உள்ள தொழிற்பேட்டைகள், சீர்
அமைக்கப்பட்ட மனைகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசின்
சார்பில் நிர்வகித்துப் பராமரித்தல்.

சிறுதொழில்களின் மேம்பாட்டிற்காக அண்மையில் இந்த அரசு
கீழ்க்காணும் நான்கு புதிய திட்டங்களை 'சிட்கோ' வின் மூலமாக
செயல்படுத்த அங்கீகாரம் கொடுத்துள்ளது:—

(1) குறைந்த அழுத்த மின்சாரத்தை உபயோகிக்கும் சிறு
தொழிகளுக்கு மான்யத் தொகை அளித்தல்.

(2) சில பின்தங்கிய வட்டங்களில் சிறுதொழில்களுக்கு
மூலதன மானியம் மாநில நிதியிலிருந்து அளித்தல்.

(3) (அ) சிட்கோவின் மூலமாக அரசுத் துறை மற்றும் அரசு
சார்பு நிறுவனங்களுக்கு தேவையான பொருள்களை, சிறுதொழில்
உற்பத்தி பொருள்களை கட்டாயமாக வழங்குதல்.

(இ) அவற்றுக்காக அரசு 257 வகையான பொருட்களை
ஒதுக்கியுள்ளது.

(4; நலிவுற்ற சிறுதொழில்களுக்கு முன்வரம்புத் தொகை
உதவி அளித்தல்.

மேற்கூறிய நான்கு புதிய திட்டங்களின் [1980 ஜூலை 19
கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) குறைந்த அழுத்த மின்சாரம் உபயோகிக்கும் சிறு
தொழில்களுக்கு மின் மானியம் வழங்கும் திட்டம்.—(i) குறைந்த
அழுத்த மின்சாரம் உபயோகிக்கும் சிறுதொழில்களுக்கு மாநிலம்
முழுவதும் (சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழும்
மற்றும் நகர்ப்புற வரி விதிப்பு பகுதி, நில உச்ச வரம்பு பகுதிகள்
அதாவது சென்னையும் அதன் சுற்றுப்புறமும், கோயம்புத்தூர்,
திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம் நீங்கலாக) இந்த மானியம்
வழங்கப்படும்.

(ii) 1980-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் தேதி முதல்
உற்பத்தி தொடங்கிய, பதிவு செய்யப்பட்ட குறைந்த அழுத்த
மின்சாரம் உபயோகப்படுத்தும் எல்லா சிறு தொழிற்சாலை
களுக்கும் இம் மானியம் வழங்கப்படும்.

(iii) இந்த மானியம் மூன்று ஆண்டுகளுக்கு கீழ்க்கண்ட
விகிதத்தில் கிடைக்கும் :—

(1) முதலாம் ஆண்டு—செலுத்தப்பட்ட மின்சாரக் கட்ட
ணத்தில் 30 சதவீதம்.

(2) இரண்டாம் ஆண்டு—20 சதவீதம்.

(3) மூன்றாம் ஆண்டு—10 சதவீதம்.

(2) 24 பின்தங்கிய வட்டங்களுக்கு மாநில மூலதன மானியம்
வழங்கும் திட்டம்.—24 பின்தங்கிய வட்டங்களில் அமலாக்கப்
படும் மாநில மூலதன மானியம் வழங்கும் திட்டத்தினால்
ஏற்படும் செலவு தொகையை மாநில நிதியிலிருந்து வழங்கப்
படுகிறது.

பரப்பளவு, ஜனத்தொகை, தொழிற்சாலைகளின் எண்ணிக்கை
தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள், விவசாய முன்
னேற்றம் முதலியவைகளை கணக்கில் கொண்டு 24 வட்டங்களை



1980 ஜூலை 19]
பின்தங்கிய வட்டங்களாக அரசு அறிவித்துள்ளது. மத்திய அரசால்
செயல்படுத்தப்படும் மூலதன மானியத் திட்டத்தின் அடிப்படையில்
மாநில மூலதனத் திட்டம் செயல்படுகிறது.

தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட நிலையான மூலதனத்தின்மீது
15 சதவீதம் துகை மானியமாக அரசு அளிக்கிறது. நிலையான
மூலதனத்தில் நிலம், கட்டிடம், இயந்திர தளவாடங்களின் மதிப்
பும் அடங்கும். உயர்ந்தபட்ச மானியம் ரூ. 3.00 இலட்சமாகும்.

(3) 257 பொருள்களை சிறுதொழில் நிறுவனத்திடமிருந்து
தான் அரசு துறைகள் அரசு நிறுவனங்கள் வாங்க வேண்டுமென்று
அரசு ஒதுக்கியுள்ள திட்டம்.—சிறுதொழில் நிறுவனங்கள் தயார்
செய்யும் பொருள்களில் 257 பொருள்களை அரசு துறைகளும்,
அரசு நிறுவனங்களும் வாங்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்
டுள்ளது. பதிவு செய்த சிறுதொழில் நிறுவனங்களுக்கு அவை
களின் தயாரிப்பை வாங்கும்போது அரசு துறை நிறுவனங்களுக்கும்,
சார்பு நிறுவனங்களுக்கும் 15 சதவீதம் விலைச் சலுகை அளிக்க
வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது. 'சிட்கோ' நிறுவனம்
மேற்கண்ட உத்திரவைச் செயல்படுவதைக் கண்காணிப்பதுடன்
வாங்கும் நிறுவனங்களுக்கு வேண்டிய உதவியை செய்கிறது.
மேலும் 'சிட்கோ' பொருள்கள் வாங்கும் முறையை ஒழுங்குபடுத்து
வதுடன் பொருட்களின் கட்டுப்பாடு, திறன் முதலியவைகளையும்
சீர்தூக்கி ஆராய்கிறது.

(4) (i) நலிந்த சிறுதொழில்களுக்கு முன்வரம்புத் தொகை
உதவி.—உதவி நீண்டகால வட்டியில்லாக் கடனாக அளிக்கப்
படும். இதற்கு ஆண்டொன்றுக்கு 1 சதவீதம் சேவைக்
கட்டணம் வசூலிக்கப்படும்.

(ii) குறைந்தபட்ச உதவி ரூ. 1,000. அதிகபட்ச உதவி
ரூ. 20,000 அளிக்கப்படும்.

(iii) நிதி நிறுவனங்களிடமிருந்து கூடுதல் கடன்
வாங்குவதற்குத் தேவையான தொழில் முனைவோர் செலுத்த
வேண்டிய கூடுதல் முதலீட்டில் 50 சதவீதத்துக்கு மேல் முன்

வரம்புத் தொகை அளிக்கப்படாது. சில தவிக்க்க முடியாத
இனங்களில் தொழில் முனைவோர் செலுத்த வேண்டிய
முதலீட்டுத் தொகை குறைக்கப்படும். முதல் நான்கு ஆண்டுகளில்
பணம் திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை. (Moratorium period)
இந்த நான்கு ஆண்டுகள் உள்ளிட்டு, 9 ஆண்டுகளில் இக்கடன்
திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். இது ஒவ்வொரு நிறுவனங்
களின் தகுதி அடிப்படையில்தான் வழங்கப்படும்.

4. 'சிட்கோ'வினால் செயல்படுத்தப்படும் மற்ற திட்டங்களின்
சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது:—

(i) <u>கிராமப் புற மற்றும் பின்தங்கிய சிறிய, மிகச் சிறிய
தொழிலகங்களுக்காக ஏற்படுத்தப்படும் தொழிற்பேட்டைகள்.</u>—
இத்திட்டம் கிராமப் புறத்தில் தொழில் வளர்ச்சியை
ஊக்குவிக்கவும், முக்கியமாக பொருளாதாரத்தில் பின் தங்கிய
மக்கள் பிரிவினருக்குப் பயன் தரும் நோக்கமுடையதாகும்
சின்னஞ்சிறு தனிப்பட்ட தொழிற்கூடங்களைக் கட்டி, கீழ்க்கண்ட
கூடுதல் வசதிகளுடன் தொழில் முனைவோருக்கு அளிக்கப்
படுகிறது: —

(1) தகுதி உள்ள தொழிலகங்களுக்கு முன் வரம்புத்
தொகை அளித்தல்;

(2) மத்திய மாநில முதலீட்டு மான்யத் தொகை
கிடைக்க வழிவகை செய்தல்.

(3) ஒருங்கிணைந்த கிராமப் புற வளர்ச்சித் திட்டத்தின்
கீழ் உதவி அளித்தல்;

(4) சுலபமான தவணைகளில் கடன் திரும்ப செலுத்த
வசதி;

(5) மின் இணைப்பு பெறுவதற்கும், இயந்திரங்கள்
வாங்குவதற்கும் தேவையான மூலதனம் பெறுவதற்கு ஏற்பாடு
செய்தல்;



(6) உற்பத்திப் பொருட்களை விற்பனைக்காக வசதி
செய்து கொடுத்தல்.

தீக்குச்சி மற்றும் பட்டுத் தொழில்களுக்குத் தேவையான
தொழிற்கூடங்களைப் பல அளவுகளிலும், மாதிரிகளிலும் கட்டிக்
கொடுக்கப்படுகின்றன. இதனால் வேறு இடங்களுக்கு வேலை
தேடிச் செல்லாமல் சொந்த ஊரிலேயே தொழில் ஆரம்பிக்க
வழி ஏற்படுகிறது.

1978–79-ல் 504 மிகச் சிறு தொழிற்கூடங்கள்
கட்டப்பட்டன. 1979–80–ல் 519 மிகச் சிறு தொழிற்
கூடங்கள் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இம்மிகச்
சிறு தொழிற்கூடங்களைக் கட்ட டி.ஐ.ஐ.சி. பெருத்த
அளவில் உதவி அளித்துள்ளது.

இத்திட்டம் 8,878 நபர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும்.

1980–81-ல் 500 மிகச் சிறு தொழிற்கூடங்கள் கட்டத் திட்ட
மிடப்பட்டுள்ளது. இதனால் 6,511 நபர்களுக்கு வேலைவாய்ப்பு
உண்டாகும்.

(ii) <u>சுலப தவணை முறையில் தொழிற்கூடங்கள் கட்டித்
தருதல்.</u>— 1978–79 ஆம் ஆண்டு 55 தொழிற்கூடங்கள் கட்டப்
பட்டு, தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்டன. ஆனால்
1979–80-ல் 58 தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.
மேலும் 482 தொழிற்கூடங்கள் கட்டுமானப் பணியில் பல்வேறு
நிலைகளில் உள்ளன. 1980–81 ஆம் ஆண்டு ரூபாய் 237 இலட்
சங்கள் மதிப்புள்ள 237 தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு,
தொழில் முனைவோர்களுக்கு அளிக்க முடியுமென எதிர்பார்க்கப்
படுகிறது.

(iii) <u>சிட்கோ-டி. ஐ. ஐ. சி. கூட்டுத் திட்டத்தின் கீழ்
இயந்திரங்கள் வழங்குதல்.</u>—1979–80-ல் 20 தொழில் முனை
வோர்களுக்கு ரூ. 15.09 இலட்சம் மதிப்பீட்டிற்கு உதவியளிக்கப்

பட்டது. சிட்கோவின் மிகச் சிறிய தொழிற்கூடங்கள் நிர்மாணிக்கும் திட்டத்தின்கீழ், தொழில் முனைவோருக்கு மிகப் பெரிய அளவில் உதவி செய்ய டி.ஐ.ஐ.சி. முன் வந்துள்ளது.

(iv) தமிழ்நாட்டில் 33 பின்தங்கிய வட்டங்களில் 15 சதவீதம் மத்திய மூலதன மானியத் தொகை அளித்தல்.—1974 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள் முதல் இம் மாநிலத்தில் 33 பின் தங்கிய வட்டங்களில் மத்திய மூலதன மானியத் தொகை வழங்கும் திட்டம் 'சிட்கோ' மூலமாக செயல்படுத்தப்படுகிறது. 1978–79 மற்றும் 1979–80 ஆம் ஆண்டுகளில் இத் திட்டத்தினால் உதவி பெற்றவர்கள், வேலை வாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| ஆண்டு. | உதவி பெற்றவர்கள். | உதவி. | வேலை வாய்ப்பு பெற்றவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூ. லட்சத்தில்) | |
| 1978–79 .. .. | 181 | 62.84 | |
| 1979–80 .. .. | 486 | 78.87 | 2,520 |

1980–81-ல் ரூ. 80 இலட்சங்கள் 3,500 வழங்கப்படும். இதனால் 4,000 நபர்களுக்கு இத் திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்பளிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(v) தமிழ்நாட்டில் முன்னேற்றம் அடைந்து வரும் பல்வேறு மையங்களில் சீரமைக்கப்பட்ட மனைகளை ஒதுக்கீடு செய்தல்.—பிற்பட்ட பகுதிகள் உள்பட தமிழகத்தில் பெரும் பகுதிகளில் தண்ணீர், மின்சார வசதி, கழிவிடம், சாக்கடை முதலிய அத்தியாவசிய இன்றியமையா அமைப்புகளுடன் சீரமைக்கப்பட்ட மனைகளை வழங்க வழி செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சீரமைக்கப்பட்ட மனைகளை நியாயமான விலையில் குறைந்த வட்டியில் சுலபமான தவணையில் திருப்பிச் செலுத்தலாம். 1978–79-ல் 56 மனைகள் கொடுக்கப்பட்டன. ஆனால் 1979–80-ல் 68 மனைகள் கொடுக்கப்பட்டன. 1980–81-ல் சுமார் 140 மனைகள் கொடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



(vi) சிறு தொழில் உற்பத்திப் பொருள்களுக்கு விற்பனை வசதி செய்தல்.—'சிட்கோ' அரசுத் துறைகளுக்கும் அதைச் சார்ந்த நிறுவனங்களுக்கும் சிறு தொழில் உற்பத்திப் பொருட்களை வாங்குவதற்கு அரசால் செயல்முறை கண்காணிக்கும் நிறுவனமாக நியமிக்கப்பட்டுள்ளது. இதற்காக பொருள்களின் தரம், கட்டுப்பாடு முதலியவைகளைச் சரிபார்த்து இம் மாநிலத்தில் உற்பத்தியாகும் சிறு தொழில் பொருள்களை சிட்கோ நிறுவனம் கொள்முதல் செய்ய வழிமுறைகளை வகுக்கும். 1979–80-ல் 40 சிறு தொழில் தயாரிப்பாளர்களிடமிருந்து 231.41 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் 44 அரசுத் துறைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டன. இதில் முதலாம், இரண்டாம் ஆண்டு மேல் நிலைப் பள்ளிக்கான (Higher Secondary School) ஆய்வுக் கூடப் பொருட்களும் அடங்கும். ஆனால் 1978–79-ல் ரூ. 26 இலட்சங்களுக்கே சிறு தொழில் உற்பத்திப் பொருட்கள் அரசு துறைகளுக்கு விற்பனை செய்யப்பட்டது. 1980–81-ல் 'சிட்கோ' வின் விற்பனை உதவியின் மதிப்பு ரூ. 200 இலட்சங்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(vii) சிறு தொழில்களுக்கு தேவைப்படும் அத்தியாவசிய மூலப் பொருட்களை விநியோகித்தல்.—தமிழ்நாடு முழுமைக்கும் தேவைப்படும் இரும்பு-எஃகு, பாரபின் மெழுகு, தீப்பெட்டி மெழுகு, சுட்ட நிலக்கரி (Coke) முதலிய அத்தியாவசிய மூலப் பொருட்களை கொள்முதல் செய்து விநியோகிக்கும் அரசு சார்பு நிறுவனமாக 'சிட்கோ' இயங்கி வருகிறது. இந் நிறுவனம் 1979–80-ல் ரூ. 1,308 இலட்சங்கள் மதிப்புள்ள

அத்யாவசிய மூலப் பொருட்களை வாங்கி விநியோகம் செய்தது. இது வரையில் நடை பெற்ற விற்பனையில் இதுவே இந்நிறுவனத்தின் உயர்ந்த பட்ச வணிகத் தொகையாகும். 1978–79 ஆம் ஆண்டு விற்பனைத் தொகை ரூ. 815.43 இலட்சங்கள் ஆகத்தான் இருந்தது.

1980–81-ல் ரூ. 13 கோடி மதிப்புள்ள மூலப் பொருள்கள் விநியோகம் செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 18,000 நபர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைக்க வழி செய்யும். மத்திய அரசு, இறக்குமதி செய் திட்டத்தில், சிறு தொழில்களுக்கு விநியோகம் செய்வதற்காக 500 டன் சோடா உப்பும் 400 டன் காஸ்டிக் சோடாவும் சிட்கோவிற்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

(viii) சிறு தொழில்களுக்கு வட்டியில்லா விற்பனை வரிக் கடன்.—சிறு தொழில்களும், மிகச் சிறு தொழில்களும் பெருமளவில் வளர்ச்சியடையத் துரிதப்படுத்தும் பொருட்டு 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16 ஆம் நாள் முதல் கிராமப் புற பகுதிகளில் புதிதாக துவக்கப்படும் தொழில் முனைவோர் வருடத்திற்கு ரூ. 4 ஆயிரத்திற்கு குறையாமல் விற்பனை வரி செலுத்துபவராக இருந்தால் விற்பனை வரியை ஈடு செய்ய வட்டி இல்லா கடன் உதவி அளிக்கப்படும். கடன் உதவியின் அதிக பட்ச அளவு ரூ. 1.25 இலட்சங்களோ அல்லது சிறு தொழில் முனைவோரின் நிலையான மூலதன மதிப்பில் 8 சதவிகித அளவோ என்னும் வரையரைக்கு உட்படுத்தப்பட்டு இருக்கும். இக்கடன் வழங்கப்பட்டு 6-ம் ஆண்டிலிருந்து தவணை முறையில் திருப்பி செலுத்தப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள தொழிற் பேட்டைகள், சீர் செய்த மனைகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசின் சார்பில் நிர்வகித்து பராமரித்தல்.—தமிழ்நாட்டில் 35,000 நபர்களுக்கு வேலை கொடுத்து கொண்டிருக்கும் 783 தொழிற்கூடங்கள் அடங்கிய 33 தொழில் பேட்டைகளையும், 6 சீரமைக்கப்பட்ட மனைப் பேட்டைகளையும், 1,117 தொழிலாளர்கள் குடியிருப்புகளையும் சிட்கோ தமிழக அரசின் சார்பில் ஏற்று நிர்வகித்து வருகிறது.



1980–81 ஆம் ஆண்டிற்கான 'சிட்கோ'வின் திட்டம்.— நடப்பாண்டில் தீக்குச்சி, பட்டுத் தொழில்களுக்கான மிகச் சிறு தொழிற்கூடங்கள், தொழிற்கூடங்கள், வட்டியில்லா விற்பனை வரிக் கடன், மின்சார மானியம், நலிந்த தொழில்களுக்கு உதவி, ஆகிய திட்டங்களுக்கு ரூ. 529 இலட்சங்கள் முதலீடு செய்யப்படும். இதற்காக தமிழக அரசு ரூ. 50 இலட்சங்களை மூலதனமாகவும் ரூ. 108 இலட்சங்களை கடனாகவும் ரூ. 40 இலட்சங்கள் வருவாய் இனத்தின் கீழும் அளிக்கும். இத்திட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கப்பட்டுள்ள முதலீட்டின் விவரமும் அதற்கான நிதியின் மூலாதாரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| முதலீடு. | | நிதியின் மூலாதாரங்கள். (ரூபாய் இலட்சங்களில்.) | |
|---|---|---|---|
| (1) தொழிற் கூடங்கள் கட்டுவதற்கான செலவு. | 281·00 | தமிழ்நாடு அரசின் பங்கு மூலதனம். | 50·00 |
| (2) 15 சதவிகிதம் மத்திய மூலதன மான்ய திட்ட செலவு. | 80·00 | தமிழ்நாடு அரசு அளிக்கும் கடன். (93+15+40). | 148·00 |
| (3) எம். எம். டி. ஏ. உலக வங்கித் திட்டம். | 93·00 | மத்திய அரசின் நிதி உதவி. | 80·00 |
| (4) வட்டியில்லா விற்பனை வரிக் கடன். | 20·00 | நிதி நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் சிட்கோவின் நிதி. | 251·00 |
| (5) 24 பின்தங்கிய மாவட்டங்களுக்கு மாநில அரசின் மூலதன மான்ய திட்ட செலவு. | 40·00 | | |

| | |
|---|---|
| (6) மின்கட்டண மான்யம். | 10·00 |
| (7) நலிவுற்ற சிறு தொழில்களுக்கு உதவி. | 5·00 |
| | 529·00 |
| | 529·00 |

சிறு தொழில்களுக்கான முதலீடு ரூபாய் 70 இலட்சம், டி. ஐ. ஐ. சி. மூலமாகவும் மற்ற நிதி நிறுவனங்கள் மூலமாகவும் கிடைக்கப்பெறுவதால் சிட்கோவின் முதலீட்டில் காண்பிக்கப்படவில்லை.

பல்வேறு திட்டங்களுக்கு சிட்கோவினால் எழுப்பப்படும் நிதிக்கான விவரங்கள், அதனால் உண்டாகும் வேலைவாய்ப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை 1 மற்றும் 2-ல் காண்பிக்கப்பட்டுள்ளன :—

## அட்டவணை 1.

1980-81-ல்சிட்கோவினால் எழுப்பப்படும் நிதிக்கான விவரங்கள்:-

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. தமிழ்நாடு அரசின் மூலம் மூலதனம் | |
| (1) கடன்—எம். எம். டி. ஏ. .. | 50·00 |
| (2) வட்டியில்லா விற்பனை வரிக்கடன் .. | 93·00 |
| (3) வருவாய் .. | 15·00 |
| .. | 40·00 |
| 2. மத்திய அரசிடமிருந்து (மூலதன மான்யம்) .. | 80·00 |
| 3. தொழிற்கூடங்களுக்காக நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளிடமிருந்து. | 251·00 |
| 4. நிதி நிறுவனங்கள் மூலமாக (சிறு தொழிற்கூடங்களுக்காக டி. ஐ. ஐ. சி.). | 70·00 |
| | 599·00 |

* 1980-81 ஆம் ஆண்டுக்கான வரைவு திட்டப்படி.



## அட்டவணை 2.

1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட வேலைவாய்ப்பும் 1980-81-ல் ஏற்படவிருக்கும் வேலைவாய்ப்பின் மதிப்பீடும் :—

| | நபர்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|
| | 1978-79. | 1979-80. | 1980-81. |
| 1. தொழிற் கூடங்கள் வாயிலாக. | 550 | 580 | 2,400 |
| 2. கைவினைஞர்/தீக்குச்சி பட்டுத் தொழிலுக்கான மிகச் சிறு கூடங்கள் வாயிலாக. | 1,512 | *8,878 | **6,511 |
| 3. மத்திய 15 சதவீதம் மூலதன மான்யம். | 2,520 | 3,500 | 4,000 |
| 4. எம். எம். டி. ஏ. உலக வங்கித் திட்டத்தின்கீழ் தொழிற்கூடம்அமைத்தல். | 286 | 220 | 780 |
| 5. முன்வரம்புத் தொகை உதவி. | .. | 507 | 1,200 |
| 6. சிட்கோ டி.ஐ.ஐ.சி. கூட்டுத் திட்டம். | 210 | 200 | 250 |
| 7. விற்பனை வரிக்கடன் | .. | .. | 400 |
| 8. குறைந்த அழுத்த மின் சாரம் உபயோகப்படுத் துபவர்களுக்குக் கொடுக் கப்படும் மான்யம். | .. | .. | 1,500 |
| | | *8,878 | **6,511 |
| 1. சிட்கோவின் மூலம் வேலைவாய்ப்பு | | 198 | 531 |
| 2. தொழில் வணிக துறையில் தீக்குச்சி தொழில் மூலம் வேலைவாய்ப்பு. | | 8,300 | 5,500 |
| 3. பட்டுத் தொழில் வாயிலாக வேலை வாய்ப்பு (பட்டுத் தொழில் இயக்குநர் மூலமாக). | | 380 | 480 |

**பட்டுப் புழு வளர்ப்பு.**

1979 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் பட்டுப்புழு
வளர்ச்சியில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியுள்ளது. புதி
தாக துவக்கப்பட்டு இயங்கி வரும் பட்டுப் புழு வளர்ப்புத்
துறையின் தீவிர முயற்சியின் விளைவாக முசுக்கொட்டை
பயிரிடப்படும் பரப்பின் அளவு 21,419 ஏக்கரிலிருந்து 31,470
ஏக்கராக உயர்ந்துள்ளது. இதனால் 50,000 நபர்களுக்கு கூடு
தல் வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. நம் மாநிலத்தில் 1,57,000
நபர்கள் அடங்கிய 31,400 குடும்பங்கள் இத்தொழிலில் ஈடு
பட்டுள்ளனர். வறட்சிமீட்பு பணி திட்டத்தின் கீழ், தர்மபுரி
மாவட்டத்தில் இத்தொழிலின் பலனை நல்க முயற்சி மேற்
கொள்ளப்பட்டுள்ளது. இதே போன்று ஒருங்கிணைந்த மலை
வாழ் மக்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சேலம் மற்றும்
வட ஆற்காடு மாவட்டங்களிலும் பட்டுப்பூச்சி வளர்ப்பின்
பயனை நல்க திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தஞ்சாவூர், ராமநாதபுரம், திருநெல்வேலி, மற்றும் கன்னியா
குமரி மாவட்டங்களில் கூடுதலாக அய்ந்து பட்டுக் கூடு அங்காடி
கள் நிறுவப்பட்டு நம் மாநிலத்தின் மொத்த பட்டுக் கூடு
அங்காடிகள் 27 ஆக உயர்ந்துள்ளது. அதே போன்று நோயற்ற
பட்டுப் புழு முட்டைகளின் உற்பத்தி 60 லட்சமாக உயர்ந்
துள்ளது. விவசாயிகட்கு குறித்த நேரத்தில் நோயற்ற பட்டுப்
புழு முட்டைகளை சீரான முறையில் வழங்குவதற்கான நடை
முறை ஏற்பாடுகள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன. 1979-80 ஆம்
ஆண்டில் நூற்புப் பட்டுக் கூடுகளின் உற்பத்தி 18 லட்சத்தி
லிருந்து 40 லட்சங்களாக உயர்ந்துள்ளது. சிறு தொழில்
துறையில் நிறுவப்பட்டுள்ள பட்டு நூற்பகங்களுக்கு மாநில
அரசு வழங்கி வரும் மான்யங்களின் விளைவாக பட்டு நூற்பு
அளவு 1979-80-ல் ஏறத்தாழ இரண்டு மடங்காகப் பெருகி
யுள்ளது. குறியீட்டு அளவான 500 பேசின் நூற்புகளுக்கு பதி
லாக 637 பேசின்கள் நிறுவப்பட்டு தற்போது மொத்தம் 1,010
பேசின் நூற்பகங்கள் உள்ளன. கச்சாப் பட்டின் உற்பத்தி
62,000 கிலோவிலிருந்து 1,60,000 கிலோவாக உயர்ந்துள்ளது.
பட்டுப் புழு வளர்ப்பிலுள்ள நவீன முறைகளில் 6,226 விவசாயி



கட்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 5,887 விவசாயிகட்கு
பட்டுப் புழு வளர்ப்பு கருவிகள் வாங்கும் திட்டத்தின் கீழ்
ரூ. 22.87 லட்சங்கள் உதவித் தொகையாக வழங்கப்பட்டது.
பட்டுப் புழு வளர்ப்புக் கொட்டகைகள் கட்டுவதை ஊக்கு
விக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 16.915லட்சங்கள் 4,587 கொட்ட
கைகள் கட்ட விவசாயிகட்கு உதவித் தொகையாக கொடுக்கப்
பட்டது. 1978 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தமிழ்நாடு மாநில
பட்டு உற்பத்தியாளர்கள் தொழில் கூட்டுறவு அங்காடி இணை
யம் ரூ. 1.95 கோடி பெறுமானமுள்ள 65,000 கிலோ கச்சாப்
பட்டு விற்பனை செய்துள்ளது. இவ்விணையத்தின் அங்கத்
தினர்களின் எண்ணிக்கை 254 நபர்களாக உயர்ந்துள்ளது.
1979-80 ஆம் ஆண்டில் இவ்விணையம் ரூ. 1.93 லட்சங்கள்
மொத்த நிகர லாபம் அடைந்துள்ளது. பட்டுப் புழு வளர்ப்பில்
பல்வேறு திட்டங்களை அமுல்படுத்த தேவைப்படும் பணியாளர்
களுக்காக பயிற்சி பள்ளி ஒன்று ஏற்படுத்தப்பட்டு உள்ளது.
1979-80 ஆம் ஆண்டில் 42 பட்டதாரிகளுக்கும் 89 பட்டப்
படிப்பு முடிக்காதவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

நடப்பாண்டு 1980-81-ல் கூடுதலாக 8,000 ஏக்கரில் முசுக்
கொட்டைச் செடி பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்
காக ரூ. 265 லட்சங்கள் அளவில் செலவிட உத்தேசிக்கப்
பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட முசுக்கொட்டைச் செடி
வகையினை எல்லா மாவட்டங்களிலும் நடுவதை ஊக்குவிக்க,
ஒரு விவசாயிக்கு ரூ. 250 உதவித் தொகை வழங்க உத்தேசிக்கப்
பட்டு உள்ளது. நடப்பாண்டின் திட்டங்களின் முக்கியநோக்கம்
உள்ளூர் மற்றும் பைவல்டின் (Local and Bivoltine seed areas)
விதை பண்ணைகளை வட ஆற்காடு, கோயம்புத்தூர் மற்றும்
மதுரை மாவட்டங்களில் நிறுவி, நோயற்ற முட்டைகளின்
தற்போதைய உற்பத்தித் திறனை இருமடங்காக்குவதாகும்.
இதற்காக புதிய வித்தகங்களை நிறுவுவதுடன் ஏற்கனவே உள்ள
வித்தகங்களை விரிவுபடுத்துவதன் மூலம் 2 கோடி பட்டுப் புழு
முட்டைகள் மாநிலத்தில் உற்பத்தியாகும் என மதிப்பிடப்
பட்டுள்ளது. பொதுத் துறையிலும் தனியார் துறையிலும்
நூற்புத் திறனை இரு மடங்காக அதிகரிக்கும் நோக்குடன்
தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்படும்.

நடப்பாண்டில் நூற்புத் திறன் இன்னும் 750 பேசின்
மூலமாக பெருகும் என எதிர் பார்க்கப்படுகிறது. கூடுதலாக
4 செய் முறை மற்றும் பயிற்சி நிறுவன மையங்கள், திருச்சி
புதுக்கோட்டை, மதுரை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்
களில் அமைக்கப்பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி வசதிகள் மேலும்
அதிகரிக்கப்படும். பட்டுப் புழு வளர்ப்புக்குரிய எல்லா அடிப்
படை அமைப்புக்களையும் ஒரே இடத்தில் கொண்ட மாவட்ட
பட்டுப் புழு வளர்ப்பு மையங்கள் வட ஆற்காடு, சேலம் மற்றும்
கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் நிறுவப்படும். தமிழ்
நாடு மாநில பட்டு உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவு
இணையம் தன் வாணிபத்தை மேலும் விரிவாக்கும் என எதிர்
பார்க்கப்படுகிறது. அகதிகள் மறுவாழ்வு வங்கியின் உதவியுடன்
இவ்விணையம் ஒரு பட்டு நூல் முறுக்கு தொழிற் கூடம்
ஒன்றினை அமைத்து அகதிகட்கு வேலை வாய்ப்பு அளிக்க
முனைந்துள்ளது. இவ்விணையம் நடப்பாண்டில் சுமார் 80,000
கிலோ அளவில் பட்டு வியாபாரம் செய்யும் என எதிர்பார்க்கப்
படுகிறது. பல்வேறு திட்டங்களைச் செயலாற்ற தேவைப்
படும் பணியாளர்களுக்காக 50 பட்டதாரிகளுக்கும், 100
பட்டப்படிப்பு முடிக்காதவர்களுக்கும் பயிற்சி அளிக்க உத்தேசிக்
கப்பட்டுள்ளது.

முதல் முதலாக, மூன்று சிறு பட்டுப் புழு வளர்ப்பு மையங்
களை (Chawkie Rearing Centres) ஏற்படுத்தி பட்டுப்
புழு முட்டையிலிருந்து வெளிவரும் சிறு புழுக்களை
வளர்க்கும் முறைகளில் விவசாயிகட்கு கல்வி புகட்ட உத்தேசிக்கப்
பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்திலுள்ள தாராபுரத்திலும், மற்றும்
தர்மபுரி மாவட்டத்திலுள்ள தர்மபுரியிலும் பட்டு நூல் முறுக்கு
தொழில் பேட்டைகளை சிறு துறை தொழில் அபிவிருத்தித்
திட்டத்தின் கீழ் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. புதிய இடங்
களில் செய்முறை விளக்க மனைகளை நிறுவி பட்டுப் புழு
வளர்ப்புத் திட்டங்களைப் பற்றி விவசாயிகள் நடை முறையில்
கண்டு கற்றுக் கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஊரக
இளைஞர் சுய வேலை வாய்ப்பு மற்றும் ஒருங்கிணைந்த ஊரக



மேம்பாடு திட்டங்களின் உதவியோடு பட்டு நூற்பில்
தற்போதுள்ள பயிற்சி வசதிகள் மேலும் அதிகரிக்கப்படும்.

1980–81 ஆம் ஆண்டு இறுதியில் பட்டுத் தொழில் வளர்ச்சிப்
பணிகள் கீழே குறிப்பிட்ட அளவுக்கு விரிவடையும் என எதிர்
பார்க்கப்படுகிறது.

| முசுக்கொட்டை பயிர் பரப்பு. | வேலைவாய்ப்பு. | பட்டுக்கூடுகள் உற்பத்தி. | கச்சாப் பட்டு உற்பத்தி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 41,000 ஏக்கர் | 2.08 லட்சம் நபர்கள். | 92 லட்சம் கிலோக்கள். | 4.45 லட்சம் கிலோக்கள். |

## தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சி நிறுவனம்

1. அமைப்பு.—அரசுக்குச் சொந்தமான . பொதுநிறுவன மாக தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி இணையகம் 1973 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26 ஆம் நாளன்று நிறுவப் பட்டது. முன்பு அரசின் தொழில் துறையின்கீழ் இயங்கி வந்த விற்பனைக் கூடங்களின் சொத்துக்களையும், பொறுப்புக் களையும் மற்றும் மாநில கைத்திறத் தொழில் வளர்ச்சி கூட்டுறவு சங்கத்தின் வாணிப விற்பனைப் பொருட்களையும் ஏற்றுக் கொண்டு 1973 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1 ஆம் நாள் முதல் இந்நிறுவனம் இயங்கி வருகிறது. இதற்கு அடுத்த ஆண்டில், அதாவது 1974 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் நாள் முதல் தொழில் வணிகத் துறையின்கீழ் இயங்கி வந்த 14 உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்களையும் இந்நிலையம் மேற் கொண்டது.

கைத்திறன் தொழில்களுக்கும் கைவினைஞர்களுக்கும் தொழில் நுட்ப உதவி, தொழில் வளர்ச்சிக்கான உதவிகள் அளித்தும் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை சசெய்வதன் மூலமும், மேலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொருட்காட்சிகள் அமைத்து விற்பனை வசதி ஏற்படுத்துவதன் மூலமும் இம்மாநிலத்தில் கைநுட்பத் தொழில் வளர்ச்சியில் தனியானதோர் எழுச்சியையும் புதிய போக்கையும் உருவாக்கிட கைநுட்பக் கலைத் தொழில் மேம்பட்டு வளர்ச்சி அடைவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு தனியானதோர் நிறுவனம் அமைக்கப்பட்டது.

2. சாதனை .—இந்நிறுவனத்தின் கடந்த ஆண்டுகளின் வாணிபத் தொகை பின் வருமாறு :—

| | | | | | | ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1976–77 | .. | .. | .. | | | இலட்சம். |
| 1977–78 | .. | .. | .. | .. | .. | 1,45.24 |
| 1978–79 | .. | .. | .. | .. | .. | 1,48.41 |
| 1979–80 | .. | .. | .. | .. | .. | 1,80.55 |
| | | | .. | .. | .. | 1,43.78 |



முன் ஆண்டுகளில் அடைந்த நட்டத்தின் காரணமாக தேவை யான நடைமுறை மூலதன வசதிகளை இந்நிறுவனம் பெற முடியாமல் இருந்தது. இதனால் வாணிபத்தை அதிகரிக்க முடியாதவாறு தடையாக இருந்தது. 1978–79-ம் ஆண்டு முடிய இந்நிறுவனம் சுமார் ரூ. 53 இலட்சம் நட்டம் அடைந்துள்ளது. 1979–80 ஆம் ஆண்டில் வாணிகம் குறைந்ததற்குக் காரணம் கைவினையல்லாத பொருட்களை வாணிபம் செய்வதை நிறுத்திய தேயாகும். 1979–80 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் சுமார் ரூ. 2.4 இலட்சம் இலாபம் சம்பாதித்தது. வாணிபத்தைப் பெருக்கவும் வாடிக்கையாளர்களைக் கவரவும் இந் நிறுவனம் 1979–80 ஆம் ஆண்டில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் நடந்த பொருட்காட்சிகளில் பங்கு கொண்டது. மேலும் இந் நிறுவனம் தனியாக, பம்பாய், பெங்களூர், புதுக்கோட்டை மற்றும் வேளாங்கண்ணி போன்ற இடங்களிலும், பொருட்காட்சிகளை நடத்தியது. இது போன்று பல பொருட்காட்சிகளை முக்கிய நகரங்களில் விழாக் காலங்களில் நடத்தவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டிற்கு இந்நிறுவனத்தின் வாணிபக் குறி இலக்கு ரூ. 1,70·00 இலட்சமாக இருக்கும். இனி வரும் ஆண்டுகளில் இந்நிறுவனம் இலாபம் சம்பாதிப்பதை அதிகரிக்கமுடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிறுவனம் கைவினைப் பொருட்களை கிராமங்களில் வசிக் கும் கைவினைஞர்களிடமிருந்தும் தொழிற் கூட்டுறவு சங்கங்களி லும் நேரிடையாக வாங்குகிறது. இதனால் 1,000 குடும்பங் களைச் சார்ந்த சுமார் 1,300 கைவினைஞர்கள் இலாபகரமாக தொழில் நடத்தி பயனடைந்துள்ளனர். தற்சமயம் தமிழ்நாட் டில் சென்னை, மகாபலிபுரம், நெய்வேலி, கடலூர், சேலம், வேலூர், ஈரோடு, கோயம்புத்தூர், உதகை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய 13 இடங்களில் இந் நிறுவனம் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. மேலும் புதுடில்லி, பம்பாய், பெங்களூர் ஆகிய இடங்களிலும் இந்நிறு வனத்திற்கு ஒவ்வொரு விற்பனை நிலையம் உள்ளது.

3. பயிற்சி.—இந்நிலையம் 17 பயிற்சி மற்றும் உற்பத்தி
நிலையங்களையும் நடத்தி வருகின்றது. கடந்த ஆண்டுகளில்
ஆண்டிற்கு சுமார் 120 கைவினைஞர்களுக்குப் பலவகை கைத்
திறன்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில்
291 கைவினைஞர்களுக்கு பல்வேறு கைத்திறன்களில் பயிற்சி
அளிக்கப்பட்டது. 1980-81-ஆம் ஆண்டில் பயிற்சி பெறுவோரின்
எண்ணிக்கையை 341 ஆக உயர்த்த இந் நிறுவனம் நடவடிக்கை
எடுத்து வருகிறது.

4. உற்பத்தி.—உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்களின் உற்
பத்தித் தொகை அளவு 1976-77-ல் ரூபாய் 21 இலட்சமாகவும்,
1977-78-ல் ரூபாய் 23·26 இலட்சமாகவும் இருந்தது. 1978-79-ல்
உற்பத்தியின் அளவு ரூபாய் 30·00 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்
டது. மேலும் உற்பத்தியின் அளவு 1979-80-ல் ரூபாய் 41·63
இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டது. மேற்படி பயிற்சி மற்றும்
உற்பத்தி நிலையங்களின் உற்பத்தி இலக்கு 1980-81-ஆம்
ஆண்டிற்கு ரூபாய் 50 இலட்சமாகும்.

5. நிதியுதவி.—இந்நிறுவனத்திற்கு தமிழக அரசு 1973-74
முதல் 1979-80 முடிய ரூபாய் 96·20 இலட்சம் பங்கு மூலதன
மாகவும், ரூபாய் 29·24 இலட்சம் கடனாகவும், ரூபாய் 23·44
இலட்சம் மானியமாகவும் அளித்துள்ளது. பங்கு மூலதனமான
ரூபாய் 96·20 இலட்சத்தில் பங்கு மூலதனமாக மாற்றப்பட்ட
கடன் தொகை ரூபாய் 7·50 இலட்சமும், வழிவகைக் கடன்
ரூபாய் 12·50 இலட்சமும், வட்டித் தொகை ரூபாய் 6·13
இலட்சமும் மற்றும் அரசாங்கத்திடமிருந்து மாற்றப்பட்ட விற்
பனை நிலையங்கள், பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களின்
நிகர ஆஸ்திகளின் மதிப்பிற்காக அரசுக்கு வழங்கப்பட்ட பங்கு
களின் மதிப்பு ரூபாய் 30·00 இலட்சமும் அடங்கும். இத்தொகை
கள் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்கள், விற்பனை நிலை
யங்கள் ஆகியவற்றில் மூலதன முதலீடாகவும் மற்றும் நடைமுறை
மூலதன தேவைகளை பூர்த்தி செய்யவும் பயன்படுத்தப்பட்டு
உள்ளன.



1980-81ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவு மதிப்பீட்டில்,
1980-81ஆம் ஆண்டில் புதிய திட்டங்களை அமுல்படுத்துவதற்
காகவும் தற்போதுள்ள திட்டங்களை தொடர்ந்து செயல்
படுத்துவதற்காகவும் மூலதனப்பங்காக ரூபாய் 3 இலட்சமும்
மானியமாக ரூபாய் 13·43 இலட்சமும் ஒதுக்கீடு செய்ய
உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரசின் கீழ் இயங்கிவந்த பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்
களை கழகம் எடுத்து நடத்துவதால் ஏற்படும் இழப்பை ஈடு
செய்வதற்கு 1973-74-லிருந்து 1978-79ஆம் ஆண்டுகள் வரை
ஆண்டொன்றுக்கு அதிக அளவு ரூபாய் 4 இலட்சமோ அல்லது
அவ்வாண்டில் அடைந்த இழப்போ அவற்றில் எது குறைவோ
அவற்றை அரசு கழகத்திற்கு உதவித் தொகையாக அளித்து
வருகிறது. அந்த உதவித் தொகையின் அளவை அரசு ரூபாய் 5·5
இலட்சத்திற்கு 1979-80ஆம் ஆண்டிலிருந்து அதனுடைய
இலாப நட்ட நிலையைப் பொறுத்து உயர்த்தியுள்ளது. ரூபாய்
25 இலட்சம் வரை தேசிய வங்கியிலிருந்து கடன் பெறுவதற்கு
இக்கழகத்திற்கு வசதியுள்ளது.

1979-80-ல் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்—(1) விற்பனை
நிலையங்களைப் புதுப்பித்தல்.—இந் நிறுவனம் தனது திருச்
சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் விற்பனை நிலை
யங்களை புதுப்பிக்க 1979-80-ல் வேண்டிய நடவடிக்கைகளை
எடுத்துள்ளது. இதற்கு ரூபாய் 2·50 இலட்சம் தேவை என்று
மதிப்பிடப்பட்டுள்ளது.

2. கைவினைஞர்களிடமிருந்து பொருட்களை நேரடியாகக்
கொள்முதல் செய்தல்.—இந் நிறுவனம் கிராமங்களில் வசிக்கும்
கைவினைஞர்களிடமிருந்து 1979-80-ம் ஆண்டில் கைவினைப்
பொருட்களை சுமார் ரூபாய் 55 இலட்சத்திற்கு கொள்முதல்
செய்தது. இதனால் சுமார் 300 கைவினைஞர்களின் குடும்பங்கள்
பயனடைந்தனர். இதற்காக அரசிடமிருந்து பெற்ற நிதியுதவி
யிலிருந்து ரூபாய் 29·50 இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது.
1980-81ஆம் ஆண்டிலும் இத் திட்டத்தை தொடர்ந்து நடத்த
திட்டமிட்டுள்ளது.

3. அலுவலர்களும், கைவினைஞர்களும் புதிய வடிவமைப்பு
களை செய்வதற்கும், உற்பத்தியில் புதிய முறைகளைத் தெரிந்து
கொள்வதற்கும் அளிக்கப்படும் பயிற்சி திட்டம்.—கைத்திறன்
பொருட்கள் செய்வதில் கையாளப்படும் புதிய
வடிவமைப்புகளையும் தெரிந்து கொள்ளும் பொருட்டு, இந்
நிறுவனம் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களில் பயிற்சிபெறும்
கைவினைஞர்களை மொராதாபாத், திரிபுரா மற்றும் அனைத்
திந்திய கைத்திறன் வளர்ச்சி வாரியம், பெங்களூர் முதலிய
இடங்களுக்கு அனுப்பியது. மேலும் கைவினைஞர்களை 1979-80
ஆம் ஆண்டில் கலைத்திறன் மிக்க புகழ் வாய்ந்த இந்துக்கள்
கோயில்களுக்கு பழங்காலச் சிற்ப வேலைப்பாடுகளை அறிந்து
கொள்ளும் பொருட்டு இந் நிறுவனம் அனுப்பியது. 1980-81 ஆம்
ஆண்டிலும் இத் திட்டம் தொடர்ந்து நடத்தப்படும்.

4. சந்தனமரச் சிற்ப பயிற்சி நிலையம்.—இந் நிலையத்தை
இந்நிறுவனம் 1979-80-ல் தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள
கள்ளக்குறிச்சியில் துவக்கியது. இந்நிலையத்தில் 15
கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

5. நூக்க மர உட்பதிப்பு பயிற்சி நிலையம்.—இந்நிலை
யத்தை இந் நிறுவனம் 1979-80 ஆம் ஆண்டில் மதுரையில் துவக்
கியது. 15 கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

6. சென்னையிலுள்ள வடிவமைப்பு நிலையத்தை விரிவு
படுத்துதல்.—உள்ளூர் மக்களின் விருப்பத்திற்கும், அயல்நாட்டு
சுற்றுலா பயணிகளின் விருப்பத்திற்கும் ஏற்றபடி இந்நிலையம்
கைவினைப் பொருட்களில் புதிய வடிவமைப்புகளையும், புதிய
செயல்முறைகளையும் உருவாக்கி வருகிறது. இதன் காரணமாக
கைவினைப் பொருட்களின் வியாபாரமும் பெருகும். இந் நிலை
யம் (1) பித்தளை வெங்கலப் பொருட்களிலும், (2) கடைசல்
பொருட்களிலும், (3) கலம்காரி, பாத்தி வேலைகளிலும்,
(4) பிரம்புப் பொருட்கள் வேலைகளிலும் பல புதிய வடிவமைப்
புகளைச் செய்துள்ளது. இந்நிலையத்தின் செயல்களை விரிவு



படுத்துவதால் கைவினைப் பொருட்கள் பிரபல்யமாவது மட்டு
மல்லாமல் கைவினைஞர்களுக்கு லாபகரமான வேலை வாய்ப்பு
களும் ஏற்படும். இந்நிலையத்தின் விரிவாக்கப் பணிகள்
1980-81-ம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெறும்.

7. கம்பள நெசவு பயிற்சி நிலையம்.—அனைத்திந்திய
கைத்திறன்தொழில் வளர்ச்சி வாரியத்தின்உதவியுடன் 1978-79ல்
வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள வாலாஜாபேட்டையில் துவக்
கப்பட்ட இரண்டு கம்பள பயிற்சி நிலையங்களை 1979-80-ஆம்
ஆண்டில் தொடர்ந்து நடத்த தமிழக அரசு மான்யம் வழங்கி
யுள்ளது. இந் நிலையங்களில் 100 கைவினைஞர்கள் பயிற்சி
பெறுகிறார்கள். தமிழக அரசு நிதியுதவியுடன் 1980-81 ஆம்
ஆண்டிலும் இவ்விரு நிலையங்களும் தொடர்ந்து நடத்தப்படும்.

1980-81 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட இருக்கும் புதிய
திட்டங்கள்—(1) புதிய விற்பனை நிலையங்களை ஆரம்பித்தல்.—
இந் நிறுவனம் 1980-81-ம் ஆண்டில் புதிய விற்பனை நிலையங்
களை கன்யாகுமரியிலும், சிதம்பரத்திலும், இந்திய சுற்றுலா
வளர்ச்சி இணையகத்தின் கட்டிடத்தில் மதுரையிலும் துவக்க
திட்டமிட்டுள்ளது. இதற்கு ரூபாய் 3·00 இலட்சம் செல
வாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

2. தஞ்சாவூர் கலைத்தட்டு வேலைப்பாடு பயிற்சிநிலையம்.—
புகழ்மிக்க தஞ்சாவூர் கலைத்தட்டுகளை தஞ்சாவூரில் சுமார் 100
பொன் வேலை செய்யும் கைவினைஞர்கள் குடும்பங்கள் பாரம்பரிய
மாக செய்து வருகிறார்கள். இந்த கலை அழகு மிக்க தட்டுகளை
பெருவாரியான மக்கள் வாங்குகிறார்கள். ஆகையால் இத் தட்டு
களுக்கு தேவை அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இந்த
கைவினைஞர்களின் இளைய தலைமுறையினர் வேறு இலாபகர
மான வேலைகளுக்கு ஆசைகாட்டி இழுத்துச் செல்ல வாய்ப்புள்ள
தால் இந்த கலைத்தட்டு வேலை செய்வதற்கு ஆளில்லாமல் இத்
தொழில் கால கட்டத்தில் நசித்துவிடும் அபாயம் உள்ளது.
ஆகவே கைவினைஞர்களின் சந்ததியார்களுக்கு பயிற்சி அளிக்கும்
பொருட்டு இந் நிறுவனம் கலைத்தட்டு பயிற்சி நிலையத்தை

தஞ்சாவூரில் துவக்க திட்டமிட்டுள்ளது. இந்த பயிற்சி நிலையத்தில் ஆண்டிற்கு சுமார் 15 பேர்களுக்கு பயிற்சி அளிக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. இப் பயிற்சி நிலையத்தை 1980-81-ல் துவங்கி நடத்துவதற்கு ரூ. 1.30 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

3. நூக்க மர கைத்திறன் பொருட்கள் பயிற்சி நிலையம்.—நூக்க மரத்தில் செய்யப்பட்ட பல்வேறான கைத்திறன் பொருட்களை மக்கள் விரும்பி வாங்குகிறார்கள். இப் பொருட்களை இந் நிறுவனம் கேரளாவிலிருந்தும், மைசூரிலிருந்தும் கொள்முதல் செய்கிறது. வட ஆர்காடு மாவட்டத்திலுள்ள வேலூரில் கைவினைஞர்கள் குடும்பங்கள் மர வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு நூக்க மரத்தில் கைவினைப் பொருட்கள் செய்வதற்கு பயிற்சி அளித்தால் நம் தேவைக்கு வேண்டிய பொருட்களை தமிழ் நாட்டிலேயே தயாரிப்பதோடு கைவினைஞர்களுக்கும் நல்ல லாபகரமான வேலை வாய்ப்புகள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே கேரளாவிலிருந்தோ அல்லது மைசூரிலிருந்தோ திறமை மிக்க கைவினைஞர்களைக் கொண்டு வந்து வேலூரில் ஒரு பயிற்சி நிலையத்தை 1980-81-ல் துவங்க இந் நிறுவனம் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு முதல் ஆண்டில் ரூ. 1.50 இலட்சமும், அதற்கு பின் வரும் ஆண்டுகளில் ரூ. 1.33 இலட்சமும் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

4. தஞ்சாவூர் வண்ண ஓவிய பயிற்சி நிலையம்.—தஞ்சாவூரில் சுமார் 5 கைவினைஞர்களின் குடும்பங்கள் இந்த வண்ண ஓவியங்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் குடும்பத்தில் உள்ள இளைய தலைமுறைகள் தங்கள் மூதாதையர்கள் செய்த கலைத் தொழிலில் ஈடுபடாமல் வேறு இலாபகரமான தொழில்களில் சென்று விடுகிறார்கள். ஆகவே இந்த கலைத் தொழில் சிறிது காலத்தில் நசித்து விடுமென கருதப்படுகிறது. இந்த கலைத் தொழில் தமிழ்நாட்டிற்கே உரியதும், பெருமை தரக்கூடியதுமாகும். மேலும் இந்த கலைப் பொருட்களுக்கு நல்ல கிராக்கி இருப்பதாலும், மேலும் இந்த கைத்தொழில் நசித்து விடாமல் காப்பதற்கும், இந் நிறுவனம் தஞ்சாவூரில் அங்குள்ள



திறமை மிக்க கைவினைஞரைக் கொண்டு பயிற்சி நிலையம் ஒன்று 1980-81-ம் ஆண்டில் துவக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப் பயிற்சி நிலையத்தில் ஆண்டிற்கு 10 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இப் பயிற்சி நிலையத்தைத் துவக்கி நடத்துவதற்கு 1980-81-ம் ஆண்டிற்கு ரூ. 0.85 இலட்சம் தேவைப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

5. நிர்மல் ஓவியம் பயிற்சி நிலையம்.—நிர்மல் ஓவியங்கள் மிக்க தொன்மையானது. இவ்வண்ணப் படங்கள் தமிழ்நாட்டில் அதிகமாக விற்பனை ஆகின்றன. இவ் வண்ணப் படங்கள் தமிழ் நாட்டில் யாராலும் தயாரிக்கப்படுவதில்லை. மேலும் கலைக் கல்லூரியில் பயிற்சிகளை முடித்த பல மாணவர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இந்தப் புதிய கலையில் பயிற்சி அளித்தால் அவர்களின் வேலையின்மை நீங்குவதுடன் போதிய அளவுக்கு வருமானம் கிடைக்கவும் வாய்ப்புகள் ஏற்படும். ஆகவே இந் நிறுவனம் சென்னையில் ஒரு பயிற்சி நிலையத்தை நிறுவ திட்டமிட்டுள்ளது. இந்த கலைத் தொழிலில் பயிற்சி அளிக்க வல்லுநர்களை நிர்மல் கிராமத்திலிருந்து கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி நிலையத்தை 1980-81-ல் துவக்கி நடத்துவதற்கு ரூ. 1.05 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந் நிலையத்தில் ஆண்டிற்கு 10 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

[1980 ஜூலை 19

## தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

1. முன்னுரை.— நம் நாட்டிலேயே மாநில அளவில் நிதி உதவியளிக்கும் நிறுவனங்களில் முதல் நிறுவனமாகத் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துதல் மற்றும் விரைவுபடுத்துதல் என்கிற முக்கிய நோக்கத்துடன் இந்நிறுவனம் அமைக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் அதிகார வரம்புகள் (Jurisdiction) மத்திய அரசின்கீழ் இயங்கிவரும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மாநில நிதி நிறுவனமாக இது செயல்படுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியையும் (ஆர். பி. ஐ.) இந்திய தொழில் அபிவிருத்தி வங்கியையும் (அய். டி. பி. அய்.) கலந்து இந்திய அரசால் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் மூலம் 1951 ஆம் ஆண்டு மாநில நிதி நிறுவன சட்டத்தின் சில முக்கியமான விதித்துறைகள் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திற்குப் பொருந்தும்படியாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

2. அலுவல்களும் நோக்கங்களும்.—இந்நிறுவனத்தின் அலுவல்களும், நோக்கங்களும் பின்வருமாறு:—

(அ) முக்கியமாக நிலம், கட்டிடம், இயந்திர சாதனங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்காக, தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால நடுத்தரகாலக் கடன்களை வழங்குவது.

(ஆ) இயந்திரங்களை வாங்குவதற்காகத் தொழில் நிறுவனம் செய்து கொள்ளும் ''காலம் தாழ்த்தி தொகையை திருப்பிச் செலுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கு'' நிபந்தனைகளின் பேரில் உத்திரவாதம்/எதிர் உத்திரவாதம் அளிப்பது.

(இ) வங்கிகள்/கூட்டுறுதி நிறுவனங்கள் பொதுக்கடன்கள் முதலியவற்றின் மூலம் தொழில் நிறுவனங்கள் பெறும் கடன்களுக்கு உத்தரவாதம் அளிப்பது.



(ஈ) தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள் கடன் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குவது மற்றும் அவற்றுக்கு உத்திரவாதமளிப்பது.

(உ) மத்திய அரசு ஒப்பளிக்கும் உதவித் தொகையை ஒட்டி அத்தொகையை தொழில் நிறுவனங்களுக்கு முன்கூட்டியே கடனாக வழங்குவது.

3. உதவியின் விபரமும் அளவும்.—தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் வழங்கும் உதவியின் அளவு பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| (அ) | கடன்கள்— | |
| | குறைந்த பட்சம் .. .. | ரூபாய் 5,000 |
| | அதிகபட்சம் .. .. | ரூபாய் 30 இலட்சம் (தனி நபர் உடைமை, பங்குதாரர் உடைமை, தொழில் நிறுவனங்களுக்கு அதிகபட்சம் அளவு ரூ. 15 இலட்சமாகும்). |
| (ஆ) | காலம் தாழ்த்தி தொகை செலுத்துவதற்கான உத்தரவாதம். | ரூ. 30 இலட்சம். |
| (இ) | பொதுக்கடன் வெளியீட்டு பங்கிற்கு உத்தரவாதமளிப்பது, நேரடியாகக் கலந்து கொள்ளுவது. | ரூ. 25 இலட்சம் (பொதுக்கடன் வெளியீட்டில் 25 சதவீதம் அல்லது தொழிலதிபர் முதலீடு செய்யும் தொகைக்கு மேற்படாத ஒரு தொகை இவற்றில் எது குறைவோ அது). |

சிறு தொழில் மற்றும் நடுத்தரத் தொழில் துறைகளில், புதிய தொழில்களை நிறுவுவதற்கும், ஏற்கனவே உள்ள தொழில்களை விரிவுபடுத்துவதற்கும், தொழில்களை நவீனமயமாக்குவதற்கும் இந்நிறுவனம் நிதியுதவி அளிக்கிறது. சிறு தொழில் துறையிலும் சின்னஞ்சிறு தொழில் துறையிலும்

தொழில்களை ஏற்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும், பெருமளவில் வேலை வாய்ப்பினை மேம்படச் செய்வதற்கும், இந்நிறுவனம் பல சிறப்பு மிக்க திட்டங்களை உருவாக்கியுள்ளது. குறைந்த வட்டி வீதம், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு நீண்ட கால அவகாசம், கடனைத் திருப்பிச் செலுத்த நீண்ட கால அளவு மற்றும் குறைந்த பிணையீட்டுத் தொகை போன்ற தாராள நிபந்தனைகளின்படி இந்நிறுவனம் கடனுதவி அளிக்கிறது.

அதிக அளவில் வேலை வாய்ப்பினை அளிப்பதற்காகவும் எந்த ஒரு பகுதியிலும் தொழில் வளம் குறைந்து தோன்றா வண்ணம் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும், பிற்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு அதிலும் குறிப்பாக கிராமப் பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளிப்பதற்கு முதலிடம் தரப்படுகிறது. பிற்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு குறைந்த வட்டி, கடனைத் திருப்பித்தர நீண்ட காலக்கெடு மற்றும் பல சலுகைகளின் அடிப்படையில் நிதி உதவி அளிக்கப்படுகிறது. சிறு மற்றும் நடுத்தர தொழில் துறைகளில் நிறுவப்பட்டுள்ள தொழில்களுக்கும் பின் தங்கிய பகுதிகளில் உள்ள தொழில்களுக்கும் விதிக்கப்படும் வட்டி வீதம் (அய். டி. பி. அய். மறுநிதி அளிக்கும் இனங்களில் எல்லாம்) பின்வருமாறு:—

விபரம்.

| (1) | மறுநிதி உதவி கிடைக்கும் போது (சதவீதம்). (2) | மறுநிதி உதவி கிடைக்காத போது (சதவீதம்). (3) |
|---|---|---|
| சிறு தொழில் துறை :— | | |
| 1 பிற்பட்ட பகுதி .. .. | 9.5 | 9.5 |
| 2 பிற்பட்ட பகுதியாக இல்லாத இடங்கள் .. .. | 11 | 11 |
| 3 பிற்பட்ட பகுதியாக இல்லாத இடங்களில் தொழில் நுட்பம் உடையோர்களுக்கு .. .. | 9·5 | 9·5 |
| 4 பிற்பட்ட பகுதிகளில் தொழில் நுட்பம் உடையோர்களுக்கு .. | 8·0 | 8·0 |
| 5 தாழ்த்தப்பட்ட வகுப்புகள் (கூட்டுக் கடன்) .. .. .. .. | 8·0 | 8·0 |
| 6 மிகவும் பின்தங்கிய வகுப்புகள் (கூட்டுக்கடன்) .. .. .. | 8·0 | 8·0 |
| நடுத்தரத் தொழில் துறை. | | |
| 1 பிற்பட்ட பகுதி .. .. | 9·5 | 10·5 |
| 2 பிற்பட்ட பகுதியாக இல்லாத இடங்கள் .. .. .. | 12·5 | 13·5 |



4. நிதிவளங்கள் :—இந்நிறுவனத்தின் நிதிவளங்கள், பங்கு மூலதனமாக, முக்கியமாக தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (52·20 சதவீதம் மற்றும் 44·02 சதவீதம் முறையே) இந்திய தொழில்வளர்ச்சி வங்கியின் மறுநிதியுதவி, பத்திரங்கள், வைப்புத் தொகைகள் ஆகியவற்றால் வழங்கப்பட்டதாகும். 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளில் இந்நிறுவனத்தின் நிதிவளங்களின் நிலவரம் கீழே கொடுக்கப்பட்டு உள்ளது:

| | (ரூபாய் இலட்சத்தில்.) 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் (தற்காலிகமானவை.) |
|---|---|
| 1 பங்கு மூலதனம் .. .. .. .. | 13,49·56 |
| 2 பத்திரங்கள் .. .. .. .. | 15,73·560 |

| | | |
|---|---|---|
| 3 | இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி உதவி .. .. .. .. | 13,79·33 |
| 4 | பொதுமக்களிடமிருந்து குறிப்பிட்டகால வைப்பீடுகள் .. .. .. .. | 11,55·24 |
| 5 | அக உற்பத்தி (ஆதாய மதிப்பீடுகள்) .. | 5,78·29 |
| | | 78,35·92 |

5. <u>இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி
உதவி</u> :—இந்தியதொழில் வளர்ச்சி வங்கி குறைந்த வட்டி
வீதத்தில் தாராளமாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்
திற்கு மறுநிதி உதவி அளிக்கிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டு
நிறுவனத்தில் செலுத்தப்பட்ட மூலதனமும், இலவச ஒதுக்கீடுகளும்
சேர்ந்து, அதைப்போல மூன்று மடங்கு வரை இந்திய தொழில்
வளர்ச்சி வங்கியானது மறுநிதி உதவி அளிக்கிறது. 1979-80-ம்
ஆண்டில் அந்நிறுவனமானது ரூபாய் 9·69 கோடிகள் மறுநிதி
உதவி பெற்று உள்ளது. ஆனால் இது 1978-79-ல் பெற்ற
மறுநிதி உதவி ரூபாய் 9·23 கோடியேயாகும். மேலும் 1979-80-ம்
ஆண்டில் இந்திய தொழில் வளர்ச்சி வங்கிக்கு ரூபாய் 5·34
கோடி திரும்பச் செலுத்தப்பட்டு உள்ளது. 1978-79-ல் மறுநிதி
உதவி ரூபாய் 4·45 கோடியே திரும்பச் செலுத்தப்படடது.
1980-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள், மற்றும் 1979-ம்
ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள், ஆகியவற்றில் நிலுவை
யாக உள்ள மறுநிதி உதவித்தொகைகள் முறையே ரூபாய் 31·79
கோடி, மற்றும் ரூபாய் 27·44 கோடியாகும்.

இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி உதவி
பெற்ற அசலையும் வட்டியையும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு
நிறுவனம் எப்பொழுதும் காலந்தாழ்த்தாமல் திரும்பச் செலுத்தி
வந்துள்ளது.

6. <u>1978-79 மற்றும் 1979-80 ஆம் ஆண்டுகளின்
செயலாக்க ஆய்வு</u>: இந்நிறுவனத்தின் 1979-80-ம் ஆண்டின்
செயலாக்கமானது. 1978-79-ன் செயலாக்கத்தோடு ஒப்பிடு



கையில் போற்றத்தகுந்த முன்னேற்றத்தை இந்நிறுவனம் பெற்றுள்ளது. தமிழ்நாடு அரசின் தொழிற் கொள்கைக்கிணங்க இந்நிறுவனமானது வேலை வகய்ப்பினை பெருமளவில் ஏற்படுத்த வேண்டுமென்ற முக்கிய நோக்கத்துடன் சிறு மற்றும் சின்னஞ்சிறு தொழில்துறைகளிலுள்ள தொழில்நிலையங்கள் அதிலும் குறிப்பாக கிராம மற்றும் நகர்ப்பாங்குள்ள பகுதிகளில் அமைக்கப்படுகின்ற தொழில் நிலையங்களை ஊக்குவித்து சிறப்பு முன்னுரிமை அளித்து வருகிறது. பொருளாதார நிலையில் பின்தங்கி நலிந்துள்ள மக்கள் தொழில் நிலையங்கள் அமைப்பதை ஊக்குவிப்பதற்காகவும், மற்றும் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படச் செய்யவும் பல்வேறு புதிய திட்டங்களும், சலுகைகளும் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன.

(1) உதவி அளிக்கப்பட்ட தொழில் நிலையங்களின் எண்ணிக்கை.—1978-79 மற்றும் 1979–80-ம் ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் செயலாக்கத்தினால் நிறுவனத்திடமிருந்து உதவி அளிக்கப்பட்ட தொழில் நிலையங்களின் எண்ணிக்கையானது கணிசமாக உயர்ந்து உள்ளது. இந்த ஆண்டுகளில் இந்த நிறுவனத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவி விபரங்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது:

(தொகை ரூபாய் இல்ட்சத்தில்.)

| | 1978–79 | | 1979–80 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை |
| ஒப்புதல் அளிக்கப்பட்டவை. | 825 | 1,205·99 | 1500 | 1,718·13 |

இவற்றில் பெரும்பாலானவை மாநிலத்தின் பிற்பட்டபகுதிகள் மற்றும் கிராமப் பகுதிகளிலுள்ள சிறு மற்றும் சின்னஞ்சிறு துறைகளைச் சார்ந்த தொழில் நிலையங்கள் என்பது போற்றத்தக்கதாகும். இந்நிறுவனத்தில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த தொகை (CUMULATIVE SANCTIONS) வழங்கப்பட்ட தொகை மற்றும்

நிலுவையிலுள்ள தொகை பற்றிய விபரங்கள் பின்வருமாறு:—

| | | எண்ணிக்கை. | தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | | | |
| 31—3—1979 வரை | .. .. | 3392 | 12,921·29 |
| 31—3—1980 வரை | .. .. | 4705 | 14,381·87 |
| வழங்கப்பட்ட தொகை. | | | |
| 31—3—1979 வரை | .. .. | 3727 | 10,794·56 |
| 31—3—1980 வரை | .. .. | 3075 | 11,861·67 |
| நிலுவையிலுள்ள தொகை. | | | |
| 31—3—1979 வரை | .. .. | .. | 6,852·56 |
| 31—3—1980 வரை | .. .. | .. | 7,312·45 |

(ii) வேலை வாய்ப்புகள்.—இந்நிறுவனத்தினால் உதவி அளிக்கப்பட்ட தொழில் நிலையங்களின் எண்ணிக்கை குறிப்பாக சிறு மற்றும் சின்னஞ்சிறு தொழில் துறைகளில் கணிசமாக உயர்ந்துள்ளதால், வேலை வாய்ப்புகள் பெருமளவில் உயர்ந்துள்ளது. இந்நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நிதி உதவியினால் இது ஏற்பட்டதாகும். இவற்றில் சமுதாயத்தின் நலிந்துள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் பலன் அடைந்து உள்ளனர். இந்நிறுவனத்தினால் தோற்றுவிக்கப்பட்ட வேலை வாய்ப்பு விபரங்கள் பின்வருமாறு:—

| | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 1978-79 | .. .. | 13,517 |
| 1979-80 | .. .. | 19626 |



(iii) சிறு தொழில்களுக்கு உதவி.—ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, இந்நிறுவனமானது சமுதாயத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள பெரும்பாலானோருக்குப் பயன்படுகின்ற வகையில் சிறு தொழில் துறைக்கு அதிக அளவில் நிதி உதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| நிதி உதவியின் அளவு .. | குறைந்த அளவு ரூபாய் 5,000 உச்ச அளவு ரூபாய் 30·00 இலட்சம், தனி நிறுவனங்களுக்கு உச்ச அளவு ரூபாய் 30 இலட்சமாகும். தனி நபர் உடைமை பங்குதாரர் உடைமை நிறுவனங்களுக்கு கடனின் உச்ச அளவு ரூபாய்15 இலட்சமாகும். |
| வட்டி வீதம் .. .. | பிற்பட்ட பகுதியிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு ஆண்டொன்றுக்கு 9.5 சதவீதம். |
| | இதர பகுதியிலுள்ள தொழில் நிலையங்களுக்கு ஆண்டொன்றுக்கு 11 சதவீதம். |
| திரும்பச் செலுத்தும் காலம். | தொழில் திட்டங்களின் தன்மைகளுக்கேற்ப 10 முதல் 16 வரையிலான அரை ஆண்டுத் தவணைகளில் திரும்பச் செலுத்த வேண்டும். |

இத்துறைகளில், இந்நிறுவனத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதிஉதவிகளின் விபரங்கள் பின்வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1978-79. | |
|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. |
| சிறு தொழில் துறைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை .. | 782 | 580.40 |

| | 1979–80. | |
|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. |
| சிறு தொழில் துறைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை .. | 1,447 | 886·36 |

(iv) பிற்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு உதவி:—மாநிலத்தின் கிராம மற்றும் நகரப் பாங்குள்ள பகுதிகளில் தொழில் வளர்ச்சியினை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, பிற்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு பெருமளவில் நிதி உதவி அளித்து வருகிறது.

உதவிகளின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :—

எளிய நிபந்தனைகளின் மேல் ரூபாய் 30 இலட்சங்கள் வரை கடன்கள்.

சிறு அல்லது பெருரகத் தொழில் நிலையங்களுக்கு ஆண்டொன்றுக்கு 9·5 சதவீத வட்டி வீதம், மற்றும் தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு ஆண்டொன்றுக்கு 8 சதவீத வட்டி வீதம்.

திரும்பச் செலுத்த துவங்குவதற்குரிய அவகாச காலம் 4 ஆண்டுகள் வரை.

திரும்பச் செலுத்தும் காலம் 14 ஆண்டுகள் வரை.

காப்புத் தொகையாக கடன் வாங்குவோர் கொண்டு வர வேண்டிய நிதி கோருவதில் இணக்கமான அணுகுமுறை.

பிற்பட்ட பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு இந்நிறுவனத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவிகளின் விபரம் பின்வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1978–79. | |
|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. |
| பிற்பட்ட பகுதிகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. .. | 483 | 714.76 |



| | 1979–80. | |
|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. |
| பிற்பட்ட பகுதிகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. .. | 971 | 926·00 |

(v) தொழில் நுட்ப வல்லுநர்கள்:—தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு, அதாவது தொழில் நுட்பவியலில் பட்டம்/தகுதிப் பட்டையம்/சான்றிதழ்கள் மற்றும் பல்வேறு தொழிலியல் தயாரிப்புகளில் முன் அனுபவம் மற்றும் திறன் கொண்டவர்கள் தாங்களாகவே தொழில் நிலையங்கள் அமைப்பதை ஊக்குவிப்பதற்காக இந்நிறுவனம் இத்திட்டத்தை ஏற்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன :—

ரூபாய் 3 இலட்சம் வரை கடன்கள்.

பிற்பட்ட பகுதிகளுக்குச் சலுகையாக ஆண்டொன்றுக்கு 8 சதவீத வட்டி வீதம்; இதர பகுதிகளில் ஆண்டொன்றுக்கு 9·5 சதவீத வட்டி வீதம்.

ரூபாய் 2 இலட்சம் வரை கடன் வாங்குவோர் காப்புத் தொகையாக நிதி கொண்டு வரவேண்டியதில்லை. கடன் ரூபாய் 2 இலட்சத்திற்கு மேல் காப்புத் தொகை 10 சதவீதமாகும்.

திரும்பச் செலுத்த துவங்குவதற்கு அவகாச காலமும் திரும்பச் செலுத்த வேண்டிய காலக் கட்டமும் அதிகமானதாகும். இத்திட்டத்தின்கீழ் இந்நிறுவனத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவி விவரங்கள் பின்வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1978–79. | |
|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. |
| தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு அளிக்கப்பட்ட ஒப்புதல் தொகை .. | 28 | 32·95 |

| | 1979–80. | |
|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. |
| தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை .. .. .. | 48 | 65.79 |

(vi) போக்குவரத்து உரிமையாளர்களுக்கு உதவி.—ஆட்டோ ரிக்ஷாக்கள், சுற்றுலா வாடகைக் கார்கள், சரக்குப் பேருந்துகள், மோட்டார் தொடர் வண்டிகள், டிரக்குகள், டெம்போக்கள் போன்ற போக்குவரத்து வண்டிகளை வாங்குவதற்கு இந்நிறுவனம் ஒரு தனி திட்டத்தை உருவாக்கியுள்ளது. இந்த உதவியின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :—

(அ) ஆட்டோ ரிக்ஷா (உரிமையாளரே ஓட்டுவது) :—

வட்டி வீதம் : 9·5 சதவீதம்.

கடனுதவி: வண்டியின் விலையில் 85 சதவீதம் வரை. (தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலை சாதியினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினரில் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு 90 சதவீதம் வரை கடன் உதவி அளிக்கப்படுகிறது.)

கடனை திருப்பிச் செலுத்தும் காலம்.—மாதாந்திர தவணைகளில் நான்காண்டுகள் காலம்.

(ஆ) ஒற்றை டிரக் வண்டி உரிமையாளர்கள் (உரிமையாளரே ஓட்டுவது).—

கடனுதவி—வண்டியின் விலையில் 85 சதவீதம் வரை.

வட்டி வீதம்:—11·5 சதவீதம்

திருப்பிச் செலுத்தும் காலம்:—ஐந்தாண்டுகள் வரை.

(இ) இதர வண்டி உரிமையாளர்களுக்கு :—

கடனுதவி:—புது வண்டியின் விலையில் 75 சதவீதம் வரை.

வட்டி வீதம்:—12·5 சதவீதம்.



உதவி பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

(ரூபாய் இலட்சத்தில்.)

| | 1978–79. | |
|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. |
| போக்குவரத்து உரிமையாளர்களுக்கு ஒப்புதல் அளித்த கடன் தொகை .. .. .. | 240 | 50·00 |
| | 1979–80. | |
| | எண்ணிக்கை. | தொகை. |
| போக்குவரத்து உரிமையாளர்களுக்கு ஒப்புதல் அளித்த கடன் தொகை .. .. .. | 96 | 39·81 |

இத்திட்டத்தின் கீழ் முக்கியமாக பயன் அடைந்தவர்கள், பின்தங்கிய பகுதிகளைச் சார்ந்த ஒற்றை டிரக் உரிமையாளர்களே ஆவார்கள்.

(vii) மின்சார உற்பத்தி இயந்திரங்கள் வாங்குவதற்கு உதவி.—மின்வெட்டுக் காலங்களில் ஏற்படும் இடையூறுகளை களைவதற்கு, மின்சார உற்பத்தி இயந்திரங்களையும், டீசல் இயந்திரங்களையும் வாங்கவும், தொழில் நிறுவனங்களுக்கு, டி.ஐ.ஐ.சி. இத்திட்டத்தின் கீழ் கடனுதவி அளிக்கிறது. உதவி பற்றிய நிபந்தனைகள் பின்வருமாறு :—

கடனுதவி:—ரூ. 5 இலட்சம் வரை (தகுதி அடிப்படையில் கடன் தொகை உயர்த்தப்படும்.)

திருப்பிச் செலுத்தும் காலம்:—3 முதல் 5 ஆண்டுகள் வரை. கடன் பெற்றுக் கொண்ட நாளிலிருந்து 6 மாதங்கள் கழித்து கடனை திருப்பிச் செலுத்தத் துவங்கலாம்.

கடனை பெறுபவர் போட வேண்டிய காப்புதொகை.—25 சதவீதம்—நடுத்தர தொழில்களுக்கு ; 15 சதவீதம்—சிறு தொழில்களுக்கு.

வட்டி வீதம்:—தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தைப் பொறுத்து ஆண்டொன்றுக்கு 9·5 சதவீதம் முதல் 12·5 சதவீதம் வரை.

உதவியின் விவரம் பின்வருமாறு:—

(தொகை ரூ. இலட்சத்தில்)

| | 1978–79 | | 1979–80 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| மின்சார உற்பத்தி இயந்திரங்கள் வாங்குவதற்கு ஒப்புதல் அளித்த தொகை. | 3 | 1·79 | 26 | 50·08 |

மாநிலத்தில் தற்போது போதுமான அளவு மின்சாரம் கிடைக்காததால், இத்திட்டத்தின்கீழ் அதிக அளவில் தொழில் நிறுவனங்கள் கடனுதவி பெற்றுள்ளன.

(viii) அந்நிய செலாவணி கடன்.—தொழில் நுட்ப உத்திகள், இயந்திரங்கள், சாதனங்கள், முதலியவற்றை வெளிநாடுகளிடமிருந்து இறக்குமதி செய்ய இந்நிறுவனம் உலக வங்கியின் மூலம் அந்நிய செலாவணி கடன் உதவி வழங்கும் நிறுவனமாக இம் மாநிலத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :—

கடனுதவி .. .. ரூ. 30 இலட்சங்கள் வரை.

வட்டி வீதம் .. சிறு தொழில்களுக்கும், தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள எல்லா தொழில் நிறுவனங்களுக்கும் ஆண்டொன்றுக்கு 11·5 சதவீதம். மற்ற தொழில் நிறுவனங்களுக்கு ஆண்டொன்றுக்கு 12 சதவீதம்.



கடனைத் திருப்பிச் செலுத்த துவங்க அவகாசம். } 2 முதல் 4 ஆண்டுகள்.

திருப்பிச் செலுத்தும் காலம். } 12 ஆண்டுகள் வரை.

இத்திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட நிதி உதவியைப் பற்றிய விவரம் பின்வருமாறு :—

(தொகை ரூ. இலட்சத்தில்)

| | 1978–79 | | 1979–80 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| அந்நிய செலாவணி கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | 21 | 186·24 | 12 | 99·87 |

பின்தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு குறைந்த வட்டியில் ரூபாய்க் கடன் கொடுக்கப்பட்டதன் காரணமாக அநேக தொழில் முனைவர்கள் அந்நிய செலாவணிக் கடனைக் காட்டிலும் ரூபாய் கடனை அதிகமாக பெற்றுக் கொள்ள முன் வந்தனர். மற்றும் வெளிப்படையான பொது உரிமத்தின் கீழ் அந்நியச் செலாவணியும், அவர்களுக்குக் கிடைத்தது. இவைகள் அந்நியச் செலாவணிக் கடன வசதியை குறைவாகப் பயன்படுத்தியதற்கான அடிப்படைக் காரணங்களாகும்.

(ix) எளிய நிபந்தனையில் கடன் வசதி.—எளிய நிபந்தனையிலும் ஆரம்ப முதலீட்டு உதவி திட்டத்தின் கீழ் சிறு தொழில்களுக்கும், சின்னஞ்சிறு தொழில்களுக்கும் நிதி உதவி அளிக்கும் திட்டத்தை இந்நிறுவனம் வகுத்துள்ளது. தொழில் திட்டத்திற்கு தேவையான மூலதனத்தில் தொழில் முனைவோர் செலுத்தும் மூலதனப்பங்கு போக பாக்கி தேவைப்படும் மூலதனத்தை நிரப்பும் பொருட்டு நிதி உதவி அளிக்கப்படுகிறது. தகுதி வாய்ந்த மற்றும் தொழில் நுட்பத்திறன் படைத்த தொழில் முனைவர்களை ஊக்குவிக்கும் வகையில், குறிப்பாக தமிழ்நாட்டில்

கிராமப்பகுதிகளிலும், தொழில் துறையில் பின்தங்கிய பகுதிகளிலும் தொழில்களை நிறுவ தேர்ந்தெடுக்கப்பட்ட வகையில் இத்திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்படுகிறது. தனி உரிமையாளர் மற்றும் பங்குதாரர் தொழில் நிறுவனங்களுக்கு இந்த உதவியானது, எளிய கடனுதவி வடிவில் ஆண்டொன்றுக்கு ஒரு சதவீத வட்டி வீதத்தில் அளிக்கப்படுகிறது. வரையறுக்கப்பட்டுள்ள நிறுவனங்களைப் பொறுத்தவரை (Limited Companies) இந்த நிதி உதவியானது சேர்ந்து வரும் முன்னுரிமைப் பங்குகள் வடிவில் (Cumulative Preferance Shares) வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் வழங்கியுள்ள உதவி பின்வருமாறு :—

(தொகை ரூ. இலட்சத்தில்)

| | 1978–79 | | 1979–80 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை |
| எளிய நிபந்தனை கடன் வசதி/ஆரம்ப முதலீட்டு உதவி திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | 219 | 9·18 | 687 | 34·65 |

இத்திட்டத்தின் சிறப்பான அம்சங்கள் பின்வருமாறு :—

கடன் தொகையின் அளவு. — ரூ. 2 இலட்சம் (அல்லது) தொழில் திட்டத்தின் செலவில் 20 சதவீதம் (இவற்றில் எது குறைவோ, அது).

வட்டி வீதம் ... ஒரு சதவீதம்.

திருப்பிச் செலுத்தும் காலம். .. தொழில் நிறுவனத்தின் தன்மையைப் பொறுத்தது.

(x) சின்னஞ்சிறு கடன் திட்டம்.— சமூகத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் பெரும் அளவில் பயன் அடையும்



பொருட்டு சின்னஞ்சிறு கடன் வழங்கும் திட்டத்தை இந்நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. சிறந்த தொழில் நிலையங்களுக்கு ரூ. 5,000 முதல் ரூ. 25,000 வரை கடன் அளிக்கப்படுகிறது. முக்கியமாக கிராமப் பகுதிகளிலும் தொழிலில் பின்தங்கிய பகுதிகளிலும் உள்ள தொழில்களை மேம்படுத்துவதற்கும் பெரும் அளவில் வேலை வாய்ப்பினை தோற்றுவிப்பதற்கும் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிறுவனம் வழங்கும் இந்த உதவியைப் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

(தொகை ரூ. இலட்சத்தில்.)

| | 1978–79 | | 1979–80 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சின்னஞ்சிறு கடன் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | 536 | 67·47 | 941 | 143·09 |

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :—

இதற்குமுன் குறைந்த பட்ச கடனாக ரூ. 10,000 வழங்கப்பட்டு வந்தது. இப்போது அது ரூ. 5,000 என வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆண்டொன்றுக்கு வட்டி விகிதம் 9 சதவீதம்.

ரூ. 5,000 லிருந்து ரூ. 25,000 அளவிலும் கடன் தொகை வழங்கப்படும்.

தொழிற்சாலைக்குரிய நிலம் வாங்குவதற்கும், கட்டிடம் கட்டுவதற்கும், இயந்திரங்கள் வாங்குவதற்கும், சில குறிப்பிட்ட இனங்களை பொறுத்த வரையில், நடைமுறை மூலதனத்திற்கும் இத்திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்படுகிறது.

(xi) மாவட்ட வாரியாக வழங்கப்பட்ட உதவி.—1978–79 மற்றும் 1979–80-ல் மாவட்ட வாரியாக அளிக்கப்பட்ட நிதியுதவி பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(தொகை ரூ. இலட்சத்தில்.)

| | 1978–79 | | 1979–80 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| அ. பின்தங்கிய மாவட்டங்கள் — | | | | |
| 1 தர்மபுரி .. | 170 | 283·27 | 398 | 372·14 |
| 2 வட ஆற்காடு .. | 30 | 103·53 | 48 | 141·60 |
| 3 மதுரை .. | 143 | 96·67 | 162 | 162·48 |
| 4 ராமநாதபுரம் .. | 92 | 150·59 | 63 | 91·88 |
| 5 தென் ஆற்காடு .. | 9 | 30·66 | 177 | 74·59 |
| 6 திருச்சிராப்பள்ளி .. | 5 | 8·21 | 63 | 18·71 |
| 7 கன்னியாகுமரி .. | 11 | 16·07 | 20 | 8·26 |
| 8 புதுக்கோட்டை .. | 12 | 11·85 | 27 | 45·40 |
| 9 தஞ்சாவூர் .. | 11 | 13·91 | 11 | 10·02 |
| | 483 | 714·76 | 969 | 925·08 |
| 10 பாண்டிச்சேரி .. | .. | .. | 2 | 0·92 |
| அ. மொத்தம் .. | 483 | 714·76 | 971 | 926·00 |
| ஆ. மற்ற மாவட்டங்கள்— | | | | |
| 11 செங்கல்பட்டு .. | 27 | 121·29 | 206 | 234·39 |
| 12 கோயம்புத்தூர் .. | 35 | 147·04 | 75 | 275·45 |
| 13 சென்னை .. | 237 | 135·62 | 136 | 117·09 |
| 14 பெரியார் .. | .. | .. | 24 | 28·09 |
| 15 சேலம் .. | 24 | 26·41 | 42 | 104·72 |
| 16 நீலகிரி .. | 2 | 0·80 | 1 | 6·25 |
| 17 திருநெல்வேலி .. | 17 | 60·07 | 45 | 26·14 |
| ஆ. மொத்தம் .. | 342 | 491·23 | 529 | 792·13 |
| (அ + ஆ) மொத்தம் .. | 825 | 1,205·99 | 1,500 | 1,718·13 |



1978–79 உடன் ஒப்பிடும்பொழுது 1979–80-ல் பின்தங்கிய பகுதிகளில் தொழில்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்ட தொகையும், தொழில்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவுக்கு அதிகரித் திருப்பதை மேற்கண்ட அட்டவணையிலிருந்து காணலாம். ஆகவே, பின்தங்கிய பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தொழில் களுக்குக் கடன் வழங்குவதில் முன்னுரிமையளிக்கப்படுகிறது என் பதனை இது காட்டுகிறது. பின்தங்கிய மாவட்டங்களில், தர்ம புரி, மதுரை, வட ஆற்காடு, ராமநாதபுரம், தென்னாற்காடு, ஆகியவையே 1979–80-ல் கணிசமான அளவு உதவியைப் பெற்றுள்ளன.

## 7. 1979–80-ல் அறிமுகப்படுத்தப்பட்ட புதியதிட்டங்கள்.—

(i) மீன்பிடிக்கும் இயந்திரப் படகுகள் (Fishing Trawlers) வாங்க உதவி.—1978–79ல், மீன்பிடிக்கும் இயந்திரப் படகுகள் மற்றும் விசைப் படகுகள் வாங்குவதற்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தை இந்நிறுவனம் தோற்றுவித்துள்ளது. இத்திட்டத் தின்கீழ், குறைந்த வட்டியிலும் கடனைத் திருப்பிச் செலுத்தப் போதிய அவகாசத்திலும், குறைந்த ஈட்டுப் பொறுப்புத் தொகை யிலும் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| உதவியின் அளவு .. | ' ட்ராலர் ' படகு (படகு விலையில் 75 சதவீதம் வரை) |
| வட்டி வீதம் .. | பின்தங்கிய பகுதி 9.5 சதவீதம். மற்ற பகுதிகள்—(ரூபாய் 5 இலட்சம் வரை) 11 சதவீதம். |
| | மேற்கண்ட இரண்டு வகை தவிர மற்ற தொழில்களுக்கு 12·5 சதவீதம். |
| திருப்பிச் செலுத்துவது மற்றும் இதர நிபந்தனைகள். | தொழில்களின் தன்மையைப் பொறுத்து, பிற்பட்ட பகுதி/மற்ற பகுதிகள் ; சிறு/நடுத்தர தொழில் களுக்கு என்ன நிபந்தனைகளோ அவையே. |

இத்திட்டத்தின் கீழ் வழங்குப்பட்ட உதவி பற்றிய விவரங் ள்க :—

| | 1978–79. | | 1979–80. | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| மீன்பிடிக்கும் ''ட்ராலர்கள்'' விசைப் படகுகள் வாங்குவதற்கு ஒப்பளிக்கப்பட்ட தொகை. | .. | .. | 7 | 7·71 |

(ii) ''ஆட்டோ ட்ரக்''/''ட்ரெய்லர்'' வண்டிகள் வாங்க உதவி.—பெருமளவில் வேலை வாய்ப்பினைத் தோற்றுவிப்பதற்கும், அதிலும் குறிப்பாக படித்து வேலையற்றிருப்போருக்கு வேலை வாய்ப்பினை அளிக்கவும், சமூகத்தில் பொருளாதாரத்தில் மெலிந்துள்ளவர்கள் சுயவேலைகளைப் பெறும் பொருட்டு அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கவும் ஆட்டோ ட்ரக்குகள்''/''ட்ரெய்லர்கள்'' வாங்க நிதியுதவி அளிக்கும் திட்டமொன்றை இந்நிறுவனம் வகுத்துள்ளது. அதன் சிறப்பம்சங்கள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| கடன் அளவு .. .. | ரூ. 20,000 வரை. |
| காப்புத் தொகையாக கடன் வாங்குவோர் கொண்டுவர வேண்டிய நிதி. | சுமார் 15 சதவீதம். |
| வட்டி வீதம் .. .. | உரிமையாளரே ஓட்டுவது—11·5 சதவீதம்; மற்றவர் கட்கு—12·5 சதவீதம். |
| திருப்பிச் செலுத்துவது .. | 3 முதல் 5 ஆண்டுகள் வரை. திருப்பிச் செலுத்தத் துவங்க அவகாசம்—3 மாதங்கள். |



(iii) மருத்துவ விடுதிகள்/தனியார் மருத்துவ மனைகள் ஏற்படுத்த உதவி.—மருத்துவ விடுதிகளை நடுத்தரத் தொழில் அடிப்படையில் வர்த்தக நோக்கோடு ஏற்படுத்தும் முனைப்பான முதலீட்டாளர்களுக்கு உதவி அளிக்கும் ஒரு திட்டத்தை இந் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் சிறப்பம்சங்கள் பின்வருமாறு :—

| | |
|---|---|
| நோக்கம் .. .. | நிலம் வாங்குவது, கட்டிடம் கட்டுவது, மருத்துவச் சாதனங்கள் வாங்குவது ஆய்வுக்கூடச் சாதனங்கள் வாங்குவது முதலியவற்றிற்கு இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி கிடைக்கும். |
| அமைப்பு .. .. .. | தனியுடைமை நிறுவனம்/பங்குதாரர் உடமை நிறுவனம்/வரையறை கொண்ட கம்பெனிகள் போன்ற நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும். |
| உதவியின் அளவு .. .. | தனியுடைமை / பங்குதாரர் உடைமை நிறுவனங்களுக்கு ரூ. 15 இலட்சம் வரை. கம்பெனிகள் போன்ற மற்ற நிறுவனங்களுக்கு ரூ. 30 இலட்சம். |

(iv) நவீன அரிசி ஆலைகளுக்கு உதவி.—தளர்த்தப்பட்ட உதவித் திட்டத்தின் அடிப்படையில், நவீன அரிசி ஆலைகளுக்கு உதவியளிக்கும் திட்டத்தை இந்நிறுவனமானது சமீபகாலத்தில் திருத்தி அமைத்துள்ளது. இத் திட்டத்தின் கீழ், புதிய நவீனஅரிசி ஆலைகளை ஏற்படுத்தவும் ஏற்கனவே உள்ள ஆலைகளை நவீனப்படுத்துவதற்கும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. சிறு தொழில் துறையிலுள்ள தொழில் நிலையங்களுக்கு நிதி உதவி அளிப்பதில் உள்ள நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும்.

(v) பட்டுநூல் எடுக்கும் தொழில் நிலையங்கள் நிறுவ உதவி.—சின்னஞ்சிறு கடன் உதவித் திட்டத்தின் கீழ், பட்டுத் தொழில் இயக்குநரோடு சேர்ந்து, பட்டுநூல் எடுக்கும் நிலையங்களையும், முறுக்கு பட்டு நூல் தயாரிக்கும் நிலையங்களையும் நிறுவ நிதியுதவி அளிக்கும் திட்டமொன்றை இந்நிறுவனம் வகுத்துள்ளது. சின்னஞ்சிறு கடன் திட்டத்தின்படி உள்ள நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும்.

(vi) ''டெம்போக்கள்'', வண்டிகள் வாங்க உதவி.—மக்கள் தொகை ஒரு இலட்சத்திற்கும் அதற்கு மேலுமுள்ள பெருநகரங்கள் மற்றும் ராணிப்பேட்டை, ஓசூர் முதலிய தொழில் வட்டாரங்களில், ''பிக்அப்'' வண்டிகள், ''டெலிவரி'' வண்டிகள் மற்றும் ''டெம்போக்கள்'' வாங்க நிதியுதவி அளித்து வருவதோடு, மக்கட்தொகை ஒரு இலட்சத்திற்கும் குறைவாக உள்ள நகரங்களிலும் வியாபார நகரங்களிலும் இது போன்ற செயல்களுக்கு கடன் வாங்குவோரது தன்மையைப் பொறுத்து நிதியுதவி அளிப்பதென்று இந்நிறுவனம் இப்பொழுது முடிவு செய்துள்ளது.

(vii) சுற்றுலா வாடகை வண்டிகள் (Tourist Taxis) வாங்க உதவி.—தனிவண்டி ஓட்டுபவர்/உரிமையாளரே ஓட்டுவது மற்றும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள 6 வண்டிகளுக்கு உட்பட்ட எண்ணிக்கை கொண்டுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு, இத்திட்டத்தின் கீழ், சுற்றுலா வாடகை வண்டிகள் வாங்க நிதியுதவி அளிப்பதை இந்நிறுவனம் மீண்டும் மேற்கொண்டுள்ளது.

(viii) தவணை முறையில் ஒதுக்கப்பட்ட தொழிற்கூட கட்டிடங்களின் விலையை ''சிட்கோ''வுக்குக் கொடுப்பதில் உதவி.—தவணைமுறையில் தொழில்முனைவர்கள் ''சிட்கோ'' விடமிருந்து தொழிற்கூடக் கட்டிடங்களைப் பெற்றிருந்தால் அவற்றின் விலையை அவர்கள் ''சிட்கோ''விற்கு முழுவதும் திருப்பிச் செலுத்த அவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. ''சிட்கோ'' ''சிப்காட்''டிடமிருந்து தொழிற்கூட கட்டிடங்களை நேரடியாக வாங்குவதற்கும் இந்நிறுவனம் கடன் உதவி அளிக்கிறது.



(ix) மருத்துவர்களுக்கு உதவியளிக்கும் திட்டத்தைத் தளர்த்தியிருப்பது மற்றும் இவ்வுதவிபெறத்தகுதிபெறும் பகுதிகளை அதிகப்படுத்தியிருப்பது.—தளர்த்தப்பட்ட இத்திட்டத்தின் நிபந்தனைகள் பின்வருமாறு :

(அ) தனிப்பட்ட மருத்துவருக்கும், ''பாலிகிளினிக்குகள்'' ஏற்படுத்துவதற்கும் அளிக்கப்பட்டு வந்த நிதியுதவி ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) சிறு மருத்துவ விடுதிகள், தனியார் மருத்துவ விடுதிகள் க்ட்டுவதற்கும், மருத்துவ சாதனங்கள் முதலியன வாங்குவதற்கும் (வண்டிகள் விலை நீங்கலாக) கடன் வழங்கப்படுகிறது.

(இ) தனிவகை நகராட்சிகளுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. (சென்னை, மதுரை மாநகர் பகுதிகள் தவிர).

(ஈ) வட்டி வீதம் தொடர்ந்து 9·5 சதவீதம் என இருக்கும்.

(8) இவ்வாண்டில் வழங்கிய சலுகைகள்—(i) சின்னஞ்சிறு கடன் திட்டத்தின்கீழ்/ தாழ்த்தப்பட்டோர்/மலைசாதியினர்/மிகவும் பின்தங்கிய வகுப்பினர் ஆகியோருக்கு வட்டி வீதத்தை குறைத்தது.—சின்னஞ்சிறு கடன் திட்டத்தின்கீழ், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/மலை சாதியினர்/பின்தங்கிய வகுப்பினரில் மிக பின் தங்கிய வகுப்பினருக்கு கடன் கொடுப்பதில் மேலும் பல சலுகைகளை அளிக்க இந்நிறுவனம் முடிவு செய்துள்ளது. மற்றவர்களுக்கு வட்டி வீதம் ஆண்டுக்கு 9 சதவீதம், இவர்களுக்கு 8 சதவீதமேயாகும். கடன் பெறுவோர் கொண்டுவர வேண்டிய காப்பு நிதியைக் கோராமல் தள்ளுபடி செய்யலாம். தகுதி அடிப்படையில் அல்லது குறிப்பிடப்பட்ட மிகக் குறைந்த அளவு காப்புத் தொகையே கொண்டுவந்தால் போதுமானது. எளிய நிபந்தனை கடன் உதவி போன்ற நிதியுதவி திட்டத்தின்படியும், விண்ணப்பதாரரின் தொழில் திட்டத்திற்கு உதவி அளிக்கப்படும்.

(2) பின்தங்கிய வகுப்பினரின் நல்வாழ்வு—மிகவும் பின் தங்கிய வகுப்பினரை முன்னேற்றமடையச் செய்வது.—பின் தங்கிய மக்களில் மிகவும் பின்தங்கிய மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் பொருட்டு, தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/ மலை சாதியினர் ஆகியோருக்கு அளிக்கப்பட்டுவரும் சலுகை களை, மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கும் அளிக்கப்படுகிறது.

(i) ''ஆட்டோ ரிக்ஷாக்கள்'' வாங்குவதற்கு அவர்கள் கொண்டுவரவேண்டிய காப்புத் தொகை 10 சதவீதமே யாகும். மற்றவர்கட்கு இது 15 சதவீதமாகும்.

(ii) (அ) சின்னஞ்சிறு கடன் திட்டத்தின் கீழ், குறிப் பாக கிராமப்பகுதிகளில் உள்ள கை வினைஞர்களுக்கும், கைத்திறத்தொழிலாளர்களுக்கும் நிலையான சொத்துக்களை பெறுவதற்கும் நடைமுறை மூலதனத்திற்கும் ரூ. 25,000 வரை ஒப்பளிக்கப்படும் கடன்களுக்கு வட்டி 8 சதவீதமே ஆகும். மற்றவர்களுக்கு இது 9 சதவீதமாகும்.

(ஆ) மற்றவர்கட்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள 20 சத வீதம் மற்றும் 10 சதவீதம் என்ற காப்புத் தொகை மேலும் குறைக்கப்பட்டுள்ளது. கடன் பெறுபவரின் தன்மையைப் பொறுத்து, அவர் காப்புத் தொகை கொண்டு வரவேண்டிய தில்லை அல்லது குறைந்த பட்ச தொகையே போதுமானது என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(இ) கடன்-பங்குதொகை விகிதம் தொழில் திட்டத்தை மேற்கொண்டவர் செலுத்த வேண்டிய பங்குத் தொகை விகிதம் ஆகியன தாழ்த்தப்பட்டோர்/மலை சாதியினர் விண்ணப்பங்களைப் பொறுத்தவரை மேலும் தளர்த் தப்பட்டுள்ளது.

(ஈ) காலக்கடன்கள் தவிர, தகுதி வாய்ந்த இனங் களைப் பொறுத்தவரை, தொழில் திட்டத்தின் செலவில் 20 சதவீதம் வரை, எளிய நிபந்தனைக் கடன் போன்ற சலுகை நிதியுதவி திட்டத்தின் கீழ் கிடைக்கும் நிதியையும், திட்டச் செலவுக்கு சின்னஞ்சிறு கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுடன் சேர்த்துப்பெற்றுக்கொள்ளலாம்.



(3) ''ஆட்டோ ரிக்ஷா'' வாங்குவதற்குச் செலுத்த வேண்டிய காப்புத் தொகை குறைப்பு.—சமூகத்தில் பொருளாதாரத்தில் மெலிந்துள்ள வகுப்பினருக்கு மேலும் ஊக்கமளிக்கும் பொருட்டு, ''ஆட்டோ ரிக்ஷா'' வாங்க முன் வரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், மலை சாதியினருக்கும், பின்தங்கிய வகுப்பினரில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளவர்களுக்கும் அவர்கள் கொண்டு வரவேண்டிய காப்புத் தொகை 15 சதவீதத்திலிருந்து 10 சதவீதம் என குறைக்கப்பட்டுள்ளது.

(4) ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்குவதற்கு வட்டி விதக் குறைப்பு.—சமுதாயத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பகுதியினருக்கு ஆட்டோரிக்ஷாக்களுக்காக வழங்கப்பட்ட சிறு கடன்களின் வட்டிச் சுமையைக் குறைக்கும் பொருட்டு அக்கடன்களின் வட்டி வீதத்தை 11.5 சதவீதத்திலிருந்து 9.5 சதவீதமாக இந்நிறுவனம் குறைத்துள்ளது.

(5) தொழில் நுட்ப வல்லுநர் திட்டத்தின் கீழ் வட்டி வீதக் குறைப்பு.—அறிவிக்கப்பட்ட பின்தங்கிய பகுதிகளில் தொழில் நுட்ப வல்லுநர்களை தொழில் துவங்குவதற்கு ஊக்க மளிப்பதற்காகவும், அப்பகுதிகளில் அதிக வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதற்காகவும் தொழில் நுட்ப வல்லுநர் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சிறுதொழில் நிலையங்களுக்குரிய வட்டி வீதம் 9.5 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்பட் டுள்ளது.

(6) மத்திய அரசு வழங்கும் உதவித் தொகையை யொட்டி தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் முன் கூட்டியே வழங்கும் கடன் தொகைகளுக்கு வட்டி வீதக் குறைப்பு:—

பின் தங்கிய பகுதிகளில் உள்ள தொழில் நிலையங்களுக் காக தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் முன்கூட்டியே வழங்கும் கடன்களுக்குரிய வட்டிச் சுமையை குறைப்பதற்காகவும் அத்தொழில்களுக்குஅளிக்கப்படும் ஒரு சலுகையாகவும், மேற்படி கடன் தொகையின் மேல் இப்பொழுது சிறு தொழில்களுக்கு அளிக் கப்படும் 11.5 சதவீத வட்டி வீதத்தையும், நடுத்தரத் தொழில்

களுக்கு உள்ள 12.5 சதவீத வட்டி வீதத்தையும், பின்தங்கிய
பகுதிகளிலுள்ள குறிப்பிட்டக் காலக் கடன்களுக்கு உள்ளதுபோல்
9.5 சதவீத வட்டியாக குறைக்கப்பட்டுள்ளது.

(7) தாமதமாக செலுத்துபவர்களுக்கு
குறைப்பு.—தாமதமாகக் கடனைத் திருப்பிச் தண்ட வட்டியில்
களுக்கு, தண்ட வட்டியினை மொத்த நிலுவையின் செலுத்துபவர்
யில் கணக்கிடாமல், செலுத்த வேண்டிய தவணைத் அடிப்படை
ஆண்டொன்றுக்கு 2 சதவீதமென தொகையில்
பட்டது. இது உண்மையிலேயே தொழில் கணக்கிட முடிவெடுக்கப்
கப்பட்ட பெரிய சலுகையாகும். நிலையங்களுக்கு வழங்
முக்கிய மூலப் பொருட்கள் மற்றும் மேலும் மின்தட்டுப்பாடு
நிலக்கரி கிடைக்காமை, போக்குவரத்து நிலக்கரி மற்றும் பழுப்பு
சேதாரங்கள் முதலியவற்றால் தட்டுப்பாடு, இயற்கை
கட்டுப்பாட்டிற்குமேல் அவர்களுக்கு தொழில் முனைவோர்களின்
ஏற்பட்டு, திரும்பச் செலுத்துவதில் நேர்மையான சிரமங்கள்
மான திருப்பிச் தாமதம் ஏற்பட்டால், தாமத
மேல் சாட்டப்பட்ட செலுத்தத் தவறிய தொகையின்
வகையின் தன்மையைப் தண்ட வட்டி முழுவதும் ஒவ்வொரு
பொறுத்து தள்ளுபடி செய்யப்படும்,

(8) சிறுதொழில் நிலையங்களுக்கு ரூ. 5.00
வரை வழங்கப்பட்ட கடன்களுக்கு இலட்சம்
ணத்தைத் தள்ளுபடி செய்தல்:—சிறுதொழில் பொறுப்பு ஏற்புக் கட்ட
ரூ. 5·00 இலட்சம் வரை வழங்கப்பட்ட நிலையங்களுக்கு
ஏற்புக் கட்டணத்தை 1979 ஆம் கடன்களுக்கு பொறுப்பு
1 ஆம் நாள் முதல் ஆண்டு அக்டோபர் மாதம்
இந்நிறுவனம் தள்ளுபடி செய்துள்ளது.

(9) மிகச்சிறு கடன்கள்:—(1) கடனை திரும்ப செலுத்தத்
தொடங்குவதற்கான அவகாச காலத்தில், கட்டியத் தொகைக்கு
வட்டி விதிக்காமலிருத்தல் (ii) கடனை திரும்ப செலுத்துவதற்கு
நீண்டகாலக் கெடு அளித்தல் (iii) குறித்த காலக் கடன்களில்
குறைந்த அளவு வரம்பை குறைத்தல், (iv) ''சிட்கோ'' நிறுவனத்
திற்கு, சின்னஞ்சிறு தொழிற்கூடங்களுக்காக செலுத்தவேண்டிய
விலையை செலுத்துதல்.



கிராமங்களிலும் சென்னை உள்ளிட்ட இதர பகுதிகளிலுள்ள
கைவினைஞர்கள், கைத்திறத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு
தொழில் முதலீட்டு நிறுவனத்தால் வழங்கப்படும் சிறு கடன்களை
(ரூ. 25,000 வரை நிலையான சொத்துக்களையும்மற்றும் /அல்லது
நடைமுறை மூலதனத்தையும் பெறுவதற்கு) பொறுத்து மேலும்
சலுகைகளை அளிப்பதற்கு, கடனை திருப்பிச் செலுத்ததொடங்கு
வதற்குரிய அவகாச காலத்தில், கடன் தொகையின் மேல் சேரும்
வட்டித்தொகைக்கு வட்டி விதிக்காமலிருத்தல், கடனைத் திரும்ப
செலுத்துவதற்கு நீண்டகாலக் கெடு அளித்தல், குறித்த கால
கடன்களின் குறைந்தஅளவு வரம்பை குறைத்தல் போன்ற சலுகை
களை வழங்குவதற்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்
முடிவெடுத்துள்ளது.

(அ) தொழில் நிலையம் வளர்ச்சியுறும் நிலையில் கடனை
திரும்ப செலுத்துவதற்கு தொடங்காத காலத்திற்
குரிய வட்டியை வசூலிக்காமலிருக்கலாம்.

(ஆ) வட்டித்தொகையின் மேல் வட்டி விதிக்கப்படாது.

(இ) கடன் தொகையின் அளவைப் பொறுத்து கடனை
திரும்பச் செலுத்தத் தொடங்குவதற்குரிய நீண்ட
கால அவகாசம் அளிக்கப்படும். வட்டியும் அசலும்
மாதத் தவணையில் செலுத்தப்படலாம்.

(10) <u>கடன் வசதி பொறுப்புறுதித் திட்டம்</u>.—இந்திய அரசு
மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி ஆகியவற்றால முறைப்படுத்தப்
பட்டத் திட்டத்தின்கீழ், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால்
சிறு தொழில்களுக்கு ஒப்புதலளிக்கப்படுகின்ற கடன்கள், இந்திய
ரிசர்வ் வங்கியின் பொறுப்புறுதி நிறுவனத்தால் பொறுப்பேற்கப்
பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கடன்களைப் பொறுத்த மட்டில் சிறு
தொழில் நிலையங்களுக்கு பொறுப்புறுதி 75 சதவீதம் வரையும்,
கைவினைஞர்கள் கிராமம் மற்றும் குடிசைத் தொழில்களுக்கு 90
சதவீதம் வரையும் கிடைக்கிறது. இது தொழில் நுட்ப வல்லுநர்
களுக்கு ரூ. 3.00 இலட்சம் வரை 90 சதவீதமாகும். ரூபாய்
3.00 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகைக்கு 75 சதவீதமாகும்.

கேட்கக்கூடிய உச்ச அளவு ரூ. 2.50 இலட்சமாகும். ரூ.25,000
வரை கேட்கப்பட்ட கடன்களின் விண்ணப்பங்கள் பொது ஆய்
வின்றி தானாகவே கடன் நிறுவனங்களின் உரிய உறுதியளிப்பு
சான்றிதழ்களின் பேரில் கடன் நிறுவனங்களிடமிருந்து முடிவு
செய்யப்படுகின்றன.

ரூ. 25000 வரையுள்ள கடன்களுக்கு பொறுப்புறுதிக்
கட்டணம் ஆண்டொன்றுக்கு 1/4 சதவீதமாகும். ரூ. 25,000-க்கு
மேற்பட்ட கடன்களுக்கு இது ஆண்டொன்றுக்கு 1/2 சதவீத
மாகும்.

ரூ. 25,000-க்கு மேற்பட்ட கடன்களுக்கு ஆண்டொன்றுக்கு
1/2 சதவீதத் தொகை இந்திய ரிசர்வ் வங்கிக்குத் தரகாகச்
செலுத்தப்பட வேண்டும். 1979 ஆம் ஆண்டு செப்டம்பர்
மாதம் 25 ஆம் நாளில் நடைபெற்ற நிறுவனத்தின் நிர்வாகக்
குழுக் கூட்டத்தில் முடிவெடுத்தபடி, இதனைச் சம்பந்தப்பட்ட
நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

9. கடனை திரும்ப வசூலித்தல்.—மின் தட்டுப்பாடு, கடன்
பற்றாக்குறை, நிலக்கரி மற்றும் கல்கரி மற்றும் முக்கியமான
மூலப் பொருட்கள் இல்லாமை, ஆகிய இடைவிடாத தொல்லை
களால் உற்பத்தி மற்றும் இலாபம் ஆகியவை பாதிக்கப்பட்ட
போதிலும், உதவி செய்யப்பட்ட நிலையங்களிடமிருந்து
நிலுவையினை வசூலிப்பதில் இந்நிறுவனம் நல்ல முன்னேற்
றத்தினை அடைந்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் இந்நிறுவனத்
தால் வசூலிக்கப்பட்ட தொகைகளின் விபரம் பின் வருமாறு:—

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1978–1979 | .. | 10,14.61 |
| 1979–1980 | .. .. | 10,52.51 |

மேலும் இந்நிறுவனமானது தாராள மனத்துடன், சிரமங்
களைப் பெற்றுள்ள தொழில் நிலையங்களுக்கு எங்கெல்லாம்
தேவையோ அங்கெல்லாம் வட்டியினை செலுத்துவதற்கான



கால அட்ட
வணையை திருத்தம் செய்தல், திருப்பிச் செலுத்தும் கால அட்ட
இடைவெளி கொடுத்தல், திருப்பிச் செலுத்தும்
வணையை திருத்தம் செய்தல், வட்டி மற்றும் அசல் செலுத்த
துவங்கும் காலத்தை தள்ளி வைத்தல் போன்ற தாராளமான
இணக்கமான அனுகுமுறையை மேற்கொள்ளுகிறது.

10. நிதிநிலை முடிவுகள்.—இந்நிறுவனத்தின் செயலாக்
கங்களில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி ஏற்பட்டதன் விளை
வாக வரி விதிப்பதற்கு முன் உள்ள ஆதாயத்தொகை கணிசமாக
உயர்ந்துள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் வரி விதிப்பிற்கு
முன் இந்நிறுவனத்தின் ஆதாயம் பற்றிய விவரங்கள் பின்
வருமாறு:—

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1978–1979 | .. .. | 1,82.79 |
| 1979–1980 | (மதிப்பீடு).. | 2,00.00 |

11. கிளை அலுவலகங்களை ஏற்படுத்துதல்.—கன்னியாகுமரி
மற்றும் புதுக்கோட்டை ஆகிய பின்தங்கிய மாவட்டங்களிலுள்ள
தொழில்களை ஊக்குவிப்பதற்காகவும் இம்மாவட்டங்களிலுள்ள
சிறு மற்றும் சின்னஞ்சிறு தொழில் துறைகளில், டி.ஐ.ஐ.சி. சேவை
புரியவேண்டுமென்பதற்காகவும், தமிழ்நாடு தொழில் முதலீட்டு
நிறுவனமானது புதுக்கோட்டை மற்றும் நாகர்கோவிலில்,
மேலும் இரண்டு கிளை அலுவலகங்களை அமைத்துள்ளது.
இந்த கிளை அலுவலகங்களோடு, தமிழ்நாடு முதலீட்டு நிறுவன
மானது தற்பொழுது இரண்டு மண்டல அலுவலகங்களையும்
9 கிளை அலுவலகங்களையும், சென்னையில் தலைமை அலுவல
கத்தையும் கொண்டு விளங்குகிறது. பெரியார் மாவட்டம்,
ஈரோட்டில் ஒரு கிளை அலுவலகத்தை துவங்குவதற்கு இந்
நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேற்கண்டவற்றிலிருந்து தமிழ்நாடு தொழில் முதலீட்டு
நிறுவனத்தின் 1979–1980 ஆம் ஆண்டு செயல் நடவடிக்கை
களை 1978–79ஆம் ஆண்டின் நடவடிக்கையோடு ஒப்பிடுகை
யில், கணிசமான முன்னேற்றமடைந்திருப்பது தெரியவருகிறது.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

1978–79 ஆம் ஆண்டு, 1979-80 ஆம் ஆண்டு மற்றும் 1980–81 ஆம் ஆண்டு (மதிப்பீடு) களில் இந்நிறுவனத்தில் செயல்திற நடவடிக்கைகள் மற்றும் வேலையளிக்கப்பட்டவர்கள் ஆகியவற்றின் ஒப்பீட்டு நிலை பற்றிய சுருக்க அட்டவணை,

| விவரங்கள். | 1978–79 | |
|---|---|---|
| | எண்ணிக்கை. | தொகை. |
| (1) | (2) | (3) (தொகை ரூபாய் இலட்சத்தில்) |
| **மொத்த நிலைமை—** | | |
| ஒப்பளிப்பு (அனைத்து வகைகள்) .. .. .. | 825 | 12,05.99 |
| வழங்கியது .. .. .. .. .. | 453 | 9,04.93 |
| நிலுவை .. .. .. .. .. | 2,238 | 68,52.56 |
| **சிறு தொழிலதுறை—** | | |
| சிறு தொழில்களுக்கு நிதியுதவி .. .. .. | 782 | 5,80.40 |
| **பின்தங்கிய பகுதிகளுக்கு நிதியுதவி—** | | |
| ஒப்பளிப்பு .. .. .. .. .. | 483 | 7,14.76 |



| | | |
|---|---|---|
| **சிறப்புத் திட்டங்கள்—** | | |
| அந்நியச் செலாவணிக் கடன் .. .. .. | 21 | 1,86·24 |
| தொழில் நுட்ப வல்லுநர்கள் .. .. .. | 28 | 32·95 |
| போக்குவரத்துக் கடன் .. .. .. .. | 240 | 50·00 |
| ''ஜெனரேட்டர் செட்டு''களுக்குக் கடன் .. .. | 3 | 1·79 |
| சுலபக் கடன் .. .. .. .. .. | 219 | 9·18 |
| கூட்டுக் கடன் .. .. .. .. .. | 9 | 0·81 |
| திரும்பச் செலுத்துதல் .. .. .. .. | .. | 10,14·61 |
| வரி விதிப்புக்கு முன்னால் ஆதாயம் .. .. | .. | 1,82·79 |
| வேலை வாய்ப்புக்கள் .. .. .. .. | 13,517 | .. |

| 1979–19. | | (31–3–1980 வரையிலான மொத்தம்.) | | 1980—81 (மதிப்பீடு.) | |
|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | தொகை. | எண்ணிக்கை. | மொத்தம். |
| (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1,500 | 1,718·13 | 4,765 | 14,381·87 | 2,500 | 2,400·00 |
| 345 | 1,066·45 | 3,075 | 11,861·67 | .. | 1,400·00 |
| 2,550 | 7,312·45 | .. | 7,312·45 | .. | 8,500·00 |
| 1,447 | 886·36 | 3,861 | 4,030·46 | 2,400 | 1,400·00 |
| 971 | 926·00 | 2,438 | 6,526·55 | 1,800 | 1,400·00 |
| 12 | 99·87 | 172 | 1,424·73 | 25 | 150·00 |
| 48 | 65·79 | 220 | 226·14 | 80 | 100·00 |
| 96 | 39·81 | 447 | 285·14 | 200 | 50·00 |
| 26 | 50·08 | 102 | 160·10 | 40 | 80·00 |
| 687 | 34·65 | 966 | 43·83 | 1,200 | 60·00 |
| 678 | 104·84 | 687 | 105·65 | 1,000 | 150·00 |
| .. | 1,052·51 | | | | |
| .. | 200·00 | | | | |
| 19,626 | .. | 2,36,126 | .. | 30,000 | .. |



## தொழில்களுக்கு நிதியுதவி.

மத்திய அரசிலும், மாநில அரசிலும் தொழில்களுக்குத் தேவையான நிதி உதவி அளிக்க அதிக அளவில் நிதி நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இந்நிறுவனங்களைப் பற்றிய ஆய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (IDBI).—1964 ஆம் ஆண்டு இந்திய தொழில் வளர்ச்சி வங்கிச் சட்டத்தின்கீழ் 1964 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் இவ்வங்கி அமைக்கப்பட்டது. மத்திய நிறுவனமான இவ்வங்கியின் முக்கிய நோக்கம் மாநில நிதி உதவி நிறுவனங்களின் அலுவல்களை ஒருங்கிணைத்து அவை கடன் வழங்க மறு நிதியுதவி செய்வதேயாகும். மேலும், இது பங்கு தொகைகளுக்கு உத்திரவாதமளித்தல், தொழில் நிலையங்களுக்குக் காலக்கடன்களை வழங்குதல் ஆகியவற்றையும் மேற்கொண்டுள்ளது. இவ்வங்கி தொடங்கியது முதல் 1980 ஆம் ஆண்டு மார்ச் இறுதிவரை தமிழ்நாட்டிலுள்ள தொழில் நிலையங்களுக்கு நேரிடையாக ரூ. 49,167 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இதில் வழங்கப்பட்ட நிதி உதவி ரூ. 33,583 இலட்சமாகும். 1978–79 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள தொழில்களுக்கு ரூ. 10,858 இலட்சம் ஒப்புதலளிக்கப்பட்டது. இதில் ரூ. 5,609 இலட்சம் பயன்படுத்தப்பட்டது.

2. இந்தியத் தொழில் கடன் முதலீட்டு நிறுவனம் (ICICI).—இந்நிறுவனம் 1955 ஆம் ஆண்டு சனவரியில் ஏற்படுத்தப்பட்டது. தொழில்களுக்கு வெளிநாடுகளிலிருந்து கடன்களைப் பெற்றுத் தருவதை நோக்கமாகக் கொண்டு தனியார் துறையில் அமைக்கப்பட்ட மற்றொரு தொழில் வளர்ச்சி வங்கி இதுவாகும். இது தவிர, பங்குத் தொகைகளுக்கும் கடனீட்டுறுதிப் பத்திரங்களுக்கும் உத்திரவாதமளித்தல் போன்ற பிற உதவிகளையும் இவ்வங்கி அளிக்கிறது. இந்நிறுவனம், இந்தியா முழுவதிலுமுள்ள தொழில்களுக்கு 1978–79 ஆம் ஆண்டில் ஒப்பளித்த நிதியுதவி ரூ. 18,572 இலட்சமாகும். இதில் தமிழ்நாட்டிலுள்ள தொழில்களுக்கு அளித்த நிதியுதவி ரூ. 1,942 இலட்சமாகும்.

3. இந்தியத் தொழில் நிதி நிறுவனம் (IFCI).—நாடாளு
மன்ற சட்டத்தின்மூலம் 1948 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்
நிறுவனம், பொதுவாகத் தொழில் நிலையங்களுக்கு குறிப்பாக
நெசவாலை தொழிலுக்கும், சர்க்கரைத் தொழிலுக்கும் நீண்ட
கால நடுத்தரக்காலக் கடன்களை வழங்குகிறது. வட்டியில்லாப்
பங்குகளுக்கும் முன்னுரிமை பங்குகளுக்கும் உத்தரவாதமளிக்
கிறது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்
திரங்களுக்கு காலம் தாழ்த்தி தொகை செலுத்துவதற்கு உத்தர
வாதமளிக்கிறது. இந்நிறுவனம், தமிழ்நாட்டில், 1—7—1979
முதல் 31—12—1979 வரை, 6 திட்டங்களுக்கு ரூ. 4,74·61
இலட்சம் நிதி ஒப்பளித்துள்ளது. இக்காலப் பகுதியில், வழங்கப்
பட்ட நிதி உதவி ரூ. 160·95 இலட்சமாகும். இதில் முன்பு
ஒப்பளித்த நிதி உதவிகளும் அடங்கும்.

4. வர்த்தக வங்கிகளின் பங்கு.—தொழில்களுக்கு நிதிஉதவி
அளிப்பதில் வர்த்தக வங்கிகளும் பெரும் பங்கு வகிக்கின்றன.
வர்த்தக வங்கிகளில் 1974 ஆம் ஆண்டு டிசம்பரில் வைப்பீடாக
இருந்த தொகை ரூபாய் 81,915 இலட்சம் ஆகும். வைப்பீட்டுத்
தொகை 1978 ஆம் ஆண்டு டிசம்பர், 1979 ஆம் ஆண்டு மார்ச்சு
ஆகியவற்றில் முறையே ரூபாய் 1,80,612 இலட்சமாகவும்,
ரூபாய் 1,91,049 இலட்சமாகவும் (தற்காலிகமானவை) இருந்தன.
தமிழ்நாட்டிலுள்ள கூட்டுபங்கு நிறுவனங்களின் கடனீட்டுறுதி
பத்திரங்களின் அட்டவணையில் கண்ட வணிக வங்கிகள், பங்குத்
தொகையாக செய்துள்ள முதலீடு 1978 ஆம் ஆண்டு மார்ச்சு
திங்களில் ரூ. 136 இலட்சமாகவும் 1979 ஆம் ஆண்டு மார்ச்சு
திங்களில் ரூ. 376 இலட்சமாகவும் இருந்தது.

5. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி அளிக்கும் உதவி.—
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியானது கூட்டுறவுத் துறை
யிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கும், குறிப்பாகத் தொழில்
துறையில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கும், கூட்டுறவு
நூற்பு ஆலைகளுக்கும் நிதி உதவி அளித்து வருகிறது.

கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் சர்க்கரை ஆலைகளுக்கும் இவ்
வங்கி வழங்கிய காலக் கடன்களையும் அவைகள் திருப்பிச் செலுத்
தப்பட்ட தொகை குறித்த விவரங்களையும், இணைப்பு I-லுள்ள



அட்டவணையில் காணலாம். மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலை
களுக்கும், கூட்டுறவு நூற்பாலைகளுக்கும தமிழ்நாடு மாநில
கூட்டுறவு வங்கி வழங்கிய நடைமுறை மூலதனக் கடன்கள் பற்றிய
விவரங்களை, இணைப்பு II-லுள்ள அட்டவணையில் காணலாம்.

இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் (LIC).—நாட்டில்
ஆயுள் காப்பீடு தேசியமயமாக்கப்பட்ட பிறகு ஆயுள் காப்
பீட்டுச் சட்டம் 1956-ன்கீழ், 1956 ஆம் ஆண்டு இந்திய ஆயுள்
காப்பீட்டு நிறுவனம் சட்டரீதியிலான ஒரு தனி நிறுவனமாக
அமைக்கப்பட்டது. ஆயுள் காப்பீட்டு நடவடிக்கைகளைச் செயல்
படுத்துவதே இந்நிறுவனத்தின் முக்கிய பணியாகும்.

தொழில் வளர்ச்சியில் இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின்
பணி குறிப்பிடத்தக்கதாகும். மக்கள் பெரும்பான்மையோரின்
நீண்டகால சேமிப்புக்களை ஒருங்கு திரட்டுவதோடு, கவனமாகவும்
திட்டமிட்ட முறையிலும் முதலீடு செய்வதன்மூலம் இந்த நிதி
வாயில்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி நாட்டின் பொருளா
தார வளர்ச்சிக்கு உதவி புரிகிறது. 1979 ஆம் ஆண்டு மார்ச்சு
31 ஆம் நாள் முடிய, தென் மாநிலங்களில் இந்திய ஆயுள் காப்
பீட்டு நிறுவனம் "பிரிமியமாக" வசூலித்த வகையில் (மாநில
வாரியாக) கிடைத்துள்ள வருவாய் விவரங்கள் கீழே கொடுக்கப்
பட்டுள்ளன.

| மாநிலம். | தொகை (ரூபாய் ஆயிரத்தில்.) |
| --- | --- |
| | 642,186 |
| தமிழ்நாடு .. .. .. .. | 525,859 |
| கர்நாடகம் .. .. .. .. | 291,136 |
| கேரளா .. .. .. | 511,149 |
| ஆந்திரப் பிரதேசம் .. .. | |

இந்நிறுவனம் 1978–79 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள
தொழில்களில் செய்த முதலீடும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | (ரூபாய் ) இலட்சத்தில். |
| --- | --- |
| | 72·35 |
| (அ) மொத்த முதலீடு .. .. | |
| | 5·61 |
| (ஆ) நிகர முதலீடு ... .. .. | |

இணைப்பு —2

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி, சென்னை.

நடைமுறை மூலதன வசதி.

(ரூ. இலட்சத்தில்.)

| வரிசை எண்ணும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் பெயர்களும். | ஆலையின் பெயர். | வரையறை. | 31-12-1979 அன்று நிலுவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| நூற்பாலைகள் — | | | |
| 1 வேலூர் .. .. .. | வட ஆற்காடு .. .. | 75·00 | 15·00 |
| 2 சேலம் .. .. .. | சேலம் .. .. .. .. | 20·00 | .. |
| 3 கோயம்புத்தூர் .. .. .. | கோயம்புத்தூர் .. .. | .. | .. |
| 4 காஞ்சிபுரம் .. .. .. | காஞ்சிபுரம் காமாட்சியம்மன். .. .. .. | 60·00 | 54·65 |
| 5 தென் ஆற்காடு .. .. | தென் ஆற்காடு .. .. | 55·00 | இல்லை. |
| 6 கும்பகோணம் .. .. .. | தஞ்சாவூர் .. .. .. | .. | .. |
| 7 தஞ்சாவூர் .. .. .. | தஞ்சாவூர் .. .. .. | 55·00 | 19·15 |
| 8 திருச்சிராப்பள்ளி .. .. | திருச்சிராப்பள்ளி .. .. | 65·00 | 39·85 |
| 9 மதுரை .. .. .. | மதுரை .. .. .. | 75·00 | 30·00 |
| 10 இராமநாதபுரம் .. .. | திருவில்லிப்புத்தூர் .. .. | 60·00 | 34·99 |
| 11 திருநெல்வேலி .. .. | தென் இந்தியா .. .. | 100·00 | 21.00 |
| | திருச்செந்தூர். | 75·00 | 52·95 |
| 12 கன்னியாகுமரி .. .. | கன்னியாகுமரி .. .. .. | 55·00 | 18·44 |
| | | 695·00 | 286·03 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்.) | |
| சர்க்கரை ஆலைகள்— | | | |
| 1 வேலூர் .. | .. ஆம்பூர் .. | .. 385·00 | 2·00 |
| 2 வேலூர் .. | .. திருப்பத்தூர் .. | .. 295·00 | 20·00 |
| 3 வேலூர் .. | .. வேலூர் .. | .. 250·00 | .. |
| 4 சேலம் .. | .. சேலம் .. | .. 300·00 | .. |
| 5 தர்மபுரி .. | .. தர்மபுரி .. | .. 175·00 | .. |
| 6 காஞ்சீபுரம் .. | .. மதுராந்தகம் .. | .. 375·00 | 6·50 |
| 7 தென் ஆற்காடு .. | .. கள்ளக்குறிச்சி .. | .. 320·00 | 41·40 |
| 8 மதுரை .. | .. நேகுனைவ் .. | .. 300·00 | .. |
| 9 கோயம்புத்தூர் .. | .. அமராவதி .. | .. 325·00 | .. |
| | | 2725·00 | 69·90 |



## தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம். (சிப்காட்)

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) 1971-ம் ஆண்டில் தமிழக அரசுக்கே முழுவதும் சொந்தமாக வரையறுக்கப்பட்டதொரு பொது நிறுவனமாக ரூபாய் ஐந்து கோடி ஒப்பிய மூலதனத்துடன் தனியார் துறையில் நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறுவதற்கும், விரிவடைவதற்கும், இதுவரை இம்மாநிலத்தில் பின் தங்கியுள்ள பகுதிகளை விரைந்து தொழில்மயமாக்குவதற்குமான முக்கியக் குறிக்கோள்களுக்காக அமைக்கப்பட்டதாகும். இந்நிறுவனம் 1972 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒருங்கமைந்த முன்னேற்றத் திட்டத்துடன் தனது பணிகளைத் தொடங்கியது. அதில் இருந்து " சிப்காட் " நிறுவனம் கடந்த ஏழு ஆண்டுகளாக நடுத்தர, பெரிய தொழில்கள் முன்னேறவும், விரிவடையவும் ஆன பணிகளைச் சிறந்த முறையில் செய்து வருகிறது. 1980 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களின் கீழ் மொத்தம் ரூபாய் 4164.73 இலட்சம் உதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளதுடன், இதன் மூலம் 39,000 பேருக்கு மேல் மொத்த நேரடி வேலை வாய்ப்பை நல்கியுள்ளது. இந்நிறுவனத்தின் நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமாகத் கருதக்கூடியது, ஊக்குவிக்கப்பட்ட முதலீட்டில் பெரும்பகுதி இம்மாநிலத்தில் பின்தங்கிய பகுதிகளிலேயே பயன்படுத்தப்பட்டது என்பதாகும். இதுவரையில் அளிக்கப்பட்ட மொத்த உதவித் தொகையில் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு மட்டும் ரூபாய் 3,826 இலட்சம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் இம்மாநிலத்தின் பின்தங்கிய ஒன்பது மாவட்டங்களில் ஏதாவது ஒன்றிலோ, மற்றவற்றிலோ ரூபாய் 223 கோடிக்கு மேலாக முதலீடு செய்வதை ஊக்குவிக்கும்.

2. சிப்காட்டின் முக்கிய நோக்கம், நடுத்தர பெரிய தொழில்களுக்குத் திட்டமிடுதலும், முன்னேறச் செய்வதும், விரிவாக்கு

தனும் ஆகும். இந்நிறுவனத்தின் வளர்ச்சிப் பணிகள் பின்
வருமாறு :—

(அ) புதிய தொழில் முனைவோர்கள் பயனடையும் வகை
யில் ஊக்கச் சலுகைத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

(ஆ) இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய
மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட
இடங்களிலுள்ள தொழில் பகுதிகளை மேம்படுத்தி நியாய விலை
யிலும், சுலப தவணை முறையில் செலுத்தும் வகையிலும் மேம்
படுத்தப்பட்ட நிலங்களை வழங்குவது.

(இ) இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதி வழங்
கும் திட்டத்தின் கீழ் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு
நிதி உதவி அளிப்பது.

(ஈ) தொழில்களுக்கான ஊக்கச் சலுகைத் திட்டங்களைச்
செயல்படுத்த தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு துணை
யுதவிப் பணிகள் செய்தல்.

3. சிப்காட் செயல்படுத்திவரும் பல்வேறு உதவித் திட்டங்
களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(அ) ஊக்கச் சலுகை முனைப்புத் திட்டம்;—தொழில்
தொடங்கும் ஆய்வுக்கு உதவித் தொகை ஆதாயமளிக்கும்
தொழில் திட்டங்களைக் கண்டறிவதற்கான வாய்ப்புக் கூறுகள்
பற்றிய ஆய்வுகளை, சிப்காட் தொழில் முனைவோர்களுக்குச்
சலுகை விலையில் அளிக்கிறது.

31—3—1980 வரையில் 36 ஆய்வுகள் மேற்கொள்ளப்
பட்டு, இவற்றில் 27 அறிக்கைகள் தொழில் முனைவோருக்கு
வழங்கப்பட்டன. 1979-80ஆம் ஆண்டுகளில்தான் முன் முதலீட்டு
ஆய்வுகள் தொடங்கப்பட்டன. மேற்கண்ட ஆய்வுக்காக
1980-81ஆம் ஆண்டிற்கு ரூபாய் 2.50 இலட்சம் வரவு செலவுத்
திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.



(ஆ) வட்டியில்லா விற்பனை வரிக்கடன்.—ஊக்கச் சலுகை
தீவிரத் திட்டத்தின் முக்கிய அங்கமாய் வட்டியில்லா விற்பனை
வரிக்கடனை மாநில அரசின் சார்பில் சிப்காட் நிறுவனம் வழங்கி
வருகிறது. இம்மாநிலத்தின் பின்தங்கிய 9 மாவட்டங்கள் ஏதா
வது ஒன்றிலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலை நகர்
தொழில் இணையத்திலும், மற்றும் குன்னத்தூர் வட்டாரத்திலும்
(ஒரு இலட்சமும் அதற்கு மேலேயும் மக்கள் தொகை உள்ள
நகரங்கள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, நகர்ப்பகுதி
களைச் சுற்றிலும் 8 கிலோ மீட்டர் வரை உள்ள பகுதிகளைத்
தவிர) தொடங்க இருக்கும் நடுத்தர அல்லது பெரிய தொழில்
நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கப்படும்.
இத்திட்டம் இரு பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதி
திட்டத்தின் கீழ் தற்போது செயல்படும் தொழில் நிறுவனம்
கணிசமான அளவுக்குத் தொழிலை விரிவுபடுத்தும்போதோ, வேறு
பிரிவுகளாகப் பெருக்கும்போதோ இச்சலுகை கிடைக்கும். அத்
தொழிற்சாலைகள் கடன் கோரி விண்ணப்பம் செய்து கொள்ளும்
ஆண்டுக்கு முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை
வரித் தொகை அளவுக்கோ விரிவுபடுத்தப்படும் அல்லது பல
பிரிவுகளாகப் பெருக்கப்படும் திட்டத்தில் நிலையான இருப்பு
களில் 25 சதவீதத்துக்கோ அல்லது ரூபாய் 15 இலட்சத்துக்கோ
நடுத்தர, பெரிய தொழில்களுக்கும், சிறிய தொழிலிலிருந்து
நடுத்தர தொழிலாக விரிவுபடுத்தும்போது ரூபாய் 7.50 இலட்சத்
துக்கோ (எந்தத் தொகை குறைவோ அந்தத் தொகைக்கு மேற்
படாமல்) விற்பனை வரிக் கடன் தொகை உதவிஅளிக்கப்படுகிறது.
கடன் தொகை வழங்கப்பட்ட தேதியிலிருந்து 6 ஆண்டுகள்
முடிந்த பிறகு 3 ஆண்டுத் தவணைகளில் சம தொகைகளாக
வட்டி இன்றி இந்தக் கடன் தொகைகளை திருப்பியடைக்க
வேண்டும்.

மேலே கூறப்பட்ட பின் தங்கிய பகுதிகளில் நிறுவப்படும்
புதிய தொழில்கள் இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் வரும்.
இத்திட்டத்தின் கீழ் நிறுவப்படவுள்ள புதிய தொழிற்சாலை
களுக்கு அவை உற்பத்திப் பணிகளை மேற்கொள்ளும் முதல் ஆறு
ஆண்டுக் காலத்திற்கு ஆண்டு தோறும் வட்டியில்லா விற்பனை
வரிக் கடன் முந்திய ஆண்டில் செலுத்திய விற்பனை வரித்

தொகைக்குச் சமமானதாகவும் நிலையான
சதவிகித அளவுக்கோ அல்லது ரூபாய் 8 இருப்புகளில் 8
தொகை குறைவோ அந்தத் தொகைக்கு இலட்சத்திற்கோ எந்தத்
கப்படும். இந்தக் கடன் கால் ஆண்டுக்கு அதிகப்படாமல் அளிக்
படையில் வழங்கப்படும். கடன் வழங்கப்பட்ட ஒரு முறை என்ற அடிப்
பிறகு ஆறு சம ஆண்டுத் தவணைகளில் 9 ஆண்டுகளுக்குப்
திருப்பி செலுத்தப்பட வேண்டும். வட்டி எதுவுமின்றி

வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கும்
சலுகைத் திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் துவங்கியதிலிருந்து 1980 ஊக்கச்
ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் தேதி வரை 80 தொழில்
நிறுவனங்களுக்கு மொத்தம் ரூபாய் 802.66 இலட்சத்துக்கு
ஒப்புதல் அளித்து அதில் ரூபாய் 700.68 இலட்சம் வழங்கப்
பட்டுள்ளது. நடப்பு ஆண்டு 1980–81-ல் ரூபாய் 290 இலட்சம்
இத்திட்டத்தின் கீழ் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கடந்த எட்டு ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை
யும் வழங்கப்பட்ட தொகையும்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.

| ஆண்டு. (1) | முதல் பிரிவு. (2) | இரண்டாம் பிரிவு. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972-73 .. | 79.19 | .. | 79.19 |
| 1973-74 .. | 57.72 | .. | 57.72 |
| 1974-75 .. | 73.63 | .. | 73.63 |
| 1975-76 .. | 2.10 | 0.72 | 2.82 |
| 1976-77 .. | 49.13 | 29.72 | 78.85 |
| 1977-78 .. | 52.60 | 58.88 | 111.48 |
| 1978-79 .. | 59.19 | 94.00 | 153.19 |
| 1979-80 .. | 105.52 | 140.26 | 245.78 |
| மொத்தம் .. | 479.08 | 323.58 | 802.66 |







வழங்கப்பட்ட தொகை.

| ஆண்டு. (1) | முதல் பிரிவு. (2) | இரண்டாம் பிரிவு. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972-73 .. | 12.19 | .. | 12.19 |
| 1973-74 .. | 31.56 | .. | 31.56 |
| 1974-75 .. | 91.48 | .. | 91.48 |
| 1975-76 .. | 57.60 | .. | 57.60 |
| 1976-77 .. | 48.32 | 30.26 | 78.58 |
| 1977-78 .. | 35.19 | 56.04 | 91.23 |
| 1978-79 .. | 56.80 | 96.24 | 153.04 |
| 1979-80 .. | 47.26 | 137.74 | 185.00 |
| | 380.40 | 320.28 | 700.68 |

மாநில அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி ஆண்டு வரிசையாக.

| ஆண்டு. | தொகை. (இலட்சத்தில்.) |
|---|---|
| 1972-73 .. .. .. .. .. | 23.18 |
| 1973-74 .. .. .. .. .. | 40.00 |
| 1974-75 .. .. .. .. .. | 74.66 |
| 1975-76 .. .. .. .. .. | 75.00 |
| 1976-77 .. .. .. .. .. | 75.00 |
| 1977-78 .. .. .. .. .. | 100.00 |
| 1978-79 .. .. .. .. .. | 150.00 |
| 1979-80 .. .. .. .. .. | 180.00 |
| மொத்தம் .. | 717.84 |

இ. நிலையான இருப்புகள் மீது உதவித் தொகை.—மத்திய
அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும்
திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு 1972 பிப்ரவரியில் சிப்
காட்டிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இம்
மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 33 பின் தங்கிய வட்டங்
களில் நிறுவப்படும் எந்த ஒரு தொழிற் பிரிவு அதன் நிலையான
முதலீட்டில் (நிலம் கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள்) 15
சதவீதத்தை நேரடி மானியமாக அல்லது மானியமாகப் பெற
தகுதியுள்ளதாகும். தொழில் முன்னேற்றம் அடைந்த பகுதியி
லிருந்து முன்னேற்றம் காணாத முன்பு கூறப்பட்ட பகுதிகளுக்கு
கருவிகள் தளவாடங்கள் மாற்றப்பட்ட போதிலும், அந்தத்
தொழில் பிரிவுகள் கூட 15 சதவீத உதவித் தொகை பெறத்
தகுதியுடையனவாகும். ஒவ்வொரு தொழிற் பிரிவு பெறத்தக்க
மானியத்தின் உச்ச வரம்பு ரூபாய் 15 இலட்சம் என நிர்ணயிக்கப்
பட்டுள்ளது. உற்பத்தி தொடங்குவதற்கு முன்பாக மானியத்தின்
85 சதவீதத் தொகையும் உற்பத்தி துவங்கிய பின்புமீதித் தொகை
யும் வழங்கப்படும்.

இந்நிறுவனம் துவக்கத்திலிருந்து 1980 ஆம் ஆண்டு மார்ச்
திங்கள் 31 ஆம் தேதி வரையில் இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 321.18
இலட்சம் 1,336 சிறு தொழில் நிறுவனங்களுக்கும், ரூபாய்
1,576.93 இலட்சம் 250 நடுத்தர பெரிய தொழில் நிறுவனங்
களுக்கும் உதவித் தொகையாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
1979-80 ஆம் ஆண்டில் ரூபாய் 274.04 இலட்சம் வழங்கப்
பட்டது. ரூபாய் 165.57 இலட்சம் ஈட்டுத் தொகையாகத்
திருப்பிக் கொடுக்கப்பட்டது. இவைகளின் ஆண்டு குறியீடு
முறையே ரூ. 250 இலட்சம் மற்றும் ரூ. 230 இலட்சமும் ஆகும்.
1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி
ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை வழங்கப்பட்ட தொகை
மற்றும் மத்திய அரசிடமிருந்து பெற்ற ஈட்டுத் தொகை பற்றிய
விவரங்கள் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டு
1980-81-ல் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட தொகை வழங்கப்பட்ட
தொகை மற்றும் மத்திய அரசிடமிருந்து பெற்ற ஈட்டுத் தொகை
ஆகியவற்றின் தனி இலக்குகள் ரூ. 250 இலட்சமாக இருக்கும்



என்று எதிர்பார்க்கப்படுகிறது. முந்தைய ஆண்டு 1979-80
ஆண்டைப் போலவே சிப்காட்டின் தனி குறியீடு ரூபாய்
200 இலட்சமாக இருக்கும்.

மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை
வழங்கும் திட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக மொத்தத்
தொகையிலும், ஒவ்வொரு ஆண்டும் பெறும் ஈட்டுத் தொகையி
லும், மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடுதான் தொடர்ந்து
முதல் இடம் வகித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் வரை ரூ.
179.29 இலட்சம் ஈட்டுத் தொகையாக மாநிலக் குழுவின் பார்வை
யில் கேட்புரிமை செய்யப்பட்டு மத்திய அரசிடம் நிலுவையில்
உள்ளது. 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் நிலவரப்
படி இந்த 179.29 இலட்சத்தையும் சேர்த்து ஆக மொத்தம்
ரூ. 221.40 இலட்சம் ஈட்டுத் தொகை மத்திய அரசிடம் நிலுவை
யில் உள்ளது.

(ஈ) நேரடி நிதி உதவி—(i) தவணைக்கடன்.—கடந்த
எட்டு ஆண்டில் சிப்காட் ஒப்புதல் அளித்த தவணைக்கடன் மற்றும்
வழங்கிய தவணைக் கடன் உதவி கீழ்க் கண்ட அட்டவணை
களில் காணலாம்:—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | நிகர செல்லுபடி யாகத் தக்கது. | வழங்கப் பட்டது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1972-73 .. | 108.50 | .. | 108.50 | 26.11 |
| 1973-74 .. | 197.89 | 7.55 | 190.34 | 33.90 |
| 1974-75 .. | 191.28 | 7.99 | 183·29 | 117.61 |
| 1975-76 .. | 27.08 | 7.25 | 19·83 | 162.87 |

(ரூபாய் இலட்சத்தில்)

| (1) | (2) | (3) | (4) | (5) |
| --- | --- | --- | --- | --- |
| 1976-77 .. | 140.75 | 47.25 | 93.50 | 82.15 |
| 1977-78 .. | 340.55 | 69.48 | 271.07 | 123.82 |
| 1978-79 .. | 233.96 | 10.00 | 223.96 | 141.85 |
| 1979-80 .. | 580.50 | 12.74 | 567.76 | 296.61 |
| மொத்தம் .. | 18,20.51 | 162.26 | 16,58.25 | 984.92 |

1975-76 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், 1976-77 ஆம் ஆண்டு முதல் அளிக்கப்பட்ட நிகர ஒப்புதல் கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளது என மேலே உள்ள அட்டவணையிலிருந்து வெளிப்படையாகத் தெரிய வருகிறது. இவ்வகையில் மறுநிதி உதவி அளித்த இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் உதவி பாராட்டப்பட வேண்டியது ஒன்றாகும். ஒப்பளிப்பு மற்றும் வழங்குதல் ஆகியவற்றின் 1980-81 ஆம் ஆண்டிற்கான குறியீடு முறையே ரூபாய் 1,200 இலட்சம் மற்றும் ரூ. 600 இலட்சம் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய தொழிற் வளர்ச்சி வங்கியின் மறுநிதியுதவித் திட்டத்தின் கீழ் சிப்காட்டின் வரையறையான ரூ. 750 இலட்சத்தில் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் நிலவரப்படி ரூபாய் 542.40 இலட்சத்தை எட்டிவிட்டது.

நீண்டகால நிலுவைத் தொகையைத் திரும்பப் பெறுதல் என்ற நிலை 1979-80-ன் தொடக்கத்தில் இருந்த 54.54 சதவீதத்தை விட படிப்படியாக அதிகரித்து 1980ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் நிலவரப்படி 65.51 சதவீதமாக உயர்ந்துள்ளது. சிப்காட் நிர்வாகக் குழுவின் துணைக்குழு மாதாந்திர நிலுவை பார்வைக் கூட்டங்களில் நிலுவைகளைப் பரிசீலனை செய்து நட



வடிக்கை எடுத்ததாலும், மற்றும் தொழில் நிறுவனங்களின் ஒத்துழைப்பினாலும் கணிசமான முன்னேற்றம் அடைய முடிந்தது. 1980ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் நிலவரப்படி நிலுவைத்தொகை வசூல் ரூபாய் 141.95 இலட்சம் என்பது மொத்த நிலுவைத் தொகை ரூபாய் 894.88 இலட்சத்தில் 15.86 சதவீதம் ஆகும். மேலும் 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் வரை 56.02 சதவீதமும் 1979ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30ஆம் நாள் வரை 56.63 சதவீதமும், 1979ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30ஆம் நாள் வரை 58.24 சதவீதமும், 1979ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31ஆம் நாள் வரை 61.04 சதவீதமும் மற்றும் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் வரை 63.51 சதவீதமும் ஆக நிலுவைத் தொகையைத் திரும்பப் பெறுவதில் சீரான முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

(ii) <u>உத்திரவாதமளித்தல்/நேரடி சந்தா.</u>— பொறுப்புகளுக்கு உத்திரவாதம் அளித்ததின் விளைவாக அல்லது நேரடி சந்தா வாயிலாக, கடந்த எட்டு ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட உத்திரவாத வசதிகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டவை. எடுத்துக் கொள்ளப்பட்ட பங்குகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டவை. | பொது மக்களுக்கு வழங்கப் பட்டவை. | நேரடி சந்தாவுக்கு கோரிக்கை பங்குகள். |
| --- | --- | --- | --- | --- |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| 1972-73 .. | 23.20 | .. | .. | .. |
| 1973-74 .. | 24.30 | .. | 33.20 | .. |
| 1974-75 .. | 5.00 | .. | 2.50 | 0.55 |
| 1975-76 .. | 16.50 | .. | 3.00 | 1.29 |
| 1976-77 .. | 11.00 | 18.50 | 2.00 | 2.00 |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 1977-78 .. | 16.00 | 13.30 | 1.50 | 1.13 |
| 1978-79 .. | 5.00 | .. | 5.00 | 0.37 |
| 1979-80 .. | 6.20 | 2.50 | 13.00 | 1.53 |
| மொத்தம். | 107.20 | 34.30 | 60.20 | 6.87 |

நடப்பு ஆண்டு 1980-81ல் உத்திரவாதமளித்தல் மற்றும் நேரடி சந்தா வழங்குதல் வகையில் ரூ. 25 இலட்சம் வரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(iii) <u>இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டம்.</u>—ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டத்தின் கீழ் தங்களது முதல், நடுத்தர தொழிலை நிறுவும் தொழில் நுட்ப தொழில் அனுபவ தொழில் முனைவோர்களுக்கு இந்திய தொழில் வளர்ச்சிகளின் முதல், நடுத்தர தொழில் திட்டத்திற்கு வங்கியானது, திட்டச் செலவில் 10 சதவீதம் வரையில் நிதியுதவி அளிக்கிறது. சிப்காட் நிறுவனம் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் ஏஜெண்ட் என்ற முறையில் 1980ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் அன்று ரூபாய் 26.05 இலட்சம் அளவுள்ள தொகையை ஆறு தொழில் நிறுவனங்களுக்குஏற்கனவே அனுமதி அளித்துள்ளது.

நடப்பு ஆண்டு 1980–81ல் ஒப்பளிப்பு தொகை ரூபாய் 50·00 இலட்சமாகவும் வழங்கும் தொகை ரூபாய் 40·00 இலட்ச மாகவும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1979ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் நாள் முதல் தவணைக் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிறுவனங்களில் ஆரம்ப மூலதன நிதியுதவி பெற தகுதியுள்ள நிறுவனங்களிடமிருந்து ஆய்வுத் தொகை ஏதும் இனி பெற வேண்டியது இல்லை என்று சிப்காட் நிர்வாக குழு தீர்மானித்துள்ளது.



இச்சலுகையினால் பொறியியல் வல்லுனர்களும் மற்றும் தொழில் திறமை வாய்ந்தவர்களுக்கும் பெரும் உதவியாக இருப் பதுடன் தங்களின் முதல் நடுத்தர தொழில் தொடங்கவும்முடியும். இத்திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளித்தலிலும் வழங்குதலிலும் அடைந்த முன்னேற்றம் கீழ்க்கண்ட அட்டவணையின் மூலம் அறியலாம்.

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை. | வழங்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (இலட்சத்தில்.) | |
| 1977–78 .. .. .. | 4·00 | .. |
| 1978–79 .. .. | 9·15 | 4·00 |
| 1979–80 .. .. .. | 12·90 | 21·47 |
| | 26·05 | 25·47 |

(iv) <u>தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்க்கு அளிக்கப்படும் சலுகைகள்.</u>—தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்க்கு 1979ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் நாள் முதல் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கி ஊக்குவிக்க சிப்காட் நிறுவனம் முடிவு செய்துள்ளது—

(அ) மாநிலத்தில் எந்த இடத்தில் தொழில் ஆரம்பித் தாலும் தொழில் முனைவோர் தொழிற்சாலை ஆரம்பிக்க ஆகும் மொத்தச் செலவில் 15 சதவீதத்தைத் தங்களது மூலதனமாகக் கொண்டு வந்தால் போதுமானதாகும். (இதுவே முன்பு பின் தங்கிய பகுதிகளில் 17·5 சதவீதமாகவும் முன்னேறிய இடங்களில் 20 சதவீதமாகவும் இருந்தது.)

(ஆ) உத்திரவாதமளித்தல் நேரடி சந்தா ஆகிய நிதி உதவிகளையும் மேற்படி தொழில் முனைவோர்களின் திட்டங்களுக்கு முடிந்த அளவு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்காக வழங்கப்படும் கடன் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 8 சதவீதம் வட்டியும் ஏனைய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு 11 சதவீத வட்டியும் வசூலிக்கப்படும். இவ்வட்டிச் சலுகை ஆண்டொன்றுக்கு சுமார் $1\frac{1}{2}$ சதவீதமாகும்.

(ஈ) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்கள் தங்கள் தொழில் பற்றிய முன் முதலிட்ட ஆய்வு அறிக்கை பெற 25 சதவீதம் மட்டுமே முன் பணமாகச் செலுத்தினால் போதுமானது. இதுவே மற்ற தொழில் முனைவோர்களுக்கு 50 சதவீதமாகும்.

**வளர்ச்சி மையங்கள்:**

| (1) | 1980ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் நாள்வரை முன்னேற்றம். மேம்படுத்தப் பட்ட பரப்பு. (2) ஏக்கரில். | 1980ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் நாள்வரை முன்னேற்றம். மூலதனச் செலவு. (3) இலட்சத்தில். |
|---|---|---|
| 1 இராணிப்பேட்டை .. | 729·78 | 114·00 |
| 2 ஓசூர் .. .. .. | 1,071·97 | (20·00) (வீ) 117·50 |
| 3 தூத்துக்குடி .. .. | .. | .. |
| 4 புதுக்கோட்டை மாவட்டம் | .. | .. |
| 5 இராமநாதபுரம் மாவட்டம் | .. | .. |



| | ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றம். (4) மேம்படுத்தப் பட்ட பரப்பு. (ஏக்கரில்) | ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றம். (5) மூலதனச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1 இராணிப்பேட்டை .. | 20·00 | .. |
| 2 ஓசூர் .. .. .. | 160·00 | 19·00 |
| 3 தூத்துக்குடி .. .. | 491·16 | 140·00 |
| 4 புதுக்கோட்டை மாவட்டம் | 176·28 | 190·00 |
| 5 இராமநாதபுரம் மாவட்டம் | 494·00 | 190·00 |

குறிப்பு—(வீ) வீட்டு வசதி.

(i) இராணிப்பேட்டை.—அரசு 729·78 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி அதை சிப்காட் நிறுவனத்திற்குகொடுத்து ஒதுக்கப்படுவதற்காக இருந்த நிலப்பகுதி 551·23 ஏக்கர் ஆகும். அதில் 85 மனைகள் இருந்தன. அதில் 401·05 ஏக்கர் பரப்பளவு கொண்ட 48 மனைகள் 43 தொழில் முன்னவர்களுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளன. ஒதுக்கப்பட்டதில் 30 தொழில் நிறுவனங்கள் தங்கள் கட்டுமான வேலைகளை முடித்து உற்பத்தியைத் துவங்கி விட்டன. மிஞ்சிய 9 தொழில் நிறுவனங்கள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.

(ii) ஓசூர்.—1,153 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் அரசினால் கைப்பற்றப்பட்டு சிப்காட்டுக்குக் கொடுக்கப்பட்டது. 1,010 ஏக்கர் அமைந்துள்ள 151 மனைகள் ஒதுக்கீடு செய்வதற்காகக் கிடைத்துள்ளன. அதில் 594 ஏக்கர் பரப்புள்ள நிலம் 11 தொழில் முனைவோர்க்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 16 தொழில்

நிறுவனங்கள் தங்கள் கட்டுமான வேலைகளை முடித்துத்
உற்பத்தியை துவங்கி விட்டன. மிஞ்சிய 16 தொழில் நிறுவனங்கள்
பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.

உட்புறச்சாலைகள் மற்றும் இணைப்புச்சாலைகள் எல்லாம்
முடிவடைந்து விட்டதால் தொழில் முனைவோர் தங்கள்
தொழில் தொடங்க எந்த மனைப் பிரிவை வேண்டுமானாலும்
தேர்ந்தெடுத்துச் கொள்ளும் வாய்ப்புள்ளது. தற்போது சுமார்
320 ஏக்கர் பரப்புள்ள மனையைக் கோரி வந்துள்ள 28
விண்ணப்பங்கள் சிப்காட்டின் பார்வையில் உள்ளன. ஆரம்ப
இன்னும் மேம்படுத்தப்பட்டு விற்பனைக்குத்தயாராக உள்ள நிலம்
416 ஏக்கர் பரப்பாகும். இந்நிலையை வைத்துப் பார்க்கும்போது, இங்கு
மீதம் உள்ள மனைப் பிரிவுகளை விற்பதில் எந்த தடையும்
இருக்காது. அவைகளை மிகக்குறுகிய காலத்தில் விற்பனை செய்து
விடலாம்.

போதிய சமூக வசதிகளைச் செய்து தர வேண்டியது
சிப்காட்டின் பெரும் பொறுப்பாகும். முக்கிய தேவையான
வீட்டு வசதி, தொழில் முனைவோர்க்கும் அவர்தம் ஊழியர்க்கும்
அளிக்க வேண்டிய முக்கிய வசதியான வீட்டு வசதிக்காக சிப்காட்
நிறுவனம் சுமார் 33·4 ஏக்கர் பரப்பு நிலம் தேசிய நெடுஞ்
சாலைக்குத் தெற்குப் புறமாக ஒதுக்கி சுமார் 281 மனைப் பிரிவு
களாகப் பிரித்து மனை ஒன்று ரூபாய் 3,500 என்று விற்பனை
செய்யப்பட்டுள்ளன. இம்மனைப் பிரிவுகளுக்கு உள்ளூர் மக்க
ளிடம் பெரும் வரவேற்பு இருந்தது மட்டுமில்லாமல் எல்லா
மனைப் பிரிவுகளுமே விற்று விட்டன. சிப்காட் நிறுவனம்
ஆயுள்காப்பீட்டு கழகத்திடம் வீடு கட்ட கடன் தரும் திட்டத்தை
இவ்விடத்தார்க்கு விஸ்தரிக்க கோரி வேண்டிக்கொண்டதற்
கிணங்க ஆயுள்காப்பீட்டுக் கழகமும் தக்க நடவடிக்கை எடுத்து
அது முடியும் கட்டத்தில் உள்ளது. சிப்காட்டின் சீரிய
முயற்சியால் ஓசூருக்கு ஒரு புதிய வளர்ச்சி குழுமம் ஒன்றும்
அரசினால் அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் தபால் அலுவலகம்,
முதல் சிகிச்சை நிலையம், தொலைபேசி வசதி, வங்கி, மற்றும்
சிற்றுண்டிசாலை போன்ற எல்லா வசதிகளையும் சிப்காட்
நிறுவனம் அளித்துள்ளது.



விரைவில் தீயணைப்பு நிலையமும் போலீஸ் நிலையமும்
அமைக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(iii) ஏனைய வளர்ச்சி நிலையங்கள்.— இராமநாதபுரம்
மாவட்டத்தில் மானாமதுரையிலும், புதுக்கோட்டை மாவட்
டத்தில் நத்தம்பண்ணை கிராமத்திலும் புதிய தொழில்
இணையங்கள் துவங்க அரசு அனுமதி அளித்துள்ளது. நில
ஆர்ஜிதம் செய்ய அரசின் அனுமதி கோரி நடவடிக்கைகள்
எடுக்கப்பட்டு மாவட்ட ஆட்சியாளரை நடவடிக்கை எடுக்கவும்
கோரப்பட்டுள்ளது.

இன்னும் மூன்று மாத காலத்தில் எல்லா நடவடிக்கைகளும்
பூர்த்தியாகி சிப்காட்டிடம் நிலம் ஒப்படைக்கப்படும் என்று
எதிர் பார்க்கப்படுகிறது. மானாமதுரையில் உள்ள புறம்போக்கு
நிலங்கள் உடனடியாக சிப்காட்டிற்கு மாற்றித் தரும்படி
இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளரைக் கேட்டுக்கொள்ளப்
பட்டுள்ளது.

மானாமதுரையில் இரண்டு இலட்சம் காலன் தண்ணீர்
பெறும் வகையில் 11 குழாய் கிணறுகளை பொதுப்பணித்துறையின்
நில நீர்க்கழகம் கண்டு அமைக்கத் திட்டமிட்டுள்ளது.
மேலும் விவரமான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டையில் நீர்வளம்பற்றி குடி நீர் மற்றும்
வடிகால் வாரியமும் ஆய்வு நடத்தி அனுப்பிய அறிக்கைகள்
சிப்காட்டின் பரிசீலனையில் உள்ளது.

சிப்காட்டின் தலைவர் மற்றும்
(iv) தூத்துக்குடியில் அதிகாரிகள் ஆய்வுக்குப் பிறகு
தொழில் பணி இலாகாவின் உயர் முடிவெடுக்கப்பட உள்ளது.
தக்க இடத்தினைத் தெரிந்து எடுத்து முடிவெடுத்த பின்
எந்த இடம் என்பது திட்டவட்டமாக நிலத்தை ஆர்ஜிதம்
தூத்துக்குடி தொழில் இணையத்திற்கான இவைகள் தவிர
செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். அருகாமையில்
மதுரைக்கு அருகாமையில் ஒன்றும், திண்டுகல்லுக்கு
ஒன்றும் தொழில்இணையங்கள் அமைக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

நெய்வேலியல் கிடைக்கும் பெருவாரியான தண்ணீரைப் பயன்
படுத்தும் வகையல் ஒரு இரசாயன தொழில் இனையம் ஒன்று
நெய்வேலியில் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சிப்காட்டின் நிர்வாகக் குழு மதுரை மாவட்டத்திலும்
மற்றும் நெய்வேலியிலும் தொழில் இனையங்கள் அமைக்க
அனுமதி அளித்துள்ளது. ஏனைய இடங்களில் திட்டவட்டமான
இடங்கள் தெரிந்தெடுக்கப்பட்டவுடன் விரைவில் அரசின் அனுமதி
பெறப்படும்.

(v) மாநில அரசின் நிதியுதவிகள்.—1979–80ஆம் ஆண்டிற்கு
மாநில அரசு ரூபாய் 25·00 இலட்சம் சமபங்கு மூலதனமாகவும்
ரூபாய் 180·00 இலட்சம் வட்டியில்லா விற்பனை வரிக் கடன்
திட்டத்திற்காகவும் ஒதுக்கியுள்ளது. இது தவிர 1979–80ஆம்
ஆண்டிற்கு ரூபாய்15·00 இலட்சம் தவணைக் கடனாகவும் ஒதுக்கி
யுள்ளது. மத்திய அரசின் திருப்பியளிக்கும் நிதியின்கீழ் மத்திய
அரசின் மான்யம் அளிக்கும் வரை மாநில அரசு ரூபாய் 100·00
இலட்சம் கடனுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. நடப்பு ஆண்டு
1980–81-ல் மாநில அரசு சமபங்கு மூலதனமாக ரூபாய் 50·00
இலட்சமும், வட்டியில்லா விற்பனை வரிக் கடன் திட்டத்தின்கீழ்
ரூபாய் 225·00 இலட்சமும் சிப்காட்டிற்கு ஒதுக்கியுள்ளது.

(vi) புதிய வழி முறைகளில் எல்லா வசதிகளையும் தொழில்
இணையத்திற்கு அளித்தல்.—தண்ணீர், சாலை மற்றும்
மேம்படுத்தப்பட்ட நிலம் தவிர வீட்டு வசதி, ஓட்டல், பொழுது
போக்கு இல்லம், ஊழியர்களுக்குத் தொழிற் பயிற்சி நிலையம்,
கடைகள் மற்றும் பள்ளிகள் போன்ற எல்லா வசதிகளும்
ஏற்படுத்தப்படும்.

(vii) ஆதாய விரய கணக்கு முடிவு.—கடந்த 1978-79 ஆம்
நிதியாண்டில் எல்லாச் செலவினங்களும் தேய்மானங்களும் போக
நிகர லாபம் ரூபாய் 15,33,461 ஆக இருந்தது. 1979–80ஆம்
நிதியாண்டில் நிகர லாபம் அதிகமாக இருக்க வாய்ப்பிருக்கிறது.
கடுமையான நிதி நிர்வாகத்தினாலும் மற்றும் கட்டுப்
பாட்டினாலும் இந்தக்கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.



இணைப்பு இரண்டில், ஒவ்வொரு திட்டத்தின்கீழும் அளிக்கப்
பட்ட நிதியுதவி பற்றி விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

(அ) 1979–80ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும்
வழங்குதலில் கண்ட முன்னேற்றம்.

(ஆ) 1980–81ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும்
வழங்குதல் பற்றி திட்ட குறியீடுகள்.

(viii) வேலை வாய்ப்பு.—1979–80ஆம் ஆண்டில் வேலை
வாய்ப்பு பெற்ற 6,800 பேர்களையும் சேர்த்து 1980ஆம் ஆண்டு
மார்ச்சு மாதம் 31ஆம்நாள் முடிய சுமார் 39,000 பேர்கள் வேலை
வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.
நடப்புஆண்டு 1980–81-ல் மேலும்10,500 பேர்களுக்குப் பல்வேறு
திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

இதுவரை ஏற்படுத்திய வேலை வாய்ப்புகளும் இனி ஏற்படுத்த
இருக்கும் வேலை வாய்ப்புகளும் ஆண்டு வாரியாக:

| ஆண்டு. | வேலை பெற்றவர்கள் எண்ணிக்கை. |
|---|---|
| 1978–79 ... .. .. | 7,800 |
| 1979–80 ... .. .. | 6,800 |
| 1980–81 ... .. .. | 10,500 |

## இணைப்பு 1.

### மத்திய மூலதன உதவித் தொகை திட்டம், 1971.

அ. ஒப்புதல் அளிக்கப்பட்டவை—

(ரூபாய் இலட்சத்தில்.)

| ஆண்டு. | நடுத்தர பெரிய தொழில்கள். | | சிறு தொழில்கள். | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|
| | எண். | தொகை. | எண். | தொகை. | எண். | தொகை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 31–3–1978 வரை .. .. | 154 | 9,75·89 | 748 | 1,79·47 | 902 | 11,55·36 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 46 | 2,84·04 | 182 | 62·85 | 228 | 3,46·89 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 50 | 3,17·00 | 406 | 78·86 | 456 | 3,95·86 |
| துவக்கத்திலிருந்து 31–3–1980 வரை. | 250 | 1,576·93 | 1,336 | 321.18 | 1,586 | 18,98.11 |



ஆ. வழங்கப்பட்டவை—

| ஆண்டு. | நடுத்தர பெரிய தொழில்கள். | சிறு தொழில்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 31–3–1978 வரை .. .. .. | 6,18·43 | 1,51·62 | 7,70·05 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 1,76·03<br>2·24* | 30·09 | 2,06·12<br>2·24** |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் வரை .. | 2,32·26 | 41·78 | 2,74·04 |
| துவக்கத்திலிருந்து 31–3–1980 வரை .. | 10,28·96 | 2,23·49 | 12,52·45 |

இ. மத்திய அரசிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொண்டவை—

| ஆண்டு. | சிப்காட். | சிப்காட், சிட்கோ, டிஐஐசி, ஐஎப்சிஐ, ஐடிபிஐ மற்றும் ஐசிஐசிஐ. அனைத்து நிதி நிறுவனங்கள். |
|---|---|---|
| 31–3–1978 வரை .. .. .. .. | 5,01·83 | 6,13·59 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை .. .. | 1,61·50 | 2,29·63 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை .. .. | 1,25·54 | 1,65·57* |
| துவக்கத்திலிருந்து 31–3–1980 வரை .. .. | 7,88·87 | 10,08·79 |

குறிப்பு : *வருடாந்திர குறிக்கோள் 2,50·00 இலட்சம்.
**1978–79 ஆம் ஆண்டிலே வழங்கப்பட்ட தொகை டிஐஐசி-ஆல் வழங்கப்பட்ட தொகை இப்பொழுது சேர்க்கப்பட்டுள்ளது.

## இணைப்பு 2.

### 1979–80 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வளர்ச்சியின் சுருக்கமும் 1980–81 ஆம் ஆண்டின் திட்ட இலக்கும்.

| தொடர் எண்ணும், திட்டமும். | 1979–80 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வளர்ச்சி. | 1980-81 ஆம் ஆண்டில் திட்ட இலக்கு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| (1) தவணைக்கடன்— | | |
| ஒப்புதல் அளிக்கப்பட்டவை .. .. .. .. | 5,67·76 | 12,00·00 |
| வழங்கப்பட்டவை .. .. .. | 2,96·61 | 6,00·00 |
| (2) பங்குகளுக்கு சந்தா/நேரடி சந்தா— | | |
| ஒப்புதல் அளிக்கப்பட்டவை .. .. .. .. | 6·20 | 25·00 |
| (3) வட்டியில்லா விற்பனைவரி கடன்— | | |
| ஒப்புதல் அளிக்கப்பட்டவை .. .. .. .. | 2,45·78 | 2,90·00 |
| வழங்கப்பட்டவை .. .. .. .. .. | 1,85·00 | 2,90.00 |
| (4) மத்திய உதவித் தொகை : (சிப்காட்டுக்கு மட்டும்)— | | |
| ஒப்புதல் அளிக்கப்பட்டவை .. .. .. .. | 2,60·91 | 2,00·00 |
| வழங்கப்பட்டவை .. .. .. .. | 2,15·39 | 2,00·00 |
| மொத்தம் திருப்பி தரப்பட்டவை .. .. .. .. | 1,25·54 | 2,00.00 |
| (5) ஆரம்ப மூலதனம்— | | |
| ஒப்புதல் அளிக்கப்பட்டவை .. .. .. .. | 12·90 | 50·00 |
| வழங்கப்பட்டவை .. .. .. .. .. | 21·47 | 40·00 |



## தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ).

**நோக்கங்கள் :**

ஆலங்குளத்தில் சிமெண்டுத் தொழிற்சாலையையும் (ஆண்டுக்கு 4 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்டது) அரக்கோணத்தில் உருக்குத் தொழில் ஆலையையும் (ஆண்டுக்கு 50,000 டன் உற்பத்தித் திறன் கொண்டது) அமைக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், 1965 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. 1970 ஆம் ஆண்டில் கூட்டுத் துறைக் கொள்கை ஒன்றை இந்திய அரசு வகுத்தது. அரசு வகுத்த கொள்கைகளைப் பின் பற்றும் நோக்கத்துடன் தமிழ் நாட்டில் கூட்டுத் துறையின் கீழ் தொழில்களைத் தொடங்கவும் மேம்படுத்தவும் டிட்கோ கருதியது. பங்குத் தொகையாக டிட்கோ நிறுவனம் 26 சதவீதமும், தனியார் தொழில் முனைவர்களால் 25 சதவீதமும் எஞ்சிய 49 சதவீதம் பொது மக்களிடமிருந்தும் நிதியுதவியாகப் பெற்று கூட்டுத் துறைத் திட்டங்கள் அமைக்கப்படுகின்றன.

இது வரை ரூபாய் 100 இலட்சம் முதலீட்டிற்கு அதிகமான திட்டங்களை மட்டுமே டிட்கோ ஆய்ந்து வந்துள்ளது. ரூபாய் 50 இலட்சமும் அதற்கு மேலும் முதலீட்டைக் கொண்ட திட்டங்களையும் மேற் கொள்ளலாம் எனத் தமிழ்நாடு அரசு குறிப்பிட்டுள்ளது. சிறு திட்டங்களைப் பொறுத்த வரையில், டிட்கோவின் பங்கு, பங்கு மூலதனத்தில் 15 சதவீதம் என வரையறுக்கப்பட்டுள்ளது.

**நிதி :**

மூலதனப் பங்குத் தொகை கடன்கள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் தமிழ்நாடு அரசு டிட்கோவிற்கு நிதி வழங்குகிறது. இதைத் தவிர இந்நிறுவனத்தின் நிதி வாயில்களை மேம்படுத்துவதற்காக, உறுதி அளிக்கப்பட்ட கடனீட்டுறுதிப் பத்திரங்களை வெளியிடுவதற்கு அரசு உத்தரவாதமும் அளித்துள்ளது. பொது மக்களிடமிருந்தும் வைப்பீடுகளை டிட்கோ ஏற்றுக் கொள்கிறது.

1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் நாளின் படி டிட்கோவின் அங்கீகாரம் அளிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் 25 கோடியாகும். 1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் நாள் அன்றுள்ளபடி திரட்டப்பட்ட நிதி விவரங்களும் 1980-81-ல் திரட்ட கருதப்பட்ட நிதி விவரங்களும் பின்வருமாறு :—

| விவரங்கள். | 31-3-80ல் திரட்டப் பட்டவை. | 1980-81ல் திரட்டக் கருதப் பட்டவை. |
|---|---|---|
| (1) | (ரூபாய் கோடியில்) (2) | (3) |
| பங்கு மூலதனம் .. .. .. | 24.73 | 3.00 |
| வழிவகை முன் பணங்கள் உட்பட்டக்கடன்கள். | 7.32 | 0.75 |
| கடனீட்டுறுதிப் பத்திரங்கள் .. .. | 10.60 | 0.83 |
| குறித்த கால வைப்புகள் .. .. | 3.70 | 0.70 |
| மொத்தம் .. | 46.35 | 5.28 |

1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் நாள் வரை பொது, கூட்டுத் துறைத் திட்டங்களில் டிட்கோவின் முதலீடு குறித்த விவரம் பின் வருமாறு :—

| விவரங்கள். (1) | பங்கு மூலதனம். (2) | கடன்கள். (3) | மொத்தம் (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் | கோடியில்). | |
| பொதுத் துறைத் திட்டங்கள். | 14.55 | 10.34 | 24.89 |
| கூட்டுத் துறைத் திட்டங்கள். | 11.82 | 6.68 | 18.50 |
| உதவியளிக்கப்பட்ட திட்டங்கள். | 0.29 | 0.31 | 0.60 |
| மொத்தம் .. | 26.66 | 17.33 | 43.99 |



திட்டங்கள்.

பொது, கூட்டுத் துறைகளின் கீழ் 48 திட்டங்கள் நிறை வேற்றப்படவுள்ளன. பொதுத் துறையின் கீழ் மூன்று திட்டங் களும் கூட்டுத் துறையின் கீழ் 14 திட்டங்களும் முன்னரே உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. பொதுத் துறையில் 11 திட்டங்களையும் 2 திட்டங்களையும், கூட்டுத் துறையில் டிட்கோ நிறைவேற்றி வருகிறது. மேலும், பொது, கூட்டுத் துறையின் கீழ் 18 திட்டங்களை மேற்கொள்ளவும் டிட்கோ கருதியுள்ளது. இதில் டிட்கோவின் துணை நிறுவனமாக தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்நிறுவனத்தால் (டான்செம்) பொதுத் துறையின் கீழ் 5 திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன. டிட்கோவால் நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங் கள் குறித்த பணி முன்னேற்ற அறிக்கை பின் வருமாறு :—

1. ஏற்கெனவே உற்பத்தியைத் தொடங்கியுள்ள திட்டங்கள்

(1) தமிழ்நாடு ஸ்டீல்ஸ், அரக்கோணம்.

தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனம் 1972 ஜூலையில் தொடங்கப் பட்டது. இவ்வாலையில் :

(1) 25 டன் ஆர்க் உலை ஒன்றும்,
(2) தொடர் வார்பட இயந்திரம் ஒன்றுமாக முக்கியச் சாதனங்கள் உள்ளன. இவ்வாலையின் திறன் ஆண்டு ஒன்றுக்கு 30,000 டன் ஆகும். 1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் நாள் இறுதி வரை இவ்வாலையின் முதலீடு ரூ. 912 இலட்சமாகும். (இதில் ரூ. 354 இலட்சம் பங்கு மூலதனமாகவும் எஞ்சிய ரூபாய் 558 இலட்சம் கடனாகவும் முதலீடு செய்யப்பட்டது).

இங்கு, 1976-77 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட அதிக பட்ச அளவு உற்பத்தி 28,948 டன்களாகும். கடந்த ஆண்டின் உற் பத்தி 22,733 டன்களாகும். கடந்த ஆண்டில் மின் சுமைக் கட்டுப்பாடு, மின்வெட்டு ஆகியவற்றின் காரணமாகவும், தொடர் வார்பட இயந்திரத்திலும் உலோக உருக்கு மிடா (Tundish) ஆகியவற்றிலும் மாற்றங்களைச் செய்வதற்காகச் சுமார் 1½

மாதங்கள் இவ்வாலை மூடப்பட்டிருந்ததுமே,
உற்பத்திக் குறைவிற்குக் காரணமாயிற்று. கடந்த ஆண்டில்
இயந்திரத்திலும், மிடாவிலும் மாற்றங்கள் செய்த பின்னர் தொடர் வார்ப்பட
வகையில் ஆலை செயல் படுகிறது. இந்த ஆண்டு 30,000 டன்
உற்பத்தியாகுமெனக் கருதப்படுகிறது. சீரான
இதில் ரூபாய் 41 இலட்சம் இழப்பு ஏற்பட்டது. கடந்த ஆண்டில்
ரூ. 4.56 கோடி இழப்பு ஏற்பட்டது. இதுவரை
வாலையில் முதலீடு செய்திருந்தும் இந்நாட்டிலுள்ள பெருமளவில் இவ்
எஃகுத் தொழில் ஆலைகளில் விதிக்கப்பட்ட விலைகளுக்கு ஒருங்கிணைந்த
இவற்றின் விலைகள் குறைக்கப்பட வேண்டி ஈடாக
கடந்த ஆண்டுகளில் இழப்பு ஏற்பட்டது. இருந்தாலும்,
நியாயமான விலை ஆகியவற்றின் அடிப்படையில் உற்பத்திச் செலவு,
தக்க விலையில் இவ்வாலையின் உற்பத்திப் ஆதாயம் தரத்
டிசம்பரிலிருந்து அரசுத் துறைகளுக்கு பொருள்களை 1979
ஆணைகளை அரசு பிறப்பித்துள்ளது. விற்பனை செய்வதற்கு
லிருந்து ஆதாயத்தில் செயல்படுமென இவ்வாலை 1980–81
எதிர் பார்க்கப்படுகிறது.

## (2) சதர்ன் பெட்ரோ கெமிகல் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்.

தமிழ்நாட்டிற்குத் தேவைப்படக் கூடிய உரங்களை வழங்கும்
நோக்கத்துடன் இந்நிறுவனம் (ஸ்பிக்) தூத்துக்குடியில் அமைக்
கப் பெற்றது.

இந்நிறுவனத்தில் யூரியாவின் உற்பத்தித் திறன் ஆண்டிற்கு 5
இலட்சம் டன்கள்; பாஸ்பாரிக் அமிலம் ஆண்டிற்கு 74 ஆயிரம் டன்
கள் ஆகும். இத்திட்டத்திற்கான செலவு ரூ 105.08 கோடியாகும்.
பங்கு மூலதனமாக ரூபாய் 5 கோடியை அரசு முதலீடு செய்
துள்ளது. இந்நிறுவனம் 1975 ஆம் ஆண்டு ஜூன் திங்களில்
செயல்படத் தொடங்கி, 1,650 பேருக்கு வேலை வாய்ப்பு
அளித்து வருகின்றது. நிறுவனத்தில் செயல் திறன் ஆண்டிற்கு
ஆண்டு மேம்பாடுற்று வருவதோடு 80 லிருந்து 90 சதவீதம் வரை
உற்பத்தி இலக்கை எய்தவும் முயன்றுள்ளது. சுமார் 4 ஆண்டுக்
காலத்திற்கு இந்நிறுவனம் இழப்பில் செயல்பட்ட பின்னர் 1979

1980-ல் ரூபாய் 7 கோடி ஆதாயம் ஈட்டி ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வரை ரூபாய் 44.34 கோடி இழப்பு ஏற்பட்டது. எதிர் வரும் ஆண்டுகளில் இந்த இழப்புகள் ஈடுசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்பிக் தொழில் தொகுதியை மேலும் தனித்து இயங்கவல்ல நிறுவனமாக மாற்றும் நோக்கத்துடன், பல்திறப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்யவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

## (3) தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட்.

தமிழ்நாட்டிலுள்ள தோல் பதனிடு தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் முக்கிய மூலப்பொருளான குரோம் இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காகப் பின்தங்கிய பகுதியாகிய இராணிப்பேட்டையில் கூட்டுத் துறையின் கீழ் இத்தொழிலகம் அமைக்கப்பட்டது. இது, 1975 அக்டோபரில் உற்பத்தியைத் தொடங்கியது. அன்று தொடங்கி தமிழ்நாட்டின் தேவையைப் பெருமளவிற்கு ஈடு செய்து வந்துள்ளது. இதன் நிறுவுத்திறன் ஆண்டு ஒன்றுக்கு 3,300 டன் பேசிக் டேனிங் குரோம்பவுடர் (பி. சி. டி.) 4,315 டன் சோடியம் டை குரோமேட் ஆகும். கடந்த ஆண்டு உற்பத்தி பி.சி.டி. 2,615 டன்களும் சோடியம் டை குரோமேட் 2,600 டன்களும் ஆகும். கூட்டுத் துறையில் இதனை நிறுவுவதற்கு முன்னர் இத் தொழிலகம் குரோமியம் இரசாயன பொருள்களுக்காகப் பிற நாட்டை எதிர் நோக்கி நிற்க வேண்டியதாயிருந்தது. இதன் மூலதன முதலீடு இதுவரை சுமார் 2 கோடியாகும். இதில் ரூபாய் 40 இலட்சம் பங்கு மூலதனம், ரூபாய் 18 இலட்சம் ஒதுக்கீடுகளும் உபரிகளும், ரூபாய் 142 இலட்சம் கடன்களும் பொறுப்புக்களும் அடங்கும். டிட்கோவின் பங்கு முதலீடு ரூபாய் 10.40 இலட்சம். தற்போது தோல் தொழிலில் ஏற்பட்டுள்ள திடீர் சரிவின் காரணமாக இத்தொழிலகம் பெரும் பிரச்னைகளை எதிர் நோக்கியுள்ளது. தனது வருவாய்த் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் பிற தோல் பதனிடு இரசாயனப் பொருட்களையும் உற்பத்தி செய்யும் திட்டங்களையும் இத் தொழிலகம் கொண்டுள்ளது. இதே அளவு உற்பத்தி திறனால், [illegible]வரும். விற்பனை வரி வாயிலாக ஆண்டு

ஒன்றுக்கு ஏறத்தாழ 8-லிருந்து 10 இலட்சம் ரூபாய் வரை
மாநிலத்துக்குக் கிடைக்கும். இந்நிறுவனம் சுமார் 570 பேருக்கு
வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

## (4) பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட்,

தீப்பெட்டி தொழிலுக்கு தேவைப்படும் முக்கிய இரசாயனப்
பொருளான பொட்டாசியம் குளோரேட் உற்பத்தியை மேற்
கொள்ளுவதற்காக 1972 நவம்பரில், கூட்டுத் துறையின் கீழ்
பின்தங்கிய பகுதி ஒன்றில் இது நிறுவப்பட்டது. இம்மாநிலத்திற்
குச் சுமார் 7,200 டன்கள் தேவைப்படுமென மதிப்பிடப்பட்டு
உள்ளது. 1975 ஜூலையில் உற்பத்தியை இந்நிறுவனம் தொடங்
கியது. இதன் உற்பத்தி திறனை 1,825 டன்னிலிருந்து 3,650
டன்னாக 1979 ஆம் ஆண்டுக்கு முன்னதாக கூடுதல் வெளி நிதி
உதவியின்றி உயர்த்தியுள்ளது. தமிழ்நாடு குளோரேட் லிமிடெட்
என்னும் புதிய துணை நிறுவனம் ஒன்றின் மூலமும் சுமார் 3,000
டன் கூடுதலாக உற்பத்தி திறன் கொண்ட திட்டத்தை செயல்
படுத்தி நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த கூடுதல் உற்பத்தி
முழுவதும் 1985 ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே கிடைக்கப்பெறு
வதோடு மாநிலத்தின் தேவை நிறைவு செய்யப்படுமெனவும்
எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிறுவனத்தில் ரூபாய் 128 இலட்சம்
தற்போது முதலீடு செய்யப்பட்டுள்ளது. பங்கு மூலதனத்தில்
டிட்கோவின் பங்கு ரூபாய் 6·24 இலட்சமாகும். ரூபாய் 6,24
இலட்சம் மதிப்புக்கு பங்கு மிகை ஊதியமாகவும் டிட்கோ பெற்று
உள்ளது. இந்நிறுவனம் 155 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்து
உள்ளது. தமிழ்நாடு குளோரேட் லிமிடெட் நிறுவனத்தின் முதல்
கட்டப் பணி முடிவுற்றதும் 255 பேருக்கு வேலை வாய்ப்பு
அளிக்கும்.

## (5) தமிழ்நாடு தாதா பார்மசூடிகல்ஸ் லிமிடெட்.

மருந்துகளும், மருந்துப் பொருட்களும் தயாரிப்பதற்காக இந்
நிறுவனம் 1973 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இத்திட்டத்
திற்கான திட்டச் செலவு ரூபாய் 80.53 இலட்சமாகும். இதில்
டிட்கோவின் பங்கு ரூபாய் 23,40 இலட்சம். இந்நிறுவனம் கடந்த



மூன்று ஆண்டுகளில் நல்ல ஆதாயத்தை ஈட்டியுள்ளது. மருந்துத்
தயாரிப்புப் பிரிவு, மொத்த மருந்தமைப்புப் பிரிவு ஆகியவற்றில்
விரிவுப் பணியை ரூபாய் 103 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில்
மேற்கொண்டுள்ளது. மேற்படி விரிவாக்கப் பணிக்கான திட்டச்
செலவு ரூபாய் 82 இலட்சம் தவணைக் கடனாகவும் ரூபாய் 21
இலட்சம் உள்ளீட்டி வருமானம் மூலமாகவும் பெறப்படும்.

## (6) சதர்ன் போரக்ஸ் லிமிடெட்.

கண்ணாடி, மட்பாண்டம், துப்புரவுத் தொழில்களின் தேவையை
நிறைவு செய்வதற்காகச் செங்கற்பட்டு மாவட்டம், பொன்
னேரி வட்டம், தாட்சூர் கிராமத்தில் ஆண்டு ஒன்றுக்கு 15,000
டன் உற்பத்தித் திறனுடன் போரக்ஸ் நிறுவனம் அமைக்கப்
பட்டது. தற்போது இதன் திட்டச் செலவு சுமார் 162 இலட்ச
மாகும். டிட்கோவின் முதலீடு சுமார் ரூபாய் 10.40 இலட்ச
மாகும். 1976 ஜனவரியில் உற்பத்தியைத் தொடங்கிய இக்
கம்பெனி இதுநாள் வரை போரக்ஸ் உற்பத்தி செய்யக் கூடிய
ஏகபோக நிறுவனமாக விளங்கிய நிறுவனத்தோடு போட்டியிட
வேண்டியதாயிற்று. இக் கம்பெனிக்கு ரூபாய் 89 இலட்சம்
(30-6-79 அன்றுள்ளவாறு) இழப்பு ஏற்பட்டது. இத்திட்டத்தின்
தனித்து இயங்கவல்ல திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன்
நாளொன்றுக்கு இரண்டு டன் உற்பத்தி திறன் கொண்ட போரிக்
அமிலத் தொழில் நிறுவனம் ஒன்றை இது நிறுவி உள்ளது.
1980 பிப்ரவரியில் செயல்படத் தொடங்கிய இந்நிறுவனம் 150
பேருக்கு வேலை வாய்ப்பையளித்துள்ளது.

## (7) டைனாவிஷன் லிமிடெட்.

ரூ. 51 இலட்சச் செலவில் ஆண்டுக்கு 10,000 தொலைக்
காட்சிப் பெட்டிகளைத் தயாரிக்கும் திறனுடன் இது நிறுவப்
பட்டது. இது, 1976 ஜூனில் உற்பத்தியைப் தொடங்கியது.
பெருகிவரும் தேவைகளுக்கு இணங்க இதன் உற்பத்தித் திறன்
ஆண்டு ஒன்றுக்கு 20,000 தொலைக் காட்சிப் பெட்டிகளாக
அதிகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் டிட்கோவின் பங்கு
மூலதனம் ரூ. 10 இலட்சம் ஆகும். இக்கம்பெனி தனது முழு

உற்பத்தித் திறனை (அதாவது 20,000 தொலை காட்சிப் பெட்டி
கள்) 1979ஆம் ஆண்டின் இறுதிக்குள்ளேயே அடைந்துள்ளது.
31–3–1980 முடிய உள்ள காலப் பகுதியில் இதன் விற்பனை
ரூ. 610.69 இலட்சமாகும். இந்நிறுவனம் ஆதாயத்தில் இயங்கி
வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு 12 சத வீதம் ஆதாயப்
பங்கை இக் கம்பெனி அறிவித்துள்ளது. இந்நிறுவனம், சுமார்
4,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

(8) ஆசியா டொபாக்கோ கம்பெனி லிமிடெட்.

ஆண்டு ஒன்றுக்கு 4,500 மில்லியன் சிகரெட்டுகள் தயாரிக்கும்
திறனுடன், தருமபுரி மாவட்டத்தில் தொழில் துறையில் பின்
தங்கிய பகுதியான ஒசூரில் இது நிறுவப்பட்டுள்ளது. இதற்கான
செலவு சுமார் ரூ. 178.44 இலட்சமாகும். டிட்கோ நீக்குக
ரூ. 20.80 இலட்சத்தை முதலீடு செய்துள்ளது. இக்கம்பெனி
குறைந்த விலை சிகரெட்டுகளைத் (ட்யூக்) தயாரிக்கிறது. இண்டி
யன் புகையிலைக் கம்பெனிக்கான பணிகளையும் இது மேற்
கொண்டுள்ளது. பெரிய அளவில் சிகரெட்டு உற்பத்தியைச்
செய்யும் நிறுவனத்தின் சில வகை சிகரெட்டுகளை விற்பனை
செய்யும் பணியையும் இது மேற்கொண்டுள்ளது. புகையிலையைப்
பதப்படுத்துவதற்காகத் தொடக்கத் தயாரிப்புப் பிரிவு ஒன்றைச்
சொந்தத்திலேயே நிறுவி வருகிறது. 1980ஆம் ஆண்டின்
இறுதிக்குள் இது முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.
இக்கம்பெனி 1976 ஜூனில் உற்பத்தியைத் தொடங்கியது. தற்
போது சுமார் 260 பேருக்கு இங்கு வேலை வாய்ப்பு கிட்டியுள்ளது.
30–9–1979 அன்றுள்ளபடி இந்நிறுவனத்திற்கு ரூ. 32 இலட்சம்
இழப்பு ஏற்பட்டுள்ளது. புகழ் வாய்ந்த உற்பத்தியாளர்களுடன்
போட்டியிடும் நிலை ஏற்பட்டதும், ஆயத் தீர்வை பெருமளவில்
விதிக்கப்பட்டதும் இழப்பிற்குப் பெரும் காரணங்களாயின.
1979ஆம் ஆண்டு விற்பனைத் தொகை ரூ. 3·06 கோடிக்குச்
சுமார் ரூ. 1.64 கோடி ஆயத் தீர்வை விதிக்கப்பட்டுள்ளது

(9) தமிழ்நாடு அல்கலின் பேட்டரீஸ் லிமிடெட்.

பாதுகாப்பு, பிற நுகர் பொருள் துறைகளுக்குத் தேவைப்
படக்கூடிய நிக்கல் காட்மியம் பேட்டரிகளுக்கு (பல்வேறு வகை
கள்) ஏற்பட்டுள்ள தேவையை நிறைவு செய்வதற்காக இந்



நிறுவனம் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் அமைக்கப்பட்டது.
இதன் தற்போதைய நிறுவு திறன் ஆண்டுக்கு 5 இலட்சம் ஆம்பியர்
அவர்ஸ் ஆகும். இதன் திட்டச் செலவு ரூ. 69 இலட்சமென
மதிப்பிடப்பட்டுள்ளது. டிட்கோ ரூ. 10 இலட்சம் முதலீடு
செய்துள்ளது. இந் நிறுவனம் 1976 ஜனவரியில் உற்பத்தியைத்
தொடங்கியுள்ளது. உள்நாட்டுத் தொழில் நுட்ப உத்தி போது
மானதாக இல்லாததால் பாதுகாப்புத் துறை கேட்ட தேவை
விண்ணப்ப ஆணைகளுக்கு ஏற்பப் பொருள்களை வழங்கயியல
வில்லை. இதனால் உற்பத்திப் பொருள் பெருமளவில் தேக்கம்
ஏற்பட்டது. இதனால் ரூ. 41 இலட்சம் குவிந்த இழப்பு
ஏற்பட்டுள்ளது. தற்போதைய தொழில் நுட்ப உத்தியை
எடுத்து மாற்று உத்தி ஒன்றைக் கடைப்பிடிக்கும் நோக்கத்துடன்
அமெரிக்க நிறுவனத்திடமிருந்து தொழில் நுட்ப உத்தியைப்
பெறக் கருதியுள்ளது. இத் திட்டம் 1980 இறுதிக்குள் முடிக்கப்
படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொழிலகம் தற்
போது சுமார் 25 பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கியுள்ளது.

(10) கிரேட் ஸீ டிராலர் பில்டிங் யார்டு (மண்டபம்) லிமிடெட்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பின்தங்கிய பகுதியான
மண்டபத்தில் கிட்டும் வசதிகளைப் பயன்படுத்தும் நோக்குடன்
நடுத்தர அளவு எஃகாலான மீன்பிடி இழு படகுகளைக் கட்டு
வதற்குக் கூட்டுத் துறையின் கீழ் நிறுவனம் ஒன்றை அமைக்கத்
தமிழ்நாடு அரசு கருதியது. இக்கூட்டுத் துறை நிறுவனம்
14–12–1973ஆம் நாளன்று அமைக்கப்பட்டது. 16 இழு
படகுகளைக் கட்டுவதற்கு இந்திய அரசிடமிருந்து இசைவுக்
கடிதம் 6–3–1974-ல் கிடைத்தது. முதல் கட்டப் பணியாக
கடலில் செல்லும் கலங்களைப் பழுதுபார்க்கும் பணிகளையும்
அடுத்தக் கட்டப்பணியாக இழு படகுகளைக் கட்டும் பணியையும்
மேற்கொள்ளக் கருதப்பட்டது. முதல் கட்டப் பணி (அதாவது
பழுது பார்க்கும் பணி) 1976-ல் தொடங்கப்பட்டது. அங்காடி
நிலவரம் சீரான ஆதாயம் தரத்தக்கதாக இல்லாததால் மீன் பிடி
படகுகளைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளை நிறுவனமே எடுக்க
வேண்டியுள்ளது. 31–3–1979 அன்றுள்ளபடி இதற்குச் சுமார்
ரூ. 15.48 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது.

(11) மார்தி கிரிஸ்டல் சால்ட் கம்பெனி லிமிடெட்.

செங்கற்பட்டு மாவட்டம், திருப்போரூர் கிராமத்தில்
உப்பு விளைச்சலுக்காக 1973 ஆகஸ்டில், கூட்டுத் துறையின்
படி அமைக்கப்பட்ட நிறுவனமாகும். செங்கற்பட்டிற்கு அருகில்
பக்கிங்ஹாம் கால்வாயின் கரைகளில் உள்ள சுமார் 3,600 ஏக்கர்
தரிசு நிலத்தில் ஆண்டுக்கு 1.2 இலட்சம் டன் உற்பத்தி செய்யு
மளவிற்கு உப்பு எடுக்கும் பணிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
இதுவரை இந்நிறுவனத்தில் இட்டுள்ள முதலீடு சுமார் ரூ. 89
இலட்சம். இத்தொகை பங்கு மூலதனம் ரூ. 25 இலட்சம்
கடன்கள், பிற பொறுப்புகள் ரூ. 66 இலட்சமும் உள்ளிட்டதாகும்.
இதில் டிட்கோவின் முதலீடு ரூ. 6.5 இலட்சம் ஆகும். பக்கிங்
றாம் கால்வாயில் போதிய அளவு கடல் நீர் வரப் பெறாததால்
ந்நிறுவனம் மிகக் கடுமையான சிக்கலை எதிர் நோக்க வேண்டி
புள்ளது. இதுவரை எய்திய ஆண்டு உற்பத்தி 30,000 டன்னுக்குக்
தறைவானதாயுள்ளது. கடல் நீர் வரவு பற்றாக்குறையின் காரண
மாக எழுந்துள்ள சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்காக கல்பாக்
கம், அணுமின் சக்தி நிலையத்தில் குளிரவைப்பதற்காகப் பயன்
படுத்தப்படும் கடல் நீரை பக்கிங்ஹாம் கால்வாய்க்குத் திருப்பி
விடுவதற்கான திட்டம் குறித்து முடிவு செய்யப்பட்டுள்ளது.
உற்பத்தியளவை அடைவதற்குத் தேவைப்படக்கூடிய முழு அளவு
நீரை 1982லிருந்து தொடர்ந்து வழங்க வகை செய்யுமென எதிர்
பார்க்கப்படுகிறது. இப்பணியில் சுமார் 75 பேர் நிரந்தர
அடிப்படையிலும் 500 பேர் உப்பெடுக்கும் காலங்களில் தாற்காலிக
மாகவும் பணியாற்றுகின்றனர்.

(12) அரக்கோணம் கேஸ்டிங்ஸ் அண்டு போர்ஜிங்ஸ் லிமிடெட்.

வார்ப்புத் தேவைகளைப் பெருமளவிற்கு நிறைவு செய்வதற்
காக 1974-ல் இந்நிறுவனம் தொடங்கப்பட்டது. உருக்கி வார்க்கப்
பட்ட உலோகங்களைத் தமிழ்நாடு ஸ்டீல்ஸ் இதற்கு வழங்கு
கிறது. இதன் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு ஆயிரம் டன்களாகும்.
1977-ல் உற்பத்தி தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான
செலவு ரூ. 85 இலட்சம் ஆகும். ரூ. 35 இலட்சம் பங்கு மூல
தனமும் ரூ. 50 இலட்சம் தவணைக் கடன்களும் ஆகும்.



டிட்கோவின் பங்கு மூலதனம் ரூ. 17.50 இலட்சமாகும்.
1978-79-ல் இக் கம்பெனி 418 மெட்ரிக் டன் வார்ப்புகளை
உற்பத்தி செய்துள்ளது. ரூ. 85.08 இலட்சத்திற்கு
விற்பனை செய்துள்ளது. நடப்பாண்டில் (1979-80) முதல்
9 மாதங்களில் 574 டன் உற்பத்தியும், ரூ. 63.50 இலட்சத்திற்கு
விற்பனையும் செய்துள்ளது. இழப்புகள் அனைத்தையும் நடப்
பாண்டில் இக்கம்பெனி ஈடு செய்துள்ளது. இனி, ரூ. 15 இலட்
சம் ஆதாயம் ஈட்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இக்
கம்பெனியில் 50 பேர் பணியாற்றுகின்றனர்.

(13) தமிழ்நாடு கெமிக்கல் புராடெக்ஸ் லிமிடெட்.

துணித் தொழிலுக்குத் தேவைப்படக்கூடிய அடிப்படை
இரசாயனப் பொருள்களை (அதாவது சோடியம் ஹைட்ரோ
சல்பைடு) உற்பத்தி செய்வதற்காக, இராமநாதபுரம் மாவட்டத்தி
தில் பின்தங்கிய பகுதியில் காரைக்குடிக்கு அருகில் கழனிவாசல்
என்ற கிராமத்தில் இத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது.
இதன் திறன் ஆண்டுக்கு 3,300 டன் சோடியம் ஹைட்ரோ
சல்பைடும் $SO_2$ (சலவைக்குத் தேவைப்படும் பொருள்) ஆண்டுக்கு
4,500 டன்னும் ஆகும். இத்திட்டச் செலவு ரூ. 756 இலட்சம்
ஆகும். இதில் டிட்கோவின் பங்கு மூலதனம் ரூ. 51 இலட்ச
மாகும். டிட்கோ ரூ. 67 இலட்சம் கடனாகவும் கொடுத்துள்ளது.
1978-ல் சல்பர் டைஆக்சைடு உற்பத்தி 1,600 டன்களாகும்.
ஹைட்ரோ சல்பைடு உற்பத்தி 1,300 டன்களாகும். இதுவரை,
227 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டியுள்ளது. இதற்கு ரூ. 85
இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. மின்வெட்டு, இந்தப்பகுதியில்
மின்சுமை குறைவு ஏற்படுதல் போன்ற பல பிரச்சினைகளால்
இந்நிலையம் செயல்படுவதில் இடர்ப்பாடுகளை எதிர்நோக்க
வேண்டியதாயிற்று. வரும் ஆண்டுகளில், ஆதாயம் ஈட்டும்
வகையில் இதன் விற்பனை அதிகரிக்குமென இக்கம்பெனி
எதிர்பார்க்கிறது.

(14) இன்டர் கான்டினெட்டல் லெதர்ஸ் லிமிடெட்.

தோல் பதப்படுத்தும் தொழில்
ஏற்றுமதி செய்வதற்காகத் தோல் பதப்படுத்தும் தொழில் — 
ஏற்றுமதி செய்வதற்காகத் அரசின் கொள்கைக்கிணங்க
களை மேலும் அமைக்க வேண்டிய அரசின் கொள்கைக்கிணங்க
ஏற்றுமதியை முழு நோக்கமாகக் கொண்ட இத் தொழிற்சாலை

ஆண்டுக்கு 9 இலட்சம் தோல்களை பதனிடுவதற்காக வடார்க்காடு
மாவட்டத்தில் தொழிற்துறையில் பின்தங்கிய
இராணிப்பேட்டையில் டிட்கோ நிறுவியுள்ளது. பகுதியான
சாலை 1979 ஜூனில் உற்பத்தியைத் தொடங்கியது. இத்தொழிற்
நிரந்தரமாக சுமார் 25 பேருக்கும், 50 பேர்களுக்கு தற்போது
அடிப்படையிலும் வேலைவாய்ப்பளிக்கிறது. நாட்கூலி•
கான செலவு ரூ. 120 இலட்சமாகும். இத்திட்டத்திற்
ரூ. 10.4 இலட்சமாகும். டிட்கோவின் முதலீடு
உடனுழைப்பு ஒப்பந்தம் இந்நிறுவனம் செய்துள்ளது. ரோமானிய நிறுவனம் ஒன்றுடன்
நாட்டிலிருந்து தேவை ஆணை ஒன்றையும் பெற்று ரோமானிய
இலட்சம் மதிப்புள்ள சுமார் 50,000 தோல்களை ரூ. 40
செய்தது. அடுத்த காலாண்டில் ரூ. 78 இலட்சம் ஏற்றுமதி
சுமார் ஒரு லட்சம் தோல்களை ஏற்றுமதி செய்யக் கருதியுள்ளது. மதிப்புள்ள

## (15) சதர்ன் ஹைட்ரோ கார்பன்ஸ் லிமிடெட்.

அசிடிக் அமிலம், அசிடிக் அன்ஹைட்ரைட்டு ஆகியவற்றை
உற்பத்தி செய்வதற்காகப் புதுக்கோட்டை
பின்தங்கிய பகுதியில் உள்ள மண்டையூரில் மாவட்டத்தில்
உருவாக்கப்பட்டது. இத் தொழில் இத்தொழிலமைப்பு
உற்பத்தி தொடங்கியது. இத் தொழில் அமைப்பு 1980 மார்ச்சில்
ஆண்டுக்கு 1,000 டன் அசிடிக் தொழிற் பிரிவின் உற்பத்தித் திறன்
அன்ஹைட்ரைட்டும் ஆகும். அமிலமும், 1,000 டன் அசிடிக்
கட்டப் பணிக்கு ரூ. 220 இத்திட்டத்திற்கான செலவு முதல்
மூலதனம் ரூ. 15.6 இலட்சமாகும். டிட்கோவின் பங்கு
னங்கள் தவணைக் கடன் கொடுப்பதில் நிதியுதவி செய்யும் நிறுவ
டிட்கோ ரூ. 70 இலட்சம் கடனும் கொடுத்துள்ளது. தாமதம் ஏற்பட்டதால்
பற்றாக்குறை காரணமாக உற்பத்தித் திறன் மின்சாரப்
இயலவில்லை. அசிடிக் அமிலம், அளவை எய்த
ஆகியவற்றின் உற்பத்தியை ஒரு நிலைக்குக் அசிடிக் அன்ஹைட்ரைட்டு
அடுத்த கட்டத்தில் விற்பனைப் பொருள்களைத் கொண்டுவந்த பிறகு
கான திட்டங்களை இது நிறைவேற்றும். தயாரிப்பதற்



## II. நிறைவேற்றி வரும் திட்டங்கள்.

### 1. அசிடைலின் அண்டு இண்டஸ்ரியல் எரிவாயு லிமிடெட்.

இறக்குமதிக்கு மாற்றுப் பொருளாக உற்பத்தி செய்வதற்காக
இத்திட்டத்தை டிட்கோ மேற்கொண்டது. இந்நிறுவனம் 1976
ஜனவரியில் பதிவு செய்யப்பட்டது. இதன் அங்கீகரிக்கப்பட்ட
உற்பத்தித் திறன் அளவு ஆண்டுக்கு 25,000 அசிடைலின் எரிவாயு
சிலிண்டர்களாகும். இது இரண்டு நிலைகளில் நிறைவேற்றப்
படும். முதல் நிலை, ஆண்டுக்கு 12,500 சிலிண்டர்களாகும்.
இதன் மூலதனச் செலவு ரூ. 61.30 இலட்சம் ஆகும். டிட்கோவின்
மூலதனப் பங்கு ரூ. 6.50 இலட்சமாகும். இக்கம்பெனி தொழில்
நுட்ப உத்திக்காக நன்கு பிரபலமடைந்த அமெரிக்க நிறுவனத்
துடன் உடனுழைப்பு ஒப்பந்த ஏற்பாடுகளைச் செய்து கொண்
டுள்ளது. இத்திட்டம் நிறைவேற்றப்படும் நிலையில் உள்ளது.
அம்பத்தூரில் நிறுவப்பட்டுள்ள இத்திட்டம், 1980 இறுதிக்குள்
உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது 50
பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்குமெனவும் எதிர்பார்க்கப்
படுகிறது.

### (2) தமிழ்நாடு ப்ளோரின் அண்டு அலைடு கெமிக்கல்ஸ் லிமிடெட்.

அலுமினியம் உருக்கும் தொழிலுக்குத் தேவைப்படக்கூடிய
முக்கிய இரசாயனப் பொருளான அலுமினியம் ப்ளோரைடு
ஆண்டுக்கு 6,000 டன் உற்பத்தி செய்ய கூட்டுறவுத்துறையில்
இக்கம்பெனி 1972-இல் நிறுவப்பட்டது. நாட்டிற்கு தற்போது
சுமார் 9,000 டன்கள் தேவைப்படுகின்றன. இதில் உள்நாட்டு
உற்பத்தி அனைத்தும் மஹாராஷ்டிரா, குஜராத்தில் உள்ள
3,000 டன் மட்டுமே ஆகும். இந்நிறுவனம், ஆண்டொன்றுக்கு
ரூ. 2.5 கோடி அளவிற்கு அன்னியச் செலாவணியை மிச்சப்
படுத்துவதன் மூலம் நாட்டிற்கு உதவும். இந்நிறுவனம், சுவிட்சர்
லாந்து நாட்டிலிருந்து தொழில் நுட்ப வகையில் உடன் உழைப்பை
பெற்றுள்ளது. மொத்த திட்டச் செலவு ரூ. 15 கோடி என்று
மதிப்பிடப்பட்டுள்ளது. மூலதனத்தில் டிட்கோவின் முதலீடு
ரூ. 78 இலட்சமாக இருக்கும். தென்னகத்திலுள்ள அதாவது

கேரளா, மைசூர், மகாராஷ்டிரா ஆகிய இடங்களில் உள்ள அலு
மினியம் உருக்கு நிறுவனங்கள் நாட்டின் தேவை 50 சதவீதத்தை
உற்பத்தி செய்கின்றன. இத்திட்டம் 265 பேர்களுக்கு வேலை
வாய்ப்பு அளிக்கும். இது இராமநாதபுரம் மாவட்டத்தில் பின்
தங்கிய பகுதியான சிவகங்கை வட்டத்தில் நிறுவப்படும். இத்
திட்டம் 1982 இறுதிக்கு முன் உற்பத்தியைத் தொடங்குமென
எதிர்பார்க்கப்படுகிறது.

(3) மோட்டார் காஸ்டிங்ஸ் லிமிடெட்

இத் திட்டம், ஆண்டொன்றுக்கு 20,000 டன் ஆட்டோமொ
டிவ் காஸ்டிங் உற்பத்தித் திறன் கொண்டதாகும். அன்னிய
நாட்டு உடன்உழைப்பு கிடைக்காததால் இத்திட்டத்தைச் செயல்
படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டது. தொழில் முனைவோர்
களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் உள்நாட்டுத்
தொழில் நுட்ப உதவியின் அடிப்படையில் இத்திட்டத்தைச்
செயல்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இசைவுக்
கடிதத்தை மத்திய அரசு புதுப்பிப்பது எதிர்பார்க்கப்படுகிறது.

(4) ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட்.

இத்திட்டம் இந்நாட்டில் உள்ள ரோலர் பேரிங்குகளின்
தேவைகளை நிறைவு செய்ய ரோலர்பேரிங்குகளை உற்பத்தி
செய்யும். உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித்திறன் ஆண்டொன்
றுக்கு 5 மில்லியன் ஆகும். இதன் மொத்தத் திட்டச் செலவு
ரூ. 16.35 கோடி. இதில் ரூ. 5 கோடி பங்குத் தொகையாக
இருக்கும். டிட்கோவின் பங்கு ரூ. 1.30 கோடியாகும். இத்
திட்டம் 1981ஆம் ஆண்டு மத்தியில் உற்பத்தியைத் தொடங்கும்
என்று எதிர்பார்க்கப்படுகிறது. முழு உற்பத்தித்திறன் அளவைப்
பயன்படுத்தும்போது விற்பனை அளவு ரூ. 12 கோடிக்கு இருக்
கும் என்றும், இதன் மூலம் சுமார் 650 பேர்களுக்கு வேலை
வாய்ப்பு கிட்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.



(5) ஆசியா கார்பன் லிமிடெட்:

இது அலுமினியம் தொழிலில் பயன்படுத்தக்கூடிய 10,400
டன் அளவானகாத்தோடு பிளாக்குகள் உற்பத்தி செய்வதற்கான
திட்டமாகும். இத்திட்டத்திற்கானசெலவு, டிட்கோவின் பங்குத்
தொகையான ரூ. 50 இலட்சம் உட்பட, ரூ. 740 இலட்சம்
ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. தொழில் துறையில் பின்
தங்கிய பகுதியான இராணிப்பேட்டையில் இத்தொழிலமைப்பு
ஏற்படுத்தப்படும். 300 பேருக்கு இதனால் வேலை வாய்ப்பு
கிட்டும். நமது மாநிலத்தில் பல்வேறு சிறந்த கார்பன் பொருள்
களை உற்பத்தி செய்வதற்கு இத்தொழிலமைப்பு வழிகோலும்.
தொழில் முனைவோர்கள் மாற்றப்பட்டதன் காரணமாக இத்
திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டது. இயன்ற
வரையில் விரைவாக இத்திட்டத்தைச் செயல்படுத்த புதிய
தொழில் முனைவோரை ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(6) வானவில் டைஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட்.

துணி ஆலைத் தொழில்களுக்கு குறிப்பாகக் கைத்தறித் துணி
ஆலைகளுக்குத் தேவைப்படக்கூடிய மூலச் சாயப்பொருள் (அதா
வது நேப்தால்) சாயம் போகா வண்ணப் பொருள்களையும்
தயாரிப்பதற்காக அமைக்கப்பட்ட திட்டமாகும். கடலூரில்
இத்தொழில் பிரிவு அமைக்கப்பட்டு வருகிறது. இதன் முதல்
கட்டப்பணி 1981 பிப்ரவரிக்குள் முடிக்கப்படும். அதன் பின்னர்,
நேப்தால் தயாரிக்கும் பணி தொடங்கப்படும். பிற தொழிற்
பிரிவுகளும் 1981 இறுதிக்குள் முடிக்கப்படும். திட்டச் செலவு
ரூ. 400 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் டிட்கோ
வின் பங்கு மூலதனம் ரூ. 41.6 இலட்சமாக இருக்கும். பல்வேறு
சாதனங்களுக்காக தேவை ஆணைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
கட்டிடப்பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. நிதி
நிறுவனங்களிடமிருந்து அனுமதிக்கப்பட்ட தவணைக்கடனைப்
பெறுவதில் தாமதம் ஏற்பட்டது. விற்று முதல் தொகை ரூ. 400
இலட்சமாக இருக்கும். இதனால் இம்மாநிலத்தின் வருவாய்
ஆண்டுக்கு ரூ. 25 இலட்சமாக இருக்கும். இனிவரும் ஆண்டு

களில் இந்தத் தொழில் தொகுதியில் பிற சாயப் பொருள்களும்
நமது நாட்டிலுள்ள துணி ஆலைத் தொழில்களுக்கு அதிக அளவில
தேவைப்படக்கூடியச் சாயப் பொருள்களும் தயாரிக்க எடுத்துக்
கொள்ளப்படும். இத்தொழிலுக்குத் தேவைப்படக்கூடிய அடிப்
டடை மூலப் பொருள்கள் சிலவற்றைத் தயாரிப்பதற்குச் சிறு
தொழிற் பிரிவுகள் பல தோன்ற இது வழிகோலும்.

(7) கங்கா பேப்பர்ஸ் லிமிடெட்.

இது தொடக்கத்தில், தனியார் துறையின் கீழ் நிறுவ எடுத்து
கொள்ளப்பட்ட திட்டமாகும். அதன் பின்னர், டிட்கோவினால்,
வேளாண்மையில் எஞ்சக்கூடிய பொருள்களைப் பயன்படுத்தி
(வைக்கோல் போன்ற பொருள்கள்) இம்மாநிலத்தில் அச்சு எழுது
காகிதங்கள் தயாரிப்பதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கூட்டுத்
துறையில் இத்திட்டத்தை மேற்கொள்ள டிட்கோவால் ஒப்புக்
கொள்ளப்பட்டது. இத்திட்டம், தென்னார்க்காடு மாவட்டம்,
வடகூத்துவில் நிறுவப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான
முதலீடு ரூ. 4.5 கோடியாக இருக்கும். அதில், டிட்கோவின்
பங்கு முதலீடு ரூ. 42.6 இலட்சமாகும். ஆண்டுக்கு சுமார்
ரூ. 5 கோடி விற்று முதல் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டதன்
அடிப்படையில், மாநில அரசுக்கு விற்பனை வரிவாயிலாக சுமார்
ரூ. 20 இலட்சம் வருவாய் கிட்டவும் வழி ஏற்படும். இத்திட்டத்
தின் வாயிலாக சுமார் 300 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.
இத்திட்டம் 1980-ல் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்
பார்க்கப்படுகிறது.

(8) தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் அண்ட் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்.

இது கண்ணாடி, காகித, பிற தொழில்களுக்குத் தேவைப்
படக் கூடிய சோடாத் தூள் தயாரிப்பதற்கான திட்டமாகும்.
இதன் துணை உற்பத்திப் பொருளான அமோனியம் குளோரைடு
ஓர் உரப் பொருளாகும். இதன் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு
66,000 டன்களாகும். இதற்குத் தேவைப்படக் கூடிய மூல



பொருள் உப்பாகும். இது தூத்துக்குடிக்கு அருகில் பெருமளவில்
கிடைக்கிறது. மற்றொரு மூலப் பொருளான அம்மோனியா,
ஸ்பிக் நிறுவனத்திடம் கிடைக்கிறது. எனவே, இத்தொழிற்
சாலை தூத்துக்குடியில் நிறுவப்படுகிறது. இத்திட்டத்திற்கான
செலவு ரூ. 3,975 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.
இதில் டிட்கோவின் பங்கு ரூ. 575 இலட்சமாக இருக்கும்.
இத் தொழிற்சாலையினால் சுமார் 500 பேருக்கு வேலை
வாய்ப்பு கிட்டும். ஆனால் சிப்பமிடுதல், பொருள்களைப்
போக்குவரத்து செய்தல் ஆகியவற்றிற்காக 1,000 க்கும் மேற்
பட்டவர்களுக்கும் வேலை வாய்ப்பேற்படும். இக்கம்பெனி
அடிப்படைப் பணியைத் தொடங்கியுள்ளது. உள் நாட்டில்
கிடைக்கக் கூடிய பெரும் சாதனங்களுக்கும் இறக்குமதி செய்ய
வேண்டிய பெரும் சாதனங்களுக்கும் தேவை ஆணை கொடுக்
கப்பட்டுள்ளது. திட்டப் பணி முடிக்கப்பட்ட பிறகு, இம்
மாநிலத்தில் புதிய உரங்கள் கிடைப்பதுடன்கூட, குஜராத்,
உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து இது வரை
பெற்றுவந்த சோடா பவுடரும் உள் நாட்டிலேயே கிடைக்கும்.
இத்திட்டம் 1981 டிசம்பரில் தொடங்கப்பெறுமென எதிர்
பார்க்கப்படுகிறது.

(9) மெட்ராஸ் ஷூ பேப்ரிக் லிமிடெட்.

இத்திட்டம் நூறு சதவிகிதம் ஏற்றுமதியை அடிப்படையாகக்
கொண்ட ஒரு திட்டமாக அமைக்கப்பட்டுள்ளது. இதன் உற்
பத்தித் திறன் ஆண்டுக்கு 6 இலட்சம் ஜோடி காலணிகள் தயாரிப்
பதற்காகத் திட்டமிடப்பட்டது. வட ஆற்காடு மாவட்டத்
தில் தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளில் ஒன்றான
வாலாஜா பேட்டைக்கு அருகில் இதனை அமைக்கக் கருதப்
பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவு ரூ. 145 இலட்ச
மாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் டிட்கோவின்
முதலீடு ரூ. 10.4 இலட்சமாக இருக்கும். இந்தக் கூட்டுத்
துறை நிறுவனம் 1979 ஜூலையில் பதிவு செய்யப்பட்டது
தொழில் நுட்ப உத்திகள், பொறியியல் ஆலோசனைகள், ஏற்று
மதி உடன்பாடுகள் ஆகியவை குறித்து அன்னிய நாட்டு உட
ழைப்பாளர்களுடன் ஏற்பாடுகள் செய்ய நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
1981 இறுதிக்குள் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்
படுகிறது. இதனால் சுமார் 300 பேருக்கு வேலை வாய்ப்பளிக்க
இயலும்.

### (10) சதர்ன் அக்ரிபியூரின் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்.

இது கரும்புச் சக்கையிலிருந்து எண்ணெய் சுத்திகரிப்பு
ஆலைகள், ரெசின் தயாரிப்பாளர்களுக்குப் பயன்படக் கூடிய
பர்ப்யூரல் தயாரிப்பதற்கான திட்டமாகும். இது இந்நாட்டில்
நிறுவப்படக்கூடிய முதலாவதான தொழிலாகும். இத்தொழிற்
பிரிவு தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரத்திற்கு அருகில்
முண்டியம்பாக்கத்தில் நிறுவப்பட்டு வருகிறது. இதன் உற்
பத்தித் திறன் 3,000 டன்களாக இருக்கும். இத்திட்டத்திற்
கான செலவு ரூ. 732 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.
இதில் டிட்கோ ரூ. 42.90 இலட்சம் முதலீடு செய்துள்ளது.
இத்தொழிற்சாலை இந்த ஆண்டு டிசம்பருக்குள் முடிக்கப்
படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் உடனே
உற்பத்தி தொடங்கப் பெறும். இது 150 பேருக்கு நேரடியாக
வேலை வாய்ப்பளிக்கும். பொருள்களை எடுத்துச் செல்லுதல்,
சிப்பம் செய்தல் ஆகிய பணிகளுக்காக 300 பேருக்கு வேலை
வாய்ப்பு அளிக்கும். இதன் விற்று முதல் ரூ. 6 கோடியாக
இருக்கும். இதன் மூலம் மாநில அரசுக்கு ஆண்டுக்கு ரூ. 36
இலட்சம் வருவாய் கிட்டும்.

### (11) ஷிப் ஸ்கிராப் (இந்தியா) லிமிடெட்.

நமது நாட்டில் கழிவு இரும்புத் துண்டுகள் பெருமளவில்
பற்றாக் குறையாக உள்ளது. பழைய கப்பல்களை உடைத்துப்
பெறுவதற்கான வகையில் கப்பல்களை இறக்குமதி செய்ய இந்திய
அரசு அனுமதி அளித்துள்ளது. ஆண்டுக்கு சுமார் 4 கப்பல்களை
உடைக்கக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவு
ரூ. 115 இலட்சமாகும். இது, இரண்டு நிலைகளில் மேற்
கொள்ளப்படும். முதல் நிலைப் பணிக்கு ரூ. 21 இலட்சம்
மூலதனப்பங்காகவும் ரூ. 43 இலட்சம் கடனாகவும் வழங்கக்



கருதப்பட்டுள்ளது. இதில் டிட்கோவின் பங்கு மூலதனம்
ரூ. 5.45 இலட்சமாக இருக்கும். இரண்டாவது நிலையில்
இந்நிறுவனத்தின் நிதிவாயில்களிலிருந்தே நிதியைத் திரட்ட
லாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## III. ஆய்வில் உள்ள திட்டங்கள்.

### (1) பாலிஸ்டர் நூலிழை.

இம்மாநிலத்திலும் அண்டை மாநிலங்களிலிலும் உள்ள
துணி ஆலைகளுக்குப் போதிய விலையில் மூலப் பொருளைக்
கிடைக்கச் செய்யும் பொருட்டு, 15,000 டன் பாலிஸ்டர் நூலிழை
தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்கக் கருதப்பட்டுள்ளது.
40 கோடி ரூபாய் இதற்கென முதலீடு செய்யப்படும் : இதன்
மூலம் 1,500 பேருக்கு நேரடியாகவும் 2,000 பேருக்கு வேறு
வகையிலும் வேலை வாய்ப்பு கிடைக்கும். (கைத்தறித்
துறை வளர்ச்சி இதனால் விரிவடையும்) இசைவுக் கடிதத்திற்கு
''டிட்கோ'' விண்ணப்பம் செய்துள்ளது. மத்திய அரசுக்கு
இது அனுப்பப்பட்டு முடிவெடுக்கப்படாமல் உள்ளது.

### (2) மக்னீசியம் உலோகத் தொழிற்சாலை.

விமானம், கட்டுமான அலுமினியம், விண்வெளி ஆராய்ச்சி
வானிலை ஆராய்ச்சி ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படும்
மக்னீசியம் உலோகத்தை ஆண்டொன்றுக்கு 600 டன் அளவுக்கு
உற்பத்தி செய்யும் உள்நாட்டுத் தொழில் நுட்ப உதவியுடன்
அதாவது காரைக்குடியிலுள்ள மத்திய மின் இரசாயன
ஆராய்ச்சி நிறுவனத்தின் (CECRI) தொழில் நுட்ப
உதவியுடன் இத்தொழிற்சாலை நிறுவப்பட்டு வருகிறது.
இத் தொழிற்சாலை நிறுவப்பட்டதும் இறக்குமதி தேவை
குறைந்து, கணிசமான அன்னியச் செலாவணி மீதமாகும்.
இதற்கு 429 இலட்சம் ரூபாய் மூலதனச் செலவாகும். அதில்
டிட்கோ 135 இலட்சம் ரூபாய் முதலீடு செய்ய வேண்டிவரும்.
இத்திட்டத்தைச் செயல் படுத்தும் வகையில் காரைக்குடி மின்
இரசாயன ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியைப்

பெறவும், தமிழ்நாடு உப்பு உற்பத்திக் கழகத்திடமிருந்து
பொருளைப் பெறவும், தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து மூலப்
தொடர்ந்த மின் சக்தியைச் சலுகைக் கட்டணத்தில் பெறவும்
ஏற்பாடுகள் இறுதி செய்யப்பட்டு வருகின்றன. தற்போதைய
திட்டப்படி இந்தொழிற்சாலை 1982ல் உற்பத்தியைத்
தொடங்குமென எதிர் பார்க்கப்படுகிறது ; இதன் மூலம்
சுமார் 200 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

(3) தமிழ்நாடு ஸ்டீல்ஸ் விரிவுப் பணி.

இந்த உருக்காலையிடம் ஆண்டொன்றுக்கு 50,000 டன்
உற்பத்தித் திறன் கொண்ட ஊதுலை உள்ளது. ஆனால்,
தொடர் வார்ப்பட இயந்திரம் ஆண்டுக்கு 1,00,000 டன் வரை
உற்பத்தி செய்யும். தற்போது ஆண்டொன்றுக்கு 30,000
டன் உற்பத்தியாகிறது. மேம்பட்ட முறைகளினால் இந்த
உற்பத்தி படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது. அரக்
கோணம் உருக்காலையில் உற்பத்தியாகும் அளவுக்கும் அதிக
மாகவே, அரசுத் துறைகளுக்கு உருக்கு தேவைப்படுகிறது.
எனவேதான், மேற்கொண்டும் ஓர் ஊதுலையை நிறுவி, தொடர்
வார்ப்பட இயந்திரத்தில் கிடைக்கக் கூடிய கூடுதல் உற்பத்தித்
திறனைப் பயன்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இந்த உருக்
காலையை விரிவு படுத்த 3 கோடி ரூபாய் ஆகுமென மதிப்பிடப்
படுகிறது. இங்கு உருவாகி விற்பனையாகும் உருக்கின் மதிப்பு
6 கோடி ரூபாயாகும். விரிவு படுத்திய பிறகு விற்பனை 12
கோடி ரூபாயாக உயரும். இந்நிறுவனத்தில் தற்போது 600
பேர் வேலை செய்து வருகின்றனர் ; விரிவு படுத்திய பிறகு
கூடுதலாக 100 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

(4) தொழில் முறை வெடி மருந்துகள் தயாரிப்பு.

தொழில் முறை வெடி மருந்துகளின் தேவை பெருகியுள்ள
தால், சிவில் வெடி மருந்துகளை அடிப்படையாகக் கொண்ட
நைட்ரோகிளிசரின் வெடி மருந்துகள் தயாரிக்கும் ஒரு தொழிற்
சாலையை அமைக்குமாறு டிட்கோ நிறுவனத்திற்கு இந்திய அரசு
ஆலோசனை கூறியது ; 1979 டிசம்பரில் இசைவுக் கடிதமும்
வந்தது ; சுரங்கம் வெட்டுதல், கிணறு தோண்டுதல், கிராம



வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றில் வெடி மருந்துகளின் பற்றாக்
குறையைப் போக்க, சிறு அளவில், அடிப்படை சிவில் வெடி
மருந்துகளை இத் தொழிற்சாலை தயாரிக்கும். இத் தொழிற்
சாலையை நிறுவ சுமார் 15 கோடி ரூபாய் செலவாகும். வாய்ப்புக்
கூறுகள், நிலவர ஆய்வுகள் முடிந்துவிட்டன. இது குறித்து இத்
துறையின் பல்வேறு வல்லுநர்களையும் வெடி மருந்துக் கட்டுப்
பாட்டுத் தலைமை அதிகாரியையும் டிட்கோ கலந்தாலோசித்து
வருகிறது ; இத் தொழிற்சாலையை அமைக்கும் போது, எல்லா
வகையான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்ய இது உதவியாக
இருக்கும். நைட்ரிக் அமிலமும் அமோனியம் நைட்ரேட்டும்
இதற்கு முக்கியமாகத் தேவைப்படும் மூலப்பொருள்கள் ஆகும்.
அவை நம் நாட்டிலேயே கிடைக்கின்றன. அமிலம் அம்பத்தூரி
லேயே கிடைக்கிறது ; ஆனால் அமோனியம் நைட்ரேட் தமிழ்
நாட்டில் இன்னும் தயாரிக்கப்படவில்லை. இதைத் தயாரிக்க
சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் திட்ட
மிட்டு வருகிறது. இத் தொழிற்சாலை நிறுவி முடிந்ததும் 12
கோடி ரூபாய் அளவுக்கு வெடி மருந்துகள் விற்பனை செய்யும்
நிலையில் இருக்கும். கிராம வளர்ச்சிக்கும் சுரங்கம் வெட்டும்
தொழிலுக்கும் இது பெரிதும் உதவியாக இருக்கும். இதனால்
300 பேர் நேரடி வேலை வாய்ப்பும், 500 பேருக்கும் மேலாக
வேறு வகையில் வேலை வாய்ப்பும் பெறுவர்.

(5) வெப்பந்தாங்கிக் கற்கள்.

சேலத்தில் தோண்டியெடுக்கும் மாக்னசைட் தாதுப் பொரு
ளைப் பயன்படுத்துவதற்காகத் தமிழ் நாடு அரசுக்குச் சொந்த
மான தமிழ் நாடு மாக்னசைட் தாது நிறுவனம் இத் தொழிற்
சாலையை நிறுவத் திட்டமிட்டு வருகிறது. மாக்னசைட் தாதுப்
பொருளைத் தரமான மாக்னசைட்டாக மாற்ற இத் தொழிற்
சாலை உதவியாக இருக்கும். அனைத்து நாடுகள் தரத்திற்கேற்ற
உயர்ரக உயர்வெப்ப மாக்னசைட் வெப்பம் தாங்கிய கற்கள்
தயாரிக்க இது அவசியமாகும். தொழிற்சாலை நிர்மாணத் திட்டத்
தில் இத்தகைய தர மேம்பாடு இடம் பெற வேண்டும். இதனால்,

மொத்தத்தில், உருக்கு தயாரிப்புத் தொழில் கட்டுப்படியாகும்
வகையில் நடைபெற இயலும். நாம் செய்யும் முதலீட்டில் அதிக
ஆதாயம் பெற்று பணத்தை மீதம் செய்யும் வாய்ப்பிருக்கிறது.
ஐரோப்பாவிலுள்ள வெப்பந்தாங்கிக் கற்கள் நிறுவனத்தின் உட
ழைப்பு இத்தொழிற்சாலைக்குத் தேவைப்படும். தற்போது,
மூலப் பொருள்கள் ஐரோப்பாவில் சோதனை செய்யப்பட்டு
வருகின்றன. இத் தொழிற்சாலையை நிறுவ, மொத்தமாக,
நிர்மாண உதவி வகையில் சுமார் 15 கோடி ரூபாயும், வெப்பந்
தாங்கிக் கற்கள் உற்பத்திக்கென 15 கோடி ரூபாயும் முதலீடு
செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயற்
படுத்த 5 ஆண்டுகளாகும். இதனால் சுமார் 1,500 பேர் வேலை
வாய்ப்புப் பெறுவர்.

## (6) ஏ. பி. எஸ். ரெசின்ஸ்.

ஏ.பி.எஸ். ரெசின்ஸ் என்பது, மோட்டார் பாகங்கள், மின்
சாதனப் பொருள்கள், வீட்டு உபயோகக் கருவிகள் ஆகியவற்றைத்
தயாரிக்கப் பயன்படும் பொறியியல் பிளாஸ்டிக் பொருளாகும்.
ஆண்டொன்றுக்கு 2,000 டன் அளவுக்கு இதை உற்பத்திச் செய்ய
1973–ல் இசைவுக் கடிதம் வந்தது. இதற்குச் சுமார் 400 இலட்சம்
ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் டிட்கோ
வின் பங்கு சுமார் 35 இலட்சம் ரூபாயாக இருக்கும். தொழிற்
சாலையை நிறுவ அயல் நாட்டுத் தொழில் நுட்ப உதவி ஏதும்
அனுமதிக்கப்படாது என்று இந்திய அரசு நிபந்தனை விதித்தது.
எனவே அயல் நாட்டில் ஏ.பி.எஸ். ரெசின்ஸ் உற்பத்தியில் நன்கு
அனுபவம் வாய்ந்த வல்லுநர் ஒருவர் தொழில் நுட்ப ஆலோசனை
வழங்குவதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னையி
லுள்ள இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத்தில் அமைக்கப்பட்ட
முன்னோடித் தொழிற்சாலையில் ரெசின்ஸ் தயாரிப்பு முறையை
விளக்கிக் காட்டி அவ்வாறு தயாரிக்கப்பட்ட மாதிரிப் பொருள்
உயர் தரமானதாக அமைந்திருந்தது. அப்பொருளை கூட்டுத்
துறையில் தயாரிக்க முன்வரும் உரிய தொழிலதிபர் ஒருவரைத்
தெரிந்தெடுக்கும் முயற்சியில் டிட்கோ ஈடுபட்டுள்ளது. இக்
கூட்டுத் துறையில் பங்கேற்கும் தொழிலதிபர் குறித்து, இறுதி



முடிவெடுக்கப்பட்ட மூன்றாண்டுகளுக்குள் இத் தொழிற்சாலை
நிறுவப் பெற்றுவிடும். முழு அளவு உற்பத்தியில் சுமார் 130
பேருக்கு வேலை வாய்ப்பு தரும்.

## (7) மூக்குக் கண்ணாடிப் பொருள்கள்.

மூக்குக் கண்ணாடிப் பொருள்களை அமேரிக்காவுக்கும்,
வளர்ச்சி பெற்ற வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய நல்ல
வாய்ப்புள்ளது. அமெரிக்கா மட்டும் தற்போது, ஆண்டொன்றுக்கு
150 கோடி ரூபாய் பெறுமானமுள்ள கண்ணாடிப் பொருள்களை
இறக்குமதி செய்கிறது. குறைந்த சக்தி தேவைப்படுகிற தொழி
லாளர்களை அதிக அளவில் பயன்படுத்துகிறதொரு தொழிலாக
இது அமைந்துள்ளது. அவ்வகையில் இந்தியா போன்றதொரு
நாட்டிற்கு இது மிகவும் ஏற்ற தொழிலாகும். ஏற்றுமதிக்
கென்றே மூக்குக் கண்ணாடிப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்
சாலையொன்று 1978–ல் தொடங்கப்பட்டது. இதன் உற்பத்தி
எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் ஆகும். அதற்கான
மூலதனச் செலவு சுமார் 1.5 கோடி ரூபாயாகும். முழு அளவில்
உற்பத்தியைத் தொடங்கும்போது இதன் விற்பனை சுமார் 4
கோடி ரூபாயாக இருக்கும். இத்தொழிற்சாலையில் சுமார் 300
பேரை வேலைக்கு அமர்த்தலாம்.

1979 செப்டம்பரில் இதற்கு இசைவுக் கடிதம் பெறப்பட்டது.
தொடக்க அறிக்கையிலிருந்து இவ்வகையில் நல்ல வாய்ப்பு இருப்
பதை அறிய முடிகிறது. இத் தொழிற்சாலையில் பங்கு பெற
ஏற்ற அமெரிக்கத் தொழிலதிபர் ஒருவரோடு தொடர்பு கொள்ளப்
பட்டுள்ளது. நாம் உற்பத்தி செய்யக்கூடிய மூக்குக் கண்ணாடி
கள் முழுவதையும் விலைக்கு வாங்க ஏற்ற வணிகர் சிலரும்
கண்டறியப்பட்டு உள்ளனர்.

## (8) கைக்கடிகாரங்கள் தயாரிப்புத் தொழிற்சாலை.

தொடக்கத்தில் ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் கைக்கடி
காரங்கள் தயாரிக்கும் வசதியுடன் அமைந்த தொழிற்சாலையை
தொடங்குவதற்குத் தொழில் நுட்ப உதவியும் ஆலோசனையும்

பெற ஐரோப்பாவிலிருந்து தொழில் நுட்ப உடனுழைப்பு பெறு
வதற்கு 'டிட்கோ' விரிவான பேச்சு வார்த்தைகளை நடத்தி
வருகிறது. தயாரிப்பு அளவை, பின்னர் 20 இலட்சமாக விரிவு
படுத்தலாம். கைக்கடிகாரத் தயாரிப்புப் பிரிவுகள் பலவற்றை
மாநிலம் முழுவதிலும் தொடங்கலாம். இத்தொழிற்சாலை
'தாய் அமைப்பாக' இருந்து கைக்கடிகாரத் தயாரிப்புப் பிரிவுகள்
பலவற்றைத் தொடங்க உதவியாக இருக்கும். இதன் மூலம்
2,500 பேர் வேலை வாய்ப்புப் பெறுவர். இதற்குச் சுமார் 20
கோடி ரூபாய் முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. சுமார்
ஐந்தாண்டுக் காலத்தில் படிப்படியான வளர்ச்சி பெற்ற பிறகு
முதலீட்டுத் தொகையைத் திரும்பப் பெற இயலும். தாய்
அமைப்பாகத் திகழக்கூடிய இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்
படவிருக்கும் கடிகாரம், எளிய மக்களின் தேவைக்காக உருவாக்கப்
படுகிறது.

(9) விளைல் அசிடேட் மானோமர் திட்டம்.

10,000 டன் வினைல் அசிடேட் மானோமர் தயாரிப்பதற்
கான திட்டம் குறித்த 'டிட்கோ' 1978-ஆம் ஆண்டு டிசம்பரில்
இசைவுக் கடிதத்திற்கு விண்ணப்பித்தது. கரும்புக் கழிவுப் பாகு,
தொழிற்சாலையில் பயன்படுத்தப்படும் ஆல்கஹால் முதலியன
இதற்கான மூலப்பொருட்கள் ஆகும். இவை இம் மாநிலத்தில்
ஏராளமாகக் கிடைக்கின்றன. இவ்விண்ணப்பம் மத்திய அரசிடம்
இன்னும் முடிவு எடுக்கப்படாமல் உள்ளது.

(10) 2-ஈதைல் ஹெக்சனால் திட்டம்.

இது பிளாஸ்டிக் தொழிலுக்குத் தேவையான அடிப்படை
இரசாயனப் பொருளாகும். ஆண்டொன்றுக்கு 1,500 டன்
உற்பத்தித்திறனுக்கான இசைவுக் கடிதத்தை டிட்கோ பெற்றது.
ஆனால் இத்திட்டத்தைச் செயல்படுத்தினால் ஆதாயமானதாக
அமையாதென்று கண்டறியப்பட்டது. எனவே 10,000 டன்
உற்பத்தித்திறனுக்கான புதிய இசைவுக் கடிதத்திற்கு 1979
செப்டம்பரில் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. முடிவெடுக்கப்
படாமல் இவ்விண்ணப்பம் மத்திய அரசிடம் உள்ளது.



(11) ஆட்டுத் தோல் பதனத் திட்டம்.

பதப்படுத்தப்பட்ட ஆட்டுத் தோல்களுக்கு வெளிநாடுகளில்
பெருகி வரும் தேவைகளைக் கருத்தில் கொண்டு, ஓராண்டுக்கு
12 இலட்சம் திறன் கொண்ட 100 சதவிகிதம் ஏற்றுமதியையே
நோக்கமாகக் கொண்ட பதப்படுத்திய ஆட்டுத் தோல் தயாரிக்கும்
திட்டத்தை டிட்கோ செயற்படுத்தவுள்ளது. இத்திட்டத்திற்
கான இசைவுக் கடிதத்தை டிட்கோ 31-7-1978ஆம் நாளன்று
பெற்றது. இத்திட்டத்தை கூட்டுறவுத்துறையில் செயல்படுத்த
ஒரு தகுந்த தொழில் முனைவரை தற்போது கண்டறிந்து வருகிறது
திட்டச் செலவு, டிட்கோவில் பங்கு முதலிய விவரங்கள்
கணக்கிடப்படுகின்றன. இத்திட்டம் 18 மாதங்களில் முடிக்கப்
படும். இது 800 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும். இத்
திட்டத்திற்கான செலவு ரூ. 5.75 கோடியாக இருக்குமென
எதிர்பார்க்கப்படுகிறது.

(12) இரசாயனச் சாதனங்கள்.

கைனா, டேப்லான் முதலிய உயர்வகை துணைச் சாதனங்
களுடன் கூடிய சிறப்புச் சாதனங்கள், இரசாயனம் ஆகியவற்றை
வடிவமைத்து தயாரித்தல் தொடர்பாகத் தனியார் தொழில்
முனைவர் ஒருவர் அனுப்பியுள்ள செயற் குறிப்பை டிட்கோ
ஆய்ந்து வருகிறது. தொழில் நிலையில் பின் தங்கிய பகுதியான
ஓசூரில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. திட்டச் செலவு
ரூ. 105 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. டிட்கோவின்
பங்கு ரூ. 10.40 இலட்சமாக இருக்கும். இத்திட்டம் குறித்த
தொழில் நுட்ப, பொருளாதார வாய்ப்புகள் ஆய்வு செய்யப்
படுகின்றன. இத் திட்டத்தைக் கூட்டுத் துறையில் செயல்
படுத்துவது குறித்த முடிவு விரைவில் எடுக்கப்படும். இரண்
டாண்டு காலத்தில் முடிக்கப்படும். இத்திட்டம் 500 பேர்களுக்கு
வேலை வாய்ப்பளிக்கும்.

(13) ஃபேட்டி ஆசிட் திட்டம்.

சோப்பு, ஒப்பனைப் பொருட்கள், மசகுப் பொருட்கள்,
ரப்பர் பொருட்கள், வர்ணம், பிளாஸ்டிக் முதலிய முக்கிய
தொழில்களுக்கு ஃபேட்டி ஆசிட் அதிக அளவு தேவைப்படுவதை

கருத்தில் கொண்டு ஆண்டொன்றுக்கு 12,000 டன்
திறன் கொண்ட பேட்டி ஆசிட் தயாரிப்புத் திட்டத்தை டிட்கோ
ஆய்ந்து வருகிறது. இத்திட்டத்தின் தொழில் நுட்பப் பொருளா
தார வாய்ப்புகளைத் தீர்மானித்து சாத்தியக் கூறு அறிக்கையைத்
தயாரிக்க ஒரு ஆலோசனைக் குழுவை டிட்கோ அமைத்துள்ளது.
1980ஆம் ஆண்டில் அறிக்கை பெறப்பட்டதன் பேரில் இத்திட்டம்
குறித்த இறுதி முடிவு எடுக்கப்படும். ஆரம்ப முடிவுகளின்படி,
இத்திட்டத்திற்கு ரூ. 550 இலட்சம் செலவு ஏற்படுமென்றும்,
150 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டுமெனவும் எதிர்பார்க்கப்
படுகிறது.

(14) பாலினாசிக் எச்.டபிள்யூ.எம். ஸ்டேபில் பைபர் திட்டம்.

இத்திட்டத்தை முதலில் புதுக்கோட்டை மாவட்டத்தில்
அமைப்பதெனக் கருதப்பட்டது. புதுக்கோட்டையிலும் சுற்றி
யுள்ள பகுதிகளிலும் கிடைக்கக்கூடிய கலப்பின யூகலிப்ட்சை
வடித்தெடுத்து இரசாயனக் கூழையும் பின்னர் உயர்ரக 'ஸ்டேபில்
பைபரையும்' (இது நேர்த்தியான நீண்ட பருத்தி இழைக்கு
ஓரளவு சமமானது) தயாரிக்கலாம். அந்தக் கலப்பின யூக
லிப்ட்சு வேறு வகையில் பயன்படுத்தப்படுவதால் இத்திட்டம்
திருத்தி அமைக்கப்பட்டு வருகிறது. தற்போது இரசாயனக்
கூழுக்கான மாற்று வாயில்கள் ஆராயப்படுகின்றன. இரசாயனக்
கூழுக்கான தகுந்த வாயில் கிடைத்த பிறகு ரூ. 3 கோடி முத
லீட்டில், பாலினாசிக் ச்.டபள்யூ.எம். ஸ்டேபில் பைபர்
திட்டத்தை அரசு மேற்கொள்ளும். திருத்தியமைக்கப்பட்ட
இத்திட்டம் 250 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும். இத்
திட்டம் கைத்தறித் துறையினருக்கு இன்றியமையாததாகும்.
இதனால் நிலையான விலையில் சிறந்த மூலப் பொருட்களை
அவர்கள் தொடர்ந்து பெறுவார்கள்.

(15) --(16) பெட்ரோ, மெரைன் கெமிகல்.

இம்மாநிலத்தில் ஏனைய பிற திட்டங்களைப் போல பெட்ரோ
கெமிகல், மெரைன் கெமிகல் திட்டங்களை மேம்படுத்துவது
குறித்தும் ஆராயப்படுகிறது. இத்திட்டத்தை குறித்த ஆய்வு
தொடக்க நிலையிலேயே உள்ளது.



(17) மெட்ராஸ் மெஷின் டூல்ஸ் மேன்யூபேக்சரர்ஸ் லிமிடெட்.

மெட்ராஸ் மெஷின் டூல்ஸ் மேன்யூபேக்சுரர்ஸ் லிமிடெட்
நிறுவனத்தில் ரூ. 10 இலட்சத்தை டிட்கோ மூலதனப்பணமாகச்
செலுத்தி அதனைக் கூட்டுத்துறை நிறுவனமாக மாற்றிச் செயல்
திறனை மேம்படுத்தவேண்டுமென டிட்கோவை அந்நிறுவனம்
கேட்டுள்ளது. அந்நிறுவனத்தில் தற்போதைய விற்று முதல்
ரூ. 50 இலட்சம் ஆகும். அதன் வணிக நடவடிக்கைகள் நிலை
பெற்று, முழு உற்பத்தியில் சென்றால் அதன் விற்று முதல் ரூ. 1.5
கோடியாக அமையும். இத்திட்டம் இன்னும் ஆய்வில் உள்ளது.

செயல்முறை விளைவுகள்.

31-3-1980ஆம் நாள் வரை டிட்கோவிற்கு ரூ. 631.94
இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. 31-3-1980 வரை தொழில்
பிரிவு வாரியாக ஏற்பட்ட இழப்புகளும், காரணங்களும் கீழே
குறிக்கப்பட்டுள்ளன.

ஆலங்குளம் சிமெண்டுத் தொழிற்பிரிவு.

இத்தொழில் பிரிவு 31-3-1976 வரை டிட்கோவின் கட்டுப்
பாட்டில் இருந்தது. அது 1-4-1976 முதல் தமிழ் நாடு
சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்டுக்கு (டிட்கோவிற்குச்
சொந்தமான துணை நிறுவனம்) மாற்றப்பட்டது. தண்ணீர்,
நிலக்கரி, மின்சாரம் ஆகியவற்றின் பற்றாக்குறையே ரூ. 169.39
இலட்சம் இழப்பு ஏற்பட்டதற்கு முக்கிய காரணம் ஆகும்.

தமிழ் நாடு ஸ்டீல்ஸ், அரக்கோணம்.

இத்தொழிற் பிரிவு 1973-74-ல் ரூ. 12.34 இலட்சம் ஆதாயம்
பெற்றிருந்தும் உருக்கின் தேவை குறைந்ததினால் 31-3-1980
வரை ரூ. 455.55 இலட்சம் இழப்பைக் கண்டுள்ளது. பெரும்
மூலதனச் செலவு, அதிகமான மின் கட்டணம், அரசுத் துறை

களுக்கும் மீள் உருள் விழுத்தப் பொருட்களைக் கிடங்கு விலைக்கு
வழங்கியது (இது நம்முடைய உற்பத்திச் செலவை விடவும்
வெளிச்சந்தை விலையை விடவும் குறைவு) ஆகிய காரணங்களால்
தொடர்ந்து இழப்பு நேர்த்துள்ளது. உற்பத்திச் செலவையும்
சாதாரணப் பங்குத் தொகையில் திரும்ப பெறக்கூடிய தொகை
யில் 12 சதவீதத்தையும் அடிப்படையாகக் கொண்டு தமிழ்
நாடு ஸ்டீல்ஸ் விலைகளை நிர்ணயிக்க வேண்டுமென 1979
டிசம்பரில் அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. முறையாக
மின்சாரம் வழங்கப்படுவது பற்றி உறுதியளிக்கப்படுமாயின்
1980–81ல் ஆதாயம் கிடைக்கும்.

**வளர்ச்சிப் பிரிவு:**

1980 ஆம் ஆண்டு மார்ச் 30 ம் நாள் வரை ரூ. 7 இலட்சம்
இழப்பு ஏற்பட்டுள்ளது. பல்வேறு பொதுத்துறை, கூட்டுத்துறை
நிறுவனங்களின் சாதாரணப் பங்கு மூலதனங்களில் கடன்
நிதிகளை முதலீடு செய்ததால் இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு ஸ்டீல் தயாரிக்கும் உருக்குப் பொருட்களுக்கு
ஆதாய விலைகள் பெறுவதன் மூலம் 1980–81 ஆம் ஆண்டில்
91.02 இலட்சம் ஆதாயம் பெறுவதற்கு டிட்கோ திட்ட
மிட்டுள்ளது.

**அரசுக்கு வருமானங்கள்.**

பொதுத்துறை, கூட்டுத்துறை ஆகியவற்றில் ரூ. 280.99
கோடி மூலதனச் செலவில் 30 திட்டங்களைச் செயல் படுத்தும்
கருவியாக டிட்கோ விளங்குகிறது. இன்னும் பொதுத்துறை,
கூட்டுத்துறை ஆகியவற்றில் ரூ. 187.15 கோடி கூடுதல் மூலதனச்
செலவில் 18 திட்டங்களைச் செயல்படுத்தவும் ஆராய்ந்து வரு
கிறது. இம்மாநிலத்தில் உள்ள இயற்கை வளங்களைப் பயன்
படுத்திக் கொள்வதும், சிறு தொழில்கள் குடிசைத் தொழில்கள்
ஆகியவற்றிற்குத் தேவையான மூலப் பொருட்களை வழங்குவதும்
கூடுதலாக வேலை வாய்ப்பு ஏற்படுத்துவதன் மூலம் இம்மாநிலத்



தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும்.
பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து மட்டும் ஆண்டொன்றுக்கு
விற்பனை வரியின் மூலம் அரசுக்குக் கிடைக்கக்கூடிய வருவாய்
ரூ. 3 கோடியாகும். இதே போல கூட்டுத்துறைத் திட்டங்களிட
மிருந்து கிடைக்கும் தொகை ரூ. 5 கோடிக்கும் மேலாகும்.
1979–80 ஆம் ஆண்டில் பொதுத் துறை கூட்டுத்துறை திட்டங்
களின் விற்றுமுதல் பின்வருமாறு:—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| பொதுத்துறைத் திட்டங்கள் .. .. | 33.52 |
| கூட்டுத்துறைத் திட்டங்கள் .. .. | 144.61 |
| மொத்தம் .. .. .. .. | 178.13 |

டிட்கோ புது நிறுவனங்களை ஏற்படுத்துவதோடு, ஆயத்
தீர்வைகள் மூலமாகவும், வருமான வரி மூலமாகவும் மத்திய
அரசுக்கு பெரும் வருவாயை ஈட்டித் தருகிறது. சிலவகைப்
பொருட்களின் இறக்குமதியையும் குறைத்து நாட்டுக்கு வளஞ்
சேர்க்கிறது.

**மூலதனச் செலவு:**

1980–81–ல் கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி டிட்கோ மூலதனச்
செலவிற்கு வகை செய்துள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| பொதுத்துறைத் திட்டங்கள் .. | 298.48 |
| கூட்டுத்துறைத் திட்டங்கள் .. .. | 246.43 |
| மொத்தம் .. .. .. .. | 544.91 |

திட்டம் வாரியான விவரங்கள் இணைப்பு I அண்டு II
ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ளன. 1980—81 ஆம் ஆண்டிற்
கான நிதிவாயில்கள், செலவினங்கள் குறித்த விவரம் இணைப்பு
III–ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

வேலை வாய்ப்பு:

பின்வரும் விவரங்களின்படி 10,525 பேர்களுக்கு நேரடியாக
வேலைவாய்ப்பு அளிப்பதில் டிட்கோ வெற்றி கண்டுள்ளது.

| | |
|---|---|
| 31—3—1980 வரை உற்பத்தியைத் தொடங்கிய திட்டங்களில். | 9,375 பேர்கள். |
| 1980—81—ல் தொடங்குமென எதிர்பார்க்கப்படும் திட்டங்களில். | 1,150 பேர்கள். |
| | 10,525 |

செயற்படுத்தப்பட்டுவரும் திட்டங்களிலும் ஆய்வில் உள்ள
திட்டங்களிலும் 13,580 பேர்களுக்குக் கூடுதலாக வேலை
வாய்ப்பு வழங்க டிட்கோ கருதியுள்ளது.

எதிர்கால வாய்ப்புக்கள்.

பொதுத் துறையிலும், கூட்டுத் துறையிலும் தொழில்களை
மேம்படுத்துவதில் போதிய அனுபவம் பெற்று தமிழ்நாடு அரசிட
மிருந்து நிதி உதவியும் பெற்று, தமிழ்நாட்டில் தொழில்
வளர்ச்சியை விரைவு படுத்த பெரும் திட்டங்களை நிறுவுவது
குறித்தும் டிட்கோ சிந்தித்துள்ளது. வரும் ஆண்டுகளில் சிறிய பல
திட்டங்களை வகுக்கவும், சிக்கனமான முறையிலும் வெற்றியான
வகையிலும் புதிய தொழில்களைத் தொடங்குவதற்குத் தொழில்



முனைவர்களுக்கு ஆலோசனைகளையும், தொழில் நுட்ப உத்தி
களையும் வழங்கும் வகையில் தன் நடவடிக்கைகளை பல
திறப்படுத்தவும் டிட்கோ கருதி வருகிறது. இம்மாநிலத்தை
தொழில்மயமானதாக விரைந்து மாற்ற டிட்கோ ஓர் ஊக்கக்
கருவியாக செயலுரம் ஊட்டும் நிறுவனமாகத் திகழும்.

# இணைப்பு I

## டிட்கோவின் பொதுத்துறைத் திட்டங்களைக் காட்டும் அட்டவணை.

| தொடர் எண், திட்டத்தின் பெயர், அமையும் இடம் (முடிவு செய்யப்பட்டால்). (1) | உற்பத்திப் பொருளின் பெயர், ஆண்டு உற்பத்தித் திறன் (முடிவு செய்யப்பட்டால்). (2) | திட்டச் செலவு. (3) (ரூபாய் இலட்சத்தில்.) | கடன் உட்பட 31-3-80 வரை டிட்கோவின் முதலீடு. (4) (ரூபாய் இலட்சத்தில்.) | 1980—81 ஆம் ஆண்டு செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கிணங்க டிட்கோவின் மூலதனச் செலவு. (5) (ரூபாய் இலட்சத்தில்.) | வேலை வாய்ப்புத் திறன் (நபர்களின் எண்ணிக்கை). (6) |
|---|---|---|---|---|---|
| 1. உற்பத்தியிலுள்ள திட்டங்கள்— | | | | | |
| 1 தமிழ்நாடு ஸ்டீல்ஸ், அரக்கோணம். | எஃகுக் கட்டைகள் ஆண்டுக்கு 36,000 டன். | 700.00 | 909.13 | 18.18 | 600 |
| 2 தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேசன் லிமிடெட், சிமெண்ட் தொழிற் பிரிவு, ஆலங்குளம்.* | சிமெண்ட் ஆண்டுக்கு 4,00,000 டன். | 686.00 | 686.00 | | 1,475 |
| 3 தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேசன் லிமிடெட், சிமெண்ட் தொழிற் பிரிவு, அரியலூர். | சிமெண்ட் ஆண்டுக்கு 5,00,000 டன். | 2,876.00 | 824.81 | .. | 800 |
| 2. நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள்— | | | | | |
| 1 தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேசன் லிமிடெட் ஆலங்குளத்திலுள்ள சிமெண்ட் தொழிற்பிரிவை நவீனப் படுத்துதல்.* | நவீனப்படுத்துதல் மட்டும். | 388.00 | 32.49 | 57.00 | .. |
| 2 தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேசன் லிமிடெட் (கல்நார்) சிமெண்ட்டிப் பலகை தயாரிப்புத் திட்டம், ஆலங்குளம்.* | கல்நார் சிமெண்ட்டிப் பலகைகள் ஆண்டுக்கு 36,000 டன். | 212.00 | 22.00 | 21.00 | 500 |

## டிட்கோவின் பொதுத்துறைத் திட்டங்களைக் காட்டும் அட்டவணை.

| தொடர் எண், திட்டத்தின் பெயர், அமையும் இடம் (முடிவு செய்யப்பட்டால்). | உற்பத்திப் பொருளின் பெயர், ஆண்டு உற்பத்தித் திறன் (முடிவு செய்யப்பட்டால்). | திட்டச் செலவு. | கடன் உட்பட 31-3-80 வரை டிட்கோவின் முதலீடு. | 1980—81 ஆம் ஆண்டு செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கிணங்க டிட்கோவின் மூலதனச் செலவு. | வேலை வாய்ப்புத் திறன் (நபர்களின் எண்ணிக்கை). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 3 பரிசீலனையிலுள்ள திட்டங்கள் | | | | | |
| 1 தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேசன் லிமிடெட், ஆலங்குளம் சிமெண்ட் தயாரிக்கும் இயந்திரத்தில் 'பில்டர்பிரஸ் பிராசஸ் கொண்டு வருதல்'* | நவீனப்படுத்துதல் மட்டும். | 300.00 | .. | 15.00 | .. |
| 2 பாலிஸ்டர் ஸ்டேபிள் பைபர் திட்டம். | பாலிஸ்டர் ஸ்டேபிள் பைபர். | 4,000.00 | 0.01 | 1.00 | 1,500 |
| 3 மக்னீசியம் மெட்டல் திட்டம் மரியூர், இராமநாதபுரம் மாவட்டம்.* | மக்னீசியம் உலோகம் ஆண்டுக்கு 600 டன். | 429.00 | 4.06 | 50.00 | 200 |
| 4 தமிழ்நாடு ஸ்டீல்ஸ் விரிவாக்கம் கூடுதல் உலைகளுக்கு வகை செய்தல். | உருக்குக் கட்டைகள் ஆண்டுக்கு 36,000 டன். | 300.00 | | 100.00 | 100 |
| 5 தொழிற்சாலை வெடி மருந்துப் பொருள்கள் தயாரிப்புத் திட்டம். | தொழிற்சாலை வெடி மருந்துப் பொருள்கள் ஆண்டுக்கு 15,000 டன். | 1,400.00 | 0.49 | 35.00 | 300 |
| | | 11,291.00 | 2,478.99 | 297.18 | 5,275 |

குறிப்பு.—மேற்சொன்ன திட்டங்களின் திட்டச் செலவு, வேலை வாய்ப்புத் திறன் ஆகியவற்றின் சுருக்கம் பின்வருமாறு:—

| விவரங்கள். | திட்டங்களின் எண்ணிக்கை. | திட்டச் செலவு. (ரூ. இலட்சத்தில்.) | வேலை வாய்ப்புத் திறன். |
|---|---|---|---|
| உற்பத்தியிலுள்ள திட்டங்கள் .. | 3 | 4,262.00 | 2,875 |
| நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்கள் .. | 2 | 600.00 | 300 |
| பரிசீலனையிலுள்ள திட்டங்கள் .. | 5 | 6,429.00 | 2,100 |
| | 10 | 11,291.00 | 5,275 |

1,975 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திறன் கொண்டவையும், ரூ. 20,15 இலட்சம் திட்டச் செலவிலானவையுமான ஐந்து திட்டங்கள் (அட்டவணையில்* குறியிடப்பட்டவை) பின் தங்கிய பகுதிகளில் உள்ளன.

## இணைப்பு—II.

### டிட்கோவின் கூட்டுறவுத் திட்டங்களைக் காட்டும் அட்டவணை.

| தொடர் எண், திட்டத்தின் பெயர், அமையும் இடம் (முடிவு செய்யப்பட்டால்) உற்பத்தி தொடங்கிய நாள் (உற்பத்தி தொடங்கப் பட்டிருப்பின்). | உற்பத்திப் பொருளின் பெயர், ஆண்டு உற்பத்தித் திறன் (முடிவு செய்யப்பட்டால்). | திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்) | டிட்கோவின் பொறுப்பு. (ரூபாய் இலட்சத்தில்) | இணைப்புக் கடன் உட்பட 31-3-80 வரை டிட்கோவின் முதலீடு. (ரூபாய் இலட்சத்தில்) | 1980-81 வரவு-செலவு திட்ட மதிப்பீட்டிற்கிணங்க டிட்கோவின் முதலீடு. | வேலை வாய்ப்புத் திறன் (நபர்களின் எண்ணிக்கை). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 உற்பத்தியிலுள்ள திட்டங்கள்— | | | | | | |
| 1 சதர்ன் பெட்ரோகெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேசன் லிமிடெட், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டம் 1975 ஜூனில் உற்பத்தி தொடங்கப்பட்டது. | நாளுக்கு டன். அமோனியா .. 1,100; யூரியா .. 1,600; டிஏபி/என்பிகே 600; கந்தக அமிலம் 470; பாஸ்பாரிக் அமிலம் 165 | 10,508.00 | 610.50 (ரூபாய் 110.50 இலட்சம் உரிமைப் பங்கு உட்பட). | 725.00 | .. | 1,650 |
| 2 தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட் இராணிப்பேட்டை, வட ஆற்காடு மாவட்டம் (1975 அக்டோபரில் உற்பத்தி தொடங்கப்பட்டது.)* | ஆண்டுக்கு டன். பிசிடி பவுடர்.. 3,300; சோடியம் டைகுரோமேட் .. 4,315; சோடியம் சல்பேட். 3,400 | 191.35 | 10.40 | 10.40 | .. | 570 |
| 3 பாண்டியன் கெமிகல்ஸ் லிமிடெட், சிங்கம்பட்டி கிராமம், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம் (1975 ஜூலையில் உற்பத்தி தொடங்கப்பட்டது.)* | பொட்டாசியம் குளோரேட் ஆண்டுக்கு 3,630 டன். | 96.20 | 6.24 | 6.24 | | 155 |

இணைப்பு—II

டிட்கோவின் கூட்டுறவுத் திட்டங்களைக் காட்டும் அட்டவணை.

| தொடர் எண், திட்டத்தின் பெயர், அமையும் இடம் (முடிவு செய்யப்பட்டால்) உற்பத்தி தொடங்கிய நாள் (உற்பத்தி தொடங்கப் பட்டிருப்பின்). | உற்பத்திப் பொருளின் பெயர், ஆண்டு உற்பத்தித் திறன் (முடிவு செய்யப்பட்டால்) | திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்) | டிட்கோவின் பொறுப்பு. (ரூபாய் இலட்சத்தில்) | இணைப்புக் கட்டப்பட்ட 31-3-80 வரை டிட்கோவின் முதலீடு. (ரூபாய் இலட்சத்தில்) | 1980-81 வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் இணங்க டிட்கோவின் முதலீடு. | வேலை வாய்ப்புத் திறன் (நபர்களின் எண்ணிக்கை.) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 4 தமிழ்நாடு தாதா பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட் பல்லாவரம், செங்கல்பட்டு மாவட்டம் (செயல்பட்டு வந்த தொழிற்பிரிவு 24-3-1973 அன்று எடுத்துக் கொள்ளப்பட்டது). | மருந்துகளும், மருந்துப் பொருள்களும். | 183.53 | 23.40 | 23.40 | .. | 625 |
| 5 சதர்ன் போராக்ஸ் லிமிடெட், தாட்சூர் கிராமம் பொன்னேரி மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம் (1976 ஜனவரியில் உற்பத்தி தொடங்கப்பட்டது.) | போரக்ஸ் ஆண்டுக்கு 15,000 டன் போரிக் ஆசிட் ஆண்டுக்கு 300 டன். | 161·98 | 12·18 | 50.18 | .. | 150 |
| 6 டைனாவிசன் லிமிடெட், அடையாறு, சென்னை (1975 ஜூனில் உற்பத்தி தொடங்கப்பட்டது). | ஆண்டுக்கு 20,000 தொலைக் காட்சிப் பெட்டிகள். | 75.00 | 10.00 | 13.50 | (—)2.58 | 400 |
| 7 ஏசியா டொபாக்கோ லிமிடெட், முகண்டபள்ளி கிராமம், ஹோசூர் அருகே, தருமபுரி மாவட்டம் (1976 ஜூனில் உற்பத்தி தொடங்கப்பட்டது).* | சிகரெட்டுகள் ஆண்டுக்கு 45,000 இலட்சம் சிகரெட்டுகள். | 178.44 | 30.80 | 32.60 | (—) 6.80 | 1,000 |

இணைப்பு—II

டிட்கோவின் கூட்டுறவுத் திட்டங்களைக் காட்டும் அட்டவணை.

| தொடர் எண், திட்டத்தின் பெயர், அமையும் இடம் (முடிவு செய்யப்பட்டால்) உற்பத்தி தொடங்கிய நாள் (உற்பத்தி தொடங்கப் பட்டிருப்பின்). | உற்பத்திப் பொருளின் பெயர், ஆண்டு உற்பத்தித் திறன் (முடிவு செய்யப்பட்டால்) | திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்) | டிட்கோவின் பொறுப்பு. (ரூபாய் இலட்சத்தில்) | இணைப்புக் கடன் உட்பட 31—3—80 வரை டிட்கோவின் முதலீடு. (ரூபாய் இலட்சத்தில்) | 1980—81 வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் இணங்க டிட்கோவின் முதலீடு. | வேலை வாய்ப்புத் திறன் (நபர்களின் எண்ணிக்கை.) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 8 தமிழ் நாடு ஆல்கலைன் பாட்டரிஸ் லிமிடெட் தொழிற்பேட்டை, அம்பத்தூர் (1976 ஜனவரியில் உற்பத்தி தொடங்கப்பட்டது.) | நிக்கல் காட்மியம் பாட்டரிகள் பல்வேறு வகைகளில் ஆண்டுக்கு 50 இலட்சம் ஆம்பியர் அவர்ஸ். | 37.65 | 10.00 | 25.00 | .. | 150 |
| 9 இரேட் சீ டிராலர் பில்டிங்ஸ் யார்டு மண்டபம் (முதல் கட்ட பழுது பார்க்கும் பிரிவு 1976 ஜனவரியில் தொடங்கப் பட்டது).* | மீன் பிடி படகுகள் 16. | 18.75 (முதல் கட்ட பழுது பார்க்கும் பணிக்கு) | 3.05 | 2.93 | 5.00 | 150 |
| 10 மாருதி கிரிஸ்டல் சால்ட் கம்பெனி லிமிடெட், திருப்போரூர், செங்கல்பட்டு மாவட்டம் (1976 ஜனவரியில் உற்பத்தி தொடங்கப்பட்டது). | தொழிற் சாலைகளுக்குத் தேவைப்படும் உப்பு ஆண்டுக்கு 1,20,000 டன். | 65.00 | 6.50 | 11.58 | .. | 500 |
| 11 அரக்கோணம் கேஸ்டிங்ஸ் அண்டு போர்ஜிங்ஸ் லிமிடெட் அரக்கோணம், வட ஆற்காடு மாவட்டம் (1977 ஏப்ரலில் உற்பத்தி தொடங்கப்பட்டது) | கனரக வார்ப்புகள் ஆண்டுக்கு 1,000 டன். | 85.00 | 17.50 | 17.50 | .. | [illegible] |

இணைப்பு—II

டிட்கோவின் கூட்டுறவுத் திட்டங்களைக் காட்டும் அட்டவணை.

| தொடர் எண், திட்டத்தின் பெயர், அமையும் இடம் (முடிவு செய்யப்பட்டால்) உற்பத்தி தொடங்கிய நாள் (உற்பத்தி தொடங்கப் பட்டிருப்பின்). | உற்பத்திப் பொருளின் பெயர், ஆண்டு உற்பத்தித் திறன் (முடிவு செய்யப் பட்டால்). | திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்) | டிட்கோவின் பொறுப்பு. (ரூபாய் இலட்சத்தில்) | இணைப்புக் கடன் உட்பட 31—3—80 வரை டிட்கோவின் பங்கீடு. (ரூபாய் இலட்சத்தில்) | 1980—81 வரவு, செலவு திட்ட மதிப்பீட்டிற் கிணங்க டிட்கோவின் பங்கீடு. | வேலை வாய்ப்புத் திறன் (நபர்களின் எண்ணிக்கை). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 12 தமிழ்நாடு கெமிகல் பிராடக்ட்ஸ் லிமிடெட் கழனிவாசல் கிராமம், காரைக்குடி வட்டம், இராமநாதபுரம் மாவட்டம் (1976 டிசம்பரில் உற்பத்தி தொடங்கப்பட்டது). | சோடியம் ஹைட்ரோ—சல்பேட் ஆண்டுக்கு 3300 டன். | 756.00 | 51.30 | 118.30 | .. | 250 |
| 13 இண்டர் காண்டிணெண்டல் லெதர்ஸ் லிமிடெட் சிப்காட் தொழிற் பேட்டை, இராணிப் பேட்டை, வட ஆற்காடு மாவட்டம் (1976 ஜூனில் உற்பத்தி தொடங்கப்பட்டது). | பதப்படுத்திய தோல் ஆண்டுக்கு 9 இலட்சம் (எண்ணிக்கை).* | 120.00 | 10.40 | 10.40 | .. | 300 |
| 14 சதர்ன் ஹைட்ரோ கார்பன்ஸ் லிமிடெட், கொளத்தூர் கிராமம், புதுக்கோட்டை மாவட்டம், (1980 மார்ச்சில் உற்பத்தி தொடங்கப்பட்டது).* | அசிடிக் அன்ஹைட்ரைடு ஆண்டுக்கு 1000 டன் அசிடிக் ஆசிட் ஆண்டுக்கு 1,000 டன். | 220.00 | 15.60 | 85.60 | (—)44.71 | 550 |
| | | 12,686.90 | 817.87 | 1,132.63 | (—)55.09 | 6,500 |

இணைப்பு—II

டிட்கோவின் பொதுத் துறைத் திட்டங்களைக் காட்டும் அட்டவணை

| தொடர் எண், திட்டத்தின் பெயர், அமையும் இடம் (முடிவு செய்யப்பட்டால்) உற்பத்தி தொடங்கிய நாள் (உற்பத்தி தொடங்கப் பட்டிருப்பின்). | உற்பத்திப் பொருளின் பெயர், ஆண்டு உற்பத்தித் திறன் (முடிவு செய்யப் பட்டால்). | திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) | டிட்கோவின் பொறுப்பு. (ரூபாய் இலட்சத்தில்.) | இணைப்புக் கடன் உட்பட 31—3—80 வரை டிட்கோவின் முதலீடு. (ரூபாய் இலட்சத்தில்.) | 1980—81 வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் இணைக்க— டிட்கோவின் முதலீடு. | வேலை வாய்ப்புத் திறன் நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| **II. நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள்.** | | | | | | |
| 1 அசிடிலின் அண்டு இண்டஸ்ட்ரியல் கேஸ் சிலிண்டர்ஸ் லிமிடெட், தொழிற் பேட்டை அம்பத்தூர், சென்னை. | அசிடைலின் கேஸ் சிலிண்டர்கள் ஆண்டுக்கு 25,000. | 61.30 | 6.50 | 6.15 | .. | 5 |
| 2 தமிழ் நாடு ப்ளோரின் & அலைடு கெமிகல்ஸ் லிமிடெட், மணலூர் கிராமம், சிவகெங்கை வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.* | அலுமினியம் புளோரைடு ஆண்டுக்கு 6,000 டன். | 1,500.00 | 79.89 | 79.89 | 40.00 | 265 |
| 3 மோட்டார் கேஸ்ட்டிங்க்ஸ் லிமிடெட், அரக்கோணம் வட ஆற்காடு மாவட்டம். | கிரே அயர்ன் அண்டு நான் டுலார் அயர்ன் கேஸ்ட்டிங்ஸ் ஆண்டுக்கு 20,000 டன். | 780.00 | 52.00 | 1.85 | 5.00 | 1,000 |
| 4 ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட், பகளூர் கிராமம், ஹோசூர் அருகே, தருமபுரி மாவட்டம்.* | பல்வேறு வகை பேரிங்குகள் ஆண்டுக்கு 50,00,000. | 1,635.00 | 130.90 | 43.84 | 41.82 | 653 |

D-I 188-172—47

இணைப்பு II

டிட்கோவின் பொதுத் துறைத் திட்டங்களைக் காட்டும் அட்டவணை.

| தொடர் எண், திட்டத்தின் பெயர், அமையும் இடம் (முடிவு செய்யப்பட்டால்) உற்பத்தி தொடங்கிய நாள் (உற்பத்தி தொடங்கப் பட்டிருப்பின்). | உற்பத்திப் பொருளின் பெயர், ஆண்டு உற்பத்தித் திறன் (முடிவு செய்யப் பட்டால்). | திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) | டிட்கோவின் பொறுப்பு. (ரூபாய் இலட்சத்தில்.) | இணைப்புக் கடன் உட்பட 31-3-80 வரை டிட்கோவின் முதலீடு. (ரூபாய் இலட்சத்தில்.) | 1980-81 வரவு-செலவு திட்ட மதிப்பீட்டிற் கிணங்க டிட்கோவின் முதலீடு. | வேலை வாய்ப்புத் திறன் நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 5 ஏசியா கார்பன் லிமிடெட், சிப்காட் தொழிற் பேட்டை, இராணிப் பேட்டை, வட ஆர்க்காடு மாவட்டம். | கார்பன் பிளாக்ஸ் முதன்யன ஆண்டுக்கு 10,400 டன். | 741.00 | 56.00 | 12·64 | 34.38 | 300 |
| 6 வானவில் டைஸ் & கெமிகல்ஸ் லிமிடெட், குடிகாடு கிராமம் கடலூர். தென் ஆர்க்காடு மாவட்டம். | நேப்தால்ஸ் அண்டு பாஸ்ட் கலர் பேஸ் ஆண்டுக்கு 450 டன். | 406.00 | 41·60 | 30.52 | 1·84 | 400 |
| 7 கங்கா பேப்பர்ஸ் மில்ஸ் லிமிடெட், வடகுத்து கிராமம், தென் ஆர்க்காடு மாவட்டம். | அச்சு, எழுத்து, பிற தாள்கள் ஆண்டுக்கு 9,900 டன். | 450.00 | 42.00 | 19.87 | 1.60 | 300 |
| 8 தூத்துக்குடி ஆல்கலி கெமிகல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ் லிமிடெட், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டம். | சோடா உப்பு ஆண்டுக்கு 66,000 டன். அமோனியம் குளோரைடு ஆண்டுக்கு 66,000 டன். | 3,975.00 | 575.00 | 419.65 | 2.88 | 500 |
| 9 மெட்ராஸ் ஷூ பேப்ரிக்ஸ் லிமிடெட், | காலணிகள் நாள் ஒன்றுக்கு 2,000 ஜோடிகள். | 145.00 | 10.40 | 0.20 | 5.00 | [illegible] |

டிட்கோவின் பொதுத் துறைத் திட்டங்களைக் காட்டும் அட்டவணை.

இணைப்பு II

| தொடர் எண், திட்டத்தின் பெயர், அமையும் இடம் (முடிவு செய்யப்பட்டால்) உற்பத்தி தொடங்கிய நாள் (உற்பத்தி தொடங்கப் பட்டிருப்பின்). | உற்பத்திப் பொருளின் பெயர், ஆண்டு உற்பத்தித் திறன் (முடிவு செய்யப் பட்டால்), | திட்டச் செலவு. | டிட்கோவின் பொறுப்பு. | இணைப்புக் கடன் உட்பட 31—3—80 வரை டிட்கோவின் முதலீடு. | 1980-81 ஆம் ஆண்டு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இணங்க டிட்கோவின் முதலீட்டுச் செலவு. | வேலை வாய்ப்புத் திறன் (நபர்களின் எண்ணிக்கை). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | (ரூபாய் இலட்சத்தில்) | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 10 சதர்ன் அக்ரிப்யூரேன் லிமிடெட், முண்டியம்பாக்கம், தென் ஆர்க்காடு மாவட்டம். | பகீர்யூரல் ஆண்டுக்கு 3,000 டன். | 732.00 | 42.90 | 42·90 | .. | 150 |
| 11 ஷிப் ஸ்டீல்ஸ் (இந்தியா) லிமிடெட், வாலிநோக்கம், இராமநாதபுரம் மாவட்டம்.* | கப்பல் பேரிங்குகள் ஆண்டுக்கு 4 கப்பல்கள், | 115.00 | 9.96 | 0.46 | 2.00 | 650 |
| | | 23,227.20 | 1,862.23 | 1,790.60 | 149.43 | 11,068 |
| III. பரிசீலனையிலுள்ள திட்டங்கள். | | | | | | |
| 1 ரிப்ராக்டரிஸ் திட்டம், சேலம் மாவட்டம். | அடிப்படை செங்கல், சுட்ட மாக்னசைட் ஆண்டுக்கு 80,000 டன். | 3,000.00 | 300.00 | 4.00 | 5.00 | 1,500 |
| 2 ஏ.பி.எஸ். ரெசின்ஸ் திட்டம் | ஏ. பி. எஸ். ரெசின் ஆண்டுக்கு 2,000 டன், | 400.00 | 34.67 | 1.17 | 3.50 | 130 |
| 3 ஆப்டிகல் காம்பனென்ட்ஸ் திட்டம், ஓசூர்.* | ஆப்டிகல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் ஆண்டுக்கு 5 இலட்சம். | 150.00 | 15.00 | 0.31 | 5.00 | 300 |
| 4 கைக்கடிகாரத் திட்டம், ஓசூர்.* | கைக்கடிகாரங்கள் ஆண்டுக்கு 2 மில்லியன் | 2,000.00 | 200.00 | 0.56 | 10.00 | 2,500 |

இணைப்பு

டிட்கோவின் பொதுத் துறைத் திட்டங்களைக் காட்டும் அட்டவணை.

II.

| தொடர் எண், திட்டத்தின் பெயர், அமையும் இடம் (முடிவு செய்யப்பட்டால்) | உற்பத்திப் பொருளின் பெயர், ஆண்டு உற்பத்தித் திறன் (முடிவு செய்யப்பட்டால்). | திட்டச் செலவு. | டிட்கோவின் பொறுப்பு. | இணைப்புக் கடன் உட்பட 31-3-80 வரை டிட்கோவின் முதலீடு. | 1980—81 ஆம் ஆண்டு செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கிணங்க டிட்கோவின் மூலதனச் செலவு. | வேலை வாய்ப்புத் திறன் (நபர்களின் எண்ணிக்கை). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 5 வினைல் அசிடேட் அண்டு பாலி வினைல் அசிடேட் திட்டம். | வினைல் அசிடேட், பாலி வினைல் அசிடேட் அண்டு பாலி வினைல் ஆல்கஹால் ஆண்டுக்கு 10,000 டன். | 1,600.00 | 160.00 | 0·73 | 25.00 | 570 |
| 6 2 ஈதைல் ஹெக்சோனால் திட்டம். | 2 ஈதைல் ஹெக்சோனால் ஆண்டுக்கு 10,000 டன். | 865.00 | 75.00 | 0.23 | 5.00 | 660 |
| 7 ஆட்டுத் தோல் திட்டம் .. | பதப்படுத்திய தோல் ஆண்டுக்கு 12 இலட்சம். | 575.00 | 60.00 | 0.11 | 0.50 | 800 |
| 8 இரசாயன சாதனம் தயாரிக்கும் திட்டம் | இரசாயன சாதனங்கள். | 105.00 | 10.40 | .. | 4.00 | 500 |
| 9 ஃபேட்டிஆசிட் திட்டம் .. | ஃபேட்டி ஆசிட் ஆண்டுக்கு 12, 000 டன். | 550.00 | 55.00 | 0.14 | 2.00 | 150 |
| 10 பாலினோசிக்/எச். டபிள்யூ எம். ஸ்டேபிள் ஃபைபர் திட்டம் (புதுக்கோட்டை மாவட்டம்) * | எச். டபிள்யூ. எம். ஸ்டேபிள் ஃபைபர் ஆண்டுக்கு 12,000 டன். | 3,000.00 | 300.00 | 2.70 | 5.00 | 250 |
| 11 பெட்ரோ கெமிகல்ஸ் திட்டம். | பெட்ரோ கெமிகல்ஸ். | முடிவு செய்யப் படவில்லை. | .. | 0.( 2 | 5.00 | இன்னும் முடிவு செய்யப் படவில்லை. |
| 12 மேரைன் கெமிகல்ஸ் திட்டம்.. | மெரைன் கெமிகல்ஸ். | முடிவு செய்யப் படவில்லை. | .. | 2.7[illegible] | 2·00 | இன்னும் முடிவு செய்யப் படவில்லை. |

1980 ஜூலை 19

இணைப்பு.

## டிட்கோவின் பொதுத் துறை திட்டங்களைக் காட்டும் அட்டவணை II

| தொடர் எண், திட்டத்தின் பெயர், அமையும் இடம் (முடிவு செய்யப்பட்டால்). | உற்பத்திப் பொருளின் பெயர், ஆண்டு உற்பத்தித் திறன் (முடிவு செய்யப் பட்டால்). | திட்டச் செலவு. | டிட்கோவின் பொறுப்பு. | இணைப்புக் கடன் உட்பட 31–3–80 வரை டிட்கோவின் முதலீடு. | 1980–81 வரவு-செலவு திட்ட மதிப்பீட்டிற்கு இணங்க டிட்கோவின் முதலீடு. | வேலை வாய்ப்புத் திறன் நபர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 13 மெட்ராஸ் மெஷின் டூல்ஸ், கோயம்புத்தூர் (தற்போதுள்ள திட்டம் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது). | கோன் புள்ளி வேத்துகள் ஆண்டுக்கு 400. | 41.36 | 10.00 | .. | 10.00 | 400 |
| 14 ஏனைய திட்டங்கள் (6-வது பத்தியிலுள்ள புள்ளி விவரங்கள் தமிழ் நாடு ரப்பர் லிமிடெட், பைன் மெசர் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் லிமிடெட், தமிழ் நாடு இண்டர்நேஷனல் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் முதலியவை உள்ளிட்டதாகும்). | .... | | | 46.90 | 15.00 | |
| | | 35,513.56 | 3,082.30 | 1,850.26 | 246.43 | 18,828 |

குறிப்பு.—மேற்சொன்ன திட்டங்களின் திட்டச் செலவு, வேலை வாய்ப்புத் திறன் குறித்த சுருக்கம் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

வேலை வாய்ப்புத் திறன் குறித்த சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| விவரங்கள். (1) | * திட்டங்களின் எண்ணிக்கை. (2) | திட்டச் செலவு. (3) | வேலை வாய்ப்புத் திறன். (4) |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| உற்பத்தியிலுள்ள திட்டங்கள் .. .. | 14 | 12,686.90 | 6,500 |
| நிறைவேற்றப்பட்டுவரும் திட்டங்கள் .. | 11 | 10,540.30 | 4,568 |
| பரிசீலனையிலுள்ள திட்டங்கள் .. .. | 13 | 12,286.36 ** | 7,760 ** |
| | 38 | 35,513.56 | 18,828 |

** இரண்டு திட்டங்களுக்கு திட்டச் செலவும், வேலைவாய்ப்புத் திறனும் முடிவு செய்யப்படவில்லை. எனவே இந்த இரண்டு திட்டங்கள் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் சேர்க்கப்படவில்லை.

2. 7,893 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திறன் கொண்டவையும், ரூ. 10,711.74 இலட்சம் திட்டச் செலவிலானவையுமான 14 திட்டங்கள் (அட்டவணையில் * குறிப்பிடப்பட்டுள்ளது) பின்தங்கிய பகுதியில் உள்ளன.

## இணைப்பு III.

1980-81-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கிணங்க நிதிவாயில்கள், செலவினங்களைக் காட்டும் அட்டவணை: விவரங்கள்.

| நிதிவாயில்கள். | ரூபாய் இலட்சத்தில். |
|---|---|
| தொடக்க இருப்பு .. .. .. .. | 58.82 |
| அரசிடமிருந்து வட்டியில்லா (சாதாரண) பங்குத் தொகை. | 300.00 |
| அரசிடமிருந்து கடன் .. .. .. | 75.00 |
| பிணையத்துடன் கூடிய கடனீட்டுறுதிப் பத்திரங்கள். | 82.50 |
| குறித்த கால வைப்பீடுகள் (நிகர) உயர்வு .. | 70.00 |
| டான்செம் நிறுவனம் கடனைத் திருப்பிச் செலுத்துதல். | 50.00 |
| துறைக்குள்ளேயே நிதிவாயில்களை ஏற்படுத்துதல்/நடைமுறை மூலதனம் குறைவு. | 184.10 |
| | 820.42 |
| **நிதியின் பயன்பாடு (செலவினம்)** .. .. | |
| தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிலைச் சொத்துக்களுக்கு சேர்க்கை. | 18.18 |
| தமிழ்நாடு ஸ்டீல்ஸ் விரிவாக்கம் .. .. | 100.00 |
| டான்செம் நிறுவனத்திற்குத் தொகை கொடுத்தல். | 93.00 |
| பிற பொதுத்துறைத் திட்டங்களுக்குத் தொகை கொடுத்தல். | 86.00 |



| | |
|---|---|
| பதிவு அலுவலகம் நிலைச் சொத்துக்களுக்கு சேர்க்கை. | 1.30 |
| கூட்டுத்துறைத் திட்டங்களுக்குத் தொகை கொடுத்தல். | 246.43 |
| அரசுக்குக் கடனைத் திருப்பிச் செலுத்துதல் .. | 5.26 |
| அரசுக்கு வழிவகை முன் பணத்தைத் திருப்பிச் செலுத்துதல். | 100.00 |
| தள்ளிவைக்கப்பட்ட அந்நியக் கடனைத் திருப்பிச் செலுத்துதல். | 4.52 |
| பிணையத்துடன் கூடிய கடனீட்டுறுதிப் பத்திரங்களைத் திருப்பி செலுத்துதல். | 75.00 |
| சென்ற ஆண்டுக்குரிய வட்டித் தொகையை அரசுக்குச் செலுத்துதல். | 2.95 |
| இறுதி இருப்பு .. .. .. .. | 87.78 |
| | 820.42 |

## செய்தித்தாள் காகித ஆலைத் திட்டம்.

கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு, நாளொன்றுக்கு 250 டன் செய்தித்தாளும், 50 டன் எழுது தாளும் உற்பத்தி செய்வதற்காக அனுமதி பெற்ற 50 கோடி ரூபாய் மூலதனத்தோடு தமிழ் நாட்டில் காகித ஆலை ஒன்றை தொடங்க 1979-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ஆம் நாளில் தமிழ் நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் அரசு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது. இத்திட்டத்திற்கு ரூபாய் 153 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டது. இத்தொழில் தொடங்குவதற்காக 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3 ஆம் நாளன்று மத்திய அரசு முன் உரிமம் வழங்கியுள்ளது.

2. இந்நிறுவனத்திற்கு 1979–80-ஆம் ஆண்டில் தொடக்கச் செலவுகளுக்காக ( Initial Expenditure ) ரூபாய் 10

இலட்சம் மூலதனமாக வழங்கப்பட்டது. 1980–81-ஆம் ஆண்
டிற்குரிய மாநில ஆண்டுத் திட்டத்தில் கரும்புச் சக்கையைக்
கொண்டு செய்தித்தாள் மற்றும் எழுது தாள் தயாரிக்கும்
திட்டத்திற்கு ரூபாய் 10 கோடி ஒதுக்கீடு செய்ய வேண்டும்
என்று மத்திய திட்டக் குழுவிடம் கேட்கப்பட்டது. கரும்புச்
சக்கையைக் கொண்டு செய்தித்தாள் தயாரிப்பதற்கு உரிய
தொழில் நுட்பம் சிறிய அளவிலேயே செய்து பார்க்கப்பட்டுள்ள
தென்றும் இந்திய மூலப் பொருள்களைக் கொண்டு செய்தித்தாள்
உற்பத்தியை செய்ய முடியுமா என்பதனை முழுமையாக அறிய
வேண்டியுள்ளது என்று திட்டக் குழு கருதியது. தற்போது
நிறுவப்பட்டிருக்கும் நிறுவனங்களுக்கே 'நிலக்கரி' வழங்குவதில்
தட்டுப்பாடு இருப்பதினால், கிடைக்கக் கூடிய நிலக்கரியின்
அளவை முன்னிட்டுச் சர்க்கரை ஆலைகளுக்கு மாற்று எரி
பொருளைப் பற்றியும் வரையறுத்தாக வேண்டும் என்றும்
திட்டக்குழு கூறியுள்ளது. இது தொடர்பாக எந்தச் செலவு
களைச் செய்யப் புகுமுன் முழுமையாகத் தொழில் நுட்ப வகை
யிலும் பொருளாதார நிலையிலும் இத்திட்டத்தை மீண்டும்
ஆராய்ந்து 'தனியான முடிவெடுப்பது' தக்கது என்றும்
திட்டக்குழு கருதியதோடு, இத்திட்டத்திற்கு அடையாள ஒதுக்
கீட்டுக்குக் கூடப் பரிந்துரை செய்யவில்லை.

மத்திய திட்டக்குழுவின் ஒப்புதலையும், கடன் விண்ணப்பங்
களின் மீது பிற நிதி நிறுவனங்களின் ஒப்புதலையும் பெறுகிற
வரையில் எவ்விதமான செலவினங்களையும் ஏற்கவியலாத
நிலையில் நிறுவனம் உள்ளது. இதற்கிடையில் நிதி நிறுவனங்
கள், தொடர்புடைய சர்க்கரை ஆலைகள் இந்திய நிலக்கரி
நிறுவனம், இந்திய இரயில்வே ஆகியவற்றின் ஆதரவையும்
பொறுப்பு ஒப்புதலையும் பெறுவதற்காக காகித நிறுவனம்
பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

மத்திய நிலக்கரி நிறுவனம் 1983-ஆம் ஆண்டு ஜூன் திங்களி
லிருந்து ஆண்டொன்றுக்கு 1,90,000 டன்கள் நிலக்கரியை
(stack coal) தமிழ்நாடு காகித நிறுவனத்திற்கு வழங்க இயலும்
என்று மத்திய அரசின் உருக்கு, சுரங்கங்கள், நிலக்கரி
அமைச்சகம் நம் அரசுக்குத் தெரிவித்துள்ளது.



## தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம்.

தமிழ் நாடு சிமெண்டு நிறுவனம் (டான்செம்)
பொது.—தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு (டிட்கோ) முழு
வதும் சொந்தமான ஒரு துணை நிறுவனமாக 1976 ஆம் ஆண்டு
பிப்ரவரி மாதம் 11 ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

இந்நிறுவனம் 1976 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள்
முதல் பணியைத் தொடங்கியபோது இருந்த அங்கீகாரம்
பெற்ற மூலதனம் ரூ. 10 கோடி. பின்னர் இந்த அங்கீகாரம்
பெற்ற மூலதனம் ரூ. 11 கோடியாக 1977 ஆம் ஆண்டு ஜூன்
திங்களில் அதிகரிக்கப்பட்டது. மேற்கொண்டு 1980 ஜனவரித்
திங்களில் ரூ. 12.5 கோடியாக அது அதிகரிக்கப்பட்டது. இந்
நிறுவனத்தின் தற்போதைய செலுத்தப்பட்ட மூலதனம்
ரூ. 10.32 கோடி.

சிமெண்டு உற்பத்தி மற்றும் விற்பனை மற்றும் சிமெண்டு உற்
பத்திக்குத் தேவையான சுண்ணாம்பு, சுண்ணாம்புக் கல், கிளிஞ்
சல், சிமெண்டு ஓடு உற்பத்தி ஆகியவைகளில் ஈடுபாடு கொள்வது
இந்நிறுவனத்தின் தலையாய குறிக்கோள்கள் ஆகும்.

I. ஆலங்குளம் சிமெண்டு ஆலை.—(1) ஈரத் தயாரிப்பு முறையை
அடிப்படையாகக் கொண்டு சிமெண்டு உற்பத்தி செய்ய இராம
நாதபுரம் மாவட்டம் ஆலங்குளத்தில் ஒரு ஆலையை நிறுவு
வதற்கு 1964 ஆம் ஆண்டிலேயே தொழில் இலாக்கா நட
வடிக்கை மேற் கொண்டது. பின்னர் இத்திட்டத்தின் செய
லாக்கத்தை 1965 ஆம் ஆண்டில் டிட்கோ மேற் கொண்டு
1966 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்
பட்டன. 1970 ஆம் ஆண்டு உற்பத்தியைத் துவங்கிய இந்த
ஆலையின் உரிமம் மற்றும் நிறுவத் திறன் அளவு ஆண்டு ஒன்றுக்கு
முறையே 7 மட்டும் 4 இலட்சம் டன் சிமெண்டு ஆகும்.

2. உற்பத்தியைத் துவங்கிய நாளிலிருந்து இதுவரை பல
தரப்பட்ட காரணங்களுக்காக ஆலை நிர்ணயிக்கப்பட்ட உற்
பத்தித் திறன் இலக்கை எய்த முடியவில்லை. இதன்
விளைவாக மூன்று ஆண்டு காலத்திற்கு இந்த ஆலை

ஓரளவு இலாபம் ஈட்டியதைத் தவிர தொடர்ந்து இந்த ஆலை நட்டத்தில் இயங்கி வருகிறது. இந்த சிமெண்டு ஆலையின் சிமெண்டு உற்பத்தி, விற்பனை, ஆலையின் இலாபம் மற்றும் நஷ்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

| வருடம். | இந்த ஆண்டில் உற்பத்தி. (மெட்ரிக் டன்களில்.) | இந்த ஆண்டில் விற்பனை. (மெட்ரிக் டன்களில்.) | நிகர இலாபம்(+) நட்டம் (—) ரூபாய் இலட்சங்களில். |
| --- | --- | --- | --- |
| (1) | (2) | (3) | (4) |
| 1970-71 .. .. | 89,621 | 80,837 | (—)70·29 |
| 1971-72 .. .. | 3,06,093 | 3,08,068 | (+)12·90 |
| 1972-73 .. .. | 2,93,525 | 2,98,581 | (+)5·30 |
| 1973-74 .. .. | 2,80,382 | 2,78,980 | (—)4·80 |
| 1974-75 .. .. | 2,00,070 | 2,02,264 | (—)31·40 |
| 1975-76 .. .. | 2,62,729 | 2,58,052 | (—)42·50 |
| 1976-77 .. .. | 3,38,445 | 3,33,294 | (+) 1·99 |
| 1977-78 .. .. | 3,09,105 | 3,01,067 | (—)64·11 |
| 1978-79 .. .. | 3,19,277 | 3,20,379 | (—)31·34 |
| 1979-80 .. .. | 2,74,400 | 2,77,655 | (—)149·18 |

3. உற்பத்தியை அதிகரிக்க திறம்பட எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக 1976-77-ஆம் ஆண்டிலிருந்து ஆலையின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் நாடு தழுவிய நிலக்கரிப் பற்றாக் குறை காரணமாக 1979-80-ஆம் ஆண்டில் ஆலையில் சிமெண்டு உற்பத்தி 2·82இலட்சம் மெட்ரிக்டன்னுக்கு குறைந்



தது. நிலக்கரி கிடைக்காத காரணத்தால் இந்த ஆலையில் உள்ள சூளைகள் 1979-80 ஆம் ஆண்டில் சுமார் 2,060 மணி நேரங்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஆலைக்குத் தேவையான உச்சகட்ட மின்சாரத் தேவையில் கட்டுப்பாடுகள் கொணரப்பட்டதும், கன அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்துவோர்களுக்குக் கொணரப்பட்ட கட்டுப்பாடுகளும் இந்த ஆலையின் உற்பத்தி திறனளவை எய்துவதில் மிகப் பெரியத் தடங்கலாக இருந்தது. இதன் விளைவாக 1979-80 ஆம் ஆண்டில் தேய்மானத்திற்கு ரூபாய் 31.31 இலட்சமும், மூலதனபடி இருப்புக்காக ரூபாய் 5.33 இலட்சமும் ஒதுக்கீடு செய்தது போக, இந்த ஆலைக்கு ரூபாய் 149.18 இலட்சம் நட்டம் ஏற்பட்டது.

4. போதிய அளவு நிலக்கரி மற்றும் மின்சாரம் கிடைத்திருக்குமாயின், அதனால் வரக்கூடிய கூடுதல் உற்பத்தி அதாவது அதற்கு ஒத்த 103 சூளை நாட்களில் உள்ள உற்பத்தி மூலம் 1979-80 ஆம் ஆண்டில் இலாபம் கிட்டியிருக்கும். நிலக்கரி மற்றும் மின்சாரம் கிடைப்பதற்கு உட்பட்டு 1980-81 ஆம் ஆண்டில் முழு உற்பத்தித்திறன் அளவை எய்துவதற்கு ஆலை திட்டமிட்டு வருகிறது.

5. இந்த ஆலை பின்தங்கிய பகுதியில் உள்ள 1,484 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு அளித்திருப்பதுடன், மூலப் பொருட்களைக் கொண்டு வருதல் மற்றும் உற்பத்தியான சிமெண்டை ஏற்றிச் செல்லுதல் போன்ற பணிகள் மூலம் நிறையப் பேர்களுக்கு சார்பு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது.

6. ரூபாய் 301 இலட்சம் திட்டச் செலவில் ஆலங்குளம் சிமெண்டு ஆலையை நவீனப்படுத்துவதற்காகவும், மேலும் சீர்திருத்தப்பணிகள் செய்வதற்கும் ஆன பணிகளை தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் மேற்கொண்டுள்ளது. 1981 மார்ச் திங்களில் இப்பணி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கண்ட பணிகள் ஆலையின் உற்பத்தித்திறனை 4.5 இலட்சம் டன்னாக அதிகரிப்பதோடு சிமெண்டு தூசியினால் ஏற்படும் சுற்றுப்புற சூழ்நிலைப் பாதிப்பை வெகுவாகக் குறைக்கும்,

II. அரியலூர் சிமெண்டு ஆலை.—(1) உலர்ந்த முறை தயாரிப்பு [1980 ஜூலை 19
அடிப்படையில் ரூபாய் 28.76 கோடி திட்டச் செலவில் ஆண்டு
ஒன்றுக்கு 5 இலட்சம் டன் சிமெண்டு உற்பத்தி செய்வதற்காக
திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூரில் ஒரு சிமெண்டு ஆலையை
நிறுவும் திட்டத்தை முதலில் டிட்கோ மேற் கொண்டது.
தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் தோற்றுவிக்கப்பட்ட பின்பு, இந்த
ஆலையின் திட்டப்பணிகளை 1977 ஆம் ஆண்டில் ஏற்று நடத்
தியது. இந்த ஆலை 1—8—1979 முதல் சிமெண்டு உற்பத்தி
செய்து வருகிறது. இந்த 5 இலட்சம் டன் உற்பத்தித்திறன்
அளவு சிமெண்டு ஆலையின் திட்டப்பணிகள் கால்கோள் செய்யப்
பட்ட 30 மாதங்களுக்குள் முடிக்கப்பட்டு உற்பத்தியைத் தொடங்
கியுள்ளது சாதனைக்குரியதொன்றாகும்.

(2) 1979–80 ஆம் ஆண்டில் 1—8—1979 முதல் இந்த
ஆலை 1·16 இலட்சம் டன் சிமெண்டு உற்பத்தி செய்துள்ளது
ஆலைக்குத் தேவையான நிலக்கரி மற்றும் மின்சாரம் கிடைப்ப
தற்கு உட்பட்டு ஆண்டு ஒன்றுக்கு 4.5 இலட்சம் டன் சிமெண்டு
உற்பத்திச் செய்வதற்கு அதாவது 1980–81 ஆம் ஆண்டில் 90
சதவிகித உற்பத்தித்திறன் அளவு உற்பத்தி செய்வதற்கு திட்ட
மிட்டு வருகிறது.

(3) உற்பத்தியைத் துவங்கிய முதல் ஆண்டில் அதாவது
1—8—1979 முதல் 31—3—1980 முடிய இந்த ஆலைக்கு
ரூபாய் 256.36 இலட்சம் நட்டம் ஏற்பட்டுள்ளது (வருமான வரி
வகைக்காக, மூலதனபடி இருப்புக்காக கணக்கில் வகை செய்யப்
பட்டு ஒதுக்கப்பட்ட ரூபாய் 389.86 இலட்சத்தை கழித்தது
போகவும், தேய்மானத்திற்கு ரூபாய் 161.88 இலட்சம் வகை
செய்யப்பட்டது போகவும்). 1980–81 ஆம் ஆண்டில், திட்ட
மிடப்பட்டுள்ள ஆலையின் 90 சதவிகித இயக்கத்தில், தேய்
மானம் வட்டி மற்றும் இதர செலவுகளுக்கு வகை செய்ததுபோக,
ஆலை கணிசமான இலாபம் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படு
கிறது.

(4) இந்த ஆலை 761 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு
அளித்திருப்பதுடன் ஆலைக்கு மூலப் பொருட்களை கொண்டு



1980 ஜூலை 19]
வருதல் மற்றும் உற்பத்தியான சிமெண்டை எடுத்துச் செல்லுதல்
போன்ற பணிகள் மூலம் நிறையப் பேர்களுக்கு சார்பு வேலை
வாய்ப்பு அளித்துள்ளது.

III. இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்டை கையாளுதல்.—
அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சிமெண்டை
சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் கையாளும்
முகவராக தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.
சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் 1979–80 ஆம்
ஆண்டில் 3,49,965 டன் இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்டை
கையாளும் பணியை தமிழ் நாடு சிமெண்டு நிறுவனம் மேற்
கொண்டுள்ளது. இதன் விளைவாக இந்நிறுவனம் ரூபாய் 67.26
இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது. 30—6—1981 முடிய மேலும்
ஓர் ஆண்டு காலத்திற்கு மேற்படி இறக்குமதி செய்யப்படும்
சிமெண்டை தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் கையாளுவதற்கான
ஒப்பந்தத்தை மைய அரசு புதுப்பித்துள்ளது. மேலும் இந்த
ஆண்டில் பாண்டிச்சேரி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படும்
சிமெண்டை கையாளுவதற்கான ஒப்பந்தத்தை மைய அரசு தமிழ்
நாடு சிமெண்டு நிறுவனத்திற்கு அளித்துள்ளது.

IV. ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்டு ஓடு திட்டம்.—ஆஸ்பெஸ்டாஸ்
சிமெண்டு ஓடு கிடைப்பதில், தேவைக்கும் உற்பத்திக்கும் மத்தியில்
உள்ள இடைவெளியைக் கருத்தில் கொண்டு, ஆண்டு ஒன்றுக்கு
36.000 டன் சிமெண்டு ஓடுகள் உற்பத்தி செய்யும் ஆலை ஒன்றை
நிறுவும் திட்டத்தை தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் மேற்கொண்
டுள்ளது. இத்திட்டத்தின் திருத்தியமைக்கப்பட்ட திட்டச்
செலவு ரூபாய் 212 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
இந்த ஆலை ஆலங்குளம் சிமெண்டு ஆலைக்கருகில் நிறுவப்பட்டு
வருகிறது. இப்புதிய ஆலையின் திட்டப்பணிகள் ஏற்கெனவே
தொடங்கப்பெற்று 31—3—1981 ஆம் ஆண்டிற்குள் முடிவுறும்
என்று எதிர்பார்க்கப்படுகிறது. பின்தங்கிய பகுதியில் நிறுவப்
பட்டுவரும் இந்த ஆலை சுமார் 243 பேர்களுக்கு நேரடி வேலை
வாய்ப்பு அளிக்கும்.

V. 1978–79, 1979–80 ஆகிய ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு பற்றிய விவரம் மற்றும் 1980-81 ஆம் ஆண்டு அளிக்கக்கூடிய வேலை வாய்ப்பு பற்றிய இலக்கு. [1980 ஜுலை 19

| | |
|---|---|
| 1978–79 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை. | 272 |
| 1979–80 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை. | 254 |
| 1980–81-ல் நிர்ணயிக்கப்பட்ட வேலை வாய்ப்பு இலக்கு. | 344 |

344–க்கு ஆலை வாரியாக விவரம்.—

| | | |
|---|---|---|
| ஆலங்குளம் | | |
| அரியலூர் | .. | — |
| ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்டு ஓடு திட்டம் | .. | 101 |
| | .. | 243 |
| மொத்தம் | .. | 344 |

## தமிழ்நாடு பீங்கான் நிறுவனம்.

தொழிற்துறை மற்றும் டான்சியின் கீழ் செயல்பட்டு வந்த இயந்திரச் செங்கல் தொழிற்சாலை மற்றும் இதர மட்பாண்ட நிலையங்களை ஒருங்கிணைத்து இயக்கவும் செயல் திறனில் முன்னேற்றம் காணவும் மாநிலத்தில் மட்பாண்டத் தொழிலை விரிவுபடுத்தவும் தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் 14–12–1973–ல் நிறுவப்பட்டது. ரூ 200 இலட்சம் அதிகார மூலதனத்துடன் 15–7–1974 முதல் இந்நிறுவனம் இயங்கத் தொடங்கியது. இப் போதைய செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 123.54 இலட்சமாகும்.

இந்நிறுவனம் சென்னை, திருமழிசை, விருத்தாசலம், ஓமலூர் முதலிய இடங்களில் அமைந்துள்ள ஏழு ஆலைகளை தனது கட்டுப்பாட்டின் கீழ் இயக்கி வருகின்றது.



1980 ஜுலை 19]

விருத்தாச்சலத்திலுள்ள பீங்கான் தொழிலகம் நாளொன்றுக்கு
மூன்று டன்கள் வீதம் கிராக்கரி (Crockery) மற்றும் துப்புரவு
சாமான்களை உற்பத்தி செய்கிறது. விருத்தாச்சலத்திலுள்ள
கற்குழாய் தொழிலகம் தரணிபாளையம். பன்ருட்டி முதலிய
இடங்களிலிருந்து கிடைக்கும் களிமண்ணை உபயோகித்து மாதம்
ஒன்றுக்கு 600 டன்கள் வீதம் 4 அங்குலம் முதல் 15 அங்குலம்
வரை விட்டமுள்ள உப்பு மெருகிட்ட கற்குழாய்களை உற்பத்தி
செய்கிறது. வங்காளம், பீஹார் நிலக்கரி சுரங்கங்களில்
கிடைக்கும் உயர்தர நிலக்கரியே பிரதான எரிபொருளாகும்.
தொழிற்பேட்டையும், சுரங்கச் சூளை வசதி கொண்ட பணி
வசதி நிலையமும், மட்பாண்ட சிறுதொழில் அதிபர்களுக்கு
தொழிற்கூடம், வடிவமைப்பு, மெருகு, சூளை வசதி மற்றும்
தொழில் நுட்ப ஆலோசனை முதலியவைகளை வழங்குகிறது.
சுமார் 40 தொழிலதிபர்கள் இவ்வுதவியை பெறுகின்றனர்.
விருத்தாச்சலத்திலும் மற்றும் பெரம்பூரிலும் உள்ள மட்பாண்ட
கலை நிலையங்கள் சுமார் 20 நபர்களுக்கு மட்பாண்ட கலை
பொருட்கள் செய்வதில் தொழில் நுட்பப் பயிற்சியளித்து
பட்பாண்ட கலை பொருட்களை உற்பத்தி செய்கிறது. கிராமப்
புற வாலிபர்களுக்கு ஓமலூரில் ஏற்படுத்தப்பட்ட பீங்கான்
தொழில் மையம் ஜாடிகள் செய்வதில் சிறப்பு பெற்றிருக்கிறது.

மாதம் ஒன்றுக்கு 18 இலட்சம் செங்கற்கள் உற்பத்தி
செய்யும் திறனுடன் அமைக்கப்பட்ட இயந்திர செங்கற் தொழிற்
சாலை தொழில் நுட்ப சிக்கல்களாலும், பெரிய அளவில் பழு
தடைந்துள்ள பழைய இயந்திரங்களாலும் சுமார் 5 இலட்சம்
செங்கற்களைத்தான் உற்பத்தி செய்கிறது. இத்தொழிற்சாலை
யின் எதிர்கால அமைப்பு அரசின் கவனத்தில் உள்ளது.

சாதாரண மக்களும் வாங்கும் வண்ணம் விலை குறைவான
துப்புரவு சாமான்களையும் மற்றும் கற்குழாய்களையும் சிறந்த
முறையில் உற்பத்தி செய்ய உள்நாட்டு தொழில் நுட்ப அறிவே
போதுமானதாகும். மேலும் பலவித பணிகளை வழங்குவதன்
மூலம். வளர்ச்சி நிலையங்கள் சிறு தொழிலதிபர்கள் மூலதனத்
தையும் மிகவும் குறைத்து 500-க்கும் மேலான ஆட்களுக்கு

வேலை வாய்ப்பு ஏற்படுத்தலாம். மட்பாண்ட கலை நிலையங்களும் ஓமலூர் பீங்கான் மையமும் ஒரு குறிப்பிட்ட அளவுக்குதான் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு தேவையை பூர்த்தி செய்கின்றன.

1979-80 ஆண்டில் நிறுவனம் ரூ. 110 இலட்சம் பெறுமான உற்பத்தி செய்தது. வங்காளம், பீஹார் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து கிடைக்கும் நிலக்கரி சப்ளையில் தடங்கல் ஏற்படாமல் இருந்தால் உற்பத்தி ரூ. 120 இலட்சத்துக்கும் மேல் சென்றிருக்கும். பலவித காரணங்களால் நிறுவனத்தின் செயல் திறன் ரூ. 29 இலட்சத்துக்கு இழப்பில் முடியும். நவீனப்படுத்தல் மற்றும் விரிவு படுத்தும் திட்டங்கள் முடிவுற்றால் வரும் ஆண்டுகளில் இழப்பின் அளவு பெரிதும் குறைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாண்டு இயக்கத்தின் சிறப்பு அம்சம் மாநிலத்திலுள்ள கிராம மட்பாண்ட தொழிலாளர்களின் தேவையை கணக்கெடுத்து அவர்களுக்கு உதவும் வண்ணம் தகுந்த திட்டங்களை எதிர் காலத்தில் அமைத்துக் கொடுப்பதேயாகும்.

நிறுவனம் 1980-81 ஆம் ஆண்டில் செய்துமுடிக்க கீழ்க்கண்ட திட்டங்கள் உள்ளன:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (1) கிராமப்புறங்களில் மட்பாண்ட தொழிலை விரிவுபடுத்த கணக்கெடுப்பு. | 1.00 |
| (2) விருத்தாச்சலம் பீங்கான் தொழிலகத்தை விரிவுபடுத்துதல். | 6.50 |
| (3) விருத்தாச்சலம் கற்குழாய் தொழிற்சாலையில் உள்ள சூளையை புதுப்பித்தல் மற்றும் 18 அங்குல கற்குழாயை உற்பத்தி செய்தல். | 4.50 |
| (4) விருத்தாச்சலத்தில் உயர் அழுத்த மின் தடைகளை உற்பத்தி செய்தல். | 8.50 |
| (5) விருத்தாச்சலம் பணி வசதி நிலையத்தில் சிறு தொழிலதிபர்களுக்கு உதவும் வண்ணம் பொது உலர்த்தும் இயந்திரம் அமைத்தல். | 3.50 |
| மொத்தம் .. | 24.00 |



மேற்கண்ட திட்டங்கள் குறைந்தது 100 ஆட்களுக்காவது வேலை வாய்ப்பளிக்கும்.

1980-81 ஆம் ஆண்டின் இந்நிறுவனம் ரூபாய் 155 இலட்சம் பெறுமான பொருட்களை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வுற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் இந்நிறுவனத்திற்கு ஏற்பட்டு வரும் இழப்பை கணிசமான அளவு குறைக்கலாம். இருப்பினும் இந்நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய நிலக்கரி போதுமான அளவில் கிடைக்காததால் உற்பத்தித் திறன் பாதிக்கப்படுகிறது.

## கனிவள நிறுவனங்கள்

### தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்)

தமிழகத்திலுள்ள தொழில் சார்ந்த கனிவளத்தை வியாபார ரீதியில் நன்கு பயன்படுத்திக் கொள்ளவும், கரும்பாறைகளை வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்வதையும் கருதி தமிழ்நாடு அரசு கடந்த 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு கனிம நிறுவனம் என்ற நிறுவனத்தை நிறுவியது. இந்நிறுவனம் முற்றிலும் அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக ரூ 100 இலட்சங்கள் ஒப்பிய பங்கு மூலதனத்துடன் நிறுவப்பட்டது. செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனம் ரூ. 37.50 இலட்சங்கள் ஆகும். 1978 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சுரங்க வேலைகளை துவக்கியது. இந்நிறுவனம் கரும்பாறை மற்றும் சாம்பல் நிறப் பாறைகளை வெட்டியெடுத்து பயன்படுத்துவது தவிர தொழில் சார்ந்த கனிமங்களாகிய சுண்ணாம்புக்கல், வெங்கக்கற்கள், பெல்ட்ஸ்பார், வெளிர் சிவப்பு வெங்கக்கற்கள், சிலிகா மணல் மற்றும் வெர்மிகுலைட் ஆகியவற்றை வெட்டியெடுப்பதிலும் ஈடுபட்டுள்ளது.

வேலை செய்யத் துவங்கிய முதலாண்டில் (1978–79) நிகர நட்டம் ரூ. 7.70 இலட்சங்கள். இதில் முதலீட்டு படிகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 1.6 இலட்சங்களும் அடங்கும். இந்நிறுவனம் 1979–80 இல் சுமார் ரூ. 5 இலட்சங்கள் இலாபம் ஈட்டும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

கரும்பாறைகளின் விலையை நிலைநிறுத்த அயல்நாட்டு வாணிபர்களுக்கு மட்டும் விற்பது என வரையறை செய்யப்பட்டது. இக்கொள்கையினால் உச்ச ஏற்றுமதி மதிப்பு கிடைக்கப் பெறுவதுடன் இவ்வியாபாரத்தில் இடைத்தரகர்கள் நீக்கப்படுகிறார்கள். 1979–80-இல் டாமின் நான்கு கரும்பாறைகள் குவாரிகளில் வேலை செய்து கொண்டுவந்தது. இவைகளில் மூன்று குவாரிகள் ஜப்பான் நாட்டிற்கு விநியோக ஒப்பந்தம் செய்யப்பட்டதில் அடங்கும். மேலும் எட்டு கூடுதல் பகுதிகளில் பணியினை துவக்குவதன்மூலம் டாமின் கரும்பாறைகள் வெட்டியெடுப்பதை விரிவுபடுத்தும். 1980–81-இல் 3,050 க.மீ. கரும்பாறைகளை உற்பத்தி செய்ய உள்ளது. இவ்வாண்டின் உத்தேச விற்பனை மதிப்பு சுமார் 119 இலட்சங்கள். இவை அனைத்தும் அன்னிய செலவாணியில் கிடைக்கும். இதில் நிகர இலாபம் சுமார் 36 இலட்சங்கள் ஆகும்.

தர்மபுரி மாவட்டம், செந்தரப்பள்ளி கிராமத்தில் 80 ஏக்கர் பரப்பில் கிடைக்கும் சாம்பல் நிறப்பாறைகளை பயன்படுத்துவதில் டாமின் முனைந்து 1980–81 ஆம் ஆண்டிற்கு 200 கன மீட்டர்களுக்கு ஏற்றுமதி ஆணை பெற்றுள்ளது.

1980–81-இல் பெருங்கனி வளங்களை வெட்டியெடுக்கும் திட்டம் பின்வருமாறு :—

(i) வெர்மிகுலைட் சுரங்கம், சேவாத்தூர், வடஆற்காடு மாவட்டம்.—1979–80 ஆம் ஆண்டில் டாமின் 440 டன்கள் பலதரப்பட்ட வெர்மிகுலைட்டை உற்பத்தி செய்தது. நடப்பு ஆண்டில் இவ்வுற்பத்தி 600 டன்களாக உயர்த்தப்படும்.

(ii) சுண்ணாம்புக்கல் சுரங்கம், அரியலூருக்கருகில், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.— திருச்சிராப்பள்ளி மாவட்டம்



அரியலூருக்கருகில் பெரிய நாகலூரில் உள்ள சுண்ணாம்புக்கல் சுரங்கத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு சராசரி 1,200 டன் சுண்ணாம்புக்கல் உற்பத்தி அளவு எட்டப்பட்டுள்ளது.

(iii) கடலூர் கரங்கங்கள், குளித்தலை வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.—வெங்கக்கற்களின் இரண்டுவித தரங்களும் சேர்ந்து 3,500 டன்கள் நடப்பு ஆண்டில் உற்பத்தி செய்யும் இலக்காக கொள்ளப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டிற்கு 6,000 டன்கள் வெங்கக்கற்கள் விற்பனை ஆணை ஒன்றை ஏற்கனவே பெற்றுள்ளது.

(iv) இளஞ்சிவப்பு வெங்கக்கற்கள், முளையூர், நத்தம் வட்டம், மதுரை மாவட்டம்.—இளஞ்சிவப்பு வெங்கக்கற்கள் சுமார் 7,000 டன்கள் இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதை தேர்ந்தெடுத்து சுரங்கவேலை செய்யவேண்டும். இளஞ்சிவப்பு வெங்கக்கற்களை மொத்தமாக வெட்டியெடுத்து சேகரித்து வைத்துக்கொள்ள இயலாது என்ற காரணத்தால் குறிப்பிட்ட வினியோக ஆணைகளின் பேரில் அவ்வப்பொழுது தேவைக்கேற்ப சுரங்கவேலை நடைபெறுகிறது. 1980–81 இல் சில அயல்நாட்டு விநியோக ஆணைகள் கிடைக்கப்பெறும் என நம்பப்படுகிறது. இதன்பிறகுதான் உற்பத்தி மற்றும் விற்பனையின் அளவு மதிப்பீடு செய்ய இயலும்.

(v) சிலிகா மணல், அகரம் ஒதுக்கக்காடு, மரக்காணம் அருகில், தென்னாற்காடு மாவட்டம்.—இத்திட்டம் ஏற்கனவே செயல்பட்டு வருகிறது. சிலிகா மணலில் அலுமினா அதிக அளவில் அடங்கியிருப்பதால், பீங்கான் மற்றும் கண்ணாடித் தொழிற்சாலைகளிலிருந்து இம்மணலுக்கான தேவை மிகவும் குறைவாக இருப்பதால் இப்பகுதியில் வெட்டியெடுக்கக்கூடிய இருப்பு 1,75,000 டன்கள் வரை சிலிகா மணல் இருந்தபோதிலும் ஆண்டொன்றுக்கு சுமார் 1,000 டன்களே உற்பத்தி செய்யு திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய திட்டங்கள் :—(i) வெங்கக்கற்கள் மற்றும் பெல்ட்ஸ் [1980 ஜூலை 19
பார், அரவாக்குறிச்சி சுரங்கம், கரூர் வட்டம், திருச்சிராப்பள்ளி
மாவட்டம்.—டாமின் கரூர் வட்டத்தில் 26.98 ஏக்கர் பரப்பில்
வெங்கக்கற்கள் மற்றும் பெல்ட்ஸ்பார் சுரங்கக் குத்தகை வேண்டி
ஏற்கனவே மனுச்செய்துள்ளது. நடப்பு நிதி ஆண்டு 1980—81-ல்
சுமார் 2,000 டன்கள் வெங்கக்கற்கள் மற்றும் பெல்ட்ஸ்பார்
உற்பத்தி செய்யப்படும். ஏற்கனவே பெறப்பட்ட விற்பனை
ஆணைகளின் மீது சுமார் 1,600 டன்கள் இப்பகுதியிலிருந்து
விற்பனை செய்ய இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) ரெங்கமலை சுரங்கம், வேடசந்தூர் வட்டம், மதுரை
மாவட்டம்.—மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டம்,
அய்யலூர் ஒதுக்கக் காடுகளில் உள்ள ரெங்கமலை, வண்டமலை,
கருமலை, பெருமலை ஆகிய பகுதிகளில் 53.50 ஏக்கரில்
வெங்கக்கற்கள் மற்றும் பெல்ட்ஸ்பார் வெட்டியெடுக்க குத்தகை
வேண்டி டாமின் மனுச்செய்துள்ளது. இப்பகுதியில் 2,000
டன்கள் வெங்கக்கற்கள் மற்றும் பெல்ட்ஸ்பார் உற்பத்தி
செய்யவும் அவற்றில் 1,600 டன்கள் பெறப்பட்டுள்ள விநியோக
ஆணைகளின் மீது விற்பனை செய்யவும் உத்தேசிக்கப்பட்
டுள்ளது.

(iii) இராமநாதபுரம் மாவட்டம் சிவகெங்கைப் பகுதியில்
கிடைக்கும் கிராபைட் தனிமத்தை பயன்படுத்துவதற்கான
திட்டங்கள்.—இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கிராபைட்டை
வெட்டியெடுத்தல், சுத்திகரிப்பு, மற்றும் இறுதிப்பொருட்களை தயாரிக்கும்
தொழிற்சாலை நிறுவுதல் ஆகியவற்றிற்காகும் இத்திட்டம்
அடிப்படையாகக் கொண்டு சுத்திகரிப்புக்கு
வேண்டிய திட்ட வரைபடம் தயாரிக்கவும், இறுதிப்பொருட்களை
தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவவும், அவற்றின் திறன்,
அமைக்கவிருக்குமிடம், இவைகள் இடம் பெற்ற ஒரு விரிவான
திட்ட அறிக்கை தயாரிக்க வேண்டியிருப்பதால் முதலில்
நிலங்களை தன்வயப்படுத்திக்கொள்ளவும், பிறகு கிராபைட்
தொழிலில் நிபுணத்துவம் வாய்ந்த சில நிறுவனங்களின்
ஒத்துழைப்போடு ஒரு விரிவான திட்ட அறிக்கையைத்



1980 ஜூலை 19]

தயாரிக்கவும் இந்நிறுவனம் முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின்
முதல் ஆண்டில் (1980-81) இராமநாதபுரம் மாவட்டம்,
சிவகெங்கை வட்டத்தில் கிராபைட் செறிந்த 602 ஏக்கர் பரப்
பிற்கு குத்தகை வேண்டி டாமின் மனுச் செய்துள்ளது. பெரும்
பாலான புறம்போக்கு நிலங்கள் பட்டா நிலங்களுக்கு இடை
யிடையே இருப்பதால் நில எடுப்பு செய்வது முதலில் இன்றியமை
யாததாகிறது. 1980—81 இல் நில எடுப்பு பணிகள் முற்றிலுமாக
முடிவுற்று சுரங்க வேலைகள் செய்வதற்கு தேவையான ஆரம்பப்
பணிகள் முடிவு பெறும். நில எடுப்புப் பணிகள் முடிந்து நிலங்கள்
டாமினிடம் ஒப்படைக்கப்பட்டபிறகு முன்னோடி சுரங்க
வேலைகள் துவங்கப்பெறும். விரிவான திட்ட அறிக்கை
தயாரிக்கும்பொழுது கூடவே சுரங்க வேலைகள் வளர்ச்சி பெற்று
வரும்.

வேலை வாய்ப்புகள்.—பின்தங்கிய மற்றும் கிராமப்புறங்
களில் உள்ள வேலையற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிக்க
வேண்டுமென்ற மாநில அரசின் குறிக்கோளுக்கிணங்க மலைப்
பகுதியில் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் டாமின் பல சுரங்கங்
களை நடத்தி வருகிறது. 1979-80 ஆம் ஆண்டில் 845
பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. வரும் ஆண்டில்
சுமார் 1,365 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் என
எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட்.

1979 ஆம் ஆண்டு சனவரித் திங்கள், அரசால், சேலம்
மாவட்டம், ஓமலூர் வட்டம், தாத்தையங்கார்ப்பட்டி கிராமத்
தில் புல எண் 153 இல் 578.92 ஏக்கரா பரப்பில் சேலம்
மாக்னசைட் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் வசம்
இருந்த பகுதிகளிலிருந்து மாக்னசைட் கனிப்பொருளை வெட்டி
எடுக்க தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட் என்ற புதிய நிறுவனம்
தோற்றுவிக்கப்பட்டது. இந்நிறுவனம் சுரங்கங்களை அரசின்
சார்பில் "ரெய்சிங் காண்ட்ராக்டர்" என்ற முறையில் கடந்த

பிப்ரவரி 1979-விருந்து சுரங்க வேலைகளை செய்துவருகிறது. [1980 ஜூலை 19
முன்னர் சேலம் மாக்னசைட் பிரைவேட் லிமிடெட்டில் பணி
யாற்றிய நிரந்தர மற்றும் முறையான பணியாளர்கள் சுமார்
2,300 நபர்கள் தமிழ்நாடு மாக்னசைட்டில் வேலைக்கு
எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். இந்நிறுவனத்தின் ஒப்புதல்
பெற்ற பங்கு மூலதனத் தொகை ரூ. 200 இலட்சங்களாகும்.
இதுவரை அரசு இந்நிறுவனத்திற்கு பங்கு மூலதனத் தொகை
யாக ரூ. 50 இலட்சம் அளித்துள்ளது.

பிப்ரவரி 1979-விருந்து மார்ச்சு 1980 வரை இந்நிறுவனத்தின்
செயல் திறன் பின்வருமாறு :—

கச்சா மாக்னசைட் உற்பத்தி .. 1,14587 மெட்ரிக் டன்கள்.
கச்சா மாக்னசைட் விற்பனை .. 1,05,079 மெட்ரிக் டன்கள்.
விற்பனையின் மூலம் வருமானம். ரூ. 2,44,00,832.
செயல்படுத்துவதற்கான மொத்தச் செலவு. ரூ. 2,04,24,418.

(8.33 சதவீதம் போனஸும், 4.5 சதவீதம் பணிக் கொடையும் சேர்த்து ஒதுக் கப்பட்டது).

உபரி வருமான வரவு .. .. ரூ. 57,14,261.
(இருப்பு, மதிப்பு உள்ளடங்கியது).
கையாளப்பட்ட கழிவுகளின் மொத்தம். 10,73,3,534 மெட்ரிக் டன்கள்.

தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் துவங்கிய போது சுரங்கங்
களில் சேர்ந்திருந்த கழிவுகளால் சுரங்கங்கள் வேலை செய்வதற்கு
அபாயகரமானவை என்று ஊர்காமில் உள்ள சுரங்க பாதுகாப்பு
இயக்குநர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. ஆனால் தமிழ்
நாடு மாக்னசைட் நிறுவனம் 1979-80 ஆம் ஆண்டில் 10.73
இலட்சம் டன்கள் கழிவுப்பொருட்களை அகற்றி உள்ளது-
இது சாதாரணமாக கழிவுப்பொருட்களை அகற்ற கையாளும்
விகிதத்தை விட உயர்ந்தது.



திறந்த டெண்டர்களின் மூலம் விற்பனை செய்ய வேண்டும்
என்ற கொள்கையின் காரணமாக, விற்பனை செய்யப்பட்டதில்
வருமானம் கணிசமான அளவு ரூ. 244 இலட்சம் வரை உயர்ந்து
உள்ளது. இதனால் உபரி ரொக்கம் மட்டும் கீழே குறிப்பிட்
டுள்ள விபரப்படி ரூ. 89.65 இலட்சங்கள் ஆகும்.

| | (ரூபாய் இலட்சங்களில்.) |
|---|---|
| (1) விற்பனையின் மூலம் கிடைத்த உபரி வருமானம் அரசுக்கு செலுத்தப்பட்டது .. .. | 25.91 |
| (2) தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனத்திற்கு நிகர இலாபம் (8.33 சதவீதம் போனசுக்கு ஒதுக்கப் பட்டது போக மேல்) .. .. .. | 7.45 |
| .. .. | 32.06 |
| (3) தேய்மானத்திற்கான ஒதுக்கீடு .. .. | 24.23 |
| (4) முதலீட்டிற்கான ஒதுக்கீடு .. .. .. | |
| மொத்தம் உபரி ரொக்கம் பெறப்பட்டது .. | 89.65 |

ஜூன் 1980 முதல் இந்நிறுவனம் மாதத்திற்கு 10,000 டன்
கள் கச்சா மாக்னசைட் உற்பத்தி செய்யவும் ஒவ்வொரு யாதமும்
1.40 இலட்சம் டன்கள் வளர்ச்சிப் பணியில் ஈடுபடவும் திட்ட
மிட்டுள்ளது.

கச்சா மாக்னசைட்டின் தரத்தை மேம்படுத்துவதற்காக தமிழ்
நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து கூட்டுத்
துறையில் இந்நிறுவனத்தின் சுரங்கத்திற்கு அருகில் சுத்திகரிப்பு
மற்றும் அனற்பொறி ஆலை (Benefication-cum-Refractory Plant)
ஒன்றை நிறுவ இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது. இதன் மூலம்
சந்தையில் மாக்னசைட்டிற்கு அதிக விலை கிடைக்கும், இத்
திட்டத்தின் முதற் கட்டமாக ஆஸ்திரிய வல்லுநர்கள் மாதிரி
களின் ஆய்வினை செய்துள்ளனர். தரத்தின் ஆராய்ச்சியினை

நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 
உடன் ஆஸ்திரிய நாட்டுடன் இணைந்து தொழிற்சாலை அமைப் ஆராய்ச்சி முடிந்த
பது பற்றிய செயற்குறிப்பு குறித்து முடிவு எடுக்கப்படும்.

இந்நிறுவனம் துவங்கப்பட்ட முதலாண்டிலேயே பல இடர்
பாடுகளுக்கிடையில் அதன் செயல் திறன் பாராட்டத்தக்கவாறு
உள்ளது. தனியார் நிறுவனம் முந்தைய ஆண்டுகளில் குறைந்த
பட்ச இலாபத்தையோ அல்லது நட்டத்தையோக் காட்டி வந்த
நிலையுடன் ஒப்புநோக்கும் போது இந்நிறுவனத்தின் செயல்
திறன் மிகவும் உயர்வானது என்பது நன்கு விளங்கும்.

## தமிழ்நாடு மாக்னசைட் பிராடக்ட்ஸ் லிமிடெட்.

1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் திருவாளர்கள்
சேலம் மாக்னசைட் (பிரைவேட்) லிமிடெட்டிற்குச் சொந்தமான
ஆலையில் சுட்ட மாக்னசைட்டை உற்பத்தி செய்ய திருவாளர்
கள் தமிழ்நாடு மாக்னசைட் லிமிடெட்டும், சேலம் மாக்னசைட்
(பிரைவேட்) லிமிடெட்டும் இணைந்து தமிழ்நாடு மாக்னசைட்
பிராடக்ட்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் கூட்டுத்துறையில் துவங்
கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு உப்பு நிறுவனம்.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974 ஆம் ஆண்டு ஜூலை
திங்கள் 22 ஆம் நாள் முதல் ரூ. 50.00 இலட்சம் மூலதனத்துடன்
இயங்க ஆரம்பித்தது. இதன் முக்கிய பங்கு உப்பு தயாரித்தலும்,
மற்றும் உப்பைச் சார்ந்த இரசாயணப் பொருட்களை தயாரிப்
பதே ஆகும்.

மாரியூர்—வாலிநோக்கம் உப்பு திட்டம்.—இராமநாதபுரம்
மாவட்டத்தில் மாரியூர் சதுப்பு நிலப் பகுதியை உப்பளங்களாக
உருவாக்குவதற்கும், மேலும் எந்தத் தொழிலும் ஆரம்பிக்க
முடியாததும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளதுமான இந்த
இடத்தில் வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் எண்
ணத்துடனும் இத்திட்டம் தமிழக அரசால் ஆரம்பிக்கப்பட்டது.
5,617 ஏக்கராக்கள் மொத்த பரப்பளவு கொண்ட இத்திட்டத்



இந்த முதலீடானது
தின் மதிப்பீடு ரூபாய் 145 இலட்சமாகும். 
ரூபாய் 50 இலட்சம் தமிழ்நாடு அரசின் நிலையான பங்கு
மூலதனத்தினாலும் ரூபாய் 15 இலட்சம் மத்திய அரசின் உதவித்
தொகையும் (Capital Subsidy) மீதியுள்ள தொகை தமிழக
அரசின் கடன் உதவியின் மூலமாகவும், மற்றும் வங்கியின் மூல
மாகவும் பிற நிதி நிறுவனங்களிடமிருந்து பெறுதலாகும். தமிழ்
நாடு அரசு இதுவரை இந்த கழகத்தின் பங்கு மூலதனத்தில்
ரூபாய் 50 இலட்சம் முதலீடு செய்துள்ளது. மற்றும் ரூபாய்
8 இலட்சம் கடன் உதவி அளித்துள்ளது. தொழில் முதலீட்டுக்
கழகத்திலிருந்து (ரூபாய் 30 இலட்சம் கடன் உதவித் தொகை
யில்) இதுவரை ரூபாய் 29.60 இலட்சம் பெற்றுள்ளது. கனரா
வங்கியிலிருந்து (ரூபாய் 10 இலட்சம் கடன் உதவித் தொகையில்
இதுவரை ரூபாய் 6.22 இலட்சம் பெற்றுள்ளது. மற்றும் மத்திய
அரசின் உதவித்தொகையின் மூலமாக ரூபாய் 5.66 இலட்சம்
உதவித் தொகை பெற்றுள்ளது. மார்ச் 1980 வரை இக்கழகம்
ரூபாய் 103 இலட்சம் செலவு செய்துள்ளது.

முதல் கட்டப் பணியாக இத்திட்டம் பகுதியைச் சுற்றி சுமார்
24 கி. மீட்டர் நீளமுள்ள சுற்று அணைக்கரை போடப்பட்டு
வெள்ளம் உட்புகா வண்ணம் தடுக்கப்பட்டுள்ளது. 1979-ல் 63
உப்பளங்கள் தயார் செய்யப்பட்டு உப்பு உற்பத்தி செய்யப்
பட்டது. மேலும் 33 உப்பளங்கள் 1979-ல் சேர்க்கப்பட்டு
மொத்தம் 96 உப்பளங்களில் 1979-ல் உப்பு உற்பத்தி செய்யப்
பட்டது. 1979 ஆம் வருட துவக்கத்தில் நிமிடத்திற்கு
10,000 காலன் கடல் நீர் பம்பு செய்யப்பட்டது. கடல் நீர்
பற்றாக் குறை ஏற்படா வண்ணம் மேலும் இரண்டு
5,000 ஜி.பி.எம். பம்ப் செட்டுக்கள் நிறுவப்பட்டு 10,000 காலன்
பம்பு செய்யப்பட்ட கடல் நீர் 1979 ஆம் ஆண்டு முடிவுக்குள்
20,000 காலன்களாக உயர்த்தப்பட்டது. இப்பகுதியில் 1979
வரை 2,291 ஏக்கராக்கள் மேம்பட்டுள்ளது. 1979-ல் மட்டும்
641 ஏக்கராக்கள் மேம்பட்டுள்ளது. 1978-ல் 6,500 டன் உப்பு
உற்பத்தி செய்யப்பட்ட இத்திட்டத்தில் 1979-ல் உப்பு உற்பத்தி
22,660 டன்களாக உயர்ந்தது. மார்ச் 1979-ல் 56 டன்களாக
இருந்த தினசரி உப்பு உற்பத்தி அக்டோபர் 1979-ல் 226
டன்களாக உயர்ந்தது.

மரவக்காடு—வடக்காடு உப்பு திட்டம்—மேலும் இந் நிறுவ [1980 ஜூலை 19
ணம் தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மரவக்காடு
வடக்காடு கிராமங்களில் 5,400 ஏக்கராப் பரப்பளவில் புதிய
உப்பு உற்பத்தி செய்ய மேற்கொண்டுள்ளது. இந்த இடம்
60,000 ஏக்கரா பரப்பளவு கொண்ட வேதாரண்யம் சதுப்பு
நிலப் பகுதியைச் சேர்ந்ததாகும். இந்நிறுவனம் தல ; எல்லை
வேறுபாடு குறிப்புத் திட்டம் மே மாதம் 1979-ல் முடிந்தது.
இத்திட்டத்திற்கு விரிவான திட்ட அறிக்கையைத் திட்ட மேலா
ளர், மாரியூர் வாலிநோக்கம் அவர்களால் தயாரிக்கப்பட்டு
தலைமை அலுவலகத்தில் பரிசீலிக்கப்படுகின்றது. விரிவான
திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு முன்பாக மேற்குக் கரை உறுதி
படுத்தப்படும் வேலை மே-ஜூன் 1979-ல் நடந்தது. மார்ச்
1979-ல் தமிழக அரசு இத்திட்டத்திற்கு ரூபாய் 5 இலட்சம்
கடன் உதவி அளித்துள்ளது. இத்திட்டத்திற்காக மார்ச் 1980
வரை ரூபாய் 2.15 இலட்சம் செலவாகியுள்ளது.

1980-ல் மாரியூர்-வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டத்தில்
மேலும் 717 ஏக்கராக்கள் மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்
பட இருக்கிறது. மேலும் 64 உப்பளங்கள் 1980-ல் சேர்க்கப்
பட்டு மொத்தம் 160 உப்பளங்கள் 1980-ல் உப்பு உற்பத்திக்குப்
பயன்படுத்தப்பட இருக்கிறது. இந்த உப்பு கூட்டுத் திட்டத்
தில் உயர்ந்த ரக தொழிற்சாலைக்கான உப்பு உற்பத்தி செய்ய
இவ்வாண்டில் முயற்சிக்கும். இவ்வருடத்தின் குறியளவு 35,000
டன் ஆகும். இதன் மதிப்பு ரூபாய் 16.50 இலட்சமாகும்.
தமிழக அரசு 1980-81 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்
டத்தில் ரூபாய் 10 இலட்சம் கடன் உதவி அளிக்க முடிவு செய்து
1980-81 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் சேர்க்கப்
பட்டுள்ளது. 1980 ஆம் ஆண்டு மே மாதம் வரையில் 10,000
டன்கள் உப்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டு மரவக்காடு வடக்காடு உப்புத் திட்டப்
பகுதியைச் சுற்றிலும் ரூபாய் 8.43 இலட்சம் செலவில் அணைக்
கரை போடத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதில் ரூபாய் 0.77
இலட்சம் செலவில் தொழிலாளர்களுக்கு தங்குவதற்கு வசதியாக
தங்குமிடம் கட்டப்பட இருக்கிறது. மேலும் இந்நிறுவனம் இத்

திட்டப் பகுதியின் மேற்குப் பகுதியில் 3·2 கிலோ மீட்டர் நீளம் அணைக்கரை போடும் பணி செயல்பட்டு வருகிறது. இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 3·71 இலட்சமாகும். மேலும் இத்திட்டப்பகுதியின் கிழக்கு வடக்கு ஆகிய பகுதிகளில்அணைக் கரை போடுவதற்காக ரூபாய் 4·72 இலட்சம் திட்டமிடப்பட்டு அவைகள் மேற்பார்வை பொறியாளர் (கட்டுமானம்) தொழில் துறையின்ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூபாய் 2·15 இலட்சம் மார்ச் மாதம் 1980 வரை செலவு செய்யப் பட்டுள்ளது. மேலும் அரசு இத்திட்டத்திற்காக 1980-ம் ஆண்டில் ரூபாய் 10 இலட்சம் பங்கு மூலதனமாக வழங்கியுள்ளது.

வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட இத்திட்டங்களின் மூலம் 1,500 நபர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

இத்திட்டம் இன்னும் முழுமை பெறாததால் 1979-ம் ஆண்டு இறுதிவரை ரூபாய் 34·78 இலட்சம் இழப்பு அடைந்துள்ளது. இந்நிறுவனம் 1981-ம் வருடத்திலிருந்து தேய்மானம் வட்டி முதலியவற்றைக் கணக்கிடாமல் இலாபம் அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிறுவனத்தின் கீழ் உள்ள மாரியூர்-வாலிநோக்கம் கூட்டுத் திட்டப்பகுதியில் அங்கு உற்பத்தி செய்யப்படும் உப்பு மற்றும் கழிவு நீர் (பிட்டர்ன்ஸ்) இரண்டையும் மூலப் பொருளாகக் கொண்டு 'மக்னீஷியம் உலோகத் திட்டம்' ஒன்று ஆரம்பிக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் தேவையான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

வேதாரண்யம் சதுப்பு நிலப் பகுதியில் கடற்பகுதி உயிரின வாழ்க்கைச் சூழ்நிலை பாதிக்கா வண்ணம் எவ்வளவு பரப்புக் களில் உப்பு உற்பத்தி செய்ய முடியும் என்பதற்கான இடங் களை வரைவதற்காக பம்பாய் இயற்கை வரலாற்று சங்கம் ஆராய்வதற்கு இந்நிறுவனம் ரூ. 1·48 இலட்சம் செலவிடத் தீர்மானித்துள்ளது. பம்பாய் இயற்கை வரலாற்று சங்கம் இரண்டு ஆண்டுகள் ஆராய்ந்த பின்பு வேதாரண்யம் சதுப்பு நிலத் தில் எந்த இடத்தில் உப்பு உற்பத்தி மேற்கொள்ள முடியும் என் பது குறித்து விரிவான அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிக்கும்.

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கழுவேலி சதுப்பு நிலத்தில் உப்பு உற்பத்தி மேம்பாட்டுக்கு இந்நிறுவனம் ஆரம்பத்திட்ட அறிக்கை தயாரித்துள்ளது. இவ்வறிக்கையின் மூலம் கந்தாடு கிராமத்திலுள்ள கழுவேலி சதுப்பு நிலத்தில் 1588 ஏக்கரா நிலப் பகுதி உப்பு உற்பத்திக்குத் தகுதியானது என்று கருதி இந்நிறுவனம் அப்பகுதியில் உப்பு உற்பத்தி மேம்பாட்டுக்கு விரிவான திட்ட அறிக்கை ஒன்றினைத் தயாரிக்க முடிவு செய்துள்ளது.



தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட்.

வேலை வாய்ப்பு எண்ணிக்கை விவரம்.

| தொடர் எண்ணும் நிறுவனத்தின் பெயரும். | புதிதாக தோற்றுவித்த வேலை வாய்ப்புகள் 1978–1979 (31-3-1979 முடிய). | மொத்த வேலை வாய்ப்பு 1-4-1979ல் | வேலை வாய்ப்பு 1979–80-ல் ஏற்படுத்தியது. இந்த ஆண்டின் குறியீட்டளவு. | வேலை வாய்ப்பு 1979–80-ல் ஏற்படுத்தியது. வேலை வாய்ப்பு ஏற்படுத்தியது (31–12–1979 வரை.) | 1980–81-க்கு ஏற்படுத்த வேண்டிய வேலை வாய்ப்பு. இந்த ஆண்டின் குறியீட்டளவு. | 1980–81-க்கு ஏற்படுத்த வேண்டிய வேலை வாய்ப்பு. மொத்த வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட். | | | | | | |
| (அ) நிரந்தர நிறுவன அலுவலர். | 3 | 38 | .. | 13 | 17 | 68 |
| (ஆ) பருவக்காலத்து தொழிலாளர்கள். | 100 | 1,000(அ) | 330(ஆ) | 300 | 200 | 1,500 |

குறிப்பு.—(அ) இது மாரியூர் வாலிநோக்கம் உப்பு கூட்டுத் திட்டம் பருவ காலத்து வேலை வாய்ப்பினை குறிப்பதாகும்.

(ஆ) மரவக்காடு—வடகாடு உப்பு கூட்டுத் திட்டம் 3 வருடங்களில் முடிவடைந்து பின்னர் 1000 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்கும் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே முதல் வருடத்திற்கு மூன்றில் ஒரு பங்கு குறி அளவாக எடுக்கப்பட்டுள்ளது.

## சர்க்கரைத் தொழில்

முன்னுரை :

1·1. நம் நாட்டின் பொருளாதாரத்தில் சர்க்கரைத் தொழில்
ஒரு முக்கிய அங்கம் வகிக்கிறது. சர்க்கரை ஆலைக்கும் கரும்பு
பயிரிடுவோருக்கும் இடையே ஒரு நெருங்கிய நல்லிணக்கத்தை
ஏற்படுத்தியுள்ளதோடு, சர்க்கரை ஆலையின் வளர்ச்சியையும்,
முன்னேற்றத்தையும் ஒட்டியே அதனைச் சார்ந்துள்ள கரும்பு
விவசாயிகளின் மேம்பாடும் அமைந்திருப்பது, இத்தொழிலின்
குறிப்பிடத்தக்க அம்சமாகும். கடந்த முப்பதாண்டுகளில் தமிழ்
நாட்டில் சர்க்கரைத் தொழில் போற்றத்தக்க வளர்ச்சி அடைந்
ள்ளது. 1950–60 காலத்திற்குட்பட்ட பத்தாண்டுகளில் 8 ஆக
இருந்த சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை 1960–70-ல் 16
ஆலைகளாகவும், 1970–80-ல் 20 ஆலைகளாகவும் உயர்ந்தன.
1950 முதல் 1960 வரையிலான பத்தாண்டு காலத்தில் சர்க்கரை
உற்பத்தியில் கூட்டுறவு இயக்கம் அடியெடுத்து வைத்தது ; பின்
வந்த பத்தாண்டு காலங்களில் இது தொடர்ந்து வளர்ச்சி பெற
லாயிற்று. 1959–60 ஆம் ஆண்டில் கூட்டுறவுத் துறையில் ஒரே
ஆலைதான் இயங்கி வந்தது ; 1979–80-ல் இந்த எண்ணிக்கை
9 ஆக உயர்ந்தது. தமிழ் நாட்டில் 20 சர்க்கரை ஆலைகள்
உள்ளன. அவற்றில் 8 தனியார் துறையினையும், 9 கூட்டுறவுத்
துறையினையும், 2 பொதுத்துறையினையும் எஞ்சிய ஒன்று மத்திய
அரசால் நிர்வகிக்கப்படும் பொதுத்துறையினையும் சார்ந்தவை
களாகும். இந்த ஆய்வில் முக்கியமாக 1978–79 ஆம் சர்க்கரை
ஆண்டில் (அக்டோபர் 1978 முதல் செப்டம்பர் 1979 வரை)
சர்க்கரைத் தொழிலின் சாதனைகளை முந்தைய ஆண்டின்
(1977–78) சாதனைகளுடன் ஒப்பிட்டு விளக்குவதுடன் 1979–80
ஆம் ஆண்டில் சர்க்கரைத் தொழில் திட்டங்கள் குறித்தும்
1980-81 ஆம் ஆண்டிற்கான சுருக்கக் குறிப்பும் கொடுக்கப்பட்
டுள்ளது .



## 2. சர்க்கரைத்துறை இயக்ககம்.

2·1. பொதுவாக சர்க்கரைத் தொழில் குறிப்பாக கூட்டுறவு
சர்க்கரை ஆலைகளைச்சார்ந்த அனைத்துப் பணிகளையும் கவ
னித்து வருவதோடு, இத்தொழிலின் முறையான வளர்ச்சியை
தொடர்ந்து செயல்படுத்த, தமிழ்நாடு அரசு தனியானதொரு
இயக்ககத்தை 1969 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அமைத்
தது. இச்சர்க்கரை இயக்ககமானது குறிப்பாககூட்டுறவு சர்க்கரை
ஆலைகளுக்கு ஒரு மேற்பார்வை அங்கமாக இருப்பதால், ஒருங்
கிணைந்த செயல்பாடுக்கும் வழி கோலுகிறது. இதனைக் கருத்
திற் கொண்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைப் பொறுத்த
மட்டில், கூட்டுறவுப் பதிவாளரின் அனைத்து அதிகாரங்களும்,
சர்க்கரைத்துறை இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளன.

2·2. தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளின் உரிமம்
வழங்கப்பட்ட உற்பத்தித் திறனளவு மற்றும் நிறுவிய உற்பத்தித்
திறனளவு ஆகிய விவரங்களை இணைப்பு 1-ல் காணலாம்.

## 3. சர்க்கரை ஆலைகளின் செயல் முறை.

சர்க்கரைத் தொழிலுக்கு தமிழ்நாடு புதியதாக இருந்தாலும்,
அது சீரான வளர்ச்சியை அடைந்திருக்கிறது. நாட்டில் உள்ள
பிற சர்க்கரை உற்பத்தி செய்யும் மாநிலங்களோடு ஒப்பிடும்போது
தமிழ்நாட்டின் சாதனை போற்றத்தக்கதாக உள்ளது. கரும்பு
பயிரிடும் பரப்பளவு தமிழ்நாட்டில் ஒரு சீரான அளவோடு இருப்
பதுடன் மட்டுமில்லாமல் சில ஆண்டுகளில் அதிகரித்தும் உள்ளது.
தமிழ்நாடு சர்க்கரைத் தொழிலின் நிறைவான இச்சாதனைக்கு
உயர்ரக, அதிக விளைச்சல் தரக்கூடிய, பல்வேறு பருவகாலங்
களுக்குப் பொருத்தமான கரும்புரகங்களைப் பயிரிட ஏற்பாடு
செய்தது மட்டுமில்லாமல், கரும்பிற்கான விலையை உரிய காலத்
தில் கொடுத்ததும் காரணங்களாகும். மேலும் கரும்பு உற்பத்தி
யாளர்களுடன் சர்க்கரை ஆலைகள் நல்லிணக்கம் கொண்டிருந்த
தோடு, கரும்பு உற்பத்திக்காக ஊக்குவிப்புகள் வழங்கியதாலும்
இச்சாதனை புரிய முடிந்தது.

## 4. சாதனைகள்.

தமிழ்நாட்டில் கரும்பு பயிரிடப்பட்ட பரப்பளவு, கரும்பு உற்பத்தி மற்றும் சர்க்கரை ஆலைகள் பயன்படுத்திய கரும்பின் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு. | கரும்பு பயிரிடப்பட்ட பரப்பளவு (ஆயிரம் ஹெக்டேரில்). | உற்பத்தி செய்யப்பட்ட கரும்பின் அளவு (ஆயிரம் டன்களில்). | ஆலைகளில் பயன்படுத்தப்பட்ட கரும்பின் அளவு (ஆயிரம் டன்களில்). | மொத்த உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட கரும்பின் அளவு (சதவிகிதத்தில்.) | ஹெக்டேருக்கு சராசரி விளைச்சல். (டன்களில்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1968–69 | 172 | 14,024 | 4,169 | 30 | 81.53 |
| 1969–70 | 139 | 10,916 | 3,656 | 34 | 78.53 |
| 1970–71 | 114 | 9,391 | 3,326 | 35 | 82.38 |
| 1971–72 | 117 | 10,357 | 3,236 | 31 | 88.38 |
| 1972–73 | 144 | 12,113 | 4,008 | 33 | 84.12 |
| 1973–74 | 186 | 18,183 | 5,287 | 29 | 97.76 |
| 1974–75 | 160 | 14,593 | 4,556 | 31 | 91.21 |
| 1975–76 | 128 | 11,936 | 1,969 | 17 | 93.25 |
| 1976–77 | 155 | 14,245 | 3,791 | 27 | 92.21 |
| 1977–78 | 167 | 17,238 | 5,466 | 32 | 103.22 |
| 1978–79 | 154 | 15,431 | 5,768 | 37 | 100.20 |
| 1979–80 | 165* | 16,955* | 4,199** | 25 | 102.75* |

*முடிவான மதிப்பீடு **மதிப்பீடு.



## 5. செயல் முடிவுகள்.

### 5.1. கரும்பு அரைவையும் சர்க்கரை உற்பத்தியும்.

1976–77 முதல் 1978–79 வரையான ஆண்டுகளில் சர்க்கரை ஆலைகளின் செயல் திறன் குறித்த விவரங்களை இணைப்பு 2-ல் காணலாம். 1978–79 ஆம் ஆண்டு அரைவை செய்த கரும்பின் அளவு, உற்பத்தி செய்த சர்க்கரை அளவு மற்றும் 1979–80 ஆம் ஆண்டில் அரைவைக்கு எதிர்பார்க்கப்படும் கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தி அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 1978–79 ஆம் ஆண்டில் அரைவை செய்யப்பட்ட கரும்பின் அளவு. | 1979–80 ஆம் ஆண்டில் அரைவைக்கு எதிர்பாக்கப் படும் கரும்பின் அளவு. |
|---|---|---|---|
| | | (இலட்சம் டன்களில்) | |
| கூட்டுறவுத் துறை | .. | 24.27 | 15.18 |
| தனியார் துறை | .. | 28.01 | 22.38 |
| பொதுத்துறை | — | 5.40 | 4.43 |
| | | 57.68 | 41.99 |

[1980 ஜூலை 19

| | 1978–79-ல் உற்பத்தி செய்த சர்க்கரை அளவு | 1979–80-ல் எதிர்பார்க்கப் படும் சர்க்கரை உற்பத்தி அளவு. |
|---|---|---|
| | (இலட்சம் டன்களில்) | |
| கூட்டுறவுத் துறை .. | 2.13 | 1.42 |
| தனியார் துறை .. | 2.32 | 1.96 |
| பொதுத் துறை .. | 0.47 | 0.40 |
| | 4.92 | 3.78 |

5.2. 1979–80 ஆம் ஆண்டில் அரைவை செய்யப்படும் கரும்பின் அளவு முந்தைய ஆண்டைவிட குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சர்க்கரை ஆலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட கரும்பிலிருந்து பெரும் அளவினை வெல்லம் தயாரிக்கப் பயன்படுத்துவதே இதன் முக்கிய காரணமாகும். இதனால் சர்க்கரை உற்பத்தி முந்தைய ஆண்டைக் காட்டிலும் குறைவாகவே இருக்கும்,

## 6. சர்க்கரைத் தொழிலின் பொது நிலை.

6·1. மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழ்நாட்டின் பருவ கால நிலை கரும்பு பயிரிடுவதற்கு மிகவும் பொருத்தமுடையதாக உள்ளது. இதனால் பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ் நாட்டில் கரும்பு மகசூல் அதிகமாக இருக்கிறது. 1977–78 மற்றும் 1978–79 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப் பட் - கரும்பின் அளவு முறையே 172 இலட்சம் மற்றும் 154 இலட்சம் டன்களாக இருந்தது. 1979–80 ஆம் ஆண்டில் உற்பத்தி யாகும் கரும்பின் அளவு 160 இலட்சம் டன்களாக இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது,



1980 ஜூலை 19]

6-2-1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளில் தமிழ் நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் அரவை செய்யப்பட்ட கரும்பின் அளவு முறையே 54-66 இலட்சம் மற்றும் 57.68 இலட்சம் டன்களாகும்.

| தொடர் எண்ணும் சர்க்கரை ஆண்டும். (1) | | அரவை செய்யப்பட்ட கரும்பு. (2) | சர்க்கரை உற்பத்தி. (3) | சர்க்கரை கட்டுமானம் (சதவீதம்). (4) | உற்பத்தித் திறனை பயன்படுத்தியது (சதவீதத்தில்). (5) |
|---|---|---|---|---|---|
| | | (இலட்சம் டன்களில்). | | | |
| (1) 1975–76 | .. | 19.69 | 1.80 | 9.14 | 39 |
| (2) 1976–77 | .. | 37.91 | 3.22 | 8.48 | 65 |
| (3) 1977–78 | .. | 54.66 | 4.68 | 8.57 | 79 |
| (4) 1978–79 | .. | 57.68 | 4.92 | 8·52 | 84 |
| (5) 1979–80* | .. | 41.99 | 3.78 | 9.00 | 61 |
| (6) 1980–81** | .. | 53.10 | 4.62 | 8.70 | 77 |

*எதிர்பார்க்கப்படும் அளவு.

**மதிப்பீடு.

## 7. கரும்பு விலை.

7.1. கரும்பு பயிர் செய்யப்படும் பரப்பளவை நிலைப்படுத்த சர்க்கரை ஆலைகள் தங்களுக்கு அளிக்கப்படும் கரும்பிற்கு நல்லதொரு விலை கொடுக்க வேண்டும் என சர்க்கரைத் தொழில் ஆய்வுக் குழு கருதியது. இதற்காக அக்குழு ஒரு வழி முறையை யும் பரிந்துரை செய்தது. இதன்படி வெளிச் சந்தையில் சர்க்கரை விற்பனையில் கிடைக்கும் அதிக இலாபத்தை, சர்க்கரை

[1980 ஜூலை 19

ஆலைகளும் கரும்பு உற்பத்தியாளர்களும் 50:50 என்ற விகிதத்தில் பிரித்துக் கொள்ள வேண்டும். இந்த பரிந்துரையை மத்திய அரசு 1974–75 ஆம் ஆண்டு முதல் சட்ட ரீதியாக செயல்படுத்தியது. ஆயினும் கரும்பு பயிரிடப்படும் பரப்பளவை நிலைப்படுத்தவும், கரும்பு உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக உற்பத்தியாளர் களை ஊக்குவிப்பதற்கும் தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகள் மேற்குறித்த வழி முறையின்படி கொடுக்கப்பட வேண்டிய சட்டபூர்வ இறுதி கரும்பு விலையைக் காட்டிலும் அதிக விலையைக் கொடுத்து வந்தன.

7. 2. 1978–79 ஆம் ஆண்டிற்கு 8.5 அல்லது அதற்கு குறை வான சதவிகித சர்க்கரைச் சத்துடைய கரும்பின் குறைந்த அளவு விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 10 என மத்திய அரசு நிர்ணயம் செய்தது 8·5 சதவிகித சர்க்கரைச் சத்துக்கு அதிகமாகக் கிடைக்கும் 0.01 சதவீதம் ஒன்றிற்கும் குவிண்டால் ஒன்றுக்கு 11.7647 பைசா அதிகமாகக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது. 1979–80 ஆம் ஆண்டிற்கு 8.5 சதவீதம் அல்லது அதற்கு குறைவான சதவிகித சர்க்கரை சத்துடைய கரும்பிற்கான குறைந்த அளவு விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.12.50 எனவும், சர்க்கரை சத்து 8.5 சதவிகிதத்திற்கு மேற்படும்பொழுது ஒவ்வொரு 0.01 சதவிகிதத்திற்கு 14.7059 பைசா வீதம் அதிகம் கொடுக்கப்பட வேண்டும் எனவும் மத்திய அரசு நிர்ணயம் செய்தது. கரும்பிற்கு மத்திய அரசு நிர்ணயம் செய்த விலைகளும், சர்க்கரை ஆலைகள் கரும்பிற்கு கொடுத்த விலைகளும் இணைப்பு 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

7.3. 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு 16-ம் நாளிலிருந்து சர்க்கரை மீதிருந்த அனைத்துக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டதன் விளைவாக சர்க்கரை விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டதால் சர்க்கரை ஆலைகள் தங்களிடம் இருந்த இருப்புச் சர்க்கரையை, உற்பத்தி விலையைக் காட்டிலும் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்ய நேரிட்டது. 1978–79 ஆம் ஆண்டிலும் மேற் குறிப்பிட்ட சர்க்கரை கட்டுப்பாடு நீக்கக் கொள்கை தொடர்ந்து அமுலில் இருந்தபடியால் சர்க்கரைக்கு ஆதாயமான விலை கிடைக்கவில்லை. எனவே, 1978–79 ஆம் ஆண்டிற்கு மத்திய



1980 ஜூலை 19]

அரசினால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு விலையைக் காட்டிலும் அதிகமான கரும்பு விலையை சர்க்கரை ஆலைகள் தங்களுக்கு அளிக்கப்பட்ட கரும்பிற்கு கொடுக்க இயலவில்லை.

7.4. விவசாய உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் பொருள் களின் விலை உயர்ந்து வருகின்றன. எனவே, விவசாய உற்பத்திச் செலவு, எரிபொருள் மற்றும் விசைச் செலவு ஆகிய வைகளும் கணிசமாக உயர்ந்துள்ளன. ஆதலால் தமிழ்நாட்டில் கரும்பு உற்பத்தியாளர்கள் கரும்பிற்கு அதிக விலை கோரி வருகிறார்கள். கரும்பின் ஆதாயமற்ற விலையையும், தற்போதைய உற்பத்தி செலவின் உயர்வையும் கருத்திற் கொண்டு கரும்பிற்கு ஆதாயமானதொரு விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என நமது மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

## 8. சர்க்கரை விலை.

8.1. ஆண்டுதோறும் சர்க்கரைக்கான விலையை மத்திய அரசு நிர்ணயம் செய்கிறது. இவ்விலை நிர்ணயம், இன்றியமை யாப் பொருட்கள் சட்டத்தின் 3 (3-சி) பிரிவின்கீழ் ஆக்கப்பட் டுள்ள விதி முறைகளுக்கு ஒப்ப நிர்ணயம் செய்யப்படல் வேண்டும் அவ்விதம் நிர்ணயம் செய்யப்படும்பொழுது கீழ்க்கண்டவைகள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்:—

1. கரும்பிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த அளவு விலை.

2. சர்க்கரை உற்பத்திச் செலவு.

3. செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது தீர்வை இருப்பின், அது:

4. சர்க்கரை உற்பத்தித் தொழிலில் செய்யப்பட்ட முதலீட் டிற்கு நியாயமானதோர் ஆதாயம் பெறுதல்; இவை தவிர கரும்பு அரைவைக்காலம், மற்றும் சர்க்கரை கட்டுமானம் ஆகியவற்றின் அடிப்படையில் சுங்கவரிக் குழு தயாரித்துள்ள உற்பத்திச் செலவு பட்டியலும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

8.2. தமிழ்நாட்டிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள 'லெவி' சர்க்கரை [1980 ஜூலை 19
விலை அநேகமாக ஒவ்வொரு ஆண்டிலும் மிகவும் குறைவாகவே
இருக்கிறது. ஊதியம், வரிகள், எரி பொருள், கோணிகள் மற்
றும் உதிரிப் பாகங்கள் வட்டி விகிதம் மற்றும் கரும்பின் விலை
ஆகிய ஒவ்வோர் இனத்திலும் ஏற்பட்டுள்ள உயர்வின் காரண
மாக சர்க்கரை உற்பத்திச் செலவும் உயர்ந்துள்ளது. 'லெவி'
சர்க்கரைக்கான விலை நிர்ணயம் மேலே குறிப்பிடப்பட்ட விதி
முறைகளுக்கு ஒப்ப மத்திய அரசினால் நிர்ணயிக்கப்படாததால்
தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகள், பிற மாநில ஆலை
களைப் போன்று, லெவி சர்க்கரை விலையை திருத்தி அமைக்கக்
கோரி நீதி மன்றங்களில் முறையீடு செய்துள்ளன.

8·3. 1978-79 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட சர்க்
கரைக்கு 'லெவி' விலையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 186.84
என மத்திய அரசு நிர்ணயம் செய்தது. மத்திய அரசு கடை
பிடிக்கும் வழி முறைகளின்படி கணக்கிட்டால் கூட இதன் விலை
குவிண்டாலுக்கு ரூ. 235·16 என நிர்ணயம் செய்யப்பட்டிருக்க
வேண்டும். 1979-80 அம் ஆண்டிற்கு 8.5 சலவிகித சர்க்கரைச்
சத்தை அடிப்படையாகக் கொண்டு கரும்பின் குறைந்த அளவு
விலை டன் ஒன்றுக்கு ரூ.100 லிருந்து ரூ. 125 ஆக உயர்த்தப்
பட்டது. கரும்பின் விலை உயர்வுடன், ஊதியம், கோணிகள்,
எரிபொருள் மற்றும் இதர பொருள் இனங்களிலும் விலை உயர்வு
இருந்தது. இந்த அதிகரித்த உற்பத்திச் செலவின் அடிப்படை
யில் 1979-80 ஆம் ஆண்டிற்கு, 'லெவி' சர்க்கரை விலை குவிண்
டாலுக்கு ரூ 279.98 என மத்திய அரசு நிர்ணயம் செய்திருக்க
வேண்டும். ஆயினும் 'லெவி' விலை ரூ. 241·92 என்றே
நிர்ணயம் செய்யப்பட்டது. எனவே தமிழ் நாட்டு சர்க்கரை
ஆலைகள் மேற்குறிப்பிட்டவாறு, 'லெவி' சர்க்கரை விலையை
திருத்தி அமைக்கக்கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் முறை
யீடுகள் செய்துள்ளன. உயர் நீதிமன்றமும் ஆலைகள் கோரிய
விலையைப்பெற அனுமதித்து ஓர் இடைக்கால உத்தரவு அளித்
துள்ளது.



1980 ஜூலை 19]

9· <u>சர்க்கரை மற்றும் சர்க்கரைக் கழிவுப்பாகு ஏற்றுமதி :—</u>

9·1. <u>சர்க்கரை:</u>—1977-78 ஆம் ஆண்டில் இந்தியாவில் சர்க்
கரை உற்பத்தி 64.57 இலட்சம் டன்களாக இருந்தது. இதில்
தமிழ்நாட்டு சர்க்கரை ஆலைகள் 4.68 இலட்சம் டன்கள்
உற்பத்தி செய்தன. 1978-79 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த
சர்க்கரை உற்பத்தி 58.58 இலட்சம் டன்களாகும். இதில்
தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை அளவு 4.92
இலட்சம் டன்களாகும். மேற்குறிப்பிட்ட அதிக உற்பத்தியின்
காரணமாக மத்திய அரசு சர்க்கரை ஏற்றுமதியை அனுமதத்து.
தமிழ்நாட்டிலிருந்து 1978-79 ஆம் ஆண்டு உற்பத்தியில் 1.69
இலட்சம் டன் சர்க்கரை இந்திய வணிகக் கழகத்தின் மூலமாக
பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

9·2· <u>சர்க்கரை கழிவுப் பாகு:</u>— 1978-79 ஆம் ஆண்டில்
தமிழ்நாட்டு சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட
கழிவுப்பாகின் மொத்த அளவு 2.57 இலட்சம் டன்களாகும்.
கழிவுப்பாகு இம்மாநிலத்திலுள்ள வடிப்பகங்களால் ஆல்கஹால்,
ஸ்பிரிட் போன்றவைகள் தயாரிப்பதற்கு பெருமளவு
பயன்படுத்தப்படுகிறது. ஆல்கஹால் விற்பனை அளவு மிகவும்
குறைந்ததால், வடிப்பகங்கள் தங்களது உற்பத்தி அளவை
நிலைப்படுத்த முடியாமல், தங்களது நிறுவிய திறனில் பாதி
அளவிற்கும் குறைவாக உற்பத்தியைக் குறைக்க வேண்டி
நேரிட்டது. இதனால் சர்க்கரை ஆலைகளிலிருந்து, வடிப்பகங்
கள் கொள்முதல் செய்யும் கழிவுப்பாகு அளவும் குறைவு
பட்டது. இதன் காரணமாக கழிவுப்பாகினை இருப்பு வைப்
பதற்கான போதிய இட வசதி இன்மையால் சர்க்கரை ஆலைகள்
சிரமத்திற்குள்ளாயின. சர்க்கரை ஆலைகளின் இந்த இடர்
பாட்டினைத் தவிர்க்க, தமிழ்நாடு அரசு 1977-78ஆம் ஆண்டு
உற்பத்தியிலிருந்து 45,000 டன்களும் 1978-79 ஆம் ஆண்டு
உற்பத்தியிலிருந்து 75,000 டன்களும் ஆக மொத்தம் 1,20,000
டன்கள் கழிவுப்பாகினை அயல் நாடுகளுக்கு இந்திய வணிகக்
கழகத்தின் மூலமாக ஏற்றுமதி செய்ய அனுமதி அளித்தது.
இதற்குத் தேவையான ஆணைகளும் சர்க்கரை ஆலைகளுக்கு
வழங்கப்பட்டு இந்திய வணிகக் கழகம் மொத்தம் 1.17 இலட்சம்
டன்கள் கழிவுப்பாகினை ஆலையிலிருந்து கொள்முதல் செய்
துள்ளது.

10. சர்க்கரைத் தொழிலின் பொது நிலையும் மற்றும் [1980 ஜூலை 19
1979-80 ஆம் ஆண்டிற்கான வாய்ப்பும்.—

10.1 1977-78 ஆம் ஆண்டில் நாட்டில் சர்க்கரை உற்பத்தி
மிக உயர்ந்த இலக்கினை அடைந்தது. இது தேவைக்கும் அதிக
மானதாகும். சர்க்கரை ஆலைகளில் மிக அதிக அளவு சர்க்
கரை கையிருப்பு இருந்த சமயம், மத்திய அரசு சர்க்கரையின்
விலை, வினியோகம் ஆகியவற்றின் மீதான கட்டுப்பாடுகளை
1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு 16 ஆம் நாளிலிருந்து நீக்கிவிட்டது.
அதன் விளைவாக தமிழ்நாடு மற்றும் அநேக மாநில ஆலைகளில்
இருப்பில் இருந்த அதிகச் சர்க்கரை, அதனை விற்பது குறித்த
அச்சத்தை ஆலைகளிடையே ஏற்படுத்தியது, எனவே தங்களது
கையிருப்புகளைக் குறைப்பதற்காக, ஆலைகள் மிகவும்
குறைந்த விலையில் சர்க்கரையை விற்பனை செய்ய ஆரம்பித்
தன. தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்திச் செலவு குவிண்டா
லுக்கு சராசரி ரூ. 225 ஆக இருந்தது. ஆயினும் சர்க்கரையின்
ஆலை வாயில் விற்பனை விலை குவிண்டாலுக்கு ரூ. 170 என்ற
அளவுக்குக் குறைந்தது.

10·2· சர்க்கரை விலையை நிலைப்படுத்துவதற்கு, மாதாந்திர
சர்க்கரை வெளியீட்டு முறையையும், மற்றும் முடையிருப்பு
வைத்துக் கொள்ளும் முறையையும் கடைபிடிக்க வேண்டிய
அவசியத்தை நாம் எடுத்துக் கூறியும், மத்திய அரசு இதனை
உடனடியாக ஏற்றுக்கொள்ளவில்லை. சர்க்கரை கட்டுப்பாடு
நீக்கம் அமுல் படுத்தப்படுவதற்கு முன்னர், ஒவ்வொரு சர்க்கரை
ஆலையும் விற்பனை செய்யவேண்டிய மாதாந்திர
சர்க்கரை அளவினை மத்திய அரசு நிர்ணயம் செய்து வந்தது.
மத்திய அரசு இம்முறையை நீக்கியதால், சர்க்கரை ஆலைகளி
டையே, தங்களிடம் உள்ள அதிக கையிருப்புச் சர்க்கரையை
விற்பனை செய்வதில் கடும் போட்டி ஏற்பட்டது. இதனைத்
தவிர்க்க, சர்க்கரை ஆலைகள் தங்களுக்குள்ளாக 1979 ஆம்
ஆண்டு மார்ச் மாதம் முதல் சர்க்கரை விற்பனையில் ஒரு சுய
கட்டுப்பாட்டினை ஏற்படுத்திக் கொண்டன. இதன்படி ஒவ்
வொரு மாதமும், ஒரு ஆலை குறிப்பிட்ட அளவு சர்க்கரையை
மட்டுமே விற்பனைக்கு வெளியே அனுப்பவேண்டும். இவ்வாறு



1980 ஜூலை 19]

ஒவ்வொரு மாதமும் நாட்டில் விற்பனைக்கு வெளியிடப்படும்
சர்க்கரையின் மொத்த அளவு இயல்பான உபயோகத்திற்குத்
தேவைப்படும் அளவினை ஒட்டி நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த
ஏற்பாடு, சர்க்கரைத் தொழிலுக்கு ஓரளவுக்கு உதவியாக
இருந்தது. வெளிச்சந்தையில் சர்க்கரையின் விலை சிறிது சிறிதாக
உயர்ந்து ஆலை வாயில் விலை குவிண்டாலுக்கு ரூ. 200 என்ற
அளவினை எட்டியது; இருப்பினும் இது உற்பத்தி விலையை விட
மிகவும் குறைவேயாகும்.

10.3 சர்க்கரைக்கு "நியாயமானதொரு விலையை" நிலைப்
படுத்தும் பொருட்டு மாதாந்திர சர்க்கரை வெளியீட்டு முறையை
திரும்பவும் 1979 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மத்திய அரசு
அமுலுக்கு கொண்டுவந்தது. சில மாநிலங்களில் சர்க்கரையின்
சில்லரை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 3.30-க்கும் அதிகமாக
உயர்ந்ததே மத்திய அரசு இம்மாதாந்திர சர்க்கரை வெளியீட்டு
முறையை திரும்பவும் அமுலுக்குக் கொண்டு வந்ததற்கு காரணம்
என்று கூறப்பட்டது. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்த
வரையில், இந்த மாதாந்திர வெளியீட்டு முறை திரும்பவும்
அமுலாக்கப்படுவதற்கு முன்னர்கூட, சர்க்கரையின் சில்லரை விலை
மத்திய அரசினரால் 'நியாயமான' விலை என்று அறிவிக்கப்பட்ட
விலையான கிலோ ரூ. 2.80/2.90-க்கும் குறைவாகவே கிலோ
ரூ. 2.65 என்ற அளவில் இருந்தது.

10.4 மத்திய அரசின் இந்த அறிவிப்பின் காரணமாக
குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 220 என்ற அளவில் விற்பனை செய்யப்
பட்டு வந்த சர்க்கரையின் விலை ரூ. 208-க்குக் குறைந்தது.
ஆயினும், சர்க்கரை விலை மறுபடியும் சிறிது சிறிதாக அதிகரிக்கத்
தொடங்கியது. 1979 ஜூன் மாதத்திற்கு 5.25 இலட்சம்
டன்கள் சர்க்கரையை விற்பனைக்கு அனுமதித்த மத்திய அரசு,
1979 ஜூலை மாதத்திற்கு 5.40 இலட்சம் டன் சர்க்கரையை
விற்பனைக்கு அனுமதித்தது. மேலும் மாதாந்திர சர்க்கரை வெளி
யீட்டில் 20 சதவீதத்திற்கு குறையாத அளவில் ஒவ்வொரு
வாரமும், சர்க்கரை ஆலைகள் விற்று அச்சர்க்கரையை ஆலை
களிலிருந்து விடுவிக்க வேண்டுமென 1979 ஜூலை மாதத்தில்

மத்திய அரசு ஆணைகள் பிறப்பித்தது. [1980 ஜூலை 19
சர்க்கரையின் விலை உடனடியாக ஒரு குவிண்டாலுக்கு ரூ. 200 இதன் விளைவாக
என்ற அளவில் குறைந்ததாலும் திரும்பவும் விலை உயர ஆரம்பித்து
ஜூலை மாதத்தில் குவிண்டால் ஒன்றுக்கு விலை ரூ. 245 என்ற
அளவில் இருந்தது. 1979 ஆகஸ்டு மாதத்தில் 6 இலட்சம்
டன்கள் என்ற அளவுக்கு சர்க்கரையின் மாதாந்திர விற்பனை
அளவு உயர்த்தப்பட்ட போதிலும், சர்க்கரையின் விலையும்
குவிண்டால் ரூ. 250-க்கு உயர்ந்தது.

10.5. 1977-78-ல் நாட்டின் சர்க்கரை உற்பத்தி 64.57
இலட்சம் டன்களாகும். ஆனால் 1978-79-ல் நாட்டின் உற்பத்தி,
எதிர்பார்த்ததற்கு மாறாக 58.58 இலட்சம் டன்களாக குறைந்தது.
கரும்பு உற்பத்திப் பரப்பின் குறைவின் காரணமாக 1979-80 ஆம்
ஆண்டில், நாட்டின் சர்க்கரை உறபத்தி 40 இலட்சம் டன்களாக
இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த உற்பத்தி அளவு,
சர்க்கரையின் தற்போதைய உயர்ந்த உபயோக விகிதத்திற்கு
போதுமானது அல்ல. நாட்டின் வட பகுதியில் ஏற்பட்ட
வெள்ளம் மற்றும் வறட்சியின் காரணமாக சர்க்கரை உற்பத்தியின்
முந்தைய மதிப்பீடான 53 இலட்சம் டன்கள் என்ற இலக்கினை
அடைய இயலாமல் போய்விட்டது. மேற்கூறிய காரணங்கள்
மற்றும் சர்க்கரை வணிகத்தில் நிலவிய ஊகங்கள் ஆகியவற்றால்,
மாதாந்திர சர்க்கரை விற்பனையின் அளவு அதிகரிக்கப்பட்ட
போதிலும், சர்க்கரையின் விலைகள் தொடர்ந்து உயர்ந்தன.

10.6 மத்திய அரசு சர்க்கரைக் கொள்கையை மறுபடியும்
1979 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மாற்றியமைத்தது. இதன்
படி பல மண்டலங்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்
திலுமுள்ள சர்க்கரை ஆலைகளின் அதிக பட்ச ஆலை வாயில்
விலைகளும் சில்லரை விலைகளும் நிர்ணயம் செய்யப்பட்டன.
ஆலை வாயில் விலைகள் செப்டம்பர் 12 ஆம் நாள் முதலும், சில



விலைகள் செப்டம்பர் 17 ஆம் நாள் முதலும் அமுலுக்கு வந்தன. அவைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| மாநிலம் அல்லது இந்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதியின் பெயர். | ஆலை வாயில் விலை (குவிண்டால் ஒன்றுக்கு). | சில்லரை விற்பனை விலை (குவிண்டால் ஒன்றுக்கு). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| 1. பஞ்சாப், அரியானா, இராசஸ்தான், உத்திரபிரதேசம், பீகார் மற்றும் மத்திய பிரதேசம். | 268 00 | 298·00 |
| 2. குசராத், மகாராட்டிரம் மற்றும் கோவா. | 261·00 | 291·00 |
| 3. ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளா, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி. | 260·00 | 290·00 |
| 4. அஸ்ஸாம், நாகலாந்து, ஒரிஸ்ஸா மற்றும் மேற்கு வங்காளம். | 270·00 | 300 00 |

மேற்கண்ட விவரங்களிலிருந்து தென் மாநிலங்களுக்கு ஆலை வாயில் விலை மிகவும் குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டு இருப்பதையும், ஆலை வாயில் விலைக்கும் சில்லரை விலைக்கும் இடையே குவிண்டாலுக்கு ரூ. 30 (Margin) அனுமதிக்கப்பட்டுள்ளதையும் காணலாம்.

10·7. மண்டல வாரியாக விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ள மேற்படி முறையில், ஒவ்வொரு மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகளில் சர்க்கரைக் கட்டுமானம், மற்றும் உற்பத்திச் செலவு ஆகியவைகளில் உள்ள வேறுபாடுகள் கருத்தில் கொள்ளப் படாமல் விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே சர்க்கரை கட்டுப்பாடு நீக்கத்தால் மிகவும் பாதிப்புக்கு

உள்ளான நிலையிலிருந்த தமிழ்நாட்டு சர்க்கரை ஆலை
களுக்கு இதனால் எவ்விதமான பயனும் கிடைக்கவில்லை.
1978–79 ஆம் ஆண்டு தமிழ்நாட்டு ஆலைகளில் சர்க்கரை
உற்பத்திச் செலவு குவிண்டாலுக்கு ரூ. 207 முதல் ரூ. 284 வரை
இருந்தது.

சராசரி உற்பத்திச் செலவு குவிண்டாலுக்கு ரூ. 242 ஆகும்.
ஆனால் மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட இப்புதிய விலையில்
மத்திய கலால் வரியான ரூ. 40·67-ஐ கழித்தது போக, தமிழ்
நாட்டு சர்க்கரை ஆலைகளுக்கு நிகர விலையாக குவிண்டால்
ஒன்றுக்கு ரூ. 219.33 மட்டுமே கிடைத்தது. சர்க்கரை மீதான
கட்டுப்பாடு நீக்கத்தினாலும், அதனைத் தொடர்ந்த சர்க்கரை
விலை வீழ்ச்சியினாலும் தமிழ்நாட்டு சர்க்கரை ஆலைகளுக்கு
பெருத்த இழப்பு ஏற்பட்டுள்ளது. மொத்தம் ரூ. 10 கோடி
அளவிற்கு இழப்பு இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

10.8. மத்திய அரசு திரும்பவும் 1979 டிசம்பர் 17 ஆம்
நாள் முதல் சர்க்கரையின் மீது பகுதிக் கட்டுப்பாடு முறையினை
அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது ; இம் முறையின்படி ஆலை
கள் தங்களது உற்பத்தியில் 35 சதவிகிதத்தை வெளிச்சந்தையில்
விற்க அனுமதிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 65 சதவிகித
சர்க்கரை '' லெவி '' முறையில் கட்டுப்படுத்தப்பட்ட விலையில்
விற்கப்பட வேண்டும். தற்போது நிலவி வரும் வெளிச்சந்தை
விலையில், சர்க்கரை ஆலைகள் 1979–80 ஆம் ஆண்டு உற்
பத்திச் செலவினை ஈடுகட்ட வாய்ப்புண்டு.

10.9. புதிய ஆலைகள் நிறுவவும், பழைய ஆலைகளின் அரை
வைத் திறனை உயர்த்தவும், தற்போது அதிக மூலதனம் தேவைப்
படுகிறது. இந்த அதிக மூலதனச் செலவினை ஈடுகட்ட,
சம்பத் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் 1975 ஆம் ஆண்டு
மத்திய அரசு சில ஊக்குவிப்புகளை அறிவித்தது : இதன்படி
மத்திய கலால் வரிச் சலுகையும், வெளிச்சந்தை சர்க்கரை
விற்பனைக்கு அதிக அளவு ஒதுக்கீடும் ஆலைகளுக்குக் கிடைக்கும்.
சர்க்கரை மீதான கட்டுப்பாடு நீக்க முறை அமுலுக்கு வந்த
டன், '' லெவி '' மற்றும் '' வெளிச்சந்தை சர்க்கரை '' என்று



இரு பிரிவாகப் பகுக்கப்பட்ட சர்க்கரை ஒரே பிரிவாக்கப்பட்ட
துடன், அவைகள் மீதான இரு வேறான மத்திய கலால் வரியும்
நீக்கப்பட்டது.

இம்மாறுதல்களால், சர்க்கரைக் கட்டுப்பாடு நீக்கத்திற்குப்
பின்னர், புதிய மற்றும் அரைவைத் திறனை அதிகரித்த ஆலைகள்
அவைகளுக்கு கிடைக்க வேண்டிய ஊக்குவிப்புத் தொகையினைப்
பெற இயலவில்லை. மேலும், 1979 டிசம்பர் மாதம் முதல்
மத்திய அரசு, சர்க்கரையின்மீது பகுதிக் கட்டுப்பாடு முறையினை
மறுபடியும் அமுல் படுத்திய போதிலும், ஊக்குவிப்புத் திட்டத்
தினையும் மறுபடியும் அமுல்படுத்துவது பற்றி எவ்வித அறி
விப்பும் செய்யவில்லை. 1975 ஆம் ஆண்டு மத்திய அரசால்
அமுலாக்கப்பட்ட இந்த ஊக்குவிப்புத் திட்டம், மறுபடியும்
மத்திய அரசால் அமுலாக்கப்படாவிட்டால், புதிய மற்றும்
அரைவைத் திறனை உயர்த்திய ஆலைகளின் நிதி நிலைமை
கடுமையாகப் பாதிக்கப்படக் கூடும் ; அத்துடன் அந்த ஆலைகள்
நிதி உதவும் நிறுவனங்களிடமிருந்து தாங்கள் பெற்ற மூலதனக்
கடன்களுக்கான தவணைகளைத் திரும்பச் செலுத்த இயலாமல்
போய்விடும்.

10.10. சர்க்கரை ஆலைகள் வங்கிகளிடமிருந்து காசுக்
கடன்கள் பெறுவதில் இந்திய ரிசர்வ் வங்கி விதித்த கட்டுப்
பாடுகள், இவ்விதக் கடன்களுக்கான வரம்புத் தொகையின்
உயர்வு, அதிக ஊதியச் செலவு, கரும்பு கொண்டு வருவதற்கான
போக்குவரத்துச் செலவில் உயர்வு ஆகியவைகளாலும், ஆலை
களின் நிதி நிலைமைப் பாதிப்பினாலும், 1977–78 மற்றும்
1978–79 ஆம் ஆண்டுகளில் கரும்பின் மீதான கொள்முதல்
வரி மற்றும் கரும்பு மேல்வரி (செஸ்) தொகைகளை
தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளால் செலுத்த இயலவில்லை.

## 11. சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் அமைத்தல் :—

வளர்ந்து வரும் இந்திய சர்க்கரைத் தொழிலின் தேவைகளை
கான்பூரிலுள்ள தேசிய சர்க்கரை நிறுவனத்தால் முழுவதும்
பூர்த்தி செய்ய இயலாமையினால், மண்டல அளவில் சர்க்கரை
ஆராய்ச்சி நிறுவனம் நிறுவ முடிவு செய்யப்பட்டது. இதன்படி
1979 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சர்க்கரை ஆராய்ச்சி
நிறுவனம் பதிவு செய்யப்பட்டு 1979 நவம்பர் முதல் செயல்பட்டு

வருகிறது. இந்த சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் தென்னிந்திய விலுள்ள ஆலைகளின், குறிப்பாக தமிழ்நாட்டு சர்க்கரை ஆலைகளின், கீழ்க்கண்ட தேவைகளை பூர்த்தி செய்ய செயல்பட்டு வரும்:

1. போதனை மற்றும் பயிற்சி.
2. ஆலோசனை மற்றும் விஸ்தரிப்புப் பணிகள்.
3. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள் மற்றும்
4. ஆய்வுப் பணிகள்.

**12. கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டம்:—**

12.1. சர்க்கரை ஆலைகளின் எல்லையில் உள்ள சாலைகளை மேம்படுத்துவது, அபிவிருத்திப் பணிகளில் முக்கியமான தொன்றாகும். இதனால், ஆலைகளுக்கு கரும்பை துரிதமாகக் கொண்டு செல்வதன் மூலம், ஆலைகள் தங்களது முழுத் திறனிற்கு இயங்க முடிகிறது; மேலும் கரும்பை வெட்டிய வுடன், வயல்களிலிருந்து உடனடியாக ஆலையின் அரைவைக்கு எடுத்துச் செல்லப்படுவதால், அறுவடைக்கும் அரைவைக்கும் இடைப்பட்ட கால வெளி குறைந்து, சர்க்கரைக் கட்டுமானமும் அதிகரிக்கிறது. அத்துடன் துரிதமாகக் கரும்பைக் கொண்டு செல்லுவதால், கரும்பு உலர்வது தடுக்கப்பட்டு, கரும்பின் எடைக் குறைவும் தடுக்கப்படுகிறது. இதன் மூலம் சர்க்கரைக் கட்டுமானம் அதிகரித்து ஆலைகளுக்கு அதிகப்படி இலாபம் கிடைப்பதுடன் கரும்பு விவசாயிகளுக்கும் அடுத்த கரும்பு பருவத்தில் சர்க்கரைக் கட்டுமானத்தின் அடிப்படையில் கரும்பு விலை நிர்ணயிக்கப்படுவதால் அதிகப்படியான கரும்பு விலையும் கிடைக்க வழி கோலுகிறது. மேற்குறித்த பயன்களைக் கருதி, புதிய சாலைகள் அமைத்தல், பழைய சாலைகளை மேம் படுத்துதல் ஆகிய பணிகள் கரும்புச் சாலை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

12.2. கரும்பு செஸ் நிதியின்கீழ் சர்க்கரை ஆலைகளிடமிருந்து வசூலிக்கப்படும் தொகையிலிருந்து கரும்புச் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்குச் செலவிட, ஒரு குறிப்பிட்ட தொகையினை ஒவ்வோர் ஆண்டும் அரசு ஒதுக்கீடு செய்கிறது.

கீழ்க்கண்ட தொகைகள் அவைகளுக்கெதிரே குறிப்பிடப் பட்ட ஆண்டுகளில் இப்பணிகளுக்காக செலவிடப்பட்டன:

(ரூபாய் இலட்சத்தில்.)

| | | |
|---|---|---|
| 1978–79 | .. .. | 109.92 |
| 1979–80 | .. .. | 150.00 |
| 1980–81 | .. .. | 150.00 (திட்ட ஒதுக்கீடு). |



12.3. இந்தத் திட்டத்தின்கீழ் 1978–79 மற்றும் 1979–80 ஆம் ஆண்டுகளின் குறியீடுகளும், சாதனைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| தொடர் எண்ணும், வேலையின் விவரமும். | குறியீடு. | | சாதனை. | |
|---|---|---|---|---|
| | 1978–79. | 1979–80. | 1978–79. | 1979–80. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 சாலை அமைத்தல் (கி.மீ.) .. | 94·115 | 67.675 | 71.240 | 55.40 |
| 2 கல் பரப்புதல் (கி.மீ.) .. | 92·995 | 103.880 | 78.395 | 59.57 |
| 3 தார் போடுதல் (கி மீ.) .. | 92·800 | 112.000 | 58.065 | 66.17 |
| 4 பாலங்கள் (எண்ணிக்கை) .. | 5 | 10 | 9 | 6 |
| 5 கால்வாய் மற்றும் கழிவுநீர் வேலை (எண்ணிக்கை). | 184 | 258 | 12[illegible] | 184 |
| 6 சிறு பாலங்கள் .. .. | | | | |

12.4. நில ஆர்ஜிதம் செய்வதில் தாமதம் ஏற்பட்டதே குறி
யீட்டிலும், சாதனையிலும் குறைவு ஏற்பட முக்கிய காரண
மாகியது.

12.5. 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 162.55 இலட்சம் மதிப்
பீட்டில் 14 சாலை வேலைகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்
டுள்ளது. கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்,
1980–81 முதல் 1984–85 வரையான காலத்தில் ரூ. 13 கோடி
செலவில் செயல்படுத்தக் கூடிய திட்டம் ஒன்று தயாரிக்கப்படு
கிறது.

## 13. தமிழ்நாடு கரும்புப் பண்ணை நிறுவனம்.

13·1. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு 41-வது 'சட்டத்தால்
(திருத்தப்பட்ட) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள்
(நில உச்ச வரம்பை நிர்ணயித்தல்) சட்டத்தின் கீழ், சர்க்கரை
ஆலை நிலங்கள் வைத்துக் கொள்ளுவதில் அளிக்கப்பட்ட விதி
விலக்கு, விலக்கிக் கொள்ளப்பட்டதன் விளைவாக திரு. ஆரூரான்
சர்க்கரை ஆலையிடமிருந்த 3,421.14 ஏக்கர் சொந்த நிலமும்
3,096.64 ஏக்கர் குத்தகை நிலமும் உபரி நிலங்களாக ஆயின.
17—1—1974 அரசு ஆணையின்படி தமிழ்நாடு கரும்பு பண்ணை
நிறுவனம் நிறுவப்பட்டது. கரும்பு மற்றும் நெல் போன்ற
பயிர்களை பயிரிடுவதே இதனுடைய நோக்கமாகும். இந்நிறுவனம்
கம்பெனிச் சட்டம் 1956-ன் கீழ் 22—12—1974-ம் நாள் பதிவு
செய்யப்பட்டது. தற்பொழுது இந்நிறுவனம் 3,910.71 ஏக்கர்
சொந்த நிலமும், 2,617.96 ஏக்கர் குத்தகை நிலமும் ஆக
மொத்தம் 6,528.67 ஏக்கர் நிலத்தை வைத்துள்ளது. இதில்
5,772 ஏக்கர் பயிரிடக்கூடிய பகுதியாகும்; மீதி பண்ணையின்
சாலை மற்றும் வாய்க்கால் போன்றவற்றுக்கு பயன்படுத்தப்
படுகிறது. இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம்
ரூபாய் இரண்டு கோடி ஆகும்; இதில் ஒரு கோடி ரூபாய்
வழங்கப்பட்ட பங்கு மூலதனமாகும். தமிழ்நாடு அரசு ரூ. 27.5
இலட்சத்திற்கு பங்கு முதலீடு செய்துள்ளது. 1977–78 ஆம்
ஆண்டு ரூ. 2.5 இலட்சம் கடனாகவும், ரூ. 15 இலட்சம் வழி
முறை முன் பணமாகவும் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்



திற்குத் தேவையான நடைமுறை மூலதனம் வடபாதி மங்கலத்தின்
பாரத வங்கிக்கிளையிலிருந்து 15 சதவீதம் வட்டியில் ரூ. 60
இலட்சம் அடமானக் கடனாக பெறப்பட்டுள்ளது.

13.2. இங்கு விளையும் நெல் தமிழ்நாடு நுகர் பொருள்
வணிகக்கழகத்திற்கும் மற்றும் வியாபாரிகளுக்கும் சந்தை விலை
யில் விற்கப்படுகிறது. சட்ட ரீதியான கட்டுப்பாட்டின் கீழ்
இங்கு பயிரிடப்படும் கரும்பு முழுவதும் வடபாதிமங்கலத்தில்
உள்ள திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு அளிக்கப்படுகிறது.
30–6–1979 முடிய இந்த நிறுவனத்திற்கு ரூபாய் 55.20 இலட்சம்
திரண்ட இழப்பு ஏற்பட்டுள்ளது; நடப்பு ஆண்டிற்கு ரூ. 4.11
இலட்சம் இழப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாளது
தேதி வரை இந்த நிறுவனம் அதிக அளவு திரண்ட நட்டத்தில்
வேலை செய்து வருவதால் இதன் எதிர்காலத்தைப்பற்றி
அரசு இறுதியான முடிவு இதுவரை எடுக்கவில்லை. இந்த
நிறுவனம் உடனடியாக கலைக்கப்படுமேயானால், அரசுக்கு ரூபாய்
96.29 இலட்சத்திற்கு பொறுப்புகள் இழப்பதுடன், அரசு அளித்த
பங்கு மூலதனம் வழிமுறை முன் பணம் மற்றும் பிணைப்பற்ற
கடன் முதலியவற்றைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

## 14. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம்.

14.1 சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையில் நிறுவப்படு
வதற்காக அரசு 1974-ம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரை நிறு
வனத்தை நிறுவியது. அதன்படி தஞ்சாவூர், பெரம்பலூர், சங்கரன்
கோயில், திருக்கோயிலூர் மற்றும் சிவகெங்கை ஆகிய வட்டங்
களில் சர்க்கரை ஆலைகள் நிறுவ தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம்
உரிமம் பெற்றது. மேலும் கோயம்புத்தூர் மாவட்டத்தில்
ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க வழங்கப்பட்டிருந்த
உரிமம் செயல்படுத்தப்படுவதற்காக தமிழ்நாடு சர்க்கரை
நிறுவனத்திற்கு மாற்றப்பட்டது. தஞ்சாவூருக்கு அருகிலுள்ள
குருங்குளம் கிராமத்தில் தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம்
அதனுடைய முதல் சர்க்கரை ஆலையை நிறுவியது; அவ்
வாலை 1976–77-ஆம் ஆண்டு தனது அரைவையை துவக்கியது.
சர்க்கரை நிறுவனத்தின் இரண்டாவது சர்க்கரை ஆலை திருச்சி

...வட்டம் பெரம்பலூருக்கு அருகிலுள்ள எரையூர் கிராமத்தில்
...நிறுவப்பட்டு 1978 பிப்ரவரி மாதம் அரவை துவக்கப்பட்டது.

14.2. சர்க்கரைத் தொழிலில் ஏற்பட்டுள்ள நிலையற்ற
தன்மையினாலும் மற்றும் கீழ்க்கண்ட காரணங்களினாலும்
சங்கரன் கோயில், சிவகெங்கை மற்றும் கோயம்புத்தூர்
பகுதிகளில் சர்க்கரை ஆலைகள் நிறுவும் திட்டத்தில் போதிய
முன்னேற்றம் அடைய முடியவில்லை.

1. இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகெங்கையில் ஆலை
அமைக்கும் திட்டம்:—ஆலைக்குத் தேவையான நீர் இல்லாமை
யாலும் போதுமான அளவு கரும்பு இல்லாததாலும்.

2. திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன் கோயிலில்
சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம்:—போதுமான நீர்
இல்லாமையும், தற்போது இப்பகுதியில் ஜூன் முதல் ஆகஸ்டு
மாதம் வரையுள்ள பயிர்சுழற்சி முறையை முற்றிலும் மாற்றி
அமைக்கவேண்டிய அவசியமும்.

3. கோயம்புத்தூர் மாவட்டம்:—சிறுவாணி நீர்த் திட்டம்
முழுமை பெறும் வரை கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒரு
சர்க்கரை ஆலை அமைப்பது தள்ளிவைக்கப்பட்டு அரசு உத்தர
விடப்பட்டுள்ளது.

ஆதலால் கோயம்புத்தூர், சங்கரன் கோயில் மற்றும்
சிவகெங்கை ஆகிய பகுதிகளில் சர்க்கரை ஆலைகள் அமைப்
பதற்கு வழங்கப்பட்ட உரிமங்கள் மத்திய அரசால் நீக்கப்
பட்டுள்ளது. இருப்பினும் திருக்கோயிலூர் வட்டத்தி ஒரு
சர்க்கரை ஆலை கூட்டுறவுத் துறையில் அமைக்கப்பட்டு
வருகிறது. சர்க்கரைக் கழகத்திற்கும், சர்க்கரை இயக்ககத்
திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கும் பொருட்டு, சர்க்
கரைத்துறை இயக்குநர் தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தில் பதவி
வழி நிர்வாக இயக்குநராக அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.



திருத்தணி வட்டத்திலும், அமைக்க உரிமங்கள் வழங்க மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மாநிலத்தில் சர்க்கரை உற்பத்தியை அதிகரிக்க முயற்சி தொடர்ந்து செய்யப்படும். மாநிலத்தின் மற்ற பகுதிகளிலும் புதிய சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

16. காகிதத் தொழிற்சாலை.

சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் கரும்புச் சக்கை போன்ற உபபொருட்களைப் பயன்படுத்தும் பொருட்டு சர்க்கரை ஆலைகளிலேயே வேறு புதிய தொழிற் கூடங்கள் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்தகைய திட்டங்களுள் ஒன்று தான் சிறிய அளவிலான காகித உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாகும். நாளொன்றுக்கு 10 முதல 12 டன் காகிதம் உற்பத்தி செய்யும் சிறிய அளவிலான தொழிற்சாலை மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைப்பகுதியில் நிறுவ அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றும் பணி தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சர்க்கரை நிறுவனம் இதற்கான பூர்வாங்க வேலைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. இத் தொழிற்சாலையின் செயல் முறைகளைப் பொறுத்து இதே மாதிரி சிறிய அளவிலான காகித உற்பத்தித் தொழிற்சாலைகளை மற்ற சர்க்கரை ஆலைப்பகுதிகளிலும் நிறுவுவதுப்பற்றி பரிசீலிக்கப்படும்.

17. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தின் ஏனைய திட்டங்கள்.

17.1. சிறிய அளவிலான சர்க்கரை ஆலை.— சர்க்கரை ஆலைகள் அமைக்க சாதகமான இடங்களிலெல்லாம் ஆலைகள் அமைத்துவிட்டபடியாலும், மேலும் இரண்டு ஆலைகள் நிறுவ உரிமங்கள் கேட்டுள்ள நிலையில் மேற்கொண்டு பெரியளவில் நாளொன்றுக்கு 1,250 டன்கள் அரைக்கும் திறன் கொண்ட ஆலைகள், நமது மாநிலத்தில், நிறுவுவதற்குச் சாத்தியக்கூறுகள் போதுமானதாக இல்லை. அதற்காக நாம் இன்னும் அதிக அளவு சர்க்கரை உற்பத்தி செய்வதை திறுத்திவிட முடியாது. ஆகவே நாள் ஒன்றுக்கு 350/400 டன்கள் அரைக்கும் திறன் கொண்ட பொருளாதார மற்றும் தொழில் நுணுக்க ரீதியில்

சாத்தியப்படக்கூடிய சிறிய அளவிலான சர்க்கரை [1980 ஜூலை 19
எங்கெல்லாம் அமைக்க வாய்ப்புள்ளதோ, ஆலைகள்
நிறுவுவதற்கான திட்டம் தீவிர பரிசீலனையிலுள்ளது. அங்கெல்லாம்

17.2 தொழிற் கூடம்.—சர்க்கரை ஆலைகளில் உள்ள கரும்பு
பிழியும் உருளைகளின் மேற்பரப்பிலுள்ள உருக்குப் பகுதியினை
ஆண்டுதோறும் புதுப்பித்தல் வேண்டும். இதற்கான போதிய
அளவு வசதிகள் நமது மாநிலத்தில் இல்லை. எனவே இங்குள்ள
அநேக ஆலைகள் இவ்வுருளைகளைப் புதுப்பிப்பதற்கு வெளி
மாநிலங்களுக்கு அனுப்பவேண்டி உள்ளது. இதற்கான அதிகப்
போக்குவரத்துச் செலவினையும் இங்குள்ள ஆலைகள் ஏற்க
வேண்டியுள்ளது. ஆகவே சர்க்கரை ஆலை உருளைகளைப்
புதுப்பிப்பதை முக்கிய வேலையாகக்கொண்டும், சர்க்கரை ஆலை
இயந்திரங்களுக்குத் தேவைப்படும் சிறிய உப பொருட்களைத்
தயார் செய்வதற்காகவும் ஒரு தொழிற்கூடம் அமைப்பது
பரிசீலனையில் உள்ளது.

17.3. எரிவாயு உற்பத்திச் சாலை.—சர்க்கரை ஆலைகள்
தாங்கள் பயன்படுத்தும் பிராணவாயு மற்றும் அசிடிலின் வாயு
பெறுவதில் தற்போது சில சிரமங்களுக்கு உள்ளாகின்றன.
இதனைத் தவிர்க்கும் பொருட்டு, எரிவாயு தயாரிக்கும் உற்பத்திச்
சாலை ஒன்று நிறுவும் சாத்தியக் கூறு பரிசீலனையில் உள்ளது.
மொத்தத்தில் தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் இம்மாநில
தொழில்வளர்ச்சிக்கு தன்னால் இயன்றவற்றைச் செய்து
வருகிறது.

மேற்குறித்த திட்டங்களின் தொழில் நுட்ப மற்றும்
பொருளாதார சாத்தியக்கூறுகள் குறித்து பரிசீலனை செய்யப்
பட்டு வருகிறது. இத்திட்டங்களின் முதலீட்டுத் தேவைகள்
கணக்கிடப்பட்டு, சாத்தியக்கூறான திட்டங்களைச் செயல்
படுத்துவதற்கான நடவடிக்கைகள் உரியகாலத்தில் எடுத்துக்
கொள்ளப்படும்.



18. சர்க்கரைத் தொழில்—வேலை வாய்ப்பு நிலவரம்.

1-81-1967, 1976, 1977 மற்றும் 1980 ஆம் ஆண்டுகளில் சர்க்கரைத் தொழிலின் வேலை வாய்ப்பு பொதுவாக கீழ்க்கண்ட வாறு அதிகரித்திருக்கிறது :—

| | 1967 (பணியாளர் எண்ணிக்கை). | 1976 (பணியாளர் எண்ணிக்கை). | 1977 (பணியாளர் எண்ணிக்கை). | 1980 மார்ச் வரை (பணியாளர் எண்ணிக்கை). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| கூட்டுறவு சர்க்கரை ஆலைகள். | 4,023 | 5,475 | 6,357 | 7,548 |
| பொதுத்துறை சர்க்கரை ஆலைகள். | .. | .. | .. | 1,274 |
| தனியார் துறை சர்க்கரை ஆலைகள். | 5,371 | 7,526 | 7,550 | 8,741 |
| மொத்தம் .. | 9,394 | 13,001 | 13,907 | 17,563 |

18.2. 1980–81 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில் கூடுதலாக வேலை வாய்ப்பு அளிக்கும் நிலையை பராமரித்து மொத்தத்தில் சுமார் 19 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

**தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளின் உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித் திறனளவு மற்றும் நிறுவிய உற்பத்தித் திறனளவு ஆகியவற்றின் விவரங்கள்.**

(நாளொன்றுக்கு டன்களில்.)

| தொடர் எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். | நாளது நாள் வரையிலான உரிமம் வழங்கப்பட்ட உற்பத்தித் திறன். | நாளது நாள் வரையிலான நிறுவிய உற்பத்தித் திறன். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **கூட்டுறவு துறை :—** | | |
| 1. ஆம்பூர் .. .. | 2,200 | 2,200 |
| 2. மதுராந்தகம் .. | 1,750 | 1,750 |
| 3. அமராவதி .. .. | 2,000 | 2,000 |
| 4. சேலம் .. .. | 2,500 | 2,500 |
| 5. கள்ளக்குறிச்சி .. | 2,000 | 2,000 |
| 6. நேஷனல் .. .. | 1,500 | 1,500 |
| 7. தர்மபுரி .. .. | 1,250 | 1,250 |
| 8. வேலூர் .. .. | 1,250 | 1,250 |
| 9. திருப்பத்தூர் .. | 1,250 | 1,250 |
| 10. உளுந்தூர்பேட்டை .. | 1,250 | .. |
| மொத்தம் .. | 16,950 | 15,700 |







| (1) | (2) | (3) |
|---|---|---|
| **தனியார் துறை—** | | |
| 11. ஈ.ஐ.டி. பாரி .. .. | 4,000 | 4,000 |
| 12. டெக்கான் .. .. | 2,000 | 1,850 |
| 13. சவுத் இந்தியா .. .. | 1,500 | 2,700 |
| 14. சக்தி .. .. .. | 4,000 | 4,000 |
| 15. அருணா .. .. | 4,000 | 4,000 |
| 16. மதுரா .. .. .. | 1,100 | 600 |
| 17. கோதாவரி .. .. | 4,000 | 1,500 |
| 18. திரு ஆரூரான் .. | 2,000 | 2,000 |
| 19. பாலார் .. .. | 400 | வேலை செய்ய வில்லை. |
| மொத்தம் .. | 23,000 | 20,650 |
| **பொதுத் துறை—** | | |
| 20. தஞ்சாவூர் .. .. | 1,250 | 1,250 |
| 21. பெரம்பலூர் .. .. | 1,250 | 1,250 |
| 22. காவேரி (மத்திய அரசின் நிர்வாகத்தின்கீழ் உள்ளது) | 1,000 | 1,250 |
| மொத்தம் .. | 3,500 | 3,750 |

**சுருக்கம்.**

| | | |
|---|---|---|
| கூட்டுறவுத் துறை .. | 16,950 | 15,700 |
| தனியார் துறை .. | 23,000 | 20,650 |
| பொதுத் துறை .. .. | 3,500 | 3,750 |
| மொத்தம் .. | 43,450 | 40,100 |

இணைப்பு 2.

## சர்க்கரை ஆலைகளின் உற்பத்திச் சாதனை.

தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் அரைவை செய்த கரும்பின் அளவு, சர்க்கரை உற்பத்தி மற்றும் சர்க்கரை கட்டுமானம் குறித்த விவரங்கள்.

| தொடர் எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1976–77 அரைவை செய்த கரும்பு. | உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை. | சர்க்கரை கட்டு மானம் (சதவீதத் தில்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (டன்களில்). | | |
| **கூட்டுறவுத் துறை—** | | | |
| 1. ஆம்பூர் .. | 2,59,204 | 25,270 | 9.75 |
| 2. மதுராந்தகம். | 1,21,616 | 11,289 | 9.28 |
| 3. அமராவதி .. | 1,64,945 | 13,743 | 8.33 |
| 4. சேலம் .. | 2,74,670 | 24,062 | 8.76 |
| 5. கள்ளக்குறிச்சி | 2,05,205 | 18,364 | 8.95 |
| 6. நேஷனல் .. | 1,86,050 | 15,604 | 8.39 |
| 7. தர்மபுரி .. | 2,18,006 | 20,360 | 9.34 |
| 8. வேலூர் .. | 15,118 | 10,098 | 7.26 |
| 9. திருப்பத்தூர் | 41,405 | 3,260 | 7.87 |
| மொத்தம் .. | 14,86,219 | 1,33,050 | 8.95 |
| **தனியார் துறை—** | | | |
| 10. ஈ.ஐ.டி. பாரி | 5,27,219 | 40,704 | 7.72 |
| 11. காவேரி** .. | 1,42,910 | 10,420 | 7.29 |
| 12. டெக்கான் .. | 3,29,443 | 27,126 | 8.24 |
| 13. சவுத் இந்தியா | 2,34,155 | 20,587 | 8.79 |
| 14. அருணா .. | 4,10,615 | 34,068 | 8.30 |
| 15. சகதி .. | 2,57,560 | 20,311 | 7.89 |
| 16. மதுரா .. | 44,420 | 3,436 | 7.79 |
| 17. கோதாரி .. | 1,62,369 | 14,081 | 8.67 |
| 18. திரு ஆரூரான் | 1,56,412 | 14,199 | 9.08 |
| மொத்தம் .. | 22,64,701 | 1,84,932 | 8.17 |



** 1979 பிப்ரவரி மாதம் முதல் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| **பொதுத் துறை—** | | | |
| 19. தஞ்சாவூர் .. | 40,492 | 3,564 | 8.80 |
| 20. பெரம்பலூர் | .. | .. | .. |
| மொத்தம் .. | 40,492 | 3,564 | 8.80 |
| பெரு மொத்தம்.. | 37,91,412 | 3,21,546 | 8.48 |

இணைப்பு 2—தொடர்ச்சி.

சர்க்கரை ஆலைகளின் உற்பத்தி சாதனை—தொடர்ச்சி.

தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் அரைவை செய்த கரும்பின் அளவு, சர்க்கரை உற்பத்தி மற்றும் சர்க்கரை கட்டுமானம் குறித்த விவரங்கள்—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1977–78 அரவை செய்த கரும்பு. | உற்பத்தி செய்யப் பட்ட சர்க்கரை. | சர்க்கரை. கட்டு மானம் (சதவீதத் தில்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| கூட்டுறவுத் துறை— | (டன்களில்,) | | |
| 1. ஆம்பூர் .. | 2,84,217 | 26,108 | 9.19 |
| 2. மதுராந்தகம். | 2,80,308 | 25,060 | 8.94 |
| 3. அமராவதி. | 3,10,385 | 26,843 | 8.65 |
| 4. சேலம் .. | 3,62,273 | 32,503 | 8.97 |
| 5. கள்ளக்குறிச்சி | 2,57,854 | 20,765 | 8.05 |
| 6. நேஷனல் .. | 2,17,234 | 19,533 | 8.99 |
| 7. தர்மபுரி .. | 2,30,087 | 22,239 | 9.67 |
| 8. வேலூர் .. | 2,05,454 | 17,055 | 8.30 |
| 9. திருப்பத்தூர் | 1,87,298 | 18,741 | 10.01 |
| மொத்தம் .. | 23,35,110 | 2,08,110 | 8.94 |
| தனியார் துறை— | | | |
| 10. ஈ.ஐ.டி. பாரி | 5,68,999 | 36,949 | 6.49 |
| 11. காவேரி** | 1,47,186 | 12,864 | 8.74 |



| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 12. டெக்கான் | 3,60,526 | 30,323 | •41 |
| 13. சவுத் இந்தியா | 3,18,517 | 27,600 | 8·67 |
| 14. அருணா | 4,34,549 | 35,962 | 8·28 |
| 15. சக்தி .. | 3,66,487 | 33,883 | 9·24 |
| 16. மதுரா .. | 83,282 | 7,360 | 8·84 |
| 17. கோதாரி | 2,67,382 | 22,664 | 8·48 |
| 18. திரு ஆரூரான் | 2,23,742 | 19,621 | 8·77 |
| மொத்தம் .. | 27,70,670 | 2,27,226 | 8·20 |

** 1979 பிப்ரவரி மாதம் முதல் மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| பொதுத்துறை— | | | |
| 19. தஞ்சாவூர் | 2,18,674 | 19,410 | 8·88 |
| 20. பெரம்பலூர் | 1,41,383 | 13,000 | 9·20 |
| மொத்தம் .. | 3,60,057 | 32,410 | 9·00 |
| பெரு மொத்தம் .. | 54,65,837 | 4,68,483 | 8·57 |

இணைப்பு 2.—தொடர்ச்சி.

சர்க்கரை ஆலைகளின் உற்பத்தி சாதனை—தொடர்ச்சி.

தமிழ்நாடு சர்க்கரை ஆலைகள் அரைவை செய்த கரும்பின் அளவு, சர்க்கரை உற்பத்தி மற்றும் சர்க்கரை கட்டுமானம் குறித்த விவரங்கள்—தொடர்ச்சி.



| தொடர் எண்ணும், சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1978–79 | | |
|---|---|---|---|
| | அரைவை செய்த கரும்பு. | உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை. | சர்க்கரைக் கட்டுமானம் (சதவீதத்தில்.) |
| (1) | (8) | (9) | (10) |
| | (டன்களில்.) | | |
| கூட்டுறவுத்துறை— | | | |
| 1. ஆம்பூர் .. | 3,17,236 | 29,426 | 9·28 |
| 2. மதுராந்தகம் | 2,69,332 | 23,583 | 8·76 |
| 3. அமராவதி | 2,36,147 | 20,391 | 8·63 |
| 4. சேலம் .. | 4,60,959 | 38,878 | 8·43 |
| 5. கள்ளக்குறிச்சி. | 2,65,532 | 20,455 | 7·70 |
| 6. நேஷனல் .. | 2,39,274 | 20,298 | 8·48 |
| 7. தர்மபுரி | 2,75,731 | 26,457 | 9·60 |
| 8. வேலூர் .. | 1,85,698 | 15,953 | 8·61 |
| 9. திருப்பத்தூர் | 1,77,491 | 17,667 | 9·95 |
| மொத்தம் .. | 24,27,400 | 2,13,108 | 8·78 |
| தனியார் துறை— | | | |
| 10. ஈ.ஐ.டி. பாரி | 4,42,783 | 34,621 | 7·82 |
| 11. காவேரி ** | 1,69,183 | 12,696 | 7·50 |
| 12. டெக்கான் | 3,92,802 | 32,509 | 8·28 |
| 3. சவுத் இந்தியா | 2,76,540 | 21,962 | 7·94 |
| 14. அருணா | 3,25,380 | 29,275 | 9·00 |
| 15. சக்தி .. | 8,01,653 | 66,528 | 8·30 |
| 16. மதுரா .. | 1,07,818 | 8,457 | 7·84 |
| 17. கோத்தாரி .. | 2,34,507 | 19,695 | 8·40 |
| 18. திரு ஆரூரான் | 2,19,084 | 18,972 | 8·66 |
| மொத்தம் .. | 29,69,750 | 2,44,715 | 8·24 |
| பொதுத்துறை— | | | |
| 19. தஞ்சாவூர் | 1,83,349 | 16,794 | 9·16 |
| 20. பெரம்பலூர் | 1,87,497 | 16,923 | 9·06 |
| மொத்தம் .. | 3,70,846 | 33,717 | 9·09 |
| பெரு மொத்தம் .. | 57,67,993 | 4,92,540 | 8·52 |

## இணைப்பு 3.

**தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளின் 1976–77 முதல் 1979–80 வரையில் கரும்பு விலை குறித்த அறிக்கை.**

(டன் ஒன்றுக்கு விலை—ரூபாயில்)

| தொடர் எண்ணும், சர்க்கரை ஆலையின் பெயரும். | 1976–77 | | |
|---|---|---|---|
| | மத்திய அரசு நிர்ணயித்த சட்டபூர்வ குறைந்த அளவு கரும்பு விலை. | ஆலைகள் கொடுத்த விலை. | மத்திய அரசு நிர்ணயித்த சட்டபூர்வ இறுதி விலை. |
| (1) | (2) | (3) | (4) |
| 1. ஆம்பூர் .. | 102·00 | 117·00 | 107·71 |
| 2. மதுராந்தகம். | 100·00 | 115·00 | 103·70 |
| 3. அமராவதி .. | 90·00 | 110·00 | 94·80 |
| 4. சேலம் .. | 95·00 | 110·00 | 101·69 |
| 5. கள்ளக்குறிச்சி | 94·00 | 109·00 | 100·23 |
| 6. நேஷனல் | 101·00 | 116·00 | 107·12 |
| 7. தர்மபுரி | 100·00 | 119·00 | 106·33 |
| 8. வேலூர் .. | 85·00 | 117·00 | 89·30 |
| 9. திருப்பத்தூர் | 85·00 | 117·00 | 89·40 |
| 10. ஈ.ஐ.டி. பாரி. | 85·00 | 100·00 | 90·57 |
| 11. காவேரி .. | 91·00 | 105·00 | 95·95 |
| 12. டெக்கான் | 94·00 | 110·00 | 99·43 |
| 13. சவுத் இந்தியா | 93·00 | 100·00 | 99·13 |
| 14. அருணா | 95·00 | 103·00 | 100·30 |







| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 15. சக்தி .. | 96·00 | 111·00 | 101·84 |
| 16. மதுரா .. | 89·00 | 100·00 | 94·50 |
| 17. கோத்தாரி .. | 99·00 | 105·00 | 103·70 |
| 18. திரு ஆரூரான் | 97·81 | 100·00 | 98·67 |
| 19. தஞ்சாவூர் (அறிஞர் அண்ணா) | 94·00 | 110·00 | 99·93 |
| 20. பெரம்பலூர் (ஜவகர்லால் நேரு) | — | — | — |

## இணைப்பு 3.—தொடர்ச்சி.

**தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளின் 1976–77 முதல் 1979–80 வரையில் கரும்பு விலை குறித்த அறிக்கை—தொடர்ச்சி.**

(டன் ஒன்றுக்கு விலை—ரூபாயில்.)

| தொடர் எண்ணும், சர்க்கரை ஆலையின் பெயரும். | 1977–78 | |
|---|---|---|
| | மத்திய அரசு நிர்ணயித்த சட்டபூர்வ குறைந்த அளவு விலை. | ஆலைகள் கொடுத்த விலை. |
| (1) | (5) | (6) |
| 1. ஆம்பூர் .. | 100·00 | 127·00 |
| 2. மதுராந்தகம். | 99·00 | 115·00 |
| 3. அமராவதி | 85·00 | 125·00 |
| 4. சேலம் .. | 92·00 | 125·00 |
| 5. கள்ளக்குறிச்சி. | 92·00 | 114·00 |

| (1) | (5) | (6) |
|---|---|---|
| 6. நேஷனல் | 87·00 | 116·00 |
| 7. தர்மபுரி .. | 99·00 | 120·00 |
| 8. வேலூர் .. | 85·00 | 127·50 |
| 9. திருப்பத்தூர் | 91·00 | 127·50 |
| 10. ஈ.ஐ.டி. பாரி. | 85·00 | 100·00 |
| 11. காவேரி | 85·00 | [illegible] |
| 12. டெக்கான் | 90·00 | 115·00 |
| 13. சவுத் இந்தியா | [illegible] | 100·00 |
| 14. அருணா | [illegible] | 100·00 |
| 15. சக்தி | [illegible] | [illegible] |
| 16. மதுரா | [illegible] | 100·00 |
| 17. கோத்தாரி .. | 90·00 | 106·00 |
| 18. திரு ஆரூரான் | 92·00 | 100·00 |
| 19. தஞ்சாவூர் (அறிஞர் அண்ணா) | 89·00 | [illegible] |
| 20. பெரம்பலூர் (ஜவகர்லால் நேரு) | | 115·00 |



## இணைப்பு 3.—தொடர்ச்சி.

தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளின் 1976–77 முதல் 1979–80 வரையில் கரும்பு விலை குறித்தஅறிக்கை—தொடர்ச்சி.

(டன் ஒன்றுக்கு விலை—ரூபாயில்)

| தொடர் எண்ணும், சர்க்கரை ஆலையின் பெயரும். | 1978–79 மத்திய அரசு நிர்ணயித்த சட்டபூர்வ குறைந்த அளவு விலை. | 1978–79 ஆலைகள் கொடுத்த விலை. | 1979–80 மத்திய அரசு நிர்ணயித்த சட்டபூர்வ குறைந்த அளவு விலை. | 1979–80 ஆலைகள் கொடுத்த விலை. |
|---|---|---|---|---|
| (1) | (7) | (8) | (9) | (10) |
| 1. ஆம்பூர் .. | 115·30 | 115·30 | 139·70 | 139·70 |
| 2. மதுராந்தகம் | 112·90 | 112·90 | 135·30 | 135·30 |
| 3. அமராவதி | 125·00 | 125·00 | 127·90 | 127·90 |
| 4. சேலம் .. | 110·60 | 110·60 | 130·90 | 130·90 |
| 5. கள்ளக்குறிச்சி | 100·00 | 100·00 | 125·00 | 125·00 |
| 6. நேஷனல் | 114·10 | 114·10 | 130·90 | 130·90 |
| 7. தர்மபுரி | 120·00 | 120·00 | 150·00 | 150·00 |
| 8. வேலூர் .. | 108·20 | 108·20 | 129·40 | 129·40 |
| 9. திருப்பத்தூர் | 122·40 | 122·40 | 150·00 | 150·00 |
| 10. ஈ.ஐ.டி. பாரி | 100·00 | 100·00 | 125·00 | 125·00 |
| 11. காவேரி .. | 107·10 | 107·10 | 127·90 | 127·90 |
| 12. டெக்கான் | 103·50 | 103·50 | 129·40 | 129·40 |
| 13. சவுத் இந்தியா | 103·50 | 103·50 | 125·00 | 125·00 |
| 14. அருணா | 103·50 | 103·50 | 138·20 | 138·20 |
| 15. சக்தி .. | 112·90 | 113·00 | 132·40 | 132·40 |

| (1) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|
| 16. மதுரா .. | 107·10 | 107·10 | 125·00 | 125·00 |
| 17. கோத்தாரி .. | 102·40 | 102·40 | 132·40 | 132·40 |
| 18. திரு ஆரூரான் | 104·70 | 104·70 | 135·30 | 135·30 |
| 19. தஞ்சாவூர் (அறிஞர் அண்ணா) | 105·90 | 105·90 | 135·30 | 135·30 |
| 20. பெரம்பலூர் (ஜவகர்லால் நேரு) | 118·80 | 118·80 | 133·80 | 133·80 |

## நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளித்தல்.

நலிவுற்ற தொழில் நிறுவனங்கள் புத்துயிர் பெற்று மீண்டும் இயங்குவதற்கு உதவும் வகையில் அரசு 1969-ம் ஆண்டு தமிழ் நாடு நிவாரண உதவி பெறுகின்ற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின் விதிகளின் கீழ் அந்நிறுவனங்களுக்கு உதவிகளை அளித்து வருகிறது.

2. மீண்டும் தனித்தியங்கும் அளவிற்கு புத்துயிர் பெறுவதற் கான திட்டங்களை வைத்துள்ள நலிவுற்ற தொழில் நிறுவனங் களை அவற்றிற்கு கடன் கொடுத்தவர்கள் அவைகளை கலைப்ப பதற்கான (Liquidate) நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர்க்கும் பொருட்டு அரசு 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிவாரண உதவிபெறுகின்ற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின்கீழ் தகுந்த பாதுகாப்பு அளிக்கிறது. இத்தகைய பாதுகாப்பை தற்போது பின்வரும் நிறுவனங்கள் அனுபவித்து வருகின்றன :—

(1) ஒமேகா கேபிள்ஸ் லிமிடெட், சென்னை.

(2) லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட், தொட்டம்பட்டி, தருமபுரி.

(3) இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை.

(4) சதர்ன் ஸ்விட்ச்கியர் லிமிடெட், சென்னை.

(5) காவேரி ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், புதுக்கோட்டை

(6) சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், இராமநாதபுரம்

(7) லோட்டஸ் மில்ஸ், கோயமுத்தூர்.

(8) மது ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(9) ஜனார்தனா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(10) மீனாட்சி மில்ஸ் லிமிடெட், மதுரை.

(11) சவுத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் தொழிற்சாலை, சேலம்.

(12) பிரிமியர் பர்டிலைசேர்ஸ் லிமிடெட், சென்னை.

அரசு பின்வரும் நிறுவனங்களுக்கு இயந்திரங்கள் வாங்கவும் நடைமுறை மூலதனத்திற்காகவும், கடன்கள், வழிவகை முன் பணங்கள் அளித்துள்ளது:—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. காவேரி ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், புதுக்கோட்டை. | 55·00 |
| 2. சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், இராமநாதபுரம். | 10·00 |
| 3. லோட்டஸ் மில்ஸ், கோயம்புத்தூர் .. | 20·00 |

பின்வரும் நிறுவனங்களுக்கு அவற்றின் நடைமுறை மூலதனத்திற்காக வங்கிகள் வழங்கிய கடன்களுக்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. ஜமது ஸ்பின்னிங் மில்ஸ், கோயம்புத்தூர் .. | 34·33 |
| 2. ஜனார்தனா மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர். | 50·00 |

| | | |
|---|---|---|
| 3. மீனாட்சி மில்ஸ், லிமிடெட், மதுரை | .. | 55·00 |
| 4. இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை | .. | 47·00 |
| 5. சவுத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் தொழிற்சாலை, சேலம். | | 14·35 |

நலிந்த தொழிற் பிரிவுகள் விற்பனை வரி பாக்கிகளையும், பயன் படுத்திய மின்சாரத்திற்கான கட்டணங்களையும் சுலபத் தவணைகளில் கட்டவும் அரசு அனுமதி வழங்குகிறது. இத் தொழிற் பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருள்களை மத்திய அரசு மாநில அரசு நிறுவனங்கள் முதலியவற்றிற்கு எழுதி கேட்டு விற்பனை செய்யவும் அரசு உதவி செய்கிறது.

டிராக் தொழிற்சாலை, சென்னை.

இந்த நிறுவனம் தமிழ்நாடு நிவாரண உதவி பெறுகின்ற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டம் 1969-ன் கீழ் மே திங்கள் 1980 வரை பாதுகாப்பு பெற்று வந்தது. இந்த நிறுவனத்தை புனரமைப்பதற்கான முயற்சி பரிசீலனையில் உள்ளது.

டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட், கோயம்புத்தூர் :—

இந்த நிறுவனம் பொருளாதார நெருக்கடி, அதிகப்படியான தொழிலாளர்கள், குறைந்த உற்பத்தி போன்ற பல காரணங்களால் செவ்வனே செயல்பட முடியாமல் இருந்து வந்தது. எனவே மாநில அரசு இந்த நிறுவனத்தின் நிர்வாகத்தை 1 8-1970 முதல் எடுத்துக் கொண்டது. மேலும் தமிழ்நாடு நிவாரண உதவி பெறுகின்ற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டம் 1969-ன் கீழ் 14-8-1970 முதல் ஒரு நிவாரண உதவி பெறும் நிறுவனமாக அறிவித்தது. இச் சட்டத்தின் கீழ் பாதுகாப்புத் தரப்படும் அதிக பட்சமான 8 ஆண்டுகளை இந்த நிறுவனம் கழித்து விட்டது. தற்பொழுது இந்த நிறுவனம் லாபத்துடன் இயங்கி வருகிறது. மேலும் தன்னுடைய நிர்வாகத்திலிருந்துஅரசின் பிரதிநிதிகளை திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு அரசினைக் கேட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.



சக்தி பைப்ஸ் லிமிடெட், சென்னை :—

சக்தி பைப்ஸ் லிமிடெட் நிறுவனத்தை மாற்றி அமைத்து அதற்கு புத்துயிர் அளிப்பது பற்றிய பல செயற்குறிப்புகள் யாவும் பலனளிக்காததால் இதுவரை நிறுவனத்தை நிர்வாகம் செய்து வந்த அரசுக்கு நிர்வாகத்தை 30-9-1978-ம் தேதி முதல் முந்திய இயக்குநர்கள் குழுவிடமே திரும்ப ஒப்படைப்பதைத் தவிர வேறு மாற்று வழியில்லாமல் இருந்தது. ரூ. 112 இலட்சம் அரசு ஹைதராபாத் மாநில வங்கிக்கு வட்டியும் முதலுமாக திரும்பி கொடுத்துள்ளது. மூலப்பொருள்கள் வாங்குவதற்கும், நடைமுறை மூலதனத்திற்கும், தொழிலாளர்கள் பணியாளர் மற்றும் நிர்வாக செலவுகள் போன்றவற்றிற்கு அரசு, நிறுவனத்திற்கு மொத்தம் ரூபாய் 195·81 இலட்சம் கடனாகவும் வழிவகை முன் பணமாகவும் வழங்கியுள்ளது. நிதி நிறுவனங்களின் வேண்டுகோளின்படி இந்நிறுவனம் தற்போது ஒரு ரிசீவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது வரை அரசால் வழங்கப்பட்டுள்ள அனைத்து தொகையையும் வசூலிக்க நிறுவனத்தின் மீது வழக்கு ஒன்றினைத் தொடரும்படி தொழில் வணிகத் துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திருவாளர்கள் இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட்.

பலவகைப்பட்ட மின்சார மீட்டர்களை தயாரிக்க திருவாளர்கள் இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட் 1963-ம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டது. இந்நிறுவனம் நவம்பர் 1974 முதல் மூடப்பட்டிருந்தது. நிறுவனத்தை மீண்டும் செயல்படச் செய்ய புனரமைப்புத் திட்டம் வகுப்பதில் தமிழக அரசு முக்கியப்பங்கேற்றது. நிறுவனத்தின் சார்பாக தமிழக அரசு வங்கியில் கடன் தொகை பெறுவதற்காக சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியாவிற்கு ரூ. 47 இலட்சத்திற்கு உத்திரவாதம் வழங்கியுள்ளது. மேலும், நிறுவனம் மேற்கொள்ளும் ஒப்பந்த வேலைக்கான பிணைப் பணத் தொகை மற்றும் பிணை வைப்புத் தொகை போன்ற வகையில் ரூ. 30 இலட்சம் வரை உத்தரவாதம் அளிக்க தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாடு மின்வாரியம் இந் நிறுவனத்திடமிருந்து முதலாண்டில் 50,000 மீட்டர்களும் அடுத்த நான்கு ஆண்டில் 1,00,000 மீட்டர்களும் வாங்கவேண்டுமென்று

தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
8–12–1977 முதல் மீண்டும் செயல்படத் துவங்கியது. இந்நிறுவனம்
ஹெவி எலக்டிரிகல்ஸ் லிமிடெட் ( BHEL ) இந்நிறுவனத்தை பாரத்
நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. நிறுவனம் மீண்
டும் செயல்படத் தொடங்கியதிலிருந்து 589 நபர்களுக்கு வேலை
வாய்ப்பை அளித்துள்ளது. நிறுவனத்தின் துணை ஒப்பந்தம்
போன்றவற்றால் மறைமுகமாக 2,000 பேர்கள் வரை வேலை
வாய்ப்பு பெறுகின்றனர். 1979–ம் ஆண்டு டிசம்பர் திங்கள்
வரை இந்நிறுவனம் ரூ. 227 இலட்சம் மதிப்புள்ள 1,25,410
சிங்கள் பேஸ் மீட்டர்கள் ( Single phase meters ) மற்றும்
82,258 பாலிபேஸ் மீட்டர்கள் ( poly phase meters )
தயாரித்துள்ளது. 1980–81-ம் ஆண்டில் ரூ. 375 இலட்சம்
பெறுமான 1,70,000 சிங்கள் பேஸ் மீட்டர்களும் ( Single
phase meters ) 1,20,000 பாலி பேஸ் மீட்டர்களும்
தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தமிழ்நாடு
நிவாரண உதவி பெறுகிற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்
தின் கீழ் 21–9–1973 முதல் நலிவுற்ற தொழில் நிறுவன
மாக அறிவிக்கப்பட்டது. நலிவுற்ற தொழில் நிறுவன
மாக அறிவிக்கப்பட்ட கால வரம்பு ஒவ்வொரு ஆண்டும் நீட்டிக்
கப்பட்டு, தற்போது அதன் காலவரம்பு 21–9–1980 வரை நீட்
டிக்கப்பட்டுள்ளது.

## திருவாளர்கள் சதர்ன் ஸ்விட்ச்கியர் லிமிடெட்.

திருவாளர்கள் சதர்ன் ஸ்விட்ச்கியர் லிமிடெட் என்ற
நிறுவனம் 1965 முதல் இங்கிலாந்து நாட்டின் பிரிட்டிஷ் எலெக்
டிரிகல்ஸ் என்ஜினியரிங் கம்பெனி லிமிடெட் ( Messers British
Electrical Engineering Company Ltd. U. K. ) என்ற
நிறுவனத்தின் ஒத்துழைப்போடு அம்பத்தூரில் உள்ள தொழிற்
பேட்டையில் உயர் அழுத்த குறைந்த அழுத்தமுள்ள ஸ்விட்ச்
கியர்களைத் தயாரித்து வருகிறது. இந்நிறுவனம் அதிக
நட்டத்தில் இயங்கி வந்ததால் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா
இந்நிறுவனத்திற்கு நடைமுதல் தேவைக்கு அளித்து வந்துள்ள
நிதி உதவியை நிறுத்திக் கொண்டது. இந்நிறுவனம் 1978 ஆம்



ஆண்டு மார்ச்சு மாதம் 14 ஆம் தேதி முதல் மூடப்பட்டிருந்தது.
இந்நிறுவனத்தை 1978-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம்
தேதி முதல் ஓர் ஆண்டுக்கு ஒரு நலிவுற்ற நிறுவனமாக அறிவிக்கப்
பட்டது. இதன் கால வரம்பு 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம்
9 ஆம் தேதி முதல் மேலும் ஓர் ஆண்டிற்கு நீடிக்கப்பட்டுள்ளது.
இதில் சம்பந்தப்பட்டவர்களுடன் எல்லாம் தொடர்ந்து நடத்திய
பேச்சு வார்த்தைகளின் பயனாக ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா
கூடுதல் நடைமுதலுக்கு தேவைப்படும் நிதி உதவியை அளித்தது.
இதனால் இந்நிறுவனம் மீண்டும் 1979 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம்
10-ஆம் தேதி முதல் செயல்படச் செய்ய ஏதுவாகியது. நீண்ட
காலத்திற்கு கட்டுப்படியாகக்கூடிய வகையில் இயங்க ஒரு புன
ரமைப்புத் திட்டத்தை செயல்படச் செய்யக் கூடிய வகையில்
தயாரிக்கப்பட்டு வருகிறது. தற்போது தொழிற்சாலையில்
பணியாற்றுவோர் எண்ணிக்கை 547 ஆக இருக்கின்றது. இது
தவிர, 250 தொழிலாளர்கள் மறைமுகமாக வேலை வாய்ப்பு
பெற்றிருக்கிறார்கள்.

1979–80 ஆம் ஆண்டில் நிறுவனத்திற்கு ரூபாய் 6·87 இலட்
சம் விரயம் ஏற்பட்டது. நிறுவனம் 1980–81 ஆம் ஆண்டில்
ரூ. 0·59 இலட்சம் இலாபம் கிட்டும் என்று எதிர்பார்க்கிறது.

## தமிழ்நாட்டில் மைய அரசின் தொழிற் திட்டங்கள்

பெருந்தொழில்கள் பிரிவில் தற்போது நிறுவப்பட்டு
வரும் மத்திய அரசு நிறுவனங்களைப் பற்றியும் ஏற்கனவே
யுள்ள நிறுவனங்களின் விஸ்தரிப்புத் திட்டங்களைப் பற்றியும்
விவரங்கள் பின்வரும் பாராக்களில் கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) சேலம் உருக்காலை.—ரூபாய் 126·81 கோடி மதிப்
புள்ள முதல் கட்டத் திட்டம் 1981 செப்டம்பர் திங்களில்
உற்பத்தியைத் துவங்கும். முதல் கட்டத்தில் சேலம் உருக்காலை
வெளியேயிருந்து இரும்புப் பட்டைகளை வாங்கி ஒவ்வொரு
ஆண்டும் 32,000 டன்கள் துருப்பிடிக்காத எஃகு தகடுகளை
உற்பத்தி செய்யும். இதுவரை 41 முதுநிலை செயல் திறப்
பயிற்சியாளர்களும் மற்றும் 75 இளநிலை செயல்திறப் பயிற்சி
யாளர்களும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிரார்கள்.

உருக்காலைக்கும் நகரியப்பகுதிக்கும் தேவையான எல்லா நிலங்களும் (1,545 ஹெக்டேர்கள்) கையகப்படுத்தப்பட்டுள்ளன. உருக்காலை அருகில் ஒரு நவீன நகரியப்பகுதி அமைக்கப்பட்டு வருகின்றது. தண்ணீர், மின்வசதி, சாலை வசதிகள் ஆகிய பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டத் திற்கு இதுவரை ரூபாய் 45 கோடி செலவிடப்பட்டிருக் கின்றது.

இரண்டாவது கட்டத்தில் ஆண்டொன்றுக்கு கீழே குறிப் பிட்டுள்ளபடி 2,20,000 டன்கள் துருப்பிடிக்காத உருட்டி அடிக்கப்பட்ட சிறப்பு உருக்குத் தட்டைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக, குளிரூட்டி மற்றும் வெப்பம் ஊட்டி உருக்கக்கூடிய வசதிகள் சேர்க்கப்படும்:—

| | |
|---|---|
| துருப்பிடிக்காத உருக்கு .. .. .. | டன்கள். |
| எலக்ட்ரிக்கல்ஸ் துருப்பிடிக்காத உருக்கு | 70,000 |
| இரும்புத் தாதுப் பொருட்களிலிருந்தும், இரும்புத் துகள்களிலிருந்தும் தயாரிக்கப்படும் ஏனைய சிறப்பு மற்றும் மென் உருக்கு. | 75,000 |
| | 75,000 |

1980-81-ம் ஆண்டில் திட்டத்துக்கு 65 கோடி ரூபாய் செல வாகுமென்று மதிப்பிடப்பட்டது. 1980-81-ம் ஆண்டின் இறுதியில் முதல் கட்டத் திட்டத்தின் திட்டமிட்ட பெரும் பாலான செலவுகள் செய்யப்பட்டுவிடும். முதல்கட்ட துருப் பிடிக்காத எஃகு திட்டமிட்டபடி 1981 செப்டம்பர் திங்களில் அங்காடியில் விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படு கின்றது.

(2) நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம்.—14—11—1956-ல் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் தொடங்கப்பெற்றது. இது, திறந்த பழுப்பு நிலக்கரி சுரங்கப் பிரிவு, அனல் மின் உற்பத்தி பிரிவு, உரத் தொழிற்சாலை மற்றும் சுட்ட அச்சுக் கரித் தொழில் கொண்ட ஒருங்கிணைந்த தொழிற்சாலைகள் பலவற்றைக் கொண்ட தொழில்பேட்டை



அல்லது தொழில் தொகுதியாகும். பழுப்பு நிலக்கரிச் சுரங் கத்தில் கிடைக்கும் வெண்மை நிற களிமண்ணைச் சுத்தப்படுத்த களிமண் சுத்திகரிப்புத் தொழிற்சாலை ஒன்றும் உள்ளது. சுரங்கத்தின் தற்போதைய உற்பத்தித் திறன் ஆண்டொன் றுக்கு 3·5 மில்லியன் டன் ஆகும். இதனை 6·5 மில்லியன் டன்னாக உயர்த்துவதற்காக விரிவாக்கப்பணி நடைபெற்று வரு கிறது. மற்ற தொழிற்சாலைகளின் நிறுவனத் திறன் அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| 1. அனல் மின் நிலையம் .. | 600 மெகாவாட். |
| 2. உரத்தொழிற்சாலை .. | ஆண்டொன்றுக்கு 152,000 டன் யூரியா. |
| 3. சுட்ட அச்சுக்கரித் தொழிற் சாலை. | ஆண்டொன்றுக்கு 3,27,000 சுட்ட அச்சுக்கரி (லிகோ) |
| 4. களிமண் சுத்திகரிப்புத் .. தொழிற்சாலை. | ஆண்டொன்றுக்கு 6,000 டன் நெகோ லின். |

31–12–1979 ஆம் நாள் நிலவரப்படி முதலீடு செய்யப் பட்ட மூலதனத் தொகை ரூபாய் 30,649·75 இலட்சம் ஆகும். 31–12–1979 ஆம் நாள் நிலவரப்படி 330 பயிற்சியாளர்கள் உட்பட 17,800 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட் டிருக்கிறது. 1979-ம் ஆண்டில் ஜனவரி முதல் டிசம்பர் வரை உற்பத்தி விவரம் பின்வருமாறு :—

| பொருள். | ஜனவரி 1979-ல் இருந்து டிசம்பர் 1979 வரை உற் பத்தியின் அளவு. | மதிப்பு (ரூபாய் இலட் சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| பழுப்பு நிலக்கரி .. | 32·25 (LT) | 2,589·65 |
| மின்சாரம் .. .. (லிக்னைட் அண்டு ஆயில்). | 2,191·56 (MU) | 5,633·31 |
| யூரியா .. .. | 80,811 (TS) | 1,853·00 * |
| லிகோ .. .. | 24,287 (TS) | 89·41 |

*அளவில் வேறுபட்டிருக்கும் யூரியாவின் விலை இதில் அடங்கும்.

## இணைப்பு

(a) ஆண்டொன்றுக்கு 4·7 மில்லியன் டன்கள் பழுப்பு [1980 ஜூலை 19
நிலக்கரி கிடைக்கக்கூடிய இரண்டாவது சுரங்கப் பிரிவு
வெட்டுவதற்கும்,

(b) 630 மெகாவாட் திறன் உள்ள இரண்டாவது அனல்
மின் நிலையம் நிறுவுவதற்கான திட்டங்களுக்கும் மத்திய அரசு
ஒப்புதல் அளித்திருக்கின்றது. இரு திட்டங்களுக்கும் தொடக்
கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை 1983-84 ஆண்டு
களில் பூர்த்தியாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(3) <u>சென்னையிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை.</u>—
சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை 1969 ஆம் ஆண்
டில் தொடங்கப்பெற்று 1969 ஆம் ஆண்டில் உற்பத்தியைத்
தொடங்கியது. தற்போது ஆண்டு ஒன்றுக்கு 2·8 மில்லியன்
டன் வீதம் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய் சுத்தி
கரிக்கிறது. தொழிற்சாலையை நிறுவுவதற்காக ரூபாய்
43 கோடி செலவு செய்யப்பட்டது. 1978-79 ஆம் ஆண்டில்
2·759 மில்லியன் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு செய்யப்பட்டது.
இதன் தூய்மைப்படுத்தும் திறன் 112 சதவீதம் ஆகும்.
1978–79 ஆம் ஆண்டின் உற்பத்தியும், 1979-80 மற்றும்
1980–81-ம் ஆண்டுக்கான திட்டமிடப்பட்ட உற்பத்தியின்
அளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1978–79. | 1979–80. | 1980–81. |
|---|---|---|---|
| 1. கச்சா எண்ணெய்/ மில்லியன் மெட்ரிக் டன்கள்/ஆண்டுக்கு. | 2·759 | 2·787 | 2·768 |
| 2. பெட்ரோலியம் எரி வாயு எண்ணெய் ஆயிரம் டன்கள்/ ஆண்டுக்கு. | 43·1 | 43·3 | 43·1 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 3. லுபேபேஸ் இருப்புக்கள் ஆயிரம் டன்கள்/ ஆண்டுக்கு | 164·3 | 181·0 | 179·0 |
| 4. கச்சா எரிஎண்ணெய் இழப்பு சதவீதம் எவ்வளவு என்பதும் எண்ணெயில் எரிபொருள் இழப்பின் சதவீதமும் | 9·4 | 9·3 | 9·1 |
| 5. கனரக வண்டிகளுக்கான லுபே | 109·4 | 129·8 | 124·0 |

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை 528 பேர்களுக்கு வேலை அளித்திருக்கிறது. மறைமுகமாக 5,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திருக்கின்றது. இந்நிறுவனம் 1978-79-ஆம் ஆண்டில் வரிவிதிப்புக்கு முன் ரூபாய் 69·9 மில்லியனும், வரி விதிப்பிற்கு பின் ரூபாய் 20·98 மில்லியனும் லாபம் ஈட்டியிருக்கிறது. ஆண்டொன்றுக்கு 20,000 மெட்ரிக் டன் பாராபின் மெழுகு தயாரிக்கும் தொழிற்சாலை திட்டத்தின் பணி நடைபெற்று வருகின்றது. எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை ஆண்டு ஒன்றுக்கு 5·6 மில்லியன் டன்னாக உயர்த்துவதற்கான செயற்குறிப்பு மத்திய அரசின் ஆய்வில் இருக்கின்றது.

(4) இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ லிமிடெட்.—இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட் நிறுவனம் 1960-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. தற்போது இந்நிறுவனம் ஆண்டொன்றிற்கு 8,000 டெலிபிரிண்டர்ஸ் தயாரிக்கும் திறன் கொண்டது. நம் நாட்டில், பலவகையான டெலிபிரிண்டர்ஸ்களையும் அதனைச் சார்ந்த கருவிகளையும் உற்பத்தி செய்யும் நிறுவனம் இது ஒன்றேயாகும். இதில் முதலீடு செய்யப்

பட்டுள்ள மொத்த மூலதனம் 640 இலட்சம் ரூபாயாகும். 1978–79ல் 6,725 டெலிபிரிண்டர்ஸ் உற்பத்தி செய்யப் பட்டன. 1979–80-ம் ஆண்டில் உற்பத்தி 7,000 இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலையில் 12—3—1979 முதல் 29—5—1979 வரை வேலை நிறுத்தம் நடைபெற்றது. ரூபாய் 9 கோடி மதிப்பிடப்பட்ட முதலீட்டில் நவீனப்படுத்தல், பல்திறன்படுத்துதல் போன்ற திட்டங் களை நிறுவனம் எடுத்துக் கொள்ளவிருக்கிறது. பல்திறப் படுத்தல் திட்டத்தின் கீழ் முக்கியமான மின் தட்டச்சுப் பொறி, எலக்ட்ரானிக் டெலி பிரிண்டர்ஸ், கம்ப்யூட்டர் பெரி பெரல்ஸ், மற்றும் பிற எலக்ட்ரானிக் சாதனங்கள் உற்பத்தி செய்யப்படும்.

(5) <u>இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம்.</u>—இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் 1960-ல் தொடங்கப்பெற்றது. தற்போது இந்நிறுவனம் புகைப் படம் சம்பந்தப்பட்ட பொருள்களான பாஸிடிவ் திரைப்படச் சுருள் (வெண்மை மற்றும் கருப்பு) மருத்துவ எக்ஸ் கதிர் சுருள் கள் புகைப்படத் தாள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்றது. 6·15 மில்லியன் சதுர மீட்டர் அளவுள்ள சுருள்களும், தாள் களும், மற்றும் 100 டன் செய்முறை இரசாயனப் பொருட் களும் தயாரிப்பது இந்நிறுவனத்தின் திறன் அளவு ஆகும். இறக்குமதி செய்யப்பட்ட சுருளுக்கான மூலப் பொருளை மாற்றுவதன் மூலம் கலர் திரைப்படச் சுருள் தயாரிப்பதற்கு பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்ட ஓரளவே பணிநிறைவு பெற்றதும் வண்ணத்திரைப்படச் சுருள்களையும் அமைச்சூர் சுருள்களையும் பணி நிறைவு பெற்ற சுருள்களாக மாற்றும் பணியை இந்நிறுவனம் மேற் கொள்கிறது. 1979–80-ம் ஆண்டில், (சனவரி 1980 வரை) இந்நிறுவனம் ரூபாய் 3,760 இலட்சம் மதிப்புள்ள 8·09 மில்லியன் சதுர மீட்டர் அளவுள்ள புகைப்படச் சுருள்களை உற்பத்தி செய்திருக்கிறது. 1980–81-ம் ஆண்டில் ரூபாய் 5,758 இலட்சம் மதிப்புள்ள 11·15 மில்லியன் சதுர மீட்டர் அளவுள்ள திரைப்படச் சுருள்களை உற்பத்தி செய்யத்



திட்டமிட்டுள்ளது. 2,600 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து இருக்கிறது. அம்பத்தூர் தொழிற் பேட்டையில் ஒரு நவீன மாற்றுவசதிக்கான தொழிற்சாலை நிறுவப் பட்டிருக்கிறது. கூடுதலாக 4·5 மில்லியன் சதுர மீட்டர் உற்பத்தி செய்வதற்கான ஓர் தொழில் தொடங்கும் சாத்தியக் கூறு பற்றிய அறிக்கை பரிசீலனையில் இருக்கிறது. ரூபாய் 75–80 கோடி முதலீட்டில் 10·12 மில்லியன் சதுர மீட்டர் அளவுள்ள திரைப்பட வண்ணச் சுருள்களை ஐந்து ஆண்டு களுக்குள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை நிறுவத் திட்டமிருக்கிறது.

(6) <u>சென்னை உரத் தொழிற்சாலை நிறுவனம்.</u>—மணலியில் உள்ள தொழிற்சாலை 1971-ம் ஆண்டு மே திங்களில் கட்டி முடிக்கப்பட்டது. திட்டத்தின் மொத்த செலவுத் தொகை ரூபாய் 63·05 கோடி ஆகும். 1971 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாளன்று இத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கியது. நாளொன்றுக்கு 750 டன் அமோனியா உற்பத்தி செய்யும் தொழிற்பிரிவும், 885 டன் யூரியா உற்பத்தி செய்யும் தொழிற்பிரிவும் இத்தொழிற்சாலையில் ஒன்றாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன. முதல் நாளொன் றுக்கு 1,100 டன் உற்பத்தித் திறனுடன் கூடிய இரண்டு என்.பி. கே. பிரிவை இத்தொழிற்சாலை கொண்டிருந்தது. இத்தொழிற்சாலையில் 1976-ம் ஆண்டு செப்டம்பர் 12ல் மூன்றாம் தொழிற் பிரிவு அமைக்கப்பட்டது. வணிக அளவில் 1976 ம் ஆண்டு செப்டம்பர் 29-ல் உற்பத்தி தொடங்கப் பட்டது. இவ்வாறு தொழிற்பிரிவுகள் கூடுதலாக அமைக்கப் பட்டதால் என்.பி கே. யின் மொத்த உற்பத்தித்திறன் நாளொன்றுக்கு 1,650 டன்கள் ஆனது. தற்போதைய விற்பனைக்குரிய பொருட்களில் உற்பத்தி ஆண்டுக்கு 1,53,000 டன் யூரியாவும், 5,40,000 டன்கள் என்.பி.கே. உரமுமாகும். என்.பி.கே.சி. பிரிவு ஒன்றின் விலை ரூ. 7-48 கோடி ஆகும். சென்னை உரத் தொழிற்சாலையின் என்.பி.கே.சி. உட்பட மொத்தச் செலவு ரூபாய் 70·53 கோடி ஆகும். 1979–80ம் ஆண்டில் இதுவரை இந்நிறுவனத்தின் செயல்திறன் நிர்ணயிக்கப்

பட்ட குறியீட்டுக்கு குறைவாகும். பொருட்கள் வாரியான
உற்பத்தி கீழே தரப்பட்டுள்ளது:—

000 மெட்ரிக் டன்கள்.

| பொருள். | ஏப்ரல்-டிசம்பர் 1979 (உள்ளபடி) | ஜனவரி-மார்ச், 1980 (எதிர் பார்க்கப் பட்டது) | (மொத்தம் எதிர் பார்க்கப் கப்பட்டது). | 1980--81 நிர்ணயிக்கப் பட்ட அளவு. |
|---|---|---|---|---|
| என்.பி.கே. காம்ப்ளக்ஸ். | 345.3 | 135.7 | 481 | 540 |
| மொத்தம் யூரியா. | 195.0 | 34.0 | 231 | 263 |
| விற்பனைக்குரிய யூரியா. | 104.0 | 21.0 | 125 | 134 |

நடப்பாண்டில் தேவையான அளவு ஃபாஸ் அமிலம்
இறக்குமதி மூலம் கிடைக்கப் பெறாததாலும், சென்னை
உரத்தொழிற்சாலையின் சாதனங்களின் கோளாறுகளினாலும்
உற்பத்தி குறைந்துவிட்டது. தற்போதைய தொழிற்சாலை
யில் வேலை செய்யும் நபர்களின் எண்ணிக்கை 1,157
ஆகும்.

(7) இரயில் பெட்டி தொழிற்சாலை (ஐ.சி.எப்).—
பெரம்பூரிலுள்ள இரயில் பெட்டி தொழிற்சாலை 1955-ம்
ஆண்டில் நிறுவப்பட்டது. இதன் உற்பத்தித் திறன் ஆண்
டொன்றுக்கு முழுமையான முடிக்கப்பட்ட 750 இரயில்
பெட்டிகள் ஆகும். திட்டத்தின் செலவு ரூபாய் 12·85
கோடி ஆகும். தொழிற்சாலை 14,334 பேர்களுக்கு வேலை



அளித்துள்ளது. தொழிற்சாலை தொடங்கியதிலிருந்து
31—1—1980 வரை 13,775 வண்டிக்கூடுகளும் 11,802 பெட்டி
களும் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. 1980–81-ம்
ஆண்டில் 720 இரயில் பெட்டிகள் தயாரிக்கத் திட்டமிடப்
பட்டுள்ளது. பர்மா, தைவான், தாய்லாந்து, ஜாம்பியா,
டான்சானியா, பிலிப்பைன்ஸ், உகாண்டா, வியட்நாம் ஆகிய
நாடுகளுக்கு தரமான 359 இரயில் பெட்டிகளும், 266 முழுமை
யாக முடிக்கப்பட்ட இரயில் பெட்டிகளையும் ஏற்றுமதி
செய்தது மூலம் அனைத்துலக புகழ் பெற்றுள்ளது.

(8) திருச்சிராப்பள்ளியிலுள்ள கனரக மின்சாரக்
கருவிகள் "பெல்ஸ் (BHEL) தொழிற்சாலை.—
பாரத கனரக மின்சாரக் கருவிகள் தொழிற்சாலையின் திருச்சி
ராப்பள்ளி பிரிவு 1965-ல் நிறுவப்பட்டது. இந்நிறுவனம்
அனல் மின் நிலையங்களுக்கும், அணுமின் நிலையங்களுக்
கும் தேவைப்படும் கனரகக் கொதிகலன்களையும் துணைப்
பொருட்களையும், தொழில்களுக்குத் தேவையான பொருட்
களையும் உற்பத்தி செய்யும் பொறியியல் நிறுவனம் ஆகும்.
தொழிற்சாலையிலும், நகரியப் பகுதியிலும் செய்யப்பட்ட தற்
போதைய முதலீடு ரூபாய் 55 கோடி ஆகும். 1979–80 ஆம்
ஆண்டில் உற்பத்தி ரூ. 235 கோடி மதிப்புள்ள சுமார்
1,00,000 டன்களாகும். 1980–81-ம் ஆண்டில்
உற்பத்தி ரூபாய் 243 கோடி மதிப்புள்ள 1,10,000 டன்
களாகும். 1979–80; 1980–81-ம் ஆண்டில் வேலை
வாய்ப்பு கிடைக்கும் நபர்களின் எண்ணிக்கை முறையே
13,025 மற்றும் 13,700 ஆகும். பாரத கனரகத் தொழிற்
சாலையில் எதிர்காலத் திட்டம் அதிக அளவில் துணைத்
தொழில்கள் வளர்ச்சியை அதிகரிப்பது ஆகும். இந்நிறுவனம்
ஆண்டுக்கு 4,000 மெகாவாட் அளவுக்கு உற்பத்தி திறனை
அதிகரிக்கவும், 500 மெகாவாட் கொதிகலன் மற்றும் துணைத்
தொழில்கள் வழங்கக்கூடிய அளவில் வசதிகளைப் பெருக்கவும்
திட்டமிடப்பட்டிருக்கிறது. கொதிகலன் உறுப்புகளைத் தயா
ரிக்க தற்போதைய தொழிற்சாலையை அபிவிருத்தி செய்யவும்.

வால்வுகள் மற்றும் துணைத் தொழிற்பொருட்கள் உற்பத்திக்கு துணைத் தொழிற்சாலை நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்தகைய திட்டங்கள் அடுத்த சில வருடங்களில் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்குத் தேவையான கூடுதல் முதலீடு ரூ. 57 கோடி ஆகும்.

(9) சென்னையிலுள்ள இந்தியன் ட்ரக்ஸ் பார்மசூட்டிகல் லிமிடெட் நிறுவனத்தின் தொழிற்சாலை (மருத்துவ சிகிச்சைக் கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை).— திட்டத்தின் மூலதனச் செலவு ரூபாய் 6 கோடிக்கு மேலாகும். தற்போது வேலையிலிருப்போர் எண்ணிக்கை 1,168 ஆகும்.

தற்போதைய உற்பத்திக் குறிக்கோள்களாவன :

(1) உயர்தர மருத்துவ சிகிச்சைக் கருவிகள்.

(2) மாத்திரைகள், உரைமாத்திரைகள், உள்ளுக்குச் சாப்பிடும் மருந்துகள், பவுடர்கள், ஊசி மருந்துடைய குப்பிகள்.

3. மருந்துகள் தயாரிக்க தெரிந்தெடுக்கப்பட்ட சாதனங்கள்.

1978-79 ஆம் ஆண்டில் மருத்துவ சிகிச்சைக் கருவிகள் பிரிவு ரூ. 51·75 இலட்சம் மதிப்புள்ள கருவிகளை உற்பத்தி செய்தது. 1979–80 ஆம் ஆண்டில் ரூபாய் 75 இலட்சம் மதிப்புள்ள கருவிகளை உற்பத்தி செய்ய திட்டமிட்டிருக்கிறது. 1980–81 ஆம் ஆண்டுக்குத் திட்டமிடப்பட்டுள்ள மதிப்பீடு ரூபாய் 118 இலட்சமாகும்.

மருந்துகள் கலக்கும் தொழிற் பிரிவு 1979 ஆம் ஆண்டில் ஏப்ரல் திங்களில் தொடங்கியது. முதல் ஆண்டின் உற்பத்தி ரூபாய் 90 இலட்சம் ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1980–81 ஆம் ஆண்டில் ரூபாய் 150 இலட்சம் நிதி ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.



பொதுப் பொறியியல் பிரிவில் 1978–79 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உற்பத்தி ரூபாய் 49·52 இலட்சம் ஆக இருந்தது. 1979–80 ஆம் ஆண்டின் உற்பத்தி ரூபாய் 95 இலட்சத்திற்கும் 1980–81 ஆம் ஆண்டில் ரூபாய் 120 இலட்சத்திற்கும் உற்பத்தி செய்ய வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

## இணைப்பு II

[1064-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

## கோரிக்கை எண் 6.

### பத்திரப் பதிவுத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

பத்திரப் பதிவுத்துறை, 1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தை (மத்தியச் சட்டம் 16/1908) நிர்வகிக்கிறது. இச் சட்டத்தின்கீழ் சொத்துரிமையை பாதிக்கக்கூடிய ஆவணங்களைப் பதிவு செய்யும் பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இயங்காச் சொத்துக்களின் மீது உரிமை கோருபவரது உரிமைகளை நிலைநாட்டும் ஆவணங்களைப் பாதுகாக்கும் பொறுப்பையும் இத்துறை நிறைவேற்றி வருகின்றது. இத்துறை, பின் வரும் சட்டங்களையும் நிர்வகித்து வருகிறது:—

(அ) இந்திய பங்குதாரர்கள் சட்டம்;

(இ) சங்கங்கள் பதிவுச் சட்டம்;

(உ) பிறப்பு-இறப்பு மற்றும் திருமணப் பதிவுச் சட்டங்கள்; கிறித்துவ திருமணச் சட்டம், இந்து திருமணச் சட்டம், சிறப்புத் திருமணச் சட்டம், பார்சி திருமண மற்றும் விவாகரத்துச் சட்டம் போன்ற திருமணப் பதிவுச் சட்டங்கள்;

(எ) வரதட்சணை ஒழிப்புச் சட்டம்;

(ஒ) திருவிதாங்கூர்—கொச்சி இலக்கிய அறிவியல் அறக் கட்டளைச் சங்கங்கள் பதிவுச் சட்டம்; மற்றும்

(ஐ) தமிழ்நாடு சீட்டு நிதிகள் சட்டம்.

இத்துறையைச் சேர்ந்த சார் பதிவாளர்கள், மாவட்டப் பதிவாளர்கள் ஆகிய சில அதிகாரிகளிடம், இந்திய முத்திரைத் தாள் சட்டத்தின் குறிப்பிட்ட சில பிரிவுகளின் கீழும் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டு உள்ளன.

## 2. துறையின் நிர்வாக அமைப்பு.

(i) துறைத் தலைவர்.—பத்திரப் பதிவுத்துறைத் தலைவர் இத்துறையின் தலைவராவார். இவரே 'பிறப்பு-இறப்பு' திரு மணங்களைப் பதிவு செய்யும் தலைமைப் பதிவாளருமாவார். இவர் சீட்டு நிதிகளின் இயக்குநரும் ஆவார். இவருக்கு உதவி அளிப்பதற்கு துறையின் தலைமை அலுவலகத்தில் பத்திரப் பதிவுத்துறை துணைத் தலைவர் ஒருவர், நேர்முக உதவி யாளர் ஒருவர், சீட்டு நிதிகளின் கூடுதல் இயக்குநர் ஒருவர் (இவ்விருவரும் பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர் பதவித் தரத்தைச் சேர்ந்தவர்கள்) மற்றும் ஒரு ஆய்வு அதிகாரி (சீட்டு) இருக்கிறார்கள்.

(ii) பத்திரப் பதிவுத்துறை அலுவலர்களின் எண்ணிக்கை—

| | |
|---|---|
| பத்திரப் பதிவுத் துறை தலைவர் (ஐ.ஏ.எஸ்). . . . | 1 |
| துணைத் தலைவர் .. .. .. | 1 |
| பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளர்கள் (நேர்முக உதவியாளர், சீட்டு நிதிகளின் கூடுதல் இயக்குநர் உட்பட) | 9 |
| மாவட்டப் பதிவாளர்கள் (சீட்டு நிதிகளின் ஆய்வு அதிகாரி உட்பட) .. | 38 |
| நேரடியாக நியமனம் செய்யப்பட்டு தகுதி காண் பருவ நிலையிலுள்ள மாவட்ட பதிவாளர் | 1 |
| சார் பதிவாளர்கள் .. .. .. .. | 615 |
| உதவியாளர்கள் .. .. .. | 618 |
| இளநிலை உதவியாளர்கள் .. .. .. | 941 |
| சுருக்கெழுத்து-தட்டச்சர்கள் .. .. .. | 3 |
| தட்டச்சர்கள் .. .. .. .. | 78 |
| தற்காலிகப் பதிவு எழுத்தர்கள் .. .. .. | 517 |
| ஆவண எழுத்தர்கள் .. .. .. | 47 |
| அரசு அடிப்படை ஊழியர்கள் .. .. .. | 1,086 |



(iii) பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளர்கள்.—இம் மாநிலம், சென்னை, கடலூர், தஞ்சாவூர், மதுரை, திருநெல் வேலி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் என ஏழு வட்டாரங்களா கப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் 5 முதல் 6 பதிவு மாவட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பத்திரப் பதிவு அலுவலக ஆய்வாளர் பொறுப்புடையவராவர். ஆய்வாளர் தனது வட்டாரத்திலுள்ள சார் பதிவாளர் அலுவலகங்கள், சீட்டு நிதிக் கம்பெனிகள், சங்கங்கள் ஆகிய வற்றை ஆய்வு செய்தல், குறைத்து மதிப்பிடுதல், தவறாக வகைப்பாடு செய்தல் போன்ற முறைகேடுகள் தொடர்பான புகார்கள் குறித்து விசாரணை நடத்துதல் ஆகிய பணிகளை கவனிக்கிறார்.

(iv) மாவட்டப் பதிவாளர்கள்.—38 பத்திரப் பதிவு மாவட் டங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் மாவட்டப் பதிவாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும். மாவட்டப் பதிவாளர்கள் தங்களது மாவட்டங்களிலுள்ள சார் பத்திரப் பதிவு அலு வலகங்களை குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறையும், திடீ ரென்றும் சோதனையிடுகிறார்கள். சொத்து மதிப்பைக் குறைத்து காட்டித் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் குறித்து விசாரணை செய்து அவை குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கின்றனர். மேலும் அவர்கள் ஆவணங்களைப் பதிவு செய்ய மறுத்து பிறப்பிக்கும் ஆவணங்களுக்கெதிராகச் செய்து கொள்ளப்படும் மேல்முறையீடுகள் குறித்தும் விசா ரணை செய்கிறார்கள். அவர்கள் சார் பதிவாளர் அலுவல கங்களில் முறைகேடுகள் ஏதும் நடந்தால் அது குறித்தும் விசாரணை செய்கிறார்கள். நிறுவனங்கள், சங்கங்கள், பிறப்பு இறப்பு, திருமணங்கள் ஆகியவற்றின் பதிவாளர்களும் இவர் களே, மேலும், இவர்கள் பல்வேறு திருமணப் பதிவுச் சட்டத் தின் கீழ் பதிவாளர்களாவார்கள்.

(v) சார் பதிவாளர் அலுவலகங்கள்.—இம்மாநிலத்தில் 458 சார் பதிவாளர்கள் அலுவலகங்கள் உள்ளன. அவை மாவட்டப் பதிவாளர்கள் 38 பேரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. சார் பதிவாளர் அலுவலகத் தலைவராகிய

சார் பதிவாளர் பத்திரப் பதிவுச் சட்டம், திருமணப்
பதிவுச் சட்டங்கள், சீட்டு நிதிகள் சட்டம் முத்திரைத்தாள்
சட்டத்தின் குறிப்பிடப்பட்ட சில பிரிவுகள் ஆகியவற்றின்கீழ்
சட்டப்படிக்கான பணிகளை நிறைவேற்றுகிறார்.

தற்போது ஒரு முன்னோடி திட்டமாக நீதித் துறை
சாராத முத்திரைத் தாள்கள் 25 சார் பதிவாளர் அலுவலகங்
கள் மூலமாக விற்கப்படுகின்றன. இத்திட்டம் திருப்திகர
மாகச் செயல்பட்டு வருவதால் சார் பதிவாளர் அலுவல
கங்கள் மூலமாக விற்கும் வசதியை மேலும் 50 இடங்களுக்கு
நீட்டிக்கப்பட்டுள்ளது.

இவைதவிர, 1979 லிருந்து நீதி மன்றக்கட்டணை முத்
திரைத்தாள்களும் சார் பதிவாளர் அலுவலகங்களால் விற்கப்
படுகின்றன.

(vi) தணிக்கைப் பிரிவு.—இந்திய முத்திரைத்தாள் சட்டத்
தின் 47எ பிரிவின்கீழ் ஆவணங்களை மதிப்பிடுவதில்
சிறப்பான கவனம் செலுத்துவதுடன், சார் பதிவாளர்
அலுவலகங்கள், மாவட்டப் பத்திரப் பதிவு அலுவலகங்கள்
ஆகியவற்றின் கணக்குகளைத் தணிக்கை செய்ய சம்பந்தப்
பட்ட பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளரின் மேற்
பார்வையின்கீழ் தணிக்கைச் சார் பதிவாளர்கள் 22 பேர்
உள்ளனர்.

(vii) சீட்டு நிதிகள்—நிர்வாகம்—சார் பதிவாளர் பதவி
களுக்கு ஒப்புதல் அளித்தல்.—சீட்டு நிதிகளின் சட்டத்தையும்
சங்கங்கள் பதிவுச் சட்டத்தையும் நிர்வகிப்பதில் மாவட்டப்
பதிவாளர்களுக்கு உதவி புரிய, 1980–81 ஆம் ஆண்டில் 38
சார் பதிவாளர் பதவிகளுக்கு ஒப்புதல் அளிக்கக் கருதப்
பட்டுள்ளது.

3. கூடுதல் அலுவலகங்களுக்கு ஒப்புதல் அளித்தல்.—மாவட்
டப் பதிவாளர்களும், சார் பதிவாளர் அலுவலகங்களும் பணி
யைத் திறம்படச் செய்வதற்கு, படிப்படியான முறையில்



பத்திரப் பதிவு மாவட்டங்கள், சார் பதிவாளர் அலுவலகங்
கள் ஆகியவற்றின் எண்ணிக்கையை அதிகரிப்பது அவசியம்
எனக் கருதப்பட்டுள்ளது. அதற்கிணங்க, திருச்சிராப்பள்ளி
பத்திரப் பதிவு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க அரசு
ஒப்புதல் அளித்து கரூரைத் தலைமையிடமாகக்
கொண்டு புதிய மாவட்டம் ஒன்று 1—9—1979 அன்று
ஏற்படுத்தப்பட்டது. 1979–80 ஆம் ஆண்டில் புதியதாக
நான்கு சார் பதிவாளர் அலுவலகங்களும் ஏற்படுத்தப்
பட்டன. 1980–81 ஆம் ஆண்டில் ஈரோடு மற்றும் செங்கல்பட்டு
ஆகிய இரு பத்திரப் பதிவு மாவட்டங்களை இரண்டாகப்பிரிப்
பதன் மூலம்,மேலும் இரண்டு பத்திரப் பதிவு மாவட்டங்களையும்,
மேலும் கீழ்க்கண்ட 15 இடங்களில் சார் பதிவாளர் அலுவலகங்
களையும் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது:—

(1) பேட்டை; (2) விக்கிரமசிங்கபுரம்; (3) பேரம்பாக்கம்:
(4) வாசுதேவநல்லூர்; (5) சூலகிரி; (6) திங்களூர்; (7) மேட்டூர்;
(8) ஒடுக்கத்தூர்; (9) திருச்சிற்றலம்பலம்; (10) வடச்சேரி; (11)
அவலூர்பேட்டை; (12) திருவேங்கடம். (13) கடலாடி;
(14) உறையூர்; (15) தெப்பகுளம்.

4. கூடுதல் பணியாளர்களுக்கு ஒப்புதல் அளித்தல்.—பத்திரப்
பதிவு அலுவலகங்களில் அதிகரித்து வரும் பணியைப் புரிவதற்கு
79–80 ஆம் ஆண்டில் கூடுதலாக 25 இளநிலை உதவியாள
தவிகளுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1980–81 ஆம்
ஆண்டில் கூடுதலாக 30 இளநிலை உதவியாளர் பதவிகளுக்கு
ஒப்புதல் அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

இதோடு பத்திரப் பதிவு அலுவலகங்களைப் பாதுகாக்க
1980–81 ஆம் ஆண்டில் இரவு நேர காவல்காரர் பதவி 75–க்கு
ஒப்புதல் அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

5. பத்திரப் பதிவு அலுவலகங்களுக்கு மேம்பாடு.

(i) கட்டிடங்களைக் கட்டுதல்.—1979–80 ஆம் ஆண்டில்,
திருத்துறைப்பூண்டி, திட்டகுடி ஆகிய இடங்களிலுள்ள அலுவல
கக் கட்டிடங்கள் இரண்டை இடித்துவிட்டு மீண்டும் கட்டுவதற்கு
அரசு ஒப்புதல்அளித்துள்ளது. ரூ.5 இலட்சம் செலவில் 1979–80 ம்

ஆண்டில், பின் வரும் ஊர்களிலுள்ள அலுவலகங்களுக்குப்
புதுக் கட்டிடங்களைக் கட்டுவதற்கும் அரசு ஒப்புதல் அளித்
துள்ளது.

(1) மணலூர்ப்பேட்டை; (2) கூத்தாநல்லூர்; (3) வட
மதுரை; (4) கங்கவல்லி; (5)குள்ளஞ்சாவடி.

மேலும் ரூ.75,000 செலவில் 1980-81 ஆம் ஆண்டில்,
சார் பதிவாளர் அலுவலகம் ஒன்றைக் கட்டக் கருதப்பட்டுள்ளது.

(ii) ஆவண அறை கட்டுதல்.—1980-81 ஆம் ஆண்டில்,
ரூ.6 இலட்சம் செலவில் பல அலுவலங்களில் ஆவண அறை
களைக் கட்டுவதற்கும், தற்போதுள்ள ஆவண அறைகளை
விஸ்தரிப்பதற்கும் கருதப்பட்டுள்ளது.

(iii) அடிப்படை வசதிகள்.— 1980-81-ஆம் ஆண்டில்
நீரடிக் கழிப்பிடங்களுக்கு வகை செய்வதற்கும், சார் பதி
வாளர் அலுவலகங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்து
வதற்கும் ரூ. 1 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கக் கருதப்
பட்டு உள்ளது.

(iv) அலமாரிகளை வாங்க ஒப்புதல் அளித்தல்.—படிப்படி
யாக நிறைவேற்றப்படும் திட்டத்தின் கீழ் பத்திரப்பதிவு அலு
வலகங்களில் நிலையான ஆவணங்களை வைப்பதற்கு எஃகு
அலமாரிகளை வாங்குவதற்கும், சார் பதிவாளர் அலுவலகங்
களில் பத்திரங்களைப் பதிவு செய்யவரும் பொதுமக்களின்
வசதிக்காக புதிய மேசை நாற்காலிகளை வாங்குவதற்கும் ஒப்பு
தல் அளிக்க முடிவு செய்யப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில்
பல்வேறு இடங்களில் உள்ள சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு
ஏற்கெனவே 100 எஃகு அலமாரிகள் வழங்கப்பட்டுள்ளன.
1980-81 ஆம் ஆண்டில் மேலும் 200 எஃகு அலமாரிகளை
வாங்குவதற்கு ஒப்புதல் அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

(v) தொலைபேசி வசதிகள்.—1980-81 ஆம் ஆண்டில்
16 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களுக்கும் பத்திரப்பதிவு
ஆய்வாளர் அலுவலகம் ஒன்றிற்கும் தொலைபேசி வசதிகளுக்கு



வகை செய்யவும், 6 பத்திரப்பதிவு ஆய்வாளர் அலுவலகங்
களுக்குத் தொலைபேசித் தொடர்புகளை நீட்டிக்கவும் கருதப்
பட்டுள்ளது.

6. நகல் எழுதுவோர்.— நகல் எழுதுவோர்க்கு உரிமம்
வழங்கும் முறை 1—7—1975-ஆம் நாளிலிருந்து செயலுக்கு
வந்தது. 1979 ஆகஸ்ட் வரை 7,081 உரிமங்கள் வழங்கப்பட்டன.
1979 செப்டம்பரில் புதிய தேர்வு ஒன்று நடத்தப்பட்டு,
கூடுதலாக 5,770 பேர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன,

7. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம்.—
பத்திரப் பதிவுத்துறைத் தலைவர் சீட்டு நிதிகளின் இயக்குநர்
ஆவார். பத்திரப் பதிவு அலுவலகங்களின் ஆய்வாளர் பதவித்
தரத்தில் சீட்டு நிதிகளின் கூடுதல் இயக்குநர் ஒருவரும்,
மாவட்டப் பதிவாளர் பதவித் தரத்தில் ஆய்வு அதிகாரி
ஒருவரும் உள்ளனர். ஒன்றுக்கு மேற்பட்ட பதிவு மாவட்டங்
களின் அதிகார வரம்புடைய 21 சீட்டு நிதிப் பதிவாளர்கள்
(புலனாய்வு—வழக்கு தொடர்தல்), சீட்டு நிதிகள் ஆய்வு
அதிகாரி அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர். அனுமதி
பெறாத சீட்டுகளை நடத்துதல், அனுமதி பெற்று நடத்தப்படும்
சீட்டுகளில் நடைபெறும் மோசடி ஆகியவற்றைக் கண்டறிவதும்,
சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் நீதிமன்றங்களில் புகார்களை
தாக்கல் செய்வதில் சீட்டுப் பதிவாளர்களுக்கு உதவி புரிவதும்
அவர்களது முக்கியப் பணியாகும்.

சீட்டுகளைப்பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(அ) 1979ஆம் ஆண்டு டிசம்பர் வரை பதிவு செய்யப்பட்ட
சீட்டுகளின் எண்ணிக்கை—10,720.

(இ) 1979 ஆம் ஆண்டு இறுதிவரை செயல்பட்டுவந்த
சீட்டுகளின் எண்ணிக்கை—16,786.

(உ) 1979ஆம் ஆண்டு இறுதியில் செயல்பட்ட மொத்
தச் சீட்டுத்தொகை—ரூபாய் 10,56,33,702.

இணைப்பு.

(எ) அவ்வாண்டு இறுதியில் சீட்டுப்பதிவாளர்கள் வைத்திருந்த பிணையத் தொகை:—

(1) ஏனைய முறைகள்—ரூபாய் 7,23,67,724.50

(2) ரொக்கப் பிணையம்—ரூ 3,26,43,992.50

(ஒ) கண்டுபிடிக்கப்பட்டு வழக்கு தொடரப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை— 4,395.

8. துறையின் வருமானம்.—பத்திரப் பதிவிற்காகத் தாக்கல் செய்யப்படும் பத்திரங்கள் மீது விதிக்கத்தக்க பதிவுக் கட்டணங்கள், பத்திரங்களைத் தேடுவதற்கான கட்டணங்கள், வில்லங்கச் சான்றிதழ்கள் முதலியவற்றை வழங்குவதற்கான கட்டணங்கள் ஆகியவை பத்திரப் பதிவுத் துறையின் முக்கிய வருமானங்களாகும்.

1978–79 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த பத்திரங்களின் எண்ணிக்கை 9,80,841. 1979–80 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் எண்ணிக்கை 1,026,706 ஆகும். தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் கீழ் சீட்டுகளைப் பதிவு செய்வதன் மூலமும் வருமானம் கிட்டுகிறது.

9. வரவு–செலவு.—1975–76 முதல் 1979–80 வரை துறையின் வரவு-செலவு குறித்த விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| ஆண்டு. (1) | வரவு. (2) | செலவு. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1975–76 .. .. .. | 383·12 | 158·16 |
| 1976–77 .. .. .. | 425·27 | 198·06 |
| 1977–78 .. .. .. | 359·26 | 213·85 |
| 1978–79 .. .. .. | 537·84 | 234·40 |
| 1979–80 .. .. .. | 568·27 | 285·00 |



## இணைப்பு III

[......1064-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண் 10.

## பால் வழங்குத் திட்டம்.

கொள்கை விளக்கம்.

1. தமிழ்நாடு இந்த தேசத்தில் மிகவும் பண்பட்ட மாநிலங்களில் ஒன்றாக திகழ்கின்றது. மொத்த மக்கள் தொகையில் 30 சதவீதம் பேர் நகர்ப்புறத்தில் வாழ்கிறார்கள். தமிழ்நாட்டில் 44 நகரங்கள் 50,000 பேருக்கு மேல் மக்கட் தொகையைக் கொண்டுள்ளது (1971 மக்கட்தொகைக் கணக்குப்படி). இம் மாநிலத்தில் 1,57,350 கிராமங்கள் உள்ளன (1971 மக்கட் தொகை கணக்குப்படி). மாநிலத்தின் மொத்த மக்கட் தொகையில் 70 சதவீதம் பேர் இக்கிராமங்களில் வசிக்கிறார்கள். இம் மாநிலம் விவசாயத்தை முக்கிய அடிப்படையாகக் கொண்டுள்ளது. சராசரியாக ஒரு கிராமத்தில் 230 பால் கறவைகள் இருக்கின்றன. பயிரிடுவதற்குரிய ஒரு ஹெக்டேர் நிலத்தில் 0·7 சதவீதம் பசுக்கள் மேயக்கூடியதாக உள்ளது. மாநிலத்தில் மொத்தமுள்ள 13 மில்லியன் கால்நடைகளில் 3·76 மில்லியன் பால் கறவையினங்களாகும். இதில் 2·52 மில்லியன் கால்நடைகள் முக்கியமாக விவரிக்க இயலாமல் இருக்கின்றன. மற்றவை 1.24 மில்லியன் எருமைகளாகும். நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 300 கிராம் பால் தேவைப்படுகிறது. நமது நாட்டில் கறவை இனப்பசு நாளொன்றுக்கு சராசரி 1·15 கிலோ கிராம் பால் அளிக்கிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தேசிய அளவில் சராசரியாக பசுக்களைவிட இரட்டிப்பாக கறவையின எருமைகளிலிருந்து 2·34 கிலோகிராம் அளவிற்குப் பால் கிடைக்கிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. பால் உற்பத்தி ஒரு துணைத் தொழிலாகக் கருதப்படுகிறது. பயிர் அறுவடை செய்யும் நிலங்களில் விளையும் ஒரு சிலவற்றையும், நீர்ப்பாசனக் கரைகளில் விளையும் புற்களையும் கால்நடைகளின் தீவனமாகக் கொள்ளப்படுகிறது. மக்காச்சோளம், சோளம் மற்றும் ஓட்ச் போன்ற தீவனங்களை முன்னேற்றமடைந்த குடியானவர்களால் மட்டும் பயிரிடப்படுகின்றன. சராசரியாக தினசரி பால் உற்பத்தி 3 மில்லியன் லிட்டர்

களாக மதிப்பிடப்படுகிறது. 
நிறுவனங்கள் மூலம் கையாளப்படுகிறது. இதில் 10 முதல் 12 சதவீதம்
சதவீதம் மக்கட்தொகை பெருக்கத்திற்கேற்ப பால் உற்பத்தி
யைப் பெருக்க இயலவில்லை. ஆண்டொன்றுக்கு 2
திட்டத்திற்காக கணிசமான முதலீடு செய்யாவிடில் தற்போது
நபர் ஒன்றுக்கு தினசரி உபயோகிக்கும் 63 கிராம் பால் அளவு
அடுத்து 7 ஆண்டுகளுக்குப் பின் 44 கிராம் அளவிற்கு படிப்படி
யாக வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. கேந்திர கிராமத் திட்டம், தீவிர கால்நடை வளர்ப்புத்
திட்டம் ஆகியவை மூலம் ஒழுங்குபடுத்தப்பட்டு பால் உற்பத்தி
யைப் பெருக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. பால் உற்பத்தி,
கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல்
ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு சமீப காலத்தில் மிகவும் தீவிரப்
படுத்தப்பட்டுள்ளது. 1958 ஆம் ஆண்டு இம்மாநிலத்தில் பால்
வளத்துறை ஆரம்பிக்கப்பட்டது. 1963 ஆம் ஆண்டு முதன்
முதலில் நவீன பால் பதப்படுத்தும் தொழிற்சாலை மாதவரத்தில்
நிறுவப்பட்டது. 1967 ஆம் ஆண்டில் மதுரையில் பால்பண்ணை
ஆரம்பிக்கப்பட்டது. பல குளிரூட்டும் நிலையங்கள் நிறுவப்
பட்டு மேற்கண்ட பால்பண்ணைகளுடன் இணைக்கப்பட்டன.
1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு பால்வள நிறுவனம் நிறுவப்பட்டது.
பால்பண்ணை தொழில் கிராமங்களிலுள்ளவர்களுக்கு வேலை
வாய்ப்பு அளிப்பதோடு மட்டுமின்றி சொற்ப நில உழவர்களுக்கு
வருவாயும் மக்களின் உணவில் சத்துக்குறைவை ஈடுசெயவதற்கும்
வகை செய்கிறது.

3. <u>பால் பெருக்குத் துறையின் செயல்நிலை</u>.—(3·1) 1972 ஆம்
ஆண்டு முதல் தமிழ்நாடு பால்வள நிறுவனம் நிறுவப்பட்டதைத்
தொடர்ந்து பால் வளத்துறையில் நிர்வகிக்கப்பட்டு வந்த எல்லா
வர்த்தக நடவடிக்கைகளும் பால்வள நிறுவனத்திற்கு மாற்றப்
பட்டன.

(3·2) பால் பெருக்குத் துறையின் முக்கிய செயல் பால்
கூட்டுறவுகளைச் சார்ந்து இருக்கிறது. சங்கங்களை ஆரம்
பிப்பதிலும், பதிவு செய்வதிலும், கண்காணித்தலிலும் கவனம்
கொள்கிறது. இதனால் சாதாரண மனிதனுக்கு ஒரு உபரிவேலை



கிடைக்க வகை செய்கிறது. இம்மாநிலத்தில் தஞ்சாவூர்,
திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்
வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பால்பண்ணை
வளர்ச்சி நடவடிக்கைகளையும் இத்துறை கவனித்து வருகிறது.
இம்மாவட்டங்கள் "பால் பெருக்குத் திட்டம் 1-ன் கீழ்"
அடங்கா. செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு,
சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி மற்றும்
மதுரை மாவட்டங்களில் பால்பண்ணை வளர்ச்சி நடவடிக்கை
களை தமிழ்நாடு பால்வள நிறுவனம் "பால் பெருக்குத் திட்டம்
1-ன்" கீழ் செயல்படுத்தி வருகிறது. நாளுக்குநாள் பால்பண்ணை
வளர்ச்சியின் வேகம் அதிகரிப்பதுடன் மக்களின் தினசரி வாழ்க்கை
யில் அது துணைபோவது கண்கூடாகத் தெரிகிறது. பால
பண்ணை வளர்ச்சித் துறையின் பால்பண்ணை அபிவிருத்தித்
திட்டமும், தமிழ்நாடு பால்வளநிறுவனமும் கிராமப்புற மக்களின்
வாழ்க்கைப் பொருளாதாரத்தை உயர்த்துவதில் மிகவும் உதவு
கிறது.

4. <u>தமிழ்நாடு பால் கூட்டுறவுகளின் பணி</u>.—(4.1). பால்
கூட்டுறவுகள் இம்மாநிலத்தில் பால்பண்ணையில் ஒழுங்குபடுத்தப்
பட்ட பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளன. பால் உற்பத்தியாளர்
களே கிராமிய கூட்டுறவுகளின் அங்கத்தினர்கள். பால் கூட்டுறவு
கள் பால் உற்பத்தியாளர்களுக்காக விநியோகிக்கப்பட்ட பாலுக்கு
ஒரு நல்ல விலையைக் கிடைக்கச் செய்து நடுத்தர மனிதர்கள்
(இடைத்தரகர்கள்) மற்றும் தனிப்பட்ட வியாபாரிகளின் சொந்த
ஆதிக்கத்தை தவிர்க்கவும் செய்கின்றன.

மேலும் கிராம கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள்
வேலையில்லாதவர்களுக்கும், போதிய வேலை கிடைக்காதவர்
களுக்கும் நல்ல வேலை வாய்ப்பினைக் கொடுக்கும்.

(4·2). கிராம மக்கள் பயன்பெறும் பொருட்டு கிராம பால்
கூட்டுறவுச் சங்கங்களை அடிப்படையாகக்கொண்டு இந்த தேசத்
தில் பால்பண்ணை வளர்ச்சிக்காக மத்திய அரசும், மாநில அரசும்
ஒரு புதிய பால்பெருக்குத் திட்டம் உட்பட பல திட்டங்களை
தீட்டி அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. பால்பண்ணை அபி
விருத்திக்காக பல வசதிகளை இத்திட்டம் நிறைவு செய்கிறது.

நாட்டில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக கலப்பின இன
விருத்தித் திட்டம் உறை விந்து கருவிகள் உபயோகித்து கால்
நடைகளின் வம்சாவழி தரத்தை மேம்படுத்தும் திட்டங்களையும்
அமுல் செய்கிறது.

5. <u>பால் கூட்டுறவுகள் ஆரம்பித்தல்.</u>—(5.1) தமிழ்நாட்டில்
பால் அபிவிருத்தித் திட்டத்திற்காக அரசு கொள்கை ஒன்றை
வகுத்துள்ளது. இனிமேல் அமைக்கப்பட இருக்கும் பால் கூட்டுற
வுச் சங்கங்கள் ''ஆனந்த்'' பாணியில் (அதாவது கிராமத்தில்
பால் உற்பத்தியாளர்கள் சங்கம், மாவட்ட அளவில் உற்பத்தி
யாளர்கள் சங்கங்களின் ஒன்றியமும், மாநில அளவில் உற்பத்தி
யாளர்கள் ஒன்றியங்களின் இணையம் அமைப்பதாகும்) இருக்க
வேண்டுமென அரசு தீர்மானித்துள்ளது. தற்போது நடை
முறையிலுள்ள சங்கங்களையும் ஒன்றியங்களையும் உற்பத்தி
யாளர் சங்கங்கள் அல்லது ஒன்றியங்களாக மாற்றுவதையும
முடிந்த அளவில் வழங்கல் ஒன்றியங்களை நுகர்வோர் சங்கங்க
ளாக மாற்றுவதையும் அரசு தன் கொள்கையாகக் கொண்டுள்ளது.
மாநில அளவில் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் இணையம்
அமைக்கப்பட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தமிழ்நாடு
பால்வள நிறுவன நடவடிக்கைகளை இது மேற்கொள்ளும்.

(5·2) உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தியாளா
களுக்கு பாதுகாப்பளித்தலிலும், உற்பத்திப் பொருட்களுக்கு
நியாயமான உரியவிலையை அளிப்பதிலும் முக்கியமான கொள்கை
யாகக் கொண்டிருக்க வேண்டும். கூட்டுறவுகள் தற்போதுள்ளபடி
நுகர்வோர்கள் நலனை மட்டும் மேற்கொள்ளாமல் பால்
உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுடைய நலனுக்கும்
இடையே ஒரு சமநிலையைக் கொள்ளவேண்டும்.

(5·3) புதிய பால் கூட்டுறவு சங்கங்கள் நிறுவுவது சம்பந்த
மாக அரசு முடிவு எடுத்ததினால் வழக்கமான சங்கங்கள் புதிதாக
ஆரம்பிப்பது நிறுத்தப்பட்டுள்ளது. இதுவரை 2,704
உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
1979–80ஆம் ஆண்டு 618 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு
சங்கங்கள் புதியதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.



(5-4) வழக்கமான தொடக்கச் சங்கங்கள் அனைத்தையும்
உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றி அமைக்கத்
தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி
143 சங்கங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. 1980–81ஆம்
ஆண்டில் 617 வழக்கமான சங்கங்களை மாற்றியமைக்கவும்
சுமார் 500 'ஆனந்த்' பாணி சங்கங்களை புதிதாக அமைக்
வும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. செயல்படாத நிலையில் உள்ள
117 சங்கங்கள் 1979–80ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.
1980–81ஆம் ஆண்டில் சுமார் 175 சங்கங்கள் புதுப்பிக்கப்படும்.
பால் பொருட்கள் உற்பத்தி, கொள்முதல், பதப்படுத்துதல்,
விற்பனை செய்தல் ஆகியவற்றை ஒருங்கிணைக்க இயலும் வகை
யில் அத்தகைய தொடக்க சங்கங்களை மாவட்ட அளவில்
ஒன்றியங்களாக மாற்றுவதே நீண்ட காலத் திட்டத்தின் நோக்க
மாகும். ஏற்கனவே ஆறு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்
செங்கற்பட்டு, சேலம், பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி மற்றும்
மதுரை மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன ''பால்
பெருக்குத் திட்டம் 2'' அமுல்படுத்தும் திட்டத்தில் மாநிலத்தில்
மொத்தம் 9 பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் அமைக்கப்படும்.

(5-5) பால் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை (வழக்கமான சங்கங்கள், ஆனந்த் திருந்தியமுறை சங்கங்கள் ஆகிய இரு வகை) மாவட்ட வாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| துணைப்பதிவாளர் (பால்பதம்) வட்டம். | மாவட்டம். | செயல்படும் சங்கங்கள். திருத்தவகை ஆனந்த் பாணி. | வழக்கமான சங்கங்கள். | செயல்படாத நிலையிலுள்ள சங்கங்கள். | கலைக்கப்பட்ட சங்கங்கள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| காஞ்சிபுரம் .. | சென்னை .. .. | 1 | 4 | 3 | 4 | 12 |
| | செங்கல்பட்டு .. | 239 | 115 | 180 | 329 | 863 |
| வேலூர் .. .. | வடஆற்காடு .. | 338 | 107 | 100 | 42 | 587 |
| தருமபுரி .. .. | தருமபுரி .. .. | 213 | 6 | 13 | .. | 232 |
| ஈரோடு .. .. | கோயம்புத்தூர் .. | 184 | 33 | 85 | 34 | 336 |
| | பெரியார் .. .. | 270 | 21 | 14 | 73 | 378 |
| | நீலகிரி .. .. | 77 | 19 | 10 | 2 | 108 |
| சேலம் .. .. | சேலம் .. .. | 434 | 13 | 71 | 67 | 585 |
| விருதுநகர் .. | ராமநாதபுரம் .. | 207 | 92 | 117 | 49 | 465 |
| திருநெல்வேலி .. | திருநெல்வேலி .. | 212 | 77 | 94 | 30 | 413 |
| | கன்னியாகுமரி .. | 17 | 42 | 3 | 3 | 65 |
| மதுரை .. .. | மதுரை .. .. | 280 | 201 | 358 | 94 | 933 |
| திருச்சிராப்பள்ளி .. | திருச்சிராப்பள்ளி .. | 81 | 87 | 117 | 78 | 363 |
| | தஞ்சாவூர் .. .. | 27 | 60 | 96 | 121 | 304 |
| | புதுக்கோட்டை .. | 2 | 19 | 31 | 26 | 78 |
| கடலூர் .. .. | தென்னாற்காடு .. | 122 | 58 | 235 | 70 | 485 |
| | | 2,704 | 954 | 1,527 | 1,022 | 6,207 |

(5-6) பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள், ஒன்றியங்கள் ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

**தொடக்க கூட்டுறவு சங்கங்கள்—**

| | |
|---|---|
| 1. இம்மாநிலத்திலுள்ள செயல்படும் பால் வழங்கும் கூட்டுறவுகள் எண்ணிக்கை. | 3,658 |
| 2. பால் வழங்கும் கூட்டுறவுகளில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை (செயல்படும் சங்கங்களுக்கு மட்டும்). | 7,77,741 |
| 3. சங்கங்களில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் (செயல்படும் சங்கங்களுக்கு மட்டும்). | 1,67,26,766 |

**கூட்டுறவு பால் ஒன்றியங்கள்—**

| | |
|---|---|
| 1. பால் வழங்கு ஒன்றியங்களின் எண்ணிக்கை. | |
| 2. பால் உற்பத்தியாளர்களின் ஒன்றியங்கள். | 17 |
| 3. பால் வழங்கு கூட்டுறவு ஒன்றியங்களில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை. | 6 |
| | 18,088 |
| 4. ஒன்றியங்களின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம். | ரூ. 38·16 இலட்சம் |

**தினசரி உற்பத்தியும் விற்பனையும்—**

| | (லிட்டர் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. நாள் ஒன்றுக்கு சராசரி உற்பத்தி (சங்கங்கள், ஒன்றியங்கள்). | 5·70 |
| 2. நாள் ஒன்றுக்கு சராசரி உள்ளூர் விற்பனை (சங்கங்கள், ஒன்றியங்கள்). | 3·02 |
| 3. தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு நாள் ஒன்று சராசரி விற்பனை. | 2·68 |



6. __பால்பண்ணைக் குடியிருப்பு.__—மாதவரத்திலுள்ள பால் பண்ணைக் குடியிருப்பு 840 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. கால் நடை மருத்துவம், இனவிருத்தி வசதிகள் நியாய விலையில் கால் நடைத்தீவனம் வழங்குதல், பால் வற்றிய மாடுகளைப் பராமரித்தல் மற்றும் அவர்களுக்கு நிதி வசதியளித்தல் போன்ற வசதிகளை அளிப்பதுடன் பால் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான கால் நடைகளுக்கு இடவசதியும் இவ்விடத்தில் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. அரசுப் பால் பண்ணை, கால்நடைக் குடியிருப்பு மற்றும் தீவனப் பண்ணை நிர்வாகம் 1-7-79 முதல் கால்நடை பராமரிப்புத் துறைக்கு மாற்றப்பட்டன.

7. __திட்ட மதிப்பீடுகள்—(7.1). தமிழ்நாட்டில் பால் கொள் முதல் குழு ஏறுபடுத்துவது.__—'ஆனந்த்' பாணியில் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அதிக அளவில் உருவாக்க அரசு எடுத்த தீர்மானத்தைச் செயல்படுத்த 1977-78 ஆம் ஆண்டில் மேற்கு ராமநாதபுரம் மாவட்டத்தில் அருப்புக் கோட்டையில் ஒன்றும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கரூரில் மற்றொன்றுமாக இரண்டு 'பால் கொள் முதல் குழுக்கள்' நிறுவப்பட்டுள்ளன. இவைகள் 1980-81 ஆம் ஆண்டிலும் ஆனந்த் பாணி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் பலவற்றை ஆரம்பிக்கத் தொடர்ந்து செயல்படும்.

அருப்புக்கோட்டையில் உள்ள கொள்முதல் குழு 52 கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்களை ஆரம்பித்துள்ளது. நாள் ஒன்றுக்கு அவைகள் சராசரி 4,000 லிட்டர் பால் வழங்கிக் கொண்டிருக்கின்றன.

கரூரில் உள்ள குழு 83 உற்பத்தியாளர்கள் சங்கங்களை இதுவரை ஆரம்பித்துள்ளது. அவற்றில் 37 சங்கங்கள் திருச்சி, திருவரங்கம் கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியத்திற்கு நாள் ஒன்றுக்கு சராசரியாக 3,200லிட்டர் பால் வழங்கிக் கொண்டிருக்கின்றன.

பால் பெருக்குத் திட்டம் இல்லாத மாவட்டங்களில் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் ஆரம்பிப்பதற்காக மேலும் ஐந்து பால் கொள்முதல் குழுக்கள் அமைக்க அரசு அனுமதித்துள்ளது.

அவைகள் (அ) கிழக்கு ராமநாதபுரம், (ஆ) திருநெல்வேலி (இ) கன்னியாகுமரி, (ஈ) புதுக்கோட்டை மற்றும் (உ) தஞ்சாவூர் மாவட்டங்களில் செயல்படும்.

(7.2) நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைத்தல்.—பால் கூட்டுறவுகளில் சங்க உறுப்பினர்களின் இருப்பிடத்தி லேயே கால்நடைகளுக்கு மருத்துவ உதவி கிடைக்கும் வகையில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் மூன்று நடமாடும் கால்நடை மருத்துவ நிலை யங்கள் 1977–78 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன. ஒவ்வொரு நிலையமும் ஒரு கால்நடை மருத்துவரோடு செயல்படுகிறது. அவருக்கு ஒரு ஊர்தியும் கொடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவ உதவி அளிப்பதோடு மட்டுமின்றி, சங்க உறுப் பினர்களுக்கு கால்நடைகளை ஆரோக்கியத்துடன் வைத்திருக்கவும், அறிவியல் முறைப்படி இனவிருத்தி செய்தல் பற்றியும், கன்றுகள் வளர்ப்பு, சத்துணவு அளித்தல் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையின் நவீன செயல்முறைகள் போன்றவற்றையும் கற்பிக் கிறார்கள். மாட்டுத் தீவனம் உற்பத்தி செய்தல் பற்றியும் பயிற்று விக்கிறார்கள்.

கிழக்கு ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு நடமாடும் கால் நடை மருத்துவ நிலையம் அமைக்க 1979–80 ஆம் ஆண்டில் அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த நான்கு நடமாடும் கால் நடை மருத்துவ நிலையங்களும் 1980–81 ஆம் ஆண்டிலும் மருத்துவ உதவியளிக்க தொடர்ந்து செயல்படும்.

1980–81 ஆம் ஆண்டில் மேலும் 4 நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(7.3). பால் கூட்டுறவுகளுக்கான நிதி உதவி.— 1979–80 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியங் களின் வளர்ச்சிக்காகவும் விற்பனை வசதிகளுக்காவும் 50 சத வீதம் கடனாகவும், 50 சதவீதம் பங்குத் தொகை உதவியாகவும் நிதி வசதி அளிக்கப்பட்டது.



| வரிசை எண்ணும் ஒன்றியத்தின் பெயரும். | பங்குத் தொகை. | கடன். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1 கன்னியாகுமரி கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியம். | 3.50 | 3·50 |
| 2 தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தி விற்பனைக் கூட்டமைப்பு. | 3·50 | 3·50 |
| 3 திருச்சி-திருவரங்கம் மத்திய கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியம். | 2·50 | 2·50 |
| மொத்தம் .. | 9·50 | 9·50 |

1979–80 ஆம் ஆண்டில் ரூ. 1·00 இலட்சம் அளவில் 25 பால் வழங்கு கூட்டுறவு சங்கங்களுக்கு பங்கு மூலதன உதவி அளிக்கப் பட்டது.

மேற்சொன்ன திட்டங்களுக்கு மேல், கீழ்க்காணும் திட்டங் களும் பால்வளத் துறையில் செயல்படுத்தப்படுகின்றன.

(1) பால் வழங்கு சங்கங்களுக்கு பால் குவளைகள், பால் கருவிகள், குளிர்ப்பதனங்கள், போக்குவரத்துக்கான வண்டி கள், ஆய்வுக் கூடம் மற்றும் கிடங்குகள் கட்டக் கடனுதவி.

(2) நிர்வாகம் மற்றும் தொழிற்நுட்பப் பணியாளருக்காக வும், தீவன பண்ணை பராமரிப்புக்காகவும் கூட்டுறவுகளுக்கு மானிய உதவி.

மேலும் சங்கங்களின் உறுப்பினர்கள் நல்ல தரமான உயர் ரக கறவை இனங்கள் வாங்கவும், அவர்களின் பொருளாதார நிலைமையை உயர்த்தவும் ''சிறு விவசாயிகள் வளர்ச்சித் திட்டம்'',

'' ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம்'', மற்றும் இதர நிதி உதவும் நிறுவனங்கள் மூலமும் நிதி உதவி கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 1980–81 ஆம் ஆண்டில் பால் கூட்டுறவு விவசாய உறுப்பினர்கள் மேற்கண்ட நிறுவனங்கள் வாயிலாக ரூ. 3·86 கோடி அளவிற்கு கடன் வழங்க ஏற்பாடு உள்ளது.



(7·4) (அ) திட்ட ஒதுக்கீடு.—1978–79-க்கான திட்டச் செலவு, 1979–80-க்கான நிதி ஒதுக்கீடு, செலவு, 1980–81-க்கான ஒதுக்கீடு பற்றிய விவரம் பின்வருமாறு.

**கோரிக்கை எண். 10.**

| அம்சம். | 1978–79 கணக்குகள். | 1979–80 திருத்திய மதிப்பீடு. | 1979–80 கணக்குகள். | 1980–81 வரவு செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | |
| 1 பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் வராத மாவட்டங்களில் பால் கொள்முதல் குழுக்கள் அமைப்பது. | 67 | 13,48 | 7,44 | 5,81 |
| 2 நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்கள் அமைப்பது. | 67 | .. | .. | 4,94 |
| 3 அரசுப் பண்ணைக்கு சாதனங்கள் வாங்குதல். | 11 | .. | .. | .. |
| 4 பால் பண்ணைக் குடியிருப்பில் உள்ள ஆய்வுக் கூடத்திற்கு. | 14 | | | |
| 5 பால் வழங்கு கூட்டுறவுகளுக்கு நிதி உதவிகள்.— | | | | |

| அம்சம். | 1978-79 கணக்குகள். | 1979-80 திருத்திய மதிப்பீடு. | 1979-80 கணக்குகள். | 1980-81 வரவு செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (1) நிர்வாகம் மற்றும் தொழில் நுட்பப் பணியாளர்கள். | 62 | 75 | 38 | 7.5 |
| (2) தீவனப் பண்ணைப் பராமரிப்பு .. | 10 | 10 | .. | 10 |
| (3) பால் சோதனைக் கருவிகள் ரசாயனங்கள், குவளைகள் முதலியன வழங்க. | .. | 2,10 | .. | 1 |
| மொத்தம் .. | 2,31 | 16,50 | 7,89 | 11,61 |
| **(7.4) (ஆ) கோரிக்கை எண் 55-ன் கீழ் திட்டப்பணிகள்.—** | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | |
| 1 பால் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு நிதி உதவி முதலீடு. | 3,10 | 10,50 | 10,50 | 1 |
| 2 மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தின் பால் பண்ணை வளர்ச்சிக்காக தமிழ்நாடு நிறுவனத்தின் பங்கு மூலதனத்திற்கு தொகை அளித்தல். | 21,43 | 30,00 | 29,67 | 30,00 |
| 3 தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு நிதி உதவி முதலீடு. | .. | 59 | 59 | 15,01 |
| 4 மேற்கு மலைத் தொடர் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கொடைக்கானலில் பாலாடை வெண்ணெய் தயாரிப்பு தொழிற்சாலை அமைக்க கொடைக்கானல் பால் வழங்கு ஒன்றியத்திற்கு பங்கு மூலதன உதவி. | 3,45 | 1,31 | 1,31 | 1 |
| **மொத்தம்** .. | 27,98 | 42,40 | 42,07 | 45,03 |



**(7.4) (இ) கோரிக்கை எண் 56-ன் கீழ் திட்ட பணிகள்.**

| அம்சம். | 1978-79 கணக்குகள். | 1979-80 திருத்திய மதிப்பீடு. | 1979-80 கணக்குகள். | 1980-81 வரவு-செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் ஆயிரத்தில்.) | | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 பால் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள விவசாய உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்க கடனுதவி. | 20,00 | 1 | .. | 1 |
| 2 பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் குவளைகள் வாங்க, சோதனைக் கருவிகள், குளிரூட்டும் சாதனங்கள் மற்றும் வாகனங்கள், ஆய்வுக்கூடம், கிடங்கு முதலியன கட்டுதல் போன்றவற்றிற்கு கடனுதவி. | 2,10 | 5,00 | 51 | 5,00 |
| 3 மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் பால் வளத் துறை ஆணையாளரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சட்டப்படிக்கான கூட்டுறவு வங்கி, அரசு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு கடன்கள். | 21,43 | 30,00 | 29,67 | 30,00 |

| அம்சம். | 1978-79 கணக்குகள். | 1979-80 திருத்திய மதிப்பீடு. | 1979-80 கணக்குகள். | 1980-81 வரவு-செலவு திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| 4 மேற்குமலைத் தொடர் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கொடைக்கானலில் பாலாடை வெண்ணெய் தயாரிப்பு தொழிற்சாலை அமைக்க கொடைக்கானல் கூட்டுறவு பால் வழங்கு ஒன்றியத்திற்குக் கடன். | 3,45 | 1,31 | 1,31 | 1 |
| பால் கூட்டுறவுகளின் வளர்ச்சிக்கும் விற்பனை வசதிகளுக்காகவும் கடனுதவி. | 14,90 | 9,50 | 9,50 | 3 |
| மொத்தம் .. | 61,80 | 45,82 | 40,99 | 35,05 |

(7.4) (ஈ) மேலே குறிப்பிட்டுள்ளவற்றைத் தவிர, 1979-80-ம் ஆண்டில் கோரிக்கை எண் 10, 55 மற்றும் 56-ன் கீழ் மொத்தம் ரூ. 62.44 இலட்சம் திட்டத்தில் சேராத பணிகளுக்காக செலவிடப்பட்டது. 1980-81-ம் ஆண்டில் 'திட்டத்தின் கீழ் வரும் பணி' மற்றும் 'திட்டத்தின் கீழ் வராத பணி' ஆகியவற்றின் கீழ் பால் வளத்துறைக்கான மொத்த நிதி ஒதுக்கம் ரூ. 1,53.12 இலட்சம் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



8. தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பணிகள்.—(1.8) தமிழ்நாடு பால்வள நிறுவனம் வர்த்தக நடவடிக்கைகளில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. சென்னை மற்றும் மதுரை நகரங்களில் பால் கொள்முதல் செய்தல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய நடவடிக்கைகள் அடங்கும் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் செங்கல்பட்டு, வடஆற்காடு, தென் ஆற்காடு, தருமபுரி, சேலம், பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் மதுரை ஆகிய ஒன்பது மாவட்டங்களில் பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பினையும் இந்நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது. இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் பால் கொள்முதல் பணியில் இந்நிறுவனம் பணி புரிந்து வருகிறது. 1977-78-ல் தினசரி பால் கொள்முதல் சராசரி 2.03 இலட்சம் லிட்டராகவும், 1978-79-ல் 2.15 இலட்சம் லிட்டராகவும், 1979-80-ல் 2.68 இலட்சமாகவும் இருந்தது. 1980-81-ம் ஆண்டு 3.20 இலட்சம் லிட்டராக இருக்கும். கொள்முதல் செய்யப்பட்ட பால், இதனால் பயனடையும் பால் பண்ணையாளர்களின் எண்ணிக்கை, பால் பண்ணையாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட தொகை முதலிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| அம்சம். | 1977-78. | 1978-79. | 1979-80 மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (அளவு இலட்சத்தில்.) | | |
| கொள்முதல் செய்யப்பட்ட பால் (அளவு லிட்டரில்). | 740.39 | 784.38 | 981.51 |
| பயனடைவோரின் எண்ணிக்கை ஜூலை 1-ந் தேதி .. | 2·48 | 2.59 | 2.65 |
| பால் உற்பத்தியாளர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை (ரூபாய்) | 1,221.64 | 1,365.11 | 1,635.00 |

**கொள்முதல் விலை திருத்தியமைத்தல்.**— (8.22) இந்த ஆண்டு மே திங்களில் பால் பண்ணைத் தொழில் விவசாயிகளுக்கு நியாயமான விலையில் பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டது. பால் அதிகம் வராத இப்பருவத்தில் இந்த திருத்தியமைக்கப்பட்ட விலையில் லிட்டருக்கு 35பைசா உயர்கிறது. பால் அதிகம் வரக்கூடிய பருவத்தில்கூட இந்த விலை அதிகரிப்பு லிட்டருக்கு 21 பைசா அதிகம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. இந்த நியாயமான விலை அதிகரிப்பால் உற்பத்தியாளரிடமிருந்து 1980–81-ம் ஆண்டில் தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு அதிகப் பால் வரத்து எதிர்ப்பார்க்கப்படுகிறது. குறிப்பாக பால் அதிகம் கிடைக்கும் பருவமான நவம்பர் 80-லிருந்து கிடைக்கும். அதிகக் கொள்முதலுக்காக எல்லா வசதிகளும் செய்யப்படுகின்றன.

(8.3) சென்னை மற்றும் மதுரை பால் பண்ணைகள் 4.5 சதவீத கொழுப்பும், 8.5 சதவீதம் கொழுப்பற்ற திண்மைப்பொருளும் அடங்கிய தரப்படுத்தப்பட்ட பாலை விற்பனை செய்கின்றன. விற்பனை விவரம் வருவாறு :—

| அம்சம். | 1977–78. | 1978–79. | 1979–80 மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (அளவு இலட்சத்தில்.) | |
| பால் (லிட்டரில்) .. .. .. .. .. | 988.85 | 1,037.84 | 1,156.92 |
| தின சராசரி .. .. .. .. .. | 2.71 | 2.84 | 3.16 |
| வெண்ணெய் (கிலோகிராமில்) .. .. .. | 5.85 | 4.88 | 6.31 |
| நெய் (கிலோகிராமில்) .. .. .. .. | 6.49 | 1.55 | 5.35 |
| பால்பொடி (கிலோகிராமில்) .. .. .. | 11.35 | 2.66 | 2.56 |



(8.4) பால் மட்டுமின்றி ஆடை நீக்கிய பால்பொடி, வெண்ணெய், நெய் போன்ற பால் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் ஐஸ்கிரீம், கோவா, லஸ்ஸி மற்றும் சுவையூட்டும் தயிர் ஆகியவையும் விற்பனை செய்யப்படுகின்றன. 1978–79 மற்றும் 1979–80-ம் ஆண்டுகளில் இப்பொருட்களின் விற்பனை அளவு முறையே ரூ. 25 இலட்சமாகவும், ரூ. 35 இலட்சமாகவும் இருந்தது. மேலும் இவ்விற்பனையைப் பெருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 1979–80-ம் ஆண்டில் மதுரை பால்பொடி தொழிற்சாலையில் 875 டன் ஆடை நீக்கிய பால்பொடி தயாரிக்கப்பட்டது.

(8.5) ''பால் பெருக்குத் திட்டம் I–ன்'' கீழ் சென்னை நகருக்கு மிகக்குறைந்த அளவில் ஆடை நீக்கிய பால்பொடி வழங்கப்பட்டது. 1979–80 ஆம் ஆண்டில் மலிவு விலையில் வழங்கப்பட்ட வெண்ணெய் கொழுப்பு நிறுத்தப்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் இந்நிறுவனம் ஆடை நீக்கிய பால்பொடி, வெண்ணெய் கொழுப்பு அதிக விலையில் வாங்கி வருகிறது.

(8.6) இந்நிறுவனத்தின் ஆண்டு மொத்த விற்பனைத் தொகை 1978–79 ஆம் ஆண்டு ரூ. 25.43 கோடியாக இருந்தது. 1977–78 ஆம் ஆண்டு ரூ. 24.62 கோடியாக இருந்த உற்பத்தியைக் காட்டிலும், 1978–79 ஆம் ஆண்டு ரூ. 26.09 கோடியாக இருந்தது. 1975–76-லிருந்து 1977–78 வரை மூன்று ஆண்டுகள் தொடர்ந்திருந்த இலாபம் 1978–79 ஆம் ஆண்டு ரூ. 29.25 இலட்சம் அளவிற்கு நட்டத்தில் இருந்தது. இந்த நட்டம் ரூ. 95.48 இலட்சம் வரை மிக உயர்ந்த பட்சமாக இருந்தது. 1978–79 ஆம் ஆண்டு தேவையான கச்சாப் பொருட்கள் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருந்ததாலும் நட்டம் ஏற்பட்டது. முந்திய ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகளை சரிகட்டியது மூலம் 1978–79 ஆம் ஆண்டு இந்த நட்டம் ரூ. 29.25 இலட்சமாக குறைவாக கொண்டுவரப்பட்டது. 1979–80 ஆம் ஆண்டில் பால் கொள்முதல் விலை அதிகமாகவும் பால் உற்பத்திக்காக ஆகும் செலவு மற்றும் நிறுவன ஊழியர்களின் சம்பளம், கூலி போன்றவை

அதிகமாக இருந்தது. 1979-80 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின்
மொத்த விற்பனைத் தொகை ரூ. 28 கோடியாக உள்ளது.
இருப்பினும் 1979-80 ஆம் ஆண்டிலும் அதிக நட்டம் எதிர்
பார்க்கப்படுகின்றது.

9. மாட்டுத் தீவன அறவை தொழிற்சாலை.—(9.1) பால்
வளத்துறையிடமிருந்து 1—4—75-ல் மாதவரம் பால் பண்ணை
குடியிருப்பில் உள்ள மாட்டுத் தீவன அறவை தொழிற்சாலையை
தமிழ்நாடு பால்வள நிறுவனம் எடுத்துக்கொண்டது. ஒரு
மாதத்திற்கு சராசரியாக 1,300 டன் தீவனம் உற்பத்தி செய்
கிறது. விற்பனை வசதியைக் கருதி ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை
ஆலைக்குச் சொந்தமான மாட்டுத் தீவன அறவை தொழிற்
சாலையை இந்நிறுவனம் குத்தகைக்கு எடுத்துள்ளது. உற்பத்தி
யாகும் தீவனம் விவசாயிகளுக்கும் கால்நடை பராமரிப்புத்
துறையைச் சேர்ந்த\கால்நடைப்பண்ணைகளுக்கும் விநியோகிக்கப்
படுகிறது. விற்பனை விவரம் வருமாறு:—

| அம்சம். | 1976-77. | 1977-78. | 1978-79. | 1979-80 மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| மாட்டுத் தீவனம் (டன்களில்). | 12,213 | 12,727 | 16,175 | 18.700 |

(9.2) உற்பத்தியையும் விற்பனையையும் பெருக்க மாதவரத்
தில் ரூ. 10 இலட்சம் மதிப்பில் மாட்டுதீவனப் புண்ணாக்கு
தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படுகிறது. அது விரைவில்
உற்பத்தியை உண்டுபண்ணும்.

10. பால்பெருக்குத்திட்டம்.—(10.1) 'பால் பெருக்குத் திட்'
டம் 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வரை நீடிக்கப்பட்டுள்ளது.
இது கிராமங்களில் உற்பத்தி செய்யும் பாலை கொள்முதல்
செய்து அதனைப் பதப்படுத்தி, சீராக்கி, பெரிய நகரங்களில்
விற்பனை செய்வதற்காக வகுக்கப்பட்ட ஒரு பால் பண்ணை
வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டமாகும். பால் வழங்குதலைப்
பரவலாக விரிவுபடுத்தி மக்களின் வாங்கும் சக்திக்கு ஏற்ற
விலையில் அதனை விற்பனை செய்வதற்காக, உலக உணவு



நிறுவனத்தால் நன்கொடையாக வழங்கப்படும் ஆடை நீக்கிய
பால் பொடியையும், வெண்ணெய் கொழுப்பையும் பயன்படுத்து
வதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும். பால் உற்பத்தியைப்
பெருக்கும் பொருட்டு நான்கு பெருநகர் பால் பண்ணைகளில்
ஆடை நீக்கிய பால் பொடி மற்றும் வெண்ணெய் கொழுப்பு
பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் பொருட்களில் விலை
மதிப்பு பால் உற்பத்தியைப் பெருக்கவும் மற்றும் பல வசதிகளை
அதிகரிக்கவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்
கீழ் நிதி உதவி 70 சதவீதம் கடனாகவும், 30 சதவீதம் மானிய
மாகவும் கிடைக்கிறது. தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட
887 இலட்சம் முடிவில் ரூ. 1,082 இலட்சமாகத் திருத்தப்பட்டு
மீண்டும் ரூ. 1,683 இலட்சமாக்கப்பட்டது. இதுவரை
ரூ. 1,288 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. ரூ. 1,153,86
இலட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(10·2) பால் பெருக்குத்திட்டம் 2.—பால்பெருக்குத் திட்டம்
1-ன் தொடர்ச்சியாக பால் பெருக்குத் திட்டம் 2 துவக்கப்பட
வுள்ளது. தமிழ்நாட்டில் பால்பண்ணை வளர்ச்சிக்காக தேசிய
பால்பண்ணை வளர்ச்சிக் கழகம் சனவரி 79-ல் திட்டம் தயாரித்
துள்ளது. இந்திய பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் 1979 ஆம்
ஆண்டு ஏப்ரலில் அதை மதிப்பீடு கொடுத்தது. செங்கற்பட்டு,
வட ஆற்காடு, தென் ஆற்காடு, தருமபுரி, சேலம், பெரியார்,
கோயம்பத்தூர். மதுரை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் பால்
பெருக்குத் திட்டம் 2-ல் அடங்கும்.

இத்திட்டத்தின் விவரங்கள் வருமாறு:—

1. இத்திட்டத்தின் (எட்டு வருவாய் மாவட்டங்களில்)
ஒன்பது பால் வழங்கு ஒன்றியங்கள் அடங்கும்.)

2. 1984-85க்குள் 4.550 மாவட்டக் கூட்டுறவுச்
சங்கங்கள் ஆரம்பிக்கப்பட உள்ளது (தற்போதுள்ள 2,046
சங்கங்களும் இதற்குள் அடங்கும்.)

3. 13 இலட்சம் பால் கறவைகள் பால் கொள்முதலில் அடங்கும். இதில் 48 சதவீதம் செயற்கை இனவிருத்தி திட்டத்தில் கொண்டுவரப்படும்.

4. மாநிலத்தில் உள்ள 16 பெரிய நகரங்களில் (1971 மக்கட்தொகை கணக்குப்படி 1,00,000-க்கு மேல்) ஒன்பது நகரங்களில் இத்திட்டத்தில் உள்ளன. மாநிலத்தில் (1978-79) பெரிய நகரங்களின் மக்கட் தொகையில் 50 சதவீதத்திற்கு இத்திட்டத்தில் ஈடுபடுவர். மாநிலத்தில் முதல்தர நகரங்களில் பால் விற்பனை வசதிகள் ஏற்படுத்தப்படும். இரண்டாந்தர நகரங்கள் இத்திட்டத்தில் வரும். 1984-85-ல் பெருநகர மக்கட்தொகையில் 69 சதவிதம் பேர் இத்திட்டத்தில் பயன்படுத்தப்படுவர். தற்போது தினசரி நகரத் தேவையான 12·36 இலட்சம் லிட்டர்கள் 1984—85ல் 16·44 இலட்சம் லிட்டராக உயர்த்தப்படும். இத்திட்டத்தில் உருவாக்கப்பட்ட பால் பண்ணையின் பங்கு மொத்தத் தேவையில் 66 சதவீதம் பூர்த்தி செய்யும்.

5. மாநிலத்தில் உள்ள பெரிய நகரங்களில் தினசரி 10·8 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யவும், 7·15 இலட்சம் லிட்டர் பால் அதிகப்படியாக கையாளும் வரையிலும், 2·30 லிட்டர் பால் அதிகப்படியாகச் சேகரித்து வைப்பதிலும் இத்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6. இத்திட்டத்திற்கு ரூ. 39·82 கோடியாகும் என மதிப்பிடப்படுகிறது. பால் பெருக்குத் திட்டம் 1—ன்நிதியில் சென்னையில் பால் விற்பனைத் திட்டத்திற்கு ஆகும் செலவும் இதில் அடங்கும்.

தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ள மாநில அளவில் கூட்டுறவு இணையம் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இணையத்தைப் பதிவு செய்வதற்கு வேண்டிய துணை விதிகள் அமைத்தல் விரைவாக்கப்படுகிறது.

11. சிறப்புத் திட்டங்கள்:—தமிழக அரசு தொடங்கியுள்ள கீழ்க்கண்ட சிறப்புத் திட்டங்களைப் பால்வள நிறுவனம் தொடர்ந்து செயல்படுகிறது.



11.1 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.—1975-76 முதல் ஐந்தாண்டு கால அளவில் நீலகிரி மாவட்டத்தில் ரூபாய் 84 இலட்சம் செலவில் 10,000 விவசாயிகள் பயன்படும் முறையில் பால் பண்ணை வளர்ச்சிக்கு இத்திட்டம் வழிகோலுகிறது. இதன் மூலம் தற்போது ஒரு நாளைக்குக் கிடைக்கும் 24,000 லிட்டர் பால் 40,000 லிட்டர் அளவுக்குக் கிடைக்க வழிவகுக்கிறது. இத்திட்டத்திற்காக தமிழக அரசு (1979—80 வரை) ரூபாய் 169.12 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது. இது இந்நிறுவனத்திற்கு 50 சதவீதம் வட்டியுடன் கூடிய கடனாகவும், 50 சதவீதம் மானிய பங்குத் தொகையாகவும் கணக்கிடப்படுகிறது. நூறு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கவும் மாவட்டத்தில் குளிரூட்டும் நிலையங்களையும், பாலைப் பக்குவப்படுத்தும் வசதிகளையும், சங்க உறுப்பினர்களின் கறவை மாடுகளுக்கு மருத்துவ வசதியளிக்கவும் மற்றும் இனப் பெருக்கம் செய்யவும் வசதி செய்து கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. கோத்தகிரியில் குளிர்பதன நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. கூடலூரில் குளிர் சாதன நிலையம் விரைவில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 87 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒரு நாளைக்கு 27,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. மூன்று அவசர கால கால்நடை மருந்தகங்களும், ஏழு நடமாடும் கால்நடை மருத்துவ நிலையங்களும், 30 கால்நடை மருத்துவப் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன. 14,800 விவசாயிகள் பயன் அடையும் முறையில் 83 கிராமங்கள் தொழில் நுட்பத் துறையில் அமைக்கப்பட்டுள்ளன.

11.2 சிறப்பு கால்நடை பராமரிப்புத் திட்டம், கன்று வளர்ப்புத் திட்டம்.—25,000 சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் தங்களிடம் உள்ள கலப்பினக் கிடேரிகள் மூலம் கலப்பினப் பசுக்களைப் பெற, கன்றுகளைப் பராமரிப்பதற்கு வழங்கப்படும் தீவனத்துடன் அரசு மானியம் மற்றும் வங்கிக் கடன் மூலம் தேவையான

வசதிகள் மற்றும் உதவிகள் அனைத்தும் செய்யப்படும். ஐந்தாண்டுக் காலத் திட்டத்தில் வட ஆற்காடு, தென் ஆற்காடு சேலம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் இச்சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு ரூபாய் 237·97 இலட்சம் ஒதுக்கீடு செய்ய இணங்கியுள்ளது.

சிறு உழவர்கள் மற்றும் சொற்ப நில உழவர்களைப் பொறுத்தவரை அரசின் மானியம் 50 சதவிகிதம் ஆகும். வேளாண்மைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை இம்மானி யம் 66²/³ சதவிதம் ஆகும். ரூபாய் 157·95 இலட்சம் இதுவரை மானியமாகக் கிடைக்கப்பெற்று தகுதி வாய்ந்த விவசாயிகளுக்கு மானியமாக ரூபாய் 157·95 இலட்சம் இந்நிறுவனத்தால் பயன் படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் 15,395 கன்றுகள் பார்க்கப்பட்டு 15,395 விவசாயிகள் பயன் அடைந்துள்ளார்கள்.

11.3. <u>வறட்சியால் பாதிக்கக்கூடிய பகுதிக்கான திட்டம்</u> —(அ) <u>தருமபுரி மாவட்டம்</u>.—தமிழக அரசு இத்திட்டத்திற்காக 1978–79 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட ரூபாய் 32·87 இலட்சத் தைத் தொடர்ந்து 1979–80 ஆம் ஆண்டில் ரூபாய் 23·20 இலட் சம் அளித்துள்ளது. 276 பால்உற்பத்தியாளர் சங்கங்கள் ஆரம்பிக் கப்பட்டு அதிகப்படியாக 28,000 லிட்டர் பால் சராசரியாக நாள் ஒன்றுக்கு சேகரிக்கப்படுகிறது. கால்நடைகளுக்கு செயற்கை முறை கருத்தரிப்பு செய்ய 230 பயிற்சி பெற்ற கிராமப்புற பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 110 சங்க அங்கத்தினர்களுக்கு மாட்டுத் தீவன மானியம் வழங்கப்பட் டுள்ளது. மாட்டுத் தீவனம் பயிரிட 63·50 ஏக்கர் நிலம் பயன் படுத்தப்பட்டுள்ளது. சங்கங்களுக்குச் சோதனைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரியில் ரூபாய் 175 இலட்சம் செலவில் பால்பொடி தயாரிக்கும் ஆலை (நாளொன் றுக்கு 10 டன் உற்பத்தித் திறன் கொண்ட) ஒன்றை நிறுவ இந்திய அரசு அனுமதித்துள்ளது. இத்தொழிற்சாலையின் மதிப்பீட்டுச் செலவில் 50 சதவிதம் இந்திய அரசு ஏற்றுக் கொள்ளும். மீதமுள்ள 50 சதவீதம் மாநில அரசு பங்குத்



தொகையாக ஏற்று தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு கடனாக அளிக்கும். இத்தொழிற்சாலையின் வேலை ஆரம்பிக்கப்பட்டு, இயந்திரங்கள் மற்ற கருவிகளும் வரத் தொடங்கி முன்னேற்றமடைந்து வருகிறது. 1982-ல் இந்த தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் எனத் தெரிகிறது.

(ஆ) <u>இராமநாதபுரம் மாவட்டம்</u>.—பால் சோதனைக் கருவிகள் வாங்குவதற்காகவும் பால் குவளைகள், போக்குவரத்து மானியம் மற்றும் பரமக்குடியில் குளிரூட்டும் நிலையம் நிறுவு வதற்காகவும், ஏற்கெனவே, திருவில்லிபுத்தூர் மற்றும் மானா மதுரை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு இருக்கும் குளிரூட்டும் நிலையங்களை அபிவிருத்தி செய்யவும் இராமநாதபுரம் மாவட் டத்திற்கு மட்டும் இத்திட்டத்தில் ரூபாய் 16,508 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

(இ) <u>மேற்கு மலைத் தொடர் வளர்ச்சித் திட்டம்</u>.—இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 14·23 இலட்சம் மதிப்பீட்டில் பாலாடை வெண்ணெய் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்று பழனி மலைத் தொடரில் கொடைக்கானலில் நிறுவப்படுகிறது. இத் தொழிற் பிரிவு கொடைக்கானல் கூட்டுறவு பால் வழங்கும் ஒன் றியப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒதுக் கப்பட்டுள்ள தொகை 50 சதவீதம் மானியமாகவும் மீதி 50 சதவீதம் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) <u>அரிசன நலத் திட்டம்</u>.—இத்திட்டத்தின்கீழ் பால் கூட்டுறவுகளிலுள்ள அரிசன உறுப்பினர்களுக்கு நாட்டுடமையாக் கப்பட்ட வங்கி அல்லது கூட்டுறவு வங்கி மூலமாக ரூபாய் 1,500 கடன் வழங்கப்படும். ரூபாய் 500 மானியமாக வழங்கப்பட்டு அது வங்கியில் செலுத்தப்படுகிறது. இத்தொகை சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் கடனுக்காக சரிக்கட்டப்படும். ஒவ்வொருவருக் கும் இத்தகைய கடன்கள் ஒவ்வொரு முறையும் ரூபாய் 1,500 வீதம் 2 முறை மொத்தம் ரூபாய் 3,000 வழங்கப்படும்.

1979–80 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் மானியமாக வும் நிர்வாகச் செலவினங்களாகவும் ரூபாய் 11·44 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 2,214 பால் கூட்டுறவு அரிசன அங்கத் தினர்கள் பயன் அடைந்துள்ளார்கள்.

1980–81 ஆம் ஆண்டிற்கும் ரூபாய் 11·44 இலட்சம் நிதி ஒதுக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்திய அரசின் அரிசன நல கூட்டமைப்புத் திட்டத்தில், பால் பண்ணைத் தொழிலில் அரிசன குடும்பங்களை ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

12. பொது.—1979–80 ஆம் ஆண்டில் பால் உற்பத்தியும், கொள்முதலும் அதிகரித்திருந்தது. கொள்முதல் , பாலுக்கு விலை அதிகரித்திருப்பதால் 1980–81 ஆம் ஆண்டில் அதிகமான அளவுக்குப் பால் சேகரிப்பு எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாநிலத்தில் உள்ள உற்பத்தியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் தேவைகளுக்கு ஏற்பவும், ஊட்டச் சத்துக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டும் பால் உற்பத்திக்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.



## 1979–80 ஆம் ஆண்டு தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் செயலாக்கம் பற்றிய ஆய்வுரை.

தமிழ்நாடு பால்வள நிறுவனம் பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 4-5-1972-ல் பதிவு செய்யப்பட்டு, அதே ஆண்டு ஜூலை முதல் நாளிலிருந்து தன் பணியை துவக்கியது. பிரிவு 43-A கம்பெனியின் (Companies Act) சட்டம் 1956-ன்கீழ் ஒரு பொது நிறுவனமாக 1–7–1975 முதல் நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாவன :—

(அ) பால்வளத்தையும் பால் உற்பத்தி நிறுவனங்களையும், மேம்படுத்துதலும், அதற்குரிய தேவைகளுக்கு உதவுவதும்;

(ஆ) பாலை சேகரிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் உரிய வழிமுறைகளை நிர்ணயிப்பதும், உதவுவதும்;

(இ) கிராமப்புறங்களில் பால் பண்ணைகளின் உற்பத்தியை அதிகரிப்பதும், அதன் மூலம் நாளாவட்டத்தில் பால் உற்பத்தியின் தன்னிறைவு காணுதலும்;

(ஈ) நகர்ப்புற மக்களுக்கு நியாயமான விலையில் தரமான பாலை கிடைக்கச் செய்வதும்.

2. தமிழ்நாடு பால்வள நிறுவனம், சில நிலையான சொத்துக்களான கட்டிடங்கள், இயந்திரத் தளவாடங்கள் பால் சேகரித்துச் செல்லும் வண்டிகள் மற்றும் சொற்ப மூலதனத்தைக் கொண்டு தன் பணியைத் தொடங்கியது. இந்நிறுவனம் பணி தொடங்கிய முதல் ஆண்டில் (1972–'73) விற்பனை ரூபாய் 2.82 கோடியாகவும் 1978–'79 ஆம் ஆண்டில் விற்பனை ரூபாய் 25.43 கோடிகளாகும். இணைப்பு 1-ல் பால்வள நிறுவனத்தின் நடவடிக்கைகளின் சீரான வளர்ச்சியைக் குறிக்கும் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன

3. பால்வள நிறுவனத்தின் பால் கொள்முதல், பால் உற்பத்தி, பால் வழங்குதல் ஆகியவற்றைப் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களாகிய கோயம்புத்தூர், பெரியார், சேலம், நீலகிரி, வட ஆற்காடு, தருமபுரி, தென்

ஆற்காடு, செங்கல்பட்டு, மதுரை, இராமநாதபுரம், திருநெல் 1980 ஜூலை 19]
வேலி ஆகிய இடங்களிலிருந்து பால் கொள்முதல் செய்யப்பட்டு
20 குளிர் பதன நிலையங்களில் குளிர வைக்கப்படுகிறது.
இவ்வாறு குளிர வைக்கப்பட்ட பாலை பால்வள நிறுவனத்தில்
பால் சேகரித்துச் செல்லும் வண்டிகளின் (Road tankers(
மூலமாக மாதவரம், அம்பத்தூர், மதுரை ஆகிய பால் பண்ணை
களுக்கு அனுப்பப்படுகிறது. குளிர்படுத்தப்பட்ட பாலிலிருந்து
ஒரு பகுதியினை இரயில் தொட்டிகளின் (Rail tankers) மூல
மாக ஈரோட்டிலிருந்து அம்பத்தூர் பால் பண்ணைக்கு தருவிக்
கப்படுகிறது. இப்படித் தருவிக்கப்பட்ட பாலுடன், ஆடை நீக்கிய
பால் பொடியும் (Skim milk powder), வெண்ணெய் கொழுப்பு
சத்தும் (Butter oil) கலந்து தரப்படுத்தப்பட்ட பாலாக (4.5%
கொழுப்புச் சத்து நிறைந்த) மாற்றி மதுரையிலும், சென்னை
யிலும் உள்ள பால் வள நிறுவனத்தில் பால் விற்பனை நிலை
யங்கள் (Depots) பாலகங்கள் (Parlours) மூலமாக விற்பனை செய்
யப்படுகிறது. சென்னையில் மொத்த விற்பனை பிரிவுகள் (Bulk
vending units) மூலமாகவும் விநியோகம் செய்யப்படுகிறது. பால்
பொருள்களின் 1977—'78, 1978—'79, மற்றும் 1979—'80
(மதிப்பீடு) ஆண்டுகளின் விற்பனை விவரம் கீழே கொடுக்கப்
பட்டுள்ளது.

| விவரங்கள். | 1977-'78 | 1978-'79 | 1979-'80 |
|---|---|---|---|
| | | (இலட்சத்தில்) | (மதிப்பீடு) |
| வெண்ணெய் (கிலோ) | 5.85 | 4.88 | 6.31 |
| நெய் (கிலோ) | 6.49 | 1.55 | 5.35 |
| பால் பொடி (கிலோ) | 11.35 | 2.66 | 2.56 |
| சுவைப்படுத்தப்பட்ட பால் (லிட்டர்) | 11.60 | 10.67 | 8.10 |
| தயிர் (கோப்பைகளில்) | 4.02 | 4.65 | 4.66 |

பால் கொள்முதல் விற்பனை ஆகியவற்றின் வளர்ச்சியினை இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.



**4. கால்நடை தீவன உற்பத்தி ஆலை.**

மாதவரம் பால்பண்ணையில் ஒரு மணிக்கு 4 முதல் 5 டன் உற்பத்தி கொள்ளளவுள்ள கால்நடை தீவன உற்பத்தி ஆலை பால் வளத் துறையிலிருந்து பெற்று 1-4-1975-லிருந்து தமிழ்நாடு பால்வள நிறுவனத்தால் நடத்தப்படுகிறது. இவ்வா லையில் தற்போது மாதம் ஒன்றுக்கு சராசரி 1,300 டன் தீவனம் உற்பத்தி செய்யப்படுகிறது. கால்நடை தீவன விற்பனையை அதிகரிப்பதற்காக ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் உள்ள கால்நடை தீவன உற்பத்தி ஆலையை குத்தகையில் எடுக்கப்பட் டுள்ளது. கால்நடை தீவனம் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கும், கால்நடை பராமரிப்புத் துறையில் உள்ள கால்நடை பண்ணை களுக்கும் விற்கப்படுகிறது. 1976-77—1978-79, மற்றும்1979-80 (மதிப்பீடு) ஆண்டுகளின் கால்நடை தீவனத்தின் விற்பனை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| விவரங்கள். | 1976—77. | 1977—78. | 1978—79. | 1979—80. (மதிப்பீடு) |
|---|---|---|---|---|
| கால்நடை தீவனம் (டன்) | 12,213 | 12,727 | 16,175 | 18,700 |

கால்நடை தீவன உற்பத்தியையும், விற்பனையையும் மாத வரம் கால்நடை தீவன உற்பத்தி ஆலையிலிருந்து அதிகரிப்பதற் காக, ரூ. 10 (பத்து) இலட்சம் செலவில் ஒரு முறுக்கு தீவன ஆலை, (Pelletiser Plant) நிறுவப்பட்டு வருகின்றது. இவ்வாலை மிக விரைவில் செயல்பட இருக்கிறது.

**5. இந்திய பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் அளிக்கும் நிதி உதவி.**

(அ) பால் பெருக்குத் திட்டம் 1-ன் கீழ், 1980 வரை நிதி உதவி அளிப்பது நீடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஆடை நீக்கிய பால் பொடியும் (Skim milk powder) வெண்ணெய் கொழுப்பும் (Butter oil) வழங்குவது நவம்பர் 1977 முதல் வெகு வாக குறைக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக அதிக விலை யுள்ள வணிக ஆடை நீக்கிய பால் பொடி (Commercial skim

milk powder) வாங்கியும், இந் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பால் பொடியையும் கலந்து, தரப்படுத்தப்பட்ட பாலுக்காக உபயோகிக்க வேண்டியுள்ளது.

இந்நிறுவனத்தின் சில வளர்ச்சித் திட்டங்களுக்காக பால் பெருக்குத் திட்டம் 1-ன் கீழ் நிதி உதவி 70% கடனாகவும் 30% மானியமாகவும் அளிக்கப்படுகிறது. நிதி உதவியின் முன்னேற்றம் கீழ்காணும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன:—

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. பால் பெருக்குத் திட்டம் 1-ன் கீழ் நிதி ஒதுக்கீடு. | 1,683·00 | ரூ. 135·75 இலட்சம் ஈரோடு பால் பண்ணைக்கும் ரூ. 33·60 இலட்சம் கால் நடை தீவன ஆலை அமைப்பதற்கும் இந்திய பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்தினரால் அளிப்பதாக கூறிய நிதித் தொகை இதில் சேர்க்கப்படவில்லை. |
| 2. இந்திய பால் பண்ணை வளர்ச்சிக் கழகம் 1980-ம் வருடம் மார்ச் மாதம் வரை கொடுத்துள்ள நிதி. | 1,271·11 | |
| 3. தமிழ்நாடு பால் வள நிறுவனத்தினால் 1980-ம் வருடம் மார்ச் மாதம் வரை உபயோகப் படுத்தப்பட்ட தொகை. | 1,191·65 | ஈரோடு, சேலம் ஆகிய ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நிதி உதவி இதனில் அடங்கியுள்ளது. |



இதுவரை வழங்கப்படாத தொகை மற்றும் உபயோகப்படுத்தாத மீதி தொகைக்கான திட்டங்கள் கைவசமுள்ளன.

(ஆ) இந்தியப் பால் பண்ணைக் கழகம் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் பெரியார் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி ஒன்றியத்தின் மூலமாக உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணை (Feeder balancing dairy)-யும், கால்நடை தீவன ஆலையும் ஏற்படுத்த தீர்மானித்துள்ளது. பால் பண்ணையும், கால்நடை தீவன ஆலையும் முடியும் தருவாயில் உள்ளன. பால் பெருக்குத் திட்டம் 1-ன் கீழ் ரூ. 305 இலட்சம் மூலதனத்தில் ஒரு உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணை (Feeder balancing dairy) சேலத்தில் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஈரோடிலும் சேலத்திலும் உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணைகளும், ஈரோட்டில் கால்நடைத் தீவன உற்பத்தி ஆலையும் நிறுவுவதற்கான பணியை தேசிய பால்வள வாரியத்திடம் (National dairy Devalopment Board) ஒப்படைக்கப்பட்டுள்ளது. குளிர் பதன நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கும், பால் சேகரித்துச் செல்லும் வண்டிகளை வாங்குவதற்கும் இந்திய பால் பண்ணைக் கழகம் ரூ. 136 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது. மேலும் அது மதுரையில் பால் பண்ணை மற்றும் பால் பொடி ஆலை அபிவிருத்தி செய்வதற்கும் நிதி உதவி அளித்துள்ளது. அதே போல் இத்திட்டத்தின் கீழ் அம்பத்தூர் பால் பண்ணையில் பால் பொருட்களை பைகளில் அனுப்பும் முறையினை விரிவுபடுத்துவதற்கு ரூபாய் 35 இலட்சம் நிதி உதவியாக அளிக்கப்பட்டுள்ளது. இந்த உதவியின் ஒரு பகுதியாக ''பாலித்தீன் பைகளில் பால் நிரப்பும் இயந்திரங்கள்'' மூன்று அளித்துள்ளது. அம்பத்தூர் பால் பண்ணை நிலையத்தை விரிவுப்படுத்துவதற்காக மேலும் ரூ. 10·5 இலட்சம் நிதி உதவி அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## 6. பால் பெருக்குத் திட்டம் II.

பால் பெருக்குத் திட்டம் 1-ன் தொடர்ச்சியாக பால் பெருக்குத் திட்டம் II துவக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஒரு எதிர் கால திட்டத்தை தேசிய பால்வள வாரியம் 1979 ஆம் வருடம் ஜனவரி மாதத்தில் தயாரித்தது. இத்திட்டம் 1979 ஆம் வருடம் ஏப்ரல் மாதத்தில்

## இணைப்புகள்.

[1980 ஜூலை 19
இந்திய பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்தால் மதிப்பிடப்பட்டது. பால் பெருக்குத் திட்டம் II-ன் கீழ் பால் பெருக்குத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக, செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தருமபுரி, சேலம், பெரியார், கோவை, மதுரை, உதகமண்டலம் ஆகிய மாவட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் குறிக்கோள்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(1) இத்திட்டத்தின் அமைப்பினை (ஒன்பது மாவட்டங்களில்) ஒன்பது பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களாக பிரிக்கப்பட்டுள்ளன.

(2) 1984-85 ஆம் ஆண்டிற்குள், 4550 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. (தற்போது அமைக்கப்பட்டுள்ள 2046 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் இதில் அடங்கும்).

(3) பால் கொள்முதலுக்காக, 13 இலட்சம் கறவை மாடுகள் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 48% செயற்கை முறை கருத்தரித்தல் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும்.

(4) மாநிலத்தில் உள்ள 16 முக்கிய நகர்ப்புற பகுதிகளில் (1971 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையுள்ள), ஒன்பது இடங்கள் இத்திட்டம் செயல்படும் இடத்தில் உள்ளன. மாநிலத்தில் 1978–79 ஆம் ஆண்டு நகர்ப்புற மக்கள் தொகையில் 50% இத்திட்ட அமைப்பில் சேரும். 1984–85 ஆம் ஆண்டில் பால் விற்பனை, முதல் தரம், இரண்டாம் தரம் நகரங்களில் 69% நகர்ப்புற மக்கள் பயனடையும் விதத்தில் செயல்படுத்தப்படும். நகர்ப்புறத்தில், நுகர்வோரின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நாளொன்றுக்கு 12.36 இலட்சம் லிட்டர் பாலிலிருந்து 16·44 இலட்சம் லிட்டராக, 1984–85 ஆம் ஆண்டில் அதிகரிக்கப்படும். பால் பண்ணைகளின் திறன் 66% தேவைகளையும் பூர்த்தி செய்யும் அளவிற்கு அமையும்

[1980 ஜூலை 19

(5) மாநிலத்தில் இத்திட்டத்தின் கீழ் அடங்கும் முக்கிய நகர்ப்புற பகுதிகளில் நாளொன்றுக்கு 10·8 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்வதற்காக, 7·15 இலட்சம் லிட்டர் பால் பயன்படுத்தக்கூடிய திறனும், 2·30 இலட்சம் லிட்டர் உற்பத்தியை சமப்படுத்தும் திறனும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(6) இத்திட்டத்திற்காக ரூ. 39·82 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பால் பெருக்குத் திட்டம் 1-ன் நிதியிலிருந்து, சென்னை நகரில் பால் விற்பனை செய்வதற்கு வேண்டிய செலவும் இதில் அடங்கும்.

தமிழ்நாட்டில் பால் அபிவிருத்தி செய்வதற்காக 2046 பால் உற்பத்தியாளர் சங்கங்கள், ஒன்பது மாநிலங்களில் (செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு, பெரியார், சேலம்-தருமபுரி, கோவை, மதுரை, உதகமண்டலம்) பால் பெருக்குத் திட்டம் 1-ன் கீழ், பால்வள நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளன. ஆறு மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் முறையே ஈரோடு, கோவை, சேலம், உதகமண்டலம், மதுரை, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளது. இணைப்பு 3-ல் வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றத்தைக் காணலாம்.

தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் நடவடிக்கைகளை எடுத்து செயல் படுத்துவதற்காக, மாநில இணையம் (State Level Fedaral tion) அமைக்க தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மாநில இணையம் அமைப்பதற்கு வேண்டிய விதிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன. தமிழக அரசின் ஒப்புதலுக்குப் பிறகு, தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கு மாநில இணையம் அமையும்.

7. சிறப்புத் திட்டங்கள்.

தமிழ்நாடு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கீழே கொடுக்கப்பட்டுள்ள சிறப்புத் திட்டங்களை இந்நிறுவனம் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

(அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

1975-76 ஆம் ஆண்டிலிருந்து ஐந்து ஆண்டு கால அளவில்
நீலகிரி மாவட்டத்தில் ரூ. 84 இலட்சம் செலவில் 10,000
விவசாயிகள் பயன்படும் முறையில் பால் பண்ணை வளர்ச்சிக்கு
இத்திட்டம் வழி கோலுகிறது. இதன் மூலம் தற்போது ஒரு
நாளைக்கு கிடைக்கும், 24,000 லிட்டர் பால், 40,000 லிட்டர்
பெ ) ஐந்து ஆண்டில் கிடைக்க வழி வகுக்கிறது. 1979-80ம்
ஆண்டு முடிய ரூ. 169·12 இலட்சம் 50% விகிதத்தில் கடனா
கவு ), 50% பங்கு மூலதனமாகவும் (Share Capital) தமிழக அரசு
தமிழ்நாடு பால்வள நிறுவனத்துக்கு நிதி உதவி அளித்துள்ளது.
100 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்து
தலும், பால் குளிர் பதன நிலையத்தை அதிகப்படுத்துதலும்,
கூட்டுறவு சங்கத்தாரின் கால்நடைகளை பராமரித்தலும்
இதனுடைய நோக்கமாகும். கோத்தகிரியில் குளிர் பதன
நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மற்றும் கூடலூரில்
குளிர் பதன நிலையம் விரைவில் செயல்பட இருக்கிறது. இது
வரை 87 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்
பட்டுள்ளன. இதன் மூலம் ஒரு நாளைக்கு 27,000 லிட்டர்
பால் கொள்முதல் செய்யப்படுகிறது. 3 அவசர கால்நடை
மருத்துவப் பிரிவுகளும், 7 நடமாடும் கால் நடை சிகிச்சை
அளிக்கும் வண்டிகளும், 30 கால்நடை மருத்துவத் தடங்களும்
பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு மருத்துவ உதவி
செய்கின்றன. 14,800 விவசாயிகள் பயனடையும் முறையில்
83 கிராமங்கள் தொழில் நுட்பத் துறையின் கீழ் அமைக்கப்
பட்டுள்ளன.

(ஆ) சிறப்பு கால்நடை பராமரிப்புத் திட்டம்/கன்று வளர்ப்புத் திட்டம்:

25,000 சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், வேளாண்
மைத் தொழிலாளர்கள் தங்களிடம் உள்ள கலப்பினக் கிடேரிகள்
மூலம் கலப்பினப் பசுக்களை பெற, கன்றுகளைப் பராமரிப்
பதற்கு வழங்கப்படும் தீவனத்துடன், அரசு மானியம் மற்றும்
வங்கிக் கடன் மூலம் தேவையான வசதிகள் மற்றும் உதவிகள்
அனைத்தும் நான்கு மாதத்திலிருந்து 27 மாதங்கள் வரை அளிக்கப்





படுகின்றன. ஐந்து ஆண்டுகாலத் திட்டத்தில் வட ஆற்காடு,
தென் ஆற்காடு, சேலம், கோவை மற்றும் மதுரை ஆகிய
மாவட்டங்களில் இச்சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த மத்திய
அரசு ரூ. 237·97 இலட்சம் ஒதுக்கீடு செய்ய இணங்கியுள்ளது.
சிறு உழவர்கள் மற்றும் சொற்ப நில உழவர்களைப் பொறுத்த
வரை அரசின் மானியம் 50% ஆகும். வேளாண்மைத் தொழி
லாளர்களைப் பொறுத்தவரை, இம்மானியம் 66 2/3% ஆகும்
இது வரை ரூ. 157·95 இலட்சம் தமிழ்நாடு பால்வள
நிறுவனத்தினரால் பெறப்பட்டுள்ளது. அதில் ரூ. 157·95
இலட்சம் மானியமாக தகுதியுள்ள விவசாயிகளுக்காக செல
விடப்பட்டது. இதுவரை 15,395 கன்றுகள் இத்திட்டத்தில்
சேர்க்கப்பட்டுள்ளன. 15.395 உழவர்கள் இத்திட்டத்தின் கீழ்
பயனடைந்துளளார்கள்.

(இ) வறட்சியால் பாதிக்கக்கூடிய பகுதிக்கான திட்டம்:

(1) தருமபுரி மாவட்டம்:

1978—79 ஆம் ஆண்டில் ரூ. 32·87 இலட்சம் இம் மாவட்டத்
தில் பால் பண்ணை வளர்ச்சிக்காக அளிக்கப்பட்டதன்
தொடர்ச்சியாக ரூ. 23·20 இலட்சம் 1979—80 ஆம் ஆண்டில்
இத்திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்திற்கு, தமிழ்நாடு
அரசு நிதி உதவி அளித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 276
பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் புதிதாக அமைக்கப்
பட்டுள்ளன. ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 28,000 லிட்டர்
பால் கொள்முதல் செய்யப்படுகிறது. 230 கிராமப்புற
ஊழியர்கள் செயற்கை முறை கருத்தரிப்பு நிலையத்தில் பயிற்சி
அடைந்துள்ளனர். 110 நபர்களுக்கு தீவனப் பயிர் செய்ய
மானியம் கொடுக்கப்பட்டுள்ளது. 63·50 ஏக்கர் நிலம் தீவன
பயிருக்காக ஒதுக்கபட்டுள்ளது. பால் உற்பத்தியாளர் கூட்டுறவு
சங்கங்களுக்கு வேண்டிய சோதனை கருவிகள் வழங்கப்பட்
டுள்ளது.

கிருஷ்ணகிரியில் ரூ. 175
தருமபுரி மாவட்டத்தில் உள்ள
இலட்சம் செலவில் ஒரு நாளைக்கு 10 டன் உற்பத்தி செய்யும்
திறன் கொண்ட பால் பொடி தயாரிக்கும் ஆலை ஒன்றை
நிறுவ இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வாலை

நிறுவ ஆகும் செலவில் 50% இந்திய [1980 ஜூலை 19
50% தமிழ்நாடு பால்வள நிறுவனம் ஏற்க அரசாங்கமும் மீதி
தொகையாக இருப்பதால் இதனை வேண்டும். பெரிய
பால்வள நிறுவனத்திற்கு அளிக்க கடனாக தமிழ்நாடு
அளித்துள்ளது. இதுவரை மாநில அரசு ஒப்புதல்
உதவி அளித்துள்ளது. அரசு ரூ. 87·50 இலட்சம் நிதி
காக உத்தரவுகள் இயந்திர சாதனங்கள் தருவிப்பதற்
நடைபெற்றுக் வழங்கப்பட்டுள்ளன. கட்டிட வேலைகள்
பால் பொடி கொண்டிருக்கின்றன. 1982 ஆம் ஆண்டிற்குள்
பார்க்கப்படுகிறது. தயாரிக்கும் ஆலை செயல்படும் என எதிர்

(2) இராமநாதபுரம் மாவட்டம்.

தமிழ்நாடு அரசு வறட்சியால் பாதிக்கக் கூடிய பகுதிக்கான
திட்டத்தின் கீழ் (இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும்)
ரூ. 16·508 இலட்சம் செலவில் பால் சோதனைக் கருவிகள்
பால் குவளைகள் வாங்கவும், போக்குவரத்திற்கும், பரமக்
குடியில் ஒரு குளிர் பதன நிலையத்தை துவக்கவும், மற்றும்
சில குளிர்பதன நிலையங்களை விரிவுபடுத்துவதற்கும் நிதி உதவி
அளித்துள்ளது.

(ஈ) ஒருங்கிணைக்கப்பட்ட கிராமப்புற வளர்ச்சித் திட்டம்:

1978–79 ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ், ரூ. 48·925
இலட்சம் 100% மானியமாக, பால்வள அபிவிருத்திக்காக,
தருமபுரி மாவட்டத்திற்கு தமிழ்நாடு அரசு நிதி உதவி அளித்
துள்ளது.

இத்திட்டத்தின் கீழ்:

(1) 50 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ஏற்
படுத்தி, அதன் மூலம் பால் கொள்முதலுக்கும்
தொழில் நுட்பத் துறைக்கு வேண்டிய உபகரணங்கள்
அளிக்கப்பட்டுள்ளது.

(2) தருமபுரி, கிருட்டிணகிரியில் உள்ள குளிர் பதன
நிலையங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

(3) மூன்று பால் சேகரித்துச் செல்லும் வண்டிகள்
வாங்கப்பட்டுள்ளன.





(4) எட்டு நடமாடும் கால்நடை சிகிச்சை வண்டிகள்
அமைக்கப்பட்டுள்ளன.

(5) 342 உறை விந்துப் பெட்டிகளும், 20,000 உறை
விந்துக்களும் (doses) ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும் பால்வள அபிவிருத்திக்காக, போதிய அளவு நிதி
ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு பிரச்சார வண்டியும்,
ஒரு தனிப்புகைப்பட கருவியும் (Slide Projector) ஒதுக்கப்
பட்டுள்ளன. தருமபுரி மாவட்டத்தில் உள்ள 271 பால்
உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு செயற்கை (உறை
விந்து) முறையில் கருத்தரிக்கும் திட்டம் செயல்படுத்தப்
பட்டன.

(8) செயல் திட்டங்கள்:

உலக உணவு நிறுவனத்தின் பால் பெருக்கு திட்டம் 1–ன்
உதவியினால் ஆடை நீக்கிய பால்பொடி (Skim milk powder)
வெண்ணெய் கொழுப்பு (Butter oil) நவம்பர் 1977க்குப் பிறகு
குறைவான அளவில் பெறப்பட்டது. அதனால் இந்நிறுவனம்
அதிக விலை கொடுத்து வணிக ஆடை நீங்கிய பால்
பொடியை (Commercial skim milk powder) இந்தியப்பால்
பண்ணை கழகத்திலிருந்து பால் விநியோகிப்பதற்காக வாங்கு
கிறது. இந்திய பால் பண்ணை கழகம் 1–4–1979 லிருந்து
வணிக ஆடை நீக்கிய பால் பொடி, வெண்ணெய் கொழுப்பு
விலைகளை மாற்றம் செய்துள்ளது. பெட்ரோல், அதன்
இதரப் பொருட்கள் கடந்த 6 மாத காலத்தில் இரு முறை
அதிக விலை ஏறிய காரணத்தினால் பால் உறைகள், பால்
விநியோகிக்க ஏற்படும் இதர செலவுகள் 1979–80 ஆம்
ஆண்டில் அதிகரித்துள்ளது. இச்செலவுகள் நடப்பு ஆண்டில்
1980–81) மிக அதிக அளவில் கூடுதலாகும் என எதிர்
பார்க்கப்படுகிறது. தவிர பால்பொடி, வெண்ணெய் கொழுப்பு
வாங்குவது, ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் அதிக பட்ச
ஊதியம் ஆகிய செலவுகள் மேலும் செலவினத்தை அதிகரிக்கும்.
அதனுடைய விளைவை 1978–79 ஆம் ஆண்டிலேயே உணரப்

[1980 ஜுலை 19
பட்டது. 1978–79, 1979–80 ஆம் ஆண்டுகளில் நிதி நிலை
மையும், நிறுவனத்தின் செயல்படும் திறனும் பெரிதும் பாதிக்கப்
பட்டது.

மே '80 ஆம் மாதத்தில் உழவர்களிடமிருந்து பெறப்படும்
பாலின் கொள்முதல் விலை கணிசமான அளவில் உயர்த்தப்
பட்டது. தற்போது கொள்முதல் செய்யும் பாலின் விலையை
விட, ஒரு லிட்டருக்கு, சுமார் 35 காசுகள், பால் வற்றிய
மாதங்களில் கூடுதலாக கிடைக்க வழி வகுக்கிறது. பால்
உபரி மாதங்களில் சராசரி ஒரு லிட்டர் பாலுக்கு குறைந்த
பட்சம் 21 காசுகள் கிடைக்கும் அளவிற்கு பாலின் கொள்
முதல் விலை உயர்த்தப்பட்டுள்ளது. உழவர்களிடமிருந்து
பெறப்படும் பாலின் கொள்முதல் விலையை நியாயமான
அளவில் உயர்த்தியுள்ளதால், நவம்பர் '80 மாதத்திலிருந்து
இந்நிறுவனம் பெறப்படும் பாலின் கொள்முதல் 1980–81 ஆம்
ஆண்டில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாலின்
கொள்முதல் விலை அதிகரிப்பினாலும், இதர நடைமுறைச்
செலவுகள் ஏற்றத்தினாலும், இந்நிறுவனத்தின் நிதி நிலைமை
யும், செயல் திறனும், முந்தைய ஆண்டுகளை விட, 1980–81 ஆம்
ஆண்டு பெரிதும் பாதிக்கக்கூடும். இந்நிலையில், பால் விற்
பனை விலையை உயர்த்துவதற்கான செயற்குறிப்பின் இறுதி
முடிவு தமிழக அரசிடமிருந்து எதிர்ப்பார்க்கப்படுகிறது.
சென்னை நகரில் பால் விற்பனையை மேலும் அதிகரிப்பதற்
கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, மிக விரைவில், ஒரு
நாளைக்கு 2.50 இலட்சம் லிட்டர் பால் விநியோகம்
செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்
படுத்த கூடுதலான பால் பொருட்களை பைகளில் நிரப்பி
அனுப்பும் முறையை சென்னை பால் பண்ணையில் விரிவு
படுத்துவதன் மூலம், விநியோகிப்பதில் உண்டாக்கும் சிக்கலை
பெருமளவில் தவிர்க்க முடியும். பால் கொள்முதல் அதற்
கேற்றவாறு அதிகரிக்கும். அதற்காக 1980–81 ஆம் ஆண்டிற்
குள் பால் கொள்முதலில் தன்னிறைவு காண அதிக பால்
உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும்.
ஈரோட்டில் உற்பத்தி சமப்படுத்தும் பால் பண்ணை (Feeder



1980 ஜுலை 19]
balancing dairy) விரைவில் செயல்படும் என எதிர்பார்க்கப்
படுகிறது. இரண்டு பால் பொடி ஆலைகள் முறையே ஒன்று
சேலத்திலும் (பால் பெருக்குத் திட்டம் 1ன்கீழ்) மற்றொன்று
கிருட்டிணகிரியிலும் (வறட்சியால் பாதிக்கக்கூடிய பகுதிக்கான
திட்டத்தின்கீழ்) அமைப்பதன் மூலமாக இம்மாநிலத்தில் நான்கு
பால் பொடி ஆலைகள் உருவாக்கப்படும். அதன் மூலமாக
ஒரு நாளைக்கு 4 இலட்சம் லிட்டர் பாலை பால் பொடி
யாகவும், வெண்ணெய் கொழுப்பாகவும் மாற்ற சாத்தியக்
கூறுகள் உள்ளன. மாநிலத்தில், பால் அதிகமாக கிடைக்கக்
கூடிய மாதங்களில் பால் கொள்முதல் செய்வதற்கும், பதப்
படுத்துவதற்கும் போதுமான வசதிகள் உள்ளன.

## இணைப்பு.

இணைப்பு 1

[1980 ஜூலை 19

| வ. எண். | விவரங்கள் | தமிழ்நாடு பால்வள நிறுவனம் 1972–73 | 1973–74 | 1974–75 |
|---|---|---|---|---|
| 1. | மொத்த விற்பனை | 282·09 | 502·69 | 759·61 |
| 2. | நிகர மதிப்பு | (—)10·27 | 87·07 | 83·91 |
| 3. | அசையா சொத்து (நிகர) | 120·18 | 133·26 | 211·21 |
| 4. | நடைமுதல் | 12·44 | 69·01 | 69·71 |
| 5. | பயன்படுத்தப்பட்ட மூலதனம் | 132·62 | 202·27 | 280·92 |
| 6. | வட்டிக்கும் தேய்மானத்திற்கு முன்புள்ள இலாபம் | 12·00 | 39·53 | 37·73 |
| 7. | வட்டி | 7·78 | 16·66 | 27·60 |
| 8. | வட்டிக்குப் பின்னும் தேய்மானத்திற்கு முன்னும் உள்ள இலாபம் | 4·22 | 22·87 | 10·13 |
| 9. | தேய்மானம் மற்றும் வளர்ச்சி தள்ளுபடி | 27·35 | 26·59 | 31·66 |
| 10. | வரி ஒதுக்கீட்டுக்கு முன்பாக உள்ள இலாபம்/நட்டம் | (—)23·62 | (—)3·72 | (—)21·[illegible] |
| 11. | வரி விதிப்புக்கு ஒதுக்கீடு போக நிகர இலாபம் | — | — | — |



1980 ஜூலை 19]

துவக்கம் முதல் நிதி நிலைமை

(ரூபாய் இலட்சத்தில்.)

| 1975–76 | 1976–77 | 1977–78 | 1978–79 | 1979–80 | 1980–81 (முன் மதிப்பீடு.) |
|---|---|---|---|---|---|
| 1,318·03 | 2,078·64 | 2,605·89 | 2,543·09 | 2,800·00 | 3,372·00 |
| 158·33 | 284·10 | 337·48 | 419·58 | 516·69 | 198·00 |
| 311·80 | 559·56 | 582·85 | 614·13 | 730·00 | 800·00 |
| 156·49 | 162·68 | 141·42 | 262·18 | 170·00 | (—)160.00 |
| 468·29 | 722·24 | 721·54 | 866·11 | 900·00 | 640·00 |
| 110·17 | 160·27 | 177·97 | 97.93 | 80·00 | (—)230·00 |
| 33·74 | 43·49 | 43·67 | 44·48 | 45·00 | 50·00 |
| 76·43 | 116·78 | 134·30 | 53·05 | 35·00 | (—)280·00 |
| 51·67 | 84·47 | 117·30 | 82·30 | 130·00 | 150·00 |
| (+)24·76 | (+)32·31 | (+)17·00 | (—)29·25 | (—)95·00 | (—)430·00 |
| (+)24.76 | (+)15·31 | (+)10·00 | — | — | — |

இணைப்பு 2 [1980 ஜூலை 19

1980 ஜூலை 19]

பால் பண்ணை நிலையத்தின் இட அமைப்பும் கொள்ளளவும்.

(இலட்சம் லிட்டர் அளவில்.)

| விவரங்கள் | 1972-73 | 1973-74 | 1974-75 | 1975-76 | 1976-77 | 1977-78 | 1978-79 | 1978-80 | 1980-81 (முன் மதிப்பீடு.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாதவரம் பால்பண்ணை | 0·70 | 1·25 | 1·25 | 1·25 | 1·25 | 1·25 | 1·25 | 1·25 | 1·25 |
| அம்பத்தூர் பால்பண்ணை (16-4-76-ல் ஆரம்பிக்கப்பட்டது) | — | — | — | — | 2·00 | 2·00 | 2·00 | 2.00 | 2·00 |
| மதுரை பால்பண்ணை | 0·50 | 0·50 | 0·50 | 0·50 | 1·50 | 1·50 | 1·50 | 1·50 | 1·50 |
| ஈரோடு பால்பண்ணை | 0·20 | 0·70 | 0·70 | 0·70 | 1·00 | 1·00 | 1·00 | 1·00 | 1·00 |
| வேலூர் பால்பண்ணை | 0·20 | 0·20 | 0·20 | 0·20 | 0·30 | 0·30 | 0·30 | 0·30 | 0·30 |
| **பெறப்பட்ட பால்** | | | | | | | | | |
| சென்னை | 125·50 | 199·99 | 203·54 | 252·64 | 365·99 | 530·11 | 566·08 | 704·52 | 838·00 |
| தினசராசரி | 0·46 | 0·55 | 0·56 | 0·69 | 1·00 | 1·45 | 1·55 | 1·92 | 2·30 |
| மதுரை | — | — | 62·72 | 140·00 | 244·39 | 210·28 | 218·30 | 276·99 | 337·00 |
| தினசராசரி | — | — | 0·23 | 0·38 | 0·67 | 0·58 | 0·60 | 0·76 | 0·92 |
| மொத்தம் | 125·50 | 199·99 | 266·26 | 393·26 | 610·38 | 740·39 | 984·38 | 781·51 | 1,175·00 |
| தினசராசரி | 0·46 | 0·55 | 0·79 | 1·07 | 1·67 | 2·03 | 2·15 | 2·68 | 3·22 |
| **விநியோகிக்கப்பட்ட பால்** | | | | | | | | | |
| சென்னை | 221·16 | 349·82 | 396·73 | 519·00 | 694·45 | 814·65 | 839·49 | 918·38 | 1,019·00 |
| தினசராசரி | 0·81 | 0·96 | 1·09 | 1·42 | 1·90 | 2·23 | 2·30 | 2·51 | 2·79 |
| மதுரை | — | — | 61·75 | 112·43 | 155·41 | 174·20 | 198·35 | 238·54 | 253·00 |
| தினசராசரி | — | — | 0·23 | 0·31 | 0·43 | 0·48 | 0·54 | 0·65 | 0·69 |
| மொத்தம் | 221·16 | 349·82 | 458·48 | 631·43 | 849·86 | 988·85 | 1,037·84 | 1,156·92 | 1,272·00 |
| தினசராசரி | 0·81 | 0·96 | 1·32 | 1·73 | 2·33 | 2·71 | 2·84 | 3·16 | 3·48 |

இணைப்பு 3

[1980 ஜுலை 19

தொழில் நுட்ப வசதி

| வ.எண். (1) | விவரங்கள் (2) | 1-7-1973 | 1-7-1974 | 1-7-1975 |
|---|---|---|---|---|
| 1. | செயற்கை முறை கருத்தரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை. | | — | — |
| 2. | நடமாடும் நிலையங்களின் எண்ணிக்கை. | 3 | 5 | 9 |
| 3. | காலநடை தடங்களின் எண்ணிக்கை. | 7 | 15 | 16 |
| 4. | அவசர தடங்களின் எண்ணிக்கை. | 7 | 57 | 65 |
| 5. | கிராம மட்ட பணியாளர்களின் எண்ணிக்கை. | — | 4 | 6 |
| 6. | செயற்கை முறை கருத்தரிப்பு செய்யப்பட்டவைகளின் எண்ணிக்கை. | 99 | 267 | 199 |
| 7. | சோதனை இடப்பட்ட சினைகளின் எண்ணிக்கை. | 4,086 | 20,103 | 46,835 |
| 8. | சோதனை இடப்பட்டு பிறந்த கன்றுகளின் எண்ணிக்கை. | 424 | 3,762 | 28,100 |
| 9. | கன்று ஆதரவு திட்டத்தின் கீழ் பட்டியலில் உள்ள கிடாரி கன்றுகளின் எண்ணிக்கை. | 42 | 970 | 3,562 |
| 10. | சிகிச்சை பெறப்பட்டவைகளின் எண்ணிக்கை. | — | 905 | 1,625 |
| 11. | சோதிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை. | 238 | 33,403 | 93,179 |
| 12. | அம்மை குத்தப்பட்டவைகளின் எண்ணிக்கை. | — | 2,516 | 4,267 |
| 13. | விநியோகிக்கப்பட்ட புல் நாற்றுகளின் எண்ணிக்கை இலட்சத்தில். | — | 3,403 | 14,095 |
| 14. | தீவனப்பயிர் செய்யப்பட்ட நில அளவு ஏக்கரில். | 2·10 | 14·85 | 19·86 |
| 15. | அமைக்கப்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை. | 35·00 | 313·60 | 157·07 |
| 16. | ஈடுபட்ட விவசாயிகளின் எண்ணிக்கை. | — | 26 | 2,24 |
| | | 4,239 | 53,513 | 1,83,551 |



1980 ஜுலை 19]

திட்ட முன்னேற்றம்.

| 1-7-1976 | 1-7-1977 | 1-7-1978 | 1-7-1979 | 1-7-1980 | 1-7-1981 (முன் மதிப்பீடு.) |
|---|---|---|---|---|---|
| 9 | 9 | 8 | 9 | 9 | 9 |
| 18 | 30 | 36 | 43 | 48 | 54 |
| 79 | 131 | 154 | 208 | 189 | 213 |
| 6 | 9 | 10 | 17 | 19 | 24 |
| 306 | 580 | 825 | 1,067 | 1,135 | 1,255 |
| 86,493 | 146,795 | 228,735 | 345,574 | 495,970 | 663,023 |
| 46,608 | 83,307 | 143,442 | 200,105 | 3,28,663 | 449,512 |
| 7,085 | 13,770 | 24,896 | 42,101 | 63,452 | 87,311 |
| 1,288 | 694 | 93 | 9,976 | — | — |
| 1,80,489 | 323,852 | 502,031 | 757,796 | 1,083,156 | 1,428,861 |
| 7,834 | 10,824 | 14,396 | 17,286 | 16,122 | 27,052 |
| 26,961 | 54,635 | 78,728 | 105,228 | 129,774 | 138,70 |

இணைப்பு 4 [1980 ஜூலை 19

பால் கடைகள்/நிலையங்கள் முதலியவற்றின் எண்ணிக்கை

| வ. எண். (1) | விவரங்கள். (2) | 1972-73 | 1973-74 | 1974-75 | 975-76 | 1976-77 | 1977-78 | 1978-79 | 1979-80 | 1980-81 (முன் மதிப்பீடு). |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| 1. | பால் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை. | | | | | | | | | |
| 2. | பால் நிலையங்களின் எண்ணிக்கை. | 247 | 278 | 364 | 496 | 591 | 647 | 653 | 680 | 690 |
| 3. | நடமாடும் பால் நிலையங்கள். | 7 | 15 | 21 | 41 | 110 | 130 | 132 | 120 | 130 |
| 4. | பால் விற்பனை பிரிவுகள் பகிர்தல். | — | 1 | 3 | 3 | 4 | 4 | 4 | 4 | 4 |
| 5. | வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை. | — | 2 | 2 | 6 | 6 | 9 | 12 | 12 | 20 |
| 6. | பால் சேகரிக்கும் தடங்களின் எண்ணிக்கை. | 68,719 | 71,166 | 1,07,220 | 116,959 | 134,142 | 160,000 | 166,000 | 175,000 | 180,000 |
| 7. | பால் விநியோகிக்கப்படும் தடங்களின் எண்ணிக்கை. | — | — | 50 | 73 | 87 | 91 | 106 | 106 | 110 |
| 8. | பால் சேகரித்துச் செல்லும் வண்டிகளின் எண்ணிக்கை (Road Tankers). | 30 | 32 | 45 | 52 | 62 | 69 | 69 | 70 | 75 |
| 9. | சிறிய ஊர்திகளின் எண்ணிக்கை. | 25 | 29 | 31 | 38 | 45 | 53 | 53 | 66 | 78 |
| 10. | இரயில் தொட்டிகள் (சென்னை) (Rail Tankers). | 5 | 5 | [illegible] | 9 | 19 | 23 | 52 | 59 | 62 |
| 11. | விவசாயிகளுக்கு கொடுக்கப் பட்ட பணம் (ரூபாய் இலட்சத்தில்). | — | — | — | — | 4 | 2 | 3 | 4 | 4 |
| | | 130·60 | 225·02 | 360·29 | 637·50 | 1,072·80 | 1,221·64 | 1,365·11 | 1,635·00 | 2,056·00 |

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-8.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli), Limited, Madras 1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private), Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponnaiamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban and Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 5/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Book-sellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajentha Book Centre, Salem -1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bogchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-12.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and Printed by the Director of Stationery and Printing, Madras.